# இந்தியாவின் சமுதாயப் பொருளாதாரப் படிவம்



உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள் !

# இந்தியாவின் சமுதாயப் பொருளாதாரப் படிவம்

**மாநில அமைப்புக் கமிட்டி**

இந்தியப் பொதுவுடமைக் கட்சி,
(மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்),
தமிழ்நாடு

முதற் பதிப்பு : ஜூன், 1984
விலை : ரு 15-00

# தமிழ் மாநில அமைப்புக் கமிட்டியின் மூன்றாவது பிளீன அரசியல் கோட்பாட்டு ஆவணங்கள்— பகுதி I

தமிழ் மாநில அமைப்புக் கமிட்டி,
இந்தியப் பொதுவுடமைக் கட்சி
(மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்)யின்
மூன்றாவது பிளீனத்தில் (செப்டம்பர் 17—21, 1981)
நிறைவேற்றப்பட்டது. பிளீனம்
தீர்மானித்தவாறு புதிய ஆதாரங்களும்
பின்னர் இணைக்கப்பட்டுள்ளன.

# பொருளடக்கம்

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

1. மார்க்சிய-லெனினிய-மாசேதுங் சிந்தனைக்கு எதிராக முதலாளிய சமூகவியலாளர்களது கோட்பாடுகளை உயர்த்திப் பிடிப்பதே நோக்கமற்ற கோட்பாட்டுவாதிகளின் போக்கு........... 1

2. முதலாளித்துவத்திற்கு முந்திய உற்பத்தி முறைகளின் அழிவு; முதலாளித்துவ உற்பத்தி முறைக்கான முன் தேவைகள் ... ... ... ... 14

3. முதலாளித்துவத்துக்கு முந்திய உற்பத்தி முறையிலிருந்து முதலாளித்துவ உற்பத்தி வரை; தோற்றத்திற்கான அரசியல், வரலாற்றுக் காரணிகள்; மாறிச் செல்லும் பாதைகள் ... .. 40

4. காலனி ஆதிக்கத்தின் கீழ் அரை நிலப்பிரபுத்துவம்... 68

5. அதிகார மாற்றத்திற்குப் பின்னும் அரை நிலப்பிரபுத்துவ அமைப்பே நீடிக்கிறது; நிலச்சீர்திருத்தங்களின் விளைவுகள் ... ... ... 95

6. ஒரே வழி விவசாயிகளின் விவசாயப் புரட்சியே... 145

7. ஏகாதிபத்தியம் பற்றிய லெனினியக் கோட்பாடுகளை எதிர்க்கப் புறப்பட்டுள்ள ஏகாதிபத்திய ஏவலர்கள் ஏகாதிபத்தியங்கள் சைவப்புலியாகி விட்டனவாம்!... 178

8. இந்தியா பெயரளவிலான சுதந்திரம் பெற்ற ஓர் அரைக் காலனி-அரை நிலப்பிரபுத்துவ நாடு; இந்திய அரசு தரகு-அதிகார வர்க்க முதலாளிகள் நிலப்பிரபுக்களின் அரசு .. ... ... 229

பிற்சேர்க்கை ... ... ... 283

இந்தியப் பொதுவுடமைக் கட்சி [மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்] தமிழ் மாநில அமைப்புக் கமிட்டியின் மூன்றாவது பிளீனத்தில் நிறைவேற்றப்பட்ட அரசியல்-கோட்பாட்டு ஆவணங்களை கீழ்க் கண்ட வரிசைக்கிரமத்தில் படிக்கின்ற பொழுது அவைகள் சர்வ தேசிய, தேசியப் புரட்சி பற்றிய ஓர் ஒருங்கிணைந்த கண்ணோட் டத்தைத் தரும்.

# (அ) சர்வதேசியப் புரட்சி குறித்து :

**இரு முக்கிய முடிவுகள் :**

(1) சர்வதேசப் புரட்சியின் சக்தி வாய்ந்த போர் ஆயுதம் மூன்றுலகக் கோட்பாடு.

(II) மரம் ஓய்வை நாடினாலும் காற்று தணிந்து விடாது லியு-தெங் கும்பலின் எதிர்ப்புரட்சி திரிபுவாதம் : ஓர் எதிர்மறை ஆசிரியன்.

# (ஆ) தேசியப் புரட்சி குறித்து :

பகுதி I இந்தியாவின் சமுதாயப் பொருளாதாரப் படிவம்.

பகுதி II வர்க்கப் போராட்டத்தின் கேந்திரமான கண்ணி

பகுதி III இந்திய சமுதாயத்தில் நிலவும் அடிப் படை முரண்பாடுகளும் பிரதான முரண்பாடும்

பகுதி IV இந்தியப் புரட்சியின் அரசியல் பாதையும் இராணுவப் பாதையும்.

# 1. மார்க்சிய-லெனினிய-மாசேதுங் சிந்தனைக்கு எதிராக முதலாளிய சமூகவியலாளர்களது கோட்பாடுகளை உயர்த்திப் பிடிப்பதே நோக்கமற்ற கோட்பாட்டுவாதிகளின் போக்கு

மார்க்சியம்-லெனினியம்-மாசேதுங்சிந்தனையின் சர்வவியாபகமான பொதுவிதிகளை ஆழ்ந்து கிரகிப்பது; அவற்றைப் பிரயோகித்து இந்தியாவின் சமுதாய பொருளாதார மற்றும் அரசியல் கட்டுமானங்கள் ஆகிய புறவயமான நிலைமைகளைப் பருண்மையாக ஆய்ந்தறிந்து மிகச்சரியான கோட்பாட்டு முடிவுகளை வந்தடைவது; இந்தியப் புரட்சியை சரியான, நிச்சயமான பாதையில் வெற்றிகரமாக வழி நடத்துவதற்கு பொதுவுடைமைப் புரட்சியாளர்களின் முழு முதற்கடமை இதுவே. இந்திய வானில் பல்லாண்டு காலமாகக் கவ்வியிருந்த திரிபுவாத இருட்டைக் கிழித்தெறிந்த நக்சல்பாரி உழவர் பேரெழுச்சியைத் தொடர்ந்து மகத்தான மார்க்சிய-லெனினிய-மாவோ சிந்தனையை முதன் முதலாக இந்திய மண்ணில் மார்க்சிய- லெனினியக் கட்சி உயர்த்திப் பிடித்தது. இந்திய சமுதாய அமைப்பு, இந்தியப் புரட்சியின் எதிரிகள், உந்து சக்திகள், இந்தியப் புரட்சியின் தன்மை, கட்டம் மற்றும் தொலை நோக்கு, இந்தியப் புரட்சியின்பாதை ஆகிய பிரச்னைகளில் பொதுவான, சரியான கோட்பாட்டு முடிவுகளை மார்க்சிய-லெனினியக் கட்சி வரையறுத்தது. மக்களுக்கும் தேசத்துக்கும் விசுவாசமாக இருந்து இந்தியப் புரட்சியை முன்னெடுத்துச் சென்றது. இந்தியாவின் சமுதாய, பொருளாதார, மற்றும் அரசியல் கட்டுமானங்கள் ஆகிய புறவயமான நிலைமைகளை மேலும் பருண்மையாகவும், ஆழமாகவும் ஆய்ந்தறியத் தவறியதனாலும், அரசியல் பாதை, இராணுவப் பாதை மற்றும் அமைப்புக் கோட்பாடுகளை மார்க்சிய-லெனினிய-மாவோ சிந்தனையின் அடிப்படையில் வகுக்கத் தவறியதானாலும் விரைவிலேயே சாருமஜூம்தார் தலைமையில் 'இடது' சந்தர்ப்பவாதம் மேலோங்கியது. இந்தியப் புரட்சிகர இயக்கம் தோல்விக்கும், பின்னடைவுக்கும், பிளவுக்கும் உள்ளானது.

இந்தியப் புரட்சிகர இயக்கத்தின் தற்காலிகத் தோல்விக்கும், பின்னடைவுக்கும், பிளவுக்குமான காரணங்களை யதார்த்தப்

பூர்வமாகப் பரிசீலிப்பதும் எந்தவிதத் தயக்கமுமின்றி தவறு
களைக் களைந்து சரியான படிப்பினைகளை ஒன்று செறித்து-
தேவையான புதிய அம்சங்களைத் சேர்த்து சரியான மாற்று
வழியை, மார்க்சிய-லெனினிய-மாசேதுங் சிந்தனையின் அடிப்
படையிலான மக்கள் திரள் வழியை வகுக்க வேண்டியுள்ளது.
அரசியல், சித்தாந்த துறைகளில் மட்டுமல்ல, அமைப்புத்
துறையிலும் 'இடது' சந்தர்ப்பவாத ஆதிக்கத்தின் காரணமாக
இப்பெருங்கடமையை அமைப்பு ரீதியில் நிறைவேற்ற இயலாமல்
போயுள்ளது; தனிநபர்களாகவும், குழுக்களாகவும் எதிர்கொள்ள
வேண்டியுள்ளது. ஆனால் இப்பெருங்கடமையை நிறைவேற்று
வதாகக் கூறிக்கொண்டுதான்—அதாவது இந்தியப் புரட்சியின்
தற்காலிகத் தோல்வி, பின்னடைவு, பிளவுக்கான காரணங்களை
யதார்த்த பூர்வமாகப் பரிசீலிப்பது என்ற முகாந்தரத்தில்
தான்—ஏற்கனவே நிரூபிக்கப்பட்ட, நிலைநாட்டப்பட்ட
மார்க்சிய-லெனினியக் கட்சியின் பொதுவான, சரியான கோட்
பாடுகளையும் நிராகரித்து புரட்சிகரமான பாட்டாளிவர்க்க
இயக்கத்தைத் திசைதிருப்ப எல்லா வண்ணத் திரிபுவாதிகளும்,
நவீன திரிபுவாதிகளும், கட்சிக்குள் ஒளிந்துக் கொண்டிருந்த
துரோகிகளும், ஓடுகாலிகளும் பல்வேறு வழிகளில் முயலுகி
றார்கள். இந்தியப் புரட்சியின் மார்க்சிய-லெனினியக் கட்சியின்
அரசியல், அமைப்பு நிலைப்பாடுகளைச் செழுமைப்படுத்துவ
தாகக் கூறிக்கொண்டு அதன் அடித்தளத்தையே வீழ்த்தக் குழி
பறிக்கிறார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால் தற்போது
அவர்கள் தமது சொந்த கால்களில் நின்று, தமது சொந்த
மூளையை இதற்கும் பிரயோகிக்கும் திராணியற்றுப் போயுள்
ளார்கள். முதலாளித்துவ அரசியல் மற்றும் சமூகவியலாளர்
களையேமுற்றாகச் சார்ந்து நிற்கும் இழிநிலைக்கு அவர்கள்
கேடுகெடும் வீழ்ந்து போயுள்ளனர். 'மார்க்சிய-லெனினிய
வாதிகள், திறந்த மனது கொண்டவர்கள், எதையும் யதார்த்த
பூர்வமாக விமர்சன ரீதியாகக் கற்றுக் கொள்ளத் தயங்காதவர்
கள், மார்க்சியம்-லெனினியம் உட்பட யாவும் மாறவும் வளரவும்
கூடியவை போன்றவற்றை தம்மை நியாயப்படுத்தும் கவசங்
களாக அணிந்துள்ளனர். மார்க்சியம்-லெனினியம்-மாவோ
சிந்தனைக்கு எதிராக தத்துவம், சித்தாந்தம், கோட்பாடு ஆகிய
மூன்று நிலைகளிலும், சமூக, பொருளாதார, அரசியல் மற்றும்
கலாச்சாரம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் இந்தப் போக்கு
எழுந்துள்ளது.

சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாச்சாரம்
ஆகிய சகல துறைகளிலும் முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தின்
தத்துவ, சித்தாந்த கோட்பாட்டு ஒட்டாண்டித்தனத்தை முதல்
உலகப் பெரும்போரும், அதன் விளைவாக 1930களில் உலகு
தழுவிய ரீதியில் எழுந்த பெரும் அரசியல்—பொருளாதார நெருக்
கடிகளும் அம்பலப்படுத்தின. முதலாளித்துவ தத்துவமும், சித்
தாந்தமும் புதிய கோட்பாடுகளைக் காண விழைந்தன. அவற்
றில் சில—எக்ஸிஸ்டன்சியலிசம், சர்ரியலிசம் போன்றவை—
ஹெகலின் இயங்கியல் அணுகுமுறையை ஏற்பதால் மார்க்சிய

சர்யல் கொண்டிருப்பதாகத் தோன்றுகின்றன. இன்னும் முதலாளித்துவ பொருளாதார மற்றும் அரசியல் ஆய்வுரைகளில் சிலவற்றில் அவர்கள் வர்க்கங்கள், வர்க்க உறவுகள் நிலவுவதை அங்கீகரிப்பதால் அவை மார்க்சிய பொருளாதார மற்றும் அரசியல் ஆய்வுரைகளைக் கொண்டிருப்பதாகத் தோன்றுகின்றன. இவற்றிலிருந்து முதலாளித்துவ சமூகவியல் என்ற புதிய விஞ்ஞானத் துறையும் தோன்றி வளர்ந்துள்ளது. இவையனைத்தும் குறித்து மார்க்சிய லெனினியவாதிகளின் கண்ணோட்டம் எத்தகையதாக இருக்க வேண்டும்?

அரசு ஏகபோக மூலதனத்தின் தேவைகளை ஒட்டியும், ஏகாதிபத்தியத்தியத்தின் உண்மைச் சொரூபத்தை மூடிமறைக்கவும், மார்க்சிய-லெனினியத்தைப் புதிய முறையில் எதிர்த்து முறியடிக்கவும் முதலாளித்துவ அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக விஞ்ஞானத்தை ஏகாதிபத்தியவாதிகள் ஊட்டி வளர்க்கின்றனர். மற்றெல்லா விஞ்ஞானத் துறைகளையும் போலவே அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூகவியல் துறைகளிலும் மார்க்சிய-லெனினிய அணுகுமுறையையும், வியாக்கியானங்களையும் பல்வேறு காரணங்களைக் கூறி பகுதியாகவோ, முழுமையாகவோ இது நிராகரிக்கிறது. தமது வர்க்க நலன்களுக்குள் புதைந்து போயிருக்கிறது; எனவே முதலாளித்துவ அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூகவியலும் பிழையானதாகவும் மக்கள் விரோதமானதாகவும் இருக்கிறது. மார்க்சிய—லெனினியத்தின் கோட்பாடு மற்றும் நடைமுறை ஆகியவற்றின் மேலாண்மையை அங்கீகரிக்கும்படி நிர்பந்திக்கப்பட்டிருக்கும் முதலாளித்துவ அரசியல், பொருளாதார மற்றும் சமூகவியலாளர்களில் சிலர் காலாவதியாகிப் போன தமது பழைய அணுகுமுறை மற்றும் வியாக்கியானங்களை விமர்சித்து ஒதுக்க வேண்டிய நிர்பந்தத்துக்கு உள்ளாகியிருக்கும் அதேவேளையில் மார்க்சிய-லெனினியத்தின் சர்வவியாபகமான விதிகளை முற்றாக ஏற்காது,அவற்றைப் பிரயோகிக்காது மார்க்சிய- லெனினியக் கூறுகள் சிலவற்றையும், சொற்றொடர்களையும், நடைமுறையிலிருந்து துண்டாடப்பட்ட முதலாளித்துவ அணுகுமுறைகளையும் புதிய புதிய கோணத்தில் பிரயோகித்து அரசியல், பொருளாதார மற்றும் சமூகவியல் ஆய்வுரைகளை கூடைகூடையாக உற்பத்தி செய்து தள்ளுகிறார்கள். இன்றைய சமுதாய, பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகள் பற்றிய பருண்மையான ஆய்வுரைகளின் பற்றாகுறை பற்றி சதாகாலமும் புலம்பிக் கொண்டிருக்கும், ஆனால்உருப்படியாக அதற்கான முயற்சிகளில்ஈடுபடாது, புரட்சியின்மீதும் மக்களின்மீதும் நம்பிக்கையற்றிருக்கும் குட்டி முதலாளித்துவப் புரட்சியாளர்கள் முதலாளித்துவ அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக வியலாளர்களின் இந்த ஆய்வுரைகளை புரட்சிகரஇயக்கத்திற்குள் கடத்தி வருகிறார்கள். இது புரட்சிகர இயக்கத்தை ஓரளவு பாதிக்கிறது. மார்க்சிய—லெனினிய விரோதப் போக்குகளுக்கு இடமளிக்கிறது.

இந்தியாவிலும் தொழிலுறவுப் பிரச்சினைகள், ஆலை

நவீன நிர்வாகம், நவீன விற்பனை முறைகள் ஆகியவற்றிற் காகவும், தொழிற் பிரச்சினைகள் காரணமாக எழும் சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார மற்றும் சட்டவியல் துறைகளின் வளர்ச்சியை ஒட்டியும் புதிய பல கல்வித் துறைப் பிரிவுகள் துவக்கப்பட்டுள்ளன. நிர்வாகத் துறையில் உயர் கல்வியளிக்கும் இந்திய நிர்வாகக் கழகங்கள், பல்கலைக் கழகங்கள் பொருளியல், சமூகசேவை, சமூக விஞ்ஞானம், சமூகவியல் மற்றும் அரசியல் பள்ளிகள், கல்லூரிகள், ஆய்வுக்கூடங்கள் பலவும் அவற்றின் வளர்ச்சிக்காக ஆய்வுரைகளை வெளியிடும் தனிச் சிறப்பான பத்திரிகைகளும் வெளிவருகின்றன. முதலாளித்துவ பொருளாதார, அரசியல் மற்றும்சமூகவியல் ஆகியவற்றிலிந்தும் விமர்சன ரீதியில் எடுத்தாள முடியும்; சரியானவற்றைக் கற்கவும் முடியும். ஆனால் மார்க்சிய—லெனினிய-மாவோ சிந்தனையின் சர்வ வியாபகமான விதிகளைப் பிரயோகித்து நாம் நமது சொந்த ஆய்வுரைகளின் அடித்தளத்தில் நின்று அவற்றை வீமர்சன ரீதியில் ஆய்ந்தறியும்போதுதான் பிறழ்வுகள் நிகழாவண்ணம் எச்சரிக்கையாக இருக்கமுடியும். ஆனால் ஓடுகாலிகளும்,ஊசலாட்டக்காரர்களும, டிராட்ஸ்கியவாதிகளும் இன்னும் சில குட்டி முதலாளித்துவப் புரட்சியாளர்களும் முதலாளித்துவ பொருளாதார, அரசியல் மற்றும் சமூகவியல் ஆய்வுரைகளையே நேரடியாகவும் மறைமுகமாகவும் கடத்தி வருகின்றனர். வினோத்மிஸ்ரா தலைமையிலான மத்தியக் கமிட்டியோ கிறித்துவ தன்னார்வக் குழுக்களில் ‘புரட்சியாளர்களையும், முற்போக்கு ஜனநாயகவாதிகளையும்’ கண்டுகொண்ட பின்னர் முதலாளித்துவ சமூகவியலாளர்களையே மார்க்சிய அறிஞர்களாக ஏற்றிப்போற்றி அவர்களது ஆய்வுரைகளையும் தமது அதிகாரப் பூர்வ ஏடுகளில் வெளியிடுகிறது. மக்கள் யுத்தக் குழு உட்பட சில மார்க்சிய—லெனினிய அமைப்புகளைச் சார்ந்த குட்டி முதலாளித்துவப் புரட்சியாளர்களும் முதலாளித்துவ சமூகவியலாளர்களுடன் கூடிக் குலாவி அவர்களது ஆய்வுரைகளைப் பரப்புவதையும் அந்த அமைப்புகள் கண்டு கொள்வதில்லை. தாராளவாதத்துடன் அனுமதிக்கின்றன. முதலாளித்துவ கல்வி நிறுவனங்களில் பட்டம் பெறுவதற்கான ஆய்வுப் பயிற்சிக் கட்டுரைகளையும் இந்தியப் புரட்சிக்கான மார்க்சிய—லெனினியக் கோட்பாடுகளாக இவர்கள் கையாளுகின்றனர். தொழில் முதலீட்டுக்கும் விற்பனைச் சந்தை மதிப்பீட்டிற்கும் நடத்தப்படும் ஆய்வுக் கட்டுரைகள், கருத்தரங்கு முடிவுகளும்கூட இவர்கள் கண்ணுக்குப் புரட்சிகரமான ஆய்வாகத் தோன்றுகின்றன. சில பகுதிகளில் பெண்ணுழைப்பின் பாதிப்பு, சாதியக்கட்டுமானங்களின் நெகிழ்வு, மத, இனக் கலவரங்களின் விளைவுகளும் வீச்சுகளும், தொழிலாளர்களின் கிளர்ச்சி, பணப் பயிர் விவசாயப் பெருக்கம், சநதை நிலவரங்களில் மாற்றம், பழங்குடி ஆதிவாசிகளின் வாழ்க்கை முறை, பொதுத்துறை, தனியார் துறை—கூட்டுப் பங்கு துறை ஆகியவற்றின போக்குகள், கனரக—இலகுரக—நுகர்வரக—மூலதனரக பொருட்களின் உற்பத்திப் போக்குகள், போக்குவரத்து—செய்தித் தொடர்புகளின் வளர்ச்சி இவை போன்ற எண்ணிறந்த சமூகம், பொருளாதாரம் மற்றும் அரசியல்

வாழ்வில் ஏற்படும் மாற்றங்கள் குறித்த ஆய்வுரைகளை அள வின்றி முதலாளித்துவ அறிஞர்கள் நாள்தோறும்குவிக்கிறார்கள்.

ஏகாதிபத்தியத்தின் தன்மை, அதற்கும் பிறநாடுகளின் உற்பத்தி முறைகள், ஆளும் வர்க்கங்கள், புரட்சியின் தன்மை, இன்னும் பிற பிரச்சினைகள், அரசுகளின் வர்க்கத்தன்மை, வடிவ முறை இவையனைத்தும் பற்றி பல்வேறு வகையான கோட்பாடு களை எல்லா வண்ணத் திரிபுவாதிகளும், முதலாளித்துவ அரசியல் மற்றும் சமூகவியலாளர்களும் முன்வைக்கின்றனர். இவற்றுள் முக்கியமான சில:

**—ஏகாதிபத்தியம் பற்றி :**

1. நிதி மூலதன ஏற்றுமதி மற்றும் நிதி மூலதன ஆதிக்கமல்ல, தொழிலும் வர்த்தகமுமே பிரதான சுரண்டல் முறை.
2. உலக ஏகாதிபத்தியக் கட்டமைவில் உலகு தழுவிய புராதன மூலதனத் திரட்சி.
3. ஏகாதிபத்திய நாடுகளும்,சமூக ஏகாதிபத்தியமும் அதன் தொங்குசதை நாடுகள் மற்றும் சோசலிச நாடுகள் அடங்கிய மையநாடுகள், பின்தங்கிய நாடுகள் அடங்கிய விளிம்பு நாடுகள் என்று உலகச்சந்தை அடிப்படையில் பிரிந்துள்ளன.
4. மைய நாடுகளின் நவீன காலனிய முறை, விளிம்பு நாடு களுடன் சமனற்ற பரிமாற்றம்.

**—ஏகா திபத்தியங்கள், பிறநாடுகளுடனான உறவில் மூன்றாம் உலக நாடுகள் பற்றி :**

1. முழுச் சுதந்திரம்.
2. ஒப்பீட்டு வகையில் சுதந்திரம்.
3. அரசியல் சுதந்திரம்.
4. ஆளும் வர்க்கங்களுக்கு சுதந்திரம்.

**—மூன்றாம் உலக நாடுகளின் ஆளும் வர்க்கங்கள் பற்றி:**

1 தேசிய முதலாளிகள், உள்நாட்டு முதலாளிகள்.
2 ஏகாதிபத்தியத்துடன் மேலும் மேலும் கூடுதலாக கூட்டுச் சேர்ந்து வரும் தேசிய ஏகபோக முதலாளிகள்.
3. முதலாளிகள்—நிலப்பிரபுக்கள்.
4. சார்பு முதலாளிகள்.
5. ஏகாதிபத்தியக் கட்டமைவில் உள்மயமான முதலாளிகள்

—மூன்றாம் உலக நாடுகளின் உற்பத்தி முறைகள் பற்றி

1. காலனிய உற்பத்தி முறை.
2. முதலாளித்துவத்துக்கு முந்தைய உற்பத்தியை முதலாளித்துவ உற்பத்தி முறையாக மாற்றவில்லை, அதனுடன் கூட்டு.
3. முதலாளித்துவத்துக்கு முந்தைய உற்பத்தி முறையை முதலாளித்துவ உற்பத்தி முறையாக மாற்றி வருகிறார்கள்.
4. முதலாளித்துவத்துக்கு முந்தைய உற்பத்தி முறையை முதலாளித்துவ உற்பத்தி முறையாக மாற்ற விரும்புகிறார்கள் முடியவில்லை.
5. முதலாளித்துவத்துக்கு முந்தைய உற்பத்தி முறையை முதலாளித்துவ உற்பத்தி முறையாக மாற்றி விட்டார்கள்.
6. முதலாளித்துவ உற்பத்தி முறையே மேலாண்மை பெற்றுள்ளது.
7. ஒரு சமுதாயப் படிவம் இரு உற்பத்தி முறைகள்.
8. ஒரு சமுதாயப் படிவம் ஒரு உற்பத்தி முறை
9 ஒரே உற்பத்தி முறை இரட்டைத் தன்மையுடையது.

—புரட்சியின் தன்மை பற்றி :

1. ஒரே சமயத்தில் உலகப் புரட்சி.
2. ஏகபோக எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, மக்கள் ஜனநாயகப் புரட்சி.
3. தேசிய ஜனநாயகப் புரட்சி.
4. விவசாயப் புரட்சி.
5. சோசலிசப் புரட்சி.
6. ஜனநாயகத்துக்கும் சோசலிசத்துக்கும் இடைப்பட்ட (ஒன்றரை கட்ட) புரட்சி.

மேற்கண்ட அரசியல் மற்றும் சமூகவியல் அடிப்படைப் பிரச்சினைகளின் உட்கூறுகளைத் தனித்தனியே பிரித்தும், சிலவற்றை இணைத்தும், மீண்டும் வேறு கோணத்திலிருந்து பிரித்தும், மறு இணைப்பு செய்தும் புதிய புதிய மாதிரிகளை முதலாளித்துவ அரசியல் மற்றும் சமூகவியலாளர்கள் கோட்பாட்டுக் கட்டுமானங்களை உருவாக்குகிறார்கள்; பல்வேறு மாதிரிகளையும் கோட்பாட்டுக் கட்டுமானங்களையும் உருவாக்குவதில் தனித்துவத்தைப் பேணிப்பாதுகாப்பதும், தமது சொந்த ஆய்வு முறைகளை (METHODOLOGY) அல்லது மார்க்சியம்-லெனினியம் அல்லாத ஆய்வுமுறைகளைப் பிரயோகிப்பதும், பகுதியாகவோ முழுமையாகவோ மார்க்சிய-லெனினிய ஆய்வு முறைகளும் ஆய்வுரைகளும் காலாவதியாகிவிட்டதாக

நிரூபிப்பதும் இவர்களது தொழிலாகும். மார்க்சிய-லெனினிய ஆய்வு முறைகளும் ஆய்வுரைகளும் தவறு என்று இப்பொழுதெல்லாம் முதலாளித்துவ அரசியல் மற்றும் சமூகவியலாளர்கள் ஆரம்பிப்பதோ, நிரூபிப்பதாகக் காட்டிக் கொள்வதோ இல்லை. முன்னிலும் பன்மடங்கு அபாயகரமான கபடவேடம் தரித்தே பாட்டாளி வர்க்க இயக்கத்தைப் பிளவுப்படுத்த கோட்பாடு மற்றும் சித்தாந்த ரீதியாக ஊடுருவுகின்றனர். புதிய, மாறிவரும் தேசிய, சர்வதேசிய நிலைமைகளுக்குத் தக்கபடி பருண்மையாக ஆய்வு செய்வதாகவும், மார்க்சிய-லெனினியத்தையே வளர்ப்பதாகவும் கூறிக் கொள்ளுகின்றனர். புரட்சியாளர்களை இயந்திர முறையில் காப்பியடிப்பவர்களாகச் சாடுவது; அல்லது பாரம்பரிய அல்லது பழைமைவாத மார்க்சியம்-லெனினியம் என்று சாடி நிராகரிப்பது; அல்லது 'நிலைமைகள் மாறிவிட்டதால் பகுதியாகவோ முழுமையாகவோ மார்க்சியம்-லெனினியம் காலாவதியாகி விட்டது; இனியும் வளர்க்க வேண்டும் அல்லது மார்க்சியம்-லெனினிய ஆசான்கள் பிரச்சினையின் ஒரு பகுதியை மட்டுமோ, ஒன்று அல்லது சில நாடுகளை மட்டுமோ ஆய்ந்தறிந்தார்கள், தாம்மட்டுமே முழுமையாக ஆய்ந்தறிவதாகக்' கூறுவது; அல்லது மார்க்சிய — லெனினியத்தை நிராகரிக்கவில்லை. புதிய பிரச்சினைகள் பற்றி புதிய கோணத்தில் தீர்க்கப்பட வேண்டிய கேள்விகள் இருப்பதாகக் கூறிக் கொள்வது; இப்படி வெவ்வேறு காரணங்களைக் கூறினாலும் துண்டு துண்டான பிரச்சினைகளை கலவையாகக் கோர்ப்பது, சிறியவற்றைப் பெரியதாகவும், இரண்டாம் பட்சமானதைப் பிரதானமாகவும், வடிவத்தை சாராம்சமாகவும் திரித்துப் புரட்டுவதன் மூலம் மார்க்சிய—லெனினியத்தையே எதிர்ப்பதும் முறியடிப்பதுமே இவர்களது நோக்கமாகும்.

புதிய நிலைமைகளின் வளர்ச்சிக்கேற்ப பருண்மையாக ஆய்வு செய்யப்பட வேண்டும், மார்க்சியம் லெனினியம் வளர்க்கப்படவேண்டும் என்பது சரியே. ஆனால் ஏற்கனவே நிரூபிக்கப்பட்ட அனைத்தும் தழுவிய மார்க்சிய — லெனினிய விதிமுறைகள், ஆய்வு முறைகளைப் பிரயோகித்து யதார்த்த நிலைமைகளைப்பரிசீலிப்பதும். அதில் நடைமுறை நோக்கமும் சோதனையும் கொண்டதாக இருக்கவேண்டுமே ஒழிய மார்க்சிய — லெனினியத்துக்கு விரோதமாகவும், ஏட்டுக் கல்வி முறையும் வகுப்பறை வாதமும் கொண்டதாக இருக்கக்கூடாது. எனவேதான் மாவோ பின்வருமாறு கூறுகிறார்: ''இந்த உலகில் ஒரே ஒரு வகையான உண்மைக் கோட்பாடு மட்டுமே இருக்கிறது. அது புறவயமான யதார்த்தத்திலிருந்து தொகுக்கப்படடு, பின்னர், புறவயமான யதார்த்தத்தால் சோதித்தறியப்பட வேண்டும். மற்றது எதுவும் நம்முடைய கோணத்தில் கோட்பாடு என்னும் பெயருக்கான தகுதியற்றதாகும். நடைமுறையுடன் தொடர்பின்றிப் போகும்போது கோட்பாடு நோக்கமற்றதாகிறது என்று ஸ்டாலின் சொன்னார். நோக்கமற்ற கோட்பாடு பயனற்றது; பொய்யானது, நிராகரிக்கப்பட வேண்டியது. நோக்கமற்ற கோட்பாடு மயமாக்குவதில் மோகம் கொண்டவர்களுக்கெதிராக

மரியாதையின்றி வெறுப்பை உமிழவேண்டும். மார்க்சியம் — லெனினியம் மிகவும் சரியானது, விஞ்ஞானப் பூர்வமானது, புரட்சிகர உண்மை. புறவயமான யதார்த்தத்திலிருந்து பிறந்தது. புறவயமான யதார்த்தத்தினால் சோதித்தறியப்பட்டது. ஆனால் மார்க்சிய — லெனினியத்தைக் கற்றறியும் யாரும் அதை உயிரற்ற வரட்டுக் கோட்பாடாக எடுத்துக் கொண்டு, கோட்பாட்டின் வளர்ச்சியைத் தடுப்பதோடு அவர்களும் கெட்டு மற்றவர்களுக்கும் ஊறுவிளைவிக்கிறார்கள். (மாவோ, 'கட்சியின் வேலைப் பாணியைத் திருத்துக', தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகள், பக் 176 — 177)

முதலாளித்துவ அரசியல் மற்றும் சமூகவியலாளர்களும், எல்லா வண்ணத் திரிபுவாதிகளும் மார்க்சிய — லெனினியத்தை உயிரற்ற வரட்டுக் கோட்பாடாக கற்று, நோக்கமற்ற கோட்பாட்டுமயமாக்கும் மோகம் கொண்டு, சரியான விஞ்ஞான பூர்வமான, புரட்சிகர உண்மையான சோதித்தறியப்பட்ட மார்க்சிய— லெனினியத்தை பகுதியாகவோ முழுமையாகவோ காலாவதியாகி விட்டதாக நிராகரித்து, பற்றாக்குறை பற்றியும் பிதற்றித் திரிவதோடு அவர்களது கோட்பாடுகளை நடைமுறையுடனும் இணைப்பதில்லை, சோதித்தறிவதுமில்லை. மார்க்சிய — லெனினிய விதிமுறைகளையும், ஆய்வு முறைகளையும், ஆய்வுரைகளையும் அடிப்படையாகக் கொள்ளாமல் தனக்கு முன்னோடியான முதலாளித்துவ அரசியல் மற்றும் சமூகவியலாளர்களின் கோட்பாடுகளையே அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்கின்றனர். சான்றாக, அரசு பற்றிய மார்க்சிய — லெனினியக் கோட்பாடுகள் எல்லாம், குறிப்பாக அரசு ஆளும் வர்க்கத்தின் ஆளுமைக்கான ஒரு வன்முறைக் கருவி என்பதெல்லாம் 'பழமைவாத' பாரம்பர்யவாத, மரபுவாதப் பொதுவுடமையாளர்களின் கருவிவாத ஆய்வுரையாகும் என்று சாடி வெபர் போன்ற முதலாளித்துவ கோட்பாட்டுவாதிகளின் ஆய்வுரைகளையே அடிப்படையாகக் கொள்கின்றனர். இவர்கள் நிலைப்பாட்டின்படி அரசு வெறுமனே சமுதாயத்தின் மேலாண்மை மிக்க உற்பத்தி முறைக்கான ஒரு அமைப்புதானாம்; மேலாண்மைமிக்க உற்பத்தி முறையும் அதைக் கட்டிக் காக்கும் அரசும் ஆளும் வர்க்கத்தின் நலனுக்கானவை என்று கூறக் கூடாதாம்.

இவர்கள் பெரும்பாலும் தமது ஆய்ந்தறிதலை உணர்வு பூர்வமாகவே சமுதாயம் மற்றும் பொருளாதாரத் துறைகளோடு நிறுத்திக் கொள்கின்றனர். நடைமுறை முக்கியத்துவம் வாய்ந்த பிற பிரச்சனைகளான அரசும் புரட்சியும், அடிப்படை, பிரதான முரண்பாடுகள், யுத்த தந்திரம், போர்த்தந்திரம், புரட்சிகர அமைப்புகள் இவை அனைத்தையும் புறக்கணிப்பதோடு, நடைமுறையில் சோதித்தறிவதற்கான எந்த முயற்சியும் எடுத்துக் கொள்வதில்லை. தர்க்க ரீதியான சோதித்தறிதலும் வகுப்பறை வாதமுமே இவர்களது நடைமுறை; ஆனால் நோக்கம் எதுவுமே இல்லை என்று கூறிவிட முடியாது. பாட்டாளி வர்க்க இயக்கத்

தைக் குழப்புவதும் திசைதிருப்புவதும் அதன்மூலம் ஏகாதிபத்திய வாதிகளின் நலன்களைக் காப்பதுவுமே இவர்கள் நோக்கமாகும். "முதலாளித்துவ அறிஞர்களும் நூல் வெளியீட்டாளர்களும் வழக்கமாக ஒருவகை மறைமுக வடிவத்திலேயே ஏகாதிபத்தியத்தைப் பாதுகாப்பதற்கும் அதற்கு வக்காலத்து வாங்கவும் முன்வருகிறார்கள். அதன் முற்றான மேலாதிக்கத்தையும் ஆழமான வேர்களையும் இருட்டடிப்பு செய்கிறார்கள். குறிப்பிட்ட மற்றும் இரண்டாம் பட்ச விவரங்களை முன்னுக்குத் தள்ள முயலுகிறார்கள். டிரஸ்டுகளை அல்லது வங்கிகளை போலீசு மேற்பார்வையிடுவது போன்ற முற்றும் முழுதாக வெறுக்கத்தக்க கோமாளித்தனமான 'சீர்திருத்த திட்டங்கள்' மூலம் சாராம்சமானவைகளிலிருந்து கவனத்தை சிதறடிக்க தம்மாலான மிகச்சிறந்த முயற்சிகள் அனைத்தையும் செய்கின்றனர்". (லெனின் — 'ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்' பக் 132. பீகிங் வெளியீடு 1969). இன்றைய முதலாளித்துவ அரசியல் மற்றும் சமூகவியலாளர்கள் 'சீர்திருத்த திட்டங்கள்' எதையும் முன் வைப்பதில்லை. அவை இனியும் எடுபடாது என்பதை நன்குணர்ந்து மார்க்சிய–லெனினிய ஃபோர்வையில் பொய்யான கோட்பாட்டு ஆய்வுரைகளை உற்பத்தி செய்து தள்ளுகிறார்கள். ஏகாதிபத்தியத்தின் உண்மையான சொரூபத்தை மூடி மறைத்து, புலிக்கு பசுத்தோல் போர்த்துகிறார்கள்; அல்லது மனித வேட்டையாடும் புலியை சைவப்புலியாக சித்தரிக்கிறார்கள். ஏகாதிபத்தியத்தின் தனிச்சிறப்பான குணாம்சங்களையும், அதன் விளைவாக எழும்பகைமையான முரண்பாடுகளையும் மூடிமறைத்து ஏகாதிபத்தியத்துக்கு முந்திய கட்ட முதலாளித்துவத்தின் குணாம்சங்களையும் அதன் காலனியாதிக்கத் தன்மைகளையும் முதன்மைப்படுத்துகிறார்கள். எல்லா வண்ணத் திரிபுவாதிகளும் முதலாளித்துவ அரசியல் மற்றும் சமூகவியலாளர்களை எதிர்க்கத் திராணியின்றி அவர்களின் ஒரு அங்கமாக மாறிவிட்டார்கள்.

ஏகாதிபத்தியம் என்னும் சிவனுக்கு அடியார்களாகிய சமிர் அமின், பால் சுவிசி, பால்பேரன், அந்தர் குந்தர் பிராங் ஆகியோரின் அடியார்க்கு அடியார்களாகிய கெய்ல் ஓம்வெட், அம்சா ஆல்வி, தாரிக் அலி, அசோக் மித்ரா, ருத்ரா, பக்கி, உத்சா பட்நாயக், மாத்யூ குரியன் இன்னும் பலரும் கூறும் அரசியல், பொருளாதார மற்றும் சமூகவியல் கோட்பாடுகளின் சாராம்சம் மேற்கண்ட நோக்கங்களைக் கொண்டவையே. அவர்களுடைய கோட்பாட்டு ஆய்வுரைகளில் சாராம்சமானவைகள் பின்வருவன ஆகும்.

1. மரபுவழி, பழமைவாத பொதுவுடையாளர்களின் ஆய்வுரைகளின் 'அகநிலைக் கூறுகளின்' ஆய்வும் கணிப்பும் மட்டும் தவறு இல்லை. மாறாக, இரண்டாம் உலகப் போருக்குப் பின் கடந்த முப்பது ஆண்டுகளில் 'புற நிலைக்கூறுகள்' மாறி விட்டன. மரபுவழி, பழமைவாத பொதுவுடமையாளர்களின் ஆய்வுகள் அதற்கேற்றபடி வளர்க்கப்படவில்லை.

2. மார்க்சின் மூலதனம் பற்றிய கோட்பாடு உலகம் முழுவதிலுமுள்ள சமுதாய பொருளாதார படிவங்களைப் பொதுவாக ஆய்வு செய்யாமல், மேற்கு ஐரோப்பிய குறிப்பாக இங்கிலாந்தில் நடந்த புராதன மூலதனத் திரட்சி மற்றும் முதலாளித்துவ உற்பத்திமுறை பற்றி மட்டுமே ஆய்வு செய்கிறது. ஒரு உலக அளவிலான மூலதனத் திரட்சி பற்றி முழுமையான கோட்பாட்டை மார்க்ஸ் தரவில்லை. இம்மாதிரியான கோட்பாடு இனிமேல்தான் வகுக்கவேண்டியுள்ளது. லெனின் இப்பிரச்சனையை ஏகாதிபத்தியத்தினுடையதாக மட்டும் ஆய்வு செய்ததால் முதலாளித்துவ மையங்களில் ஏகபோகம் உருவானதோடு முதலாளித்துவம் அதி உயர்ந்த கட்டத்துக்குள் நுழைந்த ஒரு சூழ்நிலை என்னும் வரம்புக்குட்பட்ட ஆய்வாக மட்டுமே இருக்கின்றது. அதன்பின் நடந்த உலக அளவிலான மூலதனத் திரட்சி மற்றும் அதற்குக் காரணமாக அமைந்த சமனற்ற பரிமாற்றம், இவற்றின் விளைவாக எழுந்த மைய நாடுகளின் முன்னேறிய நிலையும் விளிம்பு நாடுகளின் பின்தங்கிய நிலையும்பற்றி ஆய்வு செய்யவேண்டும்.

3. 'புராதன திரட்சி முதலாளித்துவ உற்பத்தி முறையின் துவக்கப்புள்ளி; முதலாளித்துவ திரட்சிக்கு முந்தியது. இது உற்பத்தி சாதனங்களிலிருந்து உற்பத்தியாளர்களைத் தனியே பிரித்து சுதந்திரமான கூலி உழைப்பாளர்களின் கூட்டத்தைக் குவிப்பது தவிர வேறெதுவுமில்லை. மாறாக, முதலாளித்துவ திரட்சி இவற்றைக் கொண்டுவந்து விடவில்லை' என்கிறார் மார்க்ஸ். ஆனால் முதலாளித்துவ அரசியல் மற்றும் சமூகவியலாளர்கள், குறிப்பாக அவர்களின் குருவாகத் திகழும் சமிர் அமின் ஆகியோர் ஆய்வுப்படி, மார்க்ஸ் கூறும் முதலாளித்துவ உற்பத்தி முறையின் இந்த முந்திய கட்டம் இன்னும் முடிவுறவில்லை, முடிக்கப்படவும் இல்லை. முதலாளித்துவம் உலக அளவில் நீடிப்பதும் விரிவடைவதன் மூலமும் தொடர்ந்து இருந்துவருகிறது. முதலாளித்துவ உற்பத்தி முறையின் தனிச்சிறப்பான குணாம்சமான மூலதனத் திரட்சி மற்றும் விரிவாக்கப்பட்ட மறுஉற்பத்தி ஆகிய செயற்போக்குடன் கூடவே உலக முதலாளித்துவக் கட்டமைவிலுள்ள மைய நாடுகள் மற்றும் விளிம்பு நாடுகளின் உறவுகளில் தனிச்சிறப்பான குணாம்சமாக புராதனத் திரட்சி என்னும் ஒரு போக்கு தொடர்ந்து இயங்கி வருகிறது. முதலாளித்துவ உற்பத்தி மேலும் மேலும் முன்னேறுவதாலும், முதலாளித்துவத்துக்கு முந்திய உற்பத்தி முறைகளோடு—விளிம்பு நாடுகளில் தொடர்பு கொள்ளுவதாலும் புராதன திரட்சி என்னும போக்கு முடிவின்றித் தொடர்கிறது. மேலும் விளிம்பு நாடுகளிலிருந்து மைய நாடுகளுக்கு 'மதிப்பு' மாறிச் செல்வதற்கு சமனற்ற பரிமாற்றம் அதாவது சமனற்ற மதிப்புடைய பொருட்களின் பரிமாற்றம் காரணமாக அமைகிறது. சமனற்ற பரிமாற்றம் என்னும் போக்கின் அடிப்படையாக அமைவது மையநாடுகளுக்கும் விளிம்பு நாடுகளுக்கும் இடையில் சமனற்ற சிறப்புத் தன்மை வாய்ந்த நமது காலத்தின் மிக முன்னேறிய தொழில் நுட்ப புரட்சியின் காரணமாக மிகமிக நவீன நடவடிக்கைகள் மற்றும் உற்பத்தியில் மையநாடுகள்

இறங்கிப் பழையதொழில்களை விளிம்பு நாடுகளுக்கு மாற்றுவது ஆகியவை. எனவே மையநாடுகளின் முதலாளித்துவத்துக்கு புராதனதிரட்சி இன்றியமையாததாகிறது. மையநாடுகளின் நலன்களுக்காக புராதனத் திரட்சியின் நெறிமுறை என்னும் விஷயம் வலியதும் தொடர்ச்சியானதுமாக நிலவுவதின் வெறும் விளைவுதான் பின்தங்கிப் போவது என்னும் விஷயமாகும். எனவே புராதனத் திரட்சி ஏதோ மூலதனத்துக்கு முந்திய வரலாற்றில் மட்டும் அடங்கியதல்ல, அது நிரந்தரமானதும், நிகழ்காலத்தினதுமான ஏதோ ஒரு விஷயம் என்பதுதான் இவர்களது மூலாதாரமான அடிப்படையாகும்.

4. சோசலிசப் புரட்சி, தேசிய விடுதலை இயக்கங்கள் ஆகியவற்றை ஒரு பகுதி காரணங்களாகக் கொண்டு இரண்டாம் உலகப் போருக்குப் பின் தோன்றிய ஏகாதிபத்தியத்தின் இரண்டாம் இடைக் கட்டத்தில் ஏகாதிபத்தியம் மற்றும் மூன்றாம் உலக நாடுகளில் பல முக்கியமான குண ரீதியான மாறுதல்கள் நேர்ந்துள்ளன. அவை; அ) பெரும்பான்மையான மூன்றாம் உலகநாடுகளில் காலனிய அரசுபோய் உள்நாட்டு முதலாளிகளின் அரசியல் சுதந்திரமுடைய முதலாளித்துவ அரசு வந்திருக்கிறது. ஆ) ஏகாதிபத்தியங்கள் மூன்றாம் உலக நாடுகளின் மீது மேலாதிக்கம் செலுத்தும் மற்றும் சுரண்டும் புதிய முறையாக நவீன காலனிமுறையாக ஏகாதிபத்தியத்தின் உள்மயமாதல் மற்றும் மூன்றாம் உலக நாடுகளின் உற்பத்தி முறைகுலைவு (Internalisation and Disarticulation)

5. **உள்மயமாவது பற்றி**: உள்ளூர் ஏகபோக முதலாளித்துவ வளர்ச்சி, சுதந்திரமான முதலாளித்துவ அரசு, ருஷிய உதவியும் பொதுத் துறையும், இவையனைத்தின் உதவியோடு சந்தை உறவுகளோடு மட்டுமின்றி உற்பத்திப் போக்கின் உறவுகளிலும் பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் நாடுகளுக்கிடையிலான நிறுவனங்கள் ஆகியவை மூலம் உள்ளூர் முதலாளிகள் ஏகாதிபத்திய உலகக் கட்டமைவில் ஐக்கியமாவது, அதாவது வெறுமனே நிதி மூலதனக்கூட்டு மட்டுமின்றி உற்பத்திப் போக்கிலும் அந்நியக் கம்பெனிகள் ஈடுபடுவது உள்மயமாவதைக் குறிக்கிறது. அதன் விளைவாக வளரும் உற்பத்தி உள்நாட்டு சந்தைக்கு முரணாகவும், பிரதானமாக ஏற்றுமதி அடிப்படையிலானதாகவும் அமைகிறது.

6. **உற்பத்தியில் முறை குலைவு பற்றி**: ஏகாதிபத்திய கட்டமைவில் உள்மயமாவதுடன் தொடர்புடைய காரணிகளும், தொழில்துறை மற்றும் முதலாளித்துவ முறையிலான விவசாயம் ஆகிய இரண்டு ஏற்றுமதி அடிப்படையிலான உற்பத்தியும் மூன்றாம் உலக நாடுகளில் ஒரு முதலாளித்துவ திசையில் விவசாயத்தை தீவிரமாக மாற்றியமைப்பதிலிருந்தும், உள்நாட்டுச் சந்தையை வளர்ப்பதிலிருந்தும் முறைகுலைவை ஏற்படுத்துகின்றன. விவசாய மற்றும் வியாபார முதலாளித்துவம் வளர்க்கப்படுகிறது. ஆனால் தீவிரமான முறையில்

அல்ல. எனவே முதலாளித்துவத்துக்கு முந்திய உற்பத்தி முறை அழிக்கப்படாததோடு, பின்தங்கிய நிலையின் தனிச் சிறப்பான குணாம்சமாகிய விவசாய முதலாளித்துவத்தை உறுதிப்படுத்துகிறது. இவையனைத்தும் தொழில் வளர்ச்சி தடைக்கும் நிரந்தர நெருக்கடிக்கும் இட்டுச் செல்லுகின்றன.

7. உற்பத்தியில் முறை குலைவு மூன்றாம் உலக நாடுகளின் சமுதாயப் படிவத்தில் மட்டுமே நடக்கிறது. உண்மயமாவது ஏகாதிபத்திய சங்கிலியின் எல்லா சமுதாயப் படிவங்களிலும் நடக்கிறது. மூன்றாம் உலக நாடுகளின் முதலாளிகள் ஏகாதிபத்திய கட்டமைவில் ஐக்கியமாவது, உள்மயமாவது ஏகாதிபத்தியத்தின் ஒரு இடைக்கட்டமாகும். உள்மயமானதின் மூலம் ஏகாதிபத்தியம் மேலாதிக்கம் செய்கிறது; சுரண்டுகிறது. அதே சமயம் உள்மயமாவதின் மூலம் கூடுதலான பங்குக்காகவும் புதிய சலுகைகளுக்காகவும், சர்வதேச உழைப்புப் பிரிவினையில் புதிய நிபந்தனைகளுக்காகவும் உள்நாட்டு முதலாளிகள் வலியுறுத்தும் உரிமை பெறுகிறார்கள். இருப்பினும் ஏகபோக முதலாளித்துவம் கார்ட்டல்கள், மூன்றாம் உலக நாடுகளைச் சுரண்டுவது, உள்நாட்டில் முழுமையான முதலாளித்துவ கட்டுமான வளர்ச்சி— ஆகிய தன்மைகளை உடைய ஏகாதிபத்திய சமூகப் படிவங்கள் அடங்கிய மைய நாடுகள், மேலாண்மை பெற்றவை என்றும் முதலாளித்து மற்றும் அதற்கு முந்திய உற்பத்திய முறைகளைக் கலவையாகப் பெற்ற சமூகப் படிவங்கள் அடங்கிய விளிம்பு நாடுகள் பெரும்பாலும் மேலாண்மைக்குள்ளானவை என்றும் இரு பிரிவுகளாக ஏகாதிபத்தியக் கட்டமைவு உள்ளது. சமனற்ற பரிமாற்றம் மூலம் உலகச் சந்தையில் மேலாண்மைகுள்ளான விளிம்பு நாடுகளிலிருந்து மேலாண்மை பெற்ற மையநாடுகளுக்கு மதிப்பு எடுத்துச் செல்லப்படுகிறது.

8. மூன்றாம் உலக நாடுகளின் சமூகப் படிவத்திலுள்ள ஒரு உட்காரணியாக ஏகாதிபத்தியமாகிவிட்டது. அதுவே உற்பத்தியில் முறைகுலைவை ஏற்படுத்துகிறது. உள்மயமான முதலாளித்துவ வர்க்கம் ஏகாதிபத்தியத்திடமிருந்தும், ஏகபோகமிடத்திருந்தும் முறித்துக் கொள்ளவோ உற்பத்தியில் முறைகுலைவை ஒழிக்கவோ இயலாது. ஏனெனில் அதற்கு ஏகாதிபத்திய அரசிடமிருந்து அரசியல் சுதந்திரம் அடைந்தால் மட்டும் போதாது. அவர்களுடன் அடிப்படையில் பகைமையான பரந்துபட்ட மக்களைத் திரட்ட அஞ்சுகிறது.

ஏகாதிபத்திய நலன்களுடன் உள்மயமாகிவிட்டதின் விளைவாக சிந்தனையில் முறைகுலைவு அடைந்துள்ள முதலாளித்துவ அரசியல் மற்றும் சமூகவியலாளர்களின் மேற்கண்ட ஆய்வுரைகளையும், ஆய்வுமுறைகளையும் நோக்கமற்ற, கோட்பாட்டு மயமாக்குவதில் மோகம் கொண்ட எல்லா வண்ணத் திரிபுவாதிகளும் மார்க்சிய–லெனினியம் மற்றும் நடைமுறை என்னும் உரை கல்லில் உரைத்துப் பார்ப்பதற்குப் பதில் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் நடைமுறையையும் மார்க்சிய-லெனினியத்தையும்

சோதித்தறியும் உரைகல்லாக இவற்றைப் பயன்படுத்துகிறார்கள் புரட்சிகர இயக்கத்தின்மீதும், மார்க்சிய-லெனினியத்தின்மீதும் அவநம்பிக்கை கொள்கின்றனர். மார்க்சிய-லெனினியத்தை உயிரற்ற வரட்டுக் கோட்பாடாக கற்றறிவது அல்லது அதன் அடிப்படையையும் சாராம்சத்தையும் கிரகிக்கத் தவறுவதன் விளைவாக, அதைப் பகுதியாகவோ முழுமையாகவோ தவறு அல்லது காலாவதியாகிவிட்டதாக நிலைநாட்ட விரும்பும் முதலாளித்துவ அரசியல் மற்றும் சமூகவியலாளர்களின் நோக்கத்திற்கு பலியாகிறார்கள். மேலெழுந்தவாரியாகவும் தர்க்க ரீதியாகவும் பார்க்கும்போது அவர்களின் ஆய்வுரைகளும் ஆய்வுமுறைகளும் சரியானவைகளாகத் தோன்றலாம். ஆனால் உண்மையில் அவை பயனற்றவை; பொய்யானவை; நிராகரிக்கப்படவேண்டியவை.

மார்க்சிய-லெனினிய-மாசேதுங் சிந்தனையின் சர்வவியாபகமான பொதுவிதிகளை தொகுத்து பருண்மையான நிலைமைகளைப் பற்றி பருண்மையாக, ஆக்கபூர்வமாக ஆய்வுசெய்வதன்மூலமே எல்லா வண்ணத் திரிபுவாத மற்றும் முதலாளித்துவப் பொருளாதார, அரசியல் மற்றும் சமூகவியல் போக்குகளையும் முறியடிக்க முடியும்.

—x—

# 2. முதலாளித்துவத்திற்கு முந்திய உற்பத்திமுறைகளின் அழிவு! முதலாளித்துவ உற்பத்தி முறைக்கான முன்தேவைகள்

பொதுவில் அனைத்து மூன்றாம் உலக நாடுகளிலும், குறிப்பாக நமது நாட்டிலும் தற்போது நிலவும் சமுதாயப் பொருளாதாரப் படிவம் மற்றும் உற்பத்திமுறை பற்றி திரிபுவாதிகளும், நவீன திரிபுவாதிகளும், டிராட்ஸ்கியவாதிகளும், முதலாளித்துவ சமூகவியலாளர்களும் தொடர்ந்து பல மார்க்சிய - லெனினிய விரோத கோட்பாட்டு அடிப்படைகளையும் முடிவுகளையும் கொட்டி அளக்கின்றனர். ஏகாதிபத்திய உலகக் கட்டமைவில் நிலவும் 'ஏற்றத்தாழ்வான, பின்தங்கிய வளர்ச்சிமுறை' பற்றி ஆய்வு செய்வதாகக் கூறிக்கொண்டு முதலாளித்துவ சமூகவியலாளர்கள் மூன்றாம் உலக நாடுகள் அனைத்திலும் உற்பத்தி முறை குலைவு ஏற்பட்டு, ஏகாதிபத்தியம் உள்மயமானதன் விளைவாக ஒருவகை, விளிம்பு முதலாளித்துவ உற்பத்திமுறை தோன்றியிருப்பதாகக் கதைக்கின்றனர். பல்வேறு வார்த்தைகளில் வெவ்வேறு முதலாளித்துவ சமூகவியலாளர்களும் தமது ஆய்வுரைகளை முன்வைப்பினும் சாராம்சமாக அவர்களது வாதமெல்லாம் ஒன்றுதான். அதாவது சுதந்திரமடைந்த உள்நாட்டு முதலாளிகள் ஏகாதிபத்தியத்தின் ஆதரவுடன் நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையை கச்சாப் பொருட்களுக்கான மூலாதாரமாக மாற்றிக் கொள்வதன்மூலம் அரைகுறையான முதலாளித்துவ உற்பத்தியை நிறுவியுள்ளனர் என்கிறார்கள். 'காலனிக்குப் பிந்திய சமுதாயம், காலனிக்குப் பிந்திய உற்பத்தி முறை' 'பின்தங்கிய சமுதாயம், பின்தங்கிய உற்பத்திமுறை 'இரட்டை உற்பத்தி முறை, முறை குலைந்த சமுதாயம்' என்று பலவாறாக அவர்கள் மூன்றாம்உலக நாடுகளது சமுதாயப் பொருளாதாரப் படிவங்கள் பற்றி சித்தரிக்கின்றனர். விவசாயத்தில் நவீனமுறை, கூலி மற்றும் விலை நிர்ணயம், பண்ட உற்பத்தி மற்றும் பணவாடகை மேலோங்கியிருப்பதால் மூன்றாம் உலகநாடுகள் அனைத்திலும் முதலாளித்துவ உற்பத்தி முறையும் முதலாளித்துவ சமுதாய அமைப்பும் நிலைநாட்டப்பட்டதாக டிராட்ஸ்கிய மற்றும் பிறகுட்டி முதலாளித்துவ ஆய்வாளர்கள் மதிப்பிடுகின்றனர். மூன்றாம் உலகநாடுகளது சமுதாயப் பொருளாதார நிலைமைகள் குறித்து தமது

சோவியத் ருஷ்ய எஜமானர்களின் ஆய்வுரைகளை அப்படியே ஏற்கும் அதே சமயம் டாங்கே மற்றும் அவரது தாய்க் கட்சியைச் சேர்ந்த திரிபுவாதிகள் இந்தியாவின் முதலாளித்துவத்துக்கு முந்திய உற்பத்தி முறையையும் சமுதாயத்தையும் மார்க்சிய—லெனினிய வரையறைக்கு விதிவிலக்கானதாகச் சித்தரிக்கின்றனர். சாதிய, வருண, மத அமைப்புகளைக் கொண்ட ஆசிய சொத்துடைமை வடிவத்தின் கீழ் இந்தியா முறையான சமுதாய வளர்ச்சிப் போக்குகளைக் கடந்து வரவில்லை என்கின்றனர். சாதிய, வருண, மதஅமைப்புகளைக் காட்டி ஏதோ ஒருவகையில் இந்தியா வித்தியாசமான சமுதாய, பொருளாதார அமைப்பைக் கொண்டிருந்ததாகவும் கூறும் சில குட்டி முதலாளிகள் இதைப் பற்றிய ஆய்வின் அவசியம் குறித்து உரக்க கூவுகின்றனர். ஆனால் உருப்படியான முயற்சி எதுவுமின்றி தொடர்ந்து பிதற்றி கொண்டு தானும் குழம்பி பிறரையும் குழப்பி முடிவற்ற கோட்பாட்டுமயமாக்குதலில் ஈடுபட்டுள்ளனர். மார்க்சிய - லெனினியத்தின் புனிதத்துவத்தைக் காப்பதாகக் கருதிக்கொண்டு சாதிய, வருண, மத அடிப்படைகளைக் கொண்ட ஆசிய சொத்துடைமை வடிவங்கள் மற்றும் ஆசிய உற்பத்திமுறை நிலவியதையே முற்றாகப் புறக்கணித்து, நிராகரித்து இயந்திர ரீதியான சமுதாயப் பொருளாதாரப் படிவங்கள் பற்றிய முடிவுகளை ஆர். பி. சராப்பும் நவீன திரிபுவாதிகளும் முன்வைக்கின்றனர்.

பிற மார்க்சிய - லெனினிய அமைப்புகளோ தற்போது நிலவும் இந்திய சமுதாயப் பொருளாதாரப் படிவம் பற்றியும், அதற்கு முந்திய உற்பத்தி முறை மற்றும் சமுதாயம் பற்றியும் ஆழமான மற்றும் பருண்மையான ஆய்வின் அவசியத்தை புறக் கணிப்பதன் மூலம் மேற்கண்ட எல்லாவகையான மார்க்சிய - லெனினிய விரோதப் போக்குகளுக்கும் இடமளிக்கின்றன. இந்த எல்லாப் போக்குகளையும் முறியடிக்க வேண்டுமானால் முதலாளித்துவத்துக்கு முந்திய உற்பத்திமுறை மற்றும் முதலாளித்துவ உற்பத்திமுறை ஆகிய இரு முறைகளுக்கிடையிலான அடிப்படையான சாராம்சமான வேற்றுமைகள் பற்றிய மார்க்சிய-லெனினிய நிலைப்பாடுகளை ஆய்ந்தறிய வேண்டும். இப்பணியைச் செய்யும்போதே இதுவரை நிலவிவந்த ஆய்வு முறைகளில் பல தவறான கருதுகோள்களை நிராகரித்து சரியானலவகளை நிலைநாட்டவும் வேண்டும்.

முதலாவதாக, முதலாளித்துவத்துக்கு முந்திய சமுதாயப் பொருளாதாரப் படிவங்களும் உற்பத்தி முறைகளும்—புராதன பொதுவுடைமைச் சமுதாயம், அடிமைச் சமுதாயம், நிலப்பிரபுத்துவ சமுதாயம் ஆகிய மூன்று கட்டங்களும் அப்படியே உலகல் எங்கெங்கும் நிலவியதாக யந்திர முறையில் புரிந்து கொள்ளக் கூடாது. இம்மூன்று சமுதாயப் பொருளாதார படிவங்கள் மற்றும் உற்பத்தி முறைகளின் பொதுத் தன்மைகள் நிலவியிருந்தபோதும், அவை பொதுவான வரையறைகள் மட்டுமே. ஆசிய, ஸ்லாவேனிக், ரோமானியப் பழம் பண்டு மற்றும் ஜெர்மானிய ஆகிய வடிவங்களின் தனிச்சிறப்பான அம்சங்களும் நிலவியிருக்கின்றன.

இரண்டாவதாக, முதலாளித்துவத்துக்கு முந்திய உற்பத்தி முறையின் முன்னோக்கிய வளர்ச்சிப் போக்கின் விளைவாக முதலாளித்துவ உற்பத்திமுறை தோன்றுவதில்லை. முதலாளித்துவத்துக்கு முந்திய உற்பத்தி முறையின் சிதைவிலிருந்து, அழிவிலிருந்து, அதன் இடிபாடுகளிலிருந்து முதலாளித்துவ உற்பத்தி முறை உதித்தெழுகிறது. முதலாளித்துவத்துக்கு முந்திய உற்பத்திமுறைகளின் வீழ்ச்சிக்கான அழிவுக்கான அடிப்படையாக அவற்றின் முரண்பாடுகள் நிலவுகின்றன. அவை இயற்கைப் பொருளாதாரத்தின், எளிய மறு உற்பத்திக்கான அடிப்படைகளைக் கொண்டிருக்கின்றன. மாறாக விரிவாக்கப்பட்ட மறு உற்பத்தியின் அடிப்படையிலான முதலாளித்துவ உற்பத்தி முறை, ஒன்றிலிருந்து மற்றொன்று என்பதாக இல்லாது அக்கம் பக்கமாக,வேறொரு அடிப்படையிலிருந்தே தோன்றி வளர்கிறது. முதலாளித்துவ உற்பத்திமுறையிலேயே நிலவும் சமுதாயமயமாக்கப்பட்ட உற்பத்தி முறையை அடிப்படையாகக் கொண்டு உற்பத்திச் சாதனங்களின் உடமையையும் சமுதாயமாக்குவதன் மூலம் சோசலிச உற்பத்திமுறை தோன்றுகிறது. இம்மாதிரியான போக்குடையதாக இல்லாமல் முதலாளித்துவத்துக்கு முந்திய உற்பத்தி முறை அனைத்துமே முற்றாக சிதைக்கப்படவேண்டும்.

மூன்றாவதாக, முதலாளித்துவத்துக்கு முந்திய உற்பத்திய முறையின் சிதைவே முதலாளித்துவத்துவ உற்பத்திமுறை உருவாவதற்கான முன்நிபந்தனையாகும். ஆனால் இந்த முன்நிபந்தனை பூர்த்தியாவது பிரதானமாகப் பொருளாதாரக் காரணிகளால்அல்ல. மாறாக பிரதானமாக அரசியல் மற்றும் வரலாற்று ரீதியானகாரணிகளாலேயே இவை பூர்த்தியாயின. உற்பத்திச் சாதனங்களை உழைப்பாளர்களிடமிருந்து விடுவித்து பரிவர்த்தனைப் பண்டமாக்குவது, அதே சமயம் உழைப்பாளர்களை உற்பத்திச் சாதனங்களுடனான பிணைப்பை அறுத்து கூலி அடிமைகளாக மாற்றுவது என்ற முதலாளித்துவ உற்பத்திமுறைக்கான முன் நிபந்தனையை பொருளாதார காரணிகளை அடிப்படையாகக் கொண்டு ஆலை முதலாளிகள் நிறைவேற்றவில்லை. மாறாக நிதியாதிக்க உயர்குடி நகர்ப்புற மக்களையும் மத்திய முடியரசையும் கூட்டாகத் தலைமையேற்று நிறைவேற்றியது. இவ்வாறு தொடங்கப்பட்ட முதலாளித்துவப் புரட்சியை ஆலை முதலாளித்துவ வர்க்கம் முடித்து வைத்தது.

இந்த அடிப்படைக் கருதுகோளை நிலைநாட்டுவதன் மூலம் தான் முதலாளித்துவத்துக்கு முந்தியசமுதாயம் மற்றும் உற்பத்தி முறைக்கும்,முதலாளித்துவ சமுதாயம் மற்றும் உற்பத்தி முறைக்கும் இடையிலான சாராம்சமான வேற்றுமைகளைப்பற்றியமார்க்சிய-லெனினிய நிலைப்பாடுகளை வரையறுக்கமுடியும். அவற்றை பிரயோகிப்பதன் மூலம் முதலாளித்துவ உற்பத்தி முறைக்கு மாறிச் செல்லும் பாதைகளை ஆய்ந்தறிய வேண்டும். அப்பொழுதுதான்

இந்திய சமுதாய உற்பத்தி முறைகளில் இம்மாறுதல் எவ்வாறு எந்த அளவு நடந்தேறியிருக்கிறது என்பதை அறிய முடியும்.

முதலாளித்துவ உற்பத்தி முறை முதலில் பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியைப் பொதுவாக்குகிறது. பின்னர் பல்வேறு அளவுகளின் மூலம் உழைப்புச் சக்தி, நிலம், மூலதனம், உற்பத்திச் சாதனங்கள், உற்பத்தி பொருட்கள் இப்படி எல்லாவற்றையும் பரிவர்த்தனைப் பண்டங்களாக்கி, பூதாகரமான முதலாளித்துவ பண்ட உற்பத்தியாக வளர்கிறது. மார்க்ஸ் கூறினார்: "பரிவர்த்தனைப் பண்டங்களின் முதலாளித்துவ உற்பத்தி சுரண்டல் முறையின் ஒரு சகாப்தத்தை உருவாக்கு வதாக மாறியிருக்கிறது. அது வரலாற்று பூர்வமான வளர்ச்சிப் போக்கில் உழைப்பு செயற்போக்கின் ஸ்தாபனம் மூலமும், அளவிட முடியாத தொழில்நுட்ப அபிவிருத்தி மூலமும் எல்லா பழைய சகாப்தங்களையும் கிரகணம் பிடித்து மறைக்கும் வகையில சமுதாயத்தின் பொருளாதாரக் கட்டுமானங்கள் முழு வதையும் புரட்சி மயமாக்குகிறது.'' (மார்க்ஸ், 'மூலதனம்', தொகுதி 2, பக் 35). எனவேதான் சின்னஞ்சிறு திறத்தனதாய் சிறியதாய், சூழ்நிலையால் கட்டுண்டதாய், தனி நபர்-குடும்பம் என்ற ஒரு சமூக அளவினதாய், சுயதேவை மதிப்புடையதாய், உழைப்பாளர்களை உற்பத்திச் சாதனங்களோடு பிணைப்பதாய் தனிநபர்உற்பத்தி முறையும் சுவீகரிப்பும் உடையதாய் விளங்கும் முதலாளித்துவத்திற்கு முந்திய உற்பத்திமுறை ஒழித்து கட்டப் படவேண்டும். அதனிடத்தில் நவீன பெருவீத, இயந்திரமயமான விஞ்ஞானப்பூர்வமான,மத்தியத்துவப்படுத்தப்பட்டதான,தேசிய பிறகு சர்வதேசிய அளவினதான, பரிவர்த்தனை மதிப்புடைய, உழைப்பாளர்களிடமிருந்து உற்பத்திச் சாதனங்கள் பிரிக்கப் பட்ட, சமுதாயமாக்கப்பட்ட உற்பத்தி, ஆனால் தனிநபர் சுவீ கரிப்புடைய முதலாளித்துவ உற்பத்திமுறை அதன் தனிச்சிறப் பான குணாம்சமாகிய பரிவர்த்தனை பண்ட உற்பத்தி மற்றும் தேசிய பொருளாதாரத்தின் அடிப்படையிலான சமுதாய உழைப் புப்பிரிவினைக்கும், உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்குத் தடை யாக விளங்கும், முரண்பாடான, வேறுபாடான எல்லா பழைய உற்பத்தி உறவுகளும் தகர்த்தெறியப்படவேண்டும். பொருளா தார ரீதியாக மட்டுமின்றி பிற சமூக, அரசியல், கலாச்சார உறவு களும் தகர்த்தெறியப்படவேண்டும்.

முதலாளித்துவ உற்பத்திமுறையின்தோற்றத்திற்கும் வளர்ச் சிக்கும் தடையாக விளங்கும் காரணங்களை அறியிடுவதற்கே, அதற்கு முந்திய உற்பத்தி முறையின் அடிப்படைகளை—உற்பத்தி சக்திகள், உறவுகள், அதன் விளைவான மேற்கட்டுமானங்களின் சாராம்சத்தை—தொகுத்து அறியவேண்டும். ஒரு உற்பத்தி முறை யின வளர்ச்சியையும் சாராம்சத்தையும் தீர்மானிக்கும் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி மட்டத்தின் அளவை மிகவும் வெளிப்படை யாக உழைப்புப் பிரிவினை காட்டுகிறது. மனிதர்களுக்கும் இயற் கைக்கும் இடையிலான, மற்றும் மனிதர்களுக்கிடையிலான உறவுகளையே, அதாவது உற்பத்தி உறவுகளையே உழைப்பு பிரி வினை குறிக்கிறது. உழைப்புப் பிரிவினையின் சட்டபூர்வமான, அதிகாரப்பூர்வமான சித்தரிப்பு சொத்துடைமையாகும்.

அதாவது பொருட்கள், கருவிகள், உழைப்பின் பொருட்கள் ஆகியவற்றையொட்டு மனிதர்களுக்கிடையிலான உறவே சொத்துடைமையும் உழைப்புப் பிரிவினையும் ஆகும். உழைப்புப் பிரிவினையின் பல்வேறு வளர்ச்சிக் கட்டங்களையே வெவ்வேறு சொத்துடைமை வடிவங்கள் குறிக்கின்றன.

எனவே சொத்துடைமை, உழைப்புப் பிரிவினை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு முதலாளித்துவத்திற்கு முந்திய சமுதாயங்களின் உற்பத்தி உறவுகள், சமுதாய, அரசியல், கலாச்சார உறவுகள் வரையறுக்கப்பட வேண்டும். சொத்துடைமை மற்றும் உழைப்புப் பிரிவினை ஆகியவற்றை மட்டுமல்ல, ஒவ்வொரு சமுதாயத்தின் வாழ்வையும் வளர்ச்சியையும் தீர்மானிக்கும் பிரதான வர்க்க முரண்பாடுகள் மற்றும் அவற்றின் அடிப்படைகளாக விளங்கும் உற்பத்தியிலுள்ள அடிப்படை முரண்பாடுகள் ஆகியவற்றின் வளர்ச்சிப் போக்கு மற்றும் தீர்வுகளையும் எல்லாவற்றுக்கும் மேலாக ஆய்ந்தறிய வேண்டும்.

''ஒவ்வொரு சமுதாயப் படிவத்திலும்உற்பத்தியின் ஒரு குறிப்பிட்ட கிளை மற்றெல்லாவற்றின் அந்தஸ்தையும் முககியத்துவத்தையும் தீர்மானிக்கிறது. இந்தக் கிளையில் பெறப்படும் உறவுகள் அதற்கேற்றபடி மற்றெல்லாவற்றின் உறவுகளையும் கூடத் தீர்மானிக்கிறது'' என்றார் மார்க்ஸ். எனவேதான், மேய்ச்சல் தொழில் பழங்குடியினர், பண்டு பழம் சமுதாயம், மற்றும் நிலப்பிரபுத்துவ சமுதாயத்திலும் நிலவுடைமை தீர்மானகரமான பாத்திரமாற்றியிருக்கிறது. பின் இரண்டு சமுதாயங்களில் விவசாயம் மேலாண்மை பெற்றிருந்ததோடு பட்டறை உற்பத்தியும் கூட அதன் கட்டுமானத்திலும், சொத்துடைமை வடிவத்திலும் ஓரளவு குறிப்பான விவசாயத் தன்மைகளைப் பெற்றும் அதைச் சார்ந்தும்தான் இருந்தது என்பதால் நிலச்சொத்துடைமை மற்றும் விவசாய உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு முதலாளித்துவத்திற்கு முந்திய சமுதாயப் பொருளாதார படிவங்களை அவர் ஆய்வு செய்தார்.

ஆதி முதலில் சொத்துடைமையின் பொருள், மனிதனுக்குச் சொந்தமானது, அவனுடையது. அவனுடைய சொந்த ஜீவிதத்துக்கு முன் நிபந்தனை என்ற முறையில் அவனது உற்பத்திக்கான இயற்கை நிலைமைகள்பற்றிய கண்ணோட்டம் அல்லது போக்கு என்பதைத் தவிர வேறு எதுவுமில்லை. அவனுக்கே தேவையான இயற்கையான முன் நிபந்தனைகள், அவை அப்படியே அவனது உடலின் ஒரு நீட்டிப்பாக அமையும் என்கிற முறையில் அவை பற்றிய கண்ணோட்டம் அல்லது போக்காகும். மிகக் கறாராக; சரியாகச் சொல்வதனால் அவனது உற்பத்திக்கான நிலைமைகளோடு அவன் உறவு கொண்டிருப்பதாக மட்டும் இல்லை. மாறாக ஒருபுறம், அவனே அகநிலையாகவும் மற்றொரு புறம், அவனது ஜீவிதத்துக்கான இயற்கையான சடத்தன்மையுடைய நிலைமைகளில் புறநிலையாகவும் என இரண்டு வடிவங்களில் இருந்தான்.

ஆதி முதலில் சொத்துடைமையின்பால் மனிதன் இந்தக் கண்ணோட்டம் அல்லது போக்கு கொள்வதற்கான 'காரணம் என்ன? உற்பத்திக்கான ஆதிமுதல் நிலைமைகளை மனிதன் மறுஉற்பத்தி செய்தான், வளர்த்தான். இருப்பினும் வெறுமனே ஜீவனுள்ள அவனது உடலைப் போன்றே இயற்கையான முன்நிபந்தனைகளாக உற்பத்தியாளன் இருப்பதற்கே இயற்கை நிலைமைகளாக அவை தோன்றுகின்றன. ஏனெனில் ஆதிமுதலில் உற்பத்திக்கான நிலைமைகள் மனிதனால் முன்னிறுத்தப்படவில்லை. மாறாக அவனுக்கே முன்நிபந்தனையாகத் தோன்றுகிறது. மனிதனது சொந்த உடலே ஒரு இயற்கையான முன்நிபந்தனையாகும். அது மனிதனால் முன் நிறுத்தப்பட்டது அல்ல. இவ்வாறு மனிதன் தனது சொத்துடைமையாகக் கருதும்—அவனது ஒரு சடப்பொருள் அங்கமாகக் கருதும் — ஜீவிதத்துக்கான இயற்கை நிலைமைகள் இரண்டு குணாம்சங்களைக் கொண்டிருக்கின்றன. அவை 1. அகநிலை 2. புறநிலை. அதாவது மற்றவைகளுடன் கலப்பது மற்றும் மோதுவதன் விளைவாக வரலாற்றுப் பூர்வமாக வெவ்வேறு வடிவமைப்புகளை எடுக்கும் ஒரு குடும்பத்தினுடைய, ஒரு பழங்குடியினுடைய அல்லது ஒரு கணத்தினுடைய உறுப்பினனாக உற்பத்தியாளன் இருக்கிறான் என்கிற வகையில் அகநிலையாகவும்,மற்றொருபுறம் அம்மாதிரியான உறுப்பினன் என்கிற முறையில் நிலம் போன்ற மிகவும் துல்லியமான தெளிவான இயற்கையையும் அவனது உற்பத்திக்கும் மறு உற்பத்திக்கும் ஆன நிலைமைகளாக அவனது சடப்பொருள் அங்கமாகத் தொடர்பு கொள்கிறான்.

முதலாளித்துவத்திற்கு முந்திய சொத்துடைமைச் சமுதாயங்களில் மனிதன்ஜீவிப்பதற்கே முன்நிபந்தனைகளாகவிளங்கிய உற்பத்திக்கான இயற்கைநிலைமைகள் இரண்டுவடிவங்களிலானவை அவை 1. ஒரு சமூகத்தினுடைய உறுப்பினனாக இருப்பது. எனவே அதன் மூலம் அந்த சமுகமே இருப்பது. அதன் ஆதிமுதல் வடிவம் பழங்குடி சமூகம். அதன் பின் கிட்டதட்ட மாறுபட்ட வடிவங்கள். 2. சமூகத்தின் காரணமாக, சமூக நிலச்சொத்துடைமை காரணமாக நிலம் அவனுக்கே சொந்தம் என்கிற உறவு. அதே சமயம் தனி அனுபோகம் தனிப்பட்டவருக்கு இருப்பது அல்லது நிலமும் அதில் பயிரிடுவதும் பொதுமையாகவும் அதன் விளை பொருட்கள் மட்டும் பங்கீடு செய்வது என்கிற முறையில் இருப்பது. உற்பத்திக்கு உழைப்பவன், அல்லது தனது மறு உற்பத்திக்கு உழைப்பவன் மேற்கண்ட இரு வடிவங்களினால் ஆன தனது உற்பத்திக்கும் மறு உற்பத்திக்குமான முன்நிபந்தனைகளாகிய இயற்கையான நிலைமைகளை எவ்வாறு நடத்தினான் என்பதையே ஆதிமுதலில் ஆசிய, ஸ்லாவினிய, பழம்பண்டு மற்றும் ஜெர்மானிய வடிவங்களுக்கும் பொருந்தக்கூடிய சொத்துடைமை முறைகள் குறிக்கின்றன. எனவே உற்பத்திக்கும் மறு உற்பத்திக்குமான நிலைமைகளைப் பொருத்து சொத்துடைமையின் வடிவங்கள் மாறின. முதலாளித்துவத்திற்கு முந்திய சமுதாயப் படிவங்கள் பழங்குடி சமூகத்தில் பொதுச் சொத்துடைமை, பழம் பண்டு சமூகத்தில் சமூக அல்லது அரசு சொத்துடைமை,நிலப்பிரபுத்துவ சமூகத்தில் தனிச்சொத்துடைமை அல்லது எஸ்டேட்டுச் சொத்

துடைமை ஆகிய மூன்று வடிவங்கள் அவற்றுக்குப் பொருத்தமான உழைப்புப் பிரிவினைகளையும் கொண்டிருந்தன.

இம்மூன்று சொத்துடைமை வடிவங்களிலும் வளர்ச்சிக்கான அடிப்படை தனி மனிதர்களுக்கும் சமூகத்திற்கும் இடையிலான முன் நிபந்தனையான உறவுகளை—அவை ஏறக்குறைய தன் இயல்பாகவோ அல்லது வரலாற்று பாலமாகவோ எவ்வாறு வந்திருந்தாலும் வழமையாகிவிட்டவை—மறு உற்பத்தி செய்வது; உழைப்புக்கான நிலைமைகள் மற்றும் சக தொழிலாளி, சக பழங்குடியினர் இன்னும் பிறர்பால் தனி நபரின் போக்குகளைப் பொருத்து அவருக்காகவே முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட தனிநபருக்கான, ஒரு நிச்சயமான புறவயமான வாழ்வுநிலையை மறு உற்பத்தி செய்வது; — இவை இரண்டும் ஆகும். இந்த வளர்ச்சி போக்கு என்பது அடியெடுத்து வைக்கும்போதே வரம்புக்குட்பட்டது. ஆனால் ஒருமுறை இந்த வரம்பைத் தாண்டினால் நிலை குலைவும் சிதைவும் எற்படுகிறது. எனவே தான் அடிமைமுறை, பண்ணையடிமை முறை, நிலச்சொத்துடைமை குவிதல், பரிவர்த்தனை, ஒரு நிதிக் கட்டமைவு, போர், வென்றடக்குதல்கள் இவையும் இன்ன பிறவும் பரிணமிக்கின்றன. இவையனைத்தும் ஒரு குறிப்பிட்ட முனை அல்லது கட்டம் வரை அடித்தளத்துடன் பொருத்தமானவையாகவும் வெறுமனே அறியாமையினால் எழும் நீட்டிப்பாகவும் அல்லது அதிலிருந்து எழும் தவறான செயல்களாகவும் தோன்றும். ஆனால் உற்பத்தியாளனை அவனது ஜீவிதத்திற்கான புறவயமான நிலைமைகளில் அத்துடனே மறுஉற்பத்தி செய்வது என்ற வளர்ச்சிக்கான அடிப்படையினுடைய ஒரு குறிப்பிட்ட அரங்கத்திற்குள் கணிசமான அளவு வளர்ச்சி சாத்தியமாகிறது ஆனால் அதற்குஅப்பால் தனிநபர் அல்லது சமுதாயத்தின் சுதந்திரமான முழுமையான வளர்ச்சி சாத்தியமற்றதாகிவிடுகிறது தனிநபர்அல்லது சமுதாயத்தின் வளர்ச்சியே ஆதிமுதல் உறவுக்கு முரண்பாடானதாக இருக்கிறது. ஏனென்றால் உற்பத்தியின் நோக்கமே உற்பத்தியாளனை அவனது ஜீவிதத்துக்கான புறவயமான நிலைமைகளில் அத்துடனே மறு உற்பத்தி செய்வதாகும். இது உற்பத்தியின் விளைவு அல்ல, மாறாக உழைப்பதற்கான முன் நிபந்தனையாகும். விரிவாக்கப்பட்ட மறு உற்பத்தி அல்ல; மாறாக வெறும் சாதாரணமான, (அப்படியே) எளிய மறு உற்பத்தி செய்வதாகும். சொத்துடைமையாளர்களின் இந்த நடத்தை ஒரு பழங்குடி அல்லது சமூக ஒருமையின் ஓர் அங்கமாக தனி நபரின் வாழ்வு நிலையை முன் நிபந்தனையாகக் கொண்டதாகும். ஆனால் சமூகமே பழையமுறையில் நீடிப்பதற்கு அதன் உறுப்பினர்களை ஒரு குறிப்பிட்ட புறவயமான நிலைமைகளில்மறுஉற்பத்தி செய்யவேண்டும். ஆனால் உற்பத்தியே,உற்பத்தியின் ஒரு அடக்கமாக உள்ள மக்கள்தொகையே இருப்பது கூட, இந்த நிலைமைகளைப் படிப்படியாகத் துடைத்தெறியும். அவற்றை மறு உற்பத்தி செய்வதற்குப் பதில் அழிக்கும். மேலும் சமூகத்தையே அது எதன் மீது அடிப்படையாகக் கொண்டு எழுந்திருந்ததோ அந்த சொத்துடைமை வடிவங்கள் மற்றும் உறவுகளோடு அழியச் செய்துவிடும்.

முதலாளித்துவத்திற்கு முந்திய சொத்துடைமை வடிவங்களின் கீழ் அடிமை முறை மற்றும் பண்ணை அடிமை முறைகளில் உழைப்பவனே மூன்றாம் ஆளுக்கு அல்லது சமூகத்துக்கான உற்பத்திக்குத் தேவையான இயற்கை நிலைமைகளில் ஒன்றாகக் கப்படுகின்றான். எனவே சொத்துடைமை என்பது உழைப்புக்கான புறவயமான நிலைமைகளோடு தனக்காகவே உழைக்கும் தனிநபரின் உறவாக இனியும் இருக்க முடியாது என்றானது. இவ்வாறான அடிமை முறை, மற்றும் பண்ணையடிமைமுறை ஆகியவை சமூகத்தையும், அவை சமூகத்தில் ஆற்றிய வேலைகளையும் அடித்தளமாகக் கொண்ட சொத்துடைமையின் இன்றியமையாத மற்றும் தர்க்கரீதியான விளைவாக இருப்பினும், சொத்துடைமை உறவுகளில், சமூக உறவுகளில் எப்பொழுதும் இரண்டாம்பட்சமானவையே, எப்பொழுதும் முதன்மையானவை அல்ல. ஏனெனில் அடிமை முறை மற்றும் பண்ணை அடிமை முறையில் உழைப்பாளனே ஒரு மூன்றாவது மனிதனுக்கு அல்லது சமூகத்துக்கு உற்பத்திக்கான இயற்கை நிலைமைகளில் ஒன்றாகக் கருதப்பட்டான்; எனவே சொத்துடைமை என்பது உழைக்கும் மனிதனுக்கும் இயற்கை நிலைமைக்குமான உறவாக இம்முறைகளின் கீழ் இருப்பதில்லை.

அடிப்படையில் அடிமையே ஒரு சொத்துடைமையாகும். சமூகத்தை இணைக்கும் மனிதர்களின் அடிமையாகும். எனவே அடிமைமுறை உழைப்பின் நிலைமைகளை ஒழிப்பதுமில்லை. உறவுமுறையின் சாராம்சத்தை மாற்றுவதுமில்லை. அடிமை அவனது உழைப்பின் புறவயமான நிலைமைகளுடன் எந்த உறவும் கொண்டதேயில்லை. வென்றடக்கப்பட்ட அடிமை, "விடுவிக்கப்பட்ட" பண்ணையடிமை ஆகிய இரு வடிவங்களிலும் உழைப்பாளன் பிற இயற்கை உயிரினங்களான கால்நடைகளோடு வைத்து அல்லது நிலத்தின் தொங்கு சதையாக வைத்து உற்பத்திக்கான ஒரு சடத்தன்மை வாய்ந்த நிலைமை என்கிற வகையில் வெறும் உழைப்பாக மட்டுமே இருந்தான் உயிர் ஓம்புதலுக்கான சாதனங்களோடு மட்டுமே உடைமையாளன் என்கிற முறையில் தொடர்புகொண்டான், அவற்றையும் உழைப்புக்கான இயற்கை நிலைமையாகக் கருதினானே தவிர நிலத்தையோ, கருவிகளையோ, ஏன் சொந்த உழைப்பையோகூட அவனுடைய உடைமையாக நடத்தியதில்லை. வெவ்வேறு வடிவங்களிலான சமூகத்தின் பொருளாதார அடிப்படையாகவும் சமூகத்தின் குறித்த வடிவங்களை முன் நிபந்தனையாகவும் கொண்ட சொத்துடைமையின் புராதன வடிவங்கள் உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் வெவ்வேறு புறவயமான கூறுகளில் தனிவுடைமைகளாக மாறுகின்றன. உழைப்பாளனை உற்பத்திக்கான புறவயமான சடத்தன்மை வாய்ந்த நிலைமைகளில் ஒன்றாக மாற்றுவதன் மூலம் பழைய சொத்துடைமை வடிவங்களும், உறவுகளும், குறிப்பிடத் தக்கவாறு மாறுதல் அடைகின்றன. அதாவது சமுதாயத்தின் ஒரு பிரிவினர் பெரும்பான்மையினரான மற்றொரு பிரிவினரை தமது சொந்த மறு உற்பத்திக்கான வெறுமனே ஒரு சடத்தன்மை வாய்ந்த நிலைமையாக நடத்துகின்றனர். அதன்மூலம் சொத்துடைமையின் எல்லா வடிவங்களும் ஒரு சமூகத்தை முன் நிபந்தனை

யாகக் கொண்டிருக்கின்றனர். உற்பத்தியின் நோக்கமே மனிதனின் ஜீவிதத்துக்கான புறவயமான நிலைமைகளையும் அத்துடனே அதிலேயே உற்பத்தியாளனையும் மறுஉற்பத்தி செய்வதாகும் இவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ள எல்லாச் சொத்துடைமை வடிவங்களும் மீண்டும் மீண்டும் உறுதிப் படுத்தும் குணாம்சங்கள் தோன்றவும் அழியவுமான அடிப்படை களைக் கொண்டிருந்தன என்பது தெளிவாகிறது.

முதலாளித்துவத்திற்கு முந்திய சொத்துடைமை சமுதாயங் களில் மூன்று பொதுவான, முக்கியமான சொத்துடைமை வடிவங் களைக் காண்கிறோம். முதல் சொத்துடைமை வடிவம் பழங்குடிச் சொத்துடைமையாகும். ஆரம்பத்தில் பழங்குடி நிலச்சொத்துடைமை வடிவம் அதன் முதல் முன்நிபந்தனையாக ஒரு இயல்பாக பரிண மித்த சமூகத்தைக் கொண்டிருந்தது.அதாவது குடும்பம்,குடும்பம் விரிவாகிய பழங்குடி அல்லது குடும்பங்களுக்கு இடையிலான பரஸ் பர திருமணங்கள் மூலம் எழுந்தவை அல்லது பழங்குடிகளின் ஒரு பிணைப்பு என்று அலைந்து திரியும் மேய்ச்சல் முறை அல்லது நாடோடி வாழ்க்கை முறை; இது ஜீவிதத்துக்கான, நிலவி இருப் பதற்கான முதல் வடிவமாகும். எனவே பழங்குடி சமூகம், இயற் கையான பொது அமைப்பு, தற்காலிகமான கூட்டுச் சுவீகரிப்பு நிலத்தைப் பயன்படுத்துவதற்கான முன் நிபந்தனை என்பதாகத் தோன்றியதாகும். அதன் விளைவாகத் தோன்றியதல்ல. இறுதி யாக நாடோடி வாழ்வை கைவிட்டு ஒரே இடத்தில் குடியிருப்பு வாழ்வைத் தொடங்கிய பின்னரும் தன்னியல்பாகத் தோன்றிய பழங்குடி சமூகமே வாழ்வினுடைய புறவயமான நிலைமைகளு டைய சுவீகரிப்புக்கும், அவற்றின் மறு உற்பத்திக்கும், மேய்ப்ப வர்கள், வேடர்கள், விவசாயிகள் போன்ற புறவயப்படுத்தும் நடவடிக்கைகளுக்குமான முன்நிபந்தனையாக இருந்தது.பூமியே சமூகத்தின் அடித்தளமாகவும், உழைப்பிற்கான சாதனமாகவும் பொருளாயுதமாகவும், அரங்கமாகவும் விளங்கியது. ஜீவனுள்ள உழைப்பின் மூலம் தன்னைத்தானே உற்பத்தி மற்றும் மறு உற் பத்தி செய்யும் சமூகத்தின் சொத்தாக கருதப்பட்ட பூமியுடனான மனிதர்களது உறவு வெகுளித்தனமானது. தனிநபர் இந்த சமூ கத்தின் உறுப்பினராக இருக்கும்வரைதான் அவன் அவனையே உடைமையாளனாகவோ அல்லது அனுபோகஸ்தனாகவோ கருதி னான்.

உழைப்பின் செயல்போக்கில் உண்மையான சுவீகரிப்பு,இந்த நிலைமைகளின்கீழ் நடந்தேறின. இந்நிலைமைகள் உழைப்பின் விளைபொருள் அல்ல, மாறாக உழைப்புக்கான, இயற்கையான அல்லது 'தெய்வீகமான' முன்நிபந்தனைகளாகும். அடிப்படை. உறவுமுறை மாறாமலிருக்கும்போதே இந்த பழங்குடி சொத்து டைமை வடிவம், ஆசிய, ஸ்லாவினிக், மெக்சிகன் என்று பல்வேறு வகைகளில் நிலவியது. அக்கம்பக்கமாக சிறு சமூகங்களாகவும் தனி உழைப்பாளர்கள் தனிப்பட்டமுறையில அவருக்கு ஒதுக்கப் பட்ட குடும்பத்தோடும் விவசாயம் செய்வது அல்லது உழைப்பின் பொது ஸ்தாபனமாக ஐக்கியப்பட்டு விவசாயம் செய்வது என இருவகைகள் இவற்றில் முக்கியமானவை பழங்குடி சமூகத்தி னுள் பழங்குடி குடும்பத்தலைமை அல்லது குடும்பங்களின் தலை

வர்களிடையிலான பரஸ்பர உறவுமுறை என்ற வகைகளில் பிரதிநிதித்துவப்படுத்துவதைப் பொருத்து கூடுதலான கொடுங்கோன்மை அல்லது கூடுதலான ஜனநாயகம் வடிவமெடுக்கிறது. வேலைப் பிரிவினை ஆரம்ப நிலையினதாகவும் குடும்பத்தில் நிலவும் இயல்பான வேலைப்பிரிவினையின் நீட்டிப்பாக அடங்குவதாகவும் இருந்தது எனவே ஆணுக்கும் பெண்ணுக்குமான குடும்ப வேலைப்பிரிவினையில் தொடங்கி சமூகவேலைப்பிரிவினையும் தந்தைவழி ஒருதார மணமுறைக்குப் பிறகு சமுதாயக் கட்டுமானம் தந்தைவழி சமூகத்தலைவர்கள், அதன்கீழ் பழங்குடி உறுப்பினர்கள், இறுதியாக அடிமைகள் என்று குடும்பத்தின ஒரு நீட்டிப்போடு வரம்பிடப்பட்டிருந்தது. குடும்பத்தில் உள்ளூர் நிலவிய அடிமைமுறை, மக்கள்தொகையின் அதிகரிப்பு, தேவைகளின் வளர்ச்சி, ஆசியப்போர் மற்றும் பண்டமாற்றம் போன்ற வெளியாருடனான தொடர்பு மூலம் படிப்படியாக வளர்ந்தன. பழங்குடி சமுதாயம் உடைந்து தகர்வது யுத்தங்களால் முடிக்கப்பட்டது. போர்களில் கொள்ளையாடப்பட்டவைகள் பழங்குடியினரிடையே பங்கீடு செய்தபோது, தலைவருக்கு சிறப்பு பங்கீடு ஒதுக்கப்பட்டது. மேலும் மேலும் போர்களும் மோதல்களும் வளர்ந்தபோது முதலில் ஆண்கள் கொல்லப்பட்டு பெண்களும் குழந்தைகளும் நிலங்களும் உடைமைகளாகப் பங்கீடு செய்யப்பட்டனர். மீண்டும் தலைவருக்குச் சிறப்புப் பங்கீடு; சில சமயம் நிலத்தோடு கைப்பற்றப்பட்ட பழங்குடியினர், வென்றடக்கியவர்களின் மறுஉற்பத்திக்கான, சடத்தன்மை வாய்ந்த இயற்கை நிலைமைகளில் ஒன்றாக நிலத்தோடு பிணைந்த பண்ணை அடிமைகளாக்கப்பட்டனர்.

இரண்டாவது வடிவமாகிய பழம்பண்டு சமூக மற்றும் அரசு சொத்துடைமைமுறை பல்வேறு பழங்குடிகளின் ஐக்கியத்திலிருந்து வென்றடக்குதல் மூலம் அல்லது ஒப்பந்தங்கள் மூலம் தோன்றிய நகரத்தினதாக வளர்ந்தது. அத்துடன் அடிமை முறையையும் கொண்டிருந்தது. இந்த சொத்துடைமை வடிவத்தின் அடிப்படை கிராம நிலம் அல்ல. மாறாக கிராமப்புற நிலவுடைமையாளர்களின் மையமாக ஏற்கனவே தோற்றுவிக்கப்பட்ட நகரங்களாகும். அதாவது பண்படுத்தப்பட்ட நிலம் நகரத்தின் பிராந்தியமாகத் தோன்றியது. நிலத்திலிருந்து சுவீகரிக்கவும் உழுவதற்கும் சிரமமிருந்தாலும் நிலமே ஜீவனுள்ள தனிநபரின் தொழிற்கூடமாக உழைப்பிற்கான சாதனமாக, உழைப்பிற்கான புறவயமான பொருளாக, உழைப்பாளனின் உயிர் ஓம்புதலுக்கான சாதனம் என்கிற முறையில் சடத்தன்மையாக இயற்கையாக நடத்தப்பட்டது. ஜீவனத்துக்கான, நிலவி இருப்பதற்கான புறவயமான நிலைமைகளை சுவாதீனம் செய்யவோ, அம்மாதிரி சுவாதீனம் செய்தவைகளைக் காக்கவும் உறுதிப்படுத்தவுமா தேவையான போர்களே கூட்டுப் பணியாகும். எனவே குடும்பங்கள் அடங்கிய சமூகம் முதன்மையாக, இராணுவ முறையில், போர் முறையில், இராணுவபடையாகஸ்தாபனப்படுத்தப்பட்டிருந்தது. இது சமூகம் ஒரு சொத்துடைமையாளனாக இருப்பதற்கான நிபந்தனைகளில்

ஒன்றாகும். நகர்ப்புற குடியிருப்புகள் ஒன்று திரள்வதற்கான அடித்தளமே இந்தப் போர்முறை அமைப்பாகும்.

சமூக சொத்தோடு ஏற்கனவே அசையும் சொத்து, பிறகு அசையாச்சொத்து (ஸ்தாவர சொத்து) என்ற சொத்துடைமை வளர்ந்தது. ஆனால் இது சமூக சொத்துடைமைக்கு கீழ்ப்படிதல் உள்ள மிகு நிலை வடிவமாகவே இருந்தது. ஆரம்பத்தில் சமூகத்திற்கு மட்டுமே குடிகள் மீதும் உழைக்கும் அடிமைகள் மீதும் அதிகாரம் செலுத்தும் உரிமை இருந்தது. இந்த வகையிலும் அடிமைகள் சமூகச் சொத்துடைமை வடிவமானார்கள். அடிமைகளுடனான உறவிலும் உரிமையுள்ள குடிகளும் சமூகச் சொத்துடைமை என்கிற முறையில் தன்னியல்பாகத் தோன்றிய கட்டமைப்பில் நீடிக்க வேண்டியிருந்தது. இக் காரணத்தினாலேயே இந்த சமூகச் சொத்துடைமையின் மீதான சமுதாயத்தின் மொத்த கட்டமைவும் அத்துடன் மக்களது அதிகாரமும் அழிந்தது. இந்த அழிவு அசையா (ஸ்தாவர) தனிச் சொத்துடைமையின் வளர்ச்சிக்கேற்ப அமைந்தது. அதன்பின் அரசுச் சொத்துடைமை என்கிற வகையில் சமூகச் சொத்துடைமையிலிருந்து தனிச் சொத்துடைமை வேறாகப் பிரிந்ததானது, சமூகச் சொத்துடைமையாகவும், அதே சமயம் தனிநபர் அனுபோகமாகவும் இருந்ததுபோய் தனிநபர் சொத்துடைமையாக வளர்ந்தது. அதைப் பயன்படுத்த குறைவான சமூக உழைப்பு மட்டுமே தேவை என்பதாக மாறமாற பழங்குடியின் சுத்தமான தன்னியல்புத் தன்மைகள் வரலாறு மற்றும் குடியேற்ற இயக்கத்தால் உடைந்தன. பழங்குடியின் ஆதிமுதல் குடியிருப்புகளிலிருந்து விலகிப் போய் புதிய புதிய நிலங்களை சுவாதீனம் செய்தனர். இவ்வாறு உழைப்புக்கான புதிய நிலைமைகள் கணிசமான அளவும் தனிநபர் உழைப்புச் சக்தியும் மேலும் வளர்ந்தன. எனவே சமூகத் தன்மையும் ஐக்கியமும் வெளி உலகத்துடனான உறவில் எதிர் மறைத் தன்மை வாய்ந்ததாக மட்டுமே தோற்றமளித்தன. தனிநபர் மற்றும் அவனது குடும்பத்தைச் சுற்றிமட்டுமே தனியாக விவசாயம் செய்யும் அளவு ஒரு நிலத்தின் சொத்துடைமையாளனாக இருப்பதற்கான நிலைமைகள் எழுந்தன.

சமூகம் ஒரு அரசு என்கிற முறையில் ஒரு புறம் சுதந்திரமான பரஸ்பரம் சமமான சிறு விவசாயிகளான உழைக்கும் உடமையாளர்களைக் கொண்டிருந்தது. மற்றொரு புறம் அதே அளவுக்கு அவர்களது சுதந்திரம் சமூக உழைப்புக்கும், பொதுப் பெருமைக்கும், சமூகச் சொத்துடைமையைக் காப்பது மற்றும் சமூகத்திலுள்ள பரஸ்பர உறவு ஆகியவற்றைப் பொறுத்து வெளி உலகுடனான கட்டமைப்பாக மட்டுமே இருந்தது. நிலத்தை சுவீகரிப்பதற்கு சமூகத்தில் உறுப்பினன் என்பது முன் நிபந்தனை. ஆனால் சமூக உறுப்பினன் என்கிற ரீதியில் அவன் உடமையாளன். நிலத்துடன் அவனது உறவு மற்றும் சமூக உறுப்பினனாக நீடிப்பது இரண்டுமே அவனது தனிச்சொத்துடைமையுடனான உறவாகும். எதிர்த்தர்க்கமும் பொருந்தும். உழைப்

புக்கான இயற்கையான நிலைமைகளோடு உழைப்பானது உறவு, அவனுக்கே சொந்தமானது என்பதாகும் ஆனால் இந்த சொந்தம் சமூகத்தின், அரசின் உறுப்பினனாக இருப்பதன் மூலம் பெறப்பட்டது. அரசு இருப்பதன் மூலம் பெறப்பட்டது, தெய்வீகமானதாகவும் இன்னும் பிறவாகவும் கருதப்பட்ட ஒரு முன்நிபந்தனை மூலம் பெறப்பட்டது. இருப்பினும் சமூகம் ஏற்கனவே வரலாற்றின் ஒரு விளைபொருளான யதார்த்த மாகும். அவ்வாறே கருதப்பட்டது.

இந்த சொத்துடமை வடிவத்தின் கீழ் ஆரம்பத்திலிருந்த பழங்குடி கட்டுமானத்தின் தன்மை, உயர்குல, கீழ்குல இரத்த உறவுமுறைக் குழுக்களாகப் பிரிந்தது. இந்த வேற்றுமை வென்றடக்கப்பட்ட பழங்குடிகளுடன் கலப்பதன் விளைவாக, மேலும் வளர்ந்தது. நிலப்பிராயந்தியங்களோடு நகரங்களில் திரட்சி நடந்தது. உடனடி சுயதேவைக்கான சிறு திறத்து விவசாயமும் ஸ்தல தேவைகளுக்கான ஒருசில கைவினைத் தொழில்களும் வளர்ந்தன. சமூகம் தொடர்ந்து இருப்பதற்கே முன்நிபந்தனை சுயதேவை பூர்த்தி செய்யும் விவசாயிகளுக்கு இடையிலான சமத்துவத்தைப் பேணிக்காப்பதும், அவனது சொத்துடமையை காப்பதற்கான நிபந்தனை என்கிற முறையில் தனிநபர் உழைப்பும் ஆகும். உழைப்பிற்கான இயற்கை நிலைமைகளை அவர்களது சொத்துடமையாக நடத்தினாலும், உண்மையான நிலைமைகளாகவும், தனிநபர்களின் சொந்த புறவயமான கூறுகளாகவும் இந்த நிலைமைகள் சொந்த உழைப் பின் மூலம் தொடர்ச்சியாக நிலைநாட்டப்பட வேண்டி யிருந்தது. ஆனால் அதே சமயம் பழங்குடித் தலைவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் கெட்டிப்படுத்தப்பட்டன. அதாவது பெயரளவிற்கு சுதந்திரமான, பலரும் கடனாளியாகி நிலத்தை இழந்த நிலையில் வாழ்ந்த சிறு சொத்துடமையாளர் களின் ஒரு சமூகத்தின் மீதான ஆளும் பெரும் நிலவுடமை யாளர்களின் ஒரு வர்க்கம் என்கிற முறையில் உயர்குல இரத்த உறவு முறையிலான பழங்குடி தலைவர்களும் அவர்களது குடும் பங்களும் கெட்டிப்பட்டன. சில நகரங்களில் பண்ணையடிமை களாக மாற்றப்பட்ட மக்களும் இருந்தனர்.

ஒரு புறம் அச்சமூகம் தன்னியல்பாக தோன்றி நிலவி இருந்ததற்கான முன் நிபந்தனைகளாக அமைந்த சமூகம் பொதுநலன்கள் மற்றும் சமூகப் பொதுசொத்துடமை முறைக் கும், மற்றொருபுறம் தனிநபர் அல்லது தனிப்பட்ட குடும்ப நலன்கள் மற்றும் குடும்பத் தனிச் சொத்துடமைக்கும் இடையி லான முரண்பாட்டின் அடிப்படையிலான உற்பத்தி முறையின் வளர்ச்சிப்போக்கு காரணமாக சமுதாயத்தில் நிலவுடமை உயர் குடியினருக்கும், சுதந்திரமான விவசாயிகளுக்கும் இடையிலான பிரதான முரண்பாடு எழுந்தது. இது பழங்குடி சமுதாயத்தில் நிலவிய உழைப்புப் பிரிவினையைக் குறித்தது.

சமூகத்தின் மூலமாக தனிநபர் புறவயமான யதார்த்தபூர்வ மான மனிதனாக, இயற்கையாக நின்று நிலவுகிறான் என்கிற

முறையில் சமூகம் அல்லது பழங்குடி ஸ்தாபனத்தின் குறித் வடித
வத்திற்கும் மற்றும் அதற்கு பொருத்தமான இயற்கையின்
மீதான உடமை அல்லது உற்பத்திக்கான, புறவயமான நிலை
மைகள் மீதான கண்ணோட்டம் அல்லது போக்கிற்கும் ஆதி முத
லில் ஒருஒற்றுமை நிலவியது ஒருஅர்த்தத்தில் சொத்துடமையின்
குறித்த வடிவமாகத் தெரியும் இந்த ஒற்றுமை ஒரு குறித்த உற்
பத்தி முறையின் ஜீவனுள்ள யதார்த்தமாகும், இந்த உற்பத்தி
முறையின் உற்பத்தி உறவுகள் மற்றும் உழைப்புப்பிரிவினை தனி
நபர்களுக்கு இடையிலான பாஸ்பர நடத்தை மற்றும் சடத்
தன்மை வாய்ந்த இயற்கையினபால் அவர்களின் குறித்த
நடத்தை என்கிற முறையில் வெளிப்படுகிறது. அதாவது எப்
பொழுதும் குடும்ப உழைப்பு மற்றும் அடிக்கடி சமூக உழைப்பாக
விளங்கும் குறித்த உழைப்பு முறை என்கிற முறையில் வெளிப்
படுகிறது. சமூகமே முதலில் உற் த்திக்கான மாபெரும் சக்தியாக
தோன்றியது. உற்பத்திக்கான குறித்த நிலைமைகள் அகநிலை
மற்றும் புறநிலை இரண்டிலும் ஆகிய குறிப்பான உற்பத்தி சக்தி
களையும் உற்பத்திமுறைகளையும் படைக்கின்றன. இதில் அக
நிலை தனிநபரின் தன்மைகளாக வெளிப்படுகின்றன. இவ்வாறு
எழுந்த உற்பத்திமுறை, அதில் நிலவும் முரண்பாடு காரணமாக
வும், சமுதாய முரண்பாடு காரணமாகவும் ஒரு குறிப்பிட்ட கட்
டத்தில் அதன் மறுஉற்பத்திக்குத் தடையான உற்பத்தி உறவுகள்
தோன்றி சமூகமே சிதைவுறுகிறது. இவ்வாறுதான் பழங்குடி
சமூக மற்றும் அரசுச் சொத்துடமை உறபத்தியிலிருந்து புதிய பிர
தான முரண்பாடாக நிலவு மை உயர்குடியினருக்கும், சுதந்திர
மான விவசாயிக்கும் இடையிலான முரணபாடு தோன்றி வளர்ந்
தது.

இம்முரண்பாடுகளின் வளர்ச்சிப்போக்கு அடிமைச் சமுதாயத்
திற்கு இட்டுச் சென்றது. பழங்குடி அமைப்பிலிருந்து அரசு
அமைப்பாக மாறிச் செல்வதற்கு அடிப்படையாக இருந்த இம்
முரண்பாடுகள் வளர்ச்சிப் போக்கில் இந்தஉற்பத்தி முறையி
லேயே மூளை உழைப்பு மற்றும் உடல் உழைப்பாக உழைப்புப்
பிரிவினை வளர்ந்து நகரத்திற்கும் கிராமத்திற்கும் இடையிலான
முரண்பாடாகத் தோன்றியது. பழங்குடி சமுதாயத்திலேயே
மோதிக்கொள்ளும் பழங்குடியினரும், பழங்குடி இணைப்புகளும்
ஐக்கியப்பட்டு பழங்குடித் தலைவர்களின் மேட்டுக்குடியால் கட்
டுப்படுத்தப்படும் நாட்டரசுகள் தோன்றின. அதன் தலைமை
நிர்வாக மையத்தைச் சுற்றி கைவினைத் தொழில்கள் மக்கட்
தொகை பெருக்கம், கடல்வழி வியாபாரம் ஆகியவை தோன்றி
வளர்ந்தன கடல்வழி வியாபாரத்தால் அடிமை உழைப்பாளர்கள்
குவிக்கப்பட்டார்கள். அடிமைகள் பரிவர்த்தனைப் பண்டங்களா
கின்றனர். அடிமை வியாபாரம் முக்கியமான காரணியான
தால் செழுமையுற்ற வியாபார வர்க்கம் நகர்ப்புற
விவசாயிகள் மற்றும் கைவினைஞர்கள் மீது தலைமையேற்று நில
வுடமை உயர்குடியைத் தூக்கியெறிந்து, அவர்களது எஸ்டேட்டு
களை விவசாயிகளிடையே பங்கிடு செய்து ஒரு 'ஜனநாயக,
அமைப்பை நிறுவினர். இதன் மூலம் ஏற்கனவே நிலவிய நகர்
புறத்திற்கும் கிராமப்புறத்திற்கும் இடையிலான முரண்பாடு

முற்றி நகர்ப்புற நலன்களைப் பிரதிபலிக்கும் அரசுகளுக்கும் கிராமப்புற நலன்களைப் பிரதிபலிக்கும் அரசுகளுக்கும் இடையிலான மோதல்களாக வெடித்தன. நகர்ப்புறத்திலேயே குடியுரிமை பெற்ற மக்களுக்கும், அடிமைகளுக்கும் இடையிலான முரண்பாடான வர்க்கஉறவுகள் முழுவளர்ச்சியுற்றன. நிலவுடமையாளர் வியாபாரிகள் வட்டிலேவாதேவிக்காரர்கள் இணைந்து, ஒரே ஆண்டைகள் வர்க்கமாக மாறின. ஏழைக் குடிகள் இவர்களால் சுரண்டப்பட்டாலும் அடிமைகளுடன் கூட்டுச் சேரவில்லை. மாறாக அடிமைகளை உடமையாகப் பெறவே விரும்பினர். பிறகு சிதைந்து இவர்களும் அடிமைகளானார்கள். இவ்வாறு பழங்குடி சொத்துடமை வடிவத்திலிருந்து தனிச்சொத்துடமை தோன்றி வளர்ந்து அடிமைச் சமுதாயமாகவும், அடிமைகளுக்கும் ஆண்டைகளுக்கும் இடையிலான முரண்பாடு பிரதான முரண்பாடாகவும் மாறியது.

பிறகு நிலப்பிரபுத்துவ தனியார் அல்லது எஸ்டேட் என்னும் மூன்றாவது சொத்துடமை வடிவம் தோன்றியது. ஏற்கனவே துவங்கியிருந்த தனிச் சொத்துடமையின் திரட்சி வேகமாக வளர்ந்து, உள்நாட்டு வெளிநாட்டுப் போர்களின்போது பன்மடங்கு பெருகியது. அடிமைச் சமுதாயத்தின் இறுதியில் நிலம் முழுமையாக சமூக அல்லது அரசுச் சொத்துடமையிலிருந்து அந்நியமாகியது. குடியுரிமைக்கும் நிலவுடமைக்கும் இடையிலான உறவு.பிணைப்பு அறுந்துபோனது. உழைப்பாளர்களில் பெரும்பான்மையினர் அடிமைகளாக உற்பத்திக்கு தேவையான சடத்தன்மை வாய்ந்த இயற்கை நிலைமைகளில் ஒன்றாக, சொத்துடமையாக வைக்கப்பட்டனர். எஞ்சிய சுதந்திரமான சிறு விவசாயிகளும் தமது ஜீவிதத்தையே, வெறும் சுயதேவையையே, சமூகத்தின் உறுப்பினனாக, ஒரு துண்டு நிலத்தின் உடமையாளனாக தன்னையே மறு உற்பத்தி செய்து கொள்வதன் மூலம் சமூக உறுப்பினன் அந்தஸ்தை தக்கவைத்துக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். சமுதாய உற்பத்தியின் நோக்கமே உற்பத்தியாளர்களோடு தமது மறு உற்பத்திக்கான, புறவயமான, யதார்த்தமான இயற்கை நிலைமைகளில் அத்துடன் அப்படியே தன்னை மறு உற்பத்தி செய்வது என்ற முன்நிபந்தனைக்கு முரண்பாடாக இது அடிமை முறை பொருளாதாரத்தில் நிலவியது. அடிமை முறை பொருளாதாரத்தின் உள்ளேயே நிலவிய இந்த முரண்பாடு காரணமாக உற்பத்தியின் மீதும் விநியோகத்தின் மீதும் விதிக்கப்பட்ட வரம்புகள் தடைகளை ஏற்படுத்தின. எனவே அடிமைச் சமுதாய பேரரசுகள் வீழ்ச்சியுற்றபோது விவசாயமும் வீழ்ச்சியுற்றது. சந்தையின்றி தொழில்கள் நசிந்தன வணிகம் தானாகவோ பலாத்காரமாகவோ வீழ்ந்தது. மக்கள் தொகையும் குறைந்தது. அடிமை முறையின இடிபாடுகளின் மீது பண்ணையடிமை முறை எழுப்பப்பட்டது.

பழங்குடி மற்றும் சமூகச் சொத்துடமை போன்றே நிலப்பிரபுத்துவச் சொத்துடமையும், சமூக அடிப்படையிலானது; ஆனால் அதற்கு எதிராக நிற்பதும், நேரடியாக உற்பத்தி செய்யும் வர்க்க

முமாக இருப்பது பழம்பண்டு சமூகத்தைப் போன்று அடிமைகள் அல்ல. மாறாக பண்ணை அடிமைகளாகிய சிறு விவசாயிகள் ஆகும். எனவே அடிமைகளுக்கும் ஆண்டைகளுக்கும் இடையிலான பிரதான முரண்பாட்டின் இடத்தில் நிலப்பிரபுக்களுக்கும் பண்ணையடிமைகளுக்கும் இடையிலான பிரதான முரண்பாடு தோன்றியது. இரண்டாவது சொத்துடைமை வடிவத்திற்கு ரோமானிய பழம்பண்டு சமுதாயமே இலக்கணமாக அமைந்தது. மூன்றாவது நிலப்பிரபுத்துவ தனியார் அல்லது எஸ்டேட்டு சொத்துடைமை வடிவத்திற்கு ஜெர்மானிய முறை இலக்கணமாக அமைந்தது. ஜெர்மானிய சொத்துடைமை வடிவத்தில் குடிமகன் சமூகத்தின் உறுப்பினர் என்கிற ரீதியில் சமூகச் சொத்துடைமையில் சக உடமையாளனாகவும் இல்லை. சமூகச் சொத்துடைமை, தனிச் சொத்துடைமை இரண்டும் உடமையாகக் கொண்டிருந்த நிலைமையும் இல்லை. தனியார் சொத்துடைமையிலிருந்து முற்றிலும் வேறானதாக துணையானதாக பகைமையான பழகுடியிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டியதாகவும் மட்டுமே மேய்ச்சல் நிலம், வேட்டை நிலம், போன்ற சமூகச் சொத்துடமை இருந்தது பழம்பண்டு சமுதாயத்தில் நகரம் அதன் சுற்றிலும் இருந்த பிராந்தியங்களோடு பொருளாதார அமைப்பு இருந்தது போய் தனியார் குடும்பம், வீடு நிலச் சொத்துடைமையின் இடமாகவும், சொத்துடைமையாளர்களின் திரட்சியாக இல்லாது குடும்பம் அல்லது கிராமம் தனியான பொருளாதார அமைப்பாகியது. பழம்பண்டு சமுதாயத்தில் நிலத்தில் சமூக அல்லது அரசுச் சொத்துடமை மற்றும் தனியார் சொத்துடமை (தனியார் அனுபோகம்) என்று முரண்பாடான வடிவமாக இருந்தது தனிச் சொத்துடமை அரசுச் சொத்துடைமை மூலம் பெறப்பட்டது அல்லது அரசுச் சொத்துடமை இரட்டை வடிவத்திலிருந்தது. எனவே தனி நிலவுடமையாளர் அதே சமயம் நகர்புற குடியுரிமை பெற்றார். பொருளாதார ரீதியில் குடியுரிமையின் பொருள் நகர்புறத்தில் விவசாயி வாழுகிறான் என்பதாகும். ஆனல் நிலப்பிரபுத்துவ சொத்துடமையின் கீழ் விவசாயி குடியுரிமை பெற்ற நகரத்தானாக வாழவில்லை இச்சொத்துடமையின் அடித்தளம் சிதறிய, தனித்தனியானது; சுயேச்சையான குடும்ப வாழ்வு, ஒரே பழங்குடியின் இம்மாதிரியாக வசிப்பவர்களின் கூட்டமைப்பு மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. இங்கு தனி நபர் சொத்துடமை சமூக நிலச் சொத்துடமைக்கு முரண்பாடாகவோ, சமுகத்தின் மூலம் பெறப்பட்டதாகவோ இல்லை. ஏனெனில் சமூகம் இம்மாதிரியான தனித்தனி நிலவுடமையாளர்களின் பரஸ்பர உறவில் மட்டுமே நிலவுகிறது. சமூகச் சொத்துடமை தனியுடமைக்கான துணையாக மட்டுமே இருந்தது. உண்மையில் தனிப்பட்ட உடமையாளர்களின் பொதுச் சொத்துடமையாக இருந்தது. உடமையாளர்களின் கூட்டு உடமையாக இல்லை.

நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் சமூகம் என்பது தனி நபர்களின் தற்செயலான சேர்க்கையாகவோ அல்லது மனிதர்கள் சிந்தனையிலும் நகர்புற யதார்த்தமாகவும், தேவையாகவும் அப்பொழுதும் நின்று நிலவும் பொதுப்படையானதாகவோ என்று முரண்பாடாக இல்லை. அல்லது சமூக உறுப்பினரின் தனிப்

பொருளாதாரத் துறையிலிருந்து தெளிவாக வேறுபாடான நகர் புற நிலத்திலும் இல்லை. மாறாக ஒரு புறம் நிலவுடமையாளரின் முன்விளைவாகிய மொழி, இரத்த உறவு, வரலாறு, கடந்த காலப் பொதுத்தன்மைகள் அடங்கிய ஒரு சமூகமாகவும், ஆனால் மற்றொருபுறம் சமூகக் காரணங்களுக்காக உண்மையில் கூடும் பொழுது மட்டும் யதார்த்தமானதாக இருந்தது. சுவாதீனம் செய்துள்ள உற்பத்திக்கான இயற்கை நிலைமைகளைக் காக்கவும் புதிதாக கைப்பற்றவும் பிற சமூகங்களுடன் போர் புரிவதற்கும், உள்தகராறுகளைத் தீர்க்கவும் மதம் போன்ற பொது நடவடிக்கைகளுக்கும் பொது சமூக அமைப்பு தேவையாக இருந்தது. ஆனால் தனிப்பட்ட குடிகளாகிய நிலவுடமையாளர்களின் கூட்டமைப்பாகவே சமூகம் விளங்கியது. ஐக்கியப்பட்ட ஒன்றியமாகவோ, பழம்பண்டு சமூகம் போன்று ஒரு அரசு, ஒரு அரசியல் ஒருமை, ஒரு நகர அமைப்பு என்கிற முறையிலோ இருக்கவில்லை மேலிருந்து கீழ்வரை கிராமமான நிலச்சொத்துடமை மற்றும் அத்துடன் இணைந்திருந்த உள்ளூர் பட்டாளங்கள் ஆகியவை பண்ணை அடிமைகள் மீது உயர்குடியினர் ஆதிக்கம் செலுத்த அதிகாரம் அளித்தன. இந்த நிலப்பிரபுத்துவ ஸ்தாபனம் பழம்பண்டு சமூகச் சொத்துடமையின் கீழிருந்ததைப் போன்றே உற்பத்தி செய்யும் அடக்கி ஒடுக்கப்பட்ட உழைக்கும் வர்க்கத்திற்கு எதிரான ஒரு கட்டமைவாகும். ஆனால் உற்பத்தியின் நிலைமைகள் வேறானதால் கட்டமைப்பின் வடிவமும் நேரடிஉற்பத்தியாளர்களுடனான உறவும் வேறானவையாக இருந்தன. பெரும் அளவிலான பிராந்தியங்களை இணைத்து பிரபுத்துவ நாட்டரசுகளை நிறுவ வேண்டிய அவசியம் காரணமாக ஒரு முடியரசைத் தலைமையில் கொண்ட அமைப்பை ஆளும் வர்க்கமாகிய நிலவுடமை உயர்குடி அமைத்தது.

நிலப்பிரபுத்துவ நிலச் சொத்துடமை கட்டுமானம் அதன் சகபாடியாக நகர்ப்புறங்களில் கூட்டுப் பங்கு சொத்துடமையின் வடிவத்தில் நிலப்பிரபுத்துவ வணிக ஸ்தாபனத்தைக் கொண்டிருந்தது. இதில் சொத்துடமை ஒவ்வொரு தனிநபரின் உழைப்பிலேயே பிரதானமாக அடங்கியிருந்தது. நிலப்பிரப்புத்துவ சமூதாயத்திற்கு முன்பே செய்து முடிக்கப்பட்ட வடிவில் நகர்ப்புற பட்டறை உற்பத்தி இருந்துவிடவில்லை. மாறாக விடுவிக்கப்பட்ட பண்ணைஅடிமைகள் ஒவ்வொருவரும்தன்னோடு கொண்டு வந்த சிறு மூலதனம் மற்றும் மிகமிக முற்றாக அவசியமான கைவினைக் கருவிகள். ஆகியவை தவிர தம் உழைப்பை மட்டுமே சொத்துடமையாகக் கொண்டு புத்தம் புதியதாக உருவாக்குபவையாகும். வளரும் நகருக்குத் தொடர்ந்து தப்பியோடிவரும் பண்ணை அடிமைகள் குவிவதால் ஏற்படும் போட்டி, கிராமங்களின் தொடர்ச்சியான யுத்தம், கொள்ளையிலும் உயர்குடி கட்டமைப்புக்கு எதிராக அமைப்பு ரீதியான நகரவை இராணுவப் படையின் அவசியம், குறிப்பிட்டவகை உழைப்பில் பொதுச்சொத்துடமைப் பிணைப்பு, பட்டறையாளர்களே வியாபாரிகளாக இருப்பதால் சமூகம் தழுவிய சந்தையின் அவசியம், அதற்கான பொது விற்பனையிடம், அங்கீகரிக்கப்படாதவர்களைத் தடுப்பது பல்வேறு கைவினைகளுக்கிடையிலான மோதல், சிரமப்பட்டு

பெற்ற செறிந்த உழைப்புத் திறனைப் பாதுகாப்பதன் அவசியம், மொத்த நாடே நிலப்பிரபுத்துவக் கட்டுமானத்தைக் கொண்டிருப்பது இவை காரணமாக ஒவ்வொரு கைவினைத் தொழிலாளர்களும் கில்டுகளாக ஐக்கியப்பட்டார்கள். வரலாற்றுப்போக்கில் பல்வேறு கில்டு அமைப்பு முறைகளும் ஏற்பட்டன. கிராமப்புறங்களில் பிரபுக்களால் தண்டிக்கப்பட்டு தனித்தனியே ஓடி வரும் பண்ணை அடிமைகளை அமைப்பு ரீதியில் திரண்டிருந்த கில்டுகளும், மாஸ்டர்களும், அவர்களிடம் உழைப்புக் கற்றுக் கொள்ளும் பயிற்சியாளர்களும் அடங்கிய கில்டு முறையினதாக இருந்ததால் தம் சித்தத்துக்கும் நலன்களுக்கும் ஏற்றபடி அவர்களை வளைத்து அமைப்பாக்கினர். கற்றுக்கொள்ள முடியாத கில்டு முறையினதாக பண்ணை அடிமைகளின் உழைப்பு இருந்தபோது நாட்கூலிகளாகி, அமைப்பாக முடியாமல் திரிபவர்களானார்கள்.

எனவே கில்டுகளின் ஸ்திரமான உறுப்பினர் தொகை, படிப் படியாக அவர்கள் எழுப்பிய சிறு மூலதன திரட்சி, அதே சமயம் மக்கள் தொகைப் பெருக்கம், கில்டு மாஸ்டர்கள், பட்டறை உற்பத்தியாளர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் தினக் கூலிகளாக அலைந்து திரிபவர்கள் ஆகியோருக்கு இடையிலான வர்க்க உறவுகள் வளர்ந்து கிராமப் புறத்தைப் போன்றே மேலிருந்து கீழ்வரை வரிசையான ஒரு கிரமமான அமைப்பு தோன்றியது. சொத்துடைமையைப் பாதுகாப்பது, உற்பத்திச் சாதனங்களைப் பெருக்குவது, தனி உறுப்பினர்களை காப்பது என்ற நேரடி அவசியத்தின் காரணமாக எழுந்த ஒன்றியங்களே நகரங்களாகும். போருக்காக ஆயுதபாணியாக்கப்பட்டு அமைப்பு ரீதியில் திரட்டப்பட்ட இந்த அதிகாரத்திற்கெதிராக சிதறிய அறிமுகமற்ற தனித்தனியாக அலைந்து திரியும் தினக்கூலிகள் சக்தியற்று கிடந்தனர். மாஸ்டர்களின் நலன்களுக்குப் பொருந்தும்படி ஒவ்வொரு கைவினைத் தொழிலிலும் அமைப்பாக்கப்பட்டிருந்த பட்டறை உற்பத்தியாளர்களுக்கும், பயிற்சியாளர்களுக்கும் அவர்களுக்கும் மாஸ்டர்களுக்கும் இடையில் தந்தை வழிச் சமுதாய உறவு நிலவியதால் மாஸ்டர்களுக்குப் பின்னர் இரட்டை அதிகாரம் கிடைத்தது ஒரு புறம் பட்டறை உற்பத்தியாளர்களின் மொத்த வாழ்க்கையின் மீதும் நேரடிச் செல்வாக்கு செலுத்தினர். மற்றொரு புறம் ஒரே மாஸ்டரிடம் உழைத்தவர்களுக்கு, பிற மாஸ்டர்களிடம் உழைக்கும் பட்டறை உற்பத்தியாளர்களுக்கு எதிராக இணைப்பதாகவும் அவர்களிடமிருந்து பிரிப்பதாகவும் அமைந்தது. பட்டறை உற்பத்தியாளர்களும் மாஸ்டர்களாகவே முயன்றனர். எனவே பட்டறை உற்பத்தியாளர் கில்டு அமைப்புக்குள் கட்டுண்டு கிடந்தனர். அலைந்து திரியும் தினக்கூலிகளின் மொத்த நகரவை அமைப்பு முறைக்கே எதிரான எழுச்சிகளும் சக்தியற்றவையாகியன. கிராமப்புற எழுச்சிகள் பிரதிபலித்ததாலும் நகரத்திலிருந்து விலகியிருந்ததாலும் விவசாயிகளின் பழமையாலும் அவைகள் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தவில்லை. நகரங்களில் இயல்பாக எழுந்த மூலதனம், வீடு, கருவிகள், இயற்கையான பொருட்கள் பரம்பரை வாடிக்கைதாரர் என்பதாகவும், உடமையாளனின்

குறிப்பிட்ட வேலையோடு, பிரிக்க முடியாதபடி இணைந்திருப்ப தாகவும் இருப்பதால் பரிமாற்றம் பின்தங்கியதாகவும், சுழற்சி யின்றியும் இருப்பதால் இதுவும் எஸ்டேட்டு மூலதனமாகவே இருந்தது கில்டுகளுக்கிடையிலும், ஒன்றிலேயே தனிப்பட்ட தொழிலாளர்களுக்கிடையிலும் அவ்வளவு வளர்ச்சியுள்ள வேலைப்பிரிவினை இன்றி தொழிலாளிகள் எல்லாப் பணிகளை யும் திரும்பத் திரும்ப சுழற்சியாகவும் எல்லாவற்றையும் அவனது கருவியாலேயும் செய்யவேண்டியிருந்தது. நகரங்களுக்கிடை யிலான பலவீமான தொடர்புகள், மக்கள் தொகை குறைவு, குறுகிய தேவைகள், முன்னேறிய வேலைப் பிரிவினை இன்றி இருப்பது ஆகியவற்றினால் மாஸ்டராக விரும்பும் தொழிலாளி மொத்த கைவினையிலும் தேர்ச்சிபெற வேண்டியிருந்தது.

நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் நகர்ப்புற பட்டறை உற்பத் தியின் வளர்ச்சியானது நேரடியாக வேலை பிரிவினையின் அடிப்படையிலும் உற்பத்திக்கான கருவிகள் அடிப்படை யிலும் இருப்பதால் நகர்ப்புற வர்க்கங்கள் கிராமப் புற வர்க்கங்கள் என இரும் பெரும் பிரிவுகளுக் கிடையிலான மக்கள் தொகையின் பிரிவினையைக் குறித்தது. உண்மையில் நகரங்கள் மக்கள் தொகை உற்பத்திக் கருவிகளின் நிதிச்செல்வம், சுகபோகம், கூடுதலான தேவைகள் ஆகியவற் றின் திரட்சியையும், கிராமப்புறங்கள் அதற்கு நேரெதிராக தனிமை, பிரிவு ஆகியவற்றையும் குறிக்கின்றன. தனிச்சொத் துடைமையின் கட்டமைப்பிற்குள் மட்டுமே நிலவும் நகரத்துக்கும் கிராமத்துக்கும் இடையிலான முரண்பாடு, தனிநபர் வேலைப் பிரிவினையின் கீழ் திணிக்கப்பட்ட குறிப்பான நடவடிக்கையின் கீழ் ஒருபுறம் கட்டுப்படுத்தப்பட்ட நகர்ப்புறப் பிராணியாகவும் மற்றொரு புறம் கட்டுப்படுத்தப்பட்ட கிராமப்புற பிராணியாக வும் அடிமைப்படுத்துவதன் வெளிப்பாடேயாகும். நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறமாகப் பிரிவது நிலச் சொத்துடைமையிலிருந்து சுயேச்சையான மூலதனம் நிலவுவது,வளர்வது என்று தொடங்கு கிறது. உழைப்பிலும் பரிமாற்றததிலும் மட்டுமே அடிப்படை யைக் கொண்டுள்ள சொத்துடைமை தொடங்குகிறது என்கிற முறையில் நிலச் சொந்துடைமையும் மூலதனமும் பிரிவதைக் குறிக் கிறது.

மேற்கண்ட எல்லா சொத்துடமை வடிவங்களிலும் பொரு ளாதார ஒழுங்குமுறையின் அடித்தளம் நிலச் சொத்துடைமையும் விவசாயமுமே ஆகும். பொருளாதார நோக்கம் சுயதேவைக் கான உபயோக மதிப்பை உற்பத்தி செய்வதே ஆகும். அதாவது தனிநபர் தனது சமூகத்துடனான குறித்த நிச்சயமான உறவில் தன்னை மறு உற்பத்தி செய்வதாகும். அந்த உறவுக்கேற்றபடி சமூகத்தின் அடிப்படையாக அமைகிறான். இதில் பின்வரும் இரண்டு கூறுகள் இருந்தன, அவை 1. உழைப்புக்கான ஆதி முதல் கருவியாகவும், மூலப்பொருட்களின் சோதனைக் கூடம் மற்றும் கிடங்காகவும் விளங்கும் பூமியை உழைப்புக்கான இயற்கை நிலைமைகளை உழைப்பின் மூலமாகப் பெற்றசாதனங்

களாக இல்லாது, உழைப்புக்கான முன்நிபந்தனை என்கிற முறையில் சுவீகரிப்பது தனிநபர் உழைப்புக்கான புறவயமான நிலைமைகளை தனது சொந்த உடமையாக தனது அகநிலையின் ஒரு சடத்தன்மை வாய்ந்த அங்கமாக கருதுகிறான். அவனது மறு உற்பத்திக்கான புறவயமானவை ஒருபுறம் ஜீவனுள்ள தனிநபர் மற்றொருபுறம் பூமி- நிலம். ஆனால் உழைப்புக்கான பிரதான புறவயமான நிலைமை உழைப்பின் ஒரு விளை பொருளல்ல; மாறாக இயற்கையாக நிலவும் பூமி - நிலம். 2. உழைக்கும் தனிநபரின் சொத்துடமை என்கிற முறையில் நிலத்தின்பால், பூமியின்பால் கொண்டுள்ள இந்தக் கண்ணோட்டத்தின் பொருள் ஆரம்பத்திலிருந்தே ஒரு மனிதன் உழைக்கும் தனி நபரிடமிருந்து கூடுதலாக ஏதோ ஒரு வகையில் பிரிந்திருப்பதாகத் தெரிகிறான். ஆனால் பூமியை உடமை கொள்வதில் வாழ்வு நிலையின் ஒரு புறவயமான முறையைப் பெற்றிருக்கிறான். பூமி நிலம் அவன் செயலின் விளைபொருளாகத் தோன்றவில்லை. முன்விளைவாகும். உடலுறுப்புளைப் போன்றே அவனது செயலுக்கு இது முன் நிபந்தனையாகும். இவையும் வாழ்க்கைபோக்கில் மறு உற்பத்தி செய்து வளர்க்கப்பட்டாலும் கூட இவை மறு உற்பத்திப் போக்குக்கு முன்விளைவாகும். இயற்கையின் மீதான இப்போக்கு தன்னியல்பாகத் தோன்றி. கிட்டத்தட்ட வரலாறு பூர்வமாக வளர்ந்த, மாற்றியமைக்கப்பட்ட ஒரு சமூகத்தின் உறுப்பினர் என்கிற முறையில் தனிநபரின் வாழ்வு நிலையால் பெறப்பட்டது. இந்த வாழ்வு நிலையும் பழங்குடி மற்றும் பிற சமூகத்தின் அங்கமாகத் தன்னியல்பாகப் பரிணமித்ததாகும்.

சொத்துடமை என்கிற முறையில் நிலத்துடனான உறவு பழங்குடி அல்லது சமூகத்தை பொறுத்தவரை புராதன அல்லது அல்லது வரலாறுபூர்வமாக ஏதாவது ஒரு வடிவத்தில். அமைதியாகவோ, வன்முறையாகவோ நிலத்தை சுவாதீனம் செய்ததன் மூலமே அடைந்ததாகும். தனிநபர் எந்த வகையிலும் நிலவுடமை கொள்ளவோ, சுதந்திரமான தனி உழைப்பாளியாகவோ இருக்க முடியாது. எனவே அவனது உழைப்புக்கான புறவயமான நிலைமைகள் அவனுக்குச் சொந்தம் என்ற முன்நிபந்தனை நிறைவேற அவனே நிலத்துடனான அவனது உறவை பெற்றுத் தரும் ஒரு சமூகத்தின் உறுப்பினனாக வேண்டும் என்பது முன்நிபந்தனையாகும். மற்றொருபுறம் உழைப்பின் புறவயமான நிலைமைகளுடன் அவனது உடமையின் குறித்த வடிவத்தால் சமூகம் உண்மையில் நின்று நிலவுவது தீர்மானிக்கப்பட்டது.

பழங்குடிமுறை அடிப்படையிலான சொத்துடமையின் அடிப்படை நிபந்தனை பழங்குடியின் உறுப்பினராக இருக்கவேண்டும். அதன்பின் ஒரு பழங்குடியால் வென்றடக்கப்பட்ட மற்றொரு பழங்குடிகள் சொத்துடமையாகவும், வென்றடக்கியபழங்குடியின் மறு உற்பத்திக்கான அதற்கே உடமையான சடத்தன்மை வாய்ந்த நிலைமைகளில் ஒன்றாகசேர்த்தும் மாற்றப்பட்டார்கள். எனவே அடிமை முறையும், பண்ணை அடிமை முறையும் பழங்

குடி முறையின் அடிப்படையிலான சொத்துடைமையின் வெறும் கூடுதலான வளர்ச்சி மட்டுமே ஆகும். ஆனால் எல்லா வடிவங்களையும் திருத்தி அமைத்தாலும் இவை அடிப்படை உறவில் மாறுதலை செய்யவில்லை. 1. நிலத்தில் தனிநபர் சொத்துடைமயில்லை. வெறும் அனுபோகம் மட்டுமே உண்டு என்கிற முறையில் சொத்துடைமை தனி நபரது சமூக வாழ்வால் பெறப்படும் சமூக சொத்துடைமையாக இருப்பது. 2. அரசு மற்றும் தனியார் சொத்துடைமை என்று அக்கம்பக்கமாக இரட்டை சொத்துடைமை வடிவம் இருப்பினும் தனியார் சொத்துடைமைக்கு முன் நிபந்தனையாக அரசு சொத்துடைமை. எனவே குடிமகன் மட்டுமே ஒரு தனி உடமையாளர். ஆனால் அவரது சொத்துடைமை தனியாகவும் இருப்பது. 3. இறுதியாக தனிச் சொத்துடைமைக்கு துணையாக மட்டுமே சமூகச் சொத்துடைமை இருப்பது. தனிச் சொத்துடைமையே சமூகத்துச்கு அடிப்படையாகவும் உறுப்பினர்கள் கூடும்பொழுதும் பொதுதேவைகளின்போதும் மட்டுமே சமூகம் உண்மையில் நிலவுவது - ஆகியஇந்த வெவ்வேறு வடிவங்களிலான சமூக அல்லது பழங்குடிஉறுப்பினர்களின் ஓரிடத்தில் குடியேறிய பழங்குடி நிலத்துடனான உறவு பழங்குடியின் இயற்கையான குணாம்சங்கள் மீது ஒரு பகுதியாகவும், உண்மையில் பழங்குடி நிலத்தின் உடமை செலுத்துவதில், பலனை அனுபவிப்பதில், பொருளாதார நிலைமைகளின் மீது ஒரு பகுதியாகவும் சார்ந்து நிற்கிறது. உடமை செலுத்துவதை பலனை அனுபவிப்பதை தட்பவெப்ப நிலை, நிலத்தின் தன்மைகள், அதைப் பயன்படுத்தும் முறை பகைமையான அல்லது அண்டைப் பழங்குடியுடனான உறவு குடியேற்றங்களினால் ஏற்படும் திருத்தங்கள், வரலாற்று நிகழ்ச்சிகள் போன்றவைகளால் தீர்மானிக்கப்படுகின்றன

இந்த சொத்துடமை வடிவங்கள், அவற்றின் அடிப்படையிலான சமூகங்கள் அனைத்தின்நோக்கம் தம்மை அப்படியே பராமரிப்பதுதான். இருத்திக் கொள்வதுதான். சமூகங்களாக அமையும் தனிநபர்களை மறுஉற்பத்தி செய்வது; உடமையாளர்கள் என்கிற முறையில் மறுஉற்பத்தி செய்வது; அதாவது உறுப்பினர்களுக்கிடையிலான உறவு முறைகளாகவும், அதன் மூலம் சமூகமாகவும் அமையும் வாழ்வு நிலையின் புறவயமான முறையிலேயே மறு உற்பத்தி செய்வதாகும். ஆனால் இந்த மறுஉற்பத்தி ஒரே சமயத்தில் அவசியமாக புதிய உற்பத்தியாகவும் பழைய வடிவத்தின் அழிவாகவும் இருந்தது. பழைய சமூகத்தைப் பராமரிப்பது, அப்படியே இருத்திக்கொள்வது என்பதிலேயே அது அடிப்படையாகக் கொண்டிருந்த நிலைமைகளை அழிப்பதாகும். அதாவது வெறும் சாதாரண மறு உற்பத்தி என்பதே வளர்ச்சிக்கு முரணான அம்சங்களைக் கொண்டிருக்கிறது. குறிப்பாக இரண்டு அம்சங்களில் இவை வெளிப்படுகின்றன. ஒன்று, வெறும் சாதாரண மறுஉற்பத்தி என்பதே உற்பத்திக்குத் தேவையான புறவயமான நிலைமைகளைக் குறைக்கும் அழிக்கும் போக்காகும் இரண்டு, அடிமைமுறை பண்ணை அடிமை முறை ஆகியவை மிகமிக செயலூக்கமிக்க உற்பத்தி சக்திகளான சமுதாயத்தின் பெரும்பான்மையினரான உழைக்கும் மக்களை சொத்துடைமையாக்கி அல்லது நிலத்தோடு பிணைத்து சமூக

வது உழைப்பாளியின் தனிச் சிறப்பான திறமைதான் கருவிகளின் உடமையாளனாக்கியது. சுருங்கக் கூறின் கில்டு, கூட்டுப் பங்கு அமைப்புமுறை, உற்பத்தியாளனை உடமையாளனாக்கும் கைவினை உழைப்பு ஆகியவற்றின் சாராம்சமான தன்மையை மூலப் பொருளாகவும், நிலத்துடனான, பூமியுடனான உடமை என்கிற உறவுக்கெதிராக, மாறாக கருவியே சொத்துடமை என்கிற முறையிலான உற்பத்திக் கருவியுடனான உறவை ஆய்ந்தறிய வேண்டும். உற்பத்திக்கான நிலைமைகளில் இந்த ஒரே கூறுடனான உழைப்பாளியின் உறவே அவனை உடமையாளனாக அல்லது உழைக்கும் உடமையாளனாக மாற்றியது என்ற உண்மை நிலையே நிலச் சொத்துடமை அடிப்படையிலான சமூகம் மற்றும் நிலமைகளுக்கு அதன் இயல்பிலேயே முரண்பாடானதாக கில்டு மற்றும் கூட்டுப்பங்கு சொத்துடமை அடிப்படையிலான சமூகம் மற்றும் நிலைமைகள் விளங்கின என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன. இவை ஏற்கனவே நகர்ப்புறத்துக்கும் கிராமப்புறத்துக்கும் இடையிலான முரண்பாட்டைத் தோற்றுவித்து ஆழமாக்கியிருந்தன.

பரிவர்த்தனை பண்ட உற்பத்தியின் மறு துவக்கமும், பரிவர்த்தனை மதிப்பன் பரிணாம வளர்ச்சியும் வணிக-வ்யாபார வர்க்கம் என்னும் வடிவிலான பணப்பொருளாதாரம், உடனடிப் பயன்படும் மதிப்புடையவைகளை பிரதான நோக்கமாகக் கொண்ட உற்பத்தி முறை, சொத்துடமை வடிவங்கள் மற்றும் அவற்றுக்குப் பொருத்தமான உறபத்தி உறவுகளை—புறவயமான நிலைமைகளுடனான உழைப்பாளியின் உறவுகளை—சிதைப்பதையும் ஒரு உழைப்புச் சந்தையைத் தோற்றுவிப்பதையும் துரிதப்படுத்தியது. ஆனால் இதற்கே முன்நிபந்தனை நகர்ப்புற நுட்பவினை(URBANCRAFT) செயல்பாடுகள் தேவையாக இருந்தன. அதாவது ஒரு குறிப்பிட்ட அளவு நுட்பத்திறன், உழைப்பின் சாதனம் என்கிற முறையில் கருவிகள் இருப்பது இன்னும் பிற—ஆகியவை ஒருபகுதி நகர்புற கில்டு முறை மூலமும், மற்றொரு பகுதி உள்ளூர், குடும்ப தொழில் அல்லது இம்மாதிரி விவசாயத்திற்கு துணைத்தொழிலாக இருக்கும் தொழில் மூலமும் ஏற்கனவே வளர்க்கப்பட்டிருக்க வேண்டியதும் ஒரு முன்நிபந்தனையாகும். நிலச்சொத்துடமை பற்றும் கில்டுகள் இரண்டிலிருந்துமே உருவாகாமல் கடல் வணிகம், வர்த்தக வியாபாரம் மற்றும் வட்டி லேவாதேவி ஆகியவற்றால் திரட்டப்பட்ட நிதிச் செல்வமும் அதன் உடமை வர்க்கமாக உருவாகிய நகர்புற நிதி ஆதிக்க உயர்குடியும், ஒருபுறம் நிதி உறவுகளால்—பணவாடகை குத்தகையின் தோற்றம், வட்டி லேவாதேவியின் ஆதிக்கம், வணிக-வியாபார வர்க்கத்தின் ஊடுருவல்—நிலவுடமை முறைகளின் உரிமைகள் அச்சுறுத்தப்படுவதால் பிரபுத்துவ வர்க்கத்துக்கும், மற்றொருபுறம் வணிக வர்த்தக வளர்ச்சிக்கு தடையாக வரம்புக்குட்பட்ட நடவடிக்கைகளைக் கொண்டிருப்பதால் கில்டுகளுக்கும் எதிராக நின்றன.

நகர்ப்புற கைவினைத் தொழில்கள், முதலாளித்துவ உற்பத்தி முறைக்கான முன்தேவைகள் வளர்ச்சியுற்றிருந்தாலும்,

வர்த்தக, வணிக, வியாபார மூலதனமும், வட்டிலேவாதேவி மூலதனமும் குவிந்திருந்தாலும் உண்மையில் நிதிச் செல்வம் ஆலை மூலதனமாக மாறவும், முதலாளித்துவ உற்பத்திமுறை தோன்றவும் உழைப்பாளி உடைமையாளனாகவும், உடைமையாளன் உழைப்பாளியாகவும் இருக்கும் வெவ்வேறு வடிவங்கள் சிதைவுறும் வரலாற்றுப் போக்குகள் முன்நிபந்தனைகளாக நிறைவேறியாக வேண்டும். ஒருபுறம் ஒரு தேசத்தின் திரளான தனி நபர்கள் முதலாளித்துவத்துக்கு முந்திய உற்பத்தியின் எல்லா புறவயமான நிலைமைகளிலிருந்தும் பலவந்தமாகப் பிய்த்தெறியப்பட்டு, உழைப்புச்சக்தியை மட்டுமே சொத்துடைமையாகவும் ஆனால் அதை பரிமாற்ற வாய்ப்பு மட்டுமே கொண்டுள்ள சுதந்திரமான தொழிலாளர்களை உருவாக்குவது; அம்மாதிரியான திரளான தனி நபர்கள் உற்பத்திக்கான எல்லா புறவயமான நிலைமைகளையும் அந்நியமானதாக, தங்களது சொந்துடைமையல்லாததாக எதிர்கொண்டு ஆனால் அதே சமயம் அதில் ஒரு பகுதியை மட்டும் உழைப்புச் சக்திக்காக பரிமாற்றம் செய்வதன் மூலம் ஜீவனுள்ள உழைப்பு சுவீகரிக்க முடியும் என்ற ஒரு மாறுதலைக் குறிக்கும் வரலாற்றுப் போக்கு; இவற்றை முன் நிபந்தனையாகக் கொண்டுள்ளது. சாராம்சத்தில் இதன் பொருள் முதலாளித்துவத்துக்கு முந்திய உற்பத்தி முறையை சிதைப்பதாகும்

"சிதைவுறச் செய்யும் இம்மாதிரியான வரலாற்றுப் போக்கு பின்வருவனவாகும்: தொழிலாளியை நிலத்தோடும், நிலத்தினுடைய பிரபுவோடும் பிணைக்கும்—ஆனால் உண்மையில் உயிர் ஓம்புதலுக்கான சாதனங்களை தொழிலாளி உடைமையாக முன் அனுமானம் செய்யும்—அடிமைத்தனமான உறவைச் சிதைப்பது. இது உண்மையில் நிலத்திலிருந்து தொழிலாளியைப் பிரிப்பது. தொழிலாளியை ஒரு விட்டேத்தியான (YEOMAN) விவசாயியாக, சுதந்திரமான உழைக்கும் சிறுநில உடமையாளன் அல்லது குத்தகைக்காரர் ஒரு சுதந்திர விவசாயி ஆக மாற்றிய நிலச் சொத்துடைமைகளைச் சிதைப்பது. வெறுமனே சொத்துடைமையின் மூலாதாரமாக அல்ல சொத்துடைமையாகவே நுட்ப வினையின் ஒரு தனித்தன்மை வடிவம் என்கிற முறையில் உற்பத்திக்கான கருவி மற்றும் உழைப்பையே உடமையாக முன் அனுமானம் செய்யும் கில்டு உறவுகளை சிதைப்பது. சொத்துடமை இல்லாதவர்கள் தமது பிரபுக்களின் பரிவாரங்களில் இருந்துக்கொண்டு உபரி உற்பத்தியை சம அனுபோகம் செய்வது, பிரதிபலனுக்கு சீருடை தரித்து, தகராறுகளில் ஈடுபடுவது, உண்மையான அல்லது போலியான சொந்த அடியாள் சேவை செய்வது இன்னும் பிற—என்று பல்வேறு வகைகளில் மானியவுரிமை பெறும் உறவுகளைச் சிதைப்பது" (முதலாளித்துவத்துக்கு முந்திய சமுதாயப் பொருளாதாரப் படிவங்கள் மாஸ்கோ வெளியீடு, 1979 என்ற தொகுப்பில் பக் 119- ல் மார்க்சின் பொருளாதார கைக்குறிப்பேடு 1857-59).

இந்த எல்லா சிதைவுறும் போக்குகளிலும் பரிவர்த்தனை மதிப்பு மற்றும் அதன் உற்பத்தியில் மேலாதிக்கம் பெற்றுள்ள

வடிவங்களுக்கு மாறாக உடனடி பயன்படும் மதிப்பு அடிப்படையிலான உற்பத்தி உறவுகளே அழிக்கப்பட்டன. உழைப்பாளர்களை முந்திய சொத்துடமையின் நிலைமைகளிலிருந்து பிய்த்தெறிந்ததானது வருமானத்தின் மூலாதாரமாகிய சொத்துடமையின் முந்திய நிலைமைகளின் பயனைத்தான் மாற்றியது. அவற்றினுடைய இருப்பு நிலையின் முறைதான் மாறியது. உழைப்புச் சக்தியை விலைக்கு வாங்குவோருடைய கைகளில் சுயேச்சையான நிதியாகக் குவிந்தது. "**உழைப்பின் புறவயமான நிலைமைகள்** உடனான நேர்மறையான பழைய உறவுகளிலிருந்து திரளான தனி நபர்களை ஒன்று அல்லது மற்றொரு வகையில் பிரிக்கும் போக்கு, இந்த உறவுகளை மறுதலித்து அதனால் இந்த தனிநபர்களை சுதந்திரமான உழைப்பாளர்களாக மாற்றிய போக்கு, இதே போக்குதான் **உழைப்புக்கான புறவயமான நிலைமைகளை** (அதாவது நிலம், மூலப்பொருட்கள், உழைப்புக் கருவிகள், உயிர் ஓம்புதலுக்கான சாதனங்கள், பணம் அல்லது இவையனைத்தையும்) அவற்றிலிருந்து தற்போது பிரிக்கப்பட்ட தனிநபர்களுடனான **பழைய பிணைப்புகளிலிருந்து** சக்தி வாய்ந்தவையாக விடுவித்தது. உழைப்புக்கான இந்த நிலைமைகள் நிலவுகின்றன; ஆனால் அரசியல் இன்னும் பிற எல்லா பழைய உறவுகளும் துடைத்தெறியப்பட்ட ஒரு வித்தியாசமான வடிவத்தில் ஒரு **சுயேச்சையான ரீதியாக** நிலவுகின்றது. (மேற்படி தொகுப்பு, பக்கம் 120, மார்க்சின் அதே நூலிலிருந்து)

இவ்வாறு முதலாளித்தவத்துக்கு முந்திய புராதன சொத்துடமை வடிவங்கள் மற்றும் உற்பத்திமுறை சிதைவுறுவது நிதிச் செல்வம் ஆலை மூலதனமாக மாறவும் முதலாளித்துவ உற்பத்தி முறை தோன்றவும் முன் நிபந்தனையாகும். இந்த வரலாற்றுப் போக்கை வலியுறுத்தும்போது பொருளாதார உறவுகள் மட்டுமல்ல குறிப்பாக பொருளாதாரமல்லாத அரசியல் இன்னும் பிற பழைய உறவுகள் சிதைவுற வேண்டியதன் அவசியத்தை மார்க்ஸ் வலியுறுத்தினார். ஏனெனில் முதலாளித்துவத்துக்கு முந்திய சொத்துடமை வடிவங்களில் சுரண்டலுக்கு அடிப்படையாக அவை விளங்கின. அடிமை முறை மற்றும் பண்ணை அடிமை முறையில் தொழிலாளர்கள் உற்பத்திக்கான நிலைமைகளில் ஒன்றாக வைக்கப்படுவதன் மூலம் ஆளும் வர்க்கங்களின் ஆதிக்கமும் சுரண்டலும் நடைபெறுகின்றன. பிரபுக்களின் பரிவாரங்களைப் பொருத்தவரை உழைப்பதை நிறுத்தி விட்ட நிலவுடையாளர்களான பிரபுக்களுக்குப் பணிவிடை செய்வது என்பதும் ஆதிக்க உறவுதான், சுரண்டல் முறைதான். "எவ்வாறாயினும் **ஆதிக்கம் மற்றும் அடிமைத்தன உறவுகள்** சுரண்டல் உற்பத்திக்கான கருவிகளின் சுவீகரிப்பு என்னும் சூத்திரத்தில் சேர்வதை ஒருவர் பார்க்க முடியும். அவை சொத்துடமையின் எல்லா புராதன உறவுகளையும் வளர்க்கவும் மற்றும் சிதைக்கவுமான அவசியமான கிரியா ஊக்கியாக அமைகின்றன. அதே சமயம் அவற்றின் வரம்புகளையும் சித்தரிக்கின்றன. உறுதிப்படுத்திக் கொள்வதற்காகக் கூறினால், அவை ஒரு ஓ மறைமுகமான வடிவத்தில் (ஊடக வடிவத்தில்) மூலதனத்

திலும் மறு உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே அவையும் கூட அதன் சிதைவுக்கான கிரியா ஊக்கியாக அமைகின்றன. அதன் வரம்புகளுக்கான சின்னமாகவும் இருக்கின்றன '' (மேற்படி நூல் தொகுப்பு, பக்கம் 118. மார்க்சின் அதே நூலிலிருந்து)

உற்பத்திச் சாதனங்களிடமிருந்து உழைப்பாளர்களைப் பிய்த்தெறியும் இந்த வரலாற்றுப் போக்கைத்தான் நிதிச்செல்வம் மூலதனமாக மாறவும் முதலாளித்துவ உற்பத்திமுறை தோன்றவுமான முன் நிபந்தனையாகவும் சொல்லிக் கொள்ளப்படும் புராதனத் திரட்சி என்றும் மார்க்ஸ் வரையறுத்தார் மாபெரும் உழைக்கும் மக்களை நிலம் மற்றும் பிற உயிர் ஓம்புதலுக்கான சாதனங்களிலிருந்து பிய்த்து சுதந்திரமான ஏதுமற்ற பாட்டாளிகளாக உழைப்புச் சந்தையில் விசிறியடிக்கும் புராதனத் திரட்சி என்னும் வரலாற்றுப் போக்கு வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு முறைகளில் நடந்தேறுகின்றன என்றார். ''விவசாய உற்பத்தியாளரை, விவசாயியை மண்ணிலிருந்து பறிமுதல் செய்வது ஒட்டுமொத்தப் போக்கின் அடிப்படை. இந்தப் பறிமுதலின் வரலாறு வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு அம்சங்களை எடுக்கிறது. பல்வேறு கட்டங்களிலும், காலகட்டங்களிலும் அடுத்தடுத்த நிகழ்வுகளின் வெவ்வேறு ஒடுக்குமுறைகளினூடே நடந்தேறுகின்றது'' (மார்க்சு. மேற்படி நூல் தொகுப்பு, பக்கம் 146, மார்க்சின் மூலதனம் தொகுதி I லிருந்து)

—✕—

# 3. முதலாளித்துவத்திற்கு முந்திய உற்பத்திமுறையிலிருந்து முதலாளித்துவ உற்பத்திவரை தோற்றத்திற்கான அரசியல், வரலாற்றுக் காரணிகள்; மாறிச் செல்லும் பாதைகள்

முதலாளித்துவத்துக்கு முந்திய உற்பத்தி முறைகள் அவற்றின் வீழ்ச்சிக்கான, அழிவுக்கான அடிப்படையிலான முரண்பாடுகளையே கொண்டிருக்கின்றன. அவை இயற்கை பொருளாதாரத்தின் எளிய மறு உற்பத்தின் அடிப்படையில் எழுகின்றன எனவேமுதலாளித்துவத்துக்குமுந்திய சமுதாயங்கள் அனைத்தும் உள்நெருக்கடிகளுக்குள் சிக்கிச் சீரழிந்து சிதைந்து போகின்றன. பொருளாதாரக் காரணிகளைவிடப் பிரதானமாக அரசியல் மற்றும் வரலாற்றுக் காரணிகளே சமுதாயத்தைப் புதுப்பித்து முன் தள்ளிச் செல்கின்றன. முதலாளித்துவத்துக்கு முந்திய சமுதாயப் பொருளதாரப்படிவங்களை ஆய்ந்தறியும் இந்திய ஆய்வுரைகளில் இதுவரை நிலவும் தவறான கருதுகோள்களின் அடிப்படைகளை களைந்து சரியான மார்க்சிய - லெனினிய பொது விதிகளைக் கிரகிக்கவும் இந்திய நிலைமைகளை ஆய்ந்தறிய இக்கண்ணோட்டத்தைப் பெறுவது அவசியம்.

பழம்பண்டு ரோமும் ஏதென்சும் அடிமைச் சமுதாய பொருளாதாரப் படிவத்திற்கான இலக்கணமாகக் கொண்டு மார்க்சு - எங்கெல்சு ஆய்வு செய்தனர். அடிமைச்சமுதாயத்திலிருந்து நிலப்பிரபுத்துவ சமுதாயத்திற்கு மாறிச் செல்வதில் அரசியல் மற்றும் வரலாற்றுக் காரணிகளின் பாத்திரத்தை வரையறுப்பதற்கும், அடிமைச் சமுதாயப் பொருளாதாரப் படிவத்தின் வீழ்ச்சிக்கான அடிப்படைகளை வரையறுப்பதற்கும், இச்சமுதாயங்களின் மாற்றங்களை முதலில்படித்தறிவோம். அடிமை சமுதாயத்தின் வளர்ச்சியில் நிலப்பிரபுக்கள் தோன்றி அடிமைகளின் எழுச்சிகளைப் பயன்படுத்திக் கொண்டு அடிமைச் சமுதாயத்தைத் தூக்கியெறிந்து நிலப்பிரபுத்துவ சமுதாயத்தை நிறுவினர் என்ற

கருத்து பிழையானது. வேறு எவ்வாறு நிகழ்ந்தது என்பதைப் பார்ப்போம்.

நாகரீகத்தின் உச்ச நிலையில் இருந்த பழம்பண்டு ரோமும் ஏதென்சும் கி. பி. 5-ம் நூற்றாண்டில் புதைகுழியில் வீழ்ந்துக் கொண்டிருந்தன. அவற்றின் வீழ்ச்சிக்கு அடிப்படைகள் என்ன? பழம் பண்டு சமுதாய காலகட்டம் முழுவதும் விவசாய உற்பத்தியின் தீர்மானகரமான பிரிவாக இருந்தது. ரோமானியப் பேரரசின் இறுதியாண்டுகளில் மேலும் கூடுதலான முக்கியத்துவம் பெற்றது. இத்தாலி முழுவதும் மிகப்பெரும் (லாட்டிஃபுண்டியா) எஸ்டேட்டுகளாக பிரிக்கப்பட்டிருந்தன. அவை மக்களை அகற்றி ஆடுகளையும் எருதுகளையும் மேய்க்கும் நிலங்களாகவோ மிகப்பெரும்அளவு தோட்டப்பயிர் விளைச்சல் நிலங்களாகவோ பயன்படுத்தப்பட்டன, முன்னவை மிகக் குறைந்த அளவே அடிமைகளையும், பின்னவை அதிக அளவு அடிமைகளையும் கொண்ட உடமையாளர்களின் சுகபோகத்திற்கும் நகர்ப்புற சந்தைக்குமானவை. மிகப்பெரும் மேய்ச்சல் நிலங்கள் பராமரித்து விரிவாக்கப்பட்டன; உடமையாளர்களின் ஒட்டாண்டித்தனத்தாலும் நகர்ப்புறங்களின் சிதைவாலும் கிராமப்புற எஸ்டேட்டுகளும், தோட்டப்பயிர் விளைச்சலும் அழிந்துபோயின; அடிமை உழைப்பின் அடிப்படையிலான பெரும்பண்ணை (லாட்டிஃபுண்டியன்) பொருளாதாரம் இனியும் லாபகரமானதாக இல்லை; ஆனால் அச்சமயம் இது மட்டுமே சாத்தியமான பெருவீத விவசாயம்; பல எஸ்டேட்டுகள் ஒன்றன்பின் ஒன்றாக மூடப்பட்டன. சிறுவீத விவசாயம் மட்டுமே லாபகரமான வடிவமாக இருந்ததால் அவை பிரிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட தொகை தரும் குத்தகையாளர்களிடமோ, வார குத்தகை தரும் பண்ணை நிர்வாகியிடமோ ஒப்படைக்கப்பட்டன. நிலத்தோடு பிணைக்கப்பட்ட, விற்கப்பட்ட ‘காலோனி’ என்னும் ஒருவகை கங்காணிகளுக்கு சிறு துண்டு நிலங்களாக விநியோகிக்கப்பட்டன. இவர்கள் அடிமைகளும் அல்ல; சுதந்திர குடிகளும் அல்ல; மத்திய கால பண்ணை அடிமைகளுக்கு முன்னோடிகள்.

மக்களனைவர் மூலம் ஆதிக்கம் செலுத்திய ரோமானியர்களுக்கு வர்த்தகமும், தொழிலும் எப்பொழுதும் பொருட்டானதல்ல. அவர்களுக்கு முந்திய மற்றும் பிந்திய காலத்தவர் அனைவருக்கும் மேல் லேவாதேவியில் பிரசித்தி பெற்றிருந்தார்கள். சில காலமே நிலவியிருந்த வர்த்தகம் அதிகாரத்தினரின் கொள்ளையில் அழிவிற்குத் தள்ளப்பட்டது. கிழக்குப் பகுதியில் மட்டுமே சிறிது எஞ்சியிருந்தது. சர்வ வியாபகமான ஒட்டாண்டித்தனம், வர்த்தகம், கைவினைத் தொழில்கள், கலைகள் மற்றும் மக்கட் தொகையின் வீழ்ச்சி, நகரங்களின் சிதைவு, விவசாயம் கீழ்நிலைக்குப் பின்னேற்றமடைவது— இவையே ரோமானிய உலக மேலாண்மையின் இறுதி விளைவாக இருந்தது. பழம்பண்டு காலகட்ட அடிமை முறை காலாவதியானது; நாட்டுப்புறப் பெருவீத விவசாயத்திலும், உற்பத்திப் பொருட்களுக்கான சந்தைகளின் வீழ்ச்சியால் நகர்ப்புற உற்பத்தி நிலையங்களிலும் இரண்டிலுமே அடிமை முறை

பொருத்தமான லாபமுடையதாக இல்லை; பேரரசின் எழுச்சியுற்ற காலகட்டத்திலிருந்த மிகமிகப் பிரமாண்டமான உற்பத்தி சிறுவீத விவசாயம் மற்றும் சிறு கைவினைத் தொழில்களாக குறைந்து போனதால் எண்ணற்ற அடிமைகளுக்கு இடமின்றிப் போனது. பணக்காரர்களின் சுகபோக மற்றும் வீட்டு வேலைகளில் மட்டுமே சமுதாயம் அவர்களுக்கு இடமளித்தது. சுதந்திர ரோமானியர்களின் கண்ணியத்துக்கு பொருந்தாத கடற்பயண அடிமை முறை உற்பத்தியில் அனைத்து துறைகளிலும் அடிமை உழைப்பே நீடிப்பதாகத் தோற்றமளித்தது. இவற்றின் காரணமாக, ஒருபுறம், மிதமிஞ்சிய எண்ணிக்கையில் அடிமைகளின் தொகை அதிகரித்து, சுமையாகிப் போனதால் அடிமைத் தளையிலிருந்து விடுவிக்கப்பட்டனர்; மற்றொரு புறம், காலோனிகள் என்னும் வகையினரும் (அமெரிக்க அடிமை மாநிலங்களில் இருந்த ஏழை வெள்ளையன்போன்று) பிச்சைக்காரர்களான சுதந்திர மனிதர்கள் ஆகியோரின் எண்ணிக்கை அதிகரித்தன. அடிமைமுறை இனியும் பலனளிப்பதாக இல்லை; எனவே அது இறந்துபட்டது; அழிந்துபோனது. ஆனால் இறந்தொழிந்துபோகும் அடிமை முறை சுதந்திரகுடிமகனின் உற்பத்திக்கான உழைப்பின்மீது வெட்கக்கேடானது என்ற நச்சு முத்திரை குத்தியது. அடிமைமுறை பொருளாதார ரீதியில் சாத்தியமில்லை; அதேசமயம் சுதந்திரக் குடிமகனின் உழைப்பு தார்மீக ரீதியில் தடை செய்யப்பட்டிருந்தது; ரோமானிய உலகம் இந்த குருட்டுத்தனமான நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டது. ஒன்று, இனியும் நீடிக்கவே முடியாது; மற்றது, சமூக உற்பத்திக்கான அடிப்படை வடிவமாக இன்னும் மாறவில்லை. இவ்வாறு சமூகப்பொருளாதார ரீதியில் முழுமையான புரட்சிமட்டுமே ஒரே வழியாகவிருந்தது.

அரசியல் ரீதியில் நிலைமை மேலும் மோசமாகவே இருந்தது. காலோனிகளுக்கு அக்கம் பக்கமாக சுதந்திரமான சிறு விவசாயிகள் இன்னும் இருந்தனர்; அதிகாரிகள், நீதிபதிகள் மற்றும் லேவாதேவிக்காரர்களிடமிருந்து தங்களைக் காத்துக்கொள்ள அவர்கள் அதிகாரமேந்தியுள்ளவர்களின் பாதுகாப்பிலும், பேணுதலிலும் வீழ்ந்தனர்; இது தனி நபர்களாக மட்டுமின்றி பேரரசர் அடிக்கடி தடைச்சட்டங்கள் விதிக்குமளவுக்கு சமூகங்கள் முழுவதிலும் நடந்தது. சுதந்திரமான சிறுவிவசாயிகள் தேடியஇந்த பாதுகாப்பு மற்றும் பேணுதலுக்கு ஈடாக அதிகாரத்திலிருந்து புரவலர்கள் நிலங்களின் சொத்துரிமையையும் நிர்பந்தம் மூலம் பெற்றார்கள். நிலத்தை அபகரித்துக் கொள்வதற்கான தந்திரமாக இதைக் கையாண்டனர். சிதறிக்கிடந்த பல்வேறு பிரதேசங்களை புதிய தேசங்களாக ஒருங்கிணைப்பதற்கான சக்தியோ, வளர்ச்சிக்கோ, அன்னிய தாக்குதலுக்கோ எதிராக ஆக்கப்பூர்வமான அதிகாரமாக விளங்கும் திறனோ எங்கும் துளி கூட இல்லை. ரோமானிய அரசுஎன்றும் ஒரே பிணைப்பின் மூலம் எண்ணற்ற மக்கட்தொகை கொண்ட பரவலான பிரதேசத்தைக் கட்டிப் போட்டிருந்தது; ஆனால் இதுவே கொடூரமான ஒடுக்குமுறையாளனாக சமயங்களில் மாறியது, மாநிலங்கள் ரோமாபுரியை அழித்தன. ரோமாபுரியே சலுகை பெற்ற மாநில நகரமாக மட்டுமே இருந்தது.

ஆளும் பேரரசின் மையமாக இருக்கவில்லை. ரோமானிய அரசு அதன் குடிகளைக் கொள்ளையிடுவதற்காகவே தனிச்சிறப்பாக வடிவமைக்கப்பட்ட எண்ணற்ற சிக்கல் நிறைந்தது. வரிகள், அரசுச் சேவைகள் மற்றும் எல்லாவகை துறைகளும் பரந்துபட்ட மக்களை மேலும் மேலும் ஆழமான வறுமையில் தள்ளின. விசாரணை அதிகாரிகள், வரி வசூல் செய்பவர்கள் மற்றும் இராணுவத்தினரது கொள்ளையிடும் நடவடிக்கைகள் சகிக்க முடியாதவையாயின. உலகை மேலாதிக்கம் செலுத்திய ரோமானிய அரசு கொண்டு வந்தவை இவையே; ஆனால் உள்நாட்டில் ஒழுங்குமுறையைப் பராமரிப்பதற்காவும் வெளியிலிருந்து வரும் அநாகரிகக் காட்டுமிராண்டிகளிடமிருந்து பாதுகாப்பதாகவும் கூறிக்கொண்டு நீடித்திருப்பதற்கான உரிமையை அமைத்துக் கொண்டிருந்தது. ஆனால் அதன் ஒழுங்குமுறை மிக மோசமான முறைகுலைவிலும் மோசமானது; குடிகளை யாருடைய தாக்குதலிலிருந்து பாதுகாப்பதாக அரசு கூறியதோ அந்தகாட்டுமிராண்டிகளையே தமது உயிர் காவலர்களாக குடிகள் ஏற்றிப் போற்றினர். இவ்வாறு ரோமானியப் பேரரசின் சமுதாய, பொருளாதாரம் மற்றும் அரசியல்வீழ்ச்சிக்காலகட்டத்தில்அதுவரை காட்டுமிராண்டிகளாக அநாகரிகர்களாக வாழ்ந்த ஜெர்மானியர்கள் ரைன் நதி,ரோமானியப் பாதுகாப்பரண் மற்றும் டான்யூப்நதி ஆகிய நெடிய யுத்த முனையெங்கும் பொதுததாக்குதலைத் தொடுத்தனர். வடகடலிலிருந்து கருங்கடல் வரையிலான யுத்தமுனை விரிந்திருந்தது. மூன்று நூற்றாண்டுப் போராட்டத்தின்போது ஸ்காண்டிநேவியன் கோதிகள் மற்றும் பர்குண்டியன்கள் தவிர ஜெர்மானிய கோதிக் பழங்குடிமக்கள் பெருந்திரளின் பிரதான உறுப்பு முழுவதும் தென்கிழக்காக நகர்ந்தார்கள்; தாக்குதலின் நெடிய யுத்தமுனையின் இடது கிளை அரங்காக அமைந்தார்கள். இந்த நெடிய யுத்த முனையின் மையத்தில் மேப்பின்யூப் நதியருகில் உயர் ஜெர்மானியன் (ஹெர்மினோனியன்கள்) முன்தள்ளினர். தற்போது பிராங்கியர்கள் என்றழைக்கப்படும் ஐஸ்மூவோனியன்கள் ரைன் நதியருகிலும் வலது கிளை அரங்கமாக அமைந்தார்கள். இங்கிவேன்யன்களுக்கு பிரிட்டன் வீழ்ந்தது. 5-ம் நூற்றாண்டின் இறுதியில் ரோமானியப் பேரரசு சக்தியிழந்து, இரத்தமிழந்து, நாதியற்ற நிலையில் ஜெர்மானியப் படையெடுப்பாளர்களிடம் வீழ்ந்தது.

உண்மையில் ரோமானியப் பேரரசின் வீழ்ச்சியால் ரோமானியர்கள் விடுதலை பெற்றார்கள்; ரோமானியர்களை அவர்களது சொந்த அரசிடமிருந்து விடுவித்ததற்கு ஈடாக அநாகரிக ஜெர்மானியர்கள் மூன்றில் இரண்டு பகுதி நிலப்பரப்பைக் சுவாதீனம் செய்து தங்களுக்குள் பகிர்ந்துகொண்டார்கள். கணமுறைக்கேற்ப நிலம் பகிர்ந்துகொள்ளப்பட்டது; வென்றவர்கள் ஒப்பீட்டு அளவில் குறைவாக இருந்ததால் பெரும் அளவு நிலவெளி பிரிக்கப்படாமல் ஒரு பகுதி மொத்த மக்களின் அனுபோகத்திலும் இன்னும் ஒருபகுதி பழங்குடி அல்லது கணத்திற்குச் சொந்தமாக இருந்தது. பொறுக்கு சீட்டின்மூலம் ஒவ்வொரு கணத்திலும் தனிக்குடிகளுக்கு வயலும் மேய்ச்சல் நிலங்

களும் பகிர்ந்தளிக்கப்பட்டன. நீண்ட நாட்கள் கணங்கள் கிரா மங்களில் நிலவிய அளவிற்கு ஜெர்மானிய ரோமானிய இனங்கள் மண உறவில் இணைந்து பிரதேச அடிப்படையிலான பிணைப்புகள் தோன்றின. வென்றடக்கப்பட்டதன் விளைவாக பழங்குடி உறுப்புகளும், மொத்த மக்களும் சீரழிந்துபோனதன் விளைவாக கணங்களின் இரத்தப்பிணைப்புகள் விரைவில் மறைந்துபோயின. கணமுறைகளோடு வென்றடக்கப்பட்ட மக்கள் ஆள்வது இசைந்து போக முடியாது ரோமானிய பிராந்தியங்கள், மாநிலங்களை வென்றடக்கிய அநாகரிக ஜெர்மானியர்கள் வெற்றியை ஸ்தாபனப்படுத்த வேண்டியிருந்தது; ஆனால் ஜெர்மானியர்கள் தமது கண உறுப்புகளில் அனைத்து ரோமானியர்களையும் இணைத்துக் கொள்ளவும் முடியாது; அதைக் கொண்டு ஆளவும் முடியாது. தொடர்ந்து செயல்பட்டு வந்த ரோமானிய உள்ளூர் நிர்வாக உறுப்புகளுக்குத் தலைமையாக ரோமானிய அரசின் இடத்தில் வேறொரு அரசை நிறுவ வேண்டியிருந்தது. இவ்வாறு கண அரசியல் நிர்ணய உறுப்புகள் மாற்றப்பட்டு அரசு உறுப்புகள் நிறுவப்பட்டன. சூழ்நிலைமைகளின் விளைவாக இதை விரைந்து நிறுவ வேண்டியிருந்தது வென்றடக்கிய மக்களின் முதல் பிரதிநிதியாகவிருந்த இராணுவ ஆணையாளரே உள்நாட்டு வெளிநாட்டுப் பாதுகாப்பு கருதி தலைமை உறுப்பில் அமர்த்தப்பட்டு பின்னர்பரம்பரை அரசுரிமை பெற்றனர். எனவே அன்றைய ரோமானிய பேரரசின் வீழ்ச்சியுறும் நிலைமைகள், அவைகளால் தீர்மானிக்கப்பட்ட வென்றடக்கியவர்களின் ஸ்தாபனமுறை, இவற்றோடு இணைந்து ஜெர்மானிய ராணுவ அமைப்பு ஒழுங்குமுறை ஆகியவை நிலப்பிரபுத்துவ வர்க்க உறவுகளையும் சொத்துடைமை வடிவங்களையும் கொண்டு வந்தன.

ரோமானியப் பேரரசின் வீழ்ச்சியும், அநாகரிக ஜெர்மானியர் வென்றடக்கியதும் இரண்டு அம்சங்களை நிரூபித்தன. முதலாவதாக, வீழ்ச்சியுறும் ரோமானியப் பேரரசின் சமுதாய அழுக்குகள் அனைவதும் சொத்துடைமையின் பங்கீடும் அப்போது நிலவிய விவசாயம் மற்றும் தொழிலின் உற்பத்தி கட்டத்திற்கு முழுவதுமாகப் பொருத்தமானது; தவிர்க்க முடியாதது. இரண்டாவதாக தொடர்ந்து வந்த நான்கு நூற்றாண்டுகளாகிய இந்தக் கட்டத்தில் உற்பத்தி விழவோ எழவோயில்லை; எனவே இந்தக் கட்டம் அதே அளவு சொத்துடைமை பங்கீடும் அதே அளவு வர்க்கப் பிரிவினையுமே நிலவியது. ரோமானியப் பேரரசின் இறுதி நூற்றாண்டுகளில் நாட்டுப்புறங்களிடம் நகர்ப்புறங்கள் மேலாண்மையை இழந்தன. ஜெர்மானிய ஆட்சியின் முதல் நூற்றாண்டுகளிலும் திரும்பப் பெறவில்லை. இது விவசாயம் மற்றும் இரண்டும் ஒரு கீழ் நிலையிலிருந்ததை முன் அனுமானிக்கிறது இம்மாதிரியான ஒரு பொது நிபந்தனை பெரும் ஆளும் நிலவுடைமையாளர்களையும் சார்புநிலை சிறு விவசாயிகளையும் அவசியம் தோற்றுவிக்கிறது. ரோமானியப் பேரரசு வீழ்ச்சியுற்ற நான்கு நூற்றாண்டு போர்க்காலத்தில் பழம்பண்டு அடிமை முறை முற்றாக மறைந்தொழிந்தது. அடிமைத்தனமான வேலைகளுக்குத் தள்ளப்பட்ட போண்டியான ஏழை சுதந்திர விவசாயியும் இல்லாமல் போனான்

வீண் பகைமையான, பயனற்ற எச்சங்களான ரோமானிசம் இழந்தொழிந்தது; குழிதோண்டிப் புதைக்கப்பட்டது. இறுதியில் ஒன்பதாம் நூற்றாண்டின் சமூக வர்க்கங்கள் ஒரு வீழ்ச்சியுறும் நாகரிகத்தின் அழுகலிலிருந்து பிறந்தெழவில்லை. மாறாக புதியதின் பிறப்பு வேதனையில் எழுந்தது. தொண்டுபுரியும் சிறு விவசாயிகளுக்கு வீழ்ச்சியுறும் பழம்பண்டு சமூக உலகின் பயனற்ற வடிவமாகவும் நிலப்பிரபுக்களுக்கு ஒரு புதிய வளர்ச்சிக்கான துவக்கப்புள்ளியாகவும் விளங்கும் அவர்களுக்கிடையிலான உறவு எழுந்தது. அநாகரிக ஜெர்மாணியர்களின் வென்றடக்குதலுக்கான இந்த நான்கு நூற்றாண்டுகளும் உற்பத்தி இல்லாததாகத் தோற்றமளித்தாலும் ஒரு மகத்தான பொருளை அவை விட்டுச் சென்றன. மேற்கு ஐரோப்பிய மனித இனத்திற்கே எதிர்வந்த வரலாற்றில் ஒரு புதிய சேர்க்கையையும், புதிய பாணியையும் கொண்ட நவீன தேசங்களே அது.

பழம்பண்டு ரோமானிய அடிமைச் சமுதாயத்தைத் தாக்கி, நாகரிக ரோமானியர்களைத் தாக்கி, அநாகரிக ஜெர்மாணியர்கள் வென்றடக்கியதைப்பற்றி அதன் சமுதாய, பொருளாதார, அரசியல், வரலாற்று பின்னணி, பின்விளைவுகளை எங்கெல்சு சித்தரித்தவாறு இங்கே தொகுத்தளித்தோம். ஏறக்குறைய நாகரிக வளர்ச்சியுற்று அடிமைச் சமுதாய நிலையை எட்டியிருந்த திராவிடர்களை அநாகரிக நிலையிலிருந்த ஆரியர்கள் தாக்கி வென்றடக்கியதோடு இதை ஒப்பிட முடியும்.

உண்மையில் ஜெர்மானியர்கள் ஐரோப்பாவுக்கு ஒரு புதிய வாழ்வைப் புகுத்தினர்; எனவேதான் ஜெர்மாணிய காலகட்டத்தில் அரசுகள் சதைந்து போனதானது பழைய அடிமைத்தனத்தைக் கொண்டுவரவில்லை; அரசு சலுகைகள் பேணுதல்கள், ஆணைகளின் இடத்தில் நிலப்பிரபுத்துவத்தைக் கொண்டு வந்தது; இரத்தம் குடிக்கும் அடிமை முறையை இரு நூற்றாண்டுகளில் மாற்றியமைத்து விட்டது என்கிறார் எங்கெல்சு. ஜெர்மானியர்களது அநாகரிகம், அதாவது அவர்களின் கணக் கட்டமைப்பு; இதுதான் ஐரோப்பாவிற்கு புத்துயிரளித்தது. ரோமானியர்களின் தனி மனித வீரதீரம், சுதந்திரத்தின் மீதான மாளாக் காதல், ஜனநாயக மாண்பு, அனைத்து பொது விவகாரங்களையும் தமது சொந்த விவகாரங்களாகக் கருதும் பெருந்தன்மை இவையனைத்தையும் இழந்தும் அவற்றின் இடிபாடுகளில் புதிய அரசுகளையும், தேசிய இனங்களையும் கட்டியெழுப்பக் காரணம் அநாகரீக (ஜெர்மனியரின்) மக்களின் கணக் கட்டமைப்பின் சிறப்புகளே ஆகும். மத்திய கால பண்ணையடிமை, உள்ளூர் கட்டுதிட்டங்கள், மற்றும் தடைகள் ஆகிய கடும் நிலைமைகளின் கீழும் கூட பழம்பண்டு அடிமைகளுக்கோ நவீன பாட்டாளி வர்க்கத்துக்கோ கூட கிடைக்காத நிலப்பிரபுத்துவ அரசு வழியிலான உண்மையான கட்டமைப்புகள் குறைந்தது. ஜெர்மனி, வடக்கு பிரான்சு, இங்கிலாந்து ஆகிய மூன்று நாடுகளில் காத்தது இந்த அநாகரிகம், கணங்களின் அநாகரிகக் குடியமர்வு முறைதான். இறுதியாக அடிமைமுறையை விட மிதமான கீழ்படிதல் தன்மையுடை

ய்தும் ஒரு வர்க்கம் என்கிற ரீதியில் சிறிது சிறிதாக விடுபடக் கூடியதுமான பண்ணை அடிமை முறையை எங்கெல்கும் அறிமுகப்படுத்தி வளர்த்தது இந்த அநாகரிக கணக் கட்டமைவின் சிறப்புத் தூண்.

ரோமானிய உலகிற்கு உயிராதாரமானதும் வாழ்வளித்ததுமான ஜெர்மானியர்கள் கொண்டுவந்த அநாகரிகம், அழியும் நாகரிகத்தின் வாயிலில் சிக்கித் தவிக்க, உலகிற்கு அநாகரிக மக்களால் மட்டுமே புத்துயிர் அளிக்க முடிந்தது. இங்கே அநாகரிகம் என்பது கண உறவுகளால் நீடித்த புராதன பொதுவுடமையின் சிறப்புத் தன்மைகள். இவையே இந்த நிகழ்ச்சிப் போக்கிற்கு சாதகமான அம்சங்களைக் கொடுத்தன. இவ்வாறு பழம்பண்டு அடிமைச் சமுதாயம் நிலப்பிரபுத்துவச் சமுதாயப் பொருளாதாரப் படிவத்தை வந்தடைய அரசியல் வரலாற்றுக் காரணிகள் செயலாற்றியுள்ளன. இதே போன்றுதான் வேறு பல அரசியல் வரலாற்றுக் காரணிகள் நிலப்பிரபுத்துவ சமுதாயப் பொருளாதாரப் படிவத்தின் சிதைவுக்கும், முதலாளித்துவ உற்பத்தி முறையின் தோற்றத்தின் முன்நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதற்கும் காரணிகளாக இருந்தன.

நிலப்பிரபுத்துவ உற்பத்திமுறை மற்றும் சமுதாயத்தில் இருந்து முதலாளித்துவ உற்பத்தி முறை மற்றும் சமுதாயத்துக்கு மாறிச் செல்லும் போக்கு, கால கட்டம் பற்றி பின்வருமாறு மேலெழுந்த வாரியாகப் புரிந்துகொள்ளக் கூடாது. நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையிலிருந்து நிதிச் செல்வத்தை திரட்டிய முதலாளிகள் மூலப் பொருட்கள், உற்பத்திக் கருவிகள் ஆகிய உற்பத்தி சாதனங்கள் மற்றும் உயிர் ஓம்புதலுக்கான சாதனங்களை மூலதனமாக ஒன்று திரட்டி கூலி உழைப்பாளர்களை ஆலை உற்பத்தியில் ஈடுபடுத்தி படிப்படியாக முதலாளித்துவ உற்பத்தி முறையை வளர்த்து ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் நிலப்பிரபுத்துவம் தடையாகிப் போனபின் தூக்கியெறிந்து முதலாளித்துவத்தை நிறுவியதாக கொள்ளக்கூடாது. முதலாளித்துவ உற்பத்திமுறை உருவாதவற்கே நிலப்பிரபுத்துவச் சமுதாயச் சொத்துடைமைகள்—நிலச் சொத்துடமை மற்றும் கில்டுகளின் கூட்டுப் பங்குச் சொத்துடைமை இரண்டுமே—மற்றும் அவற்றுக்குப் பொருத்தமான உற்பத்தி உறவுகளும் சிதைவதை, அழிவதை முன்னிபந்தனையாகக் கொண்டிருக்கின்றன.

ஆலை முதலாளிகள் முதலாளித்துவப் புரட்சியைத் துவக்கி வைக்கவே இல்லை; மாறாக முடித்து வைத்தார்கள் என்று கூறுவதே சரியாக இருக்கும். நிதிச் செல்வத்தை மூலதனமாக மாற்றும் சொல்லிக் கொள்ளப்படும் புராதனத் திரட்சி என்ற வரலாற்றுப் போக்கின் மிகப் பெரும் விளைவு பொருள்தான ஆலை முதலாளிகளும் கூலித் தொழிலாளர்களும் என்று கூறிய மார்க்சு இங்கிலாந்தின் அரசியல் பொருளாதாரத்தை ஒரு வரை விலக்கணமாகக் கொண்டு ஆய்வு செய்தார். மேற்கு ஐரோப்பா

வின் எல்லா நாடுகளிலும் அப்பொழுது இந்த வரலாற்றுப் போக்கே நடந்தேறுவதாகக் கூறினார். எங்கெல்சு ஜெர்மனியிலும், லெனின் ருஷ்யாவிலும் நடந்த இந்தப் போக்குகளை ஆய்வு செய்தனர். மத்திய காலத்தின் இறுதியில் எழுந்த நிதிப் பொருளாதாரத்தின் ஊடுருவல், பல்வேறு விவசாயிகள் எழுச்சி குறிப்பாக இங்கிலாந்தில அரசுப் பதவிக்கு நடந்த ரோஜா யுத்தத்தின் முடிவு ஆகியவைகாரணமாக 15ம் நூற்றாண்டில் மேற்கு ஐரோப்பாவில்பண்ணை அடிமைமுறை வீழ்ச்சியுறத் துவங்கியது தொழில் துறை முதலாளித்துவ வர்க்கமானது கடல் வணிக, வர்த்தக வியாபார மூலதனத்தையும் வட்டிலேவாதேவி மூலதனத்தையும் திரட்டியுள்ள நிதியாதிக்க உயர்குடி மத்திய ஆசிக்கத்திலிருந்து ஐரோப்பா வெளியேறிய போது உதித்தெழுந்தது. ஐரோப்பாவின் புரட்சி கரக் கூறாய் மத்தியகால ஒழுங்கலை ஒழுங்கமைவிற்குள் அங்கீகாரம் பெற்ற நிலையை அடைந்தது. ஆனால் அதன் வளர்ச்சி பிரபுத்துவ அமைப்பு நீடிப்பதற்கு ஒவ்வாததாகிவிட்டதால் அதைத் தூக்கியெறியும் பாத்திரமாற்றத் தொடங்கியது. 14 – 15 ஆம் நூற்றாண்டுகளில் பிரபுத்துவ மேற்கு ஐரோப்பா இடையறாத உள் யுத்தங்களில் ஈடுபட்டிருந்த வேளையில் மற்றொரு உட்குழுவாகிய கிரேக்கர்களுக்கும் மகமதிய நாடுகளுக்கும் எதிரான மாபெரும் அரசியல் அமைப்பாகவும் நிலப்பிரபுத்துவத்தின் சர்வதேச மையமாகவும் நிலப்பிரபுத்துவ நிறுவனங்களுக்கு தெய்வீகத் தன்மை அளிப்பதாகவும் விளங்கிய கத்தோலிக்க சமய சபையே ஒரு மத நிலப்பிரபுத்துவ வரிசைக் கிரமமான வர்க்கத் தன்மையுடைய அமைப்பாக விளங்கியது. நிலப்பிரபுத்துவ அரசியல் - சமூக - பொருளாதாரக் கட்டுமானம் ஒரு புறம் முடியாட்சியால் தலைமை தாங்கப்படும் பேரரசுகளையும் சிற்றரசுகளையும் கொத்தளங்களையும் மற்றொருபுறம் நிலப்பிரபுக்களையும் குத்தகை தரும் சிறு விவசாயிகளையும் பண்ணையடிமைகளையும் கொண்டிருந்தது. இதுவன்றி நகர்ப்புறத்தில் நிதியாதிக்க உயர்குடி, பட்டறை அதிபர்கள், பட்டறை உற்பத்தியாளர்கள் பயிற்சியாளர்கள் மற்றும் தினக் கூலிகளிலிருந்தனர். கிராமப்புறங்களில் களிவெறியாட்ட கும்பலாக தீராத போர்களில் நிலப்பிரபுத்துவ உயர்குடிகள் ஈடுபட்டிருந்த வேளையில் 15-ம் நூற்றாண்டில் நகர்ப்புற குடிகள் பிரபுத்துவ உயர் குடியிலும் பார்க்க சக்திமிக்க, செல்வாக்கு மிக்க சமுதாயப் பிரிவாக வளர்ந்திருந்தன. எனவே நகர்ப்புற நிதியாதிக்க உயர்குடி தலைமையிலான வர்க்கங்கள் பிரபுத்துவ எதிர்ப்பு நலன்கள், சொந்த சட்டம், சொந்த ஆயுதமேந்திய குடிகளோடு எங்கெங்கும் பிரபுத்துவ பிராந்தியங்களில் ஊடுருவின. நிதியாதிக்க உயர்குடி அதன் நிதிச் செல்வம் மூலம் ஏற்கனவே நிலப்பிரபுக்கான ஒரு பகுதி சமுதாய ரீதியிலும் சில இடங்களில் அரசியல் ரீதியிலும், தம்மை சார்ந்திருக்குபடி செய்தது. கிராமப்புறங்களில் பணத்தின் ஊடுருவல் காரணமாக பழைய பிரபுத்துவ உறவுகள், பிணைப்புகள் தளர்ச்சியுறத் தொடங்கின.

நகரம், கிராமம் எங்கெங்கும் மேலும் மேலும் கூடுதலான மக்கள் அப்பொழுது பிரபுத்துவ உயர்குடியினரிடையே நடந்த இடையறாத போர்களை நிறுத்தி அழிவுகளிலிருந்தும் எதிரிகளிலிருந்து காக்கும்படி தலையிலிருந்த முடியரசை நிர்பந்தித்தனர் சந்தை வியாபாரம், நகர்ப்புற பரிவர்த்தனை பண்ட உற்பத்தி பெருக்கம் காரணமாகவும் பிரபுத்துவத்தின் வீழ்ச்சி காரணமாகவும் மொழி அடிப்படையிலான தேசிய இனங்கள் தோன்றத் துவங்கின. மேலிருந்து கீழ்வரை வரிசைக்கிரமமான பிரபுத்துவ அமைப்பு முழுவதற்கும் மத்தியகால அரசு ஒவ்வொன்றிற்கும் முடியரசும் கீழே கொத்தளத் தளபதிகளும் இருந்தனர். மத்திய முடியரசுகளின் துணையின்றி நிர்வகிக்க முடியாத கொத்தளத் தளபதிகள் அதே சமயம் கலகம் செய்து வந்தனர். சொந்தச் சேவைக்கு மானியம் — நிதியளிப்பதும்கூட, அது எவ்வளவுசிறிய ஆரம்ப வடிவமானாலும், மோதல்களை விளைவிக்கக்கூடியதாக பிரபுத்துவ அடித்தளம் இருந்தது.

எனவே முடியரசர்கள் உள்ளிருந்தும் வெளியிலிருந்தும் வரும் அபாயங்களிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ள பல நூற்றாண்டுகளாக கொத்தளங்களுக்கு ஒரு மாற்று ஏற்பாடு தேவையாக இருந்தது. எனவே அடிக்கடி அதன் தளபதிகளை மாற்றிப்போடுவதும், அவர்களது எழுச்சிகளும் இடையறாத மோதல்களும் தவிர்க்க முடியாதவையாகின. சிற்றரசர்கள், உயிர் குடியினர், மதகுருமார்கள், நிதியாதிக்க உயர் குடியினர், தாராளவாதிகளாகிய பர்கர்கள், அடிதட்டு மக்களாகிய பிளெபியன்கள் மற்றும் விவசாயிகள் என்று பேரரசுகள் பல்வேறு சமூக எஸ்டேட்டுகளாக உருவாகி வெவ்வேறு கடைக்கோடித்தனமான எதிரெதிரான நலன்களுக்கிடையே தீராத முரண்பாடுகளையும் தோற்றுவித்து ஒவ்வொரு நாட்டையும் பல்வேறு முகாம்களாக பிளவுபடுத்தி இடையறாத நேரடி மறைமுக மோதல்களையும் குழப்பத்தையும் தோற்றுவித்திருந்தன. ஒரு சமூக எஸ்டேட்டு மற்றதின் மீது ஆதிக்கம் செலுத்தவும், எல்லா சமூக எஸ்டேட்டுகளும் விவசாயிகளையும் பிளெபியன்களையும் கொள்ளையிடவும் மோதிக் கொண்டன. இப்போராட்டத்தில், மாபெரும் முறைகுலைவில், சிதறடிக்கும் சிற்றரசர்கள் மற்றும் கொத்தள அரசுகளுக்கு எதிராக ஒன்று படுத்த உதித்தெழும் மத்தியத்துவப்படுத்தப்படும் தேசிய அரசுகளை உருவாக்குவதில், ஒழுங்கு முறையை நிலைநாட்டுவதில் முடியரசு ஒரு முற்போக்கு கூறாக அமைந்தது. பிரபுத்துவ கட்டத்துக்கு மேலே உதித்த எல்லா புரட்சிகர கூறுகளும் முடியரசையும், அதே அளவு அவற்றின் மீது முடியரசும் சார்ந்து நின்று மேலும் மேலும் சக்தி வாய்ந்த கூட்டணி பிரபுத்துவ உயர்குடிகளுக்கு எதிராக உருவாகின. பிரபுத்துவ உயர்குடிக்கு எதிரான போராட்டத்தில் முடியரசு இறுதி வெற்றிபெற்று அதன் பிரதிநிதிகளைத் தனது கூட்டாளிகளையும் அடிமைப்படுத்திக் கொள்ளையிடத் துவங்கும்வரை இக்கூட்டு நீடித்தது. இறுதியில் பிரபுத்துவத்துக்கெதிரான புரட்சியில் வெற்றி அதிகாரத்தை நிதியாதிக்க

உயர்குடியுடன் சேர்ந்து முற்றும் முழுதாக கைப்பற்றியபின் புரட்சிக்கு எதிராகவே முடியரசு திரும்பியபோது ஆலை முதலாளித்துவ வர்க்கத்தின் தலைமையிலான புரட்சிகர எழுச்சி முடியரசையே தூக்கியெறிந்து முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியை முடித்தது. இவ்வாறு நிலப்பிரபுத்துவத்தைத் தூக்கி யெறியும் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி பல்வேறு இடைக் கட்டங்களினூடே பயணம் செய்து பிரபுத்துவ முடியரசு முதலில் எதேச்சதிகார முடியரசையும் பின்னர் முதலாளித்துவ முடியாசையும் இறுதியாக சட்டப்பூர்வ முடியரசையும் நிறுவி கடந்து சென்றது.

பிரபுத்துவ உயர்குடிக்கெதிராக முடியரசும், குடிகளும் நடத்திய போராட்டத்தில், பிரபுத்துவ சட்டவாத மதகுருக்களுக்கெதிராக ரோமானிய சட்டத்தை மறு கண்டுபிடிப்பு செய்து புதுப்பித்த ஜூரிஸ்டுகள், வழக்குரைஞர்கள் என்னும் பிரிவு உதித்தானது மேலும் சிந்தாந்த உந்து சக்தியாக அமைந்தது. பிரபுத்துவ வரம்புகள், தனிச் சலுகைகள், தனியுரிமைகளுக்கு எதிராக நடுத்தர வர்க்க சொத்துடமைக்கும் நவீன கால ,தனிச் சொத்துடமைக்கும் அடிகோலியதோடு நிலப்பிரபுத்துவ உறவுகளை உடைத்தெறிவதற்கான சித்தாந்த அடித்தளமாக அமைந்தது. மேலும் அச்சு இயந்திரத்தின் கண்டுபிடிப்பு, புராதான இலக்கியங்களின் மறு ஆய்வு மற்றும் கலாச்சார இயக்கம் 15-ம் நூற்றாண்டில் தொடர்ந்து சக்தி வாய்ந்த உந்து சக்தியாக பிரபுத்துவத்துக்கெதிரான போராட்டத்தில் குடியரசுகளுக்கும் நகரக் குடிகளுக்கும் உதவின.

பொருளாதார ரீதியில் மிதமிஞ்சிய ஆடம்பரக் கேலிக் கூத்தாட்ட கும்பலாகவும் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாகவும் மாறியிருந்த பிரபுத்துவ உயர்குடி அரசியல் ரீதியிலும் கூட நகரங்கள் மற்றும் தேசிய அரசுகளின் வளர்ச்சிக்குத் தடையாகிப் போனபோது நகரங்களும் தேசிய அரசுகளும் முடியரசின் வடிவமெடுத்தது. இதுவரை போர் தொடுக்கவும், போர்க்களத்தில் வெல்லவும் குதிரை வீரர்களின் தளபதிகள் என்ற முறையில் குதிரைப் படைகளையும் ஆயுதங்களையும் ஏகபோகமாகப் பெற்றிருந்ததால் பிரபுத்துவ உயர் குடியினர் சமுதாய மற்றும் அரசியல் ரீதியில் மேலாதிக்கம் பெற்றிருந்தனர். முடியரசின் ராணுவத் தலைமைக்கு கட்டுப்படாமல், பிரபுத்துவ உயர்குடியின் நேரடி, உடனடி பராமரிப்பில் இருந்த உள்ளூர் பட்டாள அடிப்படையிலான பிரபுத்துவ ராணுவத்தைக் கொண்டு பிரபுத்துவ அமைப்பை எதிர்க்கவியலாத நிலையிலிருந்த முடியரசுக்கு நகர்ப்புற மக்களும் சுதந்திர விவசாயிகளும் சக்தி வாய்ந்த காலாட்படையாக அமைந்து பிரதான முன்னிபந்தனையைப் பூர்த்தி செய்தனர். படிப்படியாக இங்கிலாந்தில் பண்ணையடிமை முறை ஒழிந்து சுதந்திர விவசாயிகள், குத்தகை விவசாயிகள் என்று பெரும் அளவிலான வர்க்கத்தின் தோற்றம் மற்றும் மத்திய காலத்தில் சக்தி வாய்ந்ததாக விளங்கிய குதிரைப்

படைகளுக்கு எதிராக நீண்ட ஈட்டி, அம்பு, வில் வீச்சுக்காரர்களின் காலாட்படை, அராபியர்களின் வெடிமருந்துப் பிரயோகம் இவை யாவும் பிரபுத்துவ ராணுவ ஆதிக்கத்தை வீழ்த்த வழிகோலின.

இவ்வாறு பொருளாதாரம், சமுதாயம், அரசியல், கலாச்சாரம் மற்றும் இராணுவம் என்று அனைத்து வகைகளினூடான வழிகளில் பிரபுத்துவ உயர்குடியை வீழ்த்துவதற்கான காரணிகள் மேலும் மேலும் வளர்ந்து பரஸ்பரம் பாதிப்பாலும், ஒரே திசையில் முன்னேறுவதாலும் முதலில் பிரபுத்துவத்தின் மீது நிதியாதிக்க உயர் குடிகளாகிய நடுத்தர முதலாளித்துவ வர்க்கத்தின் வெற்றி அல்ல, எதேச்சதிகார முடியரசின் வெற்றி சாதிக்கப்பட்டது. 15ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எதேச்சதிகார முடியரசு ஐரோப்பாவெங்கும் சிறு நாடுகளிலும் கூட மேலோங்கி நின்றது. எதேச்சதிகார முடியரசுகளின் தோற்றம் பிரபுத்துவத்தின் வீழ்ச்சியையும், மத்தியத்துவப்படுத்தப்பட்ட தேசிய(இன) அரசுகளின் நிர்மாணத்தையும் குறிக்கின்றது; ஐபீரியன் தீபகற்பத்திலே இரு ரோமன்ஸ் மொழி பேசும் மக்கள் ஐக்கியப்பட்டு ஸ்பெயின் பேரரசும், காஸிலின் மொழி எழுத்தை ஏற்றுக் கொண்ட புரொலெங்கால் பேசும் மொழியினரின் அரகோன் அரசும், கலீஸியா தவிர எஞ்சிய மொழிப் பிராந்தியங்கள் ஐபீரியன் நெதர்லாந்தில் போர்ச்சுக்கல் அரசும் ஆக மூன்று எதேச்சதிகார முடியரசுகள் தோன்றின. இடைப்பட்ட (Buffer) பர்குண்டி பொம்மை அரசு ஒழிக்கப்பட்டபின் பதினோராம் லூயியின் பிரான்சு தோன்றி உறுதிப்பட்டது; ரோஜாப் போர்களுக்குப் பின் இங்கிலாந்திலும் பிற்போக்குப் பிரபுத்துவ உயர்குடி முறியடிக்கப்பட்டு டியூடர் பரம்பரையினரின் எதேச்சதிகார முடியரசு தோன்றியது; ருஷ்யாவில் உள்ளூர் சிற்றரசுகள் முறியடிக்கப்பட்டதோடு, தார்த்தார்களின் நுகத்தடியிலிருந்து வீடுபட்டு மூன்றாம் ஐவானின் எதேச்சதிகார முடியரசு அமைக்கப்பட்டது; ஏற்கனவே ஸ்காந்திநேவிய நாடுகளும், லித்துவேனியாவுடன் இணைந்துகொண்ட போலந்து எதேச்சதிகார முடியரசைப் பெற்றிருந்தது. மொத்தத்தில் இத்தாலி, மற்றும் ஜெர்மனியைத் தவிர ஐரோப்பா முழுவதிலும் எதேச்சதிகார முடியரசுகளும் தேசிய ஐக்கியமும் நிறுவப்பட்டன.

பிரபுத்துவத்துக்குத் தெய்வீக தன்மை அளிப்பதாகவும், அதன் சர்வதேசிய அரசியல் மையமாகவும் விளங்கிய ரோமன் கத்தோலிக்க சமய சபையை முதலில் எதிர்க்கும்படியும், பிரபுத்துவத்துக்கெதிரான ஒவ்வொரு போராட்டமும் சமயவேடம் பூண்டு அதற்கு எதிராக கிளம்ப வேண்டியிருந்தது. பிரபுத்துவ உயர்குடினராகிய சமயப் பிரபுக்களையும், லௌகீகப் பிரபுக்களையும் எதிர்த்து வாழ்வுக்காகப் போராடிக் கொண்டிருந்த விவசாயிகளை இந்த மூலம் றயிலேயே தொழில், வாணிபத்துறை நிதியாதிக்க உயர்குடி தட்டியெழுப்பியது,

பிரபுத்துவத்தை எதிர்த்த முதலாளித்துவத்தின் நீண்ட

நெடிய போராட்டத்தில் தீர்மானகரமான உச்ச நிலையை அடைந்த மூன்று பெரும் போர்களில் இரண்டு, மதத்தின் பெயரால் நடந்தன. லூதரிய சீர்திருத்தத்தின் பெயரால் ஜெர்மனியில் நடந்த 1523-ல் கீழ்நிலைப் பிரபுக்களுடைய பெரும்போரும் மற்றும் 1525-ல் விவசாயிகளது பெரும்போரும் நகர்ப்புற தாராள வாதிகளாகிய பர்கர்களின் (Burghers) உறுதியின்மையால் தோற்கடிக்கப்பட்டது எதேச்சதிகார முடியரசுக்கு லூதரிய கோட்பாடு தகவாக இருந்தாலும், பிரபுத்துவத்துக்கு எதிரான இப்பெரும் போர் தோல்வியுற்ற பின் பிரதேச சிற்றரசர்களுக்கும் மத்திய அதிகாரத்துக்கும் இடையிலான போராக சீரழிந்ததோடு சுதந்திர விவசாயிகளை மீண்டும் பண்ணையடிமைகளாகத் தாழ்த்தி விட்டது.

கால்வினிய சீர்திருத்தத்தின் பெயரால் இரண்டாவது பெரிய முதலாளித்துவ எழுச்சி இங்கிலாந்தில் வெற்றிகரமாக நடந்தேறியது. நிதியாதிக்க உயர்குடியினராகிய முதலாளித்துவப் பிரிவினருக்கு கால்வினியக் கோட்பாடு தகவாக அமைந்தது. அவர்களால் மூண்பெழச் செய்து தலைமையேற்கப்பட்ட 1640 மற்றும் 1688 புரட்சிகர எழுச்சிகளில் கிராமப்புற விவசாயிகளும் நகரங்களைச் சேர்ந்த கீழ்க்குடிகளாகிய பிளெபியின் பகுதியோரும் புரட்சிகரமான முறையில் பங்கேற்று இறுதி வெற்றிக்கு அடிப்படையாக அமைந்தனர். புரட்சியின் வீச்சைக் கண்டஞ்சிய நிதியாதிக்க உயர்குடியினராகிய பெரு முதலாளிகளும் நிலமுடைத்த பிரபுக்குலத்தோரும் சமரசம் செய்து கொண்டு ஸ்டுவர்டு வம்சத்தின் வரம்பற்ற எதேச்சதிகார முடியரசை வீழ்த்தி சட்டவழி முடியரசை நிறுவினர். 1789-94 மாபெரும் முதல் பிரெஞ்சுப் புரட்சி முதலாளித்துவ வர்க்கத்தின் மூன்றாவது எழுச்சியாகும். சமய முகமூடியை உதறித் தள்ளி விட்டு அப்பட்டமாக அரசியல் வழிகளில் போராடி வரம்பற்ற எதேச்சதிகார முடியரசுக்கு முடிவுகட்டி முதல் குடியரசை நிறுவிய முதலாவது எழுச்சியாக அமைந்தது. இது நிதியாதிக்க உயர்குடியினராகிய முதலாளித்துவ வர்க்கம் பிரபுத்துவ உயர்குடியை முற்றாக அழித்து இறுதிவெற்றியை மெய்யாகவே முதன்முறையாக சாதித்தது. இங்கிலாந்தைப் போலன்றி பிரபுக்களுடன் முதலாளிகள் சமரசமின்றி புரட்சிக்கு முந்திய சட்டம், நீதிமன்ற நெறி முறைகள், பழங்கால மரபுகள் ஆகியவற்றிலிருந்து முழு நிறைவான முறிவை முதலாவது பிரெஞ்சுப்புரட்சி குவித்தது பழைய ரோமானிய சட்டத்தை தகுந்த திறமையோடு நவீன முதலாளித்துவத்துக்கு தகவமைத்து முதலாளித்துவ சொத்துரிமைகளுக்கும் பிற உரிமைகளுக்கும் அடிப்படையான சட்டத் தொகுப்பை நிலைநாட்டினர். ஆனால் பிரபுத்துவ உயர்குடியுடன் சமரசம் செய்து கொண்டு சட்டவழி முடியரசை ஏற்றுக் கொண்டிருந்த ஆங்கிலேய நியதிாதிக்க உயர்குடியினரான பெருமுதலாளிகள் பிரெஞ்சுப் புரட்சியைக் கண்டஞ்சி ஐரோப்பிய கண்டத்து வரம்பற்ற எதேச்சதிகார முடியரசுகளுடன் கூட்டணி அமைத்து பிரெஞ்சுக் கடல் வாணிபத்தை அழிக்கவும், பிரெஞ்சுக் காலனிகளைக் கைப்பற்றவும், அதன் எஞ்சிய கடைசி உரிமைத்

திகுதிகளை நசுக்கவும் போர் தொடுத்து முறியடித்தனர். இதன் பின்விளைவாக முதல் பிரெஞ்சுப் புரட்சியின் பலன்களைப் பறித்து 1814 ல் திரும்பவும் நிலை நாட்டுதல் மூலம் நிறுவப்பட்ட வரம்பற்ற எதேச்சதிகார முடியரசு 1830 வரை நீடித்தது. 1830ல் நடைபெற்ற ஜூலை இரண்டாவது புரட்சி வரம்பற்ற எதேச்சதி காரத்தை முறியடித்து மீண்டும் முதலாளித்துவக் குடியரசை நிலை நாட்டியது. இதன்பின் உண்மையில் பிரெஞ்சு முதலாளித் துவத்தின் ஒரு பிரிவான வங்கி மற்றும் பங்கு மார்க்கெட்டு அதிபர் கள், ரயில்வே அதிபர்கள், நிலக்கரி, இரும்பு மற்றும் வனங்களின் உடமையாளர்கள் மற்றும் அவர் களுடன் இணைந்த பெரும் நிலச் சொத்துடமையாளர்கள் ஆகியோர் அடங்கிய நிதியாதிக்க உயர்குடியே ஆண்டது. இருந்தனர்நவீன ஆலை முதலாளிகள் எதிர்த் தரப்பிலேயே ஆனால்.

ஆகவே பிரபுத்துவ உயிர்குடினருக்கெதிரான மத்தியத்துவப் படுத்தப்பட்ட தேசிய ஐக்கியத்துக்கான முடியரககள் நடத்திய போராட்டங்களிலும் கிராமப்புற விவசாயிகளையும், நகர்ப்புற பிளெபியன் பகுதியினராகிய அடித்தள உழைக்கும் மக்களையும் தொழில், வாணிபத்துறை, நிதியாதிக்க உயர்குடியினர் வழி நடத்திச்சென்று முதலில் வரம்பற்ற எதேச்சதிகார முடியரசையும் பின்னர் நிதியாதிக்க உயர்குடியினரின் முதலாளித்துவ மற்றும் சட்டபூர்வ முடியரசுகளையும் நிறுவுவதற்கான போராட்டங் களிலும் இறங்கிய காலகட்டங்களிலும்தான் — இத்தகு பிரபுத்துவ எதிர்ப்பு முடியரசுகளின் கீழும்தான் உழைப் பாளர்களை உற்பத்திச் சாதனங்களிலிருந்து பிய்த்து உழைபுப்ச் சந்தையில் விசிறியடிக்கும், சொல்லிக் கொள் ளப்படும் புராதனத் திரட்சி நடந்தேறியது. அதை முன் நிபந் தனையாகச் கொண்டு விளைவாகத்தான் நிதிச் செல்வம் ஆலை மூலதனமாக மாறி முதலாளித்துவ சொத்துடமை வடிவமும் உற்பத்தி முறைகளும் தோன்றி வளர்ந்தன. இதுவரை இருந் ததெல்லாம் அதிகபட்சம் முதலாளித்துவத் தன்மையுடைய பட்டறை உற்பதத்தி என்றே கூறமுடியும். வேறெங்கும் நடந் ததைவிட முதன் முதலில் இததாலியில்தான் முதலாளித்துவ தன்மையுடைய படடறை உற்பத்தி பெருகியது; அங்குதான் முதன் முதலில் பண்ணையடிமைகள் விடுதலை பெற்று நகரங் களில் கூலிப்படைகளாக குவிந்தனர்; முதலாளித்துவ தன்மை யையுடைய பட்டறை உற்பத்தி அவர்களை ஈர்த்துக் கொண் டாலும் பின்னர் புதிய கண்டங்களின் கண்டுப்பிடிப்புகள் அடங் கிய உலகச் சந்தையின் புரட்சியில் இத்தாலியின் வீழ்ச்சிக்குப் பின், மீண்டும் ஒட்டு மொத்த மக்கள் திரளினதாக நகரங்களி லிருந்து விரட்டப்பட்டனர்.

14-ம் நூற்றாண்டின் இறுதியில் இங்கிலாந்தில் பண்ணை யடிமைமுறைப்படிபடியாக மறைந்தது. 15-ம் நூற்றாண்டின் பெரும் பகுதிவரை சுதந்திர விவசாயச். சொத்துடமையானர்

களே பெருமளவில் இருந்தனர், பழம்பிற்போக்கு பிரபுத்துவ உயர்குடியினர் முறியடிக்கப்பட்டபோது, குறிப்பாக ரோஜாப் போருக்குப் பின் வரம்பற்ற எதேசதிக்கார முடியரசு நிலைநாட்டப்பட்டபோது, பிரபுக்களின் உள்ளூர் பட்டாளங்கள் கலைக்கப்பட்டு, சுதந்திரமான உழைப்பாளர்களின் பெருந்திரள் உழைப்புச் சந்தையில் விசிறியடிக்கப்பட்டது. அரசனுட அரசனுடனும் நாடாளுமன்றத்துடனும் நடத்திய வெட்கக்கேடான மோதல் காரணமாக வெளியேற்றத் தடுப்புச் சட்டங்களையும் மீறி பலவந்தமாக விவசாயிகளை வெளியேற்றுவதின் மூலம் ஒப்பிடமுடியாத அளவு பாட்டாளி வர்த்தை பெரும் நிலப்பிரபுக்கள் உருவாக்கினர். ரோஜாப் போருக்குப் பின் நிதியாதிக்க உயர்குடியினருடன் சமரசம் செய்து கொண்டு முதலாளித்துவ அம்சங்களைப் பெற்ற நிலச்சுவான்தார்கள், புதிய பிரபுத்துவ உயர்குடியினர் பணத்தின் மதிப்பைப் புரிந்து கொண்டு கம்பள வியாபார பெருக்கத்தின் காரணமாக நூற்றுக்கணக்கான சிறுவிவசாயிகளை நிலங்களிலிருந்து வெளியேற்றி ஆட்டுக்கிடைகளை அமைத்து நில வாடகையை உயர்த்த முற்பட்டனர். இங்கிலாந்தின் பெரும்பகுதி நிலத்தின் பெரிய நிலப்பிரபுத்துவ சொத்துடைமைகளானாக விளங்கிய கத்தோலிக்க சமய சபையின் சொத்துக்களை சமய சீர்த்திருத்தத்துக்குப் பின் அப்போதிருந்த எதேச்சதிகார முடியரசு மிகப் பெரும் அளவில் சூறையாடியது. 16-ம் நூற்றாண்டில் பரந்துபட்ட மக்களை பலவந்தமாக நிலத்திலிருந்து பறிமுதல் செய்யும் போக்குக்கு இச்சூறையாடல் வேகத்தைக் கொடுத்தது. அத்துடன் சமய சபைகளை ஒடுக்கியதானது அவற்றின் உறுப்பினர்களையும் பாட்டாளி வர்க்கத்தோடு விறியடித்தது. எட்டாம் ஹென்றி கத்தோலிக்க சமயச்சபையின் நிலங்களை வரைமுறையின்றியும் பெரும் பண்ணைகளாக கணக்கின்றியும் மீண்டும் மீண்டும் பறிமுதல் செய்து மறுவழங்கீடு செய்ததின் மூலம் 17-ம் நூற்றாண்டு பூராவும் புதிய முதலாளித்துவ நிலச்சுவான்தார்கள் உருவாகினர். சமயசபையின் நிலங்களை அரசு விசுவாசிகளுக்கும் நிலச் சூதாட்டக்காரர்கள் மற்றும் நகர குடிகளுக்கும் சகாய விலையில் விற்றதானது பரம்பரை துணைக் குத்தகைதாரர்களை வெளியேற்றுவதாக அமைந்தது. சட்டப்படி பெற்ற சமய நிலச் சொத்துடைமைகளிலிருந்தும் சிறு விவசாயிகளைப் பறிமுதல் செய்தனர். சட்டமே அவர்களது நிலக் கொள்ளைக்கான கருவியாக அமைந்தது. கட்டாய வீட்டுநில ஒதுக்கீடு சட்டம் போட்டு நிலப்பிரபுக்கள் மக்கள் நிலத்தையும் அதன் மூலம் மக்களையுமே பறிமுதல் செய்ய நாடாளுமன்றக் கொள்ளை வடிவத்தைப் பயன்படுத்தினர்.

பிரபுத்துவத்தை வீழ்த்தி மத்தியப்படுத்தப்பட்ட தேசிய (இன) அரசுகள் வரம்பற்ற எதேச்சதிகார முடியரசுகளாகவும், பின்னர் நிதியாதிக்க உயர்குடியினரின் முதலாளித்துவ முடியரசு மற்றும் சட்ட வழி முடியரசுகளாகவும் நிறுவப்படும் அதே காலத்தில்தான், அதே போக்குடன்தான் விவசாயிகளை நிலத்திலிருந்தும், உழைப்பாளர்களை உற்பத்தி சாதனங்களிலிருந்தும் தனியே பிரித்து உழைப்புச் சந்தையில் விசிறியடிக்கும் வர

லாற்றுப்போக்கும் நடந்தேறியது. முதலாளித்துவ வர்க்கத்தின் புரட்சியானது குறிப்பாக பிரான்சில் அரசியல் வெற்றியை உறுதி செய்த அதே காலத்தில் இங்கிலாந்தில் வாட்டும், ஆர்க் ரைட்டும், கார்ட்ரைட்டும் ஏனையோரும் ஒரு தொழிற் புரட்சியைத் துவக்கி வைத்ததன் மூலம் பொருளாதார சக்திகளின் ஈர்ப்பு மையத்தையே அடியோடு இடம் பெயரச் செய்தனர். தொழிற் புரட்சியானது பெரிய ஆலை முதலாளிகளது வர்க்கத்தையும் அதைவிட எண்ணிக்கையில் கூடுதலான ஆலைத் தொழிலாளர்களது வர்க்கத்தையும் தோற்றுவித்து இரு புதிய சமூக அரசியல் சக்திகளை உருவாக்கியது. முதலாளித்துவ வர்க்கத்தின் செல்வம் நிலச் சொத்துடமை உயர்குடியினரைக் காட்டிலும் பல்கிப் பருகியதோடு, முதலாளித்துவ வர்க்கத்திற்குள்ளேயே நிதித்துறை உயர்குடியினரான வங்கி அதிபர்கள் மேலும் மேலும் அதிக அளவில் பட்டறை அதிபர்கள் மற்றும் புதிய நவீன ஆலை அதிபர்களால் பின்னிலைக்குத் தள்ளப்பட்டனர். எனவே புதிய நிலைமைகளுக்கு ஏற்ப புதிய தொழில்துறை முதலாளித்துவ வர்க்கத்துக்கெதிராகப் பிரயோகிக்கப்படும் நிலச் சொத்துடமை மற்றும் நிதியாதிக்க உயர்குடியினரின் அதிகாரங்களைப் பறிப்பதற்கும் தமது பொருளாதார நலன்களுக்குமான போராட்டத்தை புதிய ஆலை முதலாளிகள் துவங்கினர். 1830 பிரெஞ்சு இரண்டாவது ஜூலைப் புரட்சியின் வீச்சைப் பயன்படுத்திக்கொண்டு ஆலை முதலாளிவர்க்கம் போராட்டத்தின் பிரதான சக்தியாய் விளங்கிய பாட்டாளி வர்க்கத்துக்கும், குட்டி முதலாளிகளுக்கும் துரோகமிழைத்து பிரபுக்கள் மற்றும் நிதியாதிக்க உயர்குடியினரின் அரசியல் ஏகபோகத்தை முறியடித்து நாடாளுமன்றத்தில் அரசியல் அதிகாரத்தையும், அங்கீகாரத்தையும் பெற்றனர். இங்கிலாந்தில் ஆலை முதலாளித்துவ வர்க்கம் முதலும் கடைசியுமாகப் பெற்ற பெரும் வெற்றியாகும் இது.

இதன்பின் ஐரோப்பியக் கண்டத்தில் 1848 பிப்ரவரி மற்றும் மார்ச்சுப் புரட்சிகள் நடந்தன. பிரான்சில் முதலாளித்துவ முடியரசின் பெயரால் பகற்கொள்ளையிட்ட நிதியாதிக்க உயர்குடியின் கேடுகெட்ட ஆட்சியை பிரெஞ்சுப் பாட்டாளி வர்க்கம் 1848 பிப்ரவரியில்—மூன்றாவது பிரெஞ்சுப் புரட்சியில்— ஆலை முதலாளித்துவ வர்க்கத்தோடு சேர்ந்து தூக்கியெறிந்தது. ஆனால் அது அடைந்ததோ பெருமுதலாளிகளின் இரண்டாவது முடியரசை மட்டுமே ஆகும். 1848 ஜூனில் பாரிஸ் தொழிலாளர்களுடைய எழுச்சி நசுக்கப்பட்டது. பின் தங்கிய விவசாயிகளின் பிரதிநிதியாக குடியரசுத் தலைவர் தேர்தலில் வெற்றிபெற்ற 18-ம் லூயி போனபார்ட் சிறிது காலத்திலேயே 1851 இறுதியில்—எதிர்ப்புரட்சி ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தி முதலாளித்துவ நாடாளுமன்ற ஆட்சிமுறையைத் தூக்கியெறிந்து இரண்டாவது பேரரசை நிறுவினான். 1848 ஏப்ரலில் இங்கிலாந்து தொழிலாளர்களின் சார்ட்டிஸ்ட் இயக்கம் தோல்வியுற்றது. இத்தாலியிலும் ஹங்கேரியிலும், தெற்கு ஜெர்மனியிலும் 1849-ல் பாட்டாளி வர்க்கம் முறியடிக்கப்பட்டு பெரு

முதலாளிகள் வர்க்கம் நிலவுடைமை ஆதிக்க உயர்குடியுடன் சமரசம் செய்து கொண்டது. ஆகவே தொழில் வாணிபத்துறை நிதியாதிக்க உயர்குடியும் சரி, ஆலை முதலாளிகளும் சரி நிலவுடைமை உயர்குடியை அரசியல் அதிகாரத்திலிருந்து அறவே அகற்றி முற்றாளுமை பெறாத நிலையில், மற்றொரு பகைமை வர்க்கமாகிய தொழிலாளர் வர்க்கத்தை போட்டியாளனாக களத்தில் கண்டனர். எனவே தான் 1870-ல் நடந்த முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியில் 18-ம் லூயி போனபார்ட்டின் கொடுங்கோலாட்சி தூக்கியெறியப்பட்டு, நிலப்பிரபுத்துவத்தின் மிச்ச சொச்சங்களை பிரான்சு உதறியெறிந்த சில மாதங்களிலேயே பாரிஸ் பாட்டாளி வர்க்கம் புரட்சிகர எழுச்சி மூலம் பாரில் கம்யூனை நிறுவியது.

நிதிச்செல்வம் மூலதனமாக மாறவும் முதலாளித்துவ உற்பத்திமுறை துவங்கவும் உழைப்பாளர்களை உற்பத்திச் சாதனங்களிலிருந்து பிரிப்பது முன்னிபந்தனையாகக் கொண்டுள்ளது என்கிறபோது, ஏதோ சுதந்திரமான கூலி உழைப்பாளர்களை ஒரு புள்ளியில் கொண்டு வந்து குவித்த பின்னர் திடீரென முதலாளித்துவ உற்பத்திமுறை துவங்குவதாகப் பொருளாகாது. வரலாற்றில் பணம் ஜீவனுள்ள முறையில், எளிமையாகவும் யாவரும் அறிந்த வகையிலுமே மூலதனமாகிறது. சான்றாக நூற்பையும். நெய்தலையும் கிராமப்புற துணை வேலையாகக் கொண்டுள்ள சிலரை வியாபாரிகள் நூற்பதிலும் நெய்வதிலும் அமர்த்தி துணைவேலையை பிரதான வேலையாக்குகின்றனர். அதன்பின் கூலித் தொழிலாளியைப் போல அவர்களை வியாபாரியின் கட்டுப்பாட்டிலும் ஆளுமையிலும் கொண்டு வருகிறார்கள். பின்னர் அவர்களை வீடுகளில் இருந்து வெளியேற்றி ஒரு தொழிற்கூடத்தில் சேர்க்கிறார்கள். இந்த எளிய போக்கில் வியாபாரி மூலப்பொருளோ, கருவிகளோ, நூற்பவர் அல்லது நெய்பவர் உயிர் ஓம்புதலுக்கான சாதனங்களோ தயாரிப்பதில்லை. அவன் செய்வதெல்லாம் விற்பனைக்காக வியாபாரியைச் சார்ந்து நிற்கும்படிச் செய்து பின்னர் அவனுக்காகவே உற்பத்தி செய்யுமாறு தூண்டுவதுதான் ஆதி முதலில் உற்பத்திப் பொருளை வாங்குவதன் மூலம் உழைப்பை வாங்கினான்; பரிமாற்ற மதிப்புடைய பொருள் உற்பத்தி செய்வதோடு வரம்பிட்டுக் கொண்டபின் நேரடியாக பரிமாற்ற பொருட்களை உற்பத்தி செய்யவும் அப்புறம் வாழும் பொருட்டு அவர்களது உழைப்பையே முழுதும் பணத்திற்கு பரிமாற்றம் செய்யும்படியும் வேண்டியிருந்தது. இவ்வாறு அவர்கள் வியாபாரியின் ஆதிக்கத்தின் கீழ் வந்தனர். இறுதியில் விற்பதாகச் செய்யும் கற்பனை கூட மறைந்து அவர்களது உழைப்புச் சக்தியை வியாபாரி வாங்குகிறான். உற்பத்திப் பொருட்களையும் கருவிகளையும் கூட விலையைக் குறைக்கும் பொருட்டு பிடுங்கிக் கொள்கிறான். இவ்வாறு தான் ஆதி முதலில் வரலாற்று பூர்வமாக பழைய உற்பத்தி முறைக்கு அக்கம் பக்கமாகவே உள்ளூர் அடிப்படையில் உற்பத்தித் தொழில்கள் (தொழிற்சாலைகள்

அல்ல) தோன்றுகின்றன. ஏற்றுமதிக்காக பெருவீத உற்பத்தி தேவையான இடங்களில் உற்பத்தி தொழில்கள் எழுகின்றன. ஆரம்பத்தில் நகரக் கைவினையிலிருந்து அல்ல, மாறாக கிராமப் புற துணைவேலைகளான நூற்பது நெய்வது போன்ற கைவினை, திறன், நுட்பம், பயிற்சி முறையிலான தொழில்களில் இவை துவங்குகின்றன. ஏற்றுமதிச் சந்தையை முக்கியமார்க் கொண்டிருந்ததால் இயல்பாகவே கப்பல் கட்டுதலும் இணைந் தது. அதன்பின் கண்ணாடி, உலோக ஆலைகள், மர அறுப்பு நிலையம் இன்ன பிறவும் வளர்ந்தன. கிராமங்களில் குத்தகை விவசாயத்தின் துவக்கம் கூலி உழைப்பாளர்களைத் தோற்று வித்ததோடு இப்பகுதிகளில் போட்டியும் இல்லையாதலால் நவீன முதலாளித்துவ தன்மையுடைய தொழில்கள் அங்கிருந்தே துவங்கின. அதன்பின் பண்ணையடிமை முறையின் சிதைவு காரணமாக படிப்படியாக எல்லாத் துறைகளிலும் கிளைகளிலும் மூலதனம் மற்றும் முதலாளித்துவ தன்மையுடைய தொழில்கள் ஆகியன முன்னேறின.

முதலாளித்துவத்துக்கு முந்திய உற்பத்தி முறை மற்றும் முதலாளித்துவ வளர்ச்சிப் போக்கினுடைய அடிப்படைகளான உற்பத்தியின் நோக்கம், சொத்துடமை வடிவங்கள் அவற்றுக்குப் பொருத்தமான உற்பத்தி உறவுகளையும் அவை சிதைவுறுவதற்கான அடிப்படை முரண்பாடுகளையும், பிரதான வர்க்க முரண்பாடுகளையும் அவற்றுக்கு எதிராக முதலாளித்துவ உற்பத்திமுறை மற்றும் பொருளா தாரம் ஆகியவை தோன்றி வளர்வதற்கான முன்நிபந்தனை களையும் மேற்கு ஐரோப்பாவில் அது நடந்தேறியவிதம் குறித்தும் தொகுத்தளித்தோம்.

முதலாளித்துவத்துக்கு முந்திய எல்லா சொத்துடமை வடிவங்கள் மற்றும் சமூகங்களின் உற்பத்திமுறை மற்றும் பொருளாதார வளர்ச்சிப் போக்கின் அடிப்படை என்ன வென்றால் இருப்பதை பராமரித்துக் கொள்வது; அப்படியே நிலை நிறுத்திக் கொள்வது, அப்படியே உற்பத்தியாளர்களை உற்பத்திக்கான புறவயமான சூழ்நிலைகளால், அத்துடன் அப்படியே மறு உற்பத்தி செய்வது என்பதுதான். சுருங்கக் கூறின் எளிய வெறும் சாதாரண மறுஉற்பத்தி என்பதே உற்பத்திக்குத் தேவையான புறவயமான நிலைமைகளைக் குறைக்கும், அழிக்கும் போக்காகும். மற்றொன்று அடிமை முறை பண்ணை அடிமை முறை ஆகியவை மிகமிகச் செயலூக்க மிக்க உற்பத்தி சக்திகளான சமுதாயத்தின் பெரும்பான்மையான உழைக்கும் மக்களை சொத்துடமையாக்குகிறது; அல்லது நிலத்தோடு பிணைத்து சமூக உரிமைகளைப் பறித்துச் சடத்தன்மை வாய்ந்த இயற்கை நிலைமைகளில் ஒன்றாக வைக்கிறது. இந்த அடிப்படை முரண்பாடே முதலில் அடிமைச் சமுதாயத்தில் ஆண்டை களுக்கும் அடிமைகளுக்கும் இடையிலான பிரதான முரண் பாடாக வெளிப்படவும், பின்னர் நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் நிலப்பிரபுக்களுக்கும் பண்ணை அடிமைகளுக்கும் இடையேயான பிரதான முரண்பாடாக வெளிப்படவும், குறிப்பிட்ட காலம்

நிலவியபின் அவை மறைவதற்கும் அடிப்படையாக அமைந்தது. நிலப்பிரபுத்துவத்துவ முறையின் இந்த அடிப்படை முரண்பாடும், அதன் வெளிப்பாடான நிலப்பிரபுக்களுக்கும் பண்ணையடிமைகளுக்கும் இடையிலான பிரதான முரண்பாடும் கூர்மையானதால் அவை முற்றாகத் தீராமலிருக்கும்போதே நிலப்பிரபுத்துவத்தின் எளிய, வெறும் சாதாரண மறு உற்பத்திக்கும், முதலாளித்துவத்தின் விரிவாக்கப்பட்ட மறுஉற்பத்திக்கும் இடையிலான புதிய அடிப்படை முரண்பாடு தோன்றியது. அதன் விளைவாக நிலப்பிரபுத்துவத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் இடையிலான—அதாவது இரு கட்டமைவுகளுக்கு இடையிலானது என்கிற முறையில்—பிரதான முரண்பாடு வெளிப்பட்டு, பண்ணை அடிமைகளுக்கும் நிலப்பிரபுக்களுக்கும் இடையிலான இதுவரை நிலவிய பிரதான முரண்பாடு இரண்டாம்பட்சமாகியது. எனவே நிலப்பிரபுத்துவத்துக்கும்—முதலாளித்துவத்துக்கும் இடையிலான முரண்பாடே மற்றெல்லா முரண்பாடுகளையும் தீர்மானிப்பது அல்லது செல்வாக்கு செலுத்துவதாக விளங்குவதால் அதன் தீர்வே முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் மையக் கடமையானது.

ஐரோப்பாவில்தான் நிலப்பிரபுத்துவத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் இடையிலான பிரதான முரண்பாடு முற்றும் முழுதுமாக தீர்க்கப்பட்டு முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி இறுதிவரை முன்னெடுத்துச் செல்லப்பட்டு நிலப்பிரபுத்துவம் வேரோடு களையப்பட்டது. ஆனால் எல்லா நாடுகளிலும் ஒரே பாதையில் ஒரே சமயத்தில் அது நடந்தேறவில்லை. பிரபுத்துவத்தைத் தூக்கியெறிவதில் முக்கிய கருவியாக விளங்கிய நிதியாதிக்க உயர்குடியும், எல்லாவகை முடியரசும் வேறுபாடின்றி புரட்சிக்கு எதிராகத் திரும்பின; புரட்சியின் கூட்டாளிகளையே வென்றடக்கி பறிமுதல் செய்யத் துவங்கின. இறுதியில் நியாதிக்க உயர்குடியையும் அனைத்துவகை முடியரசுகளையும் தூக்கியெறிவதில் தலைமைப் பாத்திரம் ஆற்றிய ஆலை முதலாளித்துவ வர்க்கமேகூட புரட்சியில் பிரதான பாத்திரமாற்றிய பாட்டாளிவர்க்கத்துக்கு துரோகமிழைத்து புரட்சிக்கு எதிராகத் திரும்பியது. பிரபுத்துவ மற்றும் நிதியாதிக்க உயர்குடி மற்றும் முடியரசுகளிடமிருந்து ஆலை முதலாளித்துவ வர்க்கம் முற்றாக அரசியல் அதிகாரத்தைப் பறித்தெடுப்பதற்கு முன்பே அரசியல் அரங்கில் அதைவிட எண்ணிக்கையிலும், உறுதியிலும் பலமிக்க போட்டியாளனாய் பாட்டாளி வர்க்கம் இருக்கக் கண்டது. எனவே எங்கெல்லாம் அதற்கு முன்பு முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி இறுதிவரை முன்னெடுத்துச் செல்லப்பட்டதோ அங்கெல்லாம் மட்டும் நிலப்பிரபுத்துவம் வேரோடு புரட்சிகரமான முறையில் களையப்பட்டது; நிலச்சொத்துடைமை உறவுகளிலும் உற்பத்தி முறையிலும் மட்டுமல்ல மேல் கட்டுமானத்திலும் நிலப்பிரபுத்துவத்திடமிருந்து முறித்துக் கொண்டது.

முதலாளித்துவ வர்க்கம் நிலப்பிரபுத்துவத்துடன் சமரசம் செய்து கொள்வது, புரட்சியை இறுதிவரை நடத்திச் செல்லத் தவறுவது ஆகியவை முதலாளித்துவ சமுதாயத்தின் பரிணாமு

இப்புதிய பாத்திரத்தை 'அமெரிக்க பொது மறுபங்கீடு' நாற்பதுகளின் (1840) வாடகை எதிர்ப்பு இயக்கம், 'ஹோம்ஸ்டெட்டு சட்டம்' இன்னும்பிற ஆகியவற்றால் ஆற்றப்பட்டன''. (லெனின், 1905-1907 முதல் ரஷியப் புரட்சியில் சமூக ஜனநாயகத்தின் விவசாயத் திட்டம், ஆங்., மாஸ்கோ வெளியீடு. பக்கம் 58).

மேலும் இங்கிலாந்தில் நடந்த மாறுதல்களைப் பற்றி பின்வருமாறு மார்ச்சு விளக்குகிறார்: ஏழாம் ஹென்றிக்கு பிறகு முதலாளித்துவ உற்பத்தி வேறெங்கும் இதே அளவுக்கு விவசாயத்தில் மரபுவழி உறவுகளை ஈவிரக்கமற்ற முறையில் அடித்துக் கொல்லவில்லை; அதன் நிலைமைகளை, இவ்வளவு போதிய அளவுக்கும் வடிவமைத்து தங்களுக்கு கீழ்படியும்படி மாற்றவில்லை இங்கிலாந்து இந்தவகையில் உலகிலேயே மிகவும் புரட்சிகரமான நாடாகும் கிராமத்தின் அந்தஸ்து மட்டுமல்ல கிராமங்களையே கூட, விவசாய மக்களது படிக்கவழக்கங்களை மட்டுமல்ல ஆனால் இந்த மக்களையேக் கூட பழம்பண்டு பொருளாதார மையங்களை மட்டுமல்ல பொருளாதாரத்தையே கூடஎன்றுஎல்லா வரலாற்றுப் பூர்வமாக வரித்துக்கொண்டஉறவுகளும் விவசாயத்தின் முதலாளித்துவத்திற்கு முரண்பாடான அல்லது அதன் நிலைமைகளுக்குப் பொருத்தமற்றதாக இருக்கும் இடங்களில் எல்லாம் ஈவிரக்கமின்றி அடித்துச் செல்லப்பட்டன. ஆனால் ஜெர்மனியில் இதற்கு மாறாக மரபுவழியிலான பொதுநில உறவுகள், பொருளாதார மையங்களின் அத்தஸ்துகள் மற்றும் மக்கள் தொகையின் குறிப்பான கலவையான சேர்க்கை ஆகியவற்றால் பொருளாதார உறவுகள் தீர்மானிக்கப்படுவதாக நிலவியது. இங்கிலாந்தில் 15-ம் நூற்றாண்டிலிருந்தே மூலதனம் விவசாயத்தினுடைய வரலாற்றுநிலைமைகளை முற்போக்கான முறையில் தோற்றுவித்து வந்திருந்தது. ஐரோப்பிய கண்டத்தில் காணாத அளவுக்கு 'எஸ்டேட்டுகள் சுத்தம் செய்யப்பட்டன. இதன் பொருள் சிறிதும் பொருட்படுத்தாது உள்ளூர் மக்கள் விரட்டியடிக்கப்பட்டார்கள்; நிலவிய கிராமங்கள் தரைமட்டமாக்கப்பட்டன; பண்ணைக் கட்டிடங்கள் தகர்க்கப்பட்டன. விவசாய வகைகள் ஒரே தாக்குதலில் சான்றாக கூறுவதென்றால், பயிரிடும் நிலங்கள் மேய்ச்சல் நிலங்களாக தலைகீழாகப் புரட்டிப் போடப்பட்டன. உற்பத்தி நிலைமைகள் எல்லாம் மரபு வழியில் பெற்றுக் கொண்டவற்றுக்குப் பதில் மூலதனத்தின் மிகவும் இலாபகரமான முதலீட்டின் சூழ்நிலைமைகளின் சிறான, தேவையான வடிவத்தில் வரலாற்றுப் பூர்வமாக வடிவமைக்கப்பட்டன. இந்த அளவுக்கு நிலச் சொத்துடமை இல்லை எனலாம். பணம் ஒன்றும் மட்டுமே குறியாக இருப்பதால் அது மூலதனத்தை பண்ணையாரை சுதந்திரமாக நிர்வகிக்க அனுமதிக்கிறது. ஆங்கிலேயே நிலவுடமைகள் மட்டுமே நவீனகால நிலச் சொத்துடமையில் அதாவது முதலாளித்துவ உற்பத்தியில் திருத்தியமைக்கப்பட்ட நிலச்சொத்துடமையாக போதிய அளவுக்கு முற்றாக வளர்க்கப்பட்டது ஆங்கிலேய நிலைமைகளின் கோட்பாடுதான்

முதலாளித்துவ உற்பத்திமுறைக்கு வரைவிலக்கணமாகத் திகழ்கிறது. (மார்ச்சு, முதலாளித்துவத்திற்கு முந்திய சமூகப் பொருளாதாரப் படிவங்கள், பக் 150—151).

ஜெர்மானிய, ஆங்கிலேய, அமெரிக்க உடமைகளில் விவசாயத்தில் முதலாளித்துவ உற்பத்திமுறையின் வளர்ச்சிப் போக்கைத் தொகுத்தளித்த லெனின் ஜெர்மானிய, பிரஷ்யன் ஜங்கர் என்னும் சீர்திருத்தமுறை ஒருபுறமிருக்க புரட்சிகரமான ஆங்கிலேய மற்றும் அமெரிக்க முறைகளிலேயே உள்ள அடிப்படையான வேறுபாடான தன்மைகளைப் பகுத்தாய்ந்தார். வெவ்வேறு வகையான முதலாளித்துவ புரட்சிகளையும ஆய்ந்தறிந்தார். ''ஒட்டு மொத்த சமுதாயப் பொருளாதாரமே ஒரு முதலாளித்துவத் தன்மையுடையதாக இருக்கும்போது மத்திய காலத் தன்மைக்கு எதிராகத் திருத்தப்பட்ட ஒவ்வொரு விவசாயிகளின் புரட்சியும் ஒரு முதலாளித்துவப் புரட்சியாகவே இருக்கிறது ஆனால் ஒவ்வொரு முதலாளித்துவப் புரட்சியும் ஒரு விவசாயிகளின புரட்சி அல்ல. சான்றாக முழுக்கவும் முதலாளித்துவ முறைகளில் விவசாயம் ஸ்தாபனமாக திரட்டப்பட்டிருக்கும் ஒரு நாட்டில் முதலாளித்துவ விவசாயிகள் கூலி உழைப்பாளர்களின் உதவியோடு நிலத்தின் மீதான தனிச் சொத்துடமையை ஒழிப்பதன் மூலம் ஒரு விவசாயப் புரட்சியை நிறைவேற்றினால் அது ஒரு முதலாளித்துவப் புரட்சியாகும். ஆனால் எந்த வகையிலும் ஒரு விவசாயிகளின் புரட்சி ஆகாது. அல்லது முதலாளித்துவத்தை ஒழிக்காமல் முதலாளித்துவப் பொருளாதாரத்தோடு பொதுவாக விவசாயக் கட்டமைவு பின்னிப் பிணைந்து ஐய்க்கியப்பட்டிருக்கும் ஒரு நாட்டில் விவசாயக்கட்டமைவை ஒழிக்கமுடியாதுஎன்கிறநிலைமையில் அந்நாட்டில் ஒருபுரட்சி நடந்து அது ஆலை முதலாளிகளை எதேச்சிகார அதிகார வர்க்கத்தினிடத்தில் அமர்த்தினால் அது ஒரு முதலாளித்துவப் புரட்சியாகும்; ஆனால் எந்த வகையிலும் ஒரு விவசாயிகள புரட்சி அல்ல. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், ஒரு விவசாயி வர்க்கம் இன்றி ஒரு முதலாளித்துவ நாடு இருக்க முடியும், மேலும் அமபாதியான ஒரு நாட்டில் ஒரு விவசாய வாக்கமின்றி ஒரு முதலாளித்துவப் புரட்சி நடக்க முடியும். கணிசமான அளவு விவசாய மக்களுள்ள ஒரு நாட்டில் ஒரு முதலாளித்துவப் புரடசி நடக்கலாம். இன்னும் அது ஒரு விவசாயிகளின் புரடசி ஆகாது; அதாவது மேலும் சொல்வதானால், அந்தப் புரட்சியானது விவசாய உறவுகளை விவசாயிகளைத் தனிச்சிறப்பாக பாதிக்குமாறு புரட்சியயமாக்குவதில்லை; புரட்சியை உருவாக்குவதில் மிகவும் செயலூக்கம் மிகக ஒரு சமுதாய சக்தி என்ற முறையில் விவசாயிகளை முன்னணிக்கு கொண்டு வருவதில்லை. அதன் விளைவாகத்தான் 'முதலாளித்துவப் புரட்சி' பற்றிய பொதுவான மார்க்சீய கருத்தோட்டம், முதலாளித்துவம் எழுச்சியுறும் ஒரு நாட்டில் நடக்கும் விவசாயிகளின் எந்தப் புரட்சிக்கும் நிச்சயமாகப் பொருந்தக்கூடிய குறிப்பான வரைவிலக்கணங்களை கொண்டிருக்கிறது; ஆனால் அந்தக் கருத்தோட்டம் ஒரு குறிப்பிட்ட நாட்டின் ஒரு முதலாளித்துவ புரட்சி (யதார்த்த

மான தேவை என்ற பொருளில்) முழுமையான வெற்றியடையும் பொருட்டு ஒரு விவசாயிகளின் புரட்சியாக வேண்டுமா இல்லையா என்பதைப் பற்றி எதுவும்சொல்வதில்லை''(லெனின், மேற்கூறியது, பக்கம் 124 125)

திரிபுவாதிகளான மென்ஷ்விக்குகளின் பொதுப்படையான, மேலோட்டமான வரட்டுச் சூத்திரமாகிய முதலாளித்துவப் புரட்சி பற்றிய கருத்தோட்டத்தின்படி அவர்கள் முதலாளித்துவ வர்க்கத்தின் எதிர்ப்புரட்சித் தன்மையின் மூலத்தையும் புரட்சியை இறுதி வெற்றிக்கு இட்டுச் செல்ல எந்த வர்க்கம் தகுதியுடையது என்பதனையும் தீர்மானிப்பதில் தவறிழைத்ததால் முதலாளித்துவப் புரட்சியுல் பிரதான பாத்திரம் ஆற்றுவதாகக் கருதிய முதலாளித்துவ வர்க்கத்தின் தொங்கு சதையாக பாட்டாளி வர்க்கம் செயல்படவேண்டுமென்று கருதினர். அதற்கு மாறாக பல்வேறு வகையான முதலாளித்துவப் புரட்சியில் ஒன்றாக விவசாயிகளின் புரட்சியைத் தனிமைப் படுத்தி, குறிப்பறிந்து பாட்டாளிவர்க்கத்தின் மற்றும் விவசாயிகளின் புரட்சிகர ஜனநாயக சர்வாதிகாரமாக விவசாயிகளின் புரட்சியை விவரித்து போல்ஷ்விக் போர்த்தந்திரம் முன்வைக்கப் பட்டது. அன்றைய ருஷ்யாவில் வளர்ந்து கொண்டிருந்த விவசாயத்தில் முதலாளித்துவத்தின் வளர்ச்சிப் போக்கிலுள்ள இரு சாத்தியப்பாடான பாதைகளையும் அவற்றின்பால் பாட்டாளி வர்க்கம் உள்பட பல்வேறு வர்க்கங்களின் அரசியல் பிரதிநிதிகளின் நிலைப்பாடுகளையும் பருண்மையாக ஆய்ந்தறிந்ததின் அடிப்படையிலேயே இப்போர்த்தந்திரம் வகுக்கப்பட்டது.

பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தி மற்றும் முதலாளித்துவத்தின் வளர்ச்சி நிச்சயம் தவிர்க்க முடியாமல் முதலாளித்துவத்துக்கு முந்திய உற்பத்தி உறவுகளின் மிச்சசொச்சங்களையும், அவற்றின் பிரதான பலம் பொருந்திய உறைவிடமாகிய நிலப்பிரபுத்துவ எஸ்டேட்டுகளையும் ஒழித்துக் கட்டும். இந்த வகையில் சாராம்சத்தில் முதலாளித்துவ வளர்ச்சிப் போக்கு என்ற ஒரே ஒரு பாதை மட்டுமே இருப்பினும், அது இரண்டு வடிவங்களை எடுக்கும் சாத்தியப்பாடு உள்ளது. ''நிலப்பிரபுத்துவப் பொருளாதாரம் (முதலாளித்துவப் பொருளாதாரமாக) மாற்றப்படுவதன் விளைவாகவோ, அதாவது சீர்திருத்தத்தின் மூலமாகவோ அல்லது புரட்சியின் மூலமாகவோ நிலப்பிரபுத்துவத் தொடர்ச்சிகள் வீழ்ச்சியுறலாம். முதலாளித்துவ வளர்ச்சியானது பெரு நிலப்பிரபுத்துவ பொருளாதாரத்தை தலைமையாக கொண்டு மேற்செல்லலாம் இதன்படி படிப்படியாகவும் மேலும் மேலும் முதலாளித்துவப் பொருளாதாரம் வளர்ச்சியுறும் நிலப்பிரபுத்துவச் சுரண்டல் முறைகளுக்குப் பதிலாக அவற்றினிடத்தில் முதலாளித்துவச் சுரண்டல் முறைகள் படிப்படியாக இடம்பெறும். சிறு உழவர் பொருளாதாரத்தைக் கொண்டும் முதலாளித்துவ வளர்ச்சி மேற்செல்லலாம். இது ஒரு புரட்சிக்கரமான முறையில்

''வேண்டாத தசைப் பிண்டமாக'' நிலப்பிரபுத்துவ எஸ்டேட்டுகளை சமுதாய உடலிலிருந்து வெட்டி நீக்கிவிட்டு அவை இல்லாமலே முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையில் சுதந்திரமாக முன்னேறுவதாகும்.

''முதலாளித்துவ வளர்ச்சிக்கு சாத்தியமான இவ்விரு பாதைகளை முறையே பிரஷ்யப் பாதை என்றும் அமெரிக்கப் பாதை என்றும் அழைக்கலாம் முதலாவது பாதையில் பிரபுத்துவ நிலப்பிரபுக்களின் பொருளாதாரம் மெதுவாக முதலாளித்துவ ஜங்கர் நிலப்பிரபு பொருளாதாரமாக பரிணாமம் அடைகிறது. இதனால் விவசாயிகள் பல பத்தாண்டுகளுக்கு சொல்லொணாப் பறிமுதல் மற்றும் அடிமைத் தனத்தில் உழல வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்; அதே வேளையில் மிகச் சிறுபான்மையினரான 'க்ராஸ் பாயர்ன்'கள் (பெரிய விவசாயிகள்) உருவாகிறார்கள். இரண்டாவது பாதையில் பிரபுத்துவ நிலப்பிரபுக்களின் பொருளாதாரமே கிடையாது; அல்லது புரட்சியின் மூலம் இது ஒழிக்கப்படுகிறது. பிரபுத்துவ எஸ்டேட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டு துண்டாடப்படுகின்றன. இந்தப் பாதையில் விவசாயிகள் மேலாதிக்கம் செலுத்துகின்றனர். வேளாண்மையின் ஒரே ஏஜெண்டாக இவர்கள் விளங்குகின்றனர்; விவசாயிகளே முதலாளித்துவ விவசாயிகளாக பரிணமிக்கின்றனர். முதலாவதாக சொல்லப்பட்ட பரிணாமத்தின் பிரதானஉள்ளடக்கம்என்னவென்றால் பிரபுத்துவ அடிமைப்பிணைப்பானது பிரபுத்துவ நிலப்பிரபுக்களின்—ஜங்கர்களின்—நிலத்தின் மீது நடக்கின்ற நிர்பந்த (அடிமைத்தன)மாகவும் முதலாளித்துவச் சுரண்டலாகவும் மாற்றப்படுவதாகும். இரண்டாவதாக சொல்லப்பட்ட பரிணாமத்தின் பிரதானப் பின்னணி தந்தை வழியிலான விவசாயி முதலாளித்துவ விவசாயியாக மாற்றப்படுவதாகும்.

''ருஷ்யாவினுடைய பொருளாதார வளர்ச்சியின் வரலாற்றில் பரிணாமத்தின் இவ்விரு வகைகளும் தெளிவாகக் காணப்படுகின்றன. பண்ணையடிமைத் தனத்தினுடைய வீழ்ச்சியையே எடுத்துக் கொள்வோம் சீர்திருத்தத்தை நிறைவேற்றும் முறை பற்றி நிலப்பிரபுக்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையில் ஒரு போராட்டம் நடந்தது. இருசாராருமே முதலாளித்துவப் பொருளாதார வளர்ச்சிக்கான சூழ்நிலைகளை உருவாக்குவதற்காகவே (இதைப்பற்றி உணராமலே) நின்றனர். ஆனால் நிலப்பிரபுக்களோ, நிலப்பிரபுப் பொருளாதாரம், அவர்களது வருவாய் மற்றும் நிலப்பிரபு (அடிமைத்தன) முறைகளிலான சுரண்டல் ஆகியவைகளை அதிகபட்சப் பாதுகாத்துக் கொள்ளத்தக்கதான வளர்ச்சியை விரும்பினர். வேளாண்மை வளர்ச்சியினுடைய இப்போதைய மட்டத்திலேயே தம்முடைய அதிக பட்ச செழுமைக்கு உத்திரவாதம் செய்யத் தக்கதான வளர்ச்சியை விவசாயிகள் விரும்பினர்; நிலப்பிரபுக்களின் எஸ்டேட்டுகளை ஒழிப்பது, பண்ணையடிமை மற்றும் அடிமைத்தன முறைகளிலான சுரண்டல் அனைத்தையும்

ஒழிப்பது, சுதந்திரமான விவசாயி நிலச் சொத்துடைமையது விரிவு படுத்துவது ஆகியவற்றுக்காக இவர்கள் நிற்கின்றனர். நிலப் பிரபுக்களுடைய முறையில் நடத்தப்படுகின்ற விவசாயச் சீர்திருத்தத்தைக் காட்டிலும் இரண்டாவது முறையின் கீழ் முதலாளித்துவத்தின் வளர்ச்சி பரந்ததாகவும் மிகவும் விரைவானதாகவும் இருக்கும் என்பதைக் கூறவே தேவையில்லை. மார்க்சியத்தின் எதிரிகளான நரோட்னிக்குளைப் போன்ற கேலிக்குரிய மார்க்சியவாதிகள் மட்டுமே 1861ல் விவசாயிகள் நிலத்திலிருந்து பிரிக்கப்பட்டதே முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கு உத்திரவாதம் செய்து விட்டதாக சித்தரித்துக்காட்ட முயற்சிக்கவும் அவ்வாறு நம்பவும் முடியும். இதற்கு மாறாக இது **அடிமைத் தனத்தை** அதாவது அரை பண்ணையடிமை விவசாயி விவசாயம் மற்றும் உழைப்பு வாடகையை—கார்வி பொருளாதாரத்தை — உத்திரவாதம் செய்வதாகவே விளங்கியது. அப்படிப்பட்ட உத்தரவாதமாகவே அது மாறியது. இது ருஷ்ய வேளாண்மையில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி மற்றும் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிகளை அளவு கடந்தவாறு தடை செய்தது. (லெனின், மேற் கூறியது, பக்கம் 25—26)

பண்ணையடிமை இல்லாத இடங்களில் ருஷ்யாவில் சுதந்திரமான விவசாயிகள் மட்டுமே பிரதானமாக விவசாயம் செய்த இடங்களில் பண்ணையடிமை முறையின் மிச்சசொச்சங்கள் நீடித்த மத்திய மாநிலங்களைக் காட்டிலும் முதலாளித்து உற்பத்தி முறை மிகவும் வேகமாக இருந்தது. ருஷ்யாவின் விவசாய மத்திய மற்றும் விவசாய எல்லைப்புற பிரதேசகளில் ஒன்று அல்லது மற்றொரு வகையிலான பரிணாம வளர்ச்சி மேலாண்மை பெற்றிருந்த அதே வேளையில் நிலப் பிரபுத்துவ மற்றும் விவசாயிகளின் விவசாயம் அக்கம் பக்கமாக இருந்த எல்லாப் பகுதிகளிலும் இரண்டு வகையான பரிணாம வளர்ச்சியும் தெளிவாக இருந்தன. சுதந்திரமான கூலி உழைப்பில் உழைப்பு வாடகை முறையையும், தீவிர சாகுபடி முறையால் பழைய சாகுபடி முறையையும் பெரும்பண்ணைகளில் அபிவிருத்தி செய்யப்பட்ட இயந்திரங்களால் விவசாயிகளின் காலாவதியான கருவிகளையும் படிப்படியாக மாற்றுவதின் மூலம் நிலப்பிரபுத்துவப் பொருளாதாரம் முதலாளித்துவ வழியில் பரிணமிக்கிறது. விவசாயிகளின் விவசாயமும் முதலாளித்துவ வழியில் பரிணாம வளர்ச்சியுற்று கிராமப்புற முதலாளிகளாகவும், கிராமப்புற பாட்டாளிகளாகவும் வளர்ந்து சாதகமான நிலைமைகளில் முதலாளித்துவ விவசாயத்தின் பகைமையான வர்க்கங்களாக விவசாயிகளிடையே வேற்றுமை தோன்றுகிறது. எனவே இருவடிவங்களிலான பரிணாம வளர்ச்சிப் போக்குகளுமே முதலாளித்துவத் தன்மையுடையதாகும். இவ்விரு வடிவங்களிலான பரிணாம வளர்ச்சிப் போக்கு 1861 சீர்த்திருத்தத்திற்குப் பிந்திய ருசிய வரலாற்றில் விவசாயிகளுக்கும் நிலப்பிரபுக்களுக்கும் இடையிலான மோதலாக இழையோடி ஒன்று அல்லது மற்றொரு வகையிலான முதலாளித்துவ விவசாய பரிணாம வளர்ச்சிக்கான

போராட்டம் என்கிற முறையில் ருசியப் புரட்சியின் மிக முக்கியமான பொருளாதார அடிப்படையாக அமைந்தன.

எனவே ருசியப் புரட்சியின் முன்பு இந்த இந்தப் பொருளாதார அடிப்படை அதன் இரு முக்கிய வழிகளிலான வளர்ச்சியையும் விளைவையும் யதார்த்தமான சாத்தியப்பாடாகக் கொண்டிருந்தது. ஒன்று, பண்ணை அடிமை முறையின் ஆயிரக்கணக்கான கயிறுகளால் அப்படியே கட்டப்பட்டு உள்ள பழைய நிலப்பிரபு பொருளாதாரத்தை தக்கவைத்து கொள்வது, நீடிப்பது; அதே சமயம் பரிசுத்தமான முதலாளித்துவ 'ஜங்கர்' பொருளாதாரமாக மெதுவாக மாற்றுவது; இதில் உழைப்புச் சேவை முறையிலிருந்து முதலாளித்துவத்திற்கு இறுதியாக மாறிச் செல்லும் அடிப்படை பிரபுத்துவ நிலப்பிரபு பொருளாதாரத்தின் உள் குணாம்ச மாறுதல் மூலம் நடைபெறுகிறது; அரசின் முழுவிவசாய அமைப்பும் முதலாளித்துவமாக மாறுவதும் ஒரு நீண்ட நெடுங்காலத்துக்கு நிலப்பிரபுத்துவக்குணாம்சங்களை கொண்டிருக்கும். அல்லது புரட்சியால் பழைய நிலப்பிரபு பொருளாதாரத்தை உடைத்தெறிந்து அதன்மூலம் பண்ணை அடிமை முறையில் எல்லா மிச்ச சொச்சங்களையும், —முதலில் பெரும் நிலச்சொத்துடமையை ஒழிப்பது, பின்னர் விவசாயிகளுக்காக நிலப்பிரபுக்களது எஸ்டேட்டுகளைப் பறிமுதல் செய்வது என்று— ஒழிப்பதன் விளைவாக ஒரு மாபெரும் உத்வேகம் பெறும்; சிறு விவசாயிகளினுடைய பண்ணையின் சுதந்திரமான வளர்ச்சியாக உழைப்புச் சேவையிலிருந்து முதலாளித்துவத்திற்கு மாறுவது இறுதி அடிப்படையாக அமையும்.

1861 விவசாயிகளின் சீர்திருத்தம் மூலம் இராணுவத்தைக் கொண்டு புதியநிலஒழுங்குமுறைகளைத் திணித்ததானது ருஷியாவில் விவசாயத்தில் முளைவிட்ட முதலாளித்துவத்தின் நலன்களுக்காக விவசாயிகளுக்கு எதிராகப் பிரயோகிக்கப்பட்ட பெரும் அளவிலான வன்முறையாகும். இது நிலப்பிரபுக்கள் மூலமான முதலாளித்துவ வளர்ச்சிக்கான நடவடிக்கையாக அமைந்தது. 1906ஸ்டோலிபின் விவசாயச் சீர்த்திருத்தச் சட்டம் கிராமிய கம்யூன்களை கொள்ளையிடும்படியும், ஒரு சில பணக்கார சொத்துடமையாளர்களுக்காக பழைய விவசாய உறவுகளை அறுத்தெறிவதாகும். இது முதலாளித்துவத்தின் நலன்களுக்காக விவசாயிகள் மீது ஏவி விடப்பட்ட இரண்டாவது பெரும் அளவிலான வன்முறையாகும் இது நிலப்பிரபுக்கள் மூலமான முதலாளித்துவமாகும். ஸ்டோலிபின் விவசாய சீர்திருத்தத்தின் நோக்கம் கிராமபுறத்தில் குலாக்குகளாகிய ஒரு வர்க்கத்தின் வடிவில் எதேச்சதிகாரத்திற்கான உறைவிடத்தை தோற்றுவிப்பதாகும். அதேசமயம் நிலப்பிரபு சொத்துடமையை பராமரித்து கிராமிய கம்யூன்களை ஒழிப்பதுவுமாகும். அரை நிலப்பிரபுத்துவ நிலப்பிரபுக்களின் அதிகாரத்தையும், சொத்துடமையையும் சலுகைகளையும் பேணிப் பாதுகாத்து தொடர்ந்து நிலவச் செய்த அதே வேளையில் இக்கொள்கை மிகவும் துன்பகரமான பிரஷ்யன் - ஜங்கர் முறையில் விவசாயத்தில் முதலாளித்துவ வளர்ச்சியைத் துரிதப்

படுத்துவதாகும். இதன் விளைவாக ஒரு விவசாய முதலாளி வர்க்கத்தின் வளர்ச்சியும் கூட துரிதப்பட்டது. ஆனால் பெரும் பாலான விவசாயிகளை பலவந்தமாக பறிமுதல் செய்வது ஆழ மானது.

நிலப்பிரபு முறையிலான மற்றும் விவசாயிகளின் முறை யிலான முதலாளித்துவ பரிணாம வளர்ச்சிப் போக்குகள் இரண்டுமே முதலாளித்துவத் தன்மையுடையன எனினும் சமுதாய முன்னேற்றத்துக்கும் உச்சபட்ச அளவுகோலான உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கும் உதவுவதற்கு நிலப்பிரபு முறையிலான முதலாளித்துவ பரிணமாத்தையல்ல, மாறாக விவசாயிகளின் முறையிலானதையே ஆதரிக்க வேண்டும். ஏனெனில் முன்னது முதலாளிய முறைகளில் திருத்தியமைக்கப் பட்ட கொத்தடிமை மற்றும் பண்ணையடிமை முறைகளைக் கெட்டிப் படுத்தி அதிகபட்சம் பாதுகாப்பது; உற்பத்தி சக்தி களின் மிகக் குறைவான வேகத்தில் மற்றும் முதலாளித்துவத்தின் பின்னிழுக்கப்பட்ட வளர்ச்சி ஆகியவற்றைக் குறிக்கும்; பரந்து பட்ட திரளான விவசாய மக்களுக்கும் அதன் விளைவாக பாட்டாளி வர்க்கத்துக்கும் துன்ப துயரங்களையும், சுரண்டல் ஒடுக்குமுறைகளையும் குறிக்கிறது. இரண்டாவதுவகை, உற்பத்தி சக்திகளின் ஆகப்படுவேகத்தையும், பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியின் கீழ் பரந்துபட்ட திரளான விவசாய மக்க ளுக்கு அதிகபட்சம் சாத்தியமான ஜீவிதத்துக்கான நிலைமைகள் என்பனவற்றையும் குறிக்கிறது.

ஐங்கர் நிலப்பிரபு முதலாளித்துவப் பாதையில் குறைந்தது 50 ஆண்டுகளாவது வளர்ந்து விட்ட ருஷிய நாட்டில் விவசாயி களின் விவசாயப் புரட்சி மிகவும் சிரமமானதாக இருந்தது. அந்த 50 ஆண்டுகளில் சந்தேகத்திற்கிடமின்றி நிலப்பிரபு பண்ணைகள் மூலம் முதலாளித்துவம் தனது பாதையமைத்து விவசாயிகளின் பண்ணைகளைவிட மேலாண்மை பெற்றதாக விளைச்சலில் மட்டுமின்றி சாகுபடியிலும், அபிவிருத்தி அடைந்த கருவிகளிலும் உயர்ந்ததாக வளர்ந்திருந்தது. நிலப் பிரபுத்துவ பண்ணையார்கள் ஆயிரத்தெட்டு வழி களில் அதிகார வர்க்கத்துடனும் முதலாளிகளுடனும் பிணைந் திருந்தனர். விவசாயிகளின்புரட்சியானது பெரும் முதலாளிகளின் அரசையும் தேசிய சர்வதேசிய நலன்களையும் பாதிப்பதாக இருந் ததால் மிகவும் சாதகமான சூழ்நிலைகள் அதன் வெற்றிக்கு இன் றியமையாததாக இருந்தன. மேலும் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் மட்டுமே சாத்தியமானதால் இப்புரட்சியை உலக முழுதுமிருந்த பெரும் முதலாளிகளும் எதிர்த்தனர். இருப் பினும் கீழ்கணட அடிப்படைகளில் விவசாயிகளின் விவசாயப் புரட்சி குறித்து போல்ஷ்விக் கட்சி முடிவெடுத்தது. "முதலில் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் முடிவோடு ருஷ்யாவில் சோசலிசத்தின் நிர்ணயிக்கப்பட்ட விதியை மார்க்சிசம் இணைக்க முடியாது. இரண்டாவதாக, ருஷ்யாவில் முதலாளித்துவ பரிணாமத்திலுள்ள இரு வாய்ப்புகளையும் மார்க்சிசம் கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு வாய்ப்பினது நிலைமை

களையும் சிறப்பம்சங்களையும் மக்களிடம் தெளிவாகக் காட்ட வேண்டும். மேலும் மூன்றாவதாக ஒரு தீவிரமான அரசியல் புரட்சி இன்றி ருஷியாவில் ஒரு தீவிரமான விவசாயப் புரட்சி சாத்தியம் என்ற கண்ணோட்டத்தை மார்க்சிசம் தீவிரமாக முறியடிக்கவேண்டும்'' (லெனின், மேற்கூறியது, பக்கம் 120). இந்த அடிப்படையில் விவசாயிகளின் விவசாயப் புரட்சி திட்டத்தை போல்ஷ்விக் கட்சி வகுத்து செயல்படுத்தியது.

—x—

# 4. காலனி ஆதிக்கத்தின் கீழ அரை நிலப்பிரபுத்துவம்

---

முதலாளித்துவத்துக்கு மூந்திய சொத்துடைமை வடிவங்கள் அவற்றின் அடிப்படையிலான உற்பத்தி முறைகள் ஆகியவற்றிலிருந்து முதலாளித்துவ சொத்துடைமை மற்றும் அதன் உற்பத்தி முறைக்கு மாறிச் செல்லும் போக்குகள் பற்றிய மார்க்சிய—லெனினியக் கோட்பாடுகளைத் தொகுத்தறிந்தோம். இனி அவற்றை இந்திய நிலைமைகளுக்குப் பருண்மையாகப் பிரயோகிப்போம்.

மற்றெல்லா பழங்குடி மற்றும் பழம்பண்டு சமூகங்களைப் போலவே இந்தியாவில் நிலவிய ஆசிய உற்பத்தி முறையும் தன்னியல்பாக பரிணமித்த பழங்குடி சமூகமே—பொது இரத்தப் பிணைப்பு, மொழி, பழக்க வழக்கங்கள் இன்னும் பிறவற்றை அடிப்படையாகக் கொண்டது—வாழ்வுக்கான புறவயமான நிலைமைகளைச் சுவீகரிப்பதற்கும், மறுஉற்பத்தி மற்றும் புறவயமாக்கும் நடவடிக்கைக்கும் முதல் முன்நிபந்தனையாக விளங்கியது ஜீவனுள்ள உழைப்பின் மூலம் தன்னைத்தானே உற்பத்தி மற்றும் மறு உற்பத்தி செய்து கொள்ளப்படும் சமூகத்தின் சொத்துடைமையாகக் கருதப்பட்ட பூமியே, நிலமே சமூகத்தின் அடிப்படையாகிய உற்பத்திக்கான சாதனமாகவும் கச்சாப் பொருளாகவும் அதாவது சோதனைக் கூடமாகவும் கிடங்காகவும் கருதப்பட்டது எனவே உழைப்பின் போக்கில் உண்மையான சுவீகரிப்பு நடப்பதற்கான முன்நிபந்தனைகள் உழைப்பின் விளைபொருளாகவன்றி இயற்கையானதாக, அல்லது தெய்வீகமானதாக முன் நிபந்தனைகளாகத் தோன்றின. ஆசிய சொத்துடைமை வடிவங்களின் கீழ் சிறுகிராமச் சமூகங்கள் அனைத்திற்கும் மேலே நின்று கொண்டு இணைக்கும் ஒருமையே அதிஉயர் அதிகாரம் அல்லது முழுச் சொத்துடைமையாளனாகத் தெரிந்தது; உண்மையான சமூகங்கள் பரம்பரையான அனுபோகஸ்தர்களாக மட்டுமே இருந்தார்கள் இந்த இணைக்கும் ஒருமையாகிய அதிஉயர் அதிகாரமே உண்மையான உடைமை

யாளனாகவும், பொதுச் சொத்துடைமையின் உண்மையான மூன் நிபந்தனையாகவும் இருந்ததால் அது பெரும் எண்ணிக்கையிலான உண்மையான தனித்தனிச் சமூகங்களுக்கு அதிஉயர் அதிகாரமாகவும் ஏதோ தனிதன்மை வாய்ந்ததாகவும் தெரிந்தது. எனவே தனிநபர் உண்மையில் சொத்துடைமையற்றவர். உழைப்புக்கும் உற்பத்திக்குமான இயற்கை நிலைமைகள் அவருக்கே சொந்தம் என்கிற முறையிலான தனிநபருடைய கண்ணோட்டம் அல்லது போக்கு மற்றும் அகநிலையை புறவயமான உறுப்பாக சடத்தன்மை வாய்ந்த இயற்கையில் காண்பது ஆகிய சொத்துடைமை குறிப்பிட்ட சமூகம் என்ற இடைத்தரகு மூலமாக தனிநபருக்குக் கிடைத்தது. உரிமையளிக்கும், மானியமாக பெற்றுத்தரும் மாபெரும் ஒட்டு மொத்த ஒருமையாகிய அதிஉயர் அதிகாரம் பெரும் எண்ணிக்கையிலான சமூகங்களின் தந்தை என்கிற முறையில் ஒரு கொடுங்கோலரால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது. எனவே உழைப்பின் உபரி உற்பத்தி இந்த உயர்அதிகாரத்திற்கே சொந்தமென்று சட்டப்பூர்வமாக தீர்மானிக்கப்பட்டது.

இந்திய சமுதாயத்தில் நிலவிய ஆசிய சொத்துடைமை வடிவம், அதன் அடிப்படையிலான கிழக்கத்திய கொடுங்கோன்மை ஆகியவற்றின் கீழ் உண்மையில் சட்டபூர்வமாக தனிச் சொத்துடைமை இல்லை. கிராம சமுதாயங்கள் பெரும்பாலும் உற்பத்தி பட்டறை மற்றும் விவசாயம் ஆகிய இரண்டும் சிறு சமூகத்திற்குள்ளேயே இணைந்து உருவாகிய பழங்குடி அல்லது சமூக சொத்துடைமையின் அடிப்படையிலானவை ஆகும் எனவே முற்றிலும் சுயதேவை அடிப்படையில் நிலைத்திருப்பதாகவும் மறு உற்பத்திக்கும் உபரி உற்பத்திக்குமான நிலைமைகள் அனைத்தையும் பெற்றிருப்பவையாகவும் அச்சமூகங்கள் விளங்கின. இறுதியில் ஒரு நபராகத் தோன்றும் உயர்ந்த சமூகத்துக்கே அதன் உபரி உழைப்பின் ஒரு பகுதி சொந்தமாகியது. கப்பம், திறை மற்றும் மொத்தச் சமூகத்தின் சேவைக்கான பொது உழைப்பு என்கிற முறையில் உண்மைக் கொடுங்கோன்மைக்கான ஒரு பகுதி, கற்பிக்கப்பட்ட பழங்குடி ஒருமையாகிய கடவுளுக்கான ஒரு பகுதியாக உபரி உழைப்பு தரப்பட்டது.

மற்றெல்லாப் பகுதிகளிலும் நிலவிய பழம்பண்டு சமுதாயங்களின் வரலாறு, நிலச் சொத்துடைமை மற்றும் விவசாயம் அடிப்படையிலான நகரங்களின் வரலாறாகும். ஆனால் ஆசிய சமுதாயத்தின் வரலாறு நகர்புறம், கிராமப்புறம் ஆகியவற்றின் ஒரு வகையான நடுநிலை ஐக்கியமாகத் திகழ்ந்தன. உண்மையான பொருளாதாரக் கட்டுமானத்தின் மீது அதிஉயர்ந்ததாக திணிக்கப்பட்ட அரசர்களின் வெறும் முகாமாக மட்டுமே உண்மையில் பெருநகரங்கள் கருதப்படவேண்டும். ஆசிய வடிவம் விடாப்பிடியாகவும் நீண்ட காலத்திற்கும் அவசியமாக நிலைத்திருந்தது. ஏனெனில் தனி நபர்கள் சமூகத்திலிருந்து சுயேச்சையானவர்களாக மாறமுடியாது; மேலும் சுயதேவையடையும் உற்பத்திச் சுழற்சி, விவசாயமும் கைத்தொழிலும்

உற்பத்தி முறை ஆகியவற்றின் பெயரால் இந்திய சமுதாயம் மார்க்சிய—லெனினிய வரலாற்றியல் பொருள்முதல்வாதத்திற்கு விதிவிலக்கானது என்று டாங்கே திரிபுவாதக் கும்பல் திரித்துப் புரட்டுகிறது. மற்றொரு புறம்' மார்க்சிய—லெனினிய பொருள் முதல்வாதத்தின் 'புனிதத் தன்மையை' காப்பதாகப் புறப்பட்டுள்ள ஆர். பி. சராஃப், மார்க்சு ஏதோ போகிற போக்கில் மட்டுமே ஆசிய சொத்துடமை வடிவம் மற்றும் உற்பத்தி முறையைக் குறிப்பிடுவதாகவும், அவருக்கு விவரங்கள் போதாக் குறை இருந்ததாகவும் கூறுகிறார்; ஐரோப்பாவைப் போன்று புராதன பொதுவுடமைச் சமுதாயம் அடிமைச் சமுதாயம் மற்றும் நிலப்பிரபுத்துவ சமுதாயம் என்று வரலாற்றுப் பொருள் முதல் வாதத்துக்குப் பொருத்தமான சமுதாய அமைப்புகள், எந்த சிறப்புத் தன்மையும் இன்றி அப்படியே இந்தியாவில் நிலவியதாக நிரூபிக்க முயன்றிருக்கிறார் ('இந்திய சமுதாயம்', ஆர். பி. சராஃப்). இது வெறும் வரட்டுச் சூத்திரமே தவிர, விவரங்களை யந்திர முறையில் கோர்ப்பதே தவிர, பருண்மையான ஆய்வு அல்ல. ஆசியச் சொத்துடமை வடிவம், மறு உற்பத்தி முறை பற்றி மார்க்சு மட்டுமல்ல, எங்கெல்சு, லெனின் ஆகியோரும் தெளிவாகவே விளக்கியுள்ளனர். பழம்பண்டு ஜெர்மானிய ஸ்லாவினிய சொத்துடமை வடிவங்கள் மற்றும் உற்பத்தி முறைகளைப் போன்ற முதலாளித்துவத்திற்கு முந்திய சொத்துடமை வடிவங்கள் மற்றும் உற்பத்தி முறைகளில் ஒன்று தான் ஆசிய சொத்துடமை வடிவம் மற்றும் உற்பத்தி முறையாகும். சில பிரத்யேகமான காரணங்களால் இந்தவடிவமும் முறையும் எடுத்திருப்பினும் உலகெங்கும் நிலவிய முதலாளித்துவத்துக்கு முந்திய வடிவங்கள், முறைகளின் சாராம்சதில் இருந்து வேறுபாடானதோ, விதிவிலக்கானதோ அல்ல.

முதலாளித்துவத்திற்கு முந்திய எல்லாச் சொத்துடமை வடிவங்களும் பின்வரும் அம்சங்களைக் கொண்டிருந்தன: 1. சோதனைக் கூடம் மற்றும் கச்சாப் பொருட்களின் கிடங்கு என்ற இரண்டுமாக உழைப்புக்கான ஆதிமுதல் கருவி என்கிற முறையில் — உழைப்பின் சாதனங்கள் அல்ல, உழைப்பின் முன் நிபந்தனையாக; உழைப்பின் விளைபொருளாக அல்ல, உழைப்பின் பிரதான புறவயமான இயற்கை நிலையாக— பூமியிலிருந்து, நிலத்திலிருந்து சுவீகரிப்பது 2. தனிநபர் தனது உழைப்பின் மூலம் பலனளிக்கும் உழைப்பின் புறவயமான நிலைமைகளைத் தனக்கே சொந்தம் என்பதாக, சடத்தன்மை வாய்ந்த தனது அகநிலை என்பதாகக் கருதுவது 3. உழைக்கும் தனிநபரின் சொத்துடமை என்பதாக உற்பத்திக்கான, உழைப்புக்கான, முன்நிபந்தனைகளான, புறவயமான இயற்கை நிலைமைகளின்பாலான கண்ணோட்டம் அல்லது போக்கு அவன் அகநிலையாகவும் அதே சமயம் தன் ஜீவிதத்துக்கான சடத்தன்மை வாய்ந்த இயற்கை நிலைமைகளில் புறநிலையாகவும் இரண்டு வடிவங்களில் இருப்பதைக் குறிக்கிறது. 4. கிராமப்புற துணை உற்பத்தி, குடிசைத் தொழில் மற்றும் பட்டறை உற்பத்தியாளர்கள், கைவினைத் திறன், நுட்பம் காரணமாக கருவிகளின் உடமையாளர்களாக அல்லது உழைக்கும் உடமை

யாளர்களாக விளங்குவது. 5. மேற்கண்ட இரு அம்சங்களிலிருந்து பெறப்படுவது. உற்பத்திச் சாதனங்களோடு உழைப்பாளனும், உழைப்பாளனோடு உற்பத்திச்சாதனங்களும் பிணைக்கப்பட்டிருக்கின்றன. 6 முதலாளித்துவத்துக்கு முந்திய சொத்துடைமை வடிவங்கள் மற்றும் உற்பத்தி முறைகள் அனைத்தும் நிலச் சொத்துடைமை வடிவத்தையும் விவசாயத்தையும் பொருளாதார ஒழுங்கு முறையின் அடிப்படையாகக் கொண்டிருந்தன. 7. ஆதிமுதலில் சொத்துடைமை பற்றிய கண்ணோட்டம். உழைப்புக்கான, புறவயமான இயற்கை நிலைமைகளை தனக்கே சொந்தம் என்பதாகவும், அதையே உழைப்புக்கான முன் நிபந்தனையாகக் கொண்டிருப்பதாகவும், பழங்குடி அல்லது சமூகத்தின் மூலம் இந்த புறவயமான நிலைமைகளை குறிப்பாக நிலத்தைப் பெற்றதால் உழைப்புக்கான முன்நிபந்தனைகளில் ஒன்றாக சமூகம் விளங்கியது. உற்பத்தியின் நோக்கம் உழைப்பாளனையும் சமூகத்தையும் புறவயமான நிலைமைகளில் அத்துடன் அப்படியே மறுஉற்பத்தி செய்வது என்பதாகும். 8. பொருளாதார ஒழுங்கு முறையின் அடிப்படை தனி நபருக்கும சமூகத்துக்குமான முன் நிபந்தனையான உறவுகளை —அவை கிட்டத்தட்ட தன்னியல்பாகவோ அல்லது வரலாற்றுப் போக்கிலோ தோன்றியவை; ஆனால் மரபு வழியினதாக மாறியவை—மறு உற்பத்தி செய்வது; அத்துடன் உழைப்புக்கான நிலைமைகள் பற்றிய கண்ணோட்டம் மற்றும் சக உடமையாளர், சக பழங்குடியினர் ஏனையோர் பற்றிய கண்ணோட்டம் இரண்டையும் பொருத்து தனி நபருக்கென்று முன்னரே தீர்மானிக்கப்பட்ட ஒரு நிச்சயமான புறவயமான நிலைமைகளையும் மறு உற்பத்தி செய்வது அதாவது எளிய வெறும் சாதாரண மறு உற்பத்தியே உற்பத்தியின் நோக்கமாகும்.
9. உற்பத்தியாளர்களை உற்பத்திக்கான புறவயமான நிலைமைகளில், அத்துடன் அப்படியே மறுஉற்பத்தி செய்வது என்னும் எளிய, வெறும் சாதாரண மறுஉற்பத்தி உற்பத்தியின் நோக்கமாகும். ஆனால் ஒன்று, இந்த எளிய, வெறும் சாதாரண மறு உற்பத்தியே உற்பத்திக்கான புறவயமான நிலைமைகளை அழிக்கும் போக்காகும்; இரண்டு, அடிமை முறை, பண்ணையடிமை முறை ஆகியவை மிகமிக செயலூக்கமிக்க உற்பத்தி சக்திகளான சமுதாயத்தின் பெரும்பான்மையான உழைக்கும் மக்களை சொத்துடைமையாக்குகிறது அல்லது நிலத்தோடு பிணைத்து சமூக உரிமைகளைப் பறித்து புறவயமான தன்மை வாய்ந்த இயற்கை நிலைமைகளில் ஒன்றாக வைக்கிறது. இந்த அடிப்படை முரண்பாடே முதல் அடிமைச் சமுதாயத்தில் அடிமைகளுக்கும் ஆண்டைகளுக்கும் இடையிலான பிரதான முரண்பாடாக வெளிப்பட்டது. பின்னர் நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் நிலப்பிரபுக்களுக்கும் பண்ணை அடிமைகளுக்கும் இடையிலான பிரதான முரண்பாடாக வெளிப்பட்டது.

முதலாளித்துவத்துக்கு முந்திய சொத்துடைமை வடிவங்கள் மற்றும் உற்பத்தி முறைகளின் மேற்கண்ட குணாம்சங்கள் முதலாளித்துவத்துக்கு முந்திய இந்திய சமுதாயப் பொருளா

தாரப் படிவமாகிய ஆசிய சொத்துடைமை, வடிவத்திலிருந்தும் அதன் உற்பத்தி முறையிலிருந்தும் வளர்ந்தது. அவற்றின் எச்சங்களைக் கொண்டிருந்தது. என்பதை இது மறுப்பதாக இல்லை. மாறாக ஆசிய சொத்துடைமை மற்றும் உற்பத்தி முறை இப்பொதுவான குணாம்சங்களோடு, பிரத்தியேகமான நிலைமைகள் காரணமாக உலகின் வேறு பகுதிகளில் நிலவிய வடிவங்கள் மற்றும் முறைகளிலிருந்து மாறுபட்டான கீழ்க் கண்ட சிறப்பம்சங்களைப் பெற்றிருந்தது. ஆசிய சொத்துடைமை வடிவம் மற்றும் உற்பத்தி முறைக்கு மாறாக நிலத்தில் தனிச் சொத்துடைமை பெற்றிருப்பதும் சமூகங்கள் உழைப்புக்கான முன் நிபந்தனையாகவன்றி, பொது சமூகத் தேவைகளாகவும் உள்ளூர் தகராறுகளைத் தீர்க்கவும், அந்நிய ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் கூடும்போது மட்டுமே உண்மையில் நிலவியிருப்பது என்கிற நிலைமை முதலாளித்துவத்திற்கு முந்தியச் சொத்துடைமை வடிவங்கள் மற்றும் உற்பத்தி முறைகள் யாவற்றிலும் அதிஉயர்ந்த வளர்ச்சி நிலையாகும். ஆனால் உலகின் எல்லாப் பகுதிகளும் இந்த அதிஉயர்ந்த வளர்ச்சியை வந்தடைந்திருக்க வில்லை; ஏற்றத்தாழ்வான நிலைமையிலும் மிகவும் பல்வேறு வகையான சொத்துடைமை வடிவங்களையும் உற்பத்தி முறைகளையும் கொண்டிருந்தன. ஆசிய சொத்துடைமை வடிவம் மற்றும் உற்பத்தி முறையிலிருந்தது போன்ற உழைப்புக்கான ஒரு பொது ஸ்தாபனத்தையுடைய ஐக்கியத்தைதையும் மெக்சிகோவும் குறிப்பாக பெருவும் பெற்றிருந்தன; வேல்சிப் மற்றும் பழம்பண்டு செல்ட்ஸ்களிடையேயும் நிலவியதுண்டு. பிற்காலத்தில் ஆசிய இந்திப் பழங்குடியினரது சமுதாயப் பொருளாதாரப் படிவத்தில் முன்பு நிலைவியதைப் போலவே ஸ்லாவிய சமுதாயப் பொருளாதாரப் படிவத்திலும் சமூக உற்பத்தியும் சமூக சொத்துடைமையும் நிலவியதாக மார்க்சு குறிப்பிடுகிறார். (முதலாளித்துவத்திற்கு முந்திய சமூக. பொருளாதரப் படிவங்கள், பக்கம்: 104; இதில் 1857-59 ஆண்டுகளின் பொருளாதாரக் கையெழுத்துப் படிகள் என்ற பகுதி)

முதலாளித்துவத்திற்கு முந்திய சொத்துடைமை வடிவங்கள் மற்றும் உற்பத்தி முறையிலேயே அதிஉயர்ந்ததாக வளர்ந்து இருந்த ஜெர்மானிய வடிவத்தையும், முறையும் வரைவிலக்கண உதாரணமாக எடுத்து ஆய்வு செய்த மார்க்சு, அங்கும் இரண்டாம் பட்சமானதாக தனிச் சொத்துடைமைக்குத் துணையானதாக சமூக சொத்துடைமை நிலவிவந்ததைக் குறிப்பிடுகிறார். அதற்கு முந்திய பழம்பண்டு சமுதாய சொத்துடைமை வடிவம் மற்றும் உற்பத்தி முறைக்கு கிரீஸ் ரோமானிய சமுதாயப் பொருளாதாரப் படிவத்தை எடுத்துக் கொண்டு ஆய்வு செய்த மார்க்சு, அங்கு சொத்துடைமையே குடியுரிமை என்கிற முறையில் சமூக — அரசு சொத்துடைமை நிலவியது. எனவே சொத்துடைமையின் ஆதி முதல் வடிவம் நேரடி சமூகச் சொத்துடைமையாக இருந்தது. அது கீழ் திசை ஆசிய வடிவத்திலிருந்து ஸ்லாவிய வடிவமாக திருத்தியமைக்கப்பட்டது ரோமானிய (பழம்பண்டு சமுதாயம்) மற்றும் ஜெர்மானிய (மத்தியகால சமுதாயம்)

சொத்துடைமைகளாகவும் முரண்பாண்டின் இலக்கிற்கும் வளர்க்கப்பட்டது. இச்சொத்துடைமை வடிவங்கள் மற்றும் உற்பத்தி முறைகளின் வளர்ச்சிப் போக்கிலேயே பழம்பண்டு சொத்துடைமை வடிவத்தின் இரண்டாவது கட்டத்தில் அடிமை முறையும் மத்திய காலத்தில் ஜெர்மானிய சொத்துடைமை வடிவத்தின் கீழ் பண்ணையடிமை முறையும் தோன்றின. எனவே சமுதாய வளர்ச்சிப்போக்கில் சொத்துடைமையின் முதல் நிலையையே ஆசிய சொத்துடைமை வடிவம் குறிக்கிறது. அத்துடன் பண்ட உற்பத்தி பட்டறையும், விவசாயமும் இணைந்திருப்பதும் ஆசிய உற்பத்தி முறையின் சிறப்பம்சமாகிறது.

ஆசிய சொத்துடைமையின் வடிவம் மற்றும் உற்பத்திமுறையின் கீழ் நீண்டகாலம் நீடித்திருந்த இந்திய இந்திய சமுதாயப் பொருளாதாரப் படிவம் ஆங்கிலேயரது காலனிய ஆக்கிரமிப்பிற்கு முன்பே தனிச் சொத்துடைமையையும் சில இடங்களில் பெற்றிருந்தாலும், கீழ்க்கண்ட சிறப்பம்சங்களை அது பெற்றிருந்தது.

இந்திய சமுதாயப் பொருளாதாரப் படிவத்தில், பழங்குடி மற்றும் சமூக சொத்துடைமைகளிலிருந்து வளர்ந்து நிலத்தில் தனிச் சொத்துடைமை வடிவம் சாங்கோபாங்காக நிலவியிருக்கவில்லை. மார்க்ஸ் விவரித்த சிறு கிராமச் சமுதாய அமைப்புகளே பெரும்பாலும் நிலவியிருந்தன. இச்சிறு கிராமங்களுக்கு மேலே அதி உயர்ந்த அதிகாரமாக. ஐக்கியப்படுத்தும் ஒருமையாக விளங்கிய மத்திய அரசுக் கொடுங்கோன்மையே, சட்டபூர்வமான, அதிகாரபூர்வமான சொத்துடைமையாளனாகவும் இருந்தது. கிராமச் சமுதாயத்தை இடைத்தரகனாகக் கொண்டு தனிநபர்கள் பொதுச் சொத்துடைமையின் அனுபோக உரிமை மட்டும் பெற்றனர். நிலத்தில் பொதுச் சொந்துடைம முறையை ஆங்கிலேயர்கள் ஒழிக்கும் வரை இந்த முறையே நீடித்தது. இதன் பொருள் இந்தியச் சமுதாயப் பொருளாதாரப் படிவத்தில் நிலப்பிரபுத்துவ அமைப்பே கிடையாது என்பதில்லை. அதேபோல் பொதுச் சொத்துடைமை அடிமை முறையையும் மறுப்பதில்லை. "நிலத்தில் சொத்துடைமையில்லாமலிருப்பது கிழக்கு முழுவதற்கும் உண்மையில் கேந்திரமானதாகும். இதில்தான் அரசியல் மற்றும் மத வரலாறு இருக்கிறது. ஆனால் கிழக்கத்திய நாட்டவர்கள் அதன் நிலப்பிரபுத்துவ வடிவத்தில் கூட நிலச்சொத்துடைமையை எப்படி வந்தடையாமற் போனார்கள்?" என்ற கேள்வியை எழுப்பிய எங்கெல்ஸ் அதற்கான சிறப்பான காரணங்களை விளக்குகிறார். (எங்கெல்ஸ், மார்க்ஸ்-எங்கெல்ஸின் தேர்ந்தெடுத்த கடிதங்கள், பக் 76-77). மேலும் இந்தியாவில் நிலவிய நிலப்பிரபுத்துவ அமைப்பு பற்றி ஜார்ஜ் தாம்சன் பின்வருமாறு எழுதினார்: "விரிவாக்கத்தின் வரம்புகளை அடைந்தபோது மத்திய குடியரசு சிதைந்து நிலப்பிரபுத்துவத்துக்குமாறுதல் தொடங்கியது. இந்தியநிலப்பிரபுத்துவம் சொற்பமானமாறுதலுடன் அதன் பழங்குடி கட்டுமானத்தை

பராமரித்த புராதன கிராமச் சமூகத்தின் மீது நிறுவப்பட்டிருந்தது. அது நிலத்தின் மீது பொதுச் சொத்துடமை, விவசாயம் கைத்தொழில் இரண்டின் ஐக்கியம், ஜாதீய முறையில் திணிக்கப்பட்ட பரம்பரை உழைப்புப் பிரிவினை ஆகியவற்றின் மீது எழுப்பப்பட்டிருந்தது. பிரபுவுக்குத் தரவேண்டிய கப்பத்தைத் தானியமாகவும் தர கடமைப்பட்டிருந்தது; அதில் ஒரு பகுதி அரசருக்குச் செலுத்தப்பட்டது; ஆனால் மற்றெல்லா வகையிலும் சுயதேவை பூர்த்தியுடையது'' (ஜார்ஜ் தாம்சன், முதலாளித்துவமும் அதற்குப் பிறகும், ஆங்கிலப் பதிப்பு, பக்: 56).

நிலத்தில் பொதுச் சொத்துடைமையே நிலவிய போதிலும் தனி அனுபோக உரிமைகளையும், அடிமைமுறை - பண்ணையடிமை முறை ஆகிய இரண்டையும் விட கூடுதலான அடக்குமுறையையும், சுரண்டல் முறையையும் உடைய ஜாதீய முறையைப்பெற்றிருந்ததால் நிலப்பிரபுத்துவ அடிப்படையிலான உற்பத்திமுறை சில சிறப்பம்சங்களோடு விளங்கியது. இங்கும் சீனாவிலும் நிலவிய நிலப்பிரபுத்துவம் ஐரோப்பாவில் நிலவியதில் இருந்து மாறுபட்ட அம்சங்களைக் கொண்டிருப்பினும் இவை அனைத்தும் ஒரே போக்கின் இணையான வளர்ச்சிப் போக்குகளாகும். நிலப்பிரபுத்துவத்தின் சாராம்சம் தனிச் சொத்துடைமையோ, கைத்தொழிலும் விவசாயமும் வேறு வேறாக வளர்வதோ மட்டுமல்ல; அதன் பிரதானமான அம்சம் உழைப்பாளர் நிலத்தோடும் பிற உற்பத்திச் சாதனங்களோடும் பிணைக்கப்பட்டிருப்பதுதான்; ஜாதீய அமைப்பு முறை, பிறப்பின் அடிப்படையிலான வேலைப் பிரிவினை மூலம் சமூகத்தோடு பிணைக்கப்பட்டிருப்பதோடு அதன் மூலம் நிலத்தோடும் உழைப்பாளனைப் பிணைத்திருக்கிறது.

சில ஜாதியினருக்கு நிலத்தில் தனி அனுபோக உரிமையும் மறுக்கப்பட்டதால், அவர்கள் உயிர் ஓம்புதலுக்கான சாதனங்களை மட்டுமே உடமையாகப் பெற்று இருந்தனர்; ஜாதீய அமைப்பு முறையில் சமூகத்தோடு பிணைக்கப்பட்டிருந்ததால் இது கிடைத்தது. தனி அனுபோக உரிமை மட்டுமே பற்று விவசாயிகள் தானிய வாடகை முறையின் கீழ்தான் இருந்தனர். சத்திரியர், பிராமணர், வைசியர், சூத்திரர், சண்டாளர் ஆகிய வர்ணங்கள் ஐரோப்பாவில் நிலவிய அரசு உயர்குடி, பி புத்துவ உயர்குடி நிதி ஆதிக்க உயர்குடியான பாட்ரீசியன்கள், உழைக்கும் நகர்ப்புற பிளெபியன்கள் மற்றும் விவசாயிகள் போன்ற சில பிரிவு வர்க்கங்கள் அடங்கிய ஒரே வகையிலரான சமூக எஸ்டேட்டு களையே குறிக்கும். ஜாதி அடிப்படையிலான குலத் தொழில்கள், குடிசைத் தொழில் மற்றும் விவசாயத்தின் ஐக்கியத்தைப் பாராமரித்த அதே வேளையில் வர்ண அடிப்படையிலான வைசிய சமூகப் பிரிவு, பண்ட உற்பத்தி மற்றும் வணிக வளர்ச்சிக்கான கூறுகளைப் பெற்றிருந்ததையே காட்டுகிறது.

ஆங்கிலேய காலனியாதிக்கவாதிகள் இந்தியாவை காலனி

யாக்கியபின் அதுவரை நீடித்திருந்த ஆசியச் சொத்துடைமை வடிவம் மற்றும் உற்பத்தி முறைகளின் அடிப்படையில் அமைந்து ஓரளவு பூர்வீகக் குடிநிலையிலும், ஓரளவு நாகரீக வளர்ச்சி நிலையிலும் இருந்த இந்திய சிறுகிராமச் சமூகங்களின் நிலப் பிரபுத்துவ பொருளாதார அடிப்படையைத் தகர்த்து ஆசியா விலேயே மிகப்பெரிய சமூகப் புரட்சியை நிகழ்த்தினார்கள். அப்பொழுது அவர்கள் சாதித்தது அழிவுப் பணியைத்தானே தவிர அதனிடத்தில் முதலாளித்துவ உற்பத்தி முறையைக் கட்டியமைப்பதை அல்ல. நீண்ட காலமாகத் தேங்கியிருந்த சமுதாயப் பொருளாதாரப் படிவத்தில் நிச்சயம் இது மிகவும் குறிப்பிடத் தக்க மாற்றமேயாகும். இந்திய நிலப்பிரபுத்துவ சமுதாயப் பொருளாதாரத்தில் நிலவிய பின்வரும் மூன்று அடிப்படை அம் சங்களில்—அவை ஆசிய சொத்துடைமை வடிவம் மற்றும் உற் பத்தி முறைக்கே உரித்தான தனிச் சிறப்பான அம்சங்களாகும் —ஒரு சமுதாயப் புரட்சியை நிகழ்த்துவதாக அமைந்தது.

1. விவசாயத்தில் நிலவளம் மற்றும் நீர்பாசனத்துக்கும், வியாபாரப் போக்குவரத்துக்கும் இன்றியமையாத தேவையான மராமத்துப் பணிகளை முன்பு மத்திய அரசிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தன. அனாதிகாலந்தொட்டு நிலவி வந்த, உள்நாட்டை கொள்ளையிடும் நிதித்துறை, வெளிநாடுகளை கொள்ளையிடும் போர்த்துறை, இறுதியாக பொது மராமத்துப் பணித்துறை ஆகிய மூன்று அரசாங்கத் துறைகளில் ஆங்கிலேயர் பொது மராமத்துப் பணித்துறையை அறவே புறக்கணித்தனர்.

பொது மராமத்துப் பணிகளை புறக்கணிப்பதன் மூலம் விவசாயத்தை மோசமாக்கியும், ஒடுக்கியும், தீங்கு புரிந்து அழிக் கும் செயலோடு இணைந்தே வேறு வகையில் ஆசிய வர லாற்றுக்கே புதுமையானதும், வேறு வகையில் முக்கியமான தும் ஆன நிகழ்ச்சியையும் ஆங்கிலேய காலனி ஆதிக்க வாதிகள் செய்து முடித்தனர்.

2. மிகப் பழைய காலத்திலேயே சிறப்பியல்புகளுக்கு உரிய தாக விளங்கிய சிறு கிராம சமுதாய அமைப்புகள் குடிசைத் தொழிலும், விவசாயமும் அலாதியாக இணைந்து உருவாக்கப் பட்டவை; ஐக்கியப்பட்டவையாகும். ஒருபுறம் பொது மரா மத்துப் பணிகளைப் புறக்கணித்து விவசாயத்தை சீரழித்த தோடு மற்றொருபுறம் அனாதி காலந்தொட்டு சிறந்து விளங்கிய நூற்பு மற்றும் நெசவுத் தொழில் ஆகிய குடிசைத் தொழில் நீராவியின் சக்தியின் மூலமும், வர்த்தக சுதந்திரம் ஆற்றிய வினையாலும் நசுக்கப்பட்டது.

மேற்கண்ட இரு நடவடிக்கைகள் மூலம் இந்திய சமுதா யத்தின் முழு அமைப்பையும் சின்னா பின்னமாக்கியதையும் புத் தமைப்பிற்கான அறிகுறி ஏதுமின்றி இந்தியாவில் நிலவிய எண்ணிறந்த, சிறு சமூகங்களின் சுயதேவை பூர்த்தியடையப் பொருளாதார அடிப்படைகள் தகர்த்தெறியப்பட்டதையும்

குறித்தன. இதைதான் ஆசியாவிலேயே மிகப் பெரியதும் முதலாவதுமான சமூகப் புரட்சி என்றார் மார்க்ஸ்,

இவ்விரு நடவடிக்கைகளோடு மூன்றாவதாக, முக்கியமான தாக நிலவுடமை உறவுகளில் நிகழ்த்திய புரட்சியாகும். இந்தியச் சிறு சமூகங்களின் உற்பத்தி முறைக்கு அடிப்படையாக விளங்கிய ஆசியப் ,பொதுச் சொத்துடமை வடிவத்தை அழித்து ஐரோப்பிய நிலப்பிரபுத்துவ சொத்துடமை வடிவங்கள் கொண்டு வரப்பட்டன.

3. சிறு கிராம சமுதாயங்களுக்கு மேலே ஐக்கியப்படுத்தும் ஒருமையாக அதிஉயர்!அதிகாரமாக விளங்கிய மத்திய அரசுகளே சட்டபூர்வமான, அதிகாரபூர்வமான சொத்துடமையாளனாக இருந்து ,கிராம சமூகங்களை இடைத்தரகனாக கொண்டு தனி நபர்கள் சில அனுபோக உரிமைகளை பெறுவது என்ற முறையின் கீழ் சமூகப் பொதுச் சொத்துடமை, தனி நபர் அனுபோக உரிமை என்ற ஆசிய சொத்துடமை வடிவத்தைத் தகர்த்து, ஜமீன் தாரி, இரயத்துவாரி, மகல்வாரி முறைகளைப் புகுத்தினர். ஆங்கிலேய காலனியாதிக்க வாதிகள் முதலில் நிலவரி மூலமாகக் கொள்ளையிடுவதையே பிரதான வடிவமாகக் கொண்டிருந்த தால் வரிவசூல் முறையை ஒழுங்மைக்கும் நோக்கத்துடனேயே இவற்றைப் புகுத்தினர். சாராம்சத்தில் இந்த மாறுதல்கள் ஆசிய நிலச் சொத்துடமைக்குப் பதில் அதனிடத்தில் ஐரோப்பிய நிலச் சொத்துடமையைக் கொண்டு வந்ததுதான்.

ஆங்கிலேய நிலப்பிரபுத்துவத்தின் தனிச் சிறப்பியல் புகளைப் பிரதிபலிக்கும் ஜமீன்தாரி முறை, நிலப்பிரபுத்துவ உயர்குடி சிலராட்சி வகையைச் சேர்ந்த முறையாகும். 1793 இல் காலனி ஆதிக்கவாதிகள் ஜமீன்தாரி முறையைப் புகுத்தினர். மொகலாயர் ஆட்சியின் கீழ் கிராமச் சமூகங்களிலிருந்து வரி வரி வசூலிக்கும் இடைத் தரகர்களாக இருந்து கமிசன் மட்டுமே பெற்ற ஜமீன்தார்களை இந்தமுறை நிலவுடமையாளர்களாக் கியது. இதன்கீழ் நிலம், வரிவசுலித்து அரசுக்குச் செலுத்தும் ஒரு நபருக்கோ அல்லது சிலருக்கோ நிரந்தரச் சொத்துடமையாகும். ஜமீன்தாரி, ஜாகீர்தாரி. இனாம்தாரி, சுதேச சமஸ்தானங்கள் என்று பல்வேறு வகை நிலவுடமை உறவுகள் செயற்கையாக ஏற்படுத்தப்பட்டன. நிரந்தர மற்றும் தற்காலிகத் தீர்வு என்று ஜமீன்தாரி தீர்வு முறைகள் இரண்டு வகைப்படும். வங்கம். வடக்கு சென்னை, காசி ஆகிய இடங்களில் புகுத்தப்பட்ட நிரந்தர ஜமீன்தாரித் தீர்வினபடி நிலவரி நிரந்தரமாக விதிக்கப்பட்டது. வங்கத்தின் எஞ்சிய பகுதிகளில் ஜமீன்தார்கள், ஔத் இன்னும் பிற மாநிலங் களில் தாலுக்காதார்களும், ஜமீன்தார்களும் நியமிக்கப்பட்டு நிலவரி வசூலிக்கும் உரிமை ஒப்படைக்கப்பட்டு தற்காலிக ஜமீன்தாரி தீர்வின்படி 20 முதல் 40 ஆண்டு வரை மதிப்பீடு செய்து நிலவரி விதிக்கப்பட்டது.

இரயத்துவாரி முறையின் கீழ் நேரடியாகவும் பல்வேறு வகையிலும் அரசுக்கு நிலவரி செலுத்தக் கடமைப்பட்ட தனிப்பட்ட நிலப்பிரபுக்கள் மற்றும் விவசாயிகளுக்கு நிலச் சொத்துடைமை அளிக்கப்பட்டது. பம்பாய், பி ரார் மற்றும் மத்திய இந்தியாவில் 1792–ஆம் ஆண்டு புகுத்தப்பட்ட இந்த முறை இந்து மரபுப்படியானது மதிப்பீடு செய்யப்பட்ட நிலவரி செலுத்தத் தவறாதவரை நிலவுடமையாளர் துணைக் குத்தகைக்கு விடவும், அனுபவிக்கவும் உரிமை உடையவர். எனவே இரயத்துவாரியின் கீழும் ஜமீன்தாரி முறைகளின் கூறுகள் தோன்றின.

மகல்வாரியின் கீழ் கூட்டாகவோ, பல்வேறு வகைகளிலோ சமூக உறுப்பினர்கள் நிலவரி செலுத்தும் கிராம சமூகங்களின் கூட்டாக சொத்துடமை பெற்றிருந்தனர். முஸ்லீம் மரபுப்படி புகுத்தப்பட்ட இந்த முறை ஆக்ரா, ஔத், குறிப்பாக பஞ்சாபில் நிலவியது. தரிசு நிலங்களும் உட்பட நிலம் கிராம சமூகம் முழுவதற்குமான பொதுச் சொத்துடமையாகும். அரசுத் தலையீடு இன்றி பயிரிடப் பகிர்ந்து கொள்ளவோ, குத்தகைக்கு விட்டுப் பகிர்ந்துகொள்ளவோ உரிமை உண்டு. ஏறக்குறைய 5சதவீதம் கமிஷன் பெறும் கிராம லம்பர்தார் கூட்டாகவோ, தனித்தனியாகவோ கூட்டு உரிமையாளர்களிடமிருந்து ஏற்கனவே மதிப்பீடு செய்யப்பட்ட வரிவசூலித்து அரசுக்குச் செலுத்த வேண்டும்.

ஜமீன்தாரி, இரயத்துவாரி, மகல்வாரி முறைகள் அக்கம் பக்கமாக நிலவியதால் அவற்றின் குணாம்சங்கள் ஒன்று கலந்தன. இரயத்துவாரி பகுதிகளிலும் கூட துணைக் குத்தகைக்கு விடுவது ஒரு பொது குணாம்சமாகியது. நிலவரி செலுத்த கிராமத்தின் ,கூட்டுப் பொறுப்பை காலனிய அரசு வலியுறுத்திய மகல்வாரி முறையிலும், உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசத்தில் ஜமீன்தாரி முறையின் குணாம்சங்கள் எழுந்தன. அதே சமயம் பஞ்சாபில் இரயத்துவாரி முறையின் குணாம்சமாகிய மறைமுக, ஆளில்லா நிலப்பிரபுத்துவ வடிவத்தை எடுத்தது இனாம்தாரி, ஜாகிர்தாரிப் பகுதிகளில் - ஜமீன்தாருக்குக் கீழ்ப்பட்டவை -¦ விதிக்கப்பட்ட நிலத் தீர்வையும் விட பன்மடங்கு வசூலிக்கப்பட்டன. இரயத்துவாரி, மகல்வாரி முறைகளும் ஜமீன்தாரி முறையை நோக்கி மாறின.

இம்முறைகள் அனைத்தும் நிலவுடமையாளர்களுக்குச் சாதகமாக அல்ல, நிலததிற்கு வரி வசூலிக்கும் காலனிய அரசுக்குச்சாதகமாக உருவாக்கப்பட்டவையே ஆகும். ஜமீன்தாரி முறை மூலமாக மக்களது பரம்பரை நிலவுரிமை சுதேச வரி வசூலிப்பவர்களுக்குச் சொத்துடமை வழங்கி, அவர்களுக்குச் சாதகமாக பறிக்கப்பட்டது. ரயத்துவாரி, மகல்வாரி முறைகள் நிலப்பிரபுக்களுக்கும் பணக்கார விவசாயிகளுக்கும் நிலச் சொத்துடமை வழங்கியதோடு, கிழக்கிந்திய கம்பெனியின் வரிவசூலிக்கும் கலெக்டருக்கு சாதகமாக பறிக்கப்பட்டது.

இம்முறைகள் ஒரு புறம் ஆங்கிலேய நிலப்பிரபுத்துவத்தின் தனி இயல்புகளைக் கொண்ட நிலப்பிரபுத்துவ உயர் குடி சிலராட்சியையும், மற்றொரு புறம் பிரான்சு தேசத்து விவசாயிகளின் நிலவுடமைகளைக் கொண்ட ஜனநாயகத்தையும் பிரதிபலித்து, ஒன்றுக்கொன்று முரணான, கேடுகளையுடைய நிலவுடமை முறைகளைத் தோற்றுவித்தன.

கிராம சமுகங்களின் பொருளாதார அடிப்படைகளைத் தகர்த்தது, பொதுச் சொத்துடமையினிடத்தில் தனிச் சொத்துடமையைப் புகுத்தியது ஆகியவற்றை ஒரு சமுதாயப் புரட்சி என்று மார்க்ஸ் விவரித்ததை கேடாகப் பயன்படுத்தி ஜே. பி. தீட்சிதர், இந்தியாவில் தரகு நிலப்பிரபுக்களை ஏற்படுத்திய தாக புதிய நாமகரணம் சூட்டுகிறார். "ஜமீன்தாரி மற்றும் இரயத்துவாரி பந்தோபஸ்துகளை அறிமுகப்படுத்தியவுடன் இந்திய விவசாயம் ஒரு சுத்தமான நிலப்பிரபுத்துவமாக இனியும் இல்லை. இந்த நிலத்தீர்வுகள் இந்தியப் பொருளாதாரம் மற்றும் விவசாயம் ஆகியவற்றிலுள்ள உற்பத் உறவுகளில் ஒரு பகுதியாக ஆணையிடும் அந்தஸ்தைப் பெற்றுவிட்டதாக ஏகாதிபத்தியம் (ஆங்கிலேயே ஆலை மூலதனம்) மாறிவிட்டதைக் குறிக்கின்றன'. (ஆங்; பீப்பிள்ஸ் பவர், தொகுதி 3, எண் 4, பக் 6) என்கிறார். நிலப்பிரப்புத்துவத்துக்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடே இன்றைய இந்தியாவின் பிரதான முரண்பாடு என்ற கோட்பாடு பொய்யானது, அடிப்படையற்றது என்று சாடும் தீட்சிதர் எவ்வளவு பொய்யான அடிப் படையற்ற வாதத்தை வைக்கிறார்! ஆலை முதலாளிகள், 1832 சீர்திருத்த மசோதா மூலம்தான் இங்கிலாந்தில் அரசியல் அதிகாரத்தில் பங்கேற்றார்கள்; இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில்தான் ஏகாதிபத்தியமாக (ஆங்கிலேய ஆலை மூலதனம்) உருவானார்கள்; ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி தான் 1857 வரை இந்தியாவை ஆளும் உரிமை சாசனம் பெற்றிருந்தது. அது நிதியாதிக்க உயர் குடியினரது வாணிக அமைப்பு. இந்தியாவில் புதிய நிலவுடமை உறவுகளைப் புகுத்திய கிழக்கி திடக் கம்பெனிக்கு எதிராகத்தான் ஆலை முதலாளிகள் போட்டுயிட்டு ஆங்கிலேயப் பேரரசின் நேரடி ஆட்சியை நிறுவினர் என்ற வரலாற்று உண்மைகளை, மூடிமறைத்து திரித்துப் புரட்டுகிறார் தீட்சிதர். அதாவது இருபதாம் நூற்றாண்டில்தான் ஏகாதிபததியமாகிய ஆங்கிலேய ஆலைமூலதனம் 18-ம் நூற்றாண்டின் இறுதியிலேயே இந்தியப் பொருளாதாரம் மற்றும் விவசாயத்தில் உள்ள உற்பத்தி உறவுகளில் ஒரு பகுதி- ஏகாதிபத்தியம் அதன் காலனியின் உற்பத்தி உறவுகளில் ஒரு பகுதியாம்! ஆகி விட்டதாம்.

இந்தப் பொய்யான, அடிப்படையற்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டும், அரசியல் கட்டுமானத்தில் ஏற்பட்ட மாறுதல்களைக் காட்டியும் இந்திய நிலப்பிரபுக்களை தரகு பெரும் நிலப்பிரபுக்கள் என்று புதிய நாமகரணம் சூட்டு

கிறார் தீட்சிதர் "வரலாறு இவ்வாறு காட்டுகிறது. ஒரு முழுக் காலனி ஆதிக்கக் கட்டத்தின் கீழ் இருந்த ஒரு நிலப்பிரபுத்துவ நாட்டில், ஒரு சுதந்திரமான நிலப்பிரபுத்துவ வர்க்கம் ஒரு முழு அழிவிற்கான கட்டத்தின் கீழ் சென்றது; மேலும் ஒரு ஏஜெண்ட் அல்லது தரகு நிலப்பிரபுத்துவ வர்க்கத்தை எழுப்பியிருக்கிறது. இந்திய சூழ்நிலையில், துணைக் கூட்டு மற்றும் ஜமீன்தாரி, இரயத்துவாரி பந்தோபஸ்து ஆகிய வரலாற்று பூர்வமான நடவடிக்கைகள் மூலம் போதிய அளவு வெளிப்படுகிறது'' (பீப்பிள்ஸ் பவர், தொகுதி 3, எண் 4, பக்.4). ஒரு ஏஜெண்ட் அல்லது தரகு பெரும் நிலப்பிரபு வர்க்கம் என்று புதிய நாமகரணம் சூட்டும் அளவுக்கு ஜமீன்தாரி மற்றும் இரயத்துவாரி முறைகள்—உற்பத்தியில் காலனி ஆதிக்கவாதிகளுடன் பிணைக்குமளவு—எந்த மாறுதலையும் கொண்டு வந்துவிடவில்லை. பிரதானமாக நிலவரி வசூலிக்கும் நோக்கத்துடன் புகுத்தப்பட்ட இந்த முறைகள் நிலத்தில் பொதுச் சொத்துடைமையினிடத்தில் தனிச் சொத்துடைமையைப் புகுத்தியதன் மூலம் நிலப்பற்றை உறுதிப்படுத்தி நிலப்பிரபுத்துவ, அரை நிலப் பிரபுத்துவச் சுரண்டலைப் பராமரிக்கவே செய்தது. வரி வசூலிப்பதற்கான ஏற்பாடு தவிர 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை கிராமப்புற சட்டஒழுங்கு உட்பட ஆட்சி அதிகாரம் நிலப்பிரபுக்கள் மூலம்தான், பழைய நிலப்பிரபுத்துவ அரசியல் அமைப்புகள் மூலம் தான் செலுத்தப் பட்டன. சமுதாயப் புரட்சி என்று மார்க்ஸ் குறிப்பிடுபவை சுயதேவை சிறு கிராமச் சமூகங்களை உடைத்து நொறுக்கியதையும், விவசாயப் புரட்சி என்று குறிப்பிடுவது சொத்துடைமை வடிவத்திலான மாறுதலையும்தான். ஆனால் ஏகாதிபத்தியத்தின் (ஆலை மூலதனத்தின்) ஏஜெண்ட், அல்லது தரகு பெரும் நிலப் பிரபுக்கள் என்று ஏதோ சிறப்பாகக் குறிப்பிடும்படி உற்பத்தியில் அவர்கள் எந்த பாத்திரமும் — தீட்சிதர் விசேசமாகக் குறிப்பிடுவது போல்—ஜமீன்தாரி, இரயத்துவாரி முறைகளைப் புகுத்தியதன் மூலம் அதைத் தொடர்ந்து ஆற்றவில்லை.

காலனி ஆதிக்கவாதிகள் செய்துமுடித்த சமுதாயப் புரட்சி ஆக்கபூர்வமாக எதையும் கட்டியமைக்கவேயில்லை; அது செய்தது எல்லாம் அழிவுப் பணிதான் என்ற நிலை மீண்டும் ஆங்கிலேய ஆலை முதலாளிகள் இரயில்வே அமைப்பதைத் தொடங்கும் வரை நீடித்தது. அதன் பின்னரும் விவசாயத்தில் கட்டுமானப் பணிகளை முற்றிலும் புறக்கணித்தே வந்திருக்கின்றனர். தேவையான பண்டப் பயிர் முறையை ஓரளவு புகுத்தியதும் நடந்தது. எனவேதான் மார்க்ஸ், "இங்கிலாந்தோ இந்திய சமுதாயத்தின் முழு அமைப்பையும் சின்னாபின்னமாக்கி விட்டது; அதே போதில் புத்தமைப்புக்கான அறிகுறி ஏதும் இதுவரையில் தோன்றவில்லை. இவ்வாறு, புதிய உலகத்தைப் பெறாது பழைய உலகத்தையும் இழந்து நிற்கும் நிலையானது இந்தியருது இன்றைய துயரத்திற்கு ஓர் அலாதியான சோர்வைக் கூட்டுகிறது'' (மார்க்ஸ், இந்தியாவைப் பற்றி, பக்.20).

"இங்கிலாந்து இந்துஸ்தானத்தில் ஒரு சமுதாயப் புரட்சியை

உண்டாக்கியபோது மிகுந்த இழிந்த ஆசைகளால் உந்தப் பெற்ற தென்பதும் அப்புரட்சியை அறிவற்ற முறையில் நிறைவேற்றியது என்பதும் உண்மையே. ஆனால் பிரச்சனை அதுவல்ல. ஆசியாவின் சமூக நிலையில் அடிப்படையான புரட்சி ஏற்படாமல் மனித குலம் தன் இலட்சியத்தில் நிறைவு எய்துமா என்பதே கேள்வி. நிறைவு எய்தாது என்றால், இங்கிலாந்து இழைத்த குற்றங்கள் மிகக் கொடியவையேயாயினும் அந்தப் புரட்சியை சாதிப்பதில் இங்கிலாந்தானது தன்னை அறியாமலே வரலாற்றின் கருவியாகப் பயன்பட்டிருக்கிறது.'' (மார்க்ஸ், மேற் கூறியது ; பக். 28-29).

இவ்வாறு 1853இல் எழுதிய மார்க்ஸ், ஆங்கிலேயர்கள் தங்களையறியாமலேயே வரலாற்றின் கருவியாகப் பயன்பட்டிருப்பதாகக் கூறுகிறார். ஆனால் தீட்சிதர் திட்டமிட்டே இங்கிலாந்து சமுதாயப் புரட்சியாற்றியதாகக் கூறுகிறார். மேலும்உற்பத்தியில் ஏகாதிபத்தியத்தின் தரகு அல்லது ஏஜெண்ட் வர்க்கமாக நிலப்பிரபுக்கள் பாத்திரமாற்றும் அளவிற்கு விவசாயத்தில் ஆக்கபூர்வ பணிகளின்றி, அழித்தல் பணிகள் மட்டுமே ஆற்றியதாக மார்க்ஸ் கூறுகின்றார். இங்கிலாந்தில் ஆலை முதலாளிகள் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிய பின் தான்—19ஆம் நூற்றாண்டின் மத்தியில்தான்—தவிர்க்க முடியாமல் சில மாறுதல்கள் உற்பத்தியிலும் ஏற்படத் துவங்கின என்கிறார் மார்க்ஸ்.

“சுதேசி சமுதாயத்தில் இருந்த மகத்தான அம்சங்களை யெல்லாம் உடைத்தெறிந்ததன் மூலமாகவும் சுதேசிக் கைத் தொழில்களை வேரோடு கெல்லி எறிந்ததன் முலமாகவும், சுதேசி சமுதாயத்தில் இருந்த மகத்தான அம்சங்களை எல்லாம் உடைத்தெறிந்து தரைமட்டமாக்கியதன் மூலமாகவும் ஆங்கிலேயர்கள் இந்திய நாகரீகத்தை அழித்தார்கள். இந்தியாவில் ஆங்கிலேயர்கள் ஆட்சி நடத்தியது பற்றிய வரலாற்றின் ஏடுகள் இந்த அழித்தல் நடவடிக்கைகளைத் தவிர வேறு எதையும் குறிப்பிடவில்லை. இந்த சர்வநாசக் குவியலுக்கு இடையே புனரமைப்புப்பணி எதுவும் தலை தூக்கவில்லை. ஆயினும் புனரமைப்புப் பணி ஆரம்பிக்கப்பட்டுவிட்டது?'' (மார்க்ஸ், மேற்குறிப்பிடப்பட்டது. பக்: 100) என்று எழுதிய மார்க்ஸ் இங் லாந்தில் ஆலை முதலாளிகளின் வளர்ச்சியை அறிந்து 19ஆம் நூற்றாண்டின் மத்தியில் காலனியாதிக்கவாதிகளுக்குப் புதிய தேவைகள் எழுந்ததாக எழுதினார். “பிரிட்டனில் உள்ள ஆளும் வர்க்கங்களுக்கு இந்தியாவின் முன்னேற்றத்தில் இதுவரையிலும் தற்செயலான, நிரந்தரமற்ற, அபூர்வமான அக்கறைதான் இருந்தது. நிலப்பிரபுக்கள் ஆட்சி அதைக் கைப்பற்ற விரும்பிற்று; பணமூட்டைகள் அதைக் கொள்ளையடிக்க விரும்பினார்கள்; மில் முதலாளிகளோ குறைந்த விலைக்குத் தங்கள் சரக்குகளை அங்கு விற்க விரும்பினார்கள். ஆனால் இப்பொழுது நிலைமை அதற்கு நேர்விரோதமாக மாறிவிட்டது

தங்கள் சரக்குகளை வாங்கி வந்த தேசத்தை அங்கேயே அவைகளை உற்பத்தி செய்யும் தேசமாக மாற்ற வேண்டியது மிக மிக அவசியம் என்பதை மில் முதலாளிகள் கண்டுபிடித்து விட்டார்கள். அந்த நோக்கத்திற்காக, விசேசமாக அந்த தேசத்துக்கு நீர்ப்பாசன வசதிகளையும், உள்நாட்டுப் போக்குவரத்து வசதிகளையும் அளிக்க வேண்டும் என்பதை உணர்ந்தனர்.'' (மார்க்ஸ், மேற்கூறியது; பக். 101-102)

எனவே உற்பத்தியில் ஆங்கிலேயர்கள் காலனி நாட்டில் நுழைவது சமிர் அமீன் போன்ற முதலாளிய அரசியல் மற்றும் சமூகவியலாளர்கள் கூறுவதுபோல புதிய, இரண்டாம் உலகப் போருக்குப் பிந்திய விசயமில்லை. தீட்சிதர் கூறுவதுபோல பெரும் நிலப்பிரபுக்கள் 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இருந்தே உற்பத்தி உறவுகளிலும் ஏகாதிபத்தியம் நுழைவதற்கான ஏஜெண்ட் அல்லதுதாகர்களாக இருந்ததுமில்லை. காலனியாதிக்கம் மற்றும் ஏகாதிபத்தியத்துக்கும், காலனி, அரைக் காலனி நாட்டு நிலப்பிரபுக்களுக்கும் இடையிலான உறவைப் புரிந்துக் கொள்ள வேண்டுமானால் நிலப்பிரபுத்துவ மேற்கட்டுமானத்தில் ஒரு புறம் பிரபுத்துவ உயர்குடியினருக்கும் நிலப்பிரபுக்களுக்கும், மற்றொரு புறம் அவர்களுக்கும் மத்திய அரசு அதாவது முடியரசுக்கும் இடையிலான உறவுகளையும், முதலாளித்துவ புரட்சியில் முடியரசு, நிதியாதிக்க உயர்குடி மற்றும் ஆலை முதலாளித்துவ வர்க்கத்தின் பாத்திரத்தையும் பற்றிய பொதுக் கோட்பாடுகளைத் தொகுத்து பிரயோகிக்க வேண்டும். நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் மத்திய அரசாகிய முடியரசு நிலபிரப்புத்துவ உயர்குடி மற்றும் நிலப்பிரபுக்ளின் உள்ளூர் இராணுவப்பட்டாளங்களையும், பரிவாரங்களையும் கப்பம், திறை, வரியையும் சார்ந்து ஆட்சி நடத்தியது. ஐரோப்பாவில் மத்திய காலத்திய பிரபுத்துவ சமுதாயத்தின் இறுதியில் பிரபுக்கள் களிவெறியாட்ட கூட்டமாகவும், அரசியல், பொருளாதார, சமுதாய வளர்ச்சிக்குத் தடையாகவும் போட்டிகள், மோதல்களின், அழிவுமிக்க போர்களின் சின்னமாகவும் மாறிய பொழுது நகர்புற வர்க்கங்கள், குறிப்பாக நிதியாதிக்க உயர்குடியுடன் கூட்டமைத்துக் கொண்ட முடியரசு முதற்கட்ட முதலாளித்துவப் புரட்சியை நடத்தி முடித்தார்கள். பிரபுக்கள் மற்றும் பிரபுத்துவ உயர்குடியின் உள்ளூர் இராணுவப்பட்டாளங்கள் பரிவாரங்களுக்கு மாற்றாக, எதிராக சுயேச்சையான மத்தியத்துவப் படுத்தப்பட்ட இராணுவத்தை நகர்ப்புற குடிகள் மற்றும் விவசாயிகளைக் கொண்டு நிறுவினர். பிரபுத்துவ அமைப்புகளைத் தூக்கி எறிந்தனர். வரம்பற்ற எதேச்சதிகார முடியரசை நிறுவினர். பின்னர் இது நிதியாதிக்க உயர்குடியின் முதலாளித்துவ முடியரசு, சட்டவழி முடியரசு என்ற வடிவங்களை எடுத்தது. இறுதியாக புரட்சிக்கு எதிராகவும், பிரபுத்துவத்தின் மிச்ச சொச்சங்களாகவும் மாறிய முடியரசைத் தூக்கி எறிந்து ஆலை முதலாளிகள் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியை முடித்தனர்.

ஆனால் காலனிய நாடுகளின் மத்திய அரசையும் இராணுவத்தையும் பெற்றிருக்கும் காலனி ஆதிக்கவாதிகள், காலனியாக்கும் போக்கிலேயே ஏற்கனவே நிலவிய பிரபுத்துவ ஆட்சியை பிரபுத்துவ மத்திய அரசுக்கு எதிரான போரின் மூலம் தூக்கியெறிந்தனர்; எஞ்சிய பிரபுத்துவ உயர்குடி சமரசம் செய்து கொண்டது. எனவே காலனிய மத்தியஅரசு, பிரபுத்துவத்தின் முடியரசு மற்றும் பிரபுத்துவத்தின் உயர்குடியை காலனி ஆதிக்கம் தூக்கியெறிவதன் மூலமும், ஒரு பகுதி பிரபுத்துவ உயர்குடியுடனும், நிலப்பிரபுக்களுடனும் கூட்டமைத்துக்கொள்வதன் மூலமும் நிறுவப்பட்டிருந்ததால், நிலப்பிரபுத்துவத்தை தனது தேவைக்கேற்ப அரை நிலப்பிரபுத்துவமாக மாற்றியமைத்துக் கொண்டதோடு, பேணிப் பாதுகாக்கவும் செய்தது. முதலில் காலனிய நிலப்பிரபுத்துவ அரசமைப்பையும் பின்னர் காலனிய முதலாளித்துவ அரசமைப்பையும் கட்டி அமைத்தது. இவ்வாறு அரசியல் அமைப்பில் மாறுதல் செய்வதென்பது காலனியாதிக்கவாதிகள் ஒவ்வொரு காலனி நாட்டையும் கொள்ளையிடும் அடக்கி ஒடுக்கும் முறை மற்றும் தேசிய விடுதலைப் போராட்டங்களின் வீச்சு போன்றவற்றை பொருத்ததாக இருந்தது.

நேரடியாக அரைக்காலனி நாடுகளாக மாற்றப்பட்ட சீனா, துருக்கி ஆகிய நாடுகளில் பல்வேறு ஏகாதிபத்திரங்கள் ஏற்கனவே அங்கு நிலவிய நிலப்பிரபுத்துவ முடியரசுகளை முதலில் தமது கொள்ளைக்கும் அடக்கி ஒடுக்குவதற்குமான கருவிகளாக மாற்றியதால்—பல்வேறு நிர்ப்பந்தங்கள், போர்கள், சமனற்ற ஒப்பந்தங்கள் மற்றும் பிற அரசியல், இராணுவ, பொருளாதார தலையீடுகளால்— நிலப்பிரபுத்துவத்தைத் தமது தேவைக்கேற்ற அரை நிலப்பிரபுத்துவமாக மாற்றியமைத்துக் கொண்டன. குறிப்பாக சீனத்தில் இந்த முறை பின்பற்றப்பட்டது. ஆனால் பழைய முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி மூலம் முதலில் சீன கொமிண்டாங் பெரு முதலாளிகள் மத்திய அரசியலதிகாரத்தைக் கைப்பற்றினர். பின்னர் அவர்கள் துரோகமிழைத்து ஏகாதிபத்தியத்தின் தரகு முதலாளித்துவ மற்றும் நிலப்பிரபுத்துவ சர்வாதிகாரத்தை நிறுவினர். முற்றிலும் நிலப்பிரபுத்துவ அரசு அமைப்பையே சார்ந்து நிற்காது, அதைத் தூக்கியெறிந்து தரகு முதலாளிகளின் மத்திய அரசையும், தனி இராணுவத்தையும், இன்ன பிற அரசியல் அமைப்புகளையும் பெறுவதன் மூலம் நிலப்பிரபுத்துவ வர்க்கங்களின் மீது ஏகாதிபத்தியங்கள் மேலாண்மையைப் பெறுகின்றன. பிரபுத்துவ உயர்குடியிடமிருந்து மத்திய எதேச்சதிகார அரசையும், சீனப் பெரு முதலாளிகள் பழைய ஜனநாயகப் புரட்சியின் மூலம் (1919) கைப்பற்றி பின்னர் எதிர்ப் புரட்சி மூலம் தரகு முதலாளித்துவ - நிலப்பிரபுத்துவ சர்வாதிகாரமாக்கினர். சீனத்தில் நிலவிய முற்றான பிரபுத்துவ அரசியல் அமைப்பைத் தரகு முதலாளித்துவத் தன்மையுடைய அரைக் காலனிய - அரை நிலப்பிரபுத்துவ அரசியல் அமைப்பாக மாற்றி அமைப்பதற்கான சீர்திருத்தங்களை (1898 சீர்திருத்த இயக்கம், 1901 சீர்திருத்த

இயக்கம்)சீனமுடியரசே மேற்கொண்டிருந்தது. முற்றான பிரபுத்துவ அரசியல் அமைப்பு 1919 புரட்சியில் தூக்கியெறியப்பட்டது. ''பேரரசர்களின் மற்றும் பிரபுத்துவ உயர் குடியினரின் சுதேச்சாதிகார ஆட்சி தூக்கியெறியப்பட்டு அந்த இடத்தில் முதலில் நிலப்பிரபு வர்க்கத்தின் யுத்த பிரபுத்துவ அதிகார வர்க்கத்தின் ஆட்சியும் பின்னர் நிலப்பிரபு வர்க்கத்தினதும் பெருமுதலாளி வர்க்கத்தினதும் கூட்டு சர்வாதிகாரமும் தோற்றம் பெற்றன. கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் ஜப்பானிய ஏகாதிபத்தியத்தினதும் அதன் கைம்பொம்மைகளினதும் ஆட்சி நிலவுகின்றது'' (சீன கம்யூனிஸ்ட் கட்சியும் சீனப் புரட்சியும், பக்-32). எனவே காலனி, அரைக் காலனிய நாடுகளில் நிலப்பிரபுத்துவத்தைத் தூக்கியெறிவதற்கான நேர்மறையான பாத்திரத்தை ஆற்றுவதற்கு மத்திய முடியரசோ நிதி ஆதிக்க உயர்குடியோ, தேசிய முதலாளிகளோ இயலாமற்போனதால்—அவற்றையே சமூக அடிப்படையாகக் கொண்ட காலனிய அரசு அமைக்கப்பட்டிருப்பதால்—நிலப்பிரபுக்களின் சுரண்டலும் ஒடுக்குமுறையும் பேணிக் காக்கப்படுகின்றன. இந்த வகையிலேயே காலனி, அரைக்காலனி நாடுகளில் இருவேறு போக்குகள் மூலம் அரைநிலப்பிரபுத்துத்துவமும், நிலப்பிரபுக்களுடனான கூட்டும்—காலனியாதிக்கத்தின் கூட்டும்—கட்டி அமைக்கப்படுவதாலேயே அது தனிச் சிறப்பானதாக நிலப்பிரபுக்களது தன்மையை தரகு அல்லது ஏஜெண்ட் பெரு நிலப்பிரபுத்துவ வர்க்கமாக காலனிய நாடுகளில் மாற்றிவிடுவதில்லை. நிலப்பிரபுக்களின் மத்திய அரசு அதிகாரம் மாறியிருப்பதும் அரை நிலப்பிரபுத்துவமாகி இருப்பதும் இருவகை நாடுகளிலும் அதிகாரத்தில் வர்க்கத் தனித்தன்மையையே அழிக்கின்றன நிலப்பிரபுத்துவ நாடுகளிலும், நிலப்பிரபுக்கள் தனித்தன்மையுடன், சுயேச்சையுடன் முடியரசின்றி இருந்ததில்லை. காலனிய நிலப்பிரபுத்துவ அரசு காலனிய முதலாளித்துவ அரசாக மாறும் நிகழ்ச்சிப் போக்குதான் இருவகை நாடுகளிலும் நடந்து வந்தன. இது சில நாடுகளில் (இந்தியா) முற்றுப் பெறுவது நிலப்பிரபுக்களது வர்க்கத் தன்மையை மாற்றி விடுவதில்லை. மேலும் தரகு பெரும் நிலப்பிரபுக்களை ஏகாதிபத்தியம் தனது விருப்பத்திற்கேற்றபடி தரகு பெரும் முதலாளிகளின் ஒரு பகுதியாக, தரகு பெரும் விவசாய முதலாளிகளாகத் தம் விருப்பப்படி மாற்ற முடியும் என்கிறார் தீட்சிதர். இதன் பொருள் அரைக் காலனிய-அரை நிலப்பிரத்துவத் தன்மையை இழக்கச் செய்வதோடு ஏகாதிபத்தியம் தனது சமூக அடிப்படையைத் தானே அழித்துக் கொள்ளும் செய்கையைச் செய்து முடிக்கும் என்பதாகும். இது ஏகாதிபத்தியத்தின் தன்மைகளுக்கு முற்றிலும் விரோதமான கோட்பாடாகும் இதற்கெல்லாம் அடிப்படையாக ஜமீன்தாரி, இரயத்துவாரி முறையைப் புகுத்தியதையும், இந்தியா முழுக் காலனியாக இருந்ததையுமே முன்னிறுத்துகிறார்.

தீட்சிதர் வாதிடுவது போலத்தான் காலனியாதிக்கவாதிகளும் ஜமீன்தாரி, இரயத்துவாரி முறைகளைப் புகுத்தியபோது அவற்றை நியாயப்படுத்தினர். ஆனால் விளைவுகள் அவற்றை

பொய்ப்பித்துக் காட்டிவிட்டன. கிராமப்புற மக்களிலேயே ஜமீன்தார்கள்தான் மிகவும் கற்றறிந்தவர்கள்; அவர்களுக்கு நிலச் சொத்துடமையையும் உரிமையையும் உறுதி செய்வது, நிலத்தை அபிவிருத்தி அடையச் செய்வதோடு சிறந்த விவசாயத்தையும் பெறமுடியும் என்றே கூறினர். ஆனால் ஒரு புறம் கிராமத் தொழில்கள் சீரழிந்தன; மற்றொரு புறம், பொது மராமத்துப் பணிகளைப் புறக்கணித்ததால் விவசாயம் சீரழிந்தது. முற்போக்காகப் பீற்றிக் கொண்ட விவசாயம் ஸ்தலத்தில்லாத நிலப்பிரபுத்துவ முறையாக (absentee landlordism) கெட்டொழிந்தது. கிராமமே ஸ்தலத்திலில்லாத நிலவுடமையாளர்கள் மற்றும் உடமையில்லாத விவசாயிகள் என்று இரு விவசாய வர்க்கங்களாகப் பிரிந்தது. அரசுக்கும் உண்மையாக உழுபவருக்கும் இடையில் எக்கச்சக்கமான குத்தகை கறப்பதில் மட்டுமே அக்கறை கொண்ட இடைத்தரகர்களை உருவாக்கியது. அரசின் தலையீடு—நிலவரி செலுத்தத் தவறினால் மட்டும் இருப்பது—வேறுவகையில் இல்லாததால் சுரண்டும் வர்க்கங்கள் கொடிய குத்தகைமுறை, வெளியேற்றம், கூலியற்ற உழைப்பு மற்றும்பிற சமூகக் கொடுமைகளை இழைத்தன. கிராமமே ஒடுக்குமுறை கொடுங்கோன்மையின் சின்னமாக விளங்கின. இந்திய விவசாயம் ஊக்கமற்றதாக வெறும் உயிர் ஓம்புதலுக்கான விவசாயமாகியது. ஏகாதிபத்தியத்தின் ஏஜெண்டு அல்லது தரகு வர்க்கங்களில் ஒன்றாக தீட்சிதர் வர்ணிக்கும் பெரு நிலப்பிரபுக்களில் ஒரு பிரிவான ஜமீன்தார்களே கூடசில இடங்களில் அழிந்துபோய் புதிய நிலவுடமையாளர்களும் தோன்றியதுண்டு. "ஆதி ஜமீன்தார் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள், பரம்பரையாக நிலவுடமையாளர்களாக இருந்த முன்னாள் நிலச் சொத்துடமையாளர்களைத் தங்குதடையின்றி எல்லையற்ற முறையில் கொள்ளையடித்தாலும் கூட, கம்பெனியின் நிர்ப்பந்தத்தின் கீழ் விரைவில் மறைந்து போனார்கள்; வணிகத் தரகு சூதாட்டக்காரர்களுக்கு இவர்கள் இடங்கொடுத்தார்கள்; அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்திலுள்ளநிலம் தவிர, வங்காளத்திலுள்ள நிலம் அனைத்தையும் இவர்கள்தான் இப்பொழுது வைத்திருக்கிறார்கள். இந்த வர்த்தக சூதாட்டக்காரர்கள் பாட்னி என்றழைக்கப்படும் ஒரு விதமான ஜமீன்தாரி நில உறவைப் புகுத்தியிருக்கிறார்கள். பிரிட்டிஷ் அரசாங்கம் அவர்களை இடைத் தரகர்களாக மாற்றியிருக்கிறது; இவர்களும் பாட்னிதார்கள் என்றழைக்கப்படும் 'பரம்பரை' இடைத்தரகர்கள் என்ற ஒரு வர்க்கத்தை சிருஷ்டித்து இருக்கிறார்கள். இவர்கள் மேலும் உப பாட்னிதார்களை சிருஷ்டித்திருக்கிறார்கள். இவ்வாறு பல இடைத்தட்டுக்காரர்கள் உருவாக்கப்பட்டிருக்கிறார்கள்". (மார்க்ஸ், இந்தியாவைப் பற்றி, பக். 93-94).

மொத்தத்தில் ஜமீன்தாரிப் பகுதிகளில் ஆங்கிலேய நிலப்பிரபுத்துவம், அயர்லாந்து இடைத்தட்டுக்காரர்முறை, வரி வசூலிப்பவராக நிலப்பிரபுவை மாற்றும் ஆஸ்திரிய முறை

மற்றும் அரசே உண்மையான நிலப்பிரபு என்ற ஆசிய முறை—நிலவரி செலுத்தத் தவறும் நிலவுடைமையாளர்களிடமிருந்து நிலத்தைப் பறிமுதல் செய்வது, வாரிசுரிமைச் சட்டம், தேவையானபோது ஜமீன்தார்களை மாற்றும் அதிகாரம் ஆகியவை மூலம்—ஆகிய அடங்கிய ஒரு கலவையான முறையே நிலவியது. ஜமீன்தாரி முறையை நோக்கி மாறிக்கொண்டிருந்த இரயத்துவாரி மற்றும் மகல்வாரி பகுதிகளில் ஒருபுறம், ஆங்கிலேய நிலப்பிரபுக்களையும் மற்றொரு புறம். பிரெஞ்சு விவசாய சொத்துடைமையாளர்களைப் போன்று அரசினுடைய பண்ணை அடிமை முறையையும், வாரக்குத்தகை முறையையும் கொண்டு வந்தது. ஏகாதிபத்தியத்துக்கு சேவை செய்யும் ஒரு அரை நிலப்பிரபுத்துவ சமுதாயப் பொருளாதார அமைப்பையும், சமூக அடிப்படையான நிலப்பிரபுக்களையும் கட்டிப் பாதுகாப்பதே இதன் நோக்கமாக அமைந்தது.

நிலப்பிரபுத்துவ முறையிலான காலனிய அரசு இருந்தவரை—முதலாவது சுதந்திரப் போரைத் தொடர்ந்து முதலாளிய முறையிலான காலனிய அரசை கட்டி அமைத்தனர்—நிலப்பிரபுக்களின் உள்ளூர் அரசியல் அமைப்புகள் நீடித்ததோடு, புதிய அதிகாரங்களையும் காலனி ஆதிக்கவாதிகள் அவற்றிடமே ஒப்படைத்தனர். முதல் இந்திய சுதந்திரப்போரைத் தொடர்ந்து முதலாளித்துவ முறையிலான காலனிய அரசு கட்டியமைக்கப்படும் போக்கு தொடங்கியது. 'சுய நிர்வாக ஆட்சிக்கு சுதேசிகளைப் பயிற்றுவிப்பது', 'நாடாளுமன்ற ஆட்சி முறை', 'உள்ளூராட்சி மன்ற அமைப்புகள்' ஆகிய சீர்திருத்தங்கள் மூலம் அதாவது பிரதானமாக தேசிய விடுதலை இயக்கங்களையும் அமைப்புகளையும் திசை திருப்பி அவைகளை நிறுவனமயமாக்கும் நடவடிக்கைகள் மூலம், நிலப்பிரபுக்கள் காலனிய அரசமைப்பில் பங்கேற்றனர். அதன் மூலம் உள்ளூர் நிலப்பிரபுத்துவ அரசியல் அமைப்புகள் கலைக்கப்பட்டு மத்தியத்துவப் படுத்தப்பட்ட முதலாளித்துவ முறையிலான காலனிய அரசியல் அமைப்புகள் படிப்படியாகக் கட்டியமைக்கப்பட்டன.

அரசியல் அமைப்பு முறையில் ஏற்பட்ட இந்த மாற்றங்கள், நிலச் சொத்துடைமை வடிவத்தில் கொண்டுவரப்பட்ட மாற்றங்கள், இந்திய சமுதாயப் பொருளாதாரப் படிவத்தின் மிக முக்கியமான அம்சமாகிய சிறு கிராம சமூக அமைப்புகளுக்கான பொருளாதார அடிப்படைகள் தகர்க்கப்பட்டது போன்ற காலனி ஆதிக்கவாதிகளின் நடவடிக்கைகள் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர், சண்டாளர் என்னும் வர்ணங்களாகிய சமூக எஸ்டேட்டுகளைத் தகர்க்கத் தொடங்கின. ஆனால் அவற்றுக்கு அடிப்படைகளாக அமைந்த ஜாதிய அமைப்புகளாகிய சமூக வேலைப் பிரிவினைகளை மாற்றிவிடவில்லை. ஜாதிய அமைப்பு முறைகள் இந்திய நிலப்பிரப்புத்துவ சமுதாய அமைப்பில், பண்ணையடிமை முறை மற்றும் அடிமை முறையிலும் கேடான கொடிய உற்பத்தி உறவு முறையாகும். பிறப்பால் ஜாதி தீர்மானிக்கப்படுவதன் மூலம் வேலைப் பிரி

வினை தீர்மானிக்கப்படுவது, பொதுச் சொத்துடைமையில் பங்கு, அதாவது அனுபோக உரிமை சில ஜாதியினருக்கு மறுக்கப்படுவது, வெட்டிமைத் தொழில், தீண்டாமை போன்ற பொருளாதாரம் அல்லாத கொடிய உறவுகள் போன்ற முதலாளித்துவத்துக்கு முந்திய உற்பத்தி உறவுகளே நீடிக்கப்பட்டு அந்த அடிப்படையிலேயே தனிச் சொத்துடைமைகள் வழங்கப்பட்டு பாதுகாக்கப்பட்டன. காலனிஆதிக்கவாதிகள்புகுத்தியசாதி,மதம் சொத்துடைமை அடிப்படையிலான பிரதிநிதித்துவம், வேலை வாய்ப்பு போன்ற முறைகள் ஜாதிய, மத அமைப்புகளை மேலும் வலுப்படுத்துபவையாகவே அமைந்தன. ஆனால் இந்திய நிலப் பிரபுத்துவ கிராம சமுதாய அமைப்பின் பொருளாதாரத்தைத் தகர்த்ததானது முன்பு நிலவிய உற்பத்தி உறவுகளில் தவிர்க்க முடியாத பின்விளைவுகளை ஏற்படுத்தின. மீண்டும் கூறுவதானால் இவை ஆங்கிலேய நீராவிச் சக்தியும், சுதந்திரப் போட்டி வியாபாரமும் ஏற்படுத்திய சமுதாயப் புரட்சியின் பின்விளைவுகளேயன்றி வேறெதுமில்லை. இதுவே சுயதேவைப் பூர்த்தியுடைய குடிசைத் தொழிலையும் விவசாயத்தையும் பிரித்து இரண்டையும் சீரழித்தது. இதன் விளைவாக ஜாதி அடிப்படையிலான குலத் தொழில்களைத் துறக்கும்படி சில ஜாதியினர் நிர்பந்திக்கப்பட்டனர். அதேபோன்று ஜமீன்தாரி, இரயத்துவாரி முறைகளின் கீழ் தனிச் சொத்துடைமை அளித்ததானது குத்தகை விவசாயிகளாகிய உடைமையற்ற விவசாயிகளையும், ஸ்தலத்திலில்லாத நிலப்பிரபுக்கள் முறையையும், அரை நிலப்பிரப்புத்துவ உறவுகளையும் ஏற்படுத்தியதால் கிராமச் சமுதாயத்தால் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட உயிர் ஓம்புதலுக்கான சாதனங்களை பெறும் முறை மாறியது. தனிச் சொத்துடைமையாளர்களுக்கும் உழைப்பவர்களுக்கும் இடையிலான ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலானதாக மாறியது. ஜாதிய உற்பத்தி உறைவுகளை படிப்படியாக மாற்றுவதற்கான துவக்கமாக அமைந்தது. ஆனால் ஜாதிய முறை என்னும் சமூக வேலைப்பிரிவினையாகிய சமூக நிறுவனம் நிலப்பிரப்புக்களின் சுரண்டலுக்கும் ஒடுக்கு முறைக்கும் அதிகபட்சம் சாதகமானதால் — நிலப்பிரப்புத்துவ சுவீகரிப்புக்கான முக்கியமான அடிப்படை பொருளாதாரமல்லாத உறவு முறைகளின் மூலம் ஒடுக்குவதின் மூலம் சுரண்டுவதாகும். ஏனெனில் நிலப்பிரப்புத்துவ உற்பத்தி முறையின் மூலம் உபரி உற்பத்தி அல்லது உபரி உழைப்பே சுரண்டப்படுகிறது முதலாளித்துவ முறையைப் போல் உபரி மதிப்பு அல்ல. —பலாத்காரமான வழிகளில் நிலப்பிரபுக்கள் சாதிய முறையைப் பாதுகாத்தனர். எனவே 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் எடுத்துக் கொண்ட சில நடவடிக்கைகள் தவிர விவசாய உறவுகளில் பாதிப்பு ஏற்படுத்தும் குறிப்பிடத்தக்க மாறுதல் எதையும் காலனி ஆதிக்கவாதிகள் மேற்கொள்ளவே இல்லை.

ஆங்கிலேய காலனிஆதிக்கவாதிகளின் முதலாளித்துவம் இந்திய சமூகப் பொருளாதாரத்தின் சீரழிவில் முக்கிய பங்கு ஆற்றியது. இந்தியா மெல்ல மெல்ல ஒரு முதலாளித்துவ சமுதாய

மாக வளர்ச்சியுறும் வாய்ப்பைத் துரிதப்படுத்தியது. இந்தியா வின் சுய தேவைப் பூர்த்தியுடைய சிறு கிராமச் சமூகங்களின் இயற்கைப் பொருளாதாரத்தின் அடிப்படைகளைச் சீர்குலைத்தது; நகரங்களிலும் கிராமச் சமூகங்களிலும் இருந்த கைவினைத் தொழில்களை அழித்தது; மறுபுறம், நகரங்களிலும் நாட்டுப் புறங்களிலும் வர்த்தகப் பொருளாதார வளர்ச்சியை துரிதப் படுத்தியது. ஏற்கனவே கூறியவாறு இந்தச் சீர்குலைவுப் பணியைத் தவிர, இந்த நிலைமைகள் முதலாளித்துவ உற்பத்தியின் வளர்ச்சிக்கான சில புறநிலை நிலைமைகளையும் வாய்ப்புக்களையும் ஏற்படுத்தின. காரணம், இயற்கைப் பொருளாதாரத்தின் அடிப்படைகளைத் தகர்த்தானது முதலாளித் துவத்திற்கு வர்த்தக சந்தையொன்றை ஏற்படுத்திய அதே வேளையில் பெரும் தொகையான விவசாயிகளினதும் கைவினை ஞர்களினதும் சீரழிவு, ஓட்டாண்டித்தனம் உழைப்புச் சந்தை யையும் ஏற்படுத்தியது.

ஆனால் காலனிய ஆதிக்கவாதிகளின் நோக்கம் இந்த புற நிலை நிலைமைகளைப் பயன்படுத்திக் கொண்டு இந்தியாவை ஒரு முதலாளித்துவ சமுதாயப் பொருளாதாரப் படிவமாக மாற்றுவதல்ல. மாறாக, காலனியாகவும், ஓர் அரை நிலப்பிரபுத் துவ நாடாகவும் கட்டிக் காப்பதுதான். எனவேதான் ஆரம்பத் தில் இந்தியச் சிறு கிராமச் சமூகங்களது பொருளாதார அடிப் படைகளை சீரழித்தபோது உருவாக்கிய வர்த்தகச் சந்தைகளை 19-ஆம் நூற்றாண்டின் இறுதிகாலம் வரை, ஆங்கிலேய முத லாளித்துவ உற்பத்திப் பொருட்களின் விற்பனை மற்றும் இந்திய கச்சாப் பொருட்களின் கொள்ளைக்காகப் பயன்படுத்தினர். மற் றொருபுறம் பெரும் அளவில் கிராமப்புற விவசாயிகளது மற்றும் கைவினைஞர்களது ஓட்டாண்டித்தனம் காரணமாக உருவாகிய உழைப்புச் சந்தையை, இந்தியாவில் முதலாளித்துவ உற்பத்தி யின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்துவதை விட்டு பர்மா, இலங்கை, தென்ஆஃப்ரிக்கா மற்றும் வடகிழக்கிந்திய மலைப் பகுதிகள், மல பார்,குடகு, நீலகிரி போன்ற மலைப்பகுதிகளில் தேயிலை, ரப்பர், காஃபி மற்றும் சுரங்க வேலைகள் மூலம் கச்சாப் பொருட்களைக் கொள்ளையிடுவதற்கு மட்டுமே பயன்படுத்தினர்.

உண்மையில் 19-ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே— ஏகாதிபத்தியத்தின் நவீன ஆலை முதலாளித்துவத் தோற்றத் திற்குப் பின்னரே, ஆலைப் பொருட்களின் ஏற்றுமதி என்ற கட்டம் போய் நிதிமூலதனக் கட்டம் தோன்றிய பின்னரே— முதலாளித்துவ உற்பத்தி முறையும், நவீன தொழில்களில் முத லீடு செய்வதும் பெருமளவில் தொடங்கியது. ஆனால் அந்த உற்பத்தி முறை ஏகாதிபத்திய முதலாளித்துவத்தினுடைய விரி வாக்கப்பட்ட மறு உற்பத்திக்கானதாக இருந்ததால் தரகு முதலாளித்துவத் தன்மையுடையதாக இருந்தது. அதற்கு முன்பு இருந்த நவீனத் தொழில் முதலீடுகள் மிகவும் சிலவானவையும் சொற்பமானவையுமே தரகு முதலாளித் துவத்தன்மையுடைய முதலாளித்துவ உற்பத்தி முறையின் தோற்

றமும் வளர்ச்சியுமான இப்புதிய மாற்றம் ஆங்கிலேய ஏகாதிபத்தியம் இந்தியாவை காலனியாக்கிய பின்னர் இந்திய சமுதாயப் பொருளாதாரப் படிவத்தில் ஏற்பட்ட மாற்றங்களில் ஒரு அம்சம் மட்டுமே. இதற்கு நேர்மாறாக இந்திய சமுதாயப் பொருளாதாரப் படிவத்தில் முதலாளித்துவ உற்பத்தி முறையின் வளர்ச்சிக்கு—குறிப்பாக விவசாயத்தில் முதலாளித்துவ உற்பத்திமுறையின் வளர்ச்சிக்கு—முட்டுக் கட்டை போடக்கூடிய இன்னொரு அம்சமும் உண்டு. அதாவது முதலாளித்துவ உற்பத்தி முறையின் வளர்ச்சியைத் தடுப்பதற்காக இந்திய நிலப்பிரபுத்துவ சக்திகளுடன்—நிலப்பிரபுக்கள், பழங்குடித் தலைவர்கள், மன்னர்கள், இன்னும் பிறர்—காலனியவாதிகள் அரசியல் கூட்டுகளை ஏற்படுத்திக் கொள்வதாகும். ஆங்கிலேய ஏகாதிபத்தியம் தரகு முதலாளி வர்க்கத்தை மட்டுமல்ல இந்தியாவின் பிரபுத்துவ நிலப்பிரபு வர்க்கத்தையும் தனது காலனி ஆட்சிக்கான பிரதான ஊன்றுகோலாக ஆக்கியிருந்தது. ஏகாதிபத்திய வல்லரசுகள் "பெரும்பான்மை மக்களுக்கெதிராக முதலில், முந்தைய சமூக அமைப்பிலிருந்த ஆளும் தட்டுடன், அதாவது பிரபுத்துவ நிலப்பிரபுக்களுடனும் வர்த்தகர்கள், லேவாதேவிக் காரர்களுடனும் சேர்ந்து கொள்கின்றன. அவை தமது பிற்போக்குக் கூட்டணிகளின் வாழ்வின் அடிப்படையாக விளங்கும் முதலாளித்துவத்துவத்துக்கு முந்திய சுரண்டல் வடிவங்கள் அனைத்தையும் (விசேசமாக கிராமங்களில்) பாதுகாக்கவும் நீடித்திருக்கச் செய்யவும் எங்கெங்கும் முயல்கின்றன" (கம்யூனிச அகிலத்தின் 6-வது காங்கிரசில் அங்கீகரிக்கப்பட்ட, காலனிய, அரைக் காலனிய நாடுகளின் புரட்சி இயக்கங்கள் பற்றிய ஆராய்ச்சி - லெனின்). காலனிய, அரைக்காலனிய நாடுகளின் நிலப்பிரபுத்துவம் பற்றிய ஏகாதிபத்தியங்களின் மேற்கண்ட கொள்கைக்கு இந்தியாவும், அதைக் காலனி ஆக்கியிருந்த ஆங்கிலேய ஏகாதிபத்தியமும் விதிவிலக்காக அமையவில்லை. எனவே 1947 அதிகார மாற்றத்தின்போது நிலப்பிரபுத்துவக் காலத்தின் தன்னிறைவுள்ள சிறு கிராமச் சமூகங்களின் ஆசிய உற்பத்தி முறையிலான இயற்கைப் பொருளாதாரத்தின் அடிப்படைகள் அழிக்கப்பட்டிருந்தது ஆனால் நில பிரபுத்துவச் சுரண்டல் முறையின் அடிப்படையாக விளங்கிய ஜாதிய, மத, கொத்தடிமை வடிவங்களும் உற்பத்தி உறவுகளும் அப்படியே இருந்தன. அது இருந்தது இருந்தபடியே தரகு முதலாளித்துவத் தன்மையுடைய முதலாளித்துவ உற்பத்தி முறையினதும் மற்றும் லேவாதேவி முறையினதும் சுரண்டலுடன் இணைந்து இந்திய சமூகப் பொருளாதாரப் படிவத்தில் ஆதிக்கம் செலுத்தியது.

1790 ஆம் ஆண்டுகளிலிருந்தே நிலவரி வசூலிக்கும் உரிமை வியாபாரப் பண்டமாகி விட்டது. பணவாடகைக்கும் குத்தகை விடும்முறை வந்துவிட்டது: அதைத் தொடர்ந்து காஃபி, ரப்பர், தேயிலை மற்றும் அவுரி போன்ற பண்டப் பயிர் சாகுபடியும், பண்ட உற்பத்தியும் அதிகரித்து வந்திருக்கிறது. ஆங்கிலேயத் தொழில் மூலதனம் நிதிமூலதனமானதிலிருந்து—நவீன தொழில்

மயமாகி நிதிமூலதன ஏற்றுமதியைத் தொடங்கியதிலிருந்தே 1890-ஆம் ஆண்டுகளிலிருந்தே—இந்தியாவில் முதலாளித்துவம் உருவாகத் தொடங்கிவிட்டது. இருப்பினும் அரசியல், சமூகப் பொருளாதார மற்றும் வரலாற்றுக் காரணங்களால் இந்திய விவசாயத்தில் முதலாளித்துவ உற்பத்தி முறை வளர்ந்து மேலோங்கிய நிலை பெற முடியாமற்போய்விட்டது.

ஆங்கிலேயர்களின் காலனியான இந்தியா முதலில் வணிக மூலதனத்தாலும் (1702—1813), பின்னர் தொழில் மூலதனத்தாலும் (1813 –1890), இறுதில் நிதி மூலதனத்தாலும் (1890 முதல் 1947 வரை) சுரண்டப்பட்டது. வணிக மற்றும் தொழில் சகாப்தத்தில் பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் இடையில் பண்ட மாற்றங்கள் மட்டும்தான் நிகழ்ந்தன. ஆங்கிலேயத் தொழில் மூலதனக் கொள்கையின் சகாப்தத்தின்போது முதலாளித்துவ வளர்ச்சிக்குத் தேவையான—தலையாய முன் நிபந்தனையாகிய—உற்பத்தியாளர்கள் (கைவினைஞர்களும் உழவர்களும்) தமது உற்பத்திச் சாதனங்களை இழப்பது நிகழ்ந்தது. அதாவது இந்திய நிலப்பிரபுத்துவ சமுதாயத்தின் சிறு கிராமச் சமூகங்களின் பொருளாதார அடிப்படைகள் தகர்ந்து போயின. முதலாளித்துவ வளர்ச்சிக்குத் தேவையான—மற்றொரு தலையாய முன்னிபந்தனையாகிய—பணம், உற்பத்திச் சாதனங்கள் மற்றும் வாழ்க்கை தேவைகளை வைத்துக் கொண்டு மூலதனத்தைப் பெருக்கிக் கொள்ள மற்றவர்களின் உழைப்புச் சக்தியை வாங்குவதில் ஆர்வமுடைய இந்தியமுதலாளிகள்இருக்கவில்லை இந்த மாதிரியான நிலையைத்தான், மார்க்ஸ் (இந்தியாவைப் பற்றி என்ற தொகுப்பில்), 'இருப்பதையும் இழந்த நிலை, புதிதாக ஏதும் பெறாத நிலை' என்றார். இத்த நிகழ்ச்சிப் போக்கு காலனியாதிக்கத்தின் பிரத்தியேக குணாம்சங்களால் எழுந்தது. இதன்படி சுரண்டப்பட்ட உபரி உற்பத்தி பிரிட்டனுக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஆங்கிலேய முதலாளித்துவ உற்பத்தி முறையின் விரிவாக்கப்பட்ட மறு உற்பத்திக்காகப் பயன்படுத்தப்பட்டது; இந்தியாவில் முதலாளித்துவம் சமுதாய வளர்ச்சிப் படியில் அப்போது வரவேயில்லை. ஆங்கிலேய தொழில் மூலதனம் நிதி மூலதனமாக—நவீன ஏகாதிபத்தியமாக—மாறியதற்குப் பின்னர்தான் மிகமிக வரம்புக்குட்பட்ட அளவில் இந்தியாவில் முதலாளித்துவம் வளரத் தொடங்கியது. ஆனால் அது தரகு முதலாளித்துவ தன்மையுடையதாக இருந்தது எனவேதான் இதைச் செய்யும்போதே முதலாளித்துவம் வளர்ச்சியடைவதற்கான அடிப்படை முன்தேவைக்கு—நிலப்பிரபுத்துவம் அழிக்கப்படுவதற்கு—இவை வழிவகை செய்யவில்லை. மாறாக ஏகாதிபத்தியவாதிகள் நிலப்பிரபுத்துவத்துடன் சேர்ந்துகொண்டனர், பேணிக் காத்தனர்; மக்களை அடக்கி ஒடுக்கிக் கொள்ளையிட தமது பிரதான சமூக அடித்தளமாகப் பயன்படுத்தினர். இதற்கு இரு பிரதான காரணங்கள் இருக்கின்றன. முதலாவதாக, நிலப்பிரபுத்துவத்தை நொறுக்குவது உண்மையான தேசிய முதலாளித்துவ சக்திகளும்,தேசிய உணர்வுகளும் தோன்ற வழிவகுக்கும். இவை காலனியாதிக்கவாதிகளுக்கு எதிராக மக்களை அணிதிரட்டும்.

இரண்டாவதாக, நிலப்பிரபுத்துவத்தை நொறுக்குவதால் வாழ்க்கைத்தரம் உயரும்; நிதி மூலதனத்தால் சுரண்டிப் பெறக் பெறக் கூடிய உபரி மதிப்பைக் குறைக்கும். 1947 அதிகார மாற்றத்திற்குப் பின்னும் ஏகாதிபத்தியங்களின் சமூக அடிப்படைகளான தரகு அதிகார வர்க்க முதலாளிகள் மற்றும் நிலப்பிரபுக்களாகிய ஆளும் வர்க்கங்களும் நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவுகளைத் தூக்கியெறியவில்லை. மாறாக மேற்கண்ட காரணங்களுக்காகப் பேணிப் பாதுகாக்கவே வேண்டியிருந்தது.

காலனி ஆதிக்கத்தில் தொழில் மூலதனச் சுரண்டல் காரணமாகவும், ஜமீன்தாரி, இரயத்துவாரி முறைகளின் காரணமாகவும் இந்திய நிலப்பிரபுத்துவ சமுதாயத்தின் சிறு கிராமச் சமூகங்களின் பொருளாதார அடிப்படைகள் தகர்ந்து, உற்பத்தியாளர்கள் (கைவினைஞர்களும் உழவர்களும்) உற்பத்திச்சாதனங்களை இழந்தனர் என்பதும் சந்தைப் பொருளாதாரம் தோற்றுவிக்கப் பட்டது. என்பதும் உண்மையே. இவ்வாறு உற்பத்தியாளர்கள் உற்பத்திச் சாதனங்களிலிருந்து பிரிக்கப்படுவது முதலாளித்துவ உற்பத்தி முறையின் முன்தேவையாக இருப்பினும் தேசிய முதலாளித்துவ வளர்ச்சிக்கான நிதிச் செல்வம், உற்பத்திச் சாதனங்கள், உற்பத்திக்கான வாழ்க்கைத் தேவைகளையுடைய முதலாளிகள் இல்லாவிடின் உடனடியாக முதலாளித்துவ உற்பத்திமுறை தோனறி வளர்வதோ மேலாதிக்கம் பெறுவதோ சாத்தியமில்லை என்பதை மேற்கத்திய நாடுகளின் வளர்ச்சிப் போக்குகள் எடுத்துகாட்டியிருக்கின்றன அங்கும் பண்லணயடிமை முறை ஒழிக்கப்பட்ட பின்னரும் கூட ஆலை முதலாளித்துவம் மேலாண்மை பெறவும், குறிப்பாக விவசாயத்தில் முதலாளித்துவ உற்பத்தி முறை தோன்றி வளரவும் பல ஆண்டுகள் பிடித்திருக்கின்றன. அப்பொழுதும் கூட ஒரே பாதையில் முதலாளித்துவ உற்பத்தி முறை தோன்றி வளரவில்லை. விவசாயிகளின் விவசாயப் புரட்சி அல்லது முதலாளிகளின் விவசாயப் புரட்சி மூலமாக நடந்தேறிய நாடுகளில் துரிதமாகவும், முதலாளிகள் நிலப்பிரபுக்களுடன் சமரசம் செய்து கொண்ட நாடுகளில் மிகவும் துன்ப துயரம் மிக்க, மெதுவான, இடர்பாடுகள் மிக்க வழியிலும் வளர்ந்தது.

உதாரணமாக இங்கிலாந்தில் 14-ஆம் நூற்றாண்டிலேயே பண்ணையடிமை முறை ஒழிக்கப்பட்டுவிட்டது. எனினும் நாட்டின் பொருளாதாரத்தில் முதலாளித்துவ உற்பத்தி முறையும் ஆட்சியில் ஆலை முதலாளித்துவ வர்க்கமும் உடனடியாக மேலாதிக்கம் பெற்றுவிடவில்லை. பண்ணை அடிமை முறை ஒழிக்கப்பட்டவுடன் எண்ணிறந்த சுதந்திரமான விவசாய நில வுடமையாளர்களேயிருந்தனர். முதலாளித்துவ உற்பத்தி முறைக்கு அடித்தளமிட்ட புரட்சியின் முதற்கட்டமாக 15-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 16-ஆம் நூற்றாண்டின் முதற்பகுதியிலும்தான் விவசாயிகளை நிலப்பிரபுத்துவக் கட்டுகளிலிருந்து பிய்த்தெறிவதிலும், உழைப்புச் சந்தையில் சுதந்திரமான பாட்டாளிகளாக விசிறியடிக்கப் படுவதும் நடந்தது. மக்களைப் பலாத்காரமாக அவர்களின் சொத்துடமைத் தளைகளிலிருந்து

பறிமுதல் செய்வதென்பது கால்வினியச் சீர்திருத்தத்திற்குப் பின்னும், மத சபையின் நிலங்களைப் பறிமுதல் செய்த பின்னும் அதாவது 16–ஆம் நூற்றாண்டில்தான் மிகத் தீவிரமடைந்தது. அப்பொழுதிலிருந்தே முதலாளித்துவ முறையிலான நிலக்குவியல் தொடங்கினாலும் 18-ம் நூற்றாண்டில்தான் முதலாளித்துவ உற்பத்தி முறை தோன்றி வளர்ந்தது; 19ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில்தான் பொருளாதாரத்தில் மேலாண்மை பெற்றதும், முதலாளித்துவ வர்க்கம் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றதும் நடந்தேறியது.

முதலாளித்துவ தன்மையுடைய பட்டறை உற்பத்தி எல்லா நாடுகளையும்விட இத்தாலியில்தான் முதன் முதலில் தோன்றியது. அதேபோல் பண்ணையடிமை முறை ஒழிக்கப் பட்டதும் அங்குதான் எல்லாவற்றிற்கும் முதலாக நடந்தேறியது. நிலப்பிரப்புத்துவத் தளைகளிலிருந்து விமோசனம் பெற்ற பண்ணையடிமைகள் உடனடியாக சுதந்திரமான பாட்டாளிகளாக மாற்றப்பட்டனர்; ஏனென்றால் அவனுக்காக எஜமானர்கள் நகர்புறங்களில் — நகர்புற முதலாளித்துவ தன்மையுடைய பட்டறையாளர்கள் — தயாராக காத்திருந்தார்கள். 15ஆம் நூற்றாண்டின் இறுதியில் நடந்த மிகப்பெரிய பூகோளக் கண்டுபிடிப்புகள் (கியூபா,பகாமஸ், தென், வட அமெரிக்கக் கண்டங்கள், ஆப்பிரிக்காவின் தென்முனையைச் சுற்றி இந்தியாவிற்கு வரும் கடல்வழி ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டது) காரணமாக இத்தாலியின் வடபகுதி (வணிக நகரங்களான ஜெனோவா, வெனிஸ்) வகித்து வந்த வணிக மேலாதிக்கம் ஒழிந்தது. இதன் விளைவாகப் பின்னோக்குத் திசையில் ஓர் இயக்கம் ஆரம்பித்தது. திரள் திரளாக நகர்புறத்து தொழிலாளர்கள் கிராமப்புறங்களுக்குத் துரத்தப்பட்டார்கள். இது தோட்டப்பயிர் வளர்ப்பு என்ற முன் கண்டிராத சிறு அளவு விவசாய சாகுபடி முறையைத் தூண்டி விட்டது. அதன் பின்னர். நீண்ட கால சிறு அளவு விவசாயமானது நீடித்தது. இதற்குப்பின்னரே — பண்ணையடிமை முறை ஒழிக்கப்பட்டு முதலாளித்துவ உற்பத்தி முறை முற்றாக நிலைநாட்டப்பட்ட பின்னரே மாஜினி, கரிபால்டி (1848-50) காலத்தில் இத்தாலி ஒரு தேசமாவதற்கான போருக்குப்பின்னரே — முதலாளித்துவ உற்பத்தி முறை அங்கு மேலாண்மை பெற்றது.

அமெரிக்காவில் அடிமைச் சொந்தக்காரர்களை புரட்சிகரமான வன்முறை மூலம் தாக்கியெறிந்தும் புதிய நிலங்களைக் காலனியாக்கியும் விடுதலை பெற்ற தேசிய முதலாளிகள் முதலாளித்துவ உற்பத்தி முறையை உடனடியாகக் கொண்டு வந்தார்கள். விடுதலை பெற்ற தேசிய முதலாளிகள் மற்றும் ஐரோப்பாவின் முதலாளித்துவ வளர்ச்சி அமெரிக்காவின் வேகமான முதலாளிய உற்பத்திமுறை மேலோங்குவதற்கு அடிப்படைக் காரணங்களாக அமைந்தன.

ஜெர்மனியில் 14-ம் நூற்றாண்டில் பண்ணை அடிமைமுறை ஒழிக்கப்பட்டிருப்பினும் 1523 கீழ்நிலை நிலப்பிரபுக்களது போர் மற்றும் 1525 விவசாயிகளது போர் ஆகியன தோல்வியுற்ற பின் —அவை சிற்றரசுகளுக்கும் முடியரசுக்கும் இடையிலான போராய் சீரழிந்த பின்—பண்ணை அடிமை முறை மீண்டும் உயிர்ப்பிக்கப் பட்டு விவசாயிகள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். எனவே நிலப்பிரபுத்துவ உறவுகள் நீடித்தன. மூன்று பிரெஞ்சு புரட்சிகளின் வீச்சு, 1848 ஜெர்மனிப் புரட்சியின் விளைவு காரணமாக முதலாளித்துவ உற்பத்தி முறை வளரத் தொடங்கியது. ஆனால் ஜெர்மனியிலும் ருஷ்யாவிலும் முதலாளிகள் இறுதிவரை ஜனநாயகப் புரட்சியை நிலப்பிரபுத்துவத்திற்கெதிராக வழி நடத்திச் சென்று அதை முற்றிலும் துடைத்தெறியாமல் பிரஷ்யன்—ஜங்கர் முறையிலான நிலப்பிரபுத்துவ முதலாளித்துவ பொருளாதாரத்தையே வளர்த்தனர். இவ்வாறு விவசாயத்தில் முதலாளித்துவ உற்பத்தி முறை வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு பாதைகளில் வளர்ந்தது மட்டுமல்ல, பண்ணையடிமை முறை ஒழிக்கப்பட்டவுடன் முதலாளித்துவ உற்பத்திமுறை உடனடியாகத் தோன்றி வளர்ந்து மேலாண்மை பெற்றுவிட வில்லை. நிலப்பிரபுத்துவத்திலிருந்து முதலாளித்துவத்துக்கு மாறிச் செல்லும் பொது விதிகளுக்குப் பொருந்தினும், இந்தப் பரிணாம வளர்ச்சிப் போக்கை ஒவ்வொரு நாட்டின் பருண்மையான அரசியல், சமூக, பொருளாதார மற்றும் வரலாற்றுக் காரணிகளே தீர்மானித்தன.

எனவே இந்தியாவிலும் 1790 ஆம் ஆண்டிலிருந்தே நிலவரி வசூலிக்கும் உரிமை வியாபாரச் சரக்காகியிருந்தும், பணவாடகை செலுத்தும் குத்தகைமுறை புகுத்தப்பட்டிருந்தும், இந்திய நிலப் பிரபுத்துவ சிறு கிராமச் சமூகங்களின் பொருளாதார அடிப்படை தகர்ந்து உழைப்பாளர்கள் உற்பத்திச் சாதனங்களை (19 ஆம் நூற்றாண்டின் பின் பகுதியிலேயே) இழந்திருந்தும், 1890-ஆம் ஆண்டுகளிலிருந்தே இந்தியாவில் முதலாளித்தும் உருவாகத் துவங்கியிருந்தும், அதற்கு முன்பே பண்ட உற்பத்தி அதிகரித் திருந்தும், காலனி ஆதிக்கத்தின் காரணமாக ஏகாதிபத்தியம் நிலப்பிரபுக்களுடன் அரசியல் கூட்டு ஏற்படுத்திக் கொண்டு அரை நிலப்பிரபுத்துவ அமைப்பைப் பேணிக் காத்ததாலும், தேசிய முதலாளித்துவ சக்திகளை ஒடுக்கியதாலும், பல ஆண்டுகளாக உபரி உற்பத்தியைக் கொள்ளையிட்டு வந்ததாலும், முதலாளித்துவ உற்பத்திமுறை விவசாயத்தில் தோன்றி வளர்வதற்கான வாய்ப்பின்றி இருந்தது, காலனியாதிக்கமே இதற்குப் பெருந்தடையாக இருந்தது. ஆனால் 1947 அதிகார மாற்றத் திற்குப் பின்னும் ஏகாதிபத்தியங்களின் சமூக அடிப்படைகளான தரகு அதிகார வர்க்க முதலாளிகளும், நிலப்பிரபுக்களும் அதே காரணங்களுக்காக அரை நிலப்பிரபுத்துவத்தைப் பேணிக் காத்து வருகின்றனர்.

—×—

# 5. அதிகார மாற்றத்திற்குப் பின்னும் அரை நிலப்பிரபுத்துவ அமைப்பே நீடிக்கிறது; நிலச்சீர்திருத்தங்களின்விளைவுகள்.

---

1947 அதிகார மாற்றத்திற்குப் பிறகு தரகு-அதிகாரவர்க்க முதலாளித்துவ மற்றும் நிலப்பிரபுத்துவ சர்வாதிகார அரசு நிலப்

பிரபுத்துவத்தை ஒழிப்பது என்ற பெயரில் மேற்கொண்ட 'ஜமீன் இனாம் ஒழிப்பு', 'சுதேச சமஸ்தானங்களை இணைப்பது மன்னர் மானிய ஒழிப்பு, 'விவசாயத்தில் இடைத்தட்டுக்காரர்களை ஒழிப்பது, விவசாயிகளின் நிலப்பற்றுதலை உறுதிப்படுத்துவது. குத்தகைக்தாரர் பந்தோபஸ்து சட்டம், 'நிலஉச்சவரம்பு', 'உபரி நிலங்களையும்பயன்படுத்தாதபுறம்போக்கு நிலங்களையும் பகிர்ந்தளிப்பது' ஆகியவற்றின் மூலம் எடுத்துக் கொண்ட நிலச்சீர்த்த நடவடிக்கைகள், நீர்ப்பாசனத்திட்டங்கள், சமுக வளர்ச்சித் திட்டங்கள், கிராமப்புற வட்டிலேவாதேவியை ஒழிப்பது கிராம, கூட்டுறவு சொசைட்டிகள் விற்பனை மூலம் கொள்முதல், கூட்டுறவு சொசைட்டிகள், விவசாய முதலீட்டிற்கு பல்வேறு வகைகளிலும் குறைந்த வட்டி மற்றும் தவணை முறைகளில் திருப்புதல் என்று கடனளிப்பது, கூட்டுறவு வங்கிகள் மற்றும் தேசியபயமாக்கப்பட வங்கிகளின் பாத்திரம், நவீன இயந்திரங்களைப் புகுத்துவது, முதலீட்டு பொருட்களுக்கும் விளைபொருட்களுக்கும் மானியம், விவசாய ஆராய்ச்சிகள், டயிற்சிகள், அமோக விளைச்சல் ரகங்களைப் புகுத்துவது ஆகிய பசுமைப் புரட்சி என்ற பெயரில் மேற்கொண்டுள்ள விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகள் கிராமபுறங்களுக்குள்ளும் அவற்றை நகரங்களோடு பொருளாதார ரீதியில் இணைப்பது மற்றும் பணப்பயிர் விளைச்சல் அதிகரிப்பு, இயந்திரங்கள் புகுத்துவது, கூலி உழைப்பாளர்களின்சந்தை, நிலவாடகையைப் பணத்தில் செலுத்துவது ஆகிய பரிணாம வளர்ச்சிப் போக்குகள் இவையும் இன்ன பிறவும் இந்திய விவசாயத்தில் நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையில் ஏற்படுத்தியுள்ள மாறுதல்

களைப் பற்றி பல்வேறு அரசியல் சக்திகளும் குழப்பியிருக்கும் அளவு மற்றெந்தப் பிரச்சினையையும் குழப்பவில்லை போலும். ஆளும் வர்க்கக் கட்சிகளும் மற்றும் பிற சமரச கட்சிகளும், முதலாளித்துவ அரசியல் மற்றும் சமூகவியலாளர்களும் இவற்றை முற்போக்கு நடவடிக்கைகள், சோசலிச நடவடிக்கைகள், ஜனநாயக — சோசலிச நடவடிக்கைகள் என்றும் திரிபுவாதிகளும் நவீன திரிபுவாதிகளும் டிராட்ஸ்கியவாதிகளும் இந்திய விவசாயம் முதலாளித்துவ உற்பத்தி முறையைக் கொண்டதாக மாறி விட்டதையும் முற்போக்கு நடடிக்கைகளையும் குறிக்கின்றன என்று திரித்துப் புரட்டுகின்றனர். மற்றொரு புறம் சாருவும் பிறஇடது சந்தர்ப்பவாதிகளும் மற்றும் பிற மார்க்சிய-லெனினிய குழுக்களும் இந்திய விவசாயத்தின் நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையில் மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள பரிணாம வளர்ச்சி மற்றும் மாறுதல்களை முற்றாக அலட்சியம் செய்கின்றனர். இந்திய விவசாயப் பொருளாதாரத்தில் ஏற்பட்டு வரும் பரிணாம வளர்ச்சி பற்றிய சரியான மதிப்பீட்டிற்கு வர வேண்டியது எல்லா மார்க்சிய-லெனினியவாதிகளுக்கும் இன்றியமையாததாகும் அப்பொழுது தான் சரியான கட்சித் திட்டம் யுத்ததந்திரம்,போர்த் தந்திரக் கொள்கைகள் மற்றும் விவசாயத் திட்டம் முன் வைக்கப்பட்டு புரட்சியை முன்னெடுத்துச் செல்ல இயலும். முதலாளித்துவ அரசியல், முதலாளித்துவ சமூகவியலாளர்கள் திரிபுவாதிகள், டிராட்ஸ்கியவாதிகள் ஆகியோரது செல்வாக்கு மற்றும் குழப்பத்திலிருந்து புரட்சிகர அணிகளை வென்றெடுக்கவும் இது அவசியமாகிறது.

பழைய உற்பத்திஉறவுகளுக்கும் புதியஉற்பத்திசக்திகளுக்கும் இடையிலான முரண்பாடுபுதிய பொருளாதாரஅடித்தளத்திற்கும் பழைய மேல் கட்டுமானத்திற்கும் இடையிலான முரண்பாடு ஆகிய இரு அடிப்படை முரண்பாடுகள் தீர்க்கப்படும்பொழுது தான் — அதாவது பழைய மேற்கட்டுமானம் மற்றும் பழைய உற்பத்தி உறவுகள் தூக்கியெறியப்பட்டு புதிய மேல்கட்டுமானமும் உற்பத்தி உறவுகளும் நிலைநாட்டப்படும்பொழுதுதான் — புதிய உற்பத்திமுறை பொருளாதாரத்தில் மேலாண்மை பெற்றதாக மாறுகிறது. ஆனால் இந்த அடிப்படை முரண்பாடுகள் தோன்றி வளர்ந்து கூர்மையாகிப் பகைமையானவைகளாக மாறியிருப்பதே பழைய உற்பத்தி சக்திகளும் பழைய உற்பத்தி உறவுகளும் நீடிக்கும்போதே புதிய உற்பத்தி சக்திகள் புதிய பொருளாதார அடித்தளம் ஆகியவை பரிணாமவளர்ச்சியுற்று இருப்பதையும். மேலும் அவற்றின் வளர்ச்சிக்குப் பழைய உற்பத்தி உறவுகளும் பழைய மேல்கட்டுமானமும் தடையாகிப் போய் விட்டதையும் குறிக்கின்றன. இந்த அடிப்படையிலேதான் நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவுகளும் மேல்கட்டுமானமும் நீடிக்கும்போதே அந்த சமுதாயத்தில் முதலாளித்துவ முறையிலான உற்பத்தி சக்திகளும் புதிய பொருளாதார அடித்தளமும் அவற்றிற்கு எதிராக தோன்றி பரிணாம வளர்ச்சியுறுகின்றன. நிலப்பிரபுத்துவ உற்பத்திஉறவுகளையும் அவற்றைக்கட்டிக்காக்கும் மேற் கட்டுமானத்தையும் தூக்கியெறியும் போது மட்டுமே புதிய உற்பத்தி உறவுகள்

மற்றும் புதிய மேற்கட்டுமானம் நிலைநாட்டப்படும்போது மட்டுமே தங்குதடையற்றமுதலாளித்துவ முறையிலானஉற்பத்தி சக்திகளின் வளர்ச்சி சாத்தியம். இவ்வாறு புதிய உற்பத்தி சக்திகளுக்கு இடப்பட்டிருக்கும் விலங்குகள் உடைத்தெறியப்பட்ட பின்னரே ஒரு சமுதாயத்தில் முதலாளித்துவ உற்பத்திமுறை மேலாண்மை பெற்றதாக வளரமுடியும். அதற்கு முந்திய முதலாளித்துவ முறையிலான புதிய உற்பத்தி சக்திகளும், புதிய பொருளாதார அடித்தளமும் பரிணாம வளர்ச்சியுற்றிருப்பது அளவு ரீதியான வளர்ச்சியையே குறிக்கிறது. முதலாளித்துவ உற்பத்திமுறை சமுதாயத்தின் சாராம்சத்தைத் தீர்மானிப்பதாக மாறிவிட்டதைக் குறிப்பதில்லை.

முதலாளித்துவ உற்பத்தி சக்திகளுக்கு இடப்பட்டிருக்கும் விலங்குகளை உடைத்தெறிவதற்காக நிலப்பிரபுத்துவ மேற்கட்டுமானத்தையும் உற்பத்தி உறவுகளையையும் தூக்கியெறிவது பொருளாதார ரீதியிலான அவசியமாயிருப்பினும், 1848 ஜெர்மனிப் புரட்சிக்குப் பின் பாட்டாளிவர்க்கம் மற்றும் பிற பரந்து பட்ட மக்களின் எழுச்சியைக் கண்டஞ்சி அரசியல் ரீதியிலான அவசியம் காரணமாக முதலாளித்துவ வர்க்கம் நிலப்பிரபுத்துவ சக்திகளுடன் சமரசம் செய்துகொள்ளும் போக்கை மேற்கொண்டது. பொருளாதார ரீதியிலான அவசியம் காரணமாக நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையை சீர்திருத்த முறைகளில் பரிணாம முதலாளித்துவ உற்பத்தி முறையில் வளர்ச்சியடையச் செய்தது. 1917 ருஷ்யப் புரட்சிக்குப் பின் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக்கு தலைமை தாங்கும் தகுதியை வரலாற்று ரீதியாகவே பாட்டாளி வர்க்கத்திடம் இழந்த முதலாளித்துவ வர்க்கத்திற்கு இம்முறையே தொடர்ந்து சாதகமாக இருந்தது.

''பாட்டாளிவர்க்கத்திற்கு எதிராக சில பழங்கால தொடர்ச்சிகளை (எடுத்துக்காட்டாக முடியரசு, நிரந்தர இராணுவம் முதலியவை) நம்பி நிற்பது முதலாளி வர்க்கத்திற்கு அனுகூலமானது. முதலாளித்துவப் புரட்சி மிதமிஞ்சிய உறுதியுடன் பழங்காலத்தின் மிச்ச சொச்சங்கள் அனைத்தையும் துடைத்தெறியாமல் சிலவற்றை நீடித்து வைத்திருப்பது— அதாவது இந்தப் புரட்சி முற்றிலும்முரணொழிந்ததாக இல்லாமலிருப்பது, முழுமையில்லாமலிருப்பது, உறுதியாய், விட்டுக்கொடாததாய் இல்லாமலிருப்பது—முதலாளி வர்க்கத்திற்கு அனுகூலமானது இக்கருத்தை சமூக - ஜனநாயகவாதிகள் அடிக்கடி சற்று வேறு விதமாகவும் வெளியிடுகிறார்கள்: அதாவது, முதலாளி வர்க்கம் தனக்குத் தானே துரோகம் செய்து கொள்கிறது; சுதந்திர லட்சியத்துக்குத் துரோகம் செய்கிறது, முரணற்ற ஜனநாயகப் போக்கிலே போகும் திறம் முதலாளித்துவத்திற்குக் கிடையாது என்று முதலாளித்துவ ஜனநாயகத்தை நோக்கிப் போகும் அவசியமான மாற்றங்கள் மேலும் மெதுவாக, மேலும் படிப்படியாக, மேலும் எச்சரிக்கையாக நடப்பது குறைந்த உறுதியுடன் நடப்பது, புரட்சிவழியேயில்லாமல் சீர்திருத்தங்களின்

இணைந்திருக்கும் இந்நாட்டின் விவசாயத்தில் ஏற்பட்டு வரும் பரிணாம வளர்ச்சி தவிர்க்க முடியாமல் முதலாளித்துவத் தன்மையுடையதாகத்தான் இருக்கும். ஆனால் முதலாளித்துவ பரிணாம வளர்ச்சியின் சில கூறுகளைத் தாறுமாறாகத் தொகுக்கும் முதலாளித்துவ அரசியல் மற்றும் சமூகவியலாளர்களும், எல்லா வண்ணத் திரிபுவாதிகளும் இந்திய விவசாயத்தில் முதலாளித்துவ உற்பத்தி முறை சாங்கோபாங்கமாக நிலைநாட்டப்பட்டுவிட்டதாகக் கூறுகின்றனர். நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையோ, கலாச்சாரங்களோ, அவற்றின் மிச்ச சொச்சங்களாக மட்டுமே நிலவுவதாகக் கூறுகின்றனர். சீர்திருத்தங்கள் என்றாலே ஒப்பீட்டு வகையில் முற்போக்கானவை என்றும் அவை பழைய அமைப்பைக் கெட்டிப்படுத்துவதற்கானவை அல்ல என்றும், மாறாக பழைய அமைப்பை மாற்றுவதாகவும், பலவீனப்படுத்துவதாகவும் பசப்புகின்றனர். சீர்திருத்தங்களின் மூலம் நெருக்கடிகளைச் சந்திப்பதால் ஆளும் வர்க்கங்கள் அரசியல் ரீதியில் நீண்டகாலப்போக்கில் பலவீனப்படுகின்றன என்பது உண்மையே. ஆனால் தற்போது நிலவும் அமைப்பைக் கட்டிப் பாதுகாக்கும் நடவடிக்கைகளே அவை என்ற மிகவும் சாதாரண உண்மையை இந்த ஆளும் வர்க்கங்களின் ஊது குழல்கள் மறைக்கின்றனர். இங்கிலாந்தில் சார்ட்டிஸ்டு தொழிலாளர் இயக்கத்துக்கு முன்னும் பின்னும் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தங்கள் குறிப்பாக 1832-சீர்திருத்தம் பாட்டாளி வர்க்கத்துக்குத் துரோகமிழைத்து, இங்கிலாந்து பிரபுத்துவ உயர்குடி மற்றும் நிதி ஆதிக்க உயர்குடியோடு சமரசம் செய்து கொண்டு முடியரசைக் கட்டிக்காக்க முதலாளிகள் முற்பட்டதும் சரி, ரஷ்யாவில் எழுந்த விவசாயிகளின் எழுச்சிகளைத் தொடர்ந்து ஜாரிசத்தையும், நிலப்பிரபுத்துவ உறவுகளையும் கட்டிக்காக்க 1861 நிலச் சீர்திருத்தமும் 1906 ஸ்டோலிபின் பிற்போக்கு நிலச்சீர்திருத்தமும் சரி, முதலாளித்துவ பரிணாம வளர்ச்சியைக் குறிக்கும் அதே சமயம் பழைய அமைப்பைக் கட்டிகாக்கும் நடவடிக்கைகளாகவே இருந்தன. உண்மையில் சீர்திருத்தங்களைப் பற்றிய மார்க்சிய—லெனினியக் கண்ணோட்டத்தை விடுத்து, முதலாளித்துவ கண்ணோட்டத்தை மேற்கொள்ளும் எல்லா வண்ண திரிபுவாதிகளும் குறிப்பாக டிராஸ்ட்கிய வாதிகளும் எல்லா காலனி, அரைக்காலனி நாடுகளிலும் நிலவும் நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவுகளை எப்போதுமே அங்கீகரிக்க மறுத்து வருதுள்ளனர். விவசாயிகளின் விவசாயப் புரட்சிக்கு துரோகமிழைத்து ஒன்று, முதலாளித்துவ சீர்திருத்தப்பாதையை மேற்கொண்டு புரட்சியை நேரிடையாக கைவிடுவது; அல்லது, சோசலிசப் புரட்சி, நாடுதழுவிய ஆயுதந்தாங்கிய எழுச்சி என்ற 'இடது' சந்தர்ப்பவாதப் பாதையை மேற்கொண்டு புரட்சிப் புரட்சிப் போர்வையில் மறைமுகமாக துரோகமிழைப்பதென்பது — இதுவே எல்லா நாடுகளிலும் இவர்களது நடவடிக்கைகளாக இருந்து வருகின்றன.

நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவுகளின் சிதைவு மற்றும் முதலாளித்து உறவுகளின் தோற்றம், வளர்ச்சி ஆகியவையே

அதாவது சமுதாய உழைப் பிரிவினையில் ஏற்படும் மாறுதல்களே உற்பத்திமுறையில் ஏற்படும் பரிணாம வளர்ச்சியைத் தீர்மானிக்கும் அடிப்படைப் போக்காகும். உற்பத்தி உறவுகளைக் குறிப்பாக சமுதாய உழைப்புப் பிரிவினையைத் தெளிவாகவும், வெளிப்படையாகவும், சட்டபூர்வமாகவும் சித்தரிப்பது சொத்துடமை வடிவங்களே ஆகும். நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவுகளில் இரு முக்கியமான அம்சங்கள் பின்வருவன ஆகும்.

1. நிலம் மனிதர்களது, குறிப்பாக உழைப்பாளர்களது உற்பத்திக்கான இயற்கையான புறவயமான நிலைமைகளில் ஒன்றாகவும், உற்பத்திக்கான கருவி மற்றும் உற்பத்திக்கான கச்சாப் பொருட்களின் கிடங்காகவும் இருந்து வருகிறது. உழைப்பாளன் உற்பத்திக் கருவிகளோடு பிணைக்கப்பட்டிருக்கிறான். இயற்கையான, புறவயமான நிலைமைகளையும், நிலத்தையும் உழைப்பாளன் அவனுக்கே சொந்தம் என்கிற முறையில் சடத்தன்மை வாய்ந்த தனது அங்கமாகவே கருதுகிறான்.

2. நிலப்பிரபுத்துவ உற்பத்திமுறையின் இன்னொரு முக்கியமான அம்சம், அது எளிய, வெறும் சாதாரணமான மறு உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டதாகும் எனவே முதலாளித்துவ உற்பத்திமுறை போன்று ஆளும் வர்க்கம் உபரிமதிப்பை அல்ல, உபரிஉற்பத்தியை அதாவது உபரிஉழைப்பைக் கொள்ளையிடுவதன் மூலம் பிரதானமாக உழைக்கும் மக்களைச் சுரண்டிக் கொழுத்தது. எனவே பொருளாதாரமற்ற வேறு முறைகளிலான அடக்குமுறை பல்வேறு வடிவங்களில் உழைப்பாளர்கள் மீது திணிக்கப்பட்டிருந்தது. பொருளாதாரமற்ற வேறு முறைகளிலான அடக்குமுறை முதலாளித்துவ உற்பத்திமுறைக்கு முரணானதாகும்.

இந்த இரு அடிப்படை அம்சங்களிலிருந்து நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவுகளின் வேறுபல அம்சங்கள் எழுகின்றன. நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவுகளின் இந்த இரு அடிப்படை அம்சங்களையும் துடைத்தெறிவதுதான் முதலாளித்துவ உற்பத்திமுறையின் வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாத முன்னிபந்தனைகளாகும் இதன் சாராம்சம் என்னவென்றால் 1. உற்பத்திக் கருவிகளிடமிருந்து உழைப்பாளனைப் பிரித்து, உழைப்புச் சந்தையை உருவாக்குவதும், உற்பத்திக் கருவிகளை நிலப்பிரபுத்துவ உறவுகள் அடிப்படையிலான சொத்துடமை வடிவங்களைத் தகர்த்து, உடமையாளனிடமிருந்து பிரித்து பரிவர்த்தனைப் பண்டமாக்குவது. 2. உற்பத்தியாளர்கள் மீதான எல்லா நிலப்பிரபுத்துவ முறைகளிலுமான ஒடுக்குமுறைகளையும், குறிப்பாக பொருளாதாரமற்ற அடிமைத்தனத்தையும் ஒழித்து சுதந்திரமான கூலி உழைப்பாளர்களை உருவாக்குவதன் மூலம் உழைப்புச் சக்தியையும் பரிவர்த்தனைப் பண்டமாக்குவது. அதாவது நிலத்தையே பரிவர்த்தனைப் பண்டமாக்குவதும், கூலி உழைப்

பாளனது உற்பத்திக் கருவிகளைக் கொண்டில்லாமல், நிலவுடமையாளனது உற்பத்திக் கருவிகளைக் கொண்டு விவசாயம் செய்வது என்கிற முறையில் எல்லா உற்பத்திக் கருவிகளையும் பரிவர்த்தனைப்பண்டமாக்குவது; உழைப்பாளர்கள் மீதானஎல்லாவகைப் பொருளாதாரமற்ற ஒடுக்குமுறை அடிப்படையிலான சுரண்டலையும் ஒழிப்பதன் மூலம் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளை நிறுவுவது. இந்த இரு அடிப்படைப் போக்குகளில் இந்திய விவசாயத்தில் ஏற்பட்டு வரும் பரிணாம வளர்ச்சியை ஆய்ந்தறிவதுதான் சமுதாய உழைப்புப் பிரிவினையில் ஏற்படும் மாற்றங்களைத் தெளிவாக வரையறுப்பதாகும்.

1947 அதிகாரமாற்றத்திற்கு முன்பு மேற்கண்ட இரு அம்சங்களில் ஏற்பட்டிருந்த நிலைமைகளை ஏற்கனவே பார்த்தோம். அதற்குப்பிறகு தரகு-அதிகாரவர்க்க முதலாளிகள் மற்றும் நிலப்பிரபுக்கள் அரசு மேற்கொண்ட நிலச் சொத்துடமை வடிவங்களிலான மாறுதல்கள் சாராம்சத்தில் இரு வழிகளிலான நடவடிக்கைகளை உள்ளடக்கியிருந்தன. 1. குத்தகை முறைச் சீர்திருத்தம். 2. நில உச்சவரம்பு ஆகியனவாகும். இவ்விரண்டுமே முதலாளித்துவ சொத்துடமை வடிவங்களைக் கொண்டுவந்து நிலத்தைப் பரிவர்த்தனைப் பண்டமாக்குவதற்குப் பதில் நேரெதிரான விளைவுகளை ஏற்படுத்துவன ஆகும்.

### 1. குத்தகை முறை சீர்திருத்தம்பற்றி:

18 ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கிலேயே காலனி ஆதிக்கவாதிகள் புகுத்திய ஜமீன்தாரி, இரயத்துவாரி, மகல்வாரி நிலவுடமை முறைகளின் குணாம்சங்களும் பல இடங்களில் ஒன்று கலந்து புதிய அம்சங்களை உருவாக்கின. முக்கியமாக ஜமீன்தாரி முறையை நோக்கி மற்ற அமைப்புகள் இரண்டும் வளர்ந்தன. அதாவது ஸ்தலத்தில் இல்லாத நிலவுடமையாளர்களும், நிலத்தைச் சொந்தமாகப் பெற்றிராத குத்தகைக்காரர்களும்என்றஇரு பிரிவினர் உருவாயினர். ஜமீன்தார்கள், நிலப்பிரபுக்கள் ஆகியோரது பெரும் பண்ணை விவசாயமும் அக்கம் பக்கமாகவே குத்தகை, உள்குத்தகை மூலம் சொந்தக் கருவிகளைக்கொண்டு விவசாயம் செய்யும் சாகுபடியாளர்களும் இருந்தனர். ஏற்கனவே இருந்த உழைப்பு வாடகை முறையைவிட பண்ட வாடகை, பண வாடகை, வாரக்குத்தகை ஆகிய குத்தகை முறைகள் பிரதான முறைகளாயின. கடும் குத்தகைக்கு நிலத்தை விடுவதும், குத்தகை தராவிட்டால் விவசாயிகள் ஈவிரக்கமற்ற முறையில் தண்டிக்கப்படுவதும், வெளியேற்றப்படுவதும் சாதாரண நடைமுறையாக இருந்தது. ஜமீன்தாரி முறை நிலவிய பகுதிகளில் நிலவரி வசூலிக்கும் உரிமையே வியாபார சரக்காகியது அல்லது அடகு பொருளாகியது. லேவாதேவிகாரர்களுக்கு குத்தகை மற்றும் நிலவரி வசூலிக்கும் உரிமை விற்கப்பட்டன. எனவே நிலவுடமையாளர்களுக்கும் குத்தகைதாரர்களுக்கும் இடையில் புதிய இடைத்தரர்கள் தோன்றி வளர்ந்திருந்தனர்.

ஜமீன்தார்கள் மற்றும் பெரும் நிலப்பிரபுக்களது, பிரபுத்துவ ஆடம்பர வாழ்க்கை முறை இப்போக்கைத் துரிதப்படுத்திய.

1947 அதிகார மாற்றத்தால் ஆட்சிக்கு வந்த தரகு - அதிகார வர்க்க முதலாளிகள் மற்றும் நிலப்பிரபுக்களின் அரசியல் பிரதிநிதியாகிய காங்கிரசு அதற்கு முன்பே நிலச்சீர்திருத்தங்களைச் செய்வதாக உறுதியளித்து இருந்தது. 1935 அலகாபாத் காங்கிரசில் அதற்கான தீர்மானமும் நிறைவேறியது. அதிகார மாற்றத்துக்குப் பின்னர் குத்தகைக்காரர் சீர்திருத்தம் பற்றிய தேசியக் கொள்கை, முதல் ஐந்தாண்டு திட்டத்தில் அறிவிக்கப்பட்டது அந்த வழிகாட்டுதலின் அடிப்படையில் மாநில அரசுகள் குத்தகைக்காரர் பந்தோபஸ்து சட்டங்களை நிறைவேற்றும்படி விடப்பட்டன.

அதன்படி நிலச் சொந்தக்காரர்கள் எவ்வளவு நிலம் தனது சொந்தச் சாகுபடிக்கு வைத்துக்கொள்ளலாம் என்பதற்கான வரம்பை மாநில அரசுகளின் தீர்மானத்துக்கு விடப்பட்டது. இந்த வரம்புக்குட்பட்டு பெரிய நிலப்பிரபுக்கள், ஜமீன்தார்கள் தங்கள் விருப்பப்படி குத்தகைதாரர்களை வெளியேற்றிவிட்டு சொந்த சாகுபடிக்கு நிலத்தை எடுத்துக் கொள்ளலாம் சொந்த சாகுபடி என்பது நிலப்பிரபுக்களது, ஜமீன்தார்களது குடும்பத்தை சேர்ந்த யாராவது ஒருவர் மேற்பார்வையில் இருந்தாலே போதுமானது; சொந்த சாகுபடிக்கு நிலப்பிரபுக்கள், ஜமீன்தார்கள் எடுத்துக் கொள்ளாத உச்சவரம்புக்கு மேலுள்ள உபரி நிலங்களைப் பொருத்தவரை, குத்தகைதாரர்கள் இதுவரை செலுத்தி வந்த நிலவாடகை போன்று பன்மடங்கு அளவு நிலத்திற்கான விலையாக தவணை முறையில் செலுத்தி நிலத்தைச் சொந்தமாக்கிக் கொள்ளலாம். இராணுவத்தினர், விதவைகள், அலுவலர்கள், சிறு உடமையாளர்கள். ஆகியோர் புதுக் குத்தகைக்கு விடும் உரிமையுடையவர்கள். நில உச்சவரம்புக்கு உட்பட்டு நிலம் வைத்திருப்பவர்களிடம் குத்தகை சாகுபடி செய்பவர்களுக்கு எவ்வித நிரந்தர அல்லது பரம்பரை உரிமையை அளிப்பதைப் பற்றி ஒன்றுமே சொல்லவேயில்லை. இவ்வாறு முதல் திட்டம் தனது கொள்கையில் பெரிய நிலப்பிரபுக்களிடமிருந்து நில உச்சவரம்பு போக எஞ்சியுள்ள நிலங்களில் குத்தகை சாகுபடி செய்பவர்கள் மட்டும் நிரந்தர மற்றும் பரம்பரை உரிமையைப் பெறலாம் எனக் கூறியது. மேலும் 'சொந்த சாகுபடிக்கென' நிலங்களை எடுத்துக் கொள்வது நிலப்பிரபுவின் விருப்பத்திற்கு விடப்பட்டதால் அவன் எல்லா குத்தகைதாரர்களையும் பயமுறுத்தவும், எல்லோரையும் வெளியேற்றவும் சட்டப்பூர்வமாக வகை செய்யப்பட்டது. உச்சவரம்புக்குட்பட்டு நிலம் வைத்திருப்பவர்களைப் பொருத்தவரையில் அவர்கள் 5 வருடங்களுக்குள் நிலத்தைச் சொந்தமாக சாகுபடிக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென கூறப்பட்டது. இதன் மூலம் இந்த நிலங்களில் குத்தகை சாகுபடி செய்தவர்கள் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை இக்கட்டான முறையில் தவிக்கவிடப்

பட்டனர். இவ்வாறு முதல் தேர்தலுக்காக முழங்கிய "யார் நிலத்தை உழுகிறார்களோ அவர்கள் அதன் பயனை அனுபவிக்கும் வகையில் விவசாய அமைப்பு மாற்றி அமைக்கப்படும்" என்ற திட்டத்தை அமுல்படுத்தியதாகக் கூறிக் கொண்டார்கள்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாக்கப்படும் பொழுது குத்தகைதாரர் சீர்திருத்தம் குத்தகைதாரர்களுக்கு எவ்வித பாதுகாப்பையும் அளிக்கவில்லை என்பது அங்கீகரிக்கப் பட்டது. குத்தகைதாரர்கள் "தாங்களே மனமுவந்து குத்தகை உரிமையை ஒப்படைப்பது" என்ற பெயரில் பலாத்காரமாக குத்தகைதாரர்கள் நிலத்திலிருந்து வெளியேற்றப் பட்டார்கள் என்பது தெளிவாகத் தெரிய வந்தது. சம்மந்தப்பட்ட வருவாய் துறை அதிகாரிகள் அங்கீகரித்த பின்னரே 'மனமுவந்து குத்தகை உரிமையை ஒப்படைப்பது என்பது செல்லுபடியாகும்' என இரண்டாவது ஐந்தாண்டுத்திட்ட ஆவணம் பரிந்துரைத்தது. இதன் மூலம் குத்தகைதாரர்களை அதிகார வர்க்கத்தின் பிடியிலும் அது சிக்க வைத்தது. சொந்த சாகுபடி என்ற பெயரில் நில வெளியேற்றம் பெருமளவில் நடந்ததை ஒப்புக்கொண்டு அப்பிரச்சினையைத் தீர்க்க 'சொந்த சாகுபடி' என்பதைத் தெளிவாக வரையறுக்கும்படி மாநில அரசுகளைக் கோரியது. சொந்தமாக நிலத்தில் சாகுபடி செய்வது, அல்லது வேலைக்காரர்கள், கூலியாட்களை அமர்த்தி சாகுபடி செய்வது 'சொந்த சாகுபடி' எனச் சொல்லல் பட்டது. விவசாய சீசன் சமயத்தில் பெரும்பாலான நாட்கள் சொந்த சாகுபடி செய்ய நிலத்தை எடுத்துக் கொள்பவரோ அல்லது அவரது குடும்பத்தின் உறுப்பினரோ நிலம் உள்ள கிராமத்திலோ அல்லது அருகில் உள்ள கிராமத்திலோ (எவ்வளவு தூரம் என்பதை மாநில அரசுகள் தீர்மானிக்க வேண்டும்) இருந்து கொண்டு விவசாயத்தை மேற்பார்வையிடுவது என்று வரையறுக்கப்பட்டது. பெரும்பாலான மாநிலங்கள் இயற்றிய சட்டத்தில் இப்பரிந்துரையும் கூட இடம் பெறவில்லை.

குத்தகைதாரரிடமிருந்து சொந்த சாகுபடிக்கு நிலம் எடுத்துக் கொள்வது என்பது மிகவும் கொடுமையான வஞ்சகமான ஷரத்தாகும். "பொது நிலவரங்களின் அடிப்படையில் சொந்த சாகுபடிக்கென நிலத்தை எடுத்துக்கொள்ளது அனுமதிக்கப்பட வேண்டும்" என இட்ட ஆலோசனை கூறப்பட்டது. இவ்வாறு நிலப்பிரபுத்துவச் சக்திகளுக்கு பல சலுகைகளையும், வாய்ப்புகளையும் அளித்த பின்னர் குத்தகைதாரர்களுக்கு 'உரிமையை நிலைநாட்டுவது' என்ற பெயரில் சில பயனற்ற ஷரத்துகளைத் திட்ட ஆவணம் முன்வைத்தது. குத்தகைதாரர்களுக்கு அளிக்கப்பட்டதாகச் சொல்லிக் கொள்ளும் உரிமைகள் நடைமுறையில் மறுக்கப்படும் வகையில் பல்வேறு ஓட்டைகளும், விதிவிலக்குகளும், சலுகைகளும் சேர்க்கப்பட்டிருந்தன. கிராமப்புறத்தில் நிலவும் நிலப்பிரபுத்துவ ஒடுக்குமுறை, லஞ்ச ஊழல் மலிந்த அதிகாரவர்க்கம் இவைகளின் மூலம் பெரிய பெரிய நிலப்பிரபுக்கள் கூட தங்களை 'சிறு உடமையாளர்கள்' என்று காட்டிக்கொண்டு சொந்த சாகுபடிக்கென நிலத்தைப் பறித்துக்

கொண்டு குத்தகைதாரர்களைப் பெருமளவில் வெளியேற்றினர். மேலும் பல நூறு மைல்களுக்கு அப்பால் இருந்தவர்கள்கூட சொந்த சாகுபடி செய்பவர்கள் என பதிவேடுகளில் குறிக்கப் பட்டனர்.

குத்தகைதாரர் சீர்திருத்தம் பற்றிய பல்வேறு மாநிலங்கள் எடுத்திருந்த நடவடிக்கைகள் பற்றி பின்வருமாறு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் மதிப்பிட்டது. ''குத்தகைதாரர்களின் நலன்கள்மீது குத்தகைதாரர் சட்டங்கள் நடைமுறையில் எதிர் பார்த்ததைவிட மிகவும் குறைவான தாக்கத்தையே ஏற்படுத்தி யது.' 'மனமுவந்து குத்தகை உரிமையை ஒப்படைப்பது', 'சொந்த சாகுபடிக்கு நிலம் எடுத்துக்கொள்வது' போன்ற வைகள் சம்பந்தமாக மாநில அரசுகள் தகுந்த சட்டங்கள் இயற்றாதது, நிலப்பிரபுக்கள் தமது விருப்பம்போல் நிலத்தை எடுத்துக்கொண்டது ஆகியவைகள் இந்நிலைமைக்குக் காரணங் களாகக் காட்டப்பட்டன. இவற்றுக்குத் தகுந்த தீர்வு காண்ப தாக மூன்றாவது திட்ட ஆவணம் சில ஆலோசனைகளை முன்வைத்தது. முடிந்த அளவு அதிகபட்சம் குத்தகைதாரர் களுக்கு நிலத்தைச் சொந்தமாக்குவதே இறுதிக் குறிக்கோளாக இருக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டது. மூன்றாவது திட்ட முடிவுக்குள் முடிக்க வேண்டும் என்று இலக்கு வைக்கப் பட்டது. ஒன்று, நிலப்பிரபுக்கள் சொந்த சாகுபடிக்காக எடுத்துக் கொள்ளாத நிலங்களை அரசாங்கம் தானே எடுத்துக் கொண்டு அவைகளை குத்தகைதாரர்களுக்கு உடைமையாக்க வேண்டும் அல்லது, குத்தகைதாரர்கள் நேரடியாக நிலப்பிரபுக்களிட மிருந்தோ, தவணையில் நிலத்திற்கு விலை செலுத்தி அரசாங்கத் திடமிருந்தோ உடைமையாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். இதில் உச்சவரம்புக்குட்பட்டு நிலம் வைத்திருந்து அதை குத்தகைக்கு விடப்பட்டிருந்த நிலம் சம்பந்தமாக எதுவும் கூறப்படவில்லை. சிறுவுடைமையாளர்கள் கூட இராணு வத்தினர்கள், விதவைகள், அலுவலர்கள் போன்றோர் மட்டுமே புதிய குத்தகைக்கு விடமுடியும் என்றது. நிலத்தைச் சொந்தக் மாக விலைக்கு வாங்கிக்கொள்ள இயலாத குத்தகைதாரர்களுக்கு வாரிசு உரிமை மற்றும் தொடர்ந்து குத்தகை உரிமை அளிப்ப தாக உறுதி கூறப்பட்டது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் வகுக்கப்பட்டபொழுது பல்வேறு குத்தகை சீர்திருத்தங்களுக்குப் பின்னும் குத்தகை தாரர்களின் நிலை மிகவும் பரிதாபகரமாக இருந்தது என்று உணர்வதாகக் கூறிக்கொண்டனர். குத்தகை நிலம் சொந்த மாகுமா, அகாதா அல்லது குத்தகையாவது நிலைக்குமா, பறிபோகுமா என்ற ஓர் இக்கட்டான தவிப்பான நிலைமையில் நிலவெளியேற்றம் தலைக்குமேல் தொங்கிக் கொண்டிருக்கிற கத்திபோல் இருக்க, நிலப்பிரபுக்களையும் அதிகார வர்க்கத்தை யும் மேலும் மேலும் அதிகமாக சார்ந்திருக்கவேண்டிய நிலையில் குத்தகைதாரர்கள் வைக்கப்பட்டனர். எனினும், குத்தகை

தாரரின் இந்தப் பரிதாபகரமான நிலையைப் போக்க உருப்படியான பரிகாரம் எதுவும் வைக்கப்படவில்லை.

## சட்டங்களும் நிறைவேற்றப்பட்டதும்:

குத்தகைச் சீர்திருத்தம் பற்றி ஐந்தாண்டுத் திட்டங்களில் மூன்று முக்கியமான வழிகாட்டுதல்கள் கொடுக்கப்பட்டன. அவைகள்: 1. மொத்த உற்பத்தியில் குத்தகையானது 20 அல்லது 25சதவீதத்துக்கும் அதிகமாக இருக்கக்கூடாது. 2. குத்தகைதாரர்களுக்கு அவர்கள் சாகுபடி செய்யும் நிலத்தில் நிரந்தர உரிமை தரப்படவேண்டும்; அதே சமயத்தில் நிலத்தைச் சொந்த சாகுபடிக்குத் திரும்ப எடுத்துக்கொள்ள நிலச் சொந்தக்காரர்களுக்கு வரம்புக்குட்பட்ட உரிமை தரப்படவேண்டும். 3. சொந்த சாகுபடிக்குத் திரும்ப எடுத்துக்கொள்ளாத நிலத்தைப் பொருத்தவரையில் குத்தகைதாரர்களுக்கு நிலத்தைச் சொந்தமாக வாங்கிக்கொள்ளவோ, வாரிசு முறையிலும் தொடர்ந்து குத்தகை உரிமையோ அளிக்கப்படவேண்டும். இந்த வழிகாட்டுதல்கள் எவ்வாறு நிறைவேற்றப்பட்டன என்று பார்ப்போம்.

1. **குத்தகையை முறைப்படுத்துவது:** குத்தகையின் அளவு பற்றி எல்லா மாநிலங்களும் சட்டம் நிறைவேற்றின. ஆனால் இந்த அளவு பல மாநிலங்களில் பல அளவாக இருந்தன. சான்றாக தமிழ்நாட்டில் 40 சதவீதம் என்றும், சில மாநிலங்களில் நிலத்தின் மீது போடப்பட்ட வரியைக் கொண்டு குத்தகையின் அளவும் தீர்மானிக்கப்பட்டன. ஆனால் நடைமுறையில் நிலப்பிரபுத்துவ ஆதிக்க சக்திகளே குத்தகையின் அளவைத் தீர்மானித்து வசூலித்தன. குத்தகைச் சட்டம் பற்றி உரிமை கோர முயன்றவர்கள் நிலத்தைவிட்டு உடனடியாக வெளியேற்றப்பட்டனர். மேலும், பெரும்பாலான குத்தகை பேரங்கள் வாய்வழி மூலமாகச் செய்யப்பட்டிருந்தன. 1961-ஆம் ஆண்டு புள்ளி விவரப்படி ஏறத்தாழ 82 சதவீதம் குத்தகைகள் பாதுகாப்பற்ற தன்மை கொண்டதாக இருந்தது, அதற்குப் பின்னர் பெறும் மாற்றங்கள் எதுவும் நிகழ்ந்துவிடவில்லை; விவசாய இயக்கம் பலமாக உள்ள மேற்கு வங்கத்திலே கூட இன்னமும் 50 சதவீதத்துக்கும் குறையாமல் குத்தகை கொடுக்கின்றனர்.

2. **குத்தகைப் பற்றிய உத்திரவாதம்:** இரண்டாவது வழிகாட்டுதலை அமுல்படுத்த வேண்டுமானால் முதலில் யார் குத்தகைதாரர் என்று தீர்மானிக்கப்படவேண்டும். விளைச்சலைப் பகிர்ந்துக்கொள்ளும் வாரக்குத்தகைதாரர்கள் சில மாநிலங்களில் (உ. பி., பீகார், மே. வ,) குத்தகைதாரராக அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளப்படவில்லை; வங்காளத்திலும், உ, பி. யிலும் ஜமீன் தாரிமுறை ஒழிக்கப்பட்டபோது நிலச்சொந்தக்காரர்கள்

குத்தகைக்கு விடப்பட்ட நிலத்தை எடுத்துக்கொள்ளும் உரிமை மறுக்கப்பட்டது. ஆனால் இந்த மாநிலங்களில் வாரக் குத்தகை தாரர்களைக் குத்தகைதாரர்களாக சட்டப்படி ஏற்றுக் கொள்ளப்படவில்லையாதலால், குத்தகைதாரர்கள் எல்லோரையும் வாரக் குத்தகைதாரர்கள் எனச் சொல்லி சொந்தச் சாகுபடிக்கு நிலத்தை எடுத்துக்கொள்ள உரிமை வழங்கப்பட்டனர்.

குறிப்பிட்ட காலத்திற்குள் நிலச்சொந்தக்காரர்கள் நிலத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சில மாநிலங்கள் (குஜராத், கேரளா, காஷ்மீர், ம பி., மகாராஷ்டிரா போன்ற மாநிலங்கள்) சட்டம் நிறைவேற்றின. ஆனால் அந்தக் காலவரையறைக்குப் பின்னும் நிலச் சொந்தக்காரர்கள் அந்த உரிமையை அனுபவித்து வருகின்றனர். குத்தகைக்குவிடப்பட்ட நிலத்தைத் திரும்ப நிலச் சொந்தக்காரர்கள் எடுத்துக் கொள்வதுபற்றி இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் பரிந்துரைத்தவைகளையே பெரும்பாலான மாநிலங்கள் சட்டங்களாக நிறைவேற்றின. நிலச் சொந்தக்காரர்கள் நிலத்தைத் திரும்ப எடுத்துக் கொள்வதற்கு அளிக்கப்பட்ட வரம்புகளுக்குட்பட்ட உரிமைகள் மீறப்படுவதிலிருந்து எந்தவிதப்பாதுகாப்பும் தரப்படவில்லை. தொடர்ந்து குத்தகைதாரர்கள் பயமுறுத்தப்பட்டார்கள். நிலவுடமையாளன் இவ்வளவுதான் நிலம் சொந்த சாகுபடிக்கென திரும்ப எடுத்துக் கொள்ளலாம் என்று வரம்பு விதிக்கப்பட்ட மாநிலங்களில் கூட அவன் தனக்குள்ள நிலப்பிரபுத்துவ அதிகாரத்தைச் செலுத்தி எப்பொழுது வேண்டுமானாலும் முழு அளவு நிலத்தையும் பறிமுதல் செய்ய முடிந்தது. பெரும்பாலான குத்தகைதாரர் பேரங்கள் வாய்வழி மூலமாகச் செய்யப்படுவதால் சட்டப்படி எந்தவிதப் பயனும் பெற முடிவதில்லை; சட்டத்தின் உதவியை நாடியவர்கள் நிலப்பிரபுத்துவ அதிகாரத்திற்கும் அடக்குமுறைக்கும் ஆளானார்கள்.

3. **நிலப்பதிவேடுகள்:** குத்தகைதாரர் சட்டத்தை அமுல்படுத்த குத்தகைதாரர் நிலத்தை குத்தகைக்கு எடுத்திருக்கிறார் என்று பதிவு செய்திருந்தால்தான் அவர் சட்டப்படி குத்தகைதாரராக ஏற்றுக்கொள்ளப்படுவார். ஆனால் நடைமுறையில் பல அம்சங்கள் குத்தகைதாரர்களுக்கு எதிராக உள்ளன. சமூக, பொருளாதார, அரசியல் ரீதியாக குத்தகைதாரர்கள் நிலப்பிரபுத்துவச் சக்திகளோடு ஒப்பிடும்போது பலவீனம் உள்ளவர்கள்; கிராமப்புறத்திலுள்ள பலதரப்பட்ட ஆதிக்க சக்திகளின் காரணமாக நிலப்பிரபுத்துவ ஆதிக்கசக்திகளால் கட்டுப்படுத்தப்படுகின்றனர். மேலும் குத்தகை எடுப்பதற்குப் பதிவு செய்ய முடியாது; அதற்கு நிலப்பிரபுத்துவ சக்திகள் விடுவதில்லை. மேலும் அதிகாரிகளை நிலப்பிரபுத்துவ ஆதிக்க சக்திகள் தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாலும் பதிவு செய்யப்படுவது சாத்தியமில்லை. பதிவு செய்யும்படி கோரினால் குத்தகைதாரர்கள் பலவந்தமாக வெளியேற்றப்படுகின்றனர்; அல்லது குத்தகை எடுக்கும் வாய்ப்பு மறுக்கப்படுகிறது.

நிலத்தைக் குத்தகைக்கு விட்டவர்கள் மீண்டும் நிலத்தை எடுத்துக் கொள்ள விரும்பாதபோது, குத்தகைதாரர்களுக்கு நிலத்தைச் சொந்தமாக்கும் உரிமையைச் சட்டமாகச் செய்ய வேண்டும் என்பது ஐந்தாண்டு திட்டங்களின் கொள்கைகளாக இருந்தாலும் பல வழிகளில் — ( i ) கிராமப் பதிவேடுகளில் குத்தகைதாரர் நிலம் பதிவு செய்யப்படாமல் இருப்பது (ii) நிலச் சீர்த்திருத்தச் சட்டங்களினால் விலக்கு அளிக்கப்பட்ட நிலத்தில் குத்தகை இருப்பதாகக் காட்டுவது (iii) குத்தகை சரியாகக் கொடுக்காததனால் குத்தகை ரத்து செய்யப்பட்டுவிட்டது எனக் காரணம் காட்டுவது. (iv) தனிப்பட்ட சொந்த சாகுபடிக்காக நிலத்தை எடுத்துக் கொண்டுவிட்டதாக அல்லது விவசாயமற்ற நோக்கங்களுக்காக நிலத்தை எடுத்துக் கொண்டு விட்டதாகச் சொல்லுவது, (v) குத்தகைதாரரே மனமுவந்து ஒப்படைத்துவிட்டதாக பலாத்காரமாக நில வெளியேற்றம் செய்வது, (vi) பலாத்காரத்தால் குத்தகைதாரர் நிலத்தை வாங்கிவிடாமல் செய்வது — நடைமுறையில் முறியடிப்பது.

**4. 'சொந்த சாகுபடிக்கு' நிலத்தை எடுத்துக் கொள்வதும், 'மனமுவந்து' நிலத்தை குத்தகைதாரர் ஒப்படைப்பதும்:**

நிலச் சொந்தக்காரர் சொந்த சாகுபடிக்கென நிலத்தை எடுத்துக் கொள்வது என்பதை, நிலச்சொந்தக்காரர் தனது சொந்த உழைப்பை ஈடுபடுத்திச் சாகுபடி செய்யவேண்டும் என்று கூட—இதுவும் மீறப்படலாம்—எந்த சட்டமும் நிறைவேற்றப்படவில்லை. நிலச் சொந்தக்காரர்கள் நிலத்தைச் சொந்த சாகுபடிக்கு எடுத்துக் கொள்ளும்போது தனது சொந்த உழைப்பை ஈடுபடுத்த வேண்டும் என்று மணிப்பூர், திரிபுரா ஆகிய மாநிலங்களில் மட்டும் சட்டம் இயற்றப்பட்டது. வேறு பல மாநிலங்களில் குத்தகைதாரர் சட்டங்களிலும் 'சொந்த சாகுபடி' என்பது வேலைக்காரர்கள் அல்லது பணம் கொடுத்து அமர்த்தும் கூலியாட்கள் மூலம் செய்யப்படுவது என வரையறுக்கப்பட்டது. நிலச் சொந்தக்காரர்களின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் மேற்பார்வையிடுவது போதுமானது என்றும் நிலம் எங்கிருக்கிறதோ அதற்கருகில் இருக்க வேண்டியதில்லை என்றும் சட்டங்கள் உள்ளன. எனவே இது ஸ்தலத்தில் இல்லாத நிலப்பிரபுக்கள் நிலத்தை வைத்திருப்பதை எந்த விதத்திலும் குறைத்துவிடவில்லை.

குத்தகைதாரர்களின் குத்தகை உரிமையைப் பாதுகாக்க வெனப் போடப்பட்ட பல சட்டங்கள், எடுக்கப்பட்ட பல நிர்வாக நடவடிக்கைகள் குத்தகைதாரர் தமது உரிமையைத் தாமே முன்வந்து 'மனமுவந்து நிலத்தை ஒப்படைப்பது' என்ற முறையில் முறியடிக்கப்பட்டது. அச்சுறுத்தல் பலாத்காரம் ஆகியவைகளால் நிலப்பிரபுத்துவ ஆதிக்கசக்திகள் குத்தகைதாரர் நில வெளியேற்றம் செய்தன. இதைத் தடுப்பது என்று சொல்லிக் கொண்டு மூன்றாவது, நான்காவது ஐந்தாண்டுத் திட்டங்

களில் சில சீர் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. எனினும் அவை நடைமுறைக்கு வரவில்லை.

## குத்தகை சீர்திருத்தங்களின் விளைவுகள்:

இந்தியாவில் நிலவும் நிலப்பிரபுத்துவ சமுதாய உறவு காரணமாக குத்தகை என்பதே வாயால் ஒப்பந்தம் செய்துக் கொள்ளப்படும் நிலையில் எத்தனை சட்டங்கள் போட்டாலும் நடைமுறையில் அவை குறிப்பிடத்தக்க மாற்றத்தை விவசாயிகளுக்கு சாதகமாகஏற்படுத்திவிடுவதில்லை. இப்போதும் சாகுபடிசெய்யப்பட்டநிலத்தில் 20 சதவீதத்திலிருந்து 25வரை குத்தகைவிவசாயத் குறிப்பாக வாரக் குத்தகையில் இருக்கின்றது. குத்தகைதாரர் சட்டங்களினால் ஏற்பட்ட விளைவுகள் பற்றி நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மதிப்பீடு:

"வாய் வழிமூலம் செய்யப்படுகின்ற குத்தகை, வாரக் குத்தகையும் நிலவுகின்ற தற்போதைய ஏற்பாடுகளில் நிலத்தில் முதலீடு செய்து அதை அபிவிருத்தி செய்வது புத்திசாலித்தனமற்றது என்று நில சொந்தக்காரன் கருதுகிறான்; அதேபோல குத்தகைதாரரும், வாரக்குத்தகைதாரரும் உரங்கள் போன்ற உள்ளீடுகளை நிலத்தில் முதலீடு செய்ய இயலாமல் இருக்கிறார், அல்லது தயங்குகிறார். குத்தகை உத்தரவாதமில்லாதது, உயர்ரக வகைகளைப் பரந்த அளவில் பயன்படுத்துவதை தடை செய்ததோடு மட்டுமல்லது, சில இடங்களில் சமுதாய, விவசாயப் பிரச்னைகளின் உக்கிரத்துக்கும் கொண்டு சென்று இருக்கிறது.''

எதிர்காலத்தில் குத்தகைக்கு விடுவதையே தடை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தை நிறைவேற்றுவதை இறுதிக் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும் என்று திட்ட ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. இந்த நோக்கத்தை நடைமுறையில் கொண்டு வருவது என்ற பெயரில் குத்தகைகளைக் குறைக்கப் போடப்பட்ட சட்டங்கள், குத்தகை ஒப்பந்தங்கள் சட்ட விரோதமாக வாய்மூலமாக செய்யப்படுவதைத் தூண்டுகின்றன. மொத்தத்தில் குத்தகைச் சீர்திருத்தச் சட்டங்களும் நிர்வாக நடவடிக்கைகளும், ஆளும் வர்க்க அரசும், அரசியல் கட்சிகளும் பீற்றிக் கொண்டதைப் போன்று குத்தகைதாரர்களின் நலன்களை பாதுகாப்பவையாகவோ, "யார் நிலத்தை உழுகிறார்களோ அவர்கள் அதன் பயனை அனுபவிக்கும் வகையில் விவசாய அமைப்பை மாற்றி அமைக்கப்படும்'' என்ற அவர்களது அறிவிக்கப்பட்ட கொள்கையை அமுல்படுத்துவதாகவோ இல்லை. மாறாக லட்சக்கணக்கான குத்தகை விவசாயிகளை பலாத்காரமாகவும், மோசடி செய்தும் நிலவெளியேற்றம் செய்வதாகவும், சட்டவிரோத இரகசிய முறைகளில் குததகை ஒப்பந்தங்கள் ஏற்படுத்திக் கொள்ளதாகவும், சொந்த சாகுபடி என்ற பெயரில் இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்ளை நிலப்பிரபுக்களும் ஜமீன்தார்களும் பறித்துக் கொள்வதாகவும் பட்டுமே முடிந்தது. புதிய குத்தகை திட்டத்தட்ட சட்டப்பூர்வ

மார்கத் தடை செய்யப்பட்டிருப்பதால் நிலவாடகையைக் கட்டு படுத்துவதால் ஒரு புறம் குத்தகை உரிமை பற்றிய நிச்சயமற்ற நிலையில் குத்தகைதாரர்களும், மறுபுறம் சட்டவிரோத முறைகளிலேயே குத்தகைக்கு விடுவது சாதகமானது என்பதால், சொந்த சாகுபடி என்ற பெயரில் நிலப்பிரபுக்கள் மற்றும் ஜமீன்தார்களே நிலவுடமைகளை தக்கவைத்துக் கொள்வது என்பதும் நிலம் பரிவார்த்தனை பண்டமாவதைத் தடுக்கின்றது.

இவ்வாறு நிலம் மீண்டும் நிலப்பிரபுக்களிடம் குவிவதோடு ஜமீன் இனாம்ஒழிப்புமற்றும் சுதேச சமஸ்தானங்களை இந்தியாவோடு இணைப்பது ஆகிய இரு நடவடிக்கைகள் மேலும் பெரு நிலப்பிரபுக்களை உருவாக்கின. இந்திய சுதேச சமஸ்தானங்களை இணைப்பதுஎன்பதுபிரபுத்துவ நிலவுடமை உறவுகளை ஒழித்துவிடவில்லை; மாறாகப் பலப்படுத்தியது. அதற்கு முன்பே சுதேச மன்னர்களும், அவர்களது திவான்கள் போன்ற அதிகாரிகளும் பரிவாரங்களும் சொந்த சொத்தாக ஏராளமான ஏக்கரா நிலங்களை வைத்திருந்தனர். கிராமப்புறங்களில் இருந்த வளமுள்ள இந்நிலங்களோடு புறநகர்ப்பகுதிகளிலும் பெருமளவு நிலவுடமையை இவர்கள் பெற்றிருந்தார்கள். சுதேச சமஸ்தானங்கள் இணைக்கப்பட்ட பொழுதுஇவர்களதுநிலங்கள்பறிமுதல் செய்யபடவில்லை. எனவேபிரபுத்துவசலுகைகள், உரிமைகள், கௌரவம் மற்றும் அதிகாரத்துடன் பெரும் நிலப்பிரபுக்களாகவே நீடித்தனர். அதுமட்டுமின்றி பெருமளவில் நட்டஈடாக கோடிக்கணக்கான ரூபாய்களை ஆண்டுதோறும் பெறுவதாக ஏற்பாடாகியது. விவசாயத்தில் இடைப்பட்டவர்களைஒழிப்பது என்றுதொடங்கி ஜமீன் இனாம் ஒழிப்பு சட்டமாக பட்டும் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தம் அடிப்படையில் நிலப்பிரபுத்துவ நிலவுடமை உறவுகளை மாற்றிவிடவில்லை. ஏற்கெனவே ஏராளமான ஏக்கர் வளமான நிலத்தைச் சொந்த சாகுபடியின் கீழ் வைத்திருந்த ஜமீன்தாரர்களின் நிலவுடமைகள் பறிமுதல் செய்யப்படாத அதே வேளையில் ஜமீன் இனாம் ஒழிப்பின்போது இலட்சக்கணக்கான ஏக்கர் வளமான நிலங்களை சொந்த உடமைகளாகவும் கோடிக்கணக்கான ரூபாய்களை நட்ட ஈடாகவும் பெற்றனர். ஏற்கெனவே ஜமீன்தாரர்களின் கீழிருந்த விவசாயிகள் வாரக் குத்தகைதாரர்களாகமாற்றப்பட்டார்கள் 'இடைப்பட்டவர்களின்'கீழ் இருந்த நிலம் ஏறத்தாழ 40 சதவிகிதம் ஆகும். 'இடைப்பட்டவர்களை' ஒழிப்பது என்ற பெயரில் கோடிக்கணக்கில்நட்ட ஈடுதரப்பட்டது. மொத்தத்தில் சுதேச சமஸ்தானங்களை இணைப்பது, ஜமீன்தாரி இனாம் ஒழிப்பு ஆகிய இரு நடவடிக்கைகளும் பெரும்நிலப்பிரபுக்களை அதிகாரம், செல்வாக்கு, கௌரவம் மற்றும் சலுகைகளுடன் கூடிய பெரும் நிலப்பிரபுக்களை உருவாக்கின. ஆளும் வர்க்கங்களின் அரசியல் கட்சியாகிய காங்கிரசும், திரிபுவாதிகளும் பீற்றிக்கொள்வது போல் நிலவுடமை உறவுகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் எதனையும் அவை செய்யவில்லை.

## 2. நில உச்சவரம்பு சீர்திருத்தங்கள்:

நிலப்பிரபுத்துவத்தை ஒழிப்பதாக நிலச்சீர்திருத்தக் கமிட்டிகள் அமைக்கப்பட்டன, சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆனால் இவையனைத்தும் நிலப்பிரபுக்களின் நிலக் குவிதலும், அந்தஸ்தும், அதிகாரமும், கௌரவமும் சலுகைககளும், உரிமைகளும் பாதிக்கா வண்ணம்—அதாவது நிலப்பிரபுத்துவ உறவுகள் உடையாத வண்ணம்—முன்கூட்டியே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இறுதியில் பல ஓட்டை உடைசல்களுடன் பல உச்சவரம்பு சட்டங்கள் போடப்பட்டன, மேய்ச்சல் நிலம், தோட்ட நிலம். கரும்பு போன்ற சில பணப்பயிர்கள் சாகுபடி நிலம், நவீன பண்ணைகள் போன்றவைகளுக்கு என்றவாறு பல விதிவிலக்குகள் வழங்கப்பட்ட பின்னர். மிகவும் அதிகபட்ச அளவு நில உச்சவரம்பு விதிக்கப்பட்டது. அதாவது உபரியாக நிலத்தை எடுத்து விநியோகிக்க நிலம் குறைந்த அளவே கிடைக்கும்படி அதிகபட்ச உச்சவரம்புகள் விதிக்கடபட்டன. 1972-வரை போடப்பட்ட சட்டங்களின்படி பீஹார். கர்னாடகா, ஓரிசா, இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் உபரி நிலங்களே இல்லை என்று அறிவிக்கப்பட்டன.

நில உச்சவரம்பு, உச்சவரம்பு பிரயோசிக்கப்படும் அலகு ஆகிய இரண்டும் இரண்டு கட்டங்களில் இருவேறுவிதமாக அமுல் படுத்தப்பட்டது. 1972-ஆம் ஆண்டு வரை முதல் கட்ட'ம இருந்தது; நிலச் சொந்தக்காரனே பிரயோகிப்பதற்கான அலகாகக் கருதப்பட்டான். 1972க்குப் பிறகு பிரயோகிப்பதற்கான அல்கு குடும்பமாகக் கொள்ளப்பட்டது. 1972 வரையிலான முதல் கட்டத்தில் உச்சவரம்பு பட்டம் டல பாநிலங்களிலும் டல வாறும், மிகமிக அதிகமாகவும் இருந்தது. எடுத்துக் காட்டாக இராஸ்தானல் 27-லிருந்து 336 ஏச்கர் வரையும்; மராட்டியத்தில் 18-லிருந்து 126 ஏசகா வரையும், கர்நாடகாவில் 27 ல்ருந்து 216 ஏக்கர் வரையும் ஆந்திராவில் 27 லிருந்து 234 ஏக்கர் வரையிலும் நிர்ணயிக்கப்பட்டடன. மேலும் பிரயோசித்தல் அலகு தனி நபராக இருந்ததினால் மிகக் குறைவான உபரி நிலமே மீட்கப்பட்டன. அடுத்து அறக்கட்டளை. பதநிலைங்கள், கால்நடை வளர்ப்புப் பண்ணைகள், பணப்பயிர் சாகுபடி நிலங்கள், பேய்சசல் நிலங்கள் போன்றவைகளுக்கு அளிக்கப்பட்ட விலக்குகள் நிலப்பிரபுத்துவ சக்திகளால் மிகச் சாதுரியமாகப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டன. உபரியாக எடுக்கப்படும் நிலங்களுக்கு மார்க்கெட்டு விலையில் நட்ட ஈடு தரப்படவேண்டும் என்று உச்சநீதி மன்றத தீர்ப்பு அளித்ததானது நில உச்சவரம்பை அமுல்படுத்துவதில் மேலும் தடைகளை ஏற்படுத்தியது. "தனிச சொததுடமை இருநதே தீரவேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்ட சமுதாய ஒழுங்கின் பக்கம் சொத்துரிமையும், குற்றவியல் சட்டங்களும், நீதியன்றத் தீர்ப்புகளும், முன் உதாரணங்களும், நிர்வாக மரபுகளும், நடைமுறைகளும் நிற்குப்போது சொத்துரிமையை மாற்றியமைக்கும்நோக்கத்தைக் கொண்ட ஒரு சட்டம் வெற்றி

கிரமாக செயல்படமிகச் சிறிய அளவு வாய்ப்பே உள்ளது. சிற்சில வாய்ப்புகள் அப்படி இருந்தனவேயானாலும் அவையும்கூட சட்டங்களில் இருந்த ஓட்டைகளாலும் தொடர்ந்து நீதிமன்றங்களில் தொடரப்பட்ட வழக்குகளினாலும் முற்றாக ஆவியாகப் போய்விட்டன'' என்று திட்டக் கமிஷனின் தீவிரப்பணிக்குழுவே ஒப்புக் கொண்டது.

நில உச்சவரம்புச் சட்டம் அமுல்படுத்தியதுபற்றி தேசிய மாதிரி சர்வே புள்ளி விவரங்கள் பரிசீலித்த மஹலனோபிஸ் கமிட்டி பின்வரும் கருத்தைத் தெரிவித்தது: ''பொதுவாக எங்களுடைய கண்டுபிடிப்பு என்னவென்றால் சொத்துடமையின்பால் வைத்துள்ளநிலம்,சாகுபடி செய்யப்படுகின்ற நிலம்ஆகியஇரண்டிலும்நிலமானது மிக அதிகமாகக் குவிக்கப்பட்டிருந்தது. பல நிலச் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்ட போதும் 1953-54 லிருந்து 1959 60 வரை ஏற்றத்தாழ்வில் கணிசமான அளவு மாற்றங்கள் ஏற்பட்டு விடவில்லை.'' இவைகளிலிருந்து நிலவினியோகப் பிரச்சினையின் விளிம்பைக் கூட நிலச் சீர்திருத்தங்கள் தொடவில்லை என்று தெரிகிறது.

1972 வரை 23.15 இலட்சம் ஏக்கரா நிலங்கள் உபரியாக அறிவிக்கப்பட்டது. இதில் 12.55 இலட்சம் ஏக்கரா நிலங்கள் மட்டுமே வினியோகிக்கப்பட்டன. பீகார், கர்னாடகா, ஒரிசா, இராஜஸ்தான் ஆகியமாநிலங்களில் உபரிநிலங்களேஅறிவிக்கப்படவில்லை. அதாவது சட்டம் போடுவதற்கு முன்பே சட்டத்தின் ஷரத்துகள் நிலப்பிரபுக்களுக்குத் தெரிவிக்கப்பட்டு அவர்கள் அதற்கேற்றவாறு 'சட்டப்படி' மாறுதல்களைச் செய்து வைத்துக் கொண்டனர்.

1972-க்குப் பின்னர் மீண்டும் நிலச் சீர்திருத்தத்தைப் பற்றி வேகமாகப் பேசிய ஆளும் வர்க்கங்களது அரசு இனிக் கடுமையாக நிலச் சீர்திருத்தத்தை அமுல் நடத்தப்போவதாகக் கூறியது காங்கிரஸ் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட மத்திய நிலச்சீர்திருத்தக் கமிட்டி எப்போதும் நீர்ப்பாசன வசதியுள்ள இருபோக சாகுபடி கொண்ட பகுதிகளில் உச்சரவரம்பை 30 ஸ்டாண்டர்டு ஏக்கராவிலிருந்து 10 முதல் 18 ஏக்கரா வரை குறைக்கவேண்டுமென ஆலோசனை கூறியது.

மத்திய நிலச்சீர்திருத்தங்கள் கமிட்டி, 'நீர்ப்பாசன வசதி கொண்ட நிலம்' என்று சொல்லியிருந்ததை மத்திய அரசாங்க விவசாய அமைச்சரகம், 'அரசாங்க நீர்ப்பாசன மூலங்களிலிருந்து உத்திரவாதம் செய்யப்பட்ட நிலங்கள்' என்று வியாக்கியானம் செய்தது. இந்த வியாக்கியானம் ஒரே அடியில் உச்சவரம்பு சட்டத்தை கேலிக்கூத்தாக்கியது. ஏனென்றால் அரசாங்க நீர்பாசன மூலங்களிலிருந்து உத்திரவாதம் செய்யப்பட்டு இருபோகம் சாகுபடி செய்யக்கூடிய 10 முதல் 18 ஸ்டாண்டர்டு ஏக்கரா வரை உச்சவரம்பு வைப்பது பல வழிகளிலும் உச்சவரம் புசட்டத்தை

மீறுவதற்கு வாய்ப்பளிக்கும்; பல நிலப்பிரபுக்களின் 'தனியாகவே நல்ல நீர்பாசன வசதி கொண்டிருக்கிற' நிலங்கள் இந்தச் சட்டத்தின் கீழ் வராமலேயே போய்விடும்.

பின்னர் 1972 ஜூலை 23-இல் கூடிய முதலமைச்சர்கள் மாநாடு நில உச்சவரம்பு சம்பந்தமாகக் கீழ்க்கண்ட வழிகாட்டுதல்களை தந்தது.

(i) ஒரு மாநிலத்தில் நீர்பாசன உத்திரவாதம் கொண்ட, வருடத்தில் குறைந்தபட்சம் இரு போக சாகுபடி கொண்ட மிகச் சிறந்த நிலத்திற்கு மண்ணின் செழிப்பு, மற்றவைகளை கணக்கில் கொண்டு உச்சவரம்பு 10 லிருந்து 18 ஏக்கர் வரை என்று நிர்மானிக்கலாம்.

வருடத்திற்குக் குறைந்த பட்சம் இருபோகச் சாகுபடி செய்யக் கூடிய தனியார் நீர் மூலங்களிலிருந்து நீர்ப்பாசன வசதி கொண்ட 1.25 ஏக்கர் நிலம் வருடத்திற்குக் குறைந்தபட்சம் இரு போகசாகுபடி செய்யக்கூடிய, பொதுநீர்மூலங்களிலிருந்து பாசன வசதிகொண்ட ஒரு ஏக்கரா நிலத்திற்குச் சமமாகக் கருதப்படும். எனினும், அவ்வாறு தனியார் நீர் மூலங்களிலிருந்து சாகுபடி செய்யக்கூடிய நிலம் கூட 18 ஏக்கரா நில உச்சவரம்புக்குள் வர வேண்டும். 'தனியார் நீர் மூலங்களிலிருந்து பாசனவசதி' என்ற பதத்தின் பொருள் டீசல் என்ஜின் அல்லது மின்சார மோட்டார் மூலம் இயக்கப்படுகின்ற, தொடர்ந்து எப்போதும் நீர்வசதி கொண்ட நீர்மூலம் ஆகும்.

(ii) வருடத்திற்கு ஒருபோகம் மட்டும் சாகுபடிசெய்ய நீர்ப்பாசன வசதி கொண்ட நிலத்திற்கு உச்சவரம்பு 27 ஏக்கர்களுக்கு மேல் இருக்கக் கூடாது.

(iii) பலதரப்பட்ட செழிப்புத் தன்மையுள்ள நிலங்களை பெற்றுள்ளவர்களைப் பொருத்தமட்டில், நல்ல வகைப் பட்ட நிலங்களை மிகவும் தாழ்த்தப்பட்ட நிலங்களின் விகிதாச் சாரமாக கருதப்பட்டு அதற்கு 54 ஏக்கரா என்று உச்சவரம்பு விதிக்கப்பட்டது.

உச்சவரம்பை பிரயோகிப்பதற்கான அலகாக கீழ்க்கண்ட பரிந்துரைகள் செய்யப்பட்டன: (i) பிரயோகிப்பதற்கான அலகு 5பேர் கொண்ட குடும்பமாகும். குடும்பம் என்பது கணவன், மனைவி, அவர்களது வாலிபப் பருவம் அடையாதக் குழந்தைகளைக் கொண்டதாகும். ஐந்து பேர்களுக்கு மேலாக எண்ணிக்கையைக் கொண்ட குடும்பத்தில் 5க்கு மேற்பட்ட ஒவ்வொருவருக்கும் கூடுதலான நிலங்கள் ஒதுக்கப்படவேண்டும். எனினும் அந்தக் குடும்பத்திற்கென ஒதுக்கப்பட்ட நிலம் 5பேர்கள் கொண்ட குடும்பத்திற்கென ஒதுக்கப்பட்ட நிலத்தைப் போல் இரு மடங்குக்கும் அதிகமாக இருக்கக்கூடாது. குடும்பத்

திலுள்ள எல்லா உறுப்பினர்களும் மொத்தமாக வைத்துள்ள நிலத்திற்கு உச்சவரம்பு பிரயோகப்படுத்தப்படும். வாலிபப் பருவம் (18 வயது) அடைந்த ஒவ்வொரு பிள்ளையும்—மகன்/மகள்-உச்சவரம்பைப் பொருத்தவரை தனிக் குடும்பமாகக் கருதப் படுவர். பின்வரும் வகையில் விலக்குகள் அளிக்கப்பட்டன. (i) டீ காபி, இரப்பர், ஏலம், கோக்கோ, தோட்டங்களுக்காக இருந்த உச்சவரம்புக்கு விலக்கு தொடரும். (ii) விவசாயமற்ற நோக்கங் களுக்காக தொழில் மற்றும் வாணிக நிறுவனங்கள் வைத்துள்ள நிலங்களுக்கு உச்சவரம்பு அமுல் நடத்தப் படமாட்டாது. (iii) சர்க்கரை ஆலைகள் 100 ஏக்கராவுக்கும் மேற்படாமல் நிலம் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படும். நட்ட ஈடு: நில உச்சவரம்பு போட்டு உபரியாகக் கிடைக்கும் நிலங்களைப்பெறு பவர்கள் பணம் தர வேண்டும்; ஆனால் சாதாரணமாக மார்க் கெட்டு விலையை விட குறைவாக இருக்கும் என்றும் குறிப்பாக நிலமற்ற விவசாயிக் கூலிகள், அதிலும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்கள் நிலத்தை வாங்கும் அள விற்கு குறைவாக நிர்ணயம் செய்யப்படவேண்டும். பணத் தைப்படிப்படியாக தவணை முறையில் செலுத்துமாறு செய் யப்படவேண்டும். தவணை முறையில் கட்டப்படும் பணம் நில வரியின் பெருக்கல்களாக இருக்க வேண்டும்.

—இவ்வாறு நில உச்சவரம்பை மீறுவதற்கு நிலப்பிரபுத் துவ சக்திகளுக்கு பல வாய்ப்புகள் கொண்ட ஒரு வழிகாட்டு தலை முதலமைச்சர்கள் மாநாடு வகுத்து கொடுத்தது.

முதலமைச்சர்கள் மாநாடு கொடுத்த வழிகாட்டுதலின்படி 17 மாநில அரசுகள் நில உச்சவரம்பு சட்டத்தை திருத்தி அமைத்து இருப்பதாக கூறின. எனினும் நிலப்பிரத்துவ சக்திகள் நீதிமன்றமென்ற ஆயுதத்தைப் பயன்படுத்தி நிலச் சீர்திருத்த சட்டம், அமுலாக்கப்படாமல் தடைகளை ஏற்படுத் தின. நில உச்சவரம்பு சட்டத்தை நீதிமன்றம் விசாரணைகளி லிருந்து விலக்களிக்கும் அரசியல் சட்டத்தின் ஒன்பதாவது பிரி வில் சேர்க்கும்படியான கோரிக்கையை மத்திய அரசு இன்று வரை நிராகரித்து வருகிறது.

ஆளும் வர்க்கங்களின் அரசு மேற்கொள்ளும் நிலச்சீர் திருத்தத்தின் விளைவு பற்றி பின்வரும் ஒரு விவரம் அம்பலப் படுத்துகிறது:

1979-ஆம் ஆண்டு ஜூன் 14-ஆம் தேதி பிரதமர்மொரார்ஜி தேசாய் முதலமைச்சர்கள் மாநாட்டில் இத்தகவலை அளித் தார்:

| | | | |
|---|---|---|---|
| 1978 வரை மதிப்பிடப்பட்ட உபரி நிலம் | 68·6 | லட்சம் | ஏக்கர் |
| உபரியாகஅறிவிக்கப்பட்டது | 44·71 | ,, | ,, |
| உபரியாக எடுக்கப்பட்ட நிலம் | 23·37 | ,, | ,, |
| வினியோகிக்கப்பட்டது | 15·76 | ,, | ,, |

—இத்தகவலின்படி வினியோகிக்கப்பட்டது மதிப்பிடப்பட்ட நிலத்தில் 25 சதவீதம்தான் ஆறாவது ஐந்தாண்டு திட்ட நகல் கொடுக்கும் இன்னொரு தகவல் உச்சவரம்பு சீர்திருத்தங்கள் வெறும் கண்துடைப்பும் மோசடியும் ஆகுமெனக்காட்டுகின்றது. தேசிய மாதிரி சர்வே புள்ளிவிவரப்படி (26-வது சுற்று 1971-72) 30 ஏக்கரா மற்றும் அதற்கு மேற்பட்ட அளவு நிலம் வைத்திருப்போர் மொத்தம் தங்கள் கைகளில் 578·1 இலட்சம் ஏக்கராக்களை வைத்திருக்கிறார்கள்; சொந்த சாகுபடிக்கென நிலத்தைஒதுக்கி விட்டுபார்த்தாலும் 215.1 ஏக்கராக்கள் உபரியாக எடுக்கமுடியும். அதேபோல் 50 ஏக்கராவுக்கும் அதற்கு மேலும் நிலம் வைத்திருப்போர் தங்கள் கைகளில் 258.7 லட்சம் ஏக்கராக்களை உடமையாக்கி இருக்கின்றனர். சொந்த சாகுபடி போக 83.7 இலட்சம் ஏக்கர் இதிலிருந்தும் உபரியாக எடுக்க முடியும். இந்த இருவகைகளையும் சேர்த்தால் மொத்தம் உபரியாக 298.8 இலட்சம் ஏக்கர் உபரி நிலம் இருக்கிறது.

ஆறாவது ஐந்தாண்டு திட்ட நகல் உபரியாகக் கிடைக்கக் கூடிய நிலம் ஏறத்தாழ 300 லட்சம் ஏக்கர் இருக்கும் என்று மதிப்பீடு செய்கிறது. அதே நகல் இன்னொரு புறத்தில் உபரியாக 53.2 லட்சம் ஏக்கராக்கள் இருக்கிறது என்றும், உபரியாக விநியோகிக்கப்பட்டது 12.9 லட்சம் ஏக்கராக்கள் என்றும் சொல்கிறது. மேய்ச்சல் நிலம், பணப்பயிர் சாகுபடி நிலம், டீ, காபி, தோட்ட நிலம் இன்னும் பலவகைகளில் விலக்கு அளிக்கப்பட்டு பல ஓட்டைகள் உள்ள சட்டங்களின் அமுலாக்கத்தின்படியே கூட உபரியாக மதிப்பிடப்பட்டது 300 லட்சம் ஏக்கர்களாகவும் விநியோகிக்கப்பட்ட நிலம் 12·9 லட்சம்ஏக்கர்களாகவும் உள்ளது. இதுதான் நிலச்சீர்திருத்தங்களின் உண்மையான இலட்சணம்!

**நிலப்பற்றுகளின் விவரம் பின்வருமாறு:**

15 ஏக்கர் மற்றும் அதற்கு மேல் வைத்துள்ள விவசாயக் குடும்பங்கள் 1953-54லில் மொத்த விவசாயக் குடும்பங்களில் 10.85சதவிகிதம் இருந்தனர். அவர்கள் குவித்திருந்த நிலத்தின் அளவோ 52.51 சதவிகிதம் இருந்தது. 1971-72 ல் இவர்கள் 5.44 சதவிகிதம் ஆகியிருந்தனர். ஆனால் நில்த்தின் அளவோ 39.43 சதவிகிதம் ஆகவேதான் இருந்தது. இவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ பாதியாகக் குறைந்துள்ளது. ஆனால் அவர்கள் கையில் வைத்திருந்த நிலத்தின் அளவு ஏறத்தாழ கால் பகுதியே குறைந்திருந்தது. அதே போல் ஒரு ஏக்கராவுக்குக் குறைவாக நிலம் வைத்திருக்கும் குடும்பங்கள், மொத்த விவசாய குடும்பங்களில் 31.43 சதவிகிதம் இருந்தது. அவர்களிடமிருந்த மொத்த நில அளவு 1.36 சதவிகிதம் ஆகும். 1971-72 ல் இந்தக் குடும்பங்கள் 43.99 சதவிகிதமாக உயர்ந்தது. ஆனால் நிலஅளவு 1.58 சதவிகிதம்தான் உயர்ந்தது. அவர்களிடையே சராசரி நில அளவு 1953-54 ல் 0.27 ஏக்கராவாக இருந்தது. 1971-72 ல் 0.17 ஏக்கர்களாகக் குறைந்தது.

இவ்வாறு நிலத்தை நம்பி வாழும் குடும்பங்களில் ஏழை விவசாயிகள் மிகவும் மோசமான நிலைக்குத்தான் நிலச்சீர்திருத்

நிங்களுக்குப் பின்னர் தள்ளப்பட்டனர். எனவே பல்வேறு நிலச்சீர்திருத்தங்களும் நிலப்பிரபுக்களின் நிலக்குவிதலை ஒழிக்காமல் விட்டுவைத்திருக்கின்றன என்றுதான் யதார்த்தமாக ஆய்வு செய்யும் எவரும் முடிவுக்கு வரவேண்டும். நிலப்பிரபுக்கள் மட்டுமின்றி, தரகு முதலாளிகள் மற்றும் அதிகார வர்க்கத்தினரும் பெரும் அளவில் நிலப்பற்றுதலைப் பெற்றுள்ளனர். இவர்களின் அந்தஸ்தும், செல்வாக்கும், அதிகாரமும், கௌரமும், அதாவது நிலப்பிரபுத்துவ உரிமைகளும், உறவுகளும் அப்படியே பேணிப்பாதுகாக்கப்படுகின்றன.

எனினும் இந்தச் சீர்திருத்தங்களைக் கொண்டுவர வேண்டியதன் அவசியம் இவர்களுக்கு ஏன் ஏற்பட்டது? மக்கள் தங்கள் கோரிக்கைகளை அடைய விடாப்பிடியாக போர்க்குணத்தோடு போராடும்போது, ஆளும் வர்க்கங்கள் அவர்களைவிட முற்போக்காகப் பேசுவதும், அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் ஒரே பிரதிநிதி தாங்கள்தான் என்பது போல நடிப்பதும் அவர்களின் தந்திரமாக இருக்கிறது என்பதை வரலாறு தெளிவாக எடுத்துக் காட்டி இருக்கிறது. கம்யூனிஸ்டு அறிக்கையிலேயே மார்க்சும், ஏங்கல்சும் நிலப்பிரபுத்துவ சோசலிசம், புரோகித சோசலிசம், கிறித்துவ சோசலிசம், குட்டி முதலாளித்துவ சோசலிசம், ஜெர்மானிய அல்லது 'நிஜ' சோசலிசம், பழைமை பிடிப்புள்ள சோசலிசம் அல்லது முதலாளித்துவ சோசலிசம், விமர்சன கற்பனா சோசலிசம் ஆகிய ஆயிரத்தெட்டு வேடதாரிகளை அம்பலப்படுத்தினர். அந்த வரிசையில் வரும் 'ஜனநாயக சோசலிசமே இந்தியாவின் நிலச்சீர்திருத்தங்கள். இவ்வாறு சில உறுதிமொழிகளும், கண்துடைப்பு, நடவடிக்கைகளும் எடுத்து மக்களின் போராட்ட உணர்வுகளை அந்த நடவடிக்கையின் மூலம் திசை திருப்புவதுதான் ஆளும் வர்க்கங்களின் நோக்கமாகும்.

ஆந்திராவில் நடந்த மாபெரும் தெலிங்கானா விவசாயிகள் பேரெழுச்சி, வங்கத்தில் நடந்த தெபாகா விவசாயிகள் இயக்கம், மராட்டியத்தில் நடந்த வார்லி எழுச்சியைத் தொடர்ந்துதான், அவற்றை திசை திருப்பத்தான் பூதான இயக்கங்கள், நிலச்சீருத்தங்கள் பற்றி ஆளும் வர்க்கங்கள் ஓங்கிக் கூச்சலிட்டன. அதைப்போலவே, நக்சல்பாரி பேரெழுச்சி நாடுமுழுவதும் எதிரொலித்து விவசாயிகளின் ஆயுதம் தாங்கிய போராட்டங்கள் வெடித்துக் கிளம்பியபோதுதான் மீண்டும் நிலச்சீர்திருத்தம் பற்றி உரக்கக் கூறினர்.

தரகு—அதிகாரவர்க்க முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ அரசு மேற்கொண்ட நில உச்சவரம்பு மற்றும் குத்தகைச் சீர்திருத்தங்கள் ஆகிய இரு சாராம்சங்களைக் கொண்ட எல்லா நிலச்சீர்திருத்த நடவடிக்கைகளும், நிலப்பிரபுத்துவ நிலவுடமை உறவுகளை அறுத்தெறிந்து விவசாயத்தில் தங்குதடையற்ற முதலாளித்துவ உற்பத்தி முறையின் வேகமான வளர்ச்சிக்கு வழி வகுப்பதாக அமையவில்லை. நிலத்தை ஒரு பரிவர்த்

தனைப் பண்டமாக மாற்றாமல், அந்தப் போக்குக்கு நேர் எதிராக நிலவுடைமைபற்றிய நிலையற்ற நிலைமையையே சட்டப்பூர்வமாக ஏற்படுத்தியது. நடைமுறையில் நிலப்பிரபுத்துவ நிலஉடமை உறவுகளை கட்டிக் காப்பதாகவே அமைந்தது. விவசாயத்தில் தங்கு தடையற்ற உற்பத்திமுறை வளர்வதற்கு முன்தேவையாக பின்வரும் அடிப்படையை மார்க்சு வைக்கிறார்.

“நிலவுடைமையை பேர வியாபாரத்திற்கு விடுவது—நிலவுடைமையை ஒரு பரிவர்த்தனைப் பண்டமாக்குவது; இதில்தான் பழைமையை இறுதியாக தூக்கியெறிவதும், இறுதியாகப் பண நிதி ஆதிக்கத்தை நிறுவுவது அடங்கி இருக்கிறது (i) மனிதனிடமிருந்து பூமி அந்நியமாகியதும், அதனால் ஒரு சில பெரும் பிரபுக்களது வடிவத்தில் மனிதனை எதிர்க்கொள்வது ஆகியமுறையில் நிலப்பிரபுத்துவ நிலச் சொத்துடைமை அதன் தன்மையிலேயே வெறுமனே பேர வியாபார நிலமாகிவிட்டது. பிரபுத்துவ நிலச் சொத்துடைமை மூலமாக ஏற்கனவே மனிதனுக்கு அந்நியமானது என்கிற முறையில் நிலம் ஆதிக்கம் செலுத்துகிறது. பண்ணையடிமை நிலத்தோடு பிணைக்கப்பட்டிருக்கிறான். அதேபோல் நிலப்பிரபு நிலத்தின் தந்தைவழி வாரிசாகிறான். உண்மையில் ஆதிக்கம் என்பதே நிலத்திலுள்ள தனி சொத்துடைமையை அடிப்படையாகக் கொண்டது. நிலப்பிரபு எஸ்டேட்டின் (பண்ணையின்) பிரபுவாக ஆதிக்கம் புரிகிறான். (ii) வெறும் பொருளாயதச் செல்வம் என்பதைவிட கூடுதலான நெருக்கமான தொடர்பு நிலத்திற்கும் நிலவுடமையாளனுக்கும் இருக்கிறது. பண்ணை அதன் பிரபுவோடு தனித்தன்மையாக்கப்பட்டிருக்கிறது அவனது அந்தஸ்து, தகுதி, பட்டம், சலுகைகள், உரிமைகள், கௌரவம், நீதி வழங்கும் உரிமை, அரசியல் அந்தஸ்து ஆகியவற்றையும் பெற்றிருக்கிறது. அது பிரபுவினுடைய சடத்தன்மை வாய்ந்த அங்கமாக இருக்கிறது; உயர்குடி பெருமையும் நிலச் சொத்துடமையும் பின்னிப் பிணைகிறது. (iii) நிலம் இவ்வாறு நிலப்பிரபுவினுடைய தன்மைகளைப் பெறுவதைப் போன்றே பிரபுத்துவ நிலச் சொத்துடமை பிரபுவுக்கு அதன் பெயரையும் அந்தஸ்தையும் பட்டத்தையும் கொடுக்கிறது. அவனது குடும்ப வரலாறு, வீட்டு வரலாறு, இன்னும்பிற —இவை யெல்லாம் பண்ணைகள் நிலப்பிரபுக்களுக்குத் தனித்தன்மைகளைத் தருகிறது; நேர் அர்த்தத்தில் தனித்தன்மை அளிக்கிறது (iv) அதே போன்று கூலி உழைப்பாளர்களுடைய அந்தஸ்தை பண்ணை உழைப்பாளர் பெற்றிருப்பதில்லை. அவனே அவனது சொத்துடமையாக, பண்ணையுடமையாக இருக்கிறார்கள். மரியாதை, விசுவாசம், பணிவிடை செய்யும் கடமை ஆகியவற்றால் நிலப்பிரபுவோடு வேறு பிணைக்கப்பட்டிருக்கிறார்கள். பண்ணை உழைப்பாளனுடனான நிலப்பிரபுவின் உறவில் நேரடி அரசியல் மற்றும் மனித உறவு என்னும் நெருக்கமான பகுதியுமுண்டு. பழக்க வழக்கங்கள், மரபுகள், குணாம்சங்கள் இன்னும் பிற பண்ணைக்கு பண்ணை மாறுபடுகிறது; நிலத்தோடுபிணைக்கப்பட்

தன்மை காரணமாக எப்பொழுது வேண்டுமானாலும் நிலத்தை விட்டு வெளியேற்றப்படலாம் என்ற நிலை, சட்ட விரோதமான வாய்வழிபூர்வமான ஒப்பந்தங்கள், நிலப்பிரபுக்களது சமூக—அரசியல்—பொருளாதார ஆதிக்கங்கள் இன்னும் பிற காரணங்களால் அவர்கள் முதலாளித்துவ உற்பத்தி முறையில் விவசாயத்தை மேற்கொள்ள அஞ்சுவதோடு, ஊக்கமோ, அதற்கான பிற அடிப்படைத் தேவைகளோ இல்லை. மேலும் நில வாடகையின் விகிதமும் வரம்பும் அரசால் சட்டபூர்வமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது; சந்தைக்கு விடப்படவில்லை. இதுவும் சட்டவிரோத மற்றும் வாய்வழி ஒப்பந்தங்களையே நடைமுறையில் ஊக்குவிப்பதாக இருக்கிறது. சொந்த சாகுபடி செய்ய விரும்பாத, ஸ்தலத்தில் இல்லாத நிலப்பிரபுக்களும் நடுத்தர நிலவுடமையாளர்களும் சட்ட விரோதமாகவும் வாய்வழியேயும் ஒப்பந்தங்கள் செய்து கொண்டே வாடகைக்கு விட வேண்டியுள்ளது. குத்தகைதாரர்களை வெளியேற்றுவதும் புதிய குத்தகைக்குவிடுவதும் அவ்வாறே அல்லது நிலத்தையே விலைக்குவிற்றுவிடும் நிலையே இருக்கிறது. நிலத்தைகுத்தகைக்கு விடுவதில் மேற்கண்ட பிரச்சினைகளையும், நிலஉச்சவரம்பு சட்டத்தினால் எழும் பிரச்சினைகளையும் தனது பழைய நிலவுடமை உறவுகளை நிலப்பிரபுத்துவ வர்க்கம் அரசியல், பொருளாதார, சமூகச்செல்வாக்கால், அதிகாரத்தால், பலத்தால், உரிமைகளால், சலுகைகளால் நீடிக்க முடிகிறது இதன் காரணமாகவே ஒரு புறம் முதலாளித்துவ முறையிலான பணவாடகை செலுத்தும் குத்தகை முறையைபின்பற்றுவதை உக்கிரமாக எதிர்த்து, நிலப்பிரபுத்துவ முறையிலான பணவாடகை அல்லது தானிய வாடகை அல்லது வார குத்தகையோடு பொருளாதாரமற்ற பிறஉறவுகளையும் குத்தகைதாரர்களிடம் கொண்டுள்ளனர். சொந்த சாகுபடிக்கெனவும், பல்வேறு பெயர்களிலும், பினாமி அறக்கட்டளைகள் மற்றும் உச்சவரம்பு சட்டங்களில் கொடுக்கப்பட்டுள்ள விலக்குகளைப் பயன்படுத்திக் கொண்டும் ஏராளமான ஏக்கரா நிலங்களைப் பெரும் நிலப்பிரபுக்கள் குவித்திருக்கின்றனர். நில உச்சவரம்புச் சட்டங்கள் எதுவும் நிலக்குவிதலை கணிசமான அளவுகூட குறைத்துவிடவில்லை என்று அவற்றின் கர்த்தாக்களே ஒப்புக்கொண்டுள்ளனர்.

வெவ்வேறு வழிகளில் நிலச்சொத்துடமையை முதலாளித்துவ முறையிலான சொத்துடமை வடிவங்களாக மாற்றியமைப்பதன் மூலம் விவசாயத்தில் முதலாளித்துவ உற்பத்தி முறையின் வளர்ச்சியை கொண்டு வரமுடியும். சான்றாக இங்கிலாந்தைப்போல நிலப்பிரபுக்களின் நலன்களுக்காக விவசாயப் பெருமக்களுக்கு எதிராக புரட்சிகரமாக வன்முறையைப் பிரயோகித்து நிலவெளியேற்றம் செய்வது, அதன்மூலம் நிலத்தையும் உழைப்பாளர்களையும் பிரிப்பது; இது புரட்சிகரமான முறையில் நிலவுடமை உறவுகளை மாற்றியமைப்பதாகும். (ii) அமெரிக்காவைப் போல அடிமைச் சொந்தக்காரர்களுக்கு எதிராக புரட்சிகரமாக வன்முறையைப் பிரயோகித்து பெரும் பிரபுத்துவ பண்ணைகளை சிறு விவசாயிகளின் முதலாளித்துவப் பண்ணைகளாக மாற்றியமைப்பது; இதுவும் புரட்சிகரமான முறையில் நிலவுடமை உறவு

களை மாற்றியமைப்பதாகும். இவ்விரவிரண்டு புரட்சிகரமான மாறுதல்களின் தனிச்சிறப்பான அம்சம் என்னவென்றால் அவை புரட்சிகரமான முறையில் நிலவுடமை உறவுகளை மட்டுமல்லாது, பொருளாதாரமற்ற உறவுகளையும் அறுத்தெறிவதன் மூலம் எல்லாவகையான பொருளாதாரமற்ற ஒடுக்குமுறைகளிலிருந்தும் விடுபட்ட சுதந்திரமான கூலி உழைப்பாளர்களை உருவாக்குகின்றன; நிலப்பிரபுக்களின் நிலத்துடன் பிணைக்கப்பட்ட அந்தஸ்து, சலுகைகள், கௌரவங்கள், அதிகாரம், உரிமைகள், பெருமைகள் ஆகியவற்றையும் உடைத்தெறிந்து வெறும் பொருளாயத ரீதியான, புறவயமான உறவுகளை நிலைநாட்டின. (iii) ஜெர்மனியைப் போல மத்திய கால நிலப்பிரபுத்துவ நிலச்சொத்துடமை வடிவங்களை சீர்திருத்தமான முறையில் ஒருபுறம், பெரும் எஸ்டேட்டுகளை தாமே முதலாளித்துவ முறையிலான உற்பத்தியை மேற்கொள்ளும்படியும், மிகவும் மெதுவாக, வழமையாக, மரபுவழியே ஜங்கர் நிலப்பிரபுக்களது பண்ணைகளாக மாற்றியமைப்பது; மற்றொருபுறம் உறங்கிக் கிடக்கும் அசைவற்ற விவசாயிகளை தாமே வழமையாகவும், மிகவும் மெதுவாகவும் மரபு வழியேயும் முதலாளித்துவ உற்பத்தியை மேற்கொள்ளுவதன் மூலம் பணவாடகை முறையிலிருந்து கூலித்தொழிலாளர்களாகவும், பணக்கார விவசாயிகளாகவும் மாறும்படி வடிவமைப்பது.

மேலெழுந்தவாரியாக பார்க்கும்போது காங்கிரசு ஆட்சி மேற்கொண்ட நிலச்சீர்த்திருத்தங்களுக்கான சட்ட மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் அமெரிக்க முறையைப் போன்று விவசாயிகளின் நலன்களுக்காக நிலப்பிரபுக்களுக்கெதிரான, ஆனால் சீர்திருத்த முறையிலான மாறுதல் போன்று தோன்றுகிறது. சட்ட மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் எவ்வாறு இருப்பினும் புரட்சிகரமான முறையில் இன்றி சீர்திருத்த வழியில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன; நடைமுறையிலும், சாராம்சத்திலும் பிரஷ்யன்-ஜங்கர் நிலப்பிரபுக்களை உருவாக்கிய ஜெர்மன் முறையாகவே இவை அமைந்தன. குத்தகைதாரர் பாதுகாப்பு சட்டமும், நிலஉச்சவரம்பு சட்டமும், அவற்றுக்கான நிர்வாக நடவடிக்கைகளும் மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் பொழுது விவசாயிகளுக்கு சாதகமானவைகளாகத் தோன்றும். ஆனால் நடைமுறையிலும், உள்ளடக்கத்திலும் அவ்வாறு இல்லை. உபரிநிலப்பங்கீடு, நிலச்சொத்துடமையை குத்தகைதாரர்களுக்கு வழங்குவது ஆகியவையே கூட ஜங்கர் முறைக்கானவைகளாக அமைந்ததை ரசியாவின் 1861 மற்றும் 1906 சீர்திருத்தங்கள் காட்டின.

ரசியாவில் 1861-ல் ஜார் மன்னன் பண்ணை அடிமை முறையை—உழைப்பு வாடகைமுறையை—ஒழித்தான். பண்ணை அடிமை முறையின் கீழ் ஒரு பகுதி துண்டு நிலம் பண்ணை அடிமைகளின் சொந்த அனுபோகத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டது. குத்தகையாக பண்ணை அடிமைகள் தமது சொந்த கருவிகளைக் கொண்டு நிலப்பிரபுக்களின் எஸ்டேட்டு

களில் குறிப்பிட்ட நாட்கள் வேலை செய்வதன்மூலம் உழைப்பு வாடகையைச் செலுத்தினார்கள். இதுவல்லாமல் ஆயிரத்தெட்டு வழிகளில் அடிமைத்தனம், ஒடுக்குமுறை ஆகிய பொருளாதார மற்றஉறவுகளின்மூலமும் சுரண்டப்பட்டார்கள். 1861 சீர்திருத்தத்தின் மூலம் பண்ணையடிமை முறை சட்டப்பூர்வமாக ஒழிக்கப்பட்டு, இனியும் உழைப்பு வாடகை செலுத்தவேண்டியதில்லை என்றும் ஏற்கனவே பண்ணை அடிமைகள் தமது சொந்த அனுபோகத்திற்காக நிலப்பிரபுக்களிடமிருந்து பெற்றிருந்த நிலங்கள் அவர்களுக்கே சொந்தம் என்றும் செய்யப்பட்டன. இதன்மூலம் பண்ணை அடிமை முறை முற்றாக ஒழியாது தொடர்ந்தது. ஆனால் நிலத்தை உடமையாகப் பெற்ற விவசாயிகள் மத்தியில் பிரிவினை தோன்றியது. சில விவசாயிகள் மற்றவர்களிடமிருந்து குத்தகைக்கு நிலம் பெற்றும், பல்வேறு வகைகளில் அரசு நிலம், கிராமப் பஞ்சாயத்து நிலம் போன்று பலவாகப் பிரிந்துகிடந்த நிலங்களைக் குத்தகைக்குப் பெற்றும் விவசாயத்தைப் பெருக்கி முதலாளித்துவ முறையிலான பரிணாம வளர்ச்சிப்போக்கில் முன்னேறினர். பெரும்பான்மையான விவசாயிகள் நிலத்தை இழந்து கூலித் தொழிலாளர்கள் ஆனார்கள். பெரும் எஸ்டேட்டுகள் பறிமுதல் செய்யப்படாமல் இருந்ததால் அவற்றில் முதலாளித்துவ உற்பத்தி முறை - நிலப்பிரபுத்துவ உறவுகளோடு – வளர்ந்து ஜங்கர் நிலப்பிரபுக்களாக மாறத் துவங்கியதால் அவர்களும் விவசாயிகளின் ஒரு பகுதி நிலத்தைப் பறித்துக் கொண்டார்கள். 1906 ஸ்டோலிபின் நிலச்சீர்திருத்தத்தில் ஒருபுறம் பெரும் பணக்கார விவசாயிகள் நிலப்பிரபுத்துவ அந்தஸ்து, சலுகைகள், கௌரவம், அதிகாரம், உரிமைகளோடு முதலாளித்துவ உற்பத்தி முறையில் வளர்வதற்கும், விவசாயிகளிடமிருந்து நிலங்களை ஈவிரக்கமற்ற முறையில் பறித்துக் கொள்வதற்கும் அனுமதிக்கப்பட்டு அரை நிலப்பிரபுத்துவ தன்மையுடைய 'குலாக்குகள்' என்னும் வர்க்கம் தோன்றி வளர்ந்தது. இந்த நிலச்சீர்திருத்தத்திலும் கிராம பஞ்சாயத்துக்குச் சொந்தமாக இருந்து சுழற்சி அடிப்படையில் மீண்டும் மீண்டும் மறுவிநியோக முறையில் விவசாயிகள் பெற்றுவந்த நிலங்கள் அவர்களுக்கே சொந்தமாக்கப்பட்டது. ஆனால் நடை முறையில் விவசாயிகளிடமிருந்து 'குலாக்குகளும் ஜங்கர் நிலப்பிரபுக்களும் நிலத்தைப் பிடுங்கிக் கொள்வதற்கே வழிவகைகள் செய்யப்பட்டன.

ரஷ்யாவைப் போலத்தான் இந்தியாவிலும் விவசாயிகளுக்கு குத்தகை சீர்திருத்தம் மூலம் உடமையாக்கப்பட்ட நிலமும் நில உச்சவரம்பு மூலம் உபரி என்று பெற்று வினியோகிக்கப்பட்ட நிலமும் மீண்டும் பணக்கார விவசாயிகளும் நிலப்பிரபுக்களும் பிடுங்கிக் கொள்வதற்கே வழிவகை செய்யப்பட்டது. ஆனால் நிலஉச்சவரம்பு, குத்தகை தடுப்பு, குத்தகை விகித விதிப்பு ஆகிய நடவடிக்கைகள் ஜங்கர் முறையிலான முதலாளித்துவ பரிணாம வளர்ச்சிக்கே கூட தடையாகிப் போய் இருக்கின்றன. புரட்சிகரமான முறையின்றி சீர்திருத்த முறையிலும் விவசாயிகள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றாமல், பழைய ஆளும் வர்க்கங்களின் அரசு அமைப்பின் கீழ் ஆளும்

வர்க்கங்களே கொண்டு வரும் எல்லா சட்டப்பூர்வ மற்றும் நிர்வாக நடவடிக்கைகளும் இவ்வாறுதான் சென்று முடியும். எனவேதான் அரசியல் ரீதியில் புரட்சிகரமான முறையில் நிலவுடமை உறவுகளை மாற்றியமைக்கவேண்டியதன் அவசியத்தினை மார்க்சிய—லெனினியவாதிகள் வலியுறுத்தி மேற்கொள்கின்றனர்.

"பழையஆட்சியையும் நிரந்தர இராணுவத்தையும் அதிகார வர்க்கங்களையும் அழித்தொழிக்காமல்விவசாயிகள்ஒருவிவசாயப் புரட்சியை நிறைவேற்ற முடியாது. ஏனெனில் இவையெல்லாம் நிலப்பிரபுத்துவ முறையின் பிரதான ஊன்றுகோல்களாக ஆயிரக்கணக்கான வழிகளில் அத்துடன் பிணைக்கப்பட்டுள்ளன." (லெனின் 1905-1907, முதலாம் ரஷ்யப் புரட்சியில் சமூக ஜனநாயகத்தின் விவசாயத்திட்டம், பக்கம் 122.) இவ்வாறு அரசியல் மாற்றமின்றி புரட்சிகரமான நிலவுடமை உறவுகளை மாற்றுவது சாத்தியமில்லை. புரட்சிகரமான மாறுதலின்றி விவசாயத்தில் சுதந்திரமான தங்குதடையற்ற முதலாளித்துவ உற்பத்தி முறையும் சாத்தியமில்லை. ஆளும் வர்க்கங்களின்அரசும், அரசு எந்திரமும் நீடிக்கும் வரை நிலப்பிரபுக்கள் எல்லா வகையான சீர்திருத்தங்களையும் முறியடிக்க முடியும்.

இவ்வாறு சீர்திருத்தவழியில் நிலவுடமை உறவுகளை மாற்றியமைக்க சட்டமற்றும் நிர்வாகநடவடிக்கை எடுத்ததைபோலவே ஆளும் வர்க்கங்களின் அரசு மேலும் சில சீர்திருத்தங்களை மேற்கொண்டுபொருளாதாரமற்ற பழையநிலப்பிரபுத்துவ உறவுகளை ஒழிப்பதாக கூறிக்கொண்டது.ஆனால் அவையும் நிலப்பிரபுத்துவ உறவுகளை உண்மையில் ஒழிப்பதாக இல்லை. அதற்கு மாறாக நிலப்பிரபுத்துவ உறவுகளினால் எழும் முரண்பாடுகளை கூர்மையாக்கவே செய்தன. குறிப்பாக விவசாயிகளுக்கெதிரான நிலப்பிரபுத்துவ ஒடுக்கு முறைகளும், அதற்கெதிரான விவசாயிகளின் தன்னெழுச்சியான போராட்டங்களும் அதிகரித்தன.

நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையில்பிரதான சுரண்டல் உபரி உற்பத்தியில் இருந்தும், உபரி உழைப்பிலிருந்தும் பெறப்படுகின்றது; ஆனால் முதலாளித்துவ உற்பத்தி முறையில் பிரதான சுரண்டல் உபரி மதிப்பிலிருந்தும், உபரி லாபத்திலிருந்தும் பெறப்படுகிறது. எனவே நிலப்பிரபுத்துவ சுரண்டலுக்கு அடிப்படையாக விளங்கும் பொருளாதாரமில்லாத ஒடுக்குமுறை வடிவங்கள் மிக முக்கியமானவை. அதுமட்டுமின்றி நிலச்சொத்துடமை தனிப்பட்ட நிலப்பிரபுக்கு பெயரும்,புகழும். அந்தஸ்தும், அதிகாரமும், சலுகைகளும், உரிமைகளும் தருகின்றன; திரும்பவும் தனிப்பட்ட நிலப்பிரபுக்களின் பதவி, பட்டம், அந்தஸ்து, நிலச்சொத்துடமையாக உள்ள பண்ணைகள் பெருகுகின்றன. இவை அனைத்தும் நிலத்தின்மீதும், நிலப்பிரபுக்களின் மீதும் சொந்த முறையில் சார்ந்து நிற்பது தந்தை வழி உறவு, அடிமைத்தனம், ஒடுக்குமுறைஆகிய நிலப்பிரபுத்துவ உறவுகளும். விவசாயிகளின்மீது நேரடியாக அதிகாரம் செலுத்துவதும் அடங்

கிய பொருளாதாரமில்லாத உறவுகளும் நீடிக்கின்றன. நிலச் சொத்துடமை வடிவங்களே இதற்கேற்றவாறு அமைகின்றன.

மேலைநாடுகளைப் போல பண்ணையடிமை முறை மூலம் பிரதான சுரண்டல் முறையை இந்திய நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பு பெற்றிருக்கவில்லை. அடிமை முறையோ, பண்ணை அடிமை முறையோ, இரண்டுமே இல்லாத ஜாதிய முறையே பிரதான உழைப்புப் பிரிவினை, நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறை மற்றும் சுரண்டல் முறையாக இருந்தது பிறப்பால் தீர்மானிக்கப்படும் ஜாதிய முறை பண்ணையடிமை முறையிலும் பார்க்க கொடிய சுரண்டல் முறையாகும் இதன் கீழ் ஒரு பெருமளவு மக்கள் பிரிவினர் சொத்துடமை உரிமை மட்டுமல்ல, நிலத்தில் அனுபோக உரிமையும் மறுக்கப்பட்டனர். இந்த முறையின் கீழ் தானிய வடிவத்தில் கூலிபெறும் விவசாய தொழிலாளர்களை, நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையைப் பெற்றிருந்த அதே சமயம், ஜாதிய முறையால் பொருளாதாரமற்ற பல்வேறு முறைகளிலும் ஒடுக்குமுறையுடன் சமூகத்துடன் அவர்கள் பிணைக்கப்பட்டிருந்தார்கள். அந்த முறைகளிலும் சுரண்டப்பட்டார்கள்; கூலிபெறாத உழைப்புச் சேவைகள் மூலமும், சுரண்டப்பட்டார்கள் தனிச்சொத்துடமையும் நிலத்தில் அனுபோக உரிமையும் பெற்றிருந்த விவசாயிகள் பெரும் நிலப்பிரபுக்களுக்கு தானிய வாடகை செலுத்தும் குத்தகை முறையும், அதே சமயம் இவர்களும் ஜாதிய முறைகளினால் சமூகத்தோடு பிணைக்கப்பட்டு தானிய வாடகைக்கும் மேலே உழைப்பு வாடகையும் செலுத்த வேண்டியிருந்தது. பொருளாதாரமில்லாத உழைப்புச் சேவையையும் செலுத்தினர். இவ்வாறு உழைப்பு வாடகை, தானிய வாடகை, உழைப்புச்சேவை போன்றவைகளை விவசாயிகள் செலுத்துவது; கூலி விவசாயத் தொழிலாளர்கள் தானிய வடிவிலான கூலிபெற்றும், உழைப்புச்சேவை செலுத்தியும் வந்ததோடு, பிறப்பால் தீர்மானிக்கப்படும் ஜாதிய முறையில் பொருளாதாரமில்லாத சுரண்டலுக்கான ஒடுக்கு முறைக்கு ஆளாவது என்ற இவையனைத்தும் சேர்ந்து ஒரு சமுதாயக்கட்டுமானம் என்கிற முறையில் ஜாதியமுறை, பண்ணை அடிமை முறையிலும் கொடிய நிலப்பிரபுத்துவ உறவுகளைக் கொண்டது. எனவே ஜாதிய முறையிலான நிலப்பிரபுத்துவ உழைப்புப் பிரிவினையைப் புரட்சிகரமான முறையில் உடைத்தெறியாமல். சுதந்திரமான தங்குதடையற்ற முதலாளித்துவ உற்பத்திமுறை வளர்வதென்பது சாத்தியமில்லை.

காலனியாக்கப்படுவதற்கு முன் இந்திய நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் நிலவிய ஆசிய சொத்துடமை வடிவம் மற்றும் உற்பத்தி முறையின் கீழ் இந்தியச் சிறு கிராமச் சமூகங்களுக்கு மேலே அதிகாரப் பூர்வமான, சட்டப்பூர்வமான நிலச்சொத்துடமை பெற்றிருந்த பொது அதிகாரமாகவும், கொடுங்கோன்மையாகவும் விளங்கிய ஒருங்கிணைந்த ஒருமையாகிய அரசர்களிடமிருந்தும், பிரபுத்துவ உயர்குடியினரிடமிருந்தும் இடைத்

த்ர்கனாக இருந்து நில அனுபோக உரிமையை வ்வசாயிகளுக்குப் பெற்றுத் தந்த சிறு கிராமக் சமூக அமைப்பின் மூலமாகவே— ஜாதியமுறையிலான உழைப்புப்பிரிவினையை இயக்குவதன் மூல மாகவே—உற்பத்தி உறவுகள் தீர்மானிக்கப்பட்டன. மேலிருந்து கீழ்வரை கிரமமாக முன்னரே தீர்மானிக்கப்பட்ட முறையில் உழைப்பதும், சமூக பாத்திரமாற்றுவதும், அதே போன்று முன் னரே தீர்மானிக்கப்பட்ட முறையில் தானியவாடகை மற்றும் தானியகூலி வழங்கப்படுவதும் இருந்தது. கிராமச் சமூகத்தின் மூலமாகவோ, ஜமீன்தாரர்கள் போன்ற இடைத்தரகர்கள் மூல மாகவோ அதிகாரப் பூர்வமான சொத்துடமைப் பெற்ற சிறு கிராமச் சமூகங்களுக்கு மேலிருந்த நிலப்பிரபுத்துவ உயர்க்குடி யினரும் அரசரும் நிலவரியாக தானியமும், இறுதிக்காலத்தில் பெரும்பாலும் பணவரியும் பெற்றனர். ஆங்கிலேய காலனி ஆதிக்கவாதிகளது ஜமீன்தாரி, இரயத்துவாரி மற்றும் மகல்வாரி முறைகளின் கீழ்,மகல்வாரி முறையில் பொதுச்சொத்துடமையும், தனிப்பட்ட நில அனுபோக உரிமையும், கிராமப் பஞ்சாயத்தே நேரடியாக வரி செலுத்துவதாகவும் இருந்தது; மற்ற இரு முறைகளில் பொதுச் சொத்துடமை ஒழிந்து தனிச்சொத்துடமை வந்தது. சிறு கிராமச் சமூகங்களின் பொருளாதார அடிப்படை கள் ஆங்கிலேயரின் வணிகம் மற்றும் உற்பத்திப் பொருட்களால் அழிந்தது. பொது மராமத்துப் பணிகள் புறக்கணிக் கப்பட்டன. இவைகளின் விளைவாக விவசாய சீரழிவும் கைவினைத் தொழில்களின் சிதைவும் ஏற்பட்டன. கிராமச் சமூகமே வரி, குத்தகை மற்றும் கூலிக்கான தானிய அளவு ஆகிய வற்றை தீர்மானிப்பது போய் தனிப்பட்ட சொத்துடமையாளர் களே தீர்மானிக்கும்முறை வந்தது. தானிய வாடகை, வாரக்குத் தகை, பண வாடகை ஆகியன அடங்கிய குத்தகையும், உள்குத் தகையும் நிலவின. பணவாடகை செலுத்தும் குத்தகை முறை மேலும் மேலும் கூடுதலாக வந்தாலும் அவை உபரி மதிப்பிலிருந் தும் உபரி உழைப்பிலிருந்தும் உபரி இலாபத்திலிருந்தும் செலுதத படவில்லை. உபரி உற்பத்தியிலிருந்தும், உபரி உழைப்பிலிருந்தும் செலுத்தப்பட்டதால் மேற்கண்ட எல்லா குத்தகை முறைகளும் நிலப்பிரபுத்துவ நிலவுடமை முறைகளையே கொண்டிருந்தன. ஜாதிய முறைகள் ஒழிக்கப்படுவதற்கான சிறு சீர்திருத்தங்கள் கூட காலனிய காலத்தில் இல்லை; மாறாக ஆங்கிலேய காலனிய ஆதிக்கத்தின் தாக்கததால் கூர்மையடைந்த ஜாதிய முரண்பாடு கள் காரணமாக அரசு சன்மானங்களை பங்கீடு செய்வதற்காக மேல்ஜாதியினரிடையே தோன்றிய போட்டியை தமது ஆட்சிக்கு பயன்படுத்திக் கொணடனர் காலனிய ஆதிக்கவாதிகள். தேர்தல், அரசு சன்மானங்களை 'பிச்சை' போடுவது போன்றவற்றில் ஜாதிய முன்னுரிமை முறைகளால் ஜாதிய முறைகளைப் பலப் படுத்தவே செய்தனர்.

1947 அதிகார மாற்றத்திற்குப் பின் தரகு - அதிகார வர்க்க முதலாளிகள் மற்றும் நிலப்பிரபுக்களின் அரசு ஜாதிய முறைகளை ஒழிப்பதாக சொல்லிக் கொண்டு சில சீர்திருத்த நடவடிக்கை கள் மேற்கொண்டுள்ளன. நிலச் சீர்திருத்தங்களைப் போலவே

அடிப்படையான அரசியல் மாற்றத்தின் மூலமாக புரட்சிகரமான முறையில் ஜாதிய முறைகளை தூக்கியெறியாமல் சீர்திருத்த முறைகளை மேற்கொண்டுள்ளதால் ஒடுக்கு முறைக்குள்ளான ஜாதியினருக்கு மேலும் துன்பகரமான, வேதனையான நிலைமைகளையே அவை தோற்றுவித்தன. தேர்தல், அரசு சன்மானங்களை பகிர்ந்தளிப்பது ஆகியவற்றில் ஜாதிய முறையில் முன்னுரிமை தருவதும், பிரஷ்யன் ஜங்கர் முறையிலான முதலாளித்துவ வளர்ச்சியும், நிலப்பிரபுத்துவ ஜாதிய ஒடுக்கு முறைகளை மீண்டும் புதிய வேகத்துடன் புதுப்பிக்கவே செய்தன.

தேர்தல், அரசு சன்மானங்களைப் பகிர்ந்தளிப்பது போன்றவற்றில் ஜாதியமுறையில் முன்னுரிமை, தாழ்த்தப்பட்ட பின் தங்கிய ஜாதியினருக்கும், மலை ஜாதியினருக்கும் நிலப்பங்கீடும் வினியோகமும், வீட்டு வசதியும் கல்வி வசதியும் அளிப்பது போன்ற சீர்திருத்தங்களும் கொத்தடிமை முறை ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு போன்ற சீர்திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டன. இந்த நடவடிக்கைகள் மீண்டும் ஜாதியப்போட்டிகளுக்கும் ஒடுக்குமுறைகளுக்குமே நடைமுறையில் சென்று முடிந்தன; நிலப்பங்கீடு, வினியோகம், கொத்தடிமைமுறை ஒழிப்பு தீண்டாமை ஒழிப்பு ஆகியவை சீர்திருத்த முறைகளில் நிறைவேற்றப்பட்டதால் கிராமப்புற நிலப்பிரபுத்துவ ஆதிக்க சக்திகள் வினியோகம் மற்றும் பங்கீடு செய்யப்பட்ட நிலங்களையும், புதிதாகப் பண்படுத்தப்பட்ட நிலங்களையும் பறிமுதல் செய்து கொண்டதோடு நிலப்பிரபுத்துவச் சுரண்டலை நீடிக்கும் பொருட்டு கொத்தடிமை மற்றும் தீண்டாமை ஆகியவற்றை மேலும் தீவிரமாகப் பின்பற்றவே செய்கின்றன. தீண்டாமை மற்றும் பிறஜாதிய ஒடுக்குமுறையால் தாழ்த்தப்பட்டவர்களும் பழங்குடியினரும் கொடுமைப்படுத்தப்படுவதும், படுகொலை செய்யப்படுவதும், தீயிட்டுக் கொளுத்தப்படுவதும் நாடு முழுவதும் அன்றாட நிகழ்ச்சிகளாக உள்ளன. இவை வெறும் சமூக கலாச்சார வடிவங்களே என்றும், நிலப்பிரபுத்துவத்தின் மிச்ச சொச்சங்களே என்றும் எல்லா வண்ணத்திரிபுவாதிகளும், முதலாளிய அரசியல் மற்றும் சமூகவியலாளர்களும் நியாயப்படுத்துகின்றனர். ஆனால் இவை உபரி மதிப்பையோ, உபரி லாபத்தையோ அல்லாமல் உபரி உழைப்பையும், உபரி உற்பத்தியையும் சுரண்டும் நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையின் மிக முக்கியமான அம்சங்களாகும். நிலப்பிரபுத்துவ தன்மையுடைய தானிய வாடகை மற்றும் பணவாடகை செலுத்தும் குத்தகை முறைகளோடு குத்தகைக்கு மேலே உழைப்பு வாடகையைப் பல்வேறு முறைகளில் உறிஞ்சுகின்ற சாதனமாக பொருளாதாரமில்லாத இந்த நிலப்பிரபுத்துவ ஒடுக்குமுறை உறவுகள் உள்ளன.

இந்தியாவின் ஆசிய நிலப்பிரபுத்துவ சொத்துடமை வடிவங்கள் ஒழிக்கப்பட்டு தனிச்சொத்துடமை முறை வந்ததால் கிராமப்புறங்களில் மக்கள் தொகையில் பெரும்பான்மை நிலமற்ற, ஏழை விவசாயிகள் மிக மோசமான ஏழ்மை நிலையில் கொத்தடிமை முறைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். வெளி நாடுகளிலோ வரலாறுகளிலோ காணப்படும் அடிமைத் தனத்திலும்

மிக மோசமான அம்சங்களை இந்த கொத்தடிமைமுறை கொண்டிருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் ஆதிவாசிகளிடையேயிருந்து மட்டுமல்லாது சில நடுத்தர ஜாதியினராகிய கூலி, ஏழை விவசாயிகள் மத்தியிலிருந்தும் கூட கொத்தடிமைகள் உருவாக்கப்படுகிறார்கள். அவர்கள் தங்களையும் மனைவி மக்களையும் கொத்தடிமைகளாக்கும்படி நிர்பந்திக்கப்படுகிறார்கள். மாத அல்லது வருடக் கூலிக்குப் பேசி ஒப்பந்தம் செய்து கொள்வது, கடன் சுமை காரணமாக ஒப்பந்தத்தை முறித்துக்கொள்வது என்று வெறும் பொருளாதார ரீதியான உறவு மட்டுமின்றி பொருளாதாரமில்லாத எல்லாவகை வரம்பற்ற சுரண்டலையும், ஒடுக்குமுறையையும், பலாத்கார நிர்ப்பந்தத்தால் ஒப்பந்தத்தை நீட்டிப்பதும் என்று இருப்பதாலேயே கொத்தடிமை முறை நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவைக் குறிக்கிறது என்கிறோம்.

கொத்தடிமைக்கு ஒப்புகொடுத்தவரின் குடும்பமே கொத்தடிமைப்பட்டது போலத்தான் நடத்தப்படுகிறது. கொத்தடிமை எந்தக் காரணத்தைக் கொண்டும் குறிப்பிட்ட சமயத்தில் நிலப்பிரபுக்களுக்கு உழைக்கமுடியாமற் போனால், ஏன் இறந்து போனாலே கூட குடும்பத்திலிருந்து பதிலிகளை அனுப்ப வேண்டும். தந்தையின் இடத்தில் மகனும், கணவனிடத்தில் மனைவியும் சகோதர சகோதரிகளிடத்தில் பிறரும், குழந்தைகளும் கூட கொத்தடிமைகளாகப் பரம்பரை பரம்பரையாக இருப்பது தொடர்ந்து நீடிக்கிறது. கொத்தடிமைக்கான கூலி, பண வடிவத்திலன்றி பெரும்பாலும் உணவு மற்றும் தானிய வடிவத்திலேயே அளக்கப்படுகிறது. அடித்துத் துன்புறுத்தி வேலை வாங்குவதும், கொடுமையிலிருந்து தப்பியோடினால் குடும்பமே பொறுப்பேற்க வேண்டியுள்ளதும், பிராணி போல வேட்டையாடி, உதைத்து மீண்டும் வயல்வெளியில் கசக்கிப் பிழியப்படுவதும் உண்டு. கிராமப்புறங்களிலும், சந்தை நகரங்களிலும் உள்ள நவீன தொழில்களிலும், சுரங்கங்களிலும், தேயிலை, ரப்பர், காஃபி, ஏலத்தோட்டங்களிலும் கூட நிலப்பிரபுத்துவப் பாணிக் கொத்தடிமைத்தனம் நீடிக்கிறது. கொத்தடிமை முறையின்கீழ், ஜாதிய முறையில் இருப்பது போலவே கற்பழிப்பு, தனி விசாரணை, தண்டம் விதிப்பது, அடித்துத் துன்புறுத்துவது ஆகிய முறைகள் நீடிக்கவே செய்கின்றன.

கிராமப்புறத்தில் நிலப்பிரபுத்துவ அடக்குமுறை, வேலையில்லாத் திண்டாட்டம், கடன்பட்டிருப்பது போன்றவைகள் கொத்தடிமைகளைத் தொடர்ந்து தோற்றுவிக்கின்றன. கொத்தடிமை ஒழிப்புச் சட்டப்படி விடுவிக்கப்பட்டதாகக்கூறப்பட்ட இடங்களிலும் மேற்கண்ட காரணங்களினால் நீடிக்கவே செய்கின்றன. ஆளும் வர்க்க அரசுகளின் சட்ட மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் மூலம் அவை ஒழிக்கப்படவில்லை. சான்றாக மராட்டியத்தில் கொத்தடிமைச் சட்டத்தை நிறைவேற்றிய சில நாட்களிலேயே கொத்தடிமைகளே அம்மாநிலத்தில் கிடையாது என்று சட்டப்

பேரவையில் அறிவிக்கப் பட்டது. ஆனால் 'காந்தி அமைதி நிறுவனம்' மற்றும் தேசியத் தொழிலாளர் நிறுவனம் தமது ஆய்வின் முடிவில் இரண்டு லட்சம் பேர் கொத்தடிமைகளாக மராட்டியத்தில் இருப்பதாக தெரிவித்தன. பின்னர் அம்மாநில அரசு அமைத்த கமிட்டியும் அதை உறுதி செய்தது. மற்றொரு சான்று, ஜாதிய ஒழிப்பு மற்றும் பகுத்தறிவு இயக்கம் பரவிய தமிழ் நாட்டிலேயே அதிலும் குறிப்பாக இந்த வகையில் மிகவும் முன்னேறிய வடாற்காடு, தென்னாற்காடு மாவட்டங்களில் தான் மிகக்கொடிய, பயங்கரமான முறையில் 40,000 கொத்தடிமைகள் இருப்பதாக அதிகாரபூர்வ, பூர்வாங்க அறிக்கைகள் கூறுகின்றன. உண்மையில் அதையும் விடக் கொடிய கொத்தடிமை முறை கோவை, பெரியார், சேலம், திருச்சி மாவட்டங்களிலே நீடிக்கின்றன. ஆந்திரா, கர்னாடகா, மராட்டியம், ம.பி, ஒரிசா, கிழக்கு உ.பி, பீகாரிலும் கொத்தடிமை முறை, பழங்குடியினரை அடக்கி ஒடுக்கிச் சுரண்டும் முறை நாடு முழுவதும் ஜாதிய அடக்குமுறை மற்றும் சுரண்டும் முறை ஆகியவைகள் நீடிப்பதை யாரும் மறுக்கமுடியாது. தீண்டாமை ஒழிப்பு, கொத்தடிமை ஒழிப்பு, நிலவினியோகம், ஜாதிய முன்னுரிமை போன்ற சீர்திருத்தங்கள் எவையும் பிரபுத்துவ உறவுகளை ஒழித்து விடவில்லை. நிலபிரபுத்துவ உறவுகள் ஒழிக்கப்படாமலேயே, இச்சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டது கிராமப்புறங்களில் ஜாதியமற்றும் வர்க்க முரண்பாடுகளைக் கூர்மைப்படுத்தியிருப்பதுடன் ஜாதிய வடிவிலான வர்க்கப்போராட்டங்களை உக்கிரமடையச் செய்துள்ளன.

அன்மைக் காலமாக தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடியினர் மற்றும் நிலமற்ற, ஏழைவிவசாயிகள் மீதான மிருகத்தனமானத் தாக்குதல் இந்திய கிராமங்களில் அதிகரித்து வருகின்றன. ஏற்கனவே அடக்கி ஒடுக்கி வந்த நிலபிரபுக்கள் மற்றும் உள்ளூர்க் கொடுங்கோலர்களுடன் தற்போது வளர்ந்து வரும் பிரஷ்யன்—ஜங்கர் முறையிலான நிலப்பிரபுக்களும், 'குலாக்குகள்' எனப்படும் பணக்கார விவசாயிகளும் மேலும் கூடுதலாகத் தாக்குதல் தொடுக்கின்றனர். நிலமற்ற, ஏழை விவசாயிகளுக்கு எதிராக, குறிப்பாக கீழ்சாதி மக்களுக்கு எதிராக நிலப்பிரபுத்துவ சக்திகளால் ஏவிவிடப்படும் வன்முறை ஓர் இயக்கமாக நடத்தப்படும் போக்கு கடந்த சில ஆண்டுகளில் தலைதூக்கியுள்ளது. கிராமப்புறங்களில் ஜாதிப் பிரிவினைகள் அப்படியே தொடர்வதால் உயர்ஜாதி ஏழை விவசாயிகளை இந்த ஜாதிப் பிரிவினைகளைக் காட்டித் தம்பக்கம் ஈர்க்க நிலப்பிரபுத்துவ சக்திகள் அமைப்பு ரீதியாக செயல்பட்டு வருகின்றன. இவையனைத்தும் பழைய நிலபிரபுத்துவ உறவுகளை உடைத்தெறிந்து, முதலாளித்துவ உற்பத்தி முறையை வளர்க்க உதவுவதற்கு எதிராகவே செயல்படுகின்றன.

ஆளும் வர்க்கங்களின் அரசு மேற்கொண்ட நிலச்சீர்திருத்த நடவடிக்கைகளையும், நிலப்பிரபுத்துவ உறவுகளை ஒழிக்கும் நடவடிக்கைகளையும், மேலெழுந்த வாரியாகவும், சட்டவாதக்

கண்ணோட்டத்துடனும் அணுகாது, இவ்வாறு யதார்த்தமாக ஆய்ந்தறியும்போது, அவை தங்குதடையற்ற முதலாளித்துவ வளர்ச்சிக்கான வழிகளைத் திறந்துவிடவில்லை; மாறாக நிலப்பிரபுத்துவ சொத்துடைமையையும், உறவுகளையும் நடைமுறையில் பேணிப் பாதுகாத்து தொடர்வதற்கே ஏற்பாடுகள் செய்தன என்பதை அறியமுடியும். அவை நிலவுடமை உறவுகளில் பல்வேறு வழிகளிலும் அரை நிலப்பிரபுத்துவம் தொடர்வதற்கான அடிப்படைகளைத் தோற்றுவித்தன. பழைய ஜமீன்தார்களும், மன்னர்களும் மற்றும் நிலப்பிரபுக்களும், பணக்கார விவசாயிகளும் சொந்த சாகுபடிக்கென்று ஏராளமான ஏக்கரா நிலங்களைக் குவித்துள்ளனர். குத்தகைகாரர் பந்தோபஸ்து சீர்திருத்தங்களும் நில உச்சவரம்பு சட்டங்களும் அதற்கான நடைமுறையில் ஒன்றும் செய்துவிடவில்லை. அவர்களது அரசியல் அதிகாரம், ஸ்தல அதிகாரம், செல்வாக்கு, உரிமைகள், சலுகைகள், அந்தஸ்து, கௌரவம், பதவி, பட்டம் ஆகியவற்றைக் கொண்டும் பிற வழிகளிலும் நிலப்பற்றுதலை மேலும் உறுதியாக்கிக் கொண்டுள்ளனர். சொந்த நிலம் சாகுபடிக்குப் பெற்றுள்ள நடுத்தர விவசாயிகளுடன் நிலையற்ற குத்தகைதாரர்களும், அரசு புறம்போக்கு நிலங்களை கொண்டும், ஆற்றுப் படுகை, ஏரிப்படுகை, தரிசுப் புறம்போக்கு, காடுகளை அழித்து புறம்போக்கு - சிறு துண்டு நிலங்களைக் கொண்டும் சாகுபடி செய்யும் ஏழை விவசாயிகளையும், ஏராளமான நிலமற்ற கூலித் தொழிலாளர்களையும் கொண்ட விவசாயக் கட்டுமானம் நீடிக்கிறது. இவ்வாறு அரை நிலப்பிரபுத்துவ நிலவுடமையும், உறவுகளும் நீடிக்கும் அதே வேளையில், விவசாயத்தை அபிவிருத்தி செய்வதாகக் கூறிக் கொண்டு தரகு—அதிகார வர்க்க முதலாளித்துவ மற்றும் நிலப்பிரபுத்துவ அரசு விவசாயத்தில் முதலாளித்துவ நவீன கருவிகளைப் புகுத்தி பிரஷ்யன்-ஜங்கர் நிலப்பிரபுத்துவ பொருளாதாரத்தை வளர்க்கிறது. குறிப்பாக பல்வேறு வகைகளிலான சமூக வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் 'பசுமைப்புரட்சி' போன்றவை பணக்கார விவசாயிகள் மத்தியிலிருந்து குலாக்குகளையும் நிலப்பிரபுக்கள் மத்தியிலிருந்து பிரஷ்யன்—ஜுங்கர் முதலாளித்துவ நிலப்பிரபுக்களை கடும் இடர்பாடுகளுக்கு இடையே (ஒரு பிரிவு நடுத்தர விவசாயிகளையும்) முதலாளித்துவ முறைகளை மேற்கொள்ளும்படி உருவாக்கி வளர்க்கின்றன. ஏராளமான விவசாயிகளை ஓட்டாண்டிகளாக்கி கூலி விவசாயிகளாக்குகின்றன. பழைய நிலப்பிரபுத்துவ சொத்துடமை, உற்பத்தி உறவுகளோடு புதிதாகத் தோன்றி பரிணாம வளர்ச்சியுறும் இந்த போக்குகளையும் சேர்த்தே 'அரை நிலப்புரபுத்துவம்' என்கிறோம். எல்லா வண்ணத்திரிபுவாதிகளும் முதலாளிய அரசியல் மற்றும் சமூகவியலாளர்களும் கூறுவது போல் இவை முதலாளித்துவ உற்பத்தி முறை விவசாயத்தில் நிலைநாட்டப்பட்டு மேலோங்கியிருப்பதோ ஆளும் வர்க்க அரசியல்வாதிகள் பீற்றிக் கொள்வதைப் போல 'ஜனநாயக சோசலிசமோ' அல்ல. ஏகாதிபத்தியங்களின் சமூக அடிப்படைகளான தரகு அதிகாரவர்க்க முதலாளிகள் மற்றும் நிலப்பிரபுக்கள் அரை நிலப்பிரபுத்துவ அமைப்பைக் கெட்டிப்படுத்திப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளே இவை.

**பல்வேறு வகை சமூக வளர்ச்சித் திட்டங்கள் பற்றி :**

1950-ஆம் ஆண்டுகளில் சமூகவளர்ச்சித் திட்டங்களைப் புகுத்தியபோது ஆளும் வர்க்கங்களின் ஏக அரசியல் தலைவராக இருந்த நேரு அவற்றைப் புரட்சிகரமானவை என்றும் ''ஐந்தாண்டுத் திட்டங்களை வெற்றிகரமாக அமுல்படுவதற்கான உந்துசக்தியை உற்பத்தி செய்துதருகிற எந்திரம்'' என்றும் வர்ணித்தார். பள்ளிகள், சாலைகள், சிற்றளவு நீர்ப்பாசனம் மற்றும் கடன் வழங்கும் கூட்டுறவு நிறுவனங்கள் போன்றவை அடங்கிய இத்திட்டங்கள், ''பரந்துபட்ட மக்களை அரிதாகவே சென்றடைகின்றன; நிலவுடமை வர்க்கங்களுக்கும், லேவாதேவிக்காரர்களுக்கும் இதுநன்மையை உண்டாக்கியது'' என்று முதலாளியப் பொருளாதார, சமுதாய நிபுணர் குன்னர்மிர்தால் கூறினர். நிலத்தை முழுமையாகப் பயன்படுத்துவது, உற்பத்தியைப் பெருக்குவது, அதற்காக விவசாயிகளுக்கு வேண்டிய மூலாதாரங்களை அபிவிருத்தி செய்வது என்ற பெயரில் துவங்கப்பட்ட இத்திட்டங்கள், குறிப்பாக கூட்டுறவு சொசைட்டிகள் நிலப்பிரபுத்துவப் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதாகவே அமைந்தன.

இரண்டு வகை கூட்டுறவு சொசைட்டிகள் நிறுவப்பட்டன. ஒன்று, விதைகள், உரங்கள், நவீனக் கருவிகள், பூச்சி மருந்து போன்ற விவசாயத்திற்குத் தேவைப்படும் உள்ளீடுகளை விவசாயிகளுக்கு சப்ளை செய்வதும், விவசாய உற்பத்திப் பொருட்களை விற்கவும் என்று விற்பனை மற்றும் கொள்முதல் கூட்டுறவு சொசைட்டிகள். மற்றொன்று, கூட்டுறவு முறையில் விவசாயம் செய்வதற்கான கூட்டுறவு இணை விவசாய சொசைட்டிகள் (Co-operative joint Farming Societies), இரண்டாவது வகை சொசைட்டிகளில் சேர விரும்புவோர் நிலத்தையும் ஆடு மாடுகளையும் ஒப்படைக்க வேண்டும்; ஆனால் தனியார் நிலவுடமை நீடிக்கும்; தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் கமிட்டி எல்லா நிலங்களையும் ஒரே நில அலகாகக் கருதி நிர்வாகம் செய்யும்; நிலத்தின் அளவைப் பொருத்தும், உழைப்பின் விகிதத்திற்கேற்பவும் உற்பத்தி பங்கீடு செய்யப்படும்; உண்மையில் பெயரளவிற்கே நிறுவப்பட்ட இந்த இரண்டாவது வகை சொசைட்டிகள் ஒரு சிலவே ஆங்காங்கே இருக்கின்றன. இதன் கீழ் நிலங்கள் குவிக்கப்பட்டாலும் அவை கூட்டுச் சொத்தாகக் கருதப்படவில்லை. நிலச்சொந்தக்காரர்கள் நிலத்திற்கான ஈவை உற்பத்தியிலிருந்து பெறுவர்; இது நிலத்தை வாரக்குத்தகைக்கு விட்டு உற்பத்தியில் ஒரு பங்குபெறும் சாதாரண நிலப்பிரபுத்துவ முறைதான். இது எந்த வகையிலும் பீற்றிக் கொண்டதைப் போல கூலித் தொழிலாளர்களுக்கோ, சிறு நடுத்தர விவசாயிகளுக்கோ சாதகமாகவே அமையவில்லை. மாறாக விவசாயிகளை மோசடி செய்து ஸ்தலத்தில் இல்லாத நிலவுடமையாளர்கள் சுரண்டும் முறையாகவும், அவர்கள் தனியார்களுக்கு வாரம் மற்றும் பிற குத்தகைக்கு விடுவதைவிட இந்த சொசைட்டிகள் மூலம், பெரிய அளவில் நவீனக் கருவிகளைக் கொண்டு

அதிகப் பயன்களைப் பெறவும், அரசு நிறுவனங்களிலிருந்து மானியங்கள், சலுகைகள், முன்னுரிமைகள் பெறவும், நிலச்சீர்திருத்த நடவடிக்கைகளிலிருந்து விலக்குப் பெறவும் உதவுகிறது. அதே சமயம் வாரக் குத்தகைதாரர்களை விவசாயக் கூலிகளாகவும் மாற்றுகின்றது. 'ஜனநாயக சோசலிசம்' என்ற பெயரால் கடைந்தெடுத்த மோசடிக்காரன் நேரு ஆடிய கபட நாடகமான இந்த வகை கூட்டுறவு சொசைட்டிகள் மிகச்சிறிய எண்ணிக்கையிலே தான் நிறுவப்பட்டன. பின்னர் அவற்றிலும் பல கலைக்கப்பட்டன.

விற்பனை மற்றும் கொள்முதலுக்காக அமைக்கப்படும் விவசாயச் சேவைக்கான கூட்டுறவு சொசைட்டிகள் உண்மையில் சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள் மீது முதலாளித்துவ உள்ளீடு பொருட்களைத் திணித்து அவர்களை ஒட்டாண்டிகளாக்குபவைகளாகவே இருக்கின்றன. விவசாய உள்ளீட்டு மூலதனத்திற்காக லேவாதேவிக்காரர்களையும், தனியார் கமிஷன் மண்டிக்காரர்களையுமே சார்நது நிற்கும் அவர்களுக்கு கூட்டுறவு சொசைட்டிகள் உண்மையில் உதவுவதாக இல்லை. விவசாயத்துக்கான விதைகள், உரங்கள், விவசாயக்கருவிகள், பூச்சி மருந்துகள் போன்ற உள்ளீடுகளைப் பெறுவது கடன் வசதிகளைப் பெறுவது ஆகியவற்றில் நிலப்பிரபுக்களுக்கும்,பணக்கார விவசாயிகளுக்கும் அவர்களது சமூக, பொருளாதார, அரசியல் அந்தஸ்து காரணமாக முன்னுரிமையளிக்கப்படுகிறது, மேலும் விவசாய உபரி உற்பத்தியை விற்கவும்அவற்றின் பேரில் கடன் பெறவும் இவைகளை அவர்கள் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

எல்லா கூட்டுறவு சொசைட்டிகளும் தேர்ந்தெடுக்கப்பட்ட கமிட்டிகளாலேயே நிர்வகிக்கப்படுவதாக இருப்பினும் உண்மையில் அவை அதிகார வர்க்கத்தின் கோரப்பிடியில்சிக்கி அவர்களும், நிலப்பிரபுக்களும், பணக்கார விவசாயிகளும் ஆதிக்கம் செலுத்துவதாகவும் பகற்கொள்ளையடிப்பதாகவுமே இருக்கின்றன. உண்மையில் தரகு அதிகார வர்க்க முதலாளிகள் மற்றும் ஏகாதிபத்தியங்கள் கிராமப்புறவிவசாய மக்களைக்கொள்ளையிடுவதற்கான-கூடுதலான விலையில் தங்களது உற்பத்திப் பொருளை பலவந்தமாகத் திணிப்பதற்கும் மலிவு விலையில் கச்சாப் பொருட்களை கொள்ளையிடுவதற்குமான-நிறுவனங்களாகவே அவை விளங்குகின்றன. இத்துடன் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் பால் பண்ணைகள் போன்றவைகள் அதிகார வர்க்கம் ஆதிக்கம் பெறவும் சுரண்டவும் அவர்களோடு சேர்ந்து கூட்டுக் கொள்ளையிடும் நிலப்பிரபுக்கள், பணக்கார விவசாயிகள் அரசியல் ஆதாயம் பெறுவதற்கான அமைப்புகளாகவே இருக்கின்றன.

ஏற்கனவே இருந்த சிறு விவசாயிகளும் நிலச்சீர்திருத்தத்தால் புதிதாகநிலம் பெற்ற விவசாயிகளும் நிலப்பிரபுக்களின் ஆதிக்கத்தில்விழாமல் தடுக்கவும் வீழ்ந்துவிட்டவர்களை மீட்கவும் சிதறிய நிலவுடமைகளில் நவீன முறைகளைப் புகுத்தி உற்பத்தியைப் பெருக்குவதில் உள்ள தடைகளை அகற்றவும், சிறு நடுத்தர விவசாயிகளுக்கு மலிவான விவசாய உள்ளீட்டுப் பொருட்கள் மற்றும்

விளைபொருட்கள் மற்றும் விளை பொருட்களுக்கு நியாய விலை ஆகியவை கிடைக்கவும் இத்திட்டங்களைக் கொண்டு வருவதாக ஆளும் வர்க்க அரசு பீற்றிக் கொண்டது. ஆனால் விளைவுகளை மதிப்பீடுசெய்த வேளாண்மை மீதான தேசியக்கமிஷன் கூட்டுறவு சொசைட்டிகள் பற்றி பின்வருமாறு கூறுகிறது: ‘ஒட்டு மொத்த மாகக் கூட்டுறவு அல்லது கூட்டு விவசாயத்தின் அடிப்படையில் செய்யப்படும். இரண்டாவது மாற்று வளர்ச்சிப் பாதையானது இந்தியாவில்நிலவுகின்ற சமூக, பொருளாதார,அரசியல் நிலைமை களால் பாரதுரமான வரம்புகளுக்கு உட்படுத்தப்படுகின்றது சமூக மற்றும் அரசியல் புரட்சியிலிருந்தே இத்தகைய கட்டமைவு எழமுடியும். இத்தகைய புரட்சியானது முழு தேசியப் பொருளா தாரத்தையும் உற்பத்தி மூலாதாரங்களையும் சோசலிச உடமை உரிமையை நோக்கி மாற்றத்தைக் கொண்டு வரும்; இதைத் தொடர்ந்து சோசலிசத்தை அடிப்படையாகக் கொண்ட சமூக மயமான உடமையும்உற்பத்தி உறவுகளும் அமைக்கப்படுவதுடன் அதிகாரக் கட்டமைவும் நிறுவப்படும் ....... இத்தகைய வளர்ச்சி கட்டத்திலிருந்து வெகு தொலைவில் இப்போதைய சமூக பொரு ளாதார மற்றும் அரசியல் சூழ்நிலைகள் உள்ளன. இத்தகைய முயற்சி எதுவும் சிறப்பானதொரு வேளாண்மை அமைப்பைப் படைக்காதுஎன்பது மட்டுமின்றி இப்போதுநிலவுகின்றவேளாண் மையின் வளர்ச்சிப் போக்கையும் சீர் குலைத்து விடும்’.

அரசியல் புரட்சியின் மூலமாக இல்லாமல் நிலவுடமை உறவு களைமாற்றாமல் சீர்திருத்த வழிகளில் கொண்டு வரப்படும்இந்த மாதிரியான கூட்டுறவு நிறுவனங்கள் அவைகளால் விவசாயிகள் அடையும் நன்மை பற்றி ‘நாட்டுப்புற ஏழை மக்களுக்கு’ என்ற நூலில் லெனின் பின்வருமாறு கூறுகிறார்:

“எல்லா சொத்துடமையாளர்களுக்கும் பூர்ஷ்வாக்கள் யாவரும் நடுத்தர விவசாயிகளிடம் அவரது பண்ணையை அபி விருத்தி செய்ய பலவகையான நடவடிக்கைகளை (மலிவான கடன்கள், விவசாய எந்திரங்கள், புல் வெளி விடுதல், குறைவான விலையில் கால்நடைகளையும் செயற்கை உரங்களையும் கொடுப் பது முதலியன) எடுப்பதாக உறுதி கூறுவதின் மூலமும், பண்ணை முறையை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் பல்வகைப் பண் ணையார்கள் கூட்டு சேர்ந்துள்ள பல்வேறு வகை ஸ்தாபனங் களில் (புத்தகங்களில் இவை கூட்டுறவுகள் என்று குறிக்கப்பட்டு கின்றன) விவசாயிகளை உறுப்பினர்களாக்குவதின் மூலமும் நடுத் தர விவசாயிகளை தங்கள் பக்கம் இழுத்து கொள்ள முயல்கிறார் கள், இவ்வாறாக நடுத்தர விவசாயிகளையும் அரைப்பாட்டாளி களையும், தொழிலாளர்களுடன் ஐக்கியப் படவிடாமல் தொழி லாளி வர்க்கத்திற்கு, பாட்டாளிகளுக்கு எதிராக தாங்கள் நடத்தும் போராட்டத்தில், பணக்காரர்களுடன், பூர்ஷ்வாக்களு டன் சேர்ந்து இருக்கும்படி கவர்ந்து இழுக்க முயற்சிக்கின் றனர். (பக். 53)

“........பண்ணைத் தொழிலில் செய்யப்படும் அபிவிருத்தி களும் குறைந்த விலையில் கடன்கள் கிடைப்பதும் அவர்களது

வறுமையைத் துடைக்க உதவும் என்றும் தங்களின் சொந்த பலத்தில் எழுந்து நிற்க அவர்களுக்கும் உதவுமென்றும் இவற்றையெல்லாம் பணக்காரர்கள் மீது கைவைக்காமலேயே சாதிக்க முடியும் என்றும் ஏழை விவசாயிகளிடமும் நடுத்தர விவசாயிகளிடமும் கூறுவது பித்தலாட்டமாகும். இந்த எல்லா அபிவிருத்திகளும் குறைந்தவிலைகளும் கூட்டுறவுகளும் (சாமான்களை வாங்கி விற்பனை செய்யும் ஸ்தாபனங்கள்) மற்றவர்களை விட பணக்காரர்களுக்குத் தான் மிக அதிகமாக பயன்படுகின்றன. பணக்காரர்கள் மேலும் பலமடைகின்றனர் அவர்கள் ஏழைகளையும் நடுத்தர விவசாயிகளையும் முன்னைவிட அதிகமாக ஒடுக்குகின்றார்கள்......'' (பக். 53).

இது எவ்வாறு ஏன் என்பதை ஜெர்மனியில் இருந்தபால் மற்றும் பால் பண்ணைப் பொருள்களை விற்கும் சங்கங்கள் ரஷ்யாவில் இருந்த பாலாடை செய்யும் பண்ணைகள் பல்வேறு பால்பண்டங்கள் தயாரிக்கும் பால் பண்ணைகள் ஆகியவற்றின் கூட்டுறவு ஸ்தாபனங்கள் ஆகியவைகளின் உதாரணங்களை எடுத்துக்கொண்டு விளக்கியிருக்கிறார் மேலும் லெனின் சொல்கிறார்: 'முதலாவதாகவும் முக்கியமாகவும் இவர்களுக்குத்தான (பணக்காரர்களுக்கு-நாம் குறிப்பிட்டது) கூட்டுறவு ஸ்தாபனங்கள் உதவுகின்றன. குறைவான விலையில் வாங்கி ஆதாயத்திற்கு விற்கும் இத்தகைய சங்கங்களால் நடுத்தர விவசாயியைக் காப்பாற்ற முடியும் என்று தம்பட்டம் அடிப்பவர்களால் இப்படி விவசாயி ஏமாற்றப்படுகிறான். தங்களுடன் சேருமாறு ஏழை, நடுத்தர விவசாயிக்கு அழைப்பு விடும் சமூக ஜனநாயகவாதிகளிடமிருந்து விவசாயிகளைப் பிரித்து மிகக்குறைந்த விலையில் அவனை விலைக்குவாங்க பூர்ஷ்வாக்கள் விரும்புகிறார்கள்'' (பக். 56).

மேலும் ''பூர்ஷ்வாக்களை எதிர்த்துப் போராடாமலேயே வறுமையை ஒழித்துக் கட்டமுடியும் என்று அவர்கள் நம்பவேண்டும், கிராம, நகர்ப்புறத் தொழிலாளர்களுடன் ஐக்கியப்படுவதில் நம்பிக்கை கொள்வதற்குப்பதில், தங்கள் விடா முயற்சியிலும், தங்கள் சிக்கனத்திலும், தாங்கள் பணக்காரனாகும் வாய்ப்பிலும் நம்பிக்கைவைக்கவேண்டும்—பூர்ஷ்வாக்களின் விருப்பம் இதைத் தவிர வேறில்லை''. பரந்துபட்ட மக்களை நம்ப வைக்க ஆளும் வர்க்கங்கள் செய்யும் பித்தலாட்டங்களையே முதலாளிய அரசியல் மற்றும் சமூகவியலாளர்கள் மட்டுமல்ல, எல்லா வண்ணத் திரிபுவாதிகளும் நம்பச்சொல்லுகின்றனர். எனவேதான் இவர்களைப்பற்றி லெனின், ''எதையும் எளிதில் நம்புகின்ற பல மக்கள் ஆட்டுத்தோல் போர்த்திய ஓநாயைக் கண்டறிய தவறிவிடுகிறார்கள்; இவர்கள் ஏழை, நடுத்தர விவசாயிகளுக்குத் தாம் உதவி செய்வதாக நம்பிக் கொண்டே பூர்ஷ்வாக்களின் ஏமாற்றுச் சொற்களைத் தாங்களும் ஒப்பிக்கிறார்கள்'' என்றார் (பக், 57)

இந்திய ஆளும் வர்க்கங்களின் அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு சமூக வளர்ச்சித் திட்டங்களும் இவ்வாறு ஒரு சில நிலப்

பிரபுக்களும் பணக்கார விவசாயிகளும் பிரஷ்யன்—ஜங்கர் முறையில் வளர்வதற்கு உதவியதைப் போலவே, அது பெருமை யாகக் கூச்சல் போடும் 'பசுமைப் புரட்சியும்' அவர்களுக்கே அதே முறையில் சேவை செய்வதாக அமைந்தது. ஆனால் நிலவுடமை உறவுகளில் புரட்சிகரமான மாறுதலின்றி வெறும் சீர்திருத்த முறைகளே மேற்கொண்டதால், பழைய நிலவுடமை உறவுகள், மற்றும் பிற நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவுகள் நீடிக்கும்போதே கொண்டு வரப்பட்ட விவசாயத்தை நவீனமயப் படுத்தும் இத்திட்டங்களும் ஆளும் வர்க்கங்கள் எதிர்பார்த்த பலன்களைக்கூட எட்டாது தோல்வி கண்டன என்றே கூறவேண் டும். பல்வேறு சீர்திருத்தங்களுடன் இத்திட்டங்களும் நெருக்கடி களை முற்றவே செய்தன; மாறாக அவர்கள் மனப்பால் குடித்தது போன்று நெருக்கடிகளிலிருந்து மீளவோ, குறைந்த பட்சம் தள்ளிப் போடவோகூட இயலவில்லை.

### பசுமைப் புரட்சியும் விளைவுகளும்:

விவசாயத்தை வளர்ப்பதாக ஆளும் வர்க்கங்கள் மேற் கொண்ட பாதை 1949-50லிருந்து 1964-65வரை முதற்கட்டம் என்றும் 1965-66லிருந்து இதுவரை இரண்டாவது கட்டம் என்றும் இருகட்டங்களில் அடங்கும். முதல் கட்டத்தில் விவசா யத்துறை உற்பத்திக்குத் தேவையான சேவைத்துறைகளையும், அடிப்படைக் கட்டுமான ஏற்பாடுகளையும்— நீர்ப்பாசன வசதிகளை பெருக்கியது, தேசிய விரிவாக்க சேவை மூலம் கிராம அளவில் விவசாய உற்பத்தியை அபிவிருத்தி செய்ய நிபுணர் களையும் உதவியாளர்களையும் ஏற்பாடு செய்தது போன்றவை-செய்வதற்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. இரண் டாவது கட்டத்தில், நிலத்தின் உற்பத்தித் திறனையும் அளவை யும் பெருக்க நவீன உள்ளீடுகளைச் செலுத்தி உற்பத்தி முறை களில் முன்னேறிய முறைகளையும்—அமோக விளைச்சல் ரக விதைகளும், பலபோக தீவிர சாபகுடி முறைகளும், விவசாய உள்ளீட்டில் தொழில் நுட்ப முக்கியத்துவமும்—புகுத்துவதற்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது.

1960-ம் ஆண்டுகளின் மத்தியிலிருந்து நவீன முறைகளை அதிகமாகப் புகுத்தி உற்பத்தியை பெருக்கும் முயற்சிக்கு ஏகாதி பத்தியம் தூண்டுகோலாகச் செயல்பட்டது. விவசாயப் பல் கலைக் கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு விவசாய அபிவிருத்தி செய்ய உதவுதல், வல்லுனர்களை அனுப்புதல், டிராக்டர், அறுவடை இயந்திரம் போன்ற நவீன இயந்திரங் களைப் பெரும் எண்ணிக்கையில் தள்ளிவிடுவது, உரம், பூச்சி மருந்துகள், பொருக்கு விதைகள், உயர்ரக விதைகள் அளிப்பது போன்றவைகள் மூலம் அமெரிக்க ஏகாதிபத்தியம் ஏராளமான அளவில் ''உதவி''யளித்தது. விவசாயத்துறையில் மேற்கத்திய ஏகாதிபத்தியங்களைச் சார்ந்திருப்பதிலிருந்து தம்பக்கம் இழுப்ப தற்காக பெரிய அளவு அரசாங்கப் பண்ணைகள், கூட்டுறவு

களின் வளர்ச்சி என்ற பெயரில் சமூக ஏகாதிபத்தியமும் ஊடுருவியது.

அடிப்படையில் மூன்று முக்கிய காரணங்களுக்காகவே ஏகாதிபத்தியங்கள் மூன்றாம் உலக நாடுகளில் 'பசுமைப் புரட்சியை' முன்தள்ள முனைகின்றனர். முதலாவதாக சிகப்புப் புரட்சியை எதிர்க்க வேண்டியுள்ளது. கட்டிதட்டிப்போன நிலப்பிரபுத்துவத்திற்கு எதிராக மூன்றாம் உலக நாடுகளில் பரந்துபட்ட மக்கள், குறிப்பாக விவசாயிகள் தொடர்ந்து எழுச்சியுறுவது கண்டு, ஏகாதிபத்தியங்கள் தமது பிரதான சமூக அடித்தளமான நிலப்பிரபுத்துவ வர்க்கத்தை இழக்கும் அபாயமிருப்பதை உணர்ந்திருக்கின்றன. மூன்றாம் உலக நாடுகளில், குறிப்பாக ஆசிய நாடுகளில் நிலச்சீர்திருத்தங்களை முன்தள்ளி அந்த அபாயத்திலிருந்து காத்துக் கொள்ள வேண்டியதின் அவசியத்தை சமூக ஏகாதிபத்தியவாதிகள் — முதலாளியைவிட அவர்களது அடிவருடிகளான திரிபுவாதிகள் நன்கு உணர்வது போல — எல்லோருக்கும் முதலில் அறிந்து எச்சரிக்கை அடைகின்றனர். 50-ம், 60-ம் ஆண்டுகளிலேயே அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் அவர்களது தூதர்களாலேயே எச்சரிக்கப்பட்டார்கள். கால்பிரைத்தும், செஸ்டர் பௌல்சும் ஏகாதிபத்தியங்களையும், மூன்றாம் உலக நாடுகளின் ஆளும் வர்க்கங்களையும் உணரும்படி எடுத்துரைத்தனர். எனவே ஏகாதிபத்தியங்களும் மூன்றாம் உலகநாடுகளின் ஆளும் வர்க்கங்களும் நிலச்சீர்திருத்தங்கள் மற்றும் பசுமைப்புரட்சியின் மூலம் சிகப்புப் புரட்சியை எதிர்க்கும் யுத்ததந்திரம் வகுக்க வேண்டியிருந்தது.

இரண்டாவதாக ஏகாதிபத்தியங்கள் தங்களது உற்பத்திப் பொருட்களுக்கான சந்தையைவிரிவாக்கவும், உபரி உற்பத்தியை தள்ளிவிடவும் வேண்டியிருந்தது. 1950ஆம் ஆண்டுகளில் மலிவாக 'பெட்ரோலியம்' எண்ணெய் கிடைத்தது. புதிய முறையின் கண்டுபிடிப்பால் உர உற்பத்தி ஆலையின் கட்டுமானச் செலவு பாதியாகக் குறைந்தது; உர உற்பத்தி உபரியாகத் தேங்கிக் கிடந்தது. ஏகாதிபத்திய நாடுகளது பன்னாட்டு நிறுவனங்களுக்கு சந்தை வேண்டிருந்தது. அத்துடன் நவீன இயந்திரங்கள், பூச்சி மருந்துகள் விற்பனைக்கான சந்தைகளையும் உருவாக்கினர்.

மூன்றாவதாக, ஏகாதிபத்திய நாடுகளுக்குத் தேவையான விவசாயப் பொருட்களை அதிக அளவில் மலிவான விலைகளில் அள்ளிச் செல்லவும் நீண்டநாள் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், திட்டமிட்ட முறையில் தரகு-அதிகாரவர்க்க முதலாளித்துவ தன்மையுடைய முதலாளித்துவ உற்பத்தி முறையை நோக்கிய பரிணாம வளர்ச்சியை நடத்திச் செல்லுகின்றனர். பிரஷ்யன்-ஜங்கர் முறையிலான பொருளாதாரமும், நிலப்பிரபுத்துவ முதலாளிகளும்,குலாக்குகளாகிய பணக்கார விவசாயிகளும்,இதற்கு பொருளாதார மற்றும் சமூக அடிப்படைகளாக விளங்கமுடியும். அமெரிக்காவின் அந்நியப் பொருளாதாரக் கொள்கைகள் பற்றி

அங்கெல்லாம் நிலத்தின் விலை பன்மடங்காக உயர்ந்தது. நிலப் பிரபுக்கள் மற்றும் பணக்கார விவசாயிகள், எல்லாவகை குத்தகைதாரர்களையும் வெளியேற்றிவிட்டுச் சொந்த சாகுபடியில் இறங்கினர்; சுற்றி இருந்த சிறு விவசாயிகளின் நிலங்களும் பலாத்காரம் மற்றும் பிற பொருளாதாரமற்ற முறைகள் கையாளப்பட்டு பறிக்கப்பட்டன. · குத்தகைதாரர்கள், சிறு விவசாயிகள் நிலமற்ற கூலி விவசாயிகளாகின்றனர்.

''எந்த விதத்தில் பார்த்தாலும் குறைந்தபட்சம் ஆரம்ப கட்டத்தில், புதிய தொழில் நுட்பத்தின் பலன்கள், புதியவாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ள முதலீடு செய்வதற்கான வசதி உள்ளவர்களுக்கே சென்றிருக்கின்றன என்பதைச் சில ஆய்வுகள் முடிந்த முடிவாகக் கூறியுள்ளன. அதே வேளையில் சிறு விவசாயிகளும் குத்தகை விவசாயிகளும் நவீன தொழில் நுட்பத்தை மேற்கொள்ள எவ்வளவுதான் விரும்பினாலும் அவர்களுக்குப் பலன் கிட்டவில்லை. ஏனெனில் புதிய ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ் உள்ளீடு பொருட்களைப் பயன்படுத்துவதற்கான முதலீடுகள் அவர்களிடம் இல்லாமலிருப்பதே......பஞ்சாபில் பெரிய விவசாயிகளுக்கு நிலங்கள் வாங்குவது—நில உச்சவரம்புச் சட்டம் என்ன சொன்னபோதிலும்—எவ்வாறு மிகவும் லாபகரமான முதலீட்டுக்கான ஒன்றாக உள்ளது என்பதை அது காட்டுகிறது. பெருவிவசாயிகளுக்குச் சொந்தமான நிலத்தின் அளவு 1955-56க்கும் 1967-68க்கும் இடைப்பட்ட காலத்தில் 9.5% அதிகரித்தது. 20–25ஏக்கர் அளவுள்ள பண்ணைகள் 4% விரிவாயின. 100-150 ஏக்கர் அளவுள்ள பண்ணைகள் 40% விரிவாயின. எனவே நிலச்சீர்திருத்த நடவடிக்கைகள் மேலும் கூடுதலான தீவிரத்துடனும், உணர்வுடனும் நடைமுறைப்படுத்தப்பட்டாலொழிய இப்போக்கு சமூகக் கொந்தளிப்புகளை எவ்வாறு மேலும் மோசமாக்கும் என்பதை இவை காட்டுகின்றன ''

'பசுமைப் புரட்சியின்' விளைவுகளைக் கண்டு ஆளும் வர்க்கங்களின் பொருளாதாரப் பத்திரிக்கைகளில் ஒன்றான 'எகனாமிக் டைம்ஸ்' (Economic Times) மேற்கண்டவாறு கூறுவது ஒருபுறம் பசுமைப் புரட்சியின் விளைவாய் பெரும் நிலப்பிரபுக்களும் பணக்கார விவசாயிகளுமே ஆதாயமடைந்திருப்பதையும், மறுபுறம் இத்தகைய மிக மெதுவான பிரஷ்யன்—ஜங்கர் முறையிலான நிலப்பிரபுத்துவ முதலாளித்துவ வளர்ச்சியைக் கண்டே அவர்கள் அஞ்சுவதையும் காட்டுகிறது. அதே பத்திரிக்கை ஐக்கிய நாடுகள் சபையின் பழைய பொதுச் செயலாளரான 'யூ தாண்ட்' மேற்கோள் காட்டிப் பின்வருமாறு எழுதிற்று:

''பசுமைப் புரட்சி' சிறு விவசாயிகளைக் காட்டிலும் ஏற்கனவேயே வர்த்தக ரீதியிலான உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளுக்கே, அவர்களுக்குள்ளேயே கூட சிறு உற்பத்தியாளர்களைக்

காட்டிலும் பெரிய உற்பத்தியாளர்களுக்கே பலனளிக்கக் கூடிய தாக இருக்கும்...சிறு விவசாயிகள் பெரும் விவசாயிகளால் சந்தை யிலிருந்து ஒழித்துக் கட்டப்படுவதற்கும், குத்தகை விவசாயிகள் வெளியேற்றப்படுவதற்கும் சாத்தியப்பாடு உள்ளது.'' பசுமைப் புரட்சி பற்றிய இந்திய ஆய்வு ஒன்றைக் காட்டி அப்பத்திரிக்கை மேலும் கூறுவதாவது: ''மிகச்சிறு எண்ணிக்கையிலான நபர்களே பஞ்சாபில் 20% க்கும் மேற்படாத குடும்பங்களே பசுமைப் புரட்சி யால் பலனடைந்துள்ளன. அங்கு வரிப்பளு அதிகரித்திருப்பதை யும் ஆய்வுகள் காட்டுகின்றன. நிலத்தின் மதிப்புகள் உயர்வது பற்றியோ, வாடகை உயர்வது பற்றியோ பேசவே வேண்டிய தில்லை; குத்தகை விவசாயிகளின் நிலை மோசமானதாகாவிட் டாலும் முன்னேறவில்லை.''

'பசுமைப் புரட்சி'யின் கீழ் செய்யப்படும் உற்பத்தி பயன் படும் மதிப்புடையவையாக இல்லாது, உடனடி விற்பனைக்கு—லாபத்துக்கு—பொருட்களை உற்பத்தி செய்யும் வணிகத் தன்மை யுடையது; அதே சமயத்தில் புதிய அமோக விளைச்சல் கலப்பின ரக விதைகள், கூடுதலான உரங்கள், பூச்சி மருந்துகள், நீர்ப்பாசன வசதிகள் போன்ற அதி உயர்ந்த அடக்கவிலை கொண்ட உள்ளீடு களைக் கோருகின்றன. முதலீட்டிற்கான மூலதனமில்லாதவர் கள், லேவாதேவிக்காரர்களிடமும், அரசாங்கத்திடமும் கடன் பட்டு திருப்பி செலுத்த இயலாது 'திவாலாகி பசுமைப் புரட்சி முறைகளையே கைவிடுவதோடு பெருமளவு ஓட்டாண்டிகளாகி நிலத்தை விற்க வேண்டியுள்ளது. வாரக்குத்தகைதாரர்களை பசுமைப் புரட்சி இரு வழிகளில் பாதித்தது; முதலாவதாக, நிலத்தில் உற்பத்தியின் அளவு அதிகரித்து விட்டதால் நிலப்பிரபுக் களுக்கு அதிக அளவு குத்தகை செலுத்த வேண்டியிருக்கிறது. ஆனால் நிலப்பிரபுத்துவ சக்திகளைப் போல் புதிய முறைகளை யும் வசதிகளையும் பயன்படுத்தி, அந்த அளவிற்கு உற்பத்தியை பெருக்க முடிவதில்லை; அதே சமயம் பேரம் பேசும் அவர்களின் சக்தி குறைவாக இருப்பதால் நிலப்பிரபுக்கள் கேட்கின்ற, அதிகக் குத்தகையைத் தரவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக வேண்டி யுள்ளது. இரண்டாவதாக, ஸ்தலத்தில் இல்லாத நிலப்பிரபுக் கள் பழைய குறைந்த அளவு குத்தகையைப் பெறுவதைவிட, தற்போது கிடைத்துள்ள வசதிகளைப் பயன்படுத்தவும் லாப மடிக்கவும் நேரடி விவசாயத்தில இறங்குகின்றனர் இவைகளின் காரணமாக வாரக் குத்தகைதாரர்கள் விவசாயத் தொழிலாளர் களாக மாற வேண்டியுள்ளது.

ஆனால் நிலப்பிரபுத்துவ சக்திகள் புதிய முறைகளால் அதிக லாபம் பெற முடிகிறது. உற்பத்தியைப் பெருக்குவது என்ற பெயரில் நிலப்பிரபுக்கள், பணக்கார விவசாயிகளுக்குப் பெரு மளவு நிதி கடனாகக் கொட்டப்பட்டது; நிலக்குவிதலும் அதிக ரித்தது. ஏழை, நிலமற்ற விவசாயிகளுக்குக் கொஞ்ச நஞ்சம் வினியோகிக்கப்பட்ட நிலங்களும், அரசியல் ரீதியில் செல்வாக்குப் பெற்றவர்களாலும், பொருளாதார ரீதியில் மேல்நிலை பெற்ற

வர்களாலும் மேலும் மேலும் சட்ட விரோதமாகவும், கள்ளத்தனமாகவும் குவிக்கப்பட்டன குறிப்பாக அதிகார வர்[illegible] அமைச்சர்களும். அரசியல்வாதிகளும் ஆயிர[illegible]க்கும், நிலங்களைக் கைப்பற்றி நவீன மு[illegible]கணக்கில் புதிதாக வதில் ஈடுபட்டுள்[illegible]முறையில் சொந்த சாகுபடி செய் பொரு[illegible] ஏனெனில் அவர்கள் தமது சமூக, [illegible]தார, அரசியல் அந்தஸ்தைப் பயன்படுத்தி 'பசுமைப் புரட்சி'யின் பயன்களை தங்கள் வயல்களுக்குப் பாய்ச்ச முடிகிறது எனவே 'பசுமைப் புரட்சி' அந்நிய மூலதனமும் அதிகார வர்க்க மூலதனமும் கணிசமான அளவு நிலப்பிரபுக்கள் மற்றும் பணக்கார விவசாயிகள் மூலதனமும் கொட்டப்பட்டு நிலப்பிரபுத்துவ உடமை உறவுகளை மாற்றாமலேயே பிரஷ்யன் — ஜங்கர் முறையிலான நிலப்பிரபுத்துவ முதலாளிகளைக் கட்டி வளர்க்கின்றன. இவ்வாறு நிலப்பிரபுத்துவ உடமை உறவுகள் புரட்சிகரமான முறையில் உடைத்தெறியப்படாமல், அதே சமயம் பழைய நிலப்பிரபுக்களும் உள்ளூர் கொடுங் கோலர்களும் புதிய முறைகளினால் ஜங்கர் நிலப்பிரபுத்துவ முதலாளிகளாக மாற்றப்படுவதால் புதிய கொடிய அடக்குமுறைகள் பழைய ஜாதிய, கொத்தடிமை அடக்குமுறைகளோடு சேர்ந்து கிராமப்புறங்களில் ஜாதிய மற்றும் வர்க்க முரண்பாடுகளைக் கூர்மையாக்கித் தன்னெழுச்சியான விவசாயிகளின் போராட்டங்களை கிளர்ந்தெழச் செய்துள்ளது.

சொல்லிக் கொள்ளப்படும் 'ஜனநாயக சோசலிசம்', 'பசுமைப் புரட்சி போன்றவற்றால் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களின் மேற்கண்ட விளைவுகள் நாடு தழுவியதாகவோ, எங்கும் பரவியதாகவோ விவசாயத்தில் மிகுநிலை பெற்றதாகவோ கருதக் கூடாது. முன்னரே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சில மாவட்டங்களில் வரம்புக்குட்பட்டு வளர்க்கப்படுபவையே இவை. சான்றாக 0 4% நிலத்தில்கூட கூட்டுறவு விவசாய முறைகள் அமுல்படுத்தப்படவில்லை; பெரிய அரசாங்கப் பண்ணைகள் என்று நாடு முழுவதற்குமே ஆறு பணணைகள் மட்டும் துவக்கப்பட்டு அவையும் பிரதானமாக விதைப் பண்ணைகளாகவும், அதிகார வர்க்கப் பிடியில் சிக்கி சிரழிந்து திட்டங்களையே கைவிடும் நிலைக்குத் தள்ளப்படுபவைகளாகவும் மாறியிருக்கின்றன தானிய உற்பத்தி செய்யும் மொத்த நிலங்களில் மூன்றில் ஒரு பகுதியில் கூட அமோக விளைச்சல் ரகம் பயிரிடப்படவில்லை; மேலும் மேலும் இம்முறைகளை உற்சாகமிழந்த விவசாயிகள் வெறுத்தொதுக்கி வருகின்றனர். நாட்டில் பரவலாக அங்கொன்றும் இங்கொன்றுமாக இயந்திரங்கள். அமோக விளைச்சல் ரகவிதைகள். உரங்கள் பூச்சி மருந்துகள் கொண்டு நவீன முறையிலான விவசாயம், தோன்றியிருப்பதும் தேர்ந்தெடுக்கப்பட்டு பசுமைப்புரட்சி புகுத்தப்பட்ட இடங்களில் இருந்து சாரலடிப்பதும், ஏகாதிபத்தியங்கள், தங்களது உபரிகளைத் தள்ளிவிடுவதன் விளைவே. மற்ற இடங்களில் மட்டுமல்ல, 'பசுமைப் புரட்சி'யின் மையங்

களிலே கூட நீர் இறைப்பதற்கும், உழுவதற்கும்—இதுவும் மிகக் குறைந்த அளவே—மட்டுமே நவீன இயந்திரங்கள் பயன் படுத்தப் படுகின்றன; விதைப்புக்கோ, நடவுக்கோ, களையெடுப்புக்கோ அறுவடை மற்றும் கதிரடிப்புக்கோ மிகவும் சொற்பமான அளவும் கூட இயந்திரங்கள் பயன்படுத்தப்படுவதில்லை. விவசாய உள்ளீடுகளின் விலையேற்றமும் விவசாயப் பொருட்களின் விலை வீழ்ச்சியும் 'பசுமைப் புரட்சி' மோகத்தை முன்னூறு நாட்கள் கூட நீடிக்கவிடவில்லை. நவீன விவசாய உற்பத்தி முறையில் தங்களை நிலை நாட்டிக் கொண்டு விட்ட நிலப் பிரபுக்கள், பணக்கார விவசாயிகளைத் தவிர பெரும்பாலான விவசாயிகள் ஏற்கெனவே இருந்த உடமைகளையும் இழக்கின்றனர் விவசாய சீர்திருத்தங்களின் ஆரம்ப ஆண்டுகளில் பெற்ற முதல் சுற்றுக் கடனையே இருப்பிச் செலுத்த இயலாது அரசாங்க லேவாதேவிக் காரனிடம் சிக்கிக் கொண்டுள்ளனர். கோடிக் கணக்கில் கடனாகக் கொட்டப்பட்ட விவசாய மூலதனம் விரிவாக்கப்பட்ட மூலதனமாகச் சுழல்வதற்குப் பதில் முடக்கப்பட்ட மூலதனமாகி விட்டது.

இந்திய விவசாயத்தில் ஆளும் வர்க்கங்கள் புகுத்திய பிரஷ்யன்—ஜங்கர் முறையிலான நிலப்பிரபுத்துவ முதலாளித்துவ பரிணாம வளர்ச்சியே அவர்கள் வைத்த வரம்புக்குக் கூட அபி விருத்தி அடையாமல் தோல்வி கண்டிருப்பதையே நாளும் வளர்ந்து வரும் கிராமப்புற ஜாதிய மற்றும் வர்க்கப் போராட்டங்கள் இடித்துரைக்கின்றன பிரஷ்யன்—ஜங்கர் முறையிலான முதலாளித்துவ பரிணாம வளர்ச்சிப் பாதை நாட்டின் ஓரிரு பகுதிகளில் கூட பெரிய அளவிலான முதலாளித்துவப் பண்ணைகளையோ, கணிசமான அளவு ஜங்கர் நிலப்பிரபுக்கள் மற்றும் குலாக்குகளையோ தோற்றுவித்துவிடவில்லை என்பதையே பல ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. இருப்பினும் தொடர்ந்து தரகு—அதிகார வர்க்க முதலாளித்துவத் தன்மையுடைய முதலாளித்துவ உற்பத்தி முறையின் விரிவாக்கப்பட்ட மறு உற்பத்திக்காக விவசாயத்தை ஒருமுனைப்படுத்தி, பிரஷ்யன்-ஜங்கர் முறையிலேயே—தமது நலன்களுக்கு ஊறுவிளைவிக்காது என்று கருதும் சீர்திருத்தப்பாதையிலேயே—முன்னெடுத்துச் செல்ல ஆளும் வர்க்கங்கள் முயல்கின்றன. இவை அனைத்தையும் தொகுத்துத்தான் இந்திய சமுதாயப் பொருளாதாரப் படிவத்தில் தரகு—அதிகார வர்க்க முதலாளித்துவத் தன்மையுடைய முதலாளித்துவ உற்பத்தி முறை மேலாதிக்கம் பெற்றிருப்பதாகவும், ஆனால் நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையே மிகுநிலை பெற்றிருப்பதாகவும் காண்கிறோம். (1) நிலத்தை பயன்படுத்துதல் (2) நிலவுடமைக் கட்டுமானம் (3) உற்பத்தி உள்ளீடு பொருட்கள்—i) நீர்ப்பாசனம் ii) இரசாயன உரங்கள், எருக்கள் iii) உயர்ரக விதைகள் iv) பயிர்ப் பாதுகாப்பு v) வடிகாலும் நில மீட்பும் vi) கால்நடை vii) இயந்திரமயம்—(4) உற்பத்திப் போக்குகள் (5) விவசாய முதலீடுக் கடன்கள், மூலாதாரங்கள் (6) உழவர்கள் சிதைவது (7) சந்தை (8) உபரியைப் பயன்படுத்

நிலப்பிரபுத்துவ அரசாலேயே கொண்டு வரப்பட்டது. ஆனால் இந்தியாவிலோ நிலைமையே வேறு. இங்கு தேசிய முதலாளித்துவ சக்திகள் ஓரளவு வளர்ந்திருந்தாலும், ஆதிக்கம் செலுத்துவதும் அதிகாரத்தில் இருப்பதும் மேலாண்மை பெற்றிருப்பதும் தரகு-அதிகார வர்க்க முதலாளித்துவமாகும். நிலப்பிரபுத்துவம் ஏகாதிபத்தியத்தின் சுரண்டலுக்கு பிரதான சமூக அடிப்படையாக இருக்கின்றது. இந்த மாதிரியான நிலமைகளில் 'மேலிருந்து' கொண்டு வரப்பட்டதுதான் முதலாளித்துவ வளர்ச்சிப் பாதை. இதன் இறுதி விளைவு விவசாயத்துறை முதலாளித்துவத்திலும் தரகு அதிகார வர்க்க முதலாளித்துவம் நிலைநாட்டப்படுவதில்தான் முடியும். அதே சமயத்தில் தேசிய முதலாளிகளும் பலவீனமாக இருப்பதால் சுதந்திரமான முதலாளித்துவ வளர்ச்சிப் பாதை (அமெரிக்கப் பாதை) விவசாயத் துறையில் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கின்றது. எனவே இங்கே, விவசாயத்தில் மேலிருந்து கொண்டு வரப்படும் பிரஷ்யன்-ஜுங்கர் முறையிலான முதலாளித்துவ வளர்ச்சிப் பாதை ஒன்றுதான் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அந்த முறைக்கே உரித்தான, மிக மிக மெதுவான, மக்களுக்கு அதிக இன்னல்களைத் தருகின்ற வளர்ச்சி என்ற குணாம்சங்கள் அரைக்காலனி-அரை நிலப்பிரபுத்துவத்திற்கு உரிய பிரத்தியேக குணாம்சங்களோடு சேர்த்து இந்திய விவசாயத்தில் முதலாளித்துவ உற்பத்தி முறையானது மிகவும் மெதுவாகவும் இன்னல்கள் தரக்கூடியதாகவும் வளர்கிறது. சிறு நிலச்சுவான்தார்கள் நிலமிழத்தல், உற்பத்தியாளரை உற்பத்திச்சாதனங்களுடன் இணைக்கும் நீசவடிவம் கொண்ட விளைச்சல் பங்கீட்டு முறையின வளர்ச்சி, நிலத்தைக் காலி செய்தல், தொழில் முயற்சித் தன்மையுள்ள உரிமையாளர்—பண்ணைகள் தோன்றுதல் ஆகிய இந்த நீண்ட செயல்முறை கிராமப்புறங்களில் இந்த வகை முதலாளித்துவ வளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டிருப்பதைக் காட்டினாலும், மொத்தத்தில் இந்திய விவசாயத்தில் அரை நில்ப்பிரபுத்துவ உற்பத்தி முறைகளும் உறவுகளுமே மிகுநிலை பெற்றுள்ளன.

—X—

# 6. ஒரேவழி விவசாயிகளின் விவசாயப் புரட்சியே

பிரஷ்யன் ஜங்கர் முறையிலான நிலப்பிரபுத்துவ முதலாளிகளின் பொருளாதாரத்தின் மிகமிக மெதுவான, இடர்ப்பாடுகளுடைய, விவசாயிகளைத் துன்பதுயரங்களிலும் வேதனையிலும் மூழ்கடிக்கும் சீர்திருத்த வழிகளிலான பரிணாம வளர்ச்சியின் போக்குகளையும், சில கூறுகளையும் எடுத்துக் கொண்டு முதலாளித்துவ அரசியல் மற்றும் சமூகவியலாளர்களும் எல்லா வண்ணத் திரிபுவாதிகளும் இந்திய விவசாயத் துறையில் நிலப்பிரபுத்துவஉற்பத்திமுறையைத் தூக்கியெறிந்து முதலாளிய உற்பத்திமுறையை ஆளும் வர்க்கங்களே நிலைநாட்டி விட்டதாகவும், அதுவே மேலாண்மை பெற்றிருப்பதாகவும் கூறுகின்றனர்.

1. நிலம் பரிவர்த்தனைப் பண்டமாகி இருப்பதாகவும்,

2. நிலப்பிரபுத்துவ உறவுகள் கலாச்சார வடிவத்தில் மட்டும் மிச்ச சொச்சங்கள் என்கிற முறையில் நீடிப்பதாகவும்,

3. பண்வாடகை செலுத்தும் குத்தகை முறை மேலோங்கியிருப்பதாகவும்,

4. விவசாய கூலித் தொழிலாளர்களுக்கான சந்தை பெரும் அளவில் உருவாகி இருப்பதாகவும்.

5. சந்தைக்கான பண்டப்பயிர் உற்பத்தி பிரதானமாகி இருப்பதாகவும். இவையும் இன்னபிறவும் இதற்கு காரணங்களாகும் என்று கூறுகின்றனர். ஆனால் நிலப்பிரபுத்துவ உற்பத்திமுறையிலிருந்து முதலாளித்துவ உற்பத்தி முறைக்குப் பரி



10

ணாம வளர்ச்சியடையும் காலகட்டத்தில் ஒரு போக்கு நிகழ்ந்து கொண்டிருப்பதற்கும் அந்தப்போக்கே முடிவுற்று நிலை நாட்டப் ட்டதற்கும் இடையேயான வேறுபாட்டையும் முக்கியத்துவத்தையும் மார்க்சிய—லெனினியக் கண்ணோட்டத்தில் ஆய்ந்தறியவோ, பருண்மையாக அதை புறவயமான நிலைமைகளுக்குப் பொருத்தவோ இவர்கள் முயல்வதே இல்லை. இவர்கள் மார்க்சிய—லெனினிய அளவுகோல்களைப் பிரயோகிப்பதை விடுத்து தமது சொந்த அளவுகோல்களையே பிரயோகிக்கின்றனர். சான்றாக, பணவாடகை செலுத்தும் குத்தகை முறையைக் கண்டுவிட்டதும் முதலாளித்துவ உற்பத்தி முறை வந்துவிட்டதாக வானத்துக்கும் பூமிக்கும் குதிக்கிறார்கள். நாட்டின் ஒரு பகுதியில் கண்டுவிட்டவுடன் எங்கும் விரவியிருப்பதாக வேறு கூச்சலிடுகின்றனர். பணவாடகை செலுத்தும் குத்தகை முறையேகூட நிலப்பிரபுத்துவத் தன்மையுடையது மற்றும் முதலாளித்துவத் தன்மையுடையது என்று இரண்டு வேறுவேறான தன்மைகள் உடையவையாக இருக்கின்றன; முதலாளித்துவ உற்பத்திமுறையின் வளர்ச்சியைப் பொருத்து ஒன்றிலிருந்து மற்றொன்றாக மாறிச்செல்லும் போக்குடையது; உபரி உற்பத்தியிலிருந்து அல்ல உபரி மதிப்பிலிருந்த—குறிப்பிட்ட தொகை மூலதனம் விவசாயம் தவிர மற்ற துறைகளில் எந்த அளவு லாபம் தருமோ அதன் சராசரி லாபம் பெறும் அளவு—விவசாயத்தில் இடப்படும் மூலதனத்திலிருந்து உபரிமதிப்பை பெறுவதிலிருந்து அதைவிட மேலும் கூடுதலாகப் பெறும் ஒருபங்கை பணவாடகையாகச் செலுத்தும்போது மட்டுமே முதலாளித்துவ குத்தகை முறையாகிறது என்ற அடிப்படை மார்க்சிய-லெனினியக் கோட்பாடு பற்றி எள்ளளவும் இந்த மேதாவிகளுக்கு அக்கறையில்லை. இனி மேற்கண்ட ஐந்து பிரச்சினைகளிலும் அவை தொடர்பானவற்றிலும் அடிப்படை மார்க்சிய—லெனினிய நிலைப்பாடுகளையும் அவற்றை நமது நாட்டு விவசாயத்துறைக்குப் பொருத்தியும் ஆய்ந்தறிவோம்.

## நிலம் இன்னமும் ஒரு பரிவர்த்தனைப் பண்டமாகிவிடவில்லை

1. குத்தகைக்காரர் பாதுகாப்புக்காக எடுக்கப்பட்ட பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளும் நிலம் பரிவர்த்தனைப் பண்டமாவதற்கு எதிரான போக்குகளை ஏற்படுத்தின. சில விதிவிலக்குகள் தவிர எல்லா வகையான குத்தகைமுறைகளும் சட்டபூர்வமாகத் தடை செய்யப்படுவதற்கு மட்டுமே அவை வழிவகுத்தன. இடைத்தரகர்களை ஒழிப்பது என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட இந்நடவடிக்கைகள் முதலாவதாக, குத்தகைதாரர்களை தாம் சாகுபடி செய்யும் நிலங்களை விலைக்கு வாங்கும்படி நிர்பந்திக்கிறது; இரண்டாவதாக குத்தகையை மாற்றுவதற்கான சந்தையைத் திறந்துவிடுவதற்குப் பதில் குத்தகையை நீடிப்பதற்கும், பரம்பரை குத்தகை உரிமைகளைப் பெறுவதற்கும் வழிவகுக்கிறது; மூன்றாவ

தாக, சொந்தசாகுபடி என்ற பெயராலும், தானேமனமுவந்து குத்தகை உரிமைகளை (சரணடையச்செய்வது)ஒப்படைப்பது என்ற பெயரிலும் ஏராளமான நில வெளியேற்றத்துக்கும் நிலக்குவிதலுக்கும் வழிவிட்டது; நான்காவதாக, பெரும்பாலும் நிலக்குத்தகைப் பதிவேடின்றி வாய்வழி ஒப்பந்தங்களே நிலவுவதால் நில வெளியேற்றம் சுலபமாகவும் பலாத்காரமாகவும் நடைபெறுகிறது. 2. குத்தகை விகிதத்தை அரசே தீர்மானித்து சட்டமியற்றுவதால், பரிவர்த்தனைப் பண்டம் என்கிற முறையில் நிலம் வியாபாரச் சந்தைக்கு வருவதை ஊக்குவிப்பதாக இல்லை. 3. பரம்பரைச் சொத்துரிமை (வாரிசுரிமை) இந்து, முஸ்லீம் மற்றும் ஆங்கிலச் சட்டப்படி மத அடிப்படையில் தொடர்வதானது நிலத்தைப் பரிவர்த்தனைப் பண்டமாக்குவதில் பெரும் தடைகளை ஏற்படுத்துகிறது. 4. விவசாயம் தவிர வேறு துறைகளிலும் வேலை வாய்ப்புகள் இல்லாமலிருப்பது காரணமாக விவசாயத் தொழிலை லாபகரமான முறையில் நடத்த முடியாவிட்டாலும் உயிர் ஓம்புதலுக்கான இன்றியமையாத சாதனமாகக் கருதும் சிறு, நடுத்தர விவசாயிகளின் குடும்பத்தோடு நிலம் பிணைக்கப்பட்டிருக்கிறது. குத்தகைக்கு விடுவதன் மூலமோ, விற்பதன் மூலமோ நிலத்தை வியாபாரச் சந்தைக்கு விடுவதை இது தடுக்கிறது. (5) பழைய ஜமீன்தார்கள், மன்னர்கள் மற்றும் நிலப் பிரபுக்களின் கவுரவம், அந்தஸ்து, அதிகாரம், பதவி, பட்டம், சலுகைகள், உரிமைகளுக்கான சின்னமாகவே நிலம் இன்னமும் நிலப்பிரபுத்துவ முறையில் அவர்களுடன் பிணைக்கப்பட்டிருக்கிறது. மேற்கண்ட காரணங்களால் சமுதாய, பொருளாதார, அரசியல் அந்தஸ்துள்ள நிலவுடைமையாளர்கள் இவற்றைக் கொண்டு குத்தகை பாதுகாப்பு சீர்திருத்தங்களை முறியடிக்கும் வாய்ப்பிருக்கிறது. அவர்களுடைய அந்தஸ்திற்கு கீழ்நிலையில் உள்ளவர்களுக்கு மட்டுமே குத்தகைக்கு விடும் நிலைமையும் நீடிக்கிறது. இன்னொரு புறம் பலமாக விவசாய இயக்கங்கள் உள்ள இடங்களில் குத்தகை பாதுகாப்பு சீர்திருத்தங்களை, விவசாயிகள் பயன்படுத்தும் வாய்ப்பிருப்பதால் நிலவுடமையாளர்கள் குத்தகை முறையை கண்டஞ்சும் நிலையே நிலவுகிறது. எனவே, சொந்த சாகுபடி முறையை நிர்ப்பந்தத்தின் காரணமாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. குத்தகை உரிமை ஸ்திரமற்ற—உறுதியற்ற நிலையில் நீடிப்பது காரணமாக நவீன விவசாயத்துக்கு குத்தகைதாரர்கள் மாறுவதற்கான வாய்ப்புகளை அடைக்கிறது. விவசாயத்தில் முதலாளித்துவ முறையிலான உறவுகள் தீவிரமான முறையில், புரட்சிகரமான முறையில் தலையெடுக்கும்போது சட்டபூர்வமான முறைகள் குறுக்கே நிற்க முடியாது; அவை உடைத்து நொறுக்கப்படும். ஆனால் சீர்திருத்த முறைகளில் முதலாளித்துவ உறவுகள் நுழையும்போது சட்டபூர்வமான தடைகள் பங்காற்றவே செய்கின்றன. எனவே சட்ட விரோதமான, கள்ளத்தனமான வாய்வழி ஒப்பந்தங்கள் என்கிற முறையிலேயே பெரும்பாலும் குத்தகை நிலவுடமை உறவுகள் நிலவுவதானது தங்கு தடையற்ற முதலா

ளித்துவப் பரிணாம வளர்ச்சிக்குத் தேவையான மிக முக்கியமான அம்சமாகிய நிலம் ஒரு பரிவர்த்தனைப் பண்டமாவதும் தடை செய்யப்படுகிறது.

நவீன முறையில் சாகுபடி செய்வதற்காக சில பணக்கார விவசாயிகளும் நிலப்பிரபுக்களும் புதிதாக நிலம் விலைக்கு வாங்குவதற்காக மூலதனத்தைச் செலவழிப்பது முதலாளித்துவ தன்மையுடையது அல்ல. நிலத்தை சொந்தமாக விலைக்கு விற்பதும் வாங்குவதும் ஆகிய சந்தையை நிலம் ஒரு பரிவர்த்தனைப் பண்டமாகும் சந்தையாகக் கொள்ளக்கூடாது. நிலத்தில் தனிச் சொத்துடமை வந்ததிலிருந்து இந்தச் சந்தை நிலவுகிறது. முதலாளித்துவ உற்பத்தி முறைக்கே உரியது என்னவென்றால் நிலத்தின் உபயோக மதிப்பை பரிவர்த்தனை மதிப்பு என்கிற முறையில் வியாபாரச் சந்தைக்கு மாற்றுவதுதான். எனவேதான் மார்க்ஸ் பின்வருமாறு கூறுகிறார்:

"நிலத்தை விலைக்கு வாங்குவதற்காக பண மூலதனத்தைச் செலவழிப்பது விவசாய மூலதனத்தின் ஒரு முதலீடு அல்ல. சில விவசாயிகள் தமது சொந்த உற்பத்தி துறையில் செலவிடும் மூலதனத்தின் உபயோக மதிப்பை (Pro-Tanto) இது குறைக்கிறது. அவர்களது உற்பத்திக்கான சாதனங்களின் அளவினுடைய உபயோக மதிப்பை குறைக்கிறது; அதன்மூலம் மறு உற்பத்திக்கான பொருளாதார அடிப்படையை குறுக்கிச் சுருக்குகிறது. இது சிறு விவசாயியை லேவாதேவிக்காரனிடம் அடிமைப்படுத்துகிறது; ஏனெனில் சிறு விவசாயத்துறையில் அரிதாக இருக்கும் கடன் இதனால் யதார்த்தமாக எழுகிறது. பெரும் எஸ்டேட்டுகள் விஷயத்திலும் இம்மாதிரி விலைக்கு வாங்குவதால்கூட விவசாயத்துக்கு ஒரு இடர்ப்பாடு இருக்கிறது. ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது நிலவுடமையின்—அவனது எஸ்டேட்டு வாரிசுரிமை மூலம் பெற்றிருந்தாலும் சரி அல்லது விலைக்கு வாங்கியிருந்தாலும் சரி அதைப்பற்றிய பிரச்சினை இல்லை—கடனாளியாக இருப்பதைப் பற்றிப் பொருட்படுத்தாத முதலாளித்துவ உற்பத்தி முறைக்கே கூட உண்மையில் இது முரண்பாடாகும்." (மூலதனம் III, 344-45).

எனவே, சிறிய விவசாயமாக இருந்தாலும், பெரிய விவசாயமாக இருந்தாலும் நிலத்தை விலைக்கு வாங்குவதோடு உற்பத்தியின் அடக்கவிலை பிணைக்கப்படக்கூடாது. நில விற்பனை என்னும் சந்தை இந்த இருவகை விவசாயத்திலும் முதலாளித்துவ உற்பத்தி முறையின் வளர்ச்சிக்குத் தடையானவையாகும். நமது நாட்டில் ஒரு புறம் நிலக்குவியலும் மற்றொரு புறம் சிறு விவசாய உற்பத்தியும் நிலவுவது இவை இரண்டுமே விவசாயத்தில் முதலாளித்துவ வளர்ச்சிக்குத் தடையாக இருக்கின்றன. உயிர் ஓம்புதலுக்கான அத்தியாவசியத் தேவை என்கிற முறையில் சிறு விவசாயத்துக்கு நிலத்தை விலைக்கு

வாங்குவது நடக்கிறது. இது உற்பத்தியை நவீனப் படுத்துவதற்கு பதில் மூலதனத்தை நிலத்தில் முடக்குவதாக இருக்கிறது. குத்தகை முறை தாராளமாக இல்லாமல் தடை செய்யப்பட்டதால் நவீன விவசாயம் உள்ள இடங்களில் பண்ணைகளை விஸ்தரிக்க புதிய நிலத்தை விலைக்கு வாங்க வேண்டி உள்ளது. இரண்டு வகையிலுமே மூலதனத்தை முடக்கும் போக்கு உள்ளதாலும், நிலம் உடைமையாளனோடு பிணைக்கப் படுவதாலும் பரிவர்த்தனைப் பண்டமாவதில்லை.

## முதலாளித்துவ முறையிலான நிலவாடகை அல்ல; நிலப்பிரபுத்துவ முறையிலான நிலவாடகையே மேலோங்கி இருக்கிறது.

பரந்து விரிந்த ஏற்றத்தாழ்வான வளர்ச்சியுடைய இந்திய விவசாயத்தில் பல்வேறு வகையான குத்தகை முறைகள் நிலவுகின்றன. உழைப்பு வாடகைச் செலுத்தும் குத்தகைமுறை இரண்டாம்பட்சமானதாகவும் சிறிய அளவிலுமே காணப்படுகின்றன. பிரதான முறையாக பண்ட வாடகை மற்றும் பணவாடகை செலுத்தும் குத்தகை முறைகள் நிலவுகின்றன. இவையுமின்றி வெவ்வேறு வகை ஒப்பந்தங்களை உடைய பயிர்ப்பங்கீடு வாரக் குத்தகை முறையும் பிரதான வடிவங்களில் ஒன்றாக இருக்கிறது எல்லா வண்ணத் திரிபுவாதிகளும், முதலாளிய அரசியல் மற்றும் சமூகவியலாளர்களும் பணவாடகை செலுத்தும் குத்தகை முறையே விவசாயத்தில் முதலாளித்துவ உற்பத்திமுறை வந்துவிட்டதற்கான அறிகுறி என்றும் திரித்துப் புரட்டுகின்றனர். உழைப்பு வாடகை மற்றும் பண்ட வாடகை ஆகிய இரண்டு குத்தகை முறைகளும் முதலாளித்துவத்துக்கு முந்திய உற்பத்தி முறையின் அம்சங்கள் என்பதிலும் அவற்றோடு ஒப்பிடும்போது பணவாடகை செலுத்தும் குத்தகை முறை நிச்சயம் முன்னேறிய வடிவம் என்பதிலும் ஐயத்திற்கிடமில்லை. ஆனால் உழைப்பு வாடகையிலிருந்து பண்ட வாடகைக்கு மாறியதுபோல வெறுமனே வடிவத்திலான மாற்றமாகக்கூட பணவாடகை செலுத்தும் குத்தகை முறை இருக்க முடியும். உண்மையில் பணவாடகை மற்றும் வாரக்குத்தகை ஆகிய இரண்டு வடிவங்களுமே நிலப்பிரபுத்துவ முறையிலிருந்து முதலாளித்துவ முறைக்கு மாறிச்செல்லும் வடிவங்கள்; பண வாடகை உபரி உற்பத்தி மற்றும் உபரி உழைப்பிலிருந்து இல்லாது உபரி மதிப்பிலிருந்து செலுத்தப்படும் பொழுது மட்டுமே முதலாளித்துவ முறையாக மாறுதலடைகிறது. இந்த மாறுதலடையும் போக்கே மிக முக்கியமான கவனத்திற்குரியதாகும்.

உழைப்பு வாடகை என்பது உடனடி உழைப்பாளர் தமது சொந்த கருவிகளைக் கொண்டு குறிப்பிட்ட நாட்கள் நிலப்பிரபு

வால் குத்தகைச்கு விடப்பட்ட நிலத்தில் வேலை செய்வதும், மற்ற நாட்களில் உழைப்பு வாடகை என்கிற முறையில் நிலப் பிரபுவின் நிலத்தில் வேலை செய்வதும் உழைப்பின் நேர அளவு நிலப் பிரபுவால் தீர்மானிக்கப்படுவதும் கொண்ட மிகவும் எளிய, சாதாரண வடிவமாகும். உபரி உழைப்பின் வடிவத்தில் செலுத் தப்படும் வாடகையும் உபரி உற்பத்தியும் இதில் ஒன்றாகவே இருக்கிறது. பண்ட வாடகை என்பது உழைப்பு வாடகையை விட முன்னேறியது உபரி மதிப்பு அல்லது உபரி உழைப்பின் வடிவத்திலான வாடகையை உற்பத்திக்கான நிலைமைகளை அனு போகமாகப் பெறும் உழைப்பாளன் தனது உபரி உழைப்பு அல் லது உபரி உற்பத்தியிலிருந்து செலுத்துகிறான். உடனடி உற் பத்தியாளரை அவரிடமிருந்து அந்நியமானதாக, சுயேச்சையான தாக, நிலப்பிரபுவின் தனித்துவத்தோடும் சுயேச்சையானதாக வும் அன்னியமானதாகவும் இருந்து உடனடி உற்பத்தியாளரை எதிர்கொள்ளும் உற்பத்திக்கான நிலைமையாக நிலம் இருக் கிறது. சுய பொருளாதாரத்துக்கு வாய்ப்பு, உபரி உழைப்பை இயற்கையானதாக அப்படியே நேரடியாக செலுத்துவதற்குப் பதில் பண்டத்தின் இயற்கையான வடிவத்தில் வாடகை செலுத் துவது, நிலப்பிரபுவோ பிரதிநிதியோ மேற்பார்வையிடுவதும், பலவந்தம், நிர்பந்தம் காரணமாக இன்றி சூழ்நிலைகளின் காரணமாக வாடகை செலுத்துவதும் என்ற முறையில் முந்தைய குத்தகை முறையைவிட முன்னேறியதும் இனிவரும் உற்பத்திமுறையின் கூறுகளைப் பெற்றிருப்பதும் என் கிற வகைகளில் பண்ட வாடகை குத்தகை முறை முன்னேறியது. இருப்பினும் இத்துடன் அக்கம் பக்கமாக ஈட்டுத் தொகை பெறாமல் உழைப்பு வாடகையும் செலுத்த வேண்டியிருப்பதும், இயற்கைப் பொருளாதாரமாக—அதாவது பொருளாதாரத்துக் கான நிலைமைகள் பிரதானமாக நிலம், அதன் மூலமாகவே—மறு உற்பத்தி செய்யப்படுவதும் குடும்ப உழைப்பு அடங்கியிருப் பதும் காரணமாக பண்டவாடகை பழைய உற்பத்தி முறையின் அடிப்படையிலானதாகவே இருக்கிறது.

பணவாடகை செலுத்தும் குத்தகை முறை ஆரம்பத்தில் உழைப்பு வாடகை மற்றும் பண்ட வாடகையிலிருந்து வெறும் வடிவ மாறுதலாகவே தோன்றுகிறது. குத்தகைதாரர் உற்பத்திப் பொருளின் ஒரு பகுதியை இயற்கையானதாக அப்படியே வாட கையாக செலுத்துவதற்குப் பதில் பணவாடகையாக செலுத்து வதற்காக ஒரு பகுதி உற்பத்திப் பொருளைப் பணமாக மாற்ற பரிவர்த்தனைப் பொருளாக உற்பத்தி செய்ய—சந்தைக்காக உற் பத்தி செய்யவேண்டியுள்ளது. எனவே கிட்டத்தட்ட உற்பத்தி முறையின் சமுதாயத் தொடர்பறுந்த தனித்துவத் தன்மை முழு வதும் மாறுகிறது. மொத்த உற்பத்தியில் மீண்டும் மறு உற்பத் திக்கான சாதனங்கள் மற்றும் நேரடி உயிர் ஓம்புதலுக்கான சாத னங்கள் ஆகியவற்றுக்கான பகுதியை விட பணமாக மாற்ற வேண்டிய பகுதி தீர்மானகரமாகிறது. பணவாடகை குத்தகை

முறையின் முன் தேவை நிலத்திலிருந்து வேறுபாடானதாக,
குத்தகைதாரர் கால்நடைகளையும் இன்னும் பிற உழுபடைக்
கருவிகளையும் உடைமையாகப் பெற்றிருக்கவேண்டும். புதிய உற்
பத்தி முறைக்கு மாறுதலடையும், தானே சிதைவுறும் முறையாக
இருப்பினும் குத்தகைதாரர் நில அனுபோகத்தை வாரிசுரிமை
மூலமோ அல்லது, வேறு பிற மரபு வழி உரிமை மூலமோ பெறு
வதும், அவரது உற்பத்திக்கான நிலைமைக்கு மிகவும் அத்தியா
வசியமானது என்கிற முறையில் ஊதியம் அல்லது ஈடு எதுவும்
பெறாமல் கூடுதலான உழைப்பு வாடகையை செலுத்த வேண்
டியிருப்பதும் காரணமாக பண்டவாடகை போன்ற பண வாடகை
யும் உபரி உழைப்பின் ஒரு வடிவமாகும்.

உழைப்பு வாடகையின் மாறுபட்ட வடிவமும், எதிர்க் கோட்
பாடும் என்கிற முறையிலான பணவாடகை எவ்வாறாயினும்
அதற்கு முந்திய வடிவங்களின் இறுதி வடிவமும், அதே சமயம்
நிலப்பிரபுத்துவ நில வாடகையின் சிதைவுறும் வடிவமாகும்.
அதாவது உற்பத்தி நிலைமைகளின் உடைமையாளருக்குச்
செலுத்த வேண்டிய ஊதியமற்ற உபரி உழைப்பின் மற்றும் உபரி
உற்பத்தியின் சாதாரண வடிவம் என்கிற முறையிலான நில
வாடகையின் சிதைவுறும் வடிவமாகும். ஒரு புறம் உழைப்பு
வாடகை மற்றும் பண்ட வாடகையைப் போன்றே பணவாடகை
யிலும் லாபத்திற்கு மேல் அதிகமாக இல்லை மற்றொரு புறம்
வரம்புக்குட்பட்டு கருவடிவிலான லாபம் உபரி உழைப்பினால்
சேகரிக்கப்படுகிறது; ஆனால் லாபத்தின் வரம்பாக வாடகை
இருக்கிறது. இந்த நிலையிலிருந்து சுதந்திரமான விவசாயிகளின்
முதலாளித்துவ முறையிலான பணவாடகை செலுத்தும் குத்தகை
மற்றும் முதலாளித்துவ குத்தகை விவசாயிகளின் குத்தகை
ஆகியவை தோன்றுகின்றன.

''இவ்வாறு முந்திய வடிவங்களின் கீழ் கூட ஒரு பகுதியா
கவும் எழுந்தது போலன்றி வெறும் உண்மையாகவும் தற்செய
லாகவும் மட்டுமல்ல, ஆனால் இயல்பாகவே அதன் அங்கீகரிக்கப்
பட்ட நின்று நிலவும் வடிவமாக வாடகையின் தன்மையே கூட
மாறுகிறது. உபரி மதிப்பு மற்றும் உபரி உழைப்பின் இயல்பான
வடிவத்திலிருந்து லாபத்தின் வடிவத்தில் முதலாளிகள் சுரண்டுவ
தால் சுவீகரிக்கப்படும் பகுதியின் மீதான வெறும் கூடுதலான
ஒரு உபரி உழைப்பாகச் சுருங்கி விடுகிறது; மொத்த உபரி
உழைப்பைப் போன்று வெறுமனே லாபத்தையும், லாபத்திற்கு
மேல் கூடுதலானதையும் (முதலாளித்துவ குத்தகையாளனால்)
அவனால் மொத்த உரிப்பொருளான வடிவத்தில் நேரடியாகவே
கறந்து கொள்ளப்படுகிறது; பணமாக மாற்றப்படுகிறது, அவ
னால் நேரடிச் சுரண்டலால், அவனது மூலதனத்தின் மூலமாக
விவசாயத் தொழிலாளியிடமிருந்து கறந்த அந்த உபரி மதிப்பின்
கூடுதல் பகுதியை மட்டுமே அவனால் நிலப்பிரபுவுக்கு வாடகை
யாகச் செலுத்தப்படுகிறது. எவ்வளவு அதிகமாக அல்லது

எவ்வளவு குறைவாக நிலப்பிரபுவுக்குச் செலுத்துகிறான் என்பது சராசரியைப் பொருத்து, சராசரி லாபத்தால் நிர்ணயிக்கப்படு வதைப் பொருத்து அமைகிறது; சராசரிலாபம் என்பது விவசாயம் தவிர மற்ற உற்பத்தித் துறைகளின் மூலதனத்தால், இந்த சராசரி லாபத்தால் நெறிப்படுத்தப்படும் விவசாயமற்ற பிற உற்பத்தியின் விலையால் நிர்ணயிக்கப்பட்டு அடையப்படுகிறது. உபரி மதிப்பின் உபரி உழைப்பின் ஒரு சாதாரண வடிவத் திலிருந்து உபரி உழைப்பின் பகுதி மீது ஒரு கூடுதல் என்பதாக அதன் நியாயமான சாதாரணப் பங்காக மூலதனத்தால் முன்கூட்டியே உரிமை கொண்டாடுவதாக உற்பத்தியின் இந்தக் குறிப்பிட்ட துறையின், உற்பத்தியின் விவசாயத்துறையின் தனிச்சிறப்பானதாக வாடகை இப்பொழுது மாறிவிட்டிருக்கிறது. வாடகைக்குப் பதில் லாபம் உபரிமதிப்பின் சாதாரண வடிவமாக இப்பொழுது மாறியிருக்கிறது. பொதுவில் உபரி மதிப்பு என்பதால் அல்ல, மாறாக அதன் விளைவான பிறப்பாக, உபரி லாபமாக, குறிப்பிட்ட சூழ்நிலைமை களின்கீழ் ஒரு சுயேச்சையான வடிவம் எடுப்பதாக ஒரு வடிவம் என்கிற முறையில் தானே மட்டும் வாடகை நின்று நிலவுகிறது. இந்த மாற்றம் உற்பத்திமுறையில் அதற்குப் பொருத்தமாக படிப்படியாக மாறும் முறையை விவரிக்க வேண் டிய அவசியமில்லை. இது ஏற்கனவே பின்வரும் உண்மையால் தொடர்கிறது; அதாவது, முதலாளித்துவ விவசாயி பரிவர்த்த னைப் பண்டமாக விவசாயப் பொருட்களை உற்பத்தி செய்வது சாதாரணமாகிறது; மேலும் முன்பு அவனது உயிர் ஓம்புதலுக் கானவற்றின் மீதான கூடுதலைத்தான் பரிவர்த்தனைப் பண்ட மாக மாற்றப்பட்டது. ஆனால் இப்பொழுது இந்தப் பரிவர்த் தனைப் பண்டத்தில் ஒப்பீட்டு ரீதியில் மிகச் சொற்பமான பகுதியே உயிர் ஓம்புதலுக்கான சாதனமாகப் பயன்படுத்தப்படு கிறது. இனியும் நிலமல்ல, ஆனால் மாறாக மூலதனம்தான் விவசாயத் தொழிலாளர்களையும் கூட அதன் நேரடி ஆளுமை மற்றும் உற்பத்தித் தன்மையின் கீழ் கொண்டு வருகிறது'' (மார்க்ஸ், மூலதனம் III; முதலாளித்துவத்துக்கு முந்திய சமூக - பொருளாதார படிவங்கள், பக்கம் 211-ல் மேற்கோள் காட்டியுள்ளபடி).

மூலதனத்தின் சராசரி லாபத்திலும் கூடுதலான—விவசாயம் தவிர பிற துறைகளின் உற்பத்தியில் மூலதனம், விவசாயம் தவிர பிற உற்பத்திப் பொருட்களின் விலை மற்றும் சராசரி லாபத்தால் தீர்மானிக்கப்படுவது—லாபம் என்கிற முறையில் செலுத்தப்படும் பணவாடகை மட்டுமே முதலாளித்துவ நில வாடகையாகும். ஆனால் இந்திய விவசாய உற்பத்திப் பொருட் களின் விலையும், உற்பத்தி முறையும் இந்த சராசரி லாபத் தையே கூட தருவதாக இல்லை என்பதே யதார்த்தமாக இருக்கிறது. பணவாடகை செலுத்தும் குத்தகை முறை இந்திய விவசாயத்தைப் பொருத்தவரை சிறு, நடுத்தர விவசாயிகளின்

உயிர் ஓம்புதலுக்கான சாதனங்களின் மீதான கூடுதலை மட்டுமே சாதாரண உபரிமதிப்பு மற்றும் உபரி உழைப்பைச் செலுத்துவதாக மட்டுமே இருக்கிறது. விவசாயம் தவிர பிற துறைகளின் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும் மூலதனத்தின் சராசரி லாபத்தையே—அதற்குமேல் உபரியாக கூடுதல் லாபம் என்ற பேச்சுக்கே இடமில்லை—விவசாயத்துறை அளிக்காததால்தான் பணக்கார விவசாயிகளோ, நிலப்பிரபுக்களோ, முதலாளித்துவ முறையில் சாகுபடி செய்யும் விவசாயிகள் வேறு எவருமோ குத்தகைக்கு எடுப்பதைக் காண்பது ஒரு சில இடங்கள் தவிர எங்குமே இல்லை அதிகபட்சம் போனால் இம்மாதிரியானவர்கள் நிலப்பிரபுத்துவ முறையிலான லேவாதேவி, அடகு மூலம், நிலத்தை பறிமுதல் செய்வதையே காண முடியும்.

எனவேதான் விவசாய விளைபொருட்களுக்கு உபரி லாபம் கிடைக்கும் வகையில் விவசாயத்தில் முதலாளித்துவ உற்பத்தி முறை பின்வரும் மூன்று கட்டங்களில் நுழையுமென்று மாதிரிக்கு மார்க்சு விளக்குகிறார். (1) நேரடி விவசாயத்திலின்றி அதன் துணைக் கிளைகளில் படிப்படியாக ஆரம்பத்தில் நுழையும் கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு போன்றவை. (2) மிகவும் சாதகமான, வளமான பகுதிகளில் உற்பத்தி பெருக்கத்திற்கேற்றவாறு முதலில் தொடங்கப்படும். (3) விவசாய விளைபொருட்களுக்கு கிராக்கி அதிகமாக இருக்கும் சூழ்நிலைகளில் நுழையும்.

அடுத்து வாரக் குத்தகை, நம் நாட்டில் பல்வேறுவகை ஒப்பந்த வடிவங்களில் நிலவுகிறது. (1) நிலத்தைக் குத்தகைக்கு எடுத்து சாகுபடி செய்வது; விளைச்சலை முன் கூட்டியே செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் பங்கீடு செய்வது; சொல்லப்போனால் உழைப்பு வாடகையைப் பண்ட வடிவில் செலுத்துவது (2) நிலவுடைமையாளன் உள்ளீட்டுக்கான மூலதனத்தை குத்தகைதாரரோடு பகிர்ந்து கொள்வது; நிலத்திற்கு ஒரு பங்கு பயிர்பங்கீடு -பண்ட வாடகை—உள்ளீட்டு மூலதனத்துக்கு ஒரு பங்கு பயிர் பங்கீடு, குத்தகைதாரர்களுக்கு ஒரு பங்கு (3) இறைவைக் குத்தகை: சொந்த சாகுபடியாளர் அண்டை கிணற்றிலிருந்தோ நீர் மூலத்திலிருந்தோ இயந்திரத்தின் மூலமோ அல்லது வெறுமனே நீர் இறைக்கவோ அனுமதி பெற்றுக் கொள்வது; அதற்கு ஒரு பங்கு பயிர்பங்கீடு. இப்படி பல்வேறு வாரக்குத்தகை முறைகள் உள்ளன. எல்லாவகை வாரக் குத்தகைகளும் குறிப்பாக இரண்டாவது வகை ஆகிறுதல் குத்தகை வடிவத்திலிருந்து முதலாளித்துவ நிலவாடகைக்கு மாறுதலடையும் வடிவமும் ஆகும். வாரக்குத்தகை முறையின் கீழ் குத்தகைதாரர் முற்றிலும் முதலாளித்துவ உற்பத்தி முறையில் உற்பத்தி செய்யப் போதிய அளவு மூலதனத்தைப் பெற்றிருக்கவில்லை நிலப்பிரபு பெறும் வாடகை மூலதனத்திற்கான வட்டியும், கூடுதலான வாடகையும் சேர்ந்துள்ளதால் பழைய

வாடகை வடிவம் மட்டும் அடங்கியதல்ல; விவசாயிகளுடைய முழு உபரி உழைப்பையும் உறிஞ்சலாம் அல்லது பெரியபகுதியை உறிஞ்சிக் கொள்வதாக இருக்கும்; ஆனால் இனியும் பொதுவில் உபரிமதிப்பின் ஒரு சாதாரண வடிவமாக வாடகை இருப்ப தில்லை. வாரக் குத்தகைதாரர் சொந்த உழைப்பையோ, பிறர் உழைப்பையோ பயன்படுத்தினாலும், உழைப்பாளர் என்கிற முறையில் அல்லது முதலாளியைப் போன்று, உழைப்புக் கான கருவியின் உடமையாளன் என்கிற முறையில் பங்கீடு பெறுகிறார். நிலப்பிரபு அவனது சொத்துடைமையின் அடிப்படை யில் மட்டுமல்லாது மூலதனத்தை வட்டிக்கு விடுபவன் என்கிற முறையிலும் பங்கீடு பெறுகிறார். எனவே வாரக் குத்தகை முறை ஒரு மாறுதலடையும் காலகட்டத்திற்கான வடிவமே. ஆகும்.

மொத்தத்தில் எல்லாவகை வாடகைகளையும் இரண்டு இனங்களாகப் பிரிக்கலாம். ஒன்று, நிலச்சொத்துடைமைக் காகப்பெறும் அறுதி வாடகை(absolute Rent); இரண்டு. முதலா ளித்துவப் போட்டியினால் பெறும் கழிவு வாடகை (Differential Rent). முதலாளித்துவத்துக்கு முந்திய நிலவாடகை முறைகள் அறுதி வாடகையை மட்டுமே கொண்டிருக்கும். முதலாளித்துவ நிலவாடகை அறுதி வாடகை மற்றும் கழிவு வாடகை இரண்டை யுமே உள்ளடக்கியது. "இவ்வாறு கழிவு வாடகையானது முதலாளித்துவ விவசாயத்தின் ஒவ்வொரு வடிவத்தினுடைய உள்ளடக்கமாக தவிர்க்க முடியாமல் இணைந்திருக்கும் ஓர் அம்சமாகும். அறுதி வாடகை அவ்வாறில்லை; இது தனி நிலச் சொத்துடைமையின் கீழ் மட்டுமே எழுகிறது; வரலாற்று ரீதியாக உருவாக்கப்பட்டு விவசாயத்தின் பின்தங்கிய நிலையின்—(நில) ஏகபோகத்தால் நிர்ணயிக்கப்படுவதாகிய பின்தங்கிய நிலையின்— கீழ் மட்டுமே எழுகிறது" (லெனின் முதல் ருஷ்யப்புரட்சியில் 1905-1907 சமூக ஜனநாயகத்தின் விவசாயத் திட்டம், பக் 78). நமது நாட்டில் முதலாளித்துவ உற்பத்திமுறையினால் எழுந்த போட்டியின் விளைவான கழிவு வாடகை இருப்பதாகவோ, அதிகரிப்பதாகவோ கூற முடியாது, ஒன்று, நில ஏகபோகத் தாலும் போதிய அளவு கூலி வேலை கிடைக்காததாலும் உயிர் ஓம்ப வேண்டியதற்கான அத்தியாவசிய தேவையைப் பூர்த்தி செய்வதற்கென மேற்கொள்ளப்படும் குத்தகை; இரண்டாவது சாகுபடிக்கான நிலப்பற்றாக் குறையால்ஏற்படும் குத்தகை ஆகியவைகளிலிருந்து எழும் அறுதி வாடகை என்ற இனத்தின் கீழ்வரும் நிலப்பிரபுத்துவ முறையிலான பணவாடகைக் குத்தகை மற்றும் வாரக் குத்தகையே மேலோங்கியிருக்கிறது. முதலாளித் துவ முறையிலான பணவாடகைக் குத்தகை முறை உண்மையில் மேலோங்கியிருக்குமானால் பின்வரும் போக்கு தலைதூக்கி இருக்கும்.

"இறுதியாக, பண்ட வாடகை பணவாடகையாக மாறுவதில்

அத்துடன் இணைந்ததே முதலாளித்துவ வாடகை அல்லது நிலத்தின் விலையும், அதனால் அதன் அந்நியமாகும் தன்மை மற்றும் அந்நியமாவது மிகமுக்கியமான காரணியாகிறது என்பது கவனிக்கப்படவேண்டும்; மேலும் வாடகை செலுத்த வேண்டிய பழைய விவசாயி ஒரு சுதந்திரமான விவசாயி உடமையாளனாவது மட்டுமின்றி, நகர் புறத்தார்கள் மற்றும் பணக்கார மக்கள் விவசாயிகள் அல்லது முதலாளிகளுக்கு வாடகைக்கு விடுவதற்கு ஜங்கமச் சொத்தாக எஸ்டேட்டுகளை வாங்குவார்; இவ்வாறு முதலீடு செய்த தங்கள் மூலதனத்தின் மீது வட்டியின் ஒரு வடிவம் என்கிற முறையில் அதை அனுபவிப்பார்; மேலும் எனவே இச்சூழ்நிலை அதே போன்று பழைய உற்பத்தி முறை நிலத்தின் உடமையாளர் மற்றும் யதார்த்தமான சாகுபடியாளர்க்கு இடையிலான உறவு மற்றும் வாடகையையே கூட சேர்த்து இவைகளை மாற்ற உதவும்'' (மார்க்ஸ்-மூலதனம்III முதலாளித்துவத்துக்கு முந்திய சமூக பொருளாதார படிவங்கள் பக்கம் 214-15இல் மேற்கோள் காட்டியுள்ளபடி). நமதுநாட்டில் இம்மாதிரியான வளர்ச்சிப் போக்கை கணிசமான அளவாவது காண முடியவில்லை. விவசாய உற்பத்திக்கும் சரி, வாடகைக்கு விடுவதற்கான ஜங்கம சொத்தாகிய எஸ்டேட்டுகளிலும் சரி, மூலதனமிடுவது விவசாயம் தவிர பிற துறைகளிலான சராசரி லாபத்திற்கு மேல் கூடுதலான லாபத்தை என்றுமே அளித்ததில்லை. எனவே எல்லா வண்ணத் திரிபுவாதிகள் மற்றும் முதலாளிய அரசியல், சமூகவியலாளர்கள் கூறுவது போன்ற முதலாளித்துவ நிலவாடகை முறை இந்திய விவசாயத்தில் மேலோங்கி விடவில்லை. மாறாக, மாறுதலடையும் கால கட்டத்திற்கான அரைநில்ப்பிரபுத்துவ நிலவுடமை முறையே மேலோங்கி நிற்கிறது.

## சந்தைக்கான பண்டப்பயிர் உற்பத்தி பிரதானமாகி விடவில்லை.

இந்திய விவசாயத்தில் பிரஷ்யன்-ஜுங்கர் முறையிலான நிலப்பிரபுத்துவ முதலாளித்துவப் பொருளாதாரத்தின் பரிணாம வளர்ச்சி மற்றும் தரகு—அதிகார வர்க்க முதலாளித்துவத் தன்மையுடைய முதலாளித்துவ உற்பத்தி முறையின் மேலாதிக்கம் காரணமாக சந்தைக்கான பண்டப் பயிர் உற்பத்தி கணிசமான அளவு அதிகரித்திருக்கிறது. ஆனால் இந்திய விவசாயத்தில் பண்டப் பயிர் உற்பத்தி இன்னும் பிரதானப் போக்காகிவிடவில்லை. இதுவரை விளக்கப்பட்ட முன்னிரண்டு அம்சங்களின் — நிலம் ஒரு பரிவர்த்தனைப் பண்டமாகாமலிருப்பதும் நிலவுடமை உறவுகளை மாற்றாமலிருப்பதும் காரணமாக. சராசரிக்கும் மேல் கூடுதலான லாபகரமனதாக விவசாயமில்லை எனவே, முதலாளித்துவ பணவாடகை குத்தகை முறை வராமலிருப்பதற்கு இதுவே காரண

மாகவும், பின் விளைவாகவும், வெளிப்பாடாகவும் இருக்கிறது. இந்திய விவசாயத்துறை பருவமழையோடு நடத்தப்படும் சூதாட்டமாகவே இருக்கிறது வெள்ளமும் வறட்சியும் அடுத்தடுத்தும், ஒரே நேரத்தில் அக்கம் பக்கமாகவும் சர்வ சாதாரணமாக நிகழக் கூடியதாகவே இருக்கிறது சற்று உபரியான அல்லது குறைவான விளைச்சல் இரண்டுமே பெரும் பிரச்சினைகளை ஏற்படுத்திவிடுகின்றன. "நமது நாட்டில் எந்த ஒரு பண்டத்தின் உற்பத்தியிலும் 5-லிருந்து 10% அதிகமோ அல்லது குறைவோ மொத்தத்தில் அதீத நிலையையோ அல்லது பற்றாக் குறையையோ ஏற்படுத்திவிட முடியும்" (இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழக டைரக்டர் ஜெனரல், காமர்ஸ், ஆண்டு மலர். 1978). முதலாளித்துவ உற்பத்தி முறை போதிய அளவு வளர்ந்திருக்கும் பட்சத்தில் இப்பிரச்சினைகள் நிச்சயம் தீர்க்கப்பட்டிருக்கும். இதன் மாற்று விதியாக தீர்க்கப்படும் பொழுது மட்டுமே முதலாளித்து உற்பத்திமுறை தங்குதடையற்ற வளர்ச்சியுறும். ஆனால் வாங்கும் சக்தி மிகக் குறைவான (60% மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கிறார்கள்) நமது நாட்டில் சற்று அதிகமான உற்பத்தியைக் காட்டி மக்களை ஏமாற்றும் ஆளும் வர்க்கங்களோடு சேர்ந்து எல்லா வண்ணத் திரிபுவாதிகளும் முதலாளித்துவ உற்பத்தி முறை வளர்ந்துவிட்டதாக கூச்சல் போடுகின்றனர்.

பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தி வெகுகாலத்திற்கு முன்பு இருந்தே, குறிப்பாக, ஆங்கிலேய காலனியாதிக்கவாதிகள் நுழைந்து அவுரியும், கஞ்சாவும், தேயிலையும், காபியும், இரப்பரும் பயிரிடத் துவங்கியதிலிருந்தே வளர ஆரம்பித்துவிட்டது. பின்னர் பருத்தி, கரும்பு புகையிலை முக்கியப் பண்டப் பயிர்களாயின. ஆனால் விவசாயத்தில் முதலாளித்துவ உற்பத்தி முறை நிலைநாட்டப்பட்டதற்கு அதுவல்ல அளவுகோல். முதலாளித்துவப் பொருளாதாரத்தின் கீழ் பண்ட உற்பத்தி முழு வளர்ச்சி அடைந்து அனைத்தும் தழுவியதாகிறது. இதற்கான அளவுகோல் சந்தையே ஆகும். எனவே சாதாரண பண்ட உற்பத்தியிலிருந்து முதலாளித்துவ முறையிலான பண்ட உற்பத்தியும் அதற்கான சந்தையும் வளர்ச்சியடைவதை மார்க்சிய - லெனினிய அடிப்படையில் நின்று ஆய்ந்தறிய வேண்டும்.

'பண்ட உற்பத்திப் பொருளாதாரத்துக்கு அடிப்படை சமூக உழைப்புப் பிரிவினையாகும். ஆலைப் பொருள் உற்பத்தித் தொழிலானது. கச்சாப் பொருள் உற்பத்தித் தொழிலிருந்து பிரிகிறது; இந்த உற்பத்தித் தொழில்கள் ஒவ்வொன்றும் சிறுசிறு வகைகளாகவும் துணை வகைகளாகவும் பிரிந்து. அவை குறிப்பிட்ட பொருட்களைப் பண்டங்களாக உற்பத்தி செய்து, அவை ஒவ்வொன்றும் மற்ற உற்பத்திப் பொருட்கள், அனைத்துடனும் பரிமாறப் படுகின்றன இவ்வாறு பண்ட உற்பத்திப் பொருளாதாரத்தின் வளர்ச்சியானது தனித்தனியான மற்றும் சுயேச்சை

யான பல்வேறு தொழில் பிரிவுகள் அதிகரிப்பதற்கு இட்டுச் செல்கிறது. இந்த வளர்ச்சியின் போக்கு, ஒவ்வொரு தனிப்பட்ட பொருளைச் செய்வதை மட்டுமின்றி ஒரு பொருளின் தனிதனிப் பகுதியைச் செய்வதையும், ஒரு பொருளைச் செய்வதை மட்டு மின்றி நுகர்ச்சிக்காக பொருளைத் தயார் செய்யும் தனித்தனி நடவடிக்கைகளையும் தனிச்சிறப்பான தொழில் பிரிவாக மாற்று கிறது. இயற்கைப் பொருளாதாரத்தின் கீழ் சமுதாயம் சங்கம மான (homogeneous) பொருளாதார உறுப்புகளின் (தந்தை வழி விவசாயக் குடும்பங்கள், புராதன கிராமச் சமுதாயங்கள், பிரபுத் துவ நிலவுடமை முறை) திரட்சியாக இருந்தது; இத்தகைய ஒவ்வொரு உறுப்பும் பொருளாதார நடவடிக்கையின் அனைத்து வடிவங்களிலும்—பல்வேறு வகையான கச்சாப் பொருட்களைத் திரட்டுவது முதற்கொண்டு நுகர்ச்சிக்காக அவற்றை இறுதியாக தயாரிப்பது வரை—ஈடுபட்டது. பண்ட உற்பத்திப் பொருளாதா ரத்தின்கீழ் உதிரியான (hetrogeneous) பொருளாதார உறுப்புகள் உருவாகின்றன; பொருளாதாரத்தின் தனித்தனிப் பிரிவுகளின் எண்ணிக்கை அதிகரிக்கிறது; ஒன்று அல்லது ஒரே மாதிரியான பொருளாதாரச் செயல்பாடுகளை ஆற்றும் பொருளாதார உறுப்புகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது. சமுதாய உழைப்பு பிரிவினையில் தொடர்ச்சியாக அதிகரித்துவரும் இந்த வளர்ச்சிதான் முதலாளித்துவத்துக்கான உள்நாட்டுச் சந்தையை உருவாக்கும் வளர்ச்சிப் போக்கில் தலை யாய காரணியாகும்......

''மேலே கூறியுள்ளபடி ஆலை உற்பத்தித் தொழில் கச்சாப் பொருள் தொழிலிருந்தும், ஆலை உற்பத்தி விவசாயத்தில் இருந்தும், பிரிக்கப்படுவதுதான் விவசாயத்தையே ஒரு தொழி லாக, பண்ட உற்பத்திப் பொருளாதாரத்தின் ஒரு பிரிவாக மாற்றுகிறது என்பது சொல்லாமலே தெளிவாகிறது. ஆலை உற்பத்தி பொருட்களின் பல்வேறு வகைகளை தனித்தனியாகப் பிரித்து தொழிலின் பல்வேறு பிரிவுகளைத் தோற்றுவித்து தொடர்ச்சியாக அதிகரிக்கச் செய்கின்ற தனிச் சிறப்பாக்கும் நிகழ்ச்சிப் போக்கானது விவசாயத்திலும் தன்னை வெளிப் படுத்திக்கொண்டு, தனிச் சிறப்பான விவசாய மாவட்டங்களை (மற்றும் விவசாய அமைப்பு முறைகளை) தோற்றுவித்து, விவசாயம் மற்றும் ஆலைத் தொழில் பொருட்களுக்கு இடையில் மட்டுமின்றி விவசாயத்தின் பல்வேறு பொருட்களுக்கு இடை யிலும் பரிவர்த்தனையை ஏற்படுத்தி இருக்கிறது.

''வியாபார (மற்றும் முதலாளித்துவ விவசாயத்தின்) தனிச் சிறப்பாக்கலானது எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் சர்வ தேச உழைப்புப் பிரிவினையில் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது; சீர்திருத்தத்துக்குப் பிந்திய ருஷ்யாவிலும் இது உண்மையாக இருப்பதை நாம் இனி விளக்குவோம்.

"இவ்வாறு பண்ட உற்பத்திப் பொருளாதாரம் மற்றும் முதலாளித்துவத்தினுடைய வளர்ச்சியின் ஒட்டுமொத்த வளர்ச்சிப்போக்குக்கு அடிப்படையாக சமுதாய உழைப்புப் பிரிவினை உள்ளது ..'' (லெனின் தொகுதி எண் - 3 பக். 37 - 39)

பரிவர்த்தனைப் பண்டப்பொருளாதாரம் மற்றும் முதலாளித்துவத்தினுடைய வளர்ச்சிப் போக்கின் அடிப்படையாக அமையும் சமூக உழைப்புப் பிரிவினை நமது நாட்டில் எந்த அளவு ஏற்பட்டுள்ளது என்பதை யதார்த்தமாக ஆய்ந்தறியும் எவரும் இந்திய விவசாயத்தில் அற்ப சொற்ப அளவே முதலாளித்துவ உற்பத்தி புகுந்திருப்பதை அறியமுடியும். ஆலை உற்பத்தி தொழில் கச்சாப்பொருள் உற்பத்தி தொழிலிலிருந்தோ, அவை ஒவ்வொன்றும் உள் பிரிவினைகளை உடையவையாகவோ, தனிச்சிறப்பான பிரத்தியேக உற்பத்திக் கிளைகளாகவோ, அவற்றுள்ளும் உழைப்புப் பிரிவுனைகளோ கணிசமான அளவுகூட வளரவில்லை. விவசாயத்தில் கச்சாப் பொருட்களை உற்பத்தி செய்யும் உழைப்பாளர்களே அவற்றை நேர்த்தி செய்வதும், விற்பனைப் பொருளாக்குவதும் இன்னமும் மேலாண்மை பெற்றுள்ளது. மஞ்சள், புகையிலை, வெல்லம், கண்டசாரி சர்க்கரை உற்பத்தியிலும், மரவள்ளி மாவு, ஜவ்வரிசி, சேமியா உற்பத்தியிலும் இந்த நிலையே நீடிக்கிறது. எண்ணெய், அரிசி ஆலைகளும் கூட ஒரு பகுதி இந்த நிலையில் இருக்கின்றன. கிராமப்புறங்களை அடுத்துள்ள சுரங்கத் தொழில்களில் கூட விவசாயத் தொழிலாளர்களும் சிறு விவசாயிகளும் வேலை செய்வது பருவமுறையினதாகவே இருக்கிறது. நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தும் விவசாய சாகுபடிகளில் கூட உழைப்பு பிரிவினையைக் காண முடியவில்லை. ஒரு குறிப்பிட்ட உழைப்பாளரும் அல்லது குடும்பமே உழுவது, விதைப்பது, நடவு, எருவிடுவது, களையெடுப்பது, அறுவடை, கதிரடிப்பது என்று அனைத்து வேலைகளையும் திரும்பித் திரும்பிச் செய்வதையே காணலாம். அதிகபட்சமாகப் போனால் பழங்காலத்திய ஆண் பெண் உழைப்புப் பிரிவினையை மட்டுமே காணமுடிகிறது. அதே போன்று குறிப்பிட்ட பயிர்களை மட்டும் தனிச் சிறப்பாக பயிரிடும் மாவட்டங்களாகப் பிரிவதோ, அதனால் பண்டங்களைப் பரிமாறிக் கொள்ளும் சந்தை உருவாவதோ விவசாயிகளிடையே ஒரு பிரதான போக்காகவும் இல்லை. முடிந்தவரை தன் குடும்பத்தின் விவசாயத் தேவைகளைத் தாமே பூர்த்தி செய்து கொள்ளும் வகையிலேயே உற்பத்தி நிலவுகிறது.

பண்டப் பொருளாதாரம் மற்றும் முதலாளித்துவ உற்பத்தி முறையின் வளர்ச்சிப் போக்கு முழுவதற்கும் அடிப்படையாக அமையும் சமூக உழைப்பினுடைய பிரிவினையின் பின்விளைவாகவும் அங்கமாகவும் இன்னும் ஒரு போக்கு வளர்ந்து சந்தையையும் அதன் மூலம் பண்ட உற்பத்தியையும் பெருக்கும். "...விவசாயம் அல்லாத தொழிலில் ஈடுபடும் மக்கட்தொகையு

டன் ஒப்பிடுகையில் விவசாயத்தில்ஈடுபடும் மக்கட்தொகையைத் தொடர்ச்சியாகக் குறைப்பது என்பது முதலாளித்துவத்தின் இயல்பிலேயே இருப்பதாகும். ஏனெனில் ஆலைத் தொழிலில் (கறாரான அர்த்தத்தில்) மாறும் மூலதனமும் மாறாத மூலதனமும் அறுதியாக அதிகரிப்பது, கைகோர்த்துச் சென்றபோதிலும், ஒப்பீட்டளவில் மாறாத மூலதனமானது மாறும் மூலதனத்தைக் காட்டிலும் அதிகரிக்கிறது. மறுபுறம், விவசாயத்தில் ஒரு குறிப்பிட்ட நிலத்தைப் பயிரிடுவதற்கான மாறும் மூலதனம் அறுதியாக குறைகிறது; புதிய நிலம் எந்த அளவுக்குப் பயிரிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்படுகிறதோ அந்த அளவுக்கு மட்டுமே மாறும் மூலதனம் அதிகரிக்க முடியும்; ஆனால் இவ்வாறு அதிகரிப்பதற்கு விவசாயம் அல்லாத தொழிலில் ஈடுபடுவோரின மக்கட் தொகை மேலும் பெருமளவில் அதிகரிப்பது முன்னிபந்தனையாகத் தேவைப்படுகிறது'' (மார்க்ஸ், மூலதனம் III). விவசாயத் தொழிலில் ஈடுபடும் மக்கட் தொகையைக் குறைப்பதன் மூலம் வியாபாரம் மற்றும் ஆலைத் தொழிலில் ஈடுபடும் மக்கள் தொகை அதிகரிப்பது என்பது இல்லாமல் முதலாளித்துவத்தைப் பற்றி ஒருவர் நினைத்துப் பார்க்கவே முடியாது; இத்தப் போக்கு எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் தெள்ளத் தெளிவான முறையில் காணப்படுவது யாவரும் அறிந்ததே. இந்த சூழ்நிலையின் முக்கியத்துவமானது உள்நாட்டுச் சந்தை என்ற பிரச்சினையுடன் இணைந்துள்ளது என்பதை நிரூபிக்க வேண்டியதில்லை; ஏனெனில் உள்நாட்டுச் சந்தையானது ஆலைத் தொழிலின் பரிணாமம், விவசாயத்தின் பரிணாமம் ஆகிய இரண்டுடனும் பிரிக்க முடியாதவாறு இணைந்துள்ளது.

''ஆலைத் தொழில் மையங்கள் உருவாவது, அவற்றின் எண்ணிக்கை அதிகரிப்பது, மக்கட் தொகையானது இந்த மையங்களின் பால் ஈர்க்கப்படுவது ஆகியவை ஒட்டு மொத்த கிராமிய அமைப்பு முழுவதன் மீது அதிமிக செல்வாக்கு செலுத்தாமலிருக்க முடியாது, வியாபாரம் மற்றும் முதலாளித்துவ விவசாயத்தின் வளர்ச்சியைத் தோற்றுவிக்காமலிருக்க முடியாது......''(மேற்படி நூல், பக். 40-41).

பண்டப் பொருளாதாரம் மற்றும் முதலாளித்துவ உற்பத்தி முறையின் வளர்ச்சிப் போக்கு முழுவதற்கும் அடிப்படையாக அமையும் சமூக உழைப்புப் பிரிவினையின் காரணமாக உள்நாட்டுச்சந்தை உருவாகிறது. அதன் அங்கமாகவும்,பின் விளைவாகவும் பண்டப் பொருளாதாரம் மற்றும் இன்னும் கூடுதலாக முதலாளித்துவப் பொருளாதாரம் இவற்றின் அனைத்து வளர்ச்சியையும் ஆளும் விதியாக விளங்குவது விவசாயத்தில் ஈடுபடும் மக்கள் தொகையை விட (விவசாயம் தவிர பிற துறைகளில்) ஆலைத் தொழிலில் ஈடுபடும் மக்கள் தொகை வேகமாக அதிகரிக்க வேண்டும். அதனால் விவசாயத்திலிருந்து ஆலை உற்பத்தித் தொழிலுக்கு நாளும் அதிகமான மக்கள்

தொகை திருப்பி விடப்பட வேண்டும். நமது நாட்டு நகர்ப் புறங்களுக்கு ஒரு பிரிவு மக்கள் குடியேறுவதைக் காட்டி முதலாளிய அரசியல் மற்றும் சமூகவியலாளர்களும் எல்லா வண்ணத் திரிபுவாதிகளும் மேற்கண்ட மார்க்சிய—லெனினிய விதி நமது பொருளாதாரத்திலுள்ள போக்கு என்று குதியாட்டம் போடுகிறார்கள். ஆனால் உண்மை நிலை இவர்களை அம்பலப்படுத்தி விடுகிறது. விவசாயத்தை விட ஆலை உற்பத்தியே ஆளும் வர்க்கங்களால் முன்னுரிமை கொடுத்து கோடிக் கணக்கில் கொட்டப்படுகிறது எனினும்—உள்நாட்டு நிகர உற்பத்தியில் ஆலைத் தொழிலின் சதவிகிதம் அதிகரித்தது எனினும்—உண்மையில் விவசாயத்தில் ஈடுபடும் மக்கட் தொகைதான் அதிகரித்து வருகிறது; ஆலை உற்பத்தித் தொழிலில் ஈடுபடும் மக்கள் தொகை குறைந்து வருகிறது; சேவைத் துறையில் ஈடுபடும் மக்கட்தொகை மாறாமலிருக்கிறது; நிலச்சீர்திருத்தமும் பசுமைப் புரட்சியும் உச்சகட்டத்திலிருந்த 1950-51 முதல் 1970-71 வரையான இருபது ஆண்டுகளில்தான்—பெரும் ஆலைகள் துவக்கப்பட்ட ஆண்டுகளில்தான்—விவசாயத்தில் ஈடுபடும் மக்கள் தொகை 69% லிருந்து 70.4% ஆக உயர்ந்தது; ஆலை உற்பத்தித் தொழிலில் ஈடுபடும் மக்கள் தொகை 12.6% லிருந்து 11.2% ஆகக் குறைந்தது; சேவைத் துறையில் 18.3% ஆக நீடித்தது. இந்திய சமூக-பொருளாதாரப் படிவத்தில் இந்தப் பிரச்சினைதான் பெரும் சமூக கட்டமைப்பு நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது.

சமூக உழைப்புப் பிரிவினை மற்றும் மக்கள் தொகையின் எண்ணிக்கை அதிகரித்து வரும் வேலைத்துறை இரண்டிலுமே உள்நாட்டுச் சந்தையின் வளர்ச்சிக்கு எதிரான அல்லது தேக்க நிலை நிலவுவதால் பண்டப் பொருளாதாரமோ முதலாளித்துவ உற்பத்தி முறையோ வளர்வதற்கான வாய்ப்புகள் அடைபட்டுள்ள நிலையில், இவை இந்திய விவசாயத்தில் மேலாண்மை பெறுவது சாத்தியமே இல்லை. மேலும் ''உள்நாட்டுச் சந்தை விரிவடைந்துள்ள அளவுக்குத்தான் நாட்டில் முதலாளித்துவம் வளர்ச்சியுற்றிருக்கும்'' (லெனின்). ஆனால் சமூக உழைப்புப் பிரிவினை வளராமலிருப்பது, மற்றும் ஆலை உற்பத்தித்துறை மற்றும் சேவைத் துறையில் ஈடுபடும் மக்கட் தொகை விவசாயத் துறையைவிட குறைந்திருப்பது ஆகிய பண்டப்பொருளாதாரம் மற்றும் முதலாளித்துவ பொருளாதாரத்தின் விதிகளின்படி நமது நாட்டில் உள்நாட்டுச் சந்தை மிகவும் சாதகமற்ற நிலையிலேயே இருக்கிறது. அதாவது, பரந்துபட்ட மக்களின் வாங்கும் சக்தி—தனியார் வருமானம் மிகமிகக் குறைவாகவே உள்ளது. இந்தியச் சந்தையின் அளவையும் பண்ட உற்பத்தியின் அளவையும் குறிக்கும் அளவாக இது இருக்கிறது. அது மட்டுமின்றி எண்ணற்ற இடைத்தரகர்கள், தரங்குறைந்த செய்தித்தொடர்பு, கிராமச் சந்தையிலேயே விற்பனை நடப்பது, அறுவடைக்கு முன் அதிக விலையும், அறுவடைக்குப் பின் குறைந்த விலையும் இவை

யனைத்தும் புராதனச் சந்தை அமைப்பு நீடிப்பதையே குறிக்கின்றன.

பண்டப் பரிவர்த்தனைப் பொருளாதாரம் மற்றும் முதலாளித்துவ உற்பத்தி முறையின் வளர்ச்சிக்கான உள்நாட்டுச் சந்தையை உருவாக்கும் போக்கு பற்றி மார்க்சும் லெனினும் பின்வருமாறு கூறுகின்றனர்: ''விவசாயப் பெருமக்களின் ஒரு பகுதியினரிடமிருந்து நிலத்தைப் பறிமுதல் செய்வதும் வெளியேற்றுவதும் தொழில் மூலதனத்தை விட்டு விட்டது மட்டுமல்லாமல், உழைப்பாளர்களையும், அவர்களது வாழ்க்கைச்சாதனங்களையும் மற்றும் உழைப்பாளர்களின் பொருட்களையும் விடுவிக்கின்றன. இது உள் நாட்டுச் சந்தையை உருவாக்குகிறது' (மார்க்ஸ், மூலதனம் I பக் 776); ''நேரடி உற்பத்தியாளன் உற்பத்திச்சாதனங்களிலிருந்து பிரிக்கப்படுகிறது. அதாவது நேரடி உற்பத்தியாளன் பறிமுதல் செய்யப் படுவது, எளிய பண்ட உற்பத்தியிலிருந்து முதலாளித்துவ உற்பத்திக்கு மாறுவதைக் குறிப்பது (இந்த மாற்றத்துக்கு அவசியமான நிபந்தனையாக இது இருக்கிறது) உள் நாட்டுச் சந்தையை தோற்றுவிக்கிறது. உள்நாட்டுச் சந்தையைத் தோற்றுவிக்கும் இந்த நிகழ்ச்சிப்போக்கு இரு திசைகளில் செல்லுகிறது: ஒருபுறம் உற்பத்திச் சாதனங்களிலிருந்து சிறு உற்பத்தியாளன் ''விடுவிக்கப்படு'' அந்த உற்பத்திச்சாதனங்கள் புதிய உடைமையாளனின் கரங்களில் மூலதனமாக மாற்றப்படுகின்றன; பண்டங்களை உற்பத்தி செய்வதற்கு சேவை செய்கின்றன; இதன் விளைவாக அவைகளே பண்டங்களாக மாற்றப்படுகின்றன. இவ்வாறாக, இந்த உற்பத்திச் சாதனங்களை சாதாரணமாக மறு உற்பத்தி செய்வதற்கு கூட இவை வாங்கப்படுவது அவசியமாகிறது (முன்னதாக, இந்த உற்பத்திச்சாதனங்கள் பெரும்பகுதி இயற்கையான வடிவத்திலும் ஒருபகுதி வீட்டிலும் மறு உற்பத்தி செய்யப்பட்டன) அதாவது உற்பத்திச் சாதனங்களுக்கான சந்தைக்கு வழிசெய்கிறது. பி இந்த உற்பத்தி சாதனங்களைக் கொண்டு இப்போது உற்பத்தி செய்யப்படும் பொருட்களும் பண்டங்களாக மாற்றப்படுகின்றன. மறுபுறம் சிறு உற்பத்தியாளனின் வாழ்க்கைக்கான சாதனங்கள் மாறும் மூலதனத்தின் பொருளாயதக் கூறுகளாகின்றன. அதாவது தொழிலாளிகளை வேலைக்கு அமர்த்திக் கொள்பவன் (நிலவுடைமையாளன் காக வேலைக்கு அமர்த்திக் கொள்பவன், ஒப்பந்தக்காரன், மரவியாபாரி, ஆலை அதிபன் என்று இருந்தாலும் அதில் வேறுபாடு ஏதுமில்லை) செலவிடும் தொகையாகிறது. இவ்வாறு வாழ்வுக்கான சாதனங்களும் இப்போது பண்டங்களாக மாற்றப்படுகின்றன, அதாவது, நுகர்ச்சிக்கான பொருட்களுக்கு உள்நாட்டு சந்தை தோற்றுவிக்கப்படுகிறது' (லெனின், தொகுதி 3. பக் 67-68).

உள்நாட்டுச் சந்தையை உருவாக்குகிற நடவடிக்கையாகிய— சாதாரணப் பண்ட உற்பத்தியிலிருந்து முதலாளித்துவ உற்பத்

களின் விதி என்னவென்றால், முந்திய அளவிலேயே முந்திய தொழில் நுட்ப மட்டத்திலேயே மீண்டும் மீண்டும் உற்பத்தி செய்யும் போக்காகும் : நிலப்பிரப்புக்களின் கார்வி பொருளாதாரம், விவசாயிகளின் இறற்கைப் பொருளாதாரம், பட்டறை உற்பத்தியாளனின் கைவினை உற்பத்தி இவையனைத்தும் இத்தகையவையே. மாறாக, முதலாளித்துவ உற்பத்தியின் விதி என்னவென்றால், உற்பத்தி முறைகள் இடையறாது மாறுதலடைவதாகும், உற்பத்தி விகிதம் கட்டுப்பாடின்றி வளர்ச்சியுறுவதாகும்'' (லெனின், தொகுதி 3, பக்கம் 66)

எனவே விரிவாக்கப்பட்ட மறு உற்பத்தியை—மூலதனத்தைக் குவிப்பதை—நோக்கமாகக் கொண்டு சாதாரண ஆலை முதலாளியைப் போன்று முதலாளித்துவப் பண்ணையாளர் உழைப்புச் சக்தியை வாங்கும்பொழுது கூலி உழைப்பாளன் சுதந்திரமான கிராமப்புற பாட்டாளியாகின்றான். அதாவது ''உபரிமதிப்பின் ஒரு பகுதியை மூலதனமாக்குவதும், அதைப் புதிய உற்பத்திக்குப் பயன் படுத்துவதும்'' நோக்கமாகக் கொண்டு அந்த அடிப்படையில் உற்பத்தி உறவு அமையும் பொழுது மட்டுமே அடிமைத்தனமோ, பெயரளவிலான சுதந்திரமோ இன்றி, வெறும் பொருளாயத அடிப்படையிலான முதலாளித்துவ உறவு நிலை நாட்டப்படுகிறது. ஆனால் இந்திய நிலப்பிரபுக்கள், பணக்கார விவசாயிகள் விவசாயத்தை விரிவாக்கப்பட்ட மறு உற்பத்தியை நோக்கமாகக் கொண்டு நடத்துவதுமில்லை; அந்த அடிப்படையில் உழைப்புச் சக்தியை வாங்குவதும் இல்லை. பெருநிலப்பிரபுக்கள் நிலத்தைக் குத்தகைக்குவிடும் முறையிலும்சரி-முதலாளித்துவ முறையில்லாத பணவாடகைக் குத்தகை மற்றும் வாரக் குத்தகை முறைகள்—அறக்கட்டளைகள் மற்றும் பல்வேறு பெயர்களில் நில்த்தைக் குவித்திருப்பதும் சரி, வரம்புக்குட்பட்டு இயந்திரங்களைப் புகுத்தி நவீன விவசாயங்களில் சில இடங்களில் ஈடுபடுவதும் சரி இவற்றின் நோக்கம் உழைப்புச் சக்தியை வாங்குவதன் மூலம் உபரிமதிப்பைப் பெருக்குவதும், அதில் ஒரு பகுதியை மீண்டும் விரிவாக்கப்பட்ட மறு உற்பத்திக்காக மூலதனமாக்குவதும் இல்லை. விவசாயத்தைப் பழைய நிலையிலேயே நிறுத்திவிட்டு—முதலாளித்துவ உற்பத்தி முறையின் முக்கியமான குணாம்சம் தொடர்ந்து மூலதனமிடுவதும், விவசாயம் செய்வதுமல்ல. உற்பத்தி முறைகளையே மாற்றிக் கொண்டிருப்பதும், அதாவது உற்பத்தி முறையே மறு உற்பத்தி செய்வதாகும்; ஆனால் தற்போது சினிமா, லாரி, இன்னும்பிற சிறுதொழில்கள், லேவாதேவி, வணிகம் ஆகியவற்றில் மூலதனம் இடுவதும்தான் பிரதானப் போக்காக இருக்கிறது. தனது பண்ணையை விரிவாக்குவதன் மூலம் சந்தையை உருவாக்குவதாக இல்லை. பெரும் நிலப்பிரபுக்கள் உபரியைப் பயன்படுத்தும் முறை நிரந்தர மூலதனத்தை (இயந்திரம் இன்னும் பிறவற்றுக்கான செலவை) அதிகரித்து அதன்மூலம் மாறுபடும் மூலதனத்தை (உழைப்புச்சக்திக்

கான செலவை) குறைப்பதாக இல்லை. கிராமப்புறக் குடும்பங்களின் சொத்துடைமையில் 72% வீடு மற்றும் கட்டிட அமைப்புகள், மனைகளுக்கானவையும், வீட்டு உபயோகத்துக்கானவையும், 21.8% கால்நடைகள், வண்டிகள், இன்னும் பிற புராதன வகைகளிலும் உள்ளன. 3.4% மட்டுமே முன்னேறிய நவீன விவசாயக் கருவிகளாக உள்ளன. புதிதாகச் சேரும் உபரியைப் பயன்படுத்தும் முறையைப் பார்த்தாலும் மொத்த செலவில் 19 / நிலம் வாங்கப் பயன்படுத்தப்படுகிறது. நிலத்தை வாங்குவதற்காக செலவு செய்வது ஏற்கனவே கூறியவாறு முதலாளித்துவ உற்பத்தி முறையின் பாற்பட்டது அல்ல. "விவசாயத்தில் முதலீடு செய்வதுடன் இதற்கு சம்பந்தமேயில்லை" (மார்க்ஸ், மூலதனம், தொகுதி 1, பக்கம் 816). 45·2./· கால்நடைகள் வாங்கப் பயன்படுத்தப்படுகிறது. 11·/. மட்டுமே கருவிகள், இயந்திரங்கள், போக்குவரத்துச் சாதனங்கள் போன்றவற்றிற்கு செலவிடப்படுகிறது. இதிலும் முன்னேறிய அறுவடை மற்றும் கதிரடிக்கும் இயந்திரம், விதைப்பு, களைஎடுப்பது, நடவு போன்ற இயந்திரங்களுக்காக அற்ப சொற்பமான அளவு கூட செலவழிப்பதில்லை. பெரும்பாலும் இறவை, (டிராக்டர்) உழவு, மற்றும் வெல்லம், கண்டசாரி தயாரிக்க கரும்பு அறவை (இது முதலாளித்துவ முறையே அல்ல) இயந்திரங்களுக்கு மட்டுமே செலவிடப்படுகிறது. மீதி உபரி தங்கம், நகைகள், பெரிய கட்டிடங்கள், வீட்டுமனைகள், திருமணம் மற்றும் பிற டாம்பீக வாழ்க்கை செலவுகளுக்காகப் போகிறது. மூதலீடு செய்யும் உபரிகூட கொள்ளை லாபமடிக்க உத்திரவாதம் அளிக்கும் வணிகம், போக்குவரத்து (பஸ், லாரி, கார்) லேவாதேவி, பொழுதுபோக்கு (சினிமாத்துறை) போன்றவற்றில்தான் ஈடுபடுத்தப்படுகிறது. நிலவுடமையாளர்களில் பெரும்பான்மையினரான சிறு நடுத்தர விவசாயிகள் குடும்ப மற்றும் விவசாயத் தேவைகளுக்காகவே பெரும்பகுதி உற்பத்தியை பயன்படுத்துகின்றனர்; எஞ்சிய பகுதியையே பண்டமாக மாற்றுகின்றனர். இந்த உற்பத்திக்கு வேண்டிய குடும்ப அல்லது கூலி உழைப்பை ஈடுபடுத்துகின்றனர். ஒரு நிலவுடமையாளர் தம் குடும்பத் தேவைக்குப் போக மீதி உற்பத்தியை சந்தையில் விற்பதாலேயே பண்ட உற்பத்தி மேலோங்கி விட்டதாகவும், கூலி உழைப்பைப் பயன்படுத்துவதாலேயே முதலாளித்துவ உற்பத்திமுறை நிலை நாட்டப்பட்டு விட்டதாகவும் கூறிவிட முடியாது. மேற்கண்ட அடிப்படை குணாம்சங்களைப் பெற்றிருக்க வேண்டும்.

இந்திய விவசாயத்தில் உபரி மதிப்பின் பெரும்பகுதியை மூலதனமாக்குவது, மறு முதலீடு செய்வது, அதன் மூலம் மூலதனத்தைக் குவிப்பது—அதாவது உற்பத்தி முறையை மறு உற்பத்தி செய்யும் விரிவாக்கப்பட்ட மறு உற்பத்தி —என்கிற முறையில் உற்பத்தி நடக்காததால் உழைப்புச்சக்தியை வாங்கும் முறையும் முதலாளித்துவ தன்மையுடையதாக இல்லை. நிலவுடமை பறிமுதல் செய்யப்பட்டு வெளியேற்றப்பட்ட விவசாயி

என்று பேசுவதே தேவையற்றது''(ஏகாதிபத்தியம். ஏகாதிபத்திய வாதிகள் பற்றி லெனின் என்ற தொகுப்பு, பக்கம் 89-90)

ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதிகளது கோட்பாட்டு அடிப்படைகளை பின்வருமாறு தகர்த்தெறிந்தார் லெனின்: ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதிகள் உண்மையான பொருளாதார அடிப்படைகளை ஆய்ந்தறியத் தவறும் அதே வேளையில் அந்நியப் பிராந்தியங்களை அம்மக்களது சித்தத்துக்கு எதிராக ஆக்கிரமிப்பது, தட்டிப் பறிப்பது அதாவது சுயநிர்ணய உரிமையை மீறுவதையும் ஒரு பரந்துவிரிந்த பொருளாதார பிராந்தியத்துக்கு நிதி மூலதன விரிவாக்கம்—பரப்புவதையும் வக்கிரத்தனமாக சமமாக கருதுகின்றனர். ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு மற்றும் விரிவாக்கம் என்ற இவ்விரு போக்குகளையும் லெனின் விளக்கினார். பொருளாதார ரீதியில் ஏகபோக முதலாளித்துவமாகிய ஏகாதிபத்தியம் குறிப்பிட்ட அரசின் உள்நாட்டுச் சந்தையில் மட்டுமல்ல உலகம் முழுவதும் வெளிநாட்டுச் சந்தைகளிலும் முழுமையாக ஏகபோகத்தை அடைய எல்லாப் போட்டிகளையும் ஒழித்துக் கட்ட வேண்டியிருக்கிறது. பொருளாதார ரீதியில் நிதி மூலதனத்தின் சகாப்தத்தில் அந்நிய அரசுகளின் கீழ் கூட இது சாத்தியமே. எதிரிகளை ஒழித்துக் கட்டுவதற்கு பொருளாதார சாதனங்களை பயன்படுத்துவதோடு மட்டும் அவை நிறுத்திக்கொள்வதில்லை. மாறாக, அரசியல்,ஏன் கிரிமினல் குற்ற முறைகளில்கூட தொடர்ந்து இறங்குகிறார்கள்.

இருப்பினும் வெறுமனே பொருளாதார முறைகளில் மட்டும் டிரஸ்டுகள் தமது ஏகபோகத்தை நிறுவ முடியாது என்று நினைப்பது பெருந்தவறாகும். எதிரியின் நிலைச் சார்புநிலை இம்மாதிரியான சுதந்திரத்தை மீறுவதற்கே ஏகாதிபத்தியம் முயலுகிறது, ஏனெனில் அரசியல் ஆக்கிரமிப்பு—கைப்பற்றுதல் எப்பொழுதும் பொருளாதாரக் கைப்பற்றுதல் - ஆக்கிரமிப்பை எளிதானதாகவும் மலிவானதாகவும் (அதிகாரிகளுக்கு லஞ்சமளிப்பது, சலுகைகளை அடைவது சாதகமான சட்டங்களை இயற்றுவது இன்னும் பிற சுலபம்) மிகவும் வசதியானதும் சொற்ப சிரமமுடையதும் ஆகும். —அதாவது பொதுவாக ஏகாதிபத்தியம் ஜனநாயகத்தினிடத்தில் கொடுங்கோன்மையை நிறுவ முயல்வதே போன்றதாகும்.

ஏகாதிபத்தியத்தின் கீழ் சர்வஜனவாக்கெடுப்பும்,எட்டுமணிநேர வேலையும், ஒரு குடியரசும் கூட தர்க்க ரீதியில் தகவானது எனினும், ஏகாதிபத்தியத்துக்கும் ஜனநாயகத்துக்கும் இடையிலான முரண்பாடு இருப்பது போலவும். அதனால் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் சுதந்திரம் சாத்தியமே இல்லை எனவும் ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதிகள் வாதிட்டனர் ஆனால் அவர்கள் ஏகாதிபத்தியத்துக்கும் குடியரசு அமைப்பு முறைக்கும் இடையிலான முரண்பாடு இன்றையகால ஏகபோக முதலாளித்துவத்திற்கும் அரசியல் ஜனநாயகத்துக்கும் இடையில் உள்ள பொதுவான ஒரு முரண்பாடு என்பதை உணரவில்லை. அதாவது

ஏகாதிபத்தியம் பொதுவாக எல்லா அரசியல் ஜனநாயகத்துக்கும் முரணானதாகும் பொருளாதாரத்துக்கும்அரசியலுக்கும் இடையிலான முரண்பாடு ஏன் எழுகிறதென்றும் அவர்கள் உணரவில்லை. ஒருபுறம் அதிகாரிகளுக்கு நேரடியாக லஞ்ச ஊழல் அளிப்பது என்ற வடிவம், மறுபுறம் அரசாங்கத்துக்கும் பங்கு மார்கெட்டுக்கும் இடையிலான ஒரு கூட்டு என்ற வடிவம் ஆகியவற்றின் மூலம் மறைமுகமாக நிச்சயமாக மூலதனம் முதலாளித்துவ அமைப்பில் அதிகாரம் செலுத்துகிறது. இந்த வகையிலே முதலாளித்துவ ஜனநாயகக் குடியரசு தர்க்க ரீதியாக முதலாளித்துவத்துக்கு முரணாக இருக்கிறது. ஏனெனில் 'அதிகாரபூர்வமாக' ஏழையையும் பணக்காரனையும் சமமாக வைக்கிறது.இவ்வாறு முதலாளித்துவப் பொருளாதாரக் கட்டமைவிற்கும் அரசியல் மேற்கட்டுமானத்திற்கும் இடையில் முரண்பாடு இருப்பதைப் போன்றே அதுவே ஏகாதிபத்தியத்துக்கும் குடியரசுக்கும் இடையிலான முரண்பாடாகிறது. ஆனால் சுதந்திரமான போட்டி ஏகபோகமாவதால் இம் முரண்பாடு ஆழமாகி, கூர்மையாகி அரசியல் சுதந்திரமடைவது மேலும் கடினமானதாகிறது. இருப்பினும் நேரடி லஞ்ச ஊழல் மற்றும் அரசாங்கத்துக்கும் பங்கு மாக்கெட்டுக்கும் இடையிலான கூட்டு என்ற பொருளாதார சாதனங்களால் மூலதனம் சர்வ வல்லமையுடன் மறைமுகமாக ஜனநாயக நாட்டில் ஆதிக்கம் செலுத்துவது போன்றே நிதி மூலதனத்தின் சுதந்திரமான லஞ்சஊழல எந்த அரசாங்கங்களையும் அதிகாரிகளையும் வாங்கிவிட முடியும். ஏகாதிபத்தியத்தின் டிரஸ்டுகள் மற்றும் வங்கிகளது எக்கச்சக்கமான செல்வமும் கோடான கோடி நிதி மூலதனமும் அந்நிய நாடுகள் அதாவது அரசியல் ரீதியில் சுதந்திரமான குடியரசுகளிலும் இதே முறைகளில் ஊடுருவி விரிவாக்கமடைய முடியும். டிரஸ்டுகளுக்கெதிராக அவை சட்டமியற்றினாலும், தடை செய்தாலும்—அவை அரசியல் நடவடிக்கைகளே—போலந்து, நார்வே போன்ற நாடுகள் அரசியல் சுதந்திரமடைந்திருந்தாலும் எந்த வடிவத்திலான அரசியல் முறை இருந்தாலும் ஏகாதிபத்திய வல்லரசுகளின் நிதி மூலதனத்தைச் சார்ந்து நிற்க வேண்டியிருக்கின்றன. அல்லது ஆலைகளில் பங்குகள் வாங்குவதைத் தடுத்துவிட முடியாது.

எனவே, '...பேரரசுகளை நிறுவுவதை நோக்கிய ஏகாதிபத்தியப் போக்கு முற்றிலும் சாதிக்கப்படக் கூடியதே. நடைமுறையில் இவ்வாறு அடிக்கடி நிகழவும் செய்கிறது. சுயாதிபத்திய முடைய மற்றும் சுதந்திரமான அரசியல் ரீதியில் சுதந்திரமான—அரசுகளுக்கிடையிலான எகாதிபத்தியக் கூட்டு என்ற வடிவில் இது நடக்கிறது. இத்தகைய கூட்டுகள் சாத்தியமே. இரு நாடுகளின் நிதி மூலதனத்தைப் பொருளாதார ரீதியில் இணைப்பது என்ற வடிவில் மட்டுமின்றி ஒரு ஏகாதிபத்திய யுத்தத்தில் இராணுவ "ஒத்துழைப்பு" என்ற வடிவிலும் இவை ஏற்படுகின்றன தேசியப் போராட்டம், தேசிய ஆயுதமேந்திய எழுச்சி, தேசம் பிரிந்து போவது ஆகியவை முழுமையாக நடந்தேறுகின்றன. ஏகாதிபத்தியத்தின் கீழ் அவை நடைமுறையில் இருக்கவே செய்கின்றன ஜனநாயக உணர்வுகள் பட்டவர்த்தனமாக வெளிப்

பட்டிருப்பதும் நீடிக்கிறது.

எனவே எல்லா வண்ணத்திரிபுவாதிகளும் முதலாளிய அரசியல் மற்றும் சமூகவியலாளர்களும் பிதற்றுவது போன்று 1. நிலவுடமை உறவுகளோ, பணவாடகை செலுத்தும் முதலாளித்துவ குத்தகைமுறையோ 2. பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியோ 3. சுதந்திரமான கூலி உழைப்பாளர்களைக் கொண்ட உற்பத்தி உறவுகளோ வளர்ந்து மேலாண்மை பெற்று இந்திய விவசாயத்தில் முதலாளித்துவ உற்பத்திமுறை நிலை நாட்டப் படவில்லை. மாறாக நிலப்பிரபுத்துவ உற்பத்திமுறையுடன் பிரஷ்யன் ஜங்கர் முறையிலான நிலப்பிரபுத்துவ முதலாளித்துவ பொருளாதாரம் ஆளும் வர்க்கங்களின் தூண்டுதலால் வரம்புக் குட்பட்ட முறையில் தோன்றி வளர்வதும் சேர்ந்து இந்திய விவசாயம் ஒரு அரை நிலப்பிரபுத்துவ நிலையிலேயே நீடிக்கிறது. நிலத்தைப் பயன்படுத்துதல், நீர்ப்பாசன வசதிப் பெருக்கம், வடிகாலும் நிலமீட்பும் இரசாயன உரங்களும் எருக்களும், அமோக விளைச்சல் ரக விதைகளைப் பயன்படுத்துவது, பயிர் பாதுகாப்பு, கால்நடைகளை பயன்படுத்தும் முறை இயந்திர மாக்குவது, உற்பத்தியின் போக்குகள், முதலீடு செய்யும் மூல தனத்தின் மூலங்கள் இவை அனைத்தையும் பருண்மையாக ஆய்ந்தறியும்போது இவையும் முதலாளித்துவ உற்பத்திமுறை இந்திய விவசாயத்தில் மிகுநிலை பெற்றிருப்பதாகக் காட்டவே யில்லை. இவை பற்றி தோழர் கத்தீஃப் அன்சாரியினுடைய ஆய்வின் முடிவுகள் பின்வருமாறு உள்ளது;

**நிலத்தைப் பயன்படுத்துதல்:-** விவசாயத்தில் முதலாளித்துவ உற்பத்திமுறை வளர்வதற்கு முன்தேவை நிலமும் ஒரு பண்டமாக, மூலதனத்தின் ஒரு வழியாக, பணத்தை உருவாக்கும் இயந்திரமாக மாறவேண்டும். இதனால் நிலம் அதிக பட்சம் பயன்படுத்தப்பட வேண்டும். ஆனால் உணவு பற்றாக் குறை பெரும்பாலும் நிலவும், கூலியுழைப்பு அதிகமாகக் கிடைக் கும் நமது நாட்டில் மூலதனப் பற்றாக்குறை காரணமாகவும், முதலாளித்துவ உற்பத்திமுறை வளராததன் காரணமாகவும், பயிரிடப்படக்கூடிய நிலத்தில் கால்பாகநிலம் வீணாகவும், பயிரிடப்படும் பரப்பில் 15% மட்டுமே ஒரு முறைக்கு மேல் சாகுபடி செய்வதாகவும் இருக்கிறது.

**நீர்ப்பாசன வசதிப் பெருக்கம்:-** விவசாயத்தில் முதலாளித்துவ உற்பத்திமுறை வளர்ந்திருப்பின், பாசன வசதிக் கான வாய்ப்புகள் அளவிட முடியாததாக உள்ள நமது நாட்டில் நீர்ப்பாசனத்தைப் பயன்படுத்துவது பன்மடங்கு பெருகியிருக்க வேண்டும். ஆனால் 8.17 கோடி ஹெக்டேர் நிலத்திற்குப் பாசனவசதியளிக்கும் வாய்ப்பிருந்தும் அதில் 3.63 கோடி ஹெக்டேர் நிலத்திற்குத்தான் பாசனமளிக்கப்படுகிறது. இது மட்டுமின்றி நிலத்தின் உற்பத்தித் திறனை உயர்த்த நீர்ப்பாசன வசதியும் [illegible] வடிகால் வசதியும் பெருக்

கப்பட வேண்டும். ஆனால் சரியான வடிகால் வசதி இல்லாத தால் நீர்ப்பாசனமுள்ள பகுதிகளே வெள்ளத்தால் பாதிக்கப்படு வதும், உவர்ப்பு நிலமாவதும், டெல்டாப் பகுதிகளில் பயிர் சுழற்சியேயின்றி புரதான உற்பத்தி முறையே பின்பற்றப்படு வதும் நடக்கிறது. இந்திய விவசாயத்தில் வறட்சியும் வெள்ள மும் அடுத்தடுத்தும்' ஒரே சமயத்தில் அக்கம்பக்கமாகவும் நிலவு வதே தனிச் சிறப்பான அம்சமாக இருக்கிறது.

**இரசாயன உரங்களைப் பயன்படுத்துதல்:-** இந்திய விவசாயத்தில் இரசாயன உரங்களைப் பயன்படுத்துவது 15 ஆண்டுகளில் 16 மடங்கு அதிகரித்திருக்கிறது என்பது உண் மையே; எனினும் விவசாயத்தில் முதலாளித்துவ உற்பத்தி முறை வளர்ந்துள்ள நாடுகளோடு ஒப்பிடும்போது இது அற்ப சொற்பமே. அதாவது சராசரி ஒரு ஹெக்டேருக்கு நெதர் லாந்தில் 610 கிலோவும், பெல்ஜியத்தில் 520 கிலோவும், நியூஜி லாந்தில் 503 கிலோவும், ஜப்பானில் 358 கிலோவும் பயன்படுத் தப்படுகிறது; ஆனால் இந்தியாவில் ஒரு ஹெக்டேருக்கு சராசரி 11.7 கிலோ தான் போடப்படுகிறது; சில மாநிலங்களில் இரண்டு கிலோ அல்லது அதற்கும் கீழான அளவு போடப்படு கின்றது. இந்த நவீன உரங்களும் அந்நிய நாடுகளிலிருந்தே இன்னும் பெருமளவு இறக்குமதி செய்யப்படுகின்றது.

**விவசாயத்திற்கு இயற்கை எருக்களைப் பயன் படுத்துவது:-** மண்ணின் செழிப்புக்கும் கட்டமைப்புக்கும் இரசாயன உரங்கள் அவசியம். ஆனால் அவை மட்டுமே போதாது. சாணமும், மூத்திரமும், பசுந்தாள் உரமும், மீன் உரமும், பிண்ணாக்கும் என்று இயற்கை எருக்களும் பயன் படுத்தப்பட வேண்டும். ஆனால் நமது நாட்டின் இயற்கை உரத்திற்கு பிரதான மூலமாகிய மாட்டுச் சாணத்தில் கிடைக்கக் கூடிய 35,000 டன்னில் 12 600 டன் எரிபொருளாகவும் பிற வழிகளிலும் வீணாகிறது; கிட்டத்தட்ட மூத்திரம் முழுக்கவும் வீணாகிறது. பசுந்தாள் உரம் ஓரளவு பயன்படுத்தப்படினும், இதுவும் மீன் உரம், பிண்ணாக்கு போன்றவை அபூர்வ மாகவே பயன்படுத்தப்படுகின்றன. விஞ்ஞான பூர்வமான விவ சாயத் திட்டமிடுதல் இல்லாததால் நிலத்தின் வளத்தைப் பாது காக்க இவற்றைப் பயன்படுத்தும் முறைகளின்றி வழமையான உற்பத்தி முறையே நீடிக்கிறது.

**அமோக விளைச்சல் ரக விதைகளைப்பயன்படுத்து வது:-** முதலாளித்துவ விவசாய உற்பத்தி முறையின் மற்றொரு அம்சம் புதிய, வீரிய, கலப்பின மற்றும் அமோக விளைச்சல் ரக விதைகளைப் பயன்படுத்தி உற்பத்தி பெருக்குவதாகும். பழைய நாட்டு விதைகள் இரசாயன உரங்களின் உள்ளீடு களுக்கும், நவீன விவசாய முறைக்கும் ஏற்ற விளைச்சலைத்தர முடியாது என்பதால் புதுப்புது ரகங்கள் புகுத்தப்பட வேண்டும்

மீசை உள்ளவர்கள் எல்லாம் கட்டபொம்மனாகிவிட மாட்டார்கள். அதே போன்று எந்த நாட்டிலும் – அரசியல் சுதந்திரமுடைய நாட்டிலும் - நிதி மூலதனம் ஆதிக்கம் செலுத்த முடியும் என்றால் நிதி மூலதனம் நாடுகளது அரசியல் சுதந்திரத்தையோ அந்த மாதிரியான அரசியல் அமைப்பு இருப்பதையோ ஏற்கிறது என்று பொருளல்ல. மாறாக நிதிமூலதனம் மற்றும் ஏகபோகம் ஜனநாயகத்தினிடத்தில் அரசியல் பிற்போக்குத்தனத்தையே விரும்புகிறது. லெனின் ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதிகளை மறுத்துரைத்து இரு வழிகளிலும் ஏகாதிபத்தியம் விரிவடைவதை விளக்கினார். ஒன்று : மேலும் மேலும் விரிந்த பிராந்தியங்களில் நிதி மூலதனத்தின் விரிவாக்கம் – பரப்புதல். மற்றொன்று : கச்சாப் பொருட்களின் மூலாதாரங்களைக் கைப்பற்றுவது. இறுதியாக எதிராளியின் எல்லா தொழில் நிறுவனங்களையும் கைப்பற்றுவதன் மூலம் இது நடக்கிறது. அதாவது வங்கிகள் மூலம் (டிரஸ்டின் உடமையாளர்கள் பங்குகளை வாங்குவதன் மூலம் வங்கியின் உடமையாளர்களாகிறார்கள்) எதிராளியின் கடன் வாய்ப்புகளை டிரஸ்டுகள் வேரறுக்கின்றன. பொருட்களை சப்ளை செய்வது (டிரஸ்டுகளின் உடமையாளர்கள் போக்குவரத்து சாதனங்களின் உடமையாளர்களாக பங்குகளை வாங்குவதன் மூலம் மாறுகிறார்கள்) ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு கோடிக்கணக்கில் செலவிட்டு டிரஸ்டுகள் அடக்க விலைக்கும் கீழே பொருட்களை விற்பதன் மூலம் ஒரு போட்டியாளனை அழித்து அவனது தொழில் நிறுவனங்கள், கச்சாப் பொருட்கள் (சுரங்கங்கள், நிலம் பிற பிற) ஆகியவற்றை விலைக்கு வாங்கிவிடுகிறது இவை ஒரு நாட்டின் நிதிமூலதனம் அரசியல் ரீதியில் சுதந்திரமான மற்றொரு நாட்டின் போட்டியாளனை எப்பொழுதும் வாங்கிவிட முடியும்; தொடர்ந்து இதைச் செய்கின்றது. அரசியல் ஆக்கிரமிப்பின்றி, கைப்பற்றுதலின்றி பொருளாதார ரீதியில் கைப்பற்றுவது முழுக்கவும் சாத்தியமே. இது பரவலாக கையாளப்பட்டும் வருகிறது சான்றாக அர்ஜெண்டினா யதார்த்தத்தில் பிரிட்டனது 'வாணிபக் காலனி'யாகவும் போர்த்துக்கல் யதார்த்தத்தில் பிரிட்டனது ஒரு காப்பு நாடாகவும் இருந்தன. உண்மையில் இவை ஆங்கிலேய வங்கிகள் மீது பொருளாதார சார்பு நிலையிலும் கடனாளியாகவும் இருந்தன பிரிட்டன் அவற்றின் போக்குவரத்து, சுரங்கங்கள், நிலங்கள் இன்னும் பிறவற்றைக் கைப்பற்றி அரசியல் சுதந்திரத்தை மீறாமலே பொருளாதார ரீதியில் அந்நாடுகளைக் கைப்பற்றியது. சுத்தமான பொருளாதாரப் பாதையில் ஆலைகளையும், தொழில்களையும், கச்சாப் பொருள் மூலங்களையும் வாங்கிவிடும் டிரஸ்டுகளின் சக்தியையும் அவற்றின் விரிவாக்கத்தையும் இவை குறிக்கின்றன.

ஏகாதிபத்திய நிதி மூலதனம் அரசியல் ரீதியிலும், கிரிமினல் குற்ற முறையிலும் அந்நியப் பிராந்தியங்களை அவற்றின் மக்களது சித்தத்துக்கு எதிராக சுயநிர்ணய உரிமையை மீறிக் கைப்பற்றுவதன் மூலம் விரிவடைவதும் உண்டு. உலகைப் பங்கீடு செய்வதும், மறுபங்கீடு செய்வதும் ஏகாதிபத்தியங்களின் தனிச்

சிறப்பான குணாம்சங்களில் ஒன்று. தேசிய சுயநிர்ணய உரிமை என்பதன் பொருள் அரசியல் சுதந்திரமாகும். அந்நிய நாடுகளில், பிராந்தியங்களில் அவற்றின் மக்களது சித்தத்துக்கு எதிராக சுய நிர்ணய உரிமையை மீறி ஆக்கிரமிப்பது - நாடு பிடிப்பது. முதலாவது. ஒன்று திரட்டுதல் மற்றும் மையப்படுத்துதல் மூலம் ஏகபோகமும் நிதி மூலதனமுனம் குவிவதும் வளர்வதும் என்ற போக்கு. இது குறிப்பாக முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் நடக்கும் போக்கு. இன்று மேற்கு ஏகாதிபத்திய வட்டத்திற்கும் மேற்கு ஜெர்மனிக்கும். ஜப்பானுக்கும்தான் யாவற்றிலும் கூடுதலாக நிதி மூலதன ஏற்றுமதி நடக்கிறது என்ற உண்மை இந்தப் போக்கையே குறிக்கிறது இரண்டாவது, காலனிய, அரைக் காலனிய, நவீனகாலனிய மற்றும் அரசியல் சுதந்திரமடைந்த பின் தங்கிய நாடுகள் அடங்கிய மூன்றாம் உலகநாடுகளுக்கு மூலதன ஏற்றுமதி இது முதல் வகைப்போக்கைக் காட்டிலும் பல மடங்கு கூடுதலான லாப விகிதமளிக்கக்கூடிய மலிவான கச்சாப் பொருள், மலிவான உழைப்புச் சக்தி மற்றும் சந்தைக்கான நிதி மூலதன ஏற்றுமதி; இது அடக்கி ஒடுக்கப்படும் நாடுகளை நோக்கி நடக்கும் போக்கு. இவ்விரு போக்குகளில் இரண்டாவது போக்குதான் ஏகாதிபத்தியங்களுக்கு கூடுதலான கொள்ளைக்கு வழிவகை செய்கிறது. எனவேதான், "தேசிய சுய நிர்ணய உரிமை என்றால் அரசியல் சுதந்திரம் என்று பொருள். இம்மாதிரியான சுதந்திரத்தை மீறுவதற்கே ஏகாதிபத்தியம் முயலுகிறது. ஏனெனில் அரசியல் ஆக்கிரமிப்பு—கைப்பற்றுதல் அடிக்கடி பொருளாதார ஆக்கிரமிப்பு — கைப்பற்றுதலை எளிதானதாகவும், மலிவானதாகவும் (அதிகாரிகளுக்கு லஞ்சம் அளிப்பது, சலுகைகளைப் பெறுவது, சாதகமான சட்டங்களை இயற்றுவது இன்னும் பிற சுலபம்) மிகவும் வசதியானதாகவும், சொற்ப சிரமமுடையதாகவும் இருக்கிறது அதாவது பொதுவாக ஏகாதிபத்தியம் ஜனநாயகத்தினிடத்தில் கொடுங்கோன்மையை நிறுவ முயலுவதே போன்றதாகும்." (ஏகாதிபத்தியம் மற்றும் ஏகாதிபத்தியவாதிகள் பற்றி லெனின், தொகுப்பு பக். 91)

இக்காரணத்தினால்தான் அரசியல் சுதந்திரம் என்ற பெயரில் ஏகாதிபத்தியம் திட்டமிட்டு ஒடுக்கப்பட்ட நாடுகள் மீது செய்யும் மோசடியை அம்பலப்படுத்த வேண்டுமென்றார் லெனின். "அனைத்து நாடுகளின் பரந்துபட்ட திரளான உழைக்கும் மக்களிடையே, குறிப்பாக பின்தங்கிய நாடுகளின் மக்களிடையே, அரசியல் ரீதியில் சுதந்திரமடைந்த நாடுகள் என்ற மூடுதிரையின் பின்னே, ஆனால் பொருளாதார ரீதியிலும், நிதி விவகாரங்களிலும் ராணுவ ரீதியிலும் முழுக்க முழுக்க ஏகாதிபத்தியங்களைச் சார்ந்துள்ள நாடுகளை உருவாக்க ஏகாதிபத்திய வல்லரசுகள் திட்டமிட்டுச் செய்யும் மோசடியை இடையறாது விளக்கவும் அம்பலப்படுத்தவும், நவீன சர்வதேச சூழ்நிலைகளின் கீழ் பலவீனமான மற்றும் சார்பு நிலை நாடுகள் சோவியத் குடியரசுகளின் ஒன்றியமாக அமைந்தாலொழிய அவற்றின் விமோசனத்துக்கு வேறு வழியில்லை என்பதையும் அவர்களிடம் பிரச்சாரம் செய்ய வேண்டும்". (லெனின், தேசிய மற்றும் காலனியப் பிரச்சனைகள், மூன்று கட்டுரைகள், பக். 27—28).

உற்பத்தி முறையின் கீழ் தொடர்ந்து விரிவாக்கப்பட்ட மறு உற்பத்தியும், உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியும் இருக்குமாதலால் ஏற்ற இறக்கங்களின்றி உற்பத்தித் திறன் அதிகரிக்கும்; ஆனால் இந்தியாவில் ஒட்டு மொத்தமாக உற்பத்தி திறன் அதிகரிப்பு ஓரளவு இருந்திருப்பினும், நிகரவிளைவு எதிரானதாகவும் ஏற்ற இறக்க முடையதாகவும் இருக்கிறது.

**விவசாய முதலீட்டிற்கான மூலங்கள் - கடன்களின் தன்மை :**

இந்திய விவசாயத்தின் பிரதான முதலீட்டு மூலதனமாக இன்னும் வட்டி லேவாதேவி மூலதனமே ஆதிக்கம் செலுத்துகிறது. "மூலதனத்துக்கே உரிய முறைகளைப் பயன்படுத்தி வட்டி லேவாதேவி மூலதனம் சுரண்டுகிறது. ஆனால் முதலாளித்துவ உற்பத்தி முறையை அது பெற்றிருப்பதில்லை.'' மேலும் "........ வட்டி, லேவாதேவி ஆகிய வடிவங்களில் நீண்டகாலம் தொடரும் இதனால் பொருளாதார சீரழிவையும் அரசியல் ஊழலையும் தவிர வேறெதையும் உற்பத்தி செய்ய முடியாது'' என்ற உண்மையினை மார்க்சு காட்டினார். இந்தியாவில் பண்ட உற்பத்தி கட்டுப்படுத்தப்பட்டு, சிறுவிவசாயம் மேலோங்கியுள்ள இடங்களில் விவசாய முதலீட்டிற்கு வட்டி லேவாதேவியையே சார்ந்திருக்க வேண்டியுள்ளது. கிராமப்புற வட்டி லேவா தேவியின் அளவை முழுமையாகக் கணக்கெடுப்பது சிரமம். எனினும் இந்திய ரிசர்வ் வங்கியின் சர்வேபடியே கூட 1956-ல் 900 கோடியாக இருந்த கிராமப்புற வட்டி லேவாதேவியும் கடன் சுமையும் 1964-ல் 3000 கோடியாக உயர்ந்துள்ளது. "வங்கி அமைப்பு முறையின் முழு வளர்ச்சியின் வாயிலாகத்தான் மூலதனத்தின் சமூகத்தன்மை முதலில் ஊக்குவிக்கப்படுகிறது; முழுமையாக உருவம் பெறுகிறது'' என்றார் மார்க்சு. ஆனால் வெறுமனே வட்டி லேவாதேவியினிடத்தில், வங்கி மூலதனம் வந்தால் மட்டுமே போதாது, முதலாளித்துவ உற்பத்தி முறைக்கான முதலீடாகாது. "கடன் பெறும் நபர்கள், வர்க்கங்கள் அல்லது சூழ்நிலைகளினுடைய உறவைப் பொறுத்து, முதலாளித்துவ உற்பத்தி முறைக்குப் பொருத்தமற்றதாக இருக்கும் அர்த்தத்தில் வட்டி தரும் மூலதனம் (வங்கி மூலதனம்—நாம் குறிப்பிட்டது) வட்டி லேவாதேவி மூலதனத்தின் வடிவத்தையே தக்கவைத்துக் கொண்டிருக்கும்—அடகுக் கடையில் கடன் வாங்குவது போன்று தனிநபர் தேவையின் விளைவாக இருப்பது; ஆடம்பரச் செலவுக்காக பணக்கார ஊதாரியால் பணம் கடன் வாங்குவது; உடனடி உற்பத்தியாளன், உற்பத்திச் சாதனங்களின் சொந்த உடமையாளன் என்கிற முறையில் இன்னும் நீடிக்கும் ஒரு சிறு விவசாயி அல்லது கைவினையாளர் போன்றவர்களாகிய முதலாளித்துவமல்லாத உற்பத்தியாளர்களானவர்கள் பணத்தை கடனாகப் பெறுவது; இறுதியாக, சுயவேலை வாய்ப்பிற்கான உற்பத்தியாளர்களை ஒத்த வகையில் சிறு அளவினதாக இயங்கு

பவர்கள் போன்ற முதலாளிய உற்பத்தியாளர் பணத்தைக் கடனாகப் பெறுவது'' (மார்க்சு, மூலதனம், தொகுதிIII, 'முதலாளித்துவத்திற்கு முந்திய சமூக பொருளாதார படிவங்கள்', பக்கம் 167-ல் மேற்கோள் காட்டியுள்ளபடி).

கூட்டுறவு வங்கிகள், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கோடிக்கணக்கில் அளிக்கப்பட்ட விவசாயக் கடன்கள், வட்டி லேவாதேவிக் கடனின் மறுவடிவம் மட்டுமே ஆகும். அவ்வாறு அளிக்கப்பட்ட கடனில் ஒரு பகுதியாவது திருமணம், வீடுகட்டுதல் இன்னும் பிற விவசாய முதலீடு அல்லாத தேவைகளுக்காக செலவு செய்யப்பட்டதும், விவசாயத்தில் முதலீடு செய்யப்பட்டதும் உபரி மதிப்பை, உபரி லாபத்தைத் தராததால் முதல் சுற்று பெற்ற கடனே திருப்பப்படாமல் தள்ளுபடி செய்யும்படி விவசாயிகள் போராடுவதும் பழைய நிலபிரபுத்துவ உற்பத்தி முறை நீடிப்பதையே காட்டுகின்றன. மற்றெல்லா அம்சங்களையும் விட இந்த அம்சம் மிகவும் தெட்டத் தெளிவாக இந்திய விவசாயத்தில் முதலாளித்துவ உற்பத்தி மேலோங்கி இருப்பதாகக் கூறும்திரிபுவாதிகள், முதலாளிய அரசியல் மற்றும் சமூகவியலாளர்களது பிதற்றலை அம்பலப்படுத்தி விடுகிறது.

இவ்வாறு எந்த கோணத்திலிருந்தும், எந்த அம்சத்தை எடுத்துக் கொண்டும் யதார்த்த பூர்வமாக மார்க்சிய- லெனினிய அடிப்படையில் ஆய்ந்தறியும்போது இந்திய விவசாயத்தில் நிலப்பிரபுத்துவ உற்பத்திமுறையே மேலோங்கியிருப்பதை அறிய முடிகிறது.

ஏகாதிபத்தியங்களின் சுரண்டலுக்கு இந்திய நிலப்பிரபுத்துவ வர்க்கம் பிரதான சமூக அடித்தளமாகும். நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவுகளைக் கட்டிக் காப்பதன் மூலம் தேசிய முதலாளித்துவ வளர்ச்சியும் தேசியப் பொருளாதாரமும் தேசிய உணர்வுகளும் வளர்வதைத் தடுத்து முடமாக்குகிறது; மலிவான உழைப்புச் சக்தியையும் கச்சாப் பொருளையும் பெறுவதன் மூலம் உபரிமதிப்பைக் கொள்ளையிடுவதற்கும் இது அவசியமாகிறது. நிலப்பிரபுத்துவம் ஏகாதிபத்தியம் மற்றும் தரகு — அதிகார வர்க்க முதலாளித்துவம், ஆகியவற்றின் கொள்கை இதுவே. ஆனால் ஏற்கனவே விளக்கப்பட்ட மூன்று காரணங்களுக்காக — சீர்திருத்தங்களின் மூலமே மக்கள் எழுச்சியைத் திசை திருப்பி விடுவது, மலிவான தேவையான விவசாயக் கச்சாப் பொருட்கள் ஏராளமாக வேண்டியிருப்பது, ஏகாதிபத்தியங்கள் மற்றும் தரகு-அதிகார வர்க்க முதலாளித்துவத்தின் உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை ஆகியவற்றுக்காக—நிலப்பிரபுத்துவ உடமை உறவுகளைப் பாதிக்காமல் அப்படியே பேணிக்காக்கும் அதே வேளையில் அதை மேலும் கெட்டிப்படுத்தும் நோக்கத்துடன் கூடிய சீர்திருத்தங்

என்றும் கூறிக்கொள்கின்றனர்.'' (லெனின்; மூன்று கட்டுரைகள், தேசிய மற்றும் காலனியப் பிரச்னைகள் பற்றி, பீகிங் வெளியீடு, ஆங். பக். 32—33)

மக்களுடைய போராட்டங்கள் மேலும் மேலும் புரட்சிகர மானதாக வளரும்பொழுது, அவற்றை திசை திருப்ப ஏகாதிபத்தியவாதிகள் தமது அடிவருடி நிறுவனங்கள் மூலம் (தரகு முதலாளிகள், நிலப்பிரபுக்களது அமைப்புகள்) முயலுகின்றனர். தேசியமுதலாளிகள் கீழுள்ள இயக்கங்கள் கூட மக்களுடைய போராட்டங்கள் வளர்வதைக் கண்டு ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்து கொள்கின்றன. ஏகாதிபத்தியத்தையும், முதலாளித்துவத்துக்கு முந்திய உற்பத்தி முறைகளையும் தூக்கியெறிவதன் மூலம் மட்டுமே உண்மையான அரசியல் பொருளாதார விடுதலையைக் காலனிகள் பெற முடியும். சீர்திருத்தங்கள் மூலம் இதைச் சாதிப்பதென்ற பேச்சுக்கே இடமில்லை. மாறாக ஏகாதிபத்திய ஆதரவு அல்லது ஏகாதிபத்திய முதலாளிகளாலேயே துவக்கப்பட்ட போலி விடுதலை இயக்கங்கள் மூலம் விடுதலை பெற்றுவிட முடியும், பெறப்பட்டிருக்கிறது என்று சொல்வது ஏகாதிபத்தியம் தனது பிரதான குணாம்சங்களில் ஒன்றான ஆதிக்கத்தைத்தான்—அரசியல் உரிமையை அல்ல—நடைமுறைப்படுத்துகிறது என்பதை மறுப்பதாகும்.

ஆனால் ஏகாதிபத்தியங்களின் கபடத்தனம், மோசடி, பித்தலாட்டங்கள், தரகு முதலாளிகளின் துரோகத்தனம், தேசிய முதலாளிகளின் சமரச சரணடைவு மற்றும் ஊசலாட்டம், தேசிய விடுதலை இயக்கத்தின் இடர்பாடுகள், துன்ப துயரங்கள் இவையனைத்தும் அரசியல் ஜனநாயம், அரசியல் சுதந்திரம் மற்றும் தேசிய சுயநிர்ணய உரிமை ஆகியவற்றை ஏகாதிபத்தியம் இருக்கும் வரை அடைய முடியாது, அவற்றுக்காகப் போராடக் கூடாது எனக் காட்டுவதாக சொல்வது முட்டாள்தனமான ஏகாதிபத்திய அடிவருடி வேலையாகும். ''பொதுவாக மூலதனத்தின் ஆதிக்கம் என்கிற முறையில் நிதி மூலதனத்தின் ஆதிக்கத்தை அரசியல்துறையில் மேற்கொள்ளப்படும் எத்தகைய சீர்திருத்தத்தாலும் ஒழித்துவிட முடியாது. சுயநிர்ணய உரிமை என்பது முற்றும் முழுதாக இந்த வகைப்பட்டதேயாகும்''. ''தன்னை விரிவுபடுத்திக் கொள்ள முயற்சிக்கும் நிதி மூலதனமானது—மிக மிக சுதந்திரமான, மிகமிக ஜனநாயகமான மற்றும் குடியரசான அரசாங்கத்தையும், எந்த ஒரு நாட்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளையும் அந்த நாடு எவ்வளவுதான் 'சுதந்திரமானதாக' இருந்தாலும்—சர்வ சுதந்திரமாக லஞ்சத்தின் மூலம் விலைக்கு வாங்கிவிடும்'', ''எவ்வாறாயினும் மிகவும் சுதந்திரமான, மிகவும் விரிவான, மிகவும் குறிப்பான வர்க்க ஒடுக்குமுறை மற்றும் வர்க்கப் போராட்டத்தின் வடிவம் என்கிற ரீதியில் அரசியல் ஜனநாயகத்தின் முக்கியத்துவத்தை நிதிமூலதனத்தின் ஆதிக்கம் ஒழித்துவிடுவது இல்லை. எனவே முதலாளித்துவத்தின் கீழ் அரசியல் ஜனநாயகத்தின் கோரிக்கைகளில் ஒன்றை பொருளாதார ரீதியில் ''சாதிப்பது சாத்தியமற்றது''

என்ற வாதங்கள் அனைத்தும் முதலாளித்துவத்தின் பொதுவான
மற்றும் அடிப்படையான உறவுகள் மற்றும் பொதுவில் அரசியல்
ஜனநாயகம் பற்றிய தத்துவார்த்த ரீதியில பிழையான வரை
யறுப்புகளுக்காகவே தரங்குறைந்து விடுகின்றன''. (லெனின்,
மேற்படி நூல், பக். 3-4).

இங்கே இரண்டு உண்மைகளை வலியுறுத்தியாக வேண்டும்.
முதலாவதாக, லெனினது வரையறுப்புப்படி அரசியல் ரீதியில்
சுதந்திரம் பெற்ற நாடுகளைக் கூட ஏகாதிபத்தியங்கள் தங்களது
நிதி மூலதனத்தைக் கொண்டு முழுக்கவும் ஆதிக்கம் செலுத்த
முடியும் அரசியல் ஜனநாயகம் என்ற அரங்கில் எந்தவகையான
சீர்திருத்தங்கள் செய்தாலும் அது ஏகாதிபத்தியத்தியங்களின்
நிதி மூலதன ஆதிக்கத்திற்கு எள்ளளவும் தடையாக இருப்ப
தில்லை. அரசியல் சுதந்திரத்தை வென்றெடுத்த நாடுகளைக்கூட
ஏகாதிபத்தியங்கள் இந்த வகையிலேயே நவீன காலனி அல்லது
அரைக்காலனி நாடுகளாக மாற்றிவிட முடியும். எனவே, ஏகாதி
பத்தியத்தின் பிரதான சமூக அடித்தளமாக உள்ள முதலாளித்
துவத்துக்கு முந்திய உற்பத்தி முறைகளை முற்றாக தூக்கியெறி
யும் போதுதான் இதைத் தடுப்பது சாத்தியமாகும். அவ்வாறில்
லாமல் அதை ஒருபுறம் தக்க வைத்துக்கொண்டே முழுமையான,
நிரந்தரமான அரசியல் சுதந்திரம் பெற்றதாக சொல்லிக்கொண்டு
சுயதிருப்தி அடைவது தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்வ
தாகும். அத்துடன் ஏகாதிபத்திய நிதி மூலதன நிதிக் கொடுங்
கோன்மையையும் ஏகாதிபத்தியத்தின் இயல்பான, உலகைப்
பிரதேச ரீதியாக மறு பங்கீடு செய்வது என்ற தன்மையையும்
மூடிமறைப்பதுமாகும். இரண்டாவதாக, வர்க்கப் போராட்டம்,
வர்க்க ஒடுக்குமுறையின் மிகவும் சுதந்திரமான, மிகவும் விரிவான,
மிகவும் தனித்தன்மை வாய்ந்ததான **வடிவமாக** அரசியல் ஜன
நாயகத்துக்கான போராட்டத்தை நிதி மூலதன ஆதிக்கம்
அழித்துவிடுவதில்லை என்ற லெனினது முக்கியத்துவம் வாய்ந்த
போதனை. ''தேசங்களின் சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கை
மட்டுமின்றி அரசியல்ஜனநாயகத்தின் அனைத்துக் கோரிக்கை
களும் ஏகாதிபத்தியத்தின் கீழ்''அடையப் பெறுவது சாத்தியமே''
முழுமையற்றதாக, வெட்டிக் குறுக்கப்பட்டதாக, மிகவும் விதி
விலக்காகவே (உதாரணமாக 1905-இல் நார்வே ஸ்வீடனிலிருந்து
பிரிந்தது) இவை இருந்தாலும் கூட புரட்சிகர சமூக—ஜனநாயக
வாதிகள் அனைவராலும் முன்வைக்கப்படுகின்ற காலனிகள் உட
னடியாக விடுதலை பெறவேண்டும் என்ற கோரிக்கையும்கூட ஏகா
திபத்தியத்தின் கீழ் தொடர்ச்சியான, அடுத்தடுத்த புரட்சிகளின்றி
அடையப் பெறுவது சாத்தியமில்லை. ஆனால் இந்தக் கோரிக்கை
கள் அனைத்துக்காகவும் உடனடியாக மற்றும் தீர்மானகரமான
போராட்டத்தை நடத்துவதிலிருந்து சமூக- ஜனநாயகம் விலகி
யிருக்க வேண்டும் என்பதை இது குறிக்காது. ஏனெனில் அவ்வாறு
விலகியிருப்பது என்பது முதலாளித்துவ வர்க்கத்துக்கும் பிற்
போக்குக்குமே சாதமாக அமையும். மாறாக, இக் கோரிக்கை
கள் அனைத்தையும் உருவாக்கி முன்வைக்க வேண்டுவது அவசி
யம் என்பதையே இது குறிக்கிறது. இவற்றை சீர்திருத்த வழி

உறவுகளின் எல்லைக்குள்ளே அதைக்கட்டிக் காக்கும் வகையில். நிலப்பிரபுக்களின் அந்தஸ்து, அதிகாரம், சலுகைகள், உரிமைகள் கௌரவம் இவைகள் பாதிக்கப்படாமல் அவைகளைப் பாதுகாத்து உறுதிப்படுத்தும் அதே வேளையில நிலப்பிரபுக்களையும் பணக்கார விவசாயிகளையும் ஜங்கர் நிலப்பிரபுத்துவ முதலாளிகளாக்க நவீன உற்பத்தி முறைகளைப் புகுத்தும் பாதையாகும். உண்மையான மார்க்சிய—லெனினியவாதிகளின் குறிக்கோள் பழைய நிலப்பிரபுத்துவ சொத்துடைமை வடிவங்களையும், உறவுகளையும் மட்டுமல்லாது புதிதாக வளரும் இந்த அரை நிலப்பிரபுத்துவக் கட்டமைவு முழுவதையும் சேர்த்துத் தூக்கியெறியும் விவசாயிகளின் விவசாயப் புரட்சியை நிறைவேற்றுவதுதானே ஒழிய பரந்துபட்ட மக்களுக்கு குறிப்பாக விவசாயிகளுக்குத் துன்பதுயரங்களும், வேதனைகளும் இடர்பாடுகளும் மிக்க மிக மிக மந்தமான பரிணாம வளர்ச்சியை ஆதரிப்பதோ அதன் மூலமே இந்திய விவசாயத்தில் முதலாளித்துவ உற்பத்தி முறையை அடைந்து விடலாம் என்று ஏங்கி நிற்பதோ அல்ல. ஏனெனில் பிரஷ்யன்—ஜங்கர் முறையென்பது நிலப்பிரபுத்துவ வகையைச் சேர்ந்த முதலாளித்துவப் பரிணாம வளர்ச்சியாகும். பாட்டாளி வர்க்கத்தின் முன்னுள்ள பிரச்சினை, நிலப்பிரபுத்துவ வகையிலான முதலாளித்துவப் பரிணாம வளர்ச்சியை ஆதரிப்பதா? விவசாயிகள் வகையிலான முதலாளித்துவ பரிணாம வளர்ச்சிக்காக புரட்சி செய்வதா என்பதேயாகும்.

''...உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கு (சமுதாய, முன்னேற்றத்துக்கான அதி உயர்ந்த அளவுகோல் இது) வழிவகை செய்வதற்கு நிலப்பிரபுத்துவ வகையைச் சேர்ந்த முதலாளித்துவப் பரிணாமத்தை நாம் ஆதரிக்கக் கூடாது, விவசாயிகளின் வகையைச் சேர்ந்த முதலாளித்துவப் பரிணாமத்தையே நாம் ஆதரிக்க வேண்டும். முதலாவது வகையானது அடிமைத்தனத்தையும் பண்ணை அடிமைத் தனத்தையும் (முதலாளித்துவ வழிகளில் மாற்றி அமைக்கப்பட்டு) அதிகபட்சமாகப் பாதுகாப்பதை, உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி மிக மிக மெதுவாக முன்னேறுவதை, முதலாளித்துவத்தின் வளர்ச்சி தடுக்கப்படுவதைக் குறிக்கிறது; பரந்துபட்ட திரளான விவசாயிகளுக்கு, இதன் விளைவாக பாட்டாளி வர்க்கத்துக்துக்கும், எல்லையற்ற பெருமளவு துன்பத்தையும், வறுமையும், சுரண்டலையும் ஒடுக்கு முறையும் குறிப்பதாகிறது. இரண்டாவது வகையானது, உற்பத்தி சக்திகளின் அதி உயர்ந்த பட்சஅளவு விரைவான வளர்ச்சியையும் (பண்ட உற்பத்தியின் கீழ்) விவசாயிகளுக்கு மிக அதிக பட்ச அளவு சாத்தியமான நல்ல சூழ்நிலைகளையும் குறிக்கிறது. சந்தர்ப்பவாதிகள் நினைப்பது போல மிதவாத முதலாளிகளை ஆதரிப்பதைக் கடமையாக ஏற்பதில் அல்ல ஆனால் போரிடும் விவசாயிகளை ஆதரிப்பதைக் கடமையாக ஏற்பதிலேயே—இரஷ்ய முதலாளித்துவப் புரட்சியில் சமூக ஜனநாயகத்தின் போர்த்தந்திரம் தீர்மானிக்கப்படுகிறது'' (மேற்படி நூல், பக் 29).

எனவே இந்தியப் புரட்சியாளர்களது பணி நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவுகள் அனைத்தையும்—தற்போது வளரும் பிரஷ்யன் ஜங்கர் நிலப்பிரபுத்துவ பொருளாதாரம் உட்பட—வேரோடு பிடுங்கி எறியும் விவசாயிகள் புரட்சியே ஆகும். இதைத் தூக்கியெறிவதில்தான் ஏகாதிபத்தியத்தையும் தூக்கியெறிவதற்கான அடிப்படை இருக்கிறது. ஏகாதிபத்தியம், தரகு—அதிகார வர்க்க முதலாளித்துவம், நிலப்பிரபுத்துவம் ஆகியவைதான் இந்நாட்டின் உற்பத்தி சக்திகளை விலங்கிட்டு வைத்துள்ளன; மக்களுக்கு சமுதாய அழிவை ஏற்படுத்தி உள்ளன. இந்த அமைப்பின் அரசியல் மற்றும் கலாச்சார பின்தங்கிய நிலையை அப்படியே வைத்திருக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்களைக் கொள்ளையடிப்பதன் மூலம் இந்தியத் தொழில்துறையில் மூலதனம் உருவாவதைத் தடுப்பது ஏகாதிபத்தியமே; தொழில் மயமாவதை இது தடுக்கிறது; மூலப்பொருட்களுக்கும், மலிவான உழைப்புக்கும் ஊற்று மூலமாக இந்தியாவை ஏகாதிபத்தியம் வைத்திருக்கிறது. வெளிநாடுகளிலுள்ள தமது எஜமானர்களுக்கு இந்திய செல்வத்தை ஏற்றிச் செல்லும் ஊர்தியாக தரகு முதலாளித்துவம் விளங்குகிறது; அதே வேளையில் இந்திய மக்கள் மீது இது அரசியல், பொருளாதார, இராணுவ கலாச்சாரக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தி அடக்கு முறையைத் தொடர்ந்து வைத்துள்ளது. நிலப்பிரபுத்துவ உறவுகள்தான் வேளாண்மையில் உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் தடை செய்கின்றன; மக்களின் சமூக உணர்வுகளைத் தடைபடுத்துகின்றன. இந்த நிலப்பிரபுத்துவம்தான் அந்நிய நிதிமூலதனம் மற்றும் அதிகார மூலதனத்தின் அடக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் அடித்தளமாக விளங்குகிறது. எனவே நிலப்பிரபுத்துவத்தை நொறுக்குவது உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி மற்றும் நமது சமூகததின் பொருளாதார, அரசியல், கலாச்சார வாழ்க்கையில் ஜனநாயகமயமாவதற்கு முன் தேவையாகியுள்ளது. நிலப்பிரபுத்துவமானது ஏகாதிபததியத்துடனும் தரகு முதலாளித்துவத்துடனும் பிரிக்க முடியாதவாறு பிணைந்திருப்பதால் நிலப்பிரபுத்துவத்திற்கு எதிரான போராட்டம் ஏகாதிபத்திய, அதிகார வர்கக முதலாளித்துவ சுரண்டலுக்கு எதிரான போராட்டத்துடன் பிரிக்க முடியாதவாறு பின்னிப் பிணைந்துள்ளது.

—x—

# 7. ஏகாதிபத்தியம் பற்றிய லெனினியக் கோட்பாடுகளை எதிர்க்கப் புறப்பட்டுள்ள ஏகாதிபத்திய ஏவலர்கள். ஏகாதிபத்தியங்கள் சைவப்புலியாகி விட்டனவாம்!

---

திடீரென்று சோசலிசத்தின் சித்தாந்த வாதியாக அவதரித்த ஸ்ரீரிங்கும் அவரது சிஷ்ய கோடிகளும் போன்று இன்று பல முதலாளித்துவ சமூக வியலாளர்கள் 'மார்க்சிய-லெனினியத்தின் மிக முன்னேறிய கோட்பாட்டு வாதிகளாக' அவதரித்துள்ளனர். குறிப்பாக ஏகாதிபத்தியக் கட்டமைவு குறித்து பல புதிய அரசியல்–பொருளாதார கோட்பாட்டு அடிப்படைகளையும், முடிவுகளையும் சரஞ்சரமாக வெளியிட்டுவரும் எத்தியோப்பியாவிலுள்ள சமீர் அமீனையும் அவரது சிஷ்ய கோடிகளையும் தான் இங்கு குறிப்பிடுகிறோம். ஏகாதிபத்திய உலக கட்டமைவு பற்றிய ஏற்கனவேயுள்ள மார்க்சிய-லெனினியக் கோட்பாடுகளின் பற்றாக்குறை பற்றிய புலம்பல் என்னும் பீடிகையுடன் இந்த முதலாளித்துவ சமூகவியலாளர்கள் துவங்குகிறார்கள். அதாவது ஏகாதிபத்தியம் பற்றிய முந்திய மார்க்சிய-லெனினியக் கோட்பாடுகள் அனைத்தும் கால வரம்புகளுக்குள் நின்று போய்விட்டன. மாறிய, புதிய புறவயமான நிலைமைகளின் காரணமாக—இரண்டாவது உலகப் போருக்குப் பின் ஏகாதிபத்தியம் ஒரு புதிய இடைக் கட்டத்தில் நுழைந்திருப்பதை ஒட்டி—தீர்க்கப்பட வேண்டிய பல புதிய பிரச்சினைகளை புதிய கோணத்திலிருந்து எழுப்புவதாக கூறுகின்றனர். அவற்றை பருண்மையாக ஆய்வு செய்ய முயல்வதாகவும், மார்க்சிய-லெனினியத்தையே வளர்ப்பதாகவும் கூறிக்கொள்கின்றனர். இவ்வாறு முன்னிலும் பன்மடங்கு அபாயகரமான கபடவேடம் தரித்து பாட்டாளிவர்க்க இயக்கத்தை உள்ளிருந்தே பிளவுபடுத்த கோட்பாடு மற்றும் சித்தாந்த ரீதியாக ஊடுருவுவது அவர்களுக்கு எளிது; அவசியமானது. ஏனெனில் இதே முகாந்

திரத்தில் மார்க்சிய-லெனினிய அமைப்புகளிலுள்ள குட்டி முதலாளியப் பிரிவினரை வென்றெடுப்பதும், புரட்சியாளர்களை இயந்திரமுறையில் காப்பியடிப்பவர்களாகச் சாடுவதும், அவர்களது நிலப்பாடுகளைப் பழைமைவாத அல்லது பாரம்பர்ய மார்க்சிய—லெனினியமென்று நிராகரிப்பதும், இவற்றினாலெல்லாம் நிலைமைகளைக் காரணம் காட்டி பகுதியாகவோ முழுமையாகவோ மார்க்சிய—லெனினியத்தை காலாவதியாகிவிட்டதாக எதிர்ப்பதும் அவர்களது பணியும் நோக்கமுமாக இருக்கிறது.

இன்றைய சர்வதேச நிலைமைகளையும், ஏகாதிபத்தியக் கட்டமைவின் அரசியல், பொருளாதாரத்தையும் ஆய்ந்தறியும் கோட்பாட்டு முடிவுகளாக மாவோவின் மகத்தான பங்களிப்பான மூன்றுலகக் கோட்பாட்டைக் கொள்கிறோம். அதுவே ஏகாதிபத்திய கட்டமைவு பற்றிய லெனினிய ஆய்வுரைகளின் தொடர்ச்சியாகும். ஆனால் இதற்கு மாறாக முதலாளித்துவ சமூகவியலாளர்கள் ஏகாதிபத்திய கட்டமைவுபற்றி ஆய்ந்தறிவதற்காக வேறுசில அடிப்படைகளை வகுத்துக்கொண்டுள்ளனர். இவற்றிலிருந்து மூன்றுலகக் கோட்பாட்டிற்கு முரணான சர்வதேசிய நிலைமைகள் பற்றிய கணிப்பிற்கும், மார்க்சிய—லெனினியக் கட்சியின் நிலைப்பாடுகளுக்கு முரணான தேசிய நிலைமைகள் பற்றிய கணிப்பிற்கும் வருகின்றனர். ஏகாதிபத்திய கட்டமைவுபற்றியும் அவர்களது. அர்த்தத்தில் மூன்றாம் உலக நாடுகள் பற்றியும் முதலாளித்துவ சமூகவியலாளர்களிடையே சில கருத்துவேறுபாடுகள் நிலவினாலும், அவற்றை ஆய்ந்தறிவதற்கான அடிப்படைகளாக, கருதுகோள்களாக சமீர் அமீன் வளர்த்தெடுத்துள்ள பால்சுவீசி, பால்பாரன் மற்றும் ஃபிராங் ஆகியோரது 'ஏற்ற தாழ்வான பின்தங்கிய வளர்ச்சிமுறை' என்ற கோட்பாடுகளையே அனைவரும் ஏற்கின்றனர். 'பின்தங்கிய வளர்ச்சிமுறை' பற்றிய சமீர் அமீனின் மற்றும் அவரது முன்னோடிகளின் கருதுகோள்களை எவ்வாறு மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்திற்கு எதிரானவை என்பதை நிலைநாட்ட வேண்டியுள்ளது. முதலாளித்துவ உற்பத்தி முறைக்கு முந்தியதாக மூலதன உருவாக்கத்துக்கே முன் நிபந்தனையாக இருந்த புராதன திரட்சியை, தற்போதைய, நிகழ்காலத்திய ஒரு குணாம்சமாக சமீர் அமீன் கொள்கிறார். மூலதனத் திரட்சி ஏற்பட்டு அது வாழ்விற்கான தேவைகள், மூலப் பொருட்கள், கருவிகள் ஆகிய உற்பத்திக்கான புறச்சூழ்நிலைகளைத் தோற்றுவித்தது அதனையின் அவற்றை இழந்த தொழிலாளர்களுக்கு வழங்கியது. மூலதனத்தின் ஆதி முதல் உருவாக்குதல் பற்றி என்ற முதலாளித்துவப் பொருளாதாரவாதிகளின் பழைய காலாவதியாகிப் போன கோட்பாட்டையே இதன் மூலம் அவர் புதுப்பிக்க முயல்கிறார். மூலதனத்தின் ஆதி முதல் உருவாக்கம் பற்றி இவ்வாறு கருதுவது முட்டாள்தனமானது; மார்க்சிய விரோதமானது.

உற்பத்திச் சாதனங்களிடமிருந்து உழைப்பாளர்களையும், உழைப்பாளர்களிடமிருந்து உற்பத்திச் சாதனங்களையும் விடுவிப்பது என்ற இரட்டை அர்த்தத்தில் நடந்ததே புராதனத்

திரட்சி; வரலாறு பூர்வமாக இது எவ்வாறு நடந்தது என்ற மார்க்சின் வரையறைகளைப் புறக்கணித்து பழைய கட்டத்துக்கே சென்று முதலாளித்துவ அரசியல் மற்றும் சமூகவியலாளர்கள் வெறுக்கத்தக்க கோமாளித்தனமான கோட்பாடாகிய மூலதனத்தின் புராதனத்திரட்சி என்ற வரையறையைத் தற்போது முன் வைக்கின்றனர். மூலதனத்தின் புராதனத் திரட்சி தற்போது உலக அளவில் நடைபெறுவதாகவும், மார்க்ஸ், லெனினது கோட்பாடுகள் குறுகிய கால மற்றும் கள எல்லைக்குட்பட்டவை என்றும் அவர்கள் கூறுகின்றனர். ஏகாதிபத்திய உலகக் கட்டமைவில் ஏகாதிபத்திய நாடுகளுக்கும் மூன்றாம் உலக நாடுகளுக்கும் இடையே உள்மயமாதல் மற்றும் உற்பத்தி முறை குலைவு மூலமாக உலகச் சந்தையில் சமனற்ற பரிமாற்றம் மற்றும் அவைகளுக்கிடையிலான சமனற்ற தொழில்நுட்ப சிறப்புத் தன்மை, சமனற்ற உற்பத்திமுறை ஆகியவற்றின் வளர்ச்சியால், செயல்முறையில் ஏகாதிபத்திய நாடுகளின் முதலாளித்துவத்துக்கான தொடர்ச்சியான, நிரந்தரமான, புராதனத் திரட்சி முடிவின்றி நடப்பதாக வாதிடுகின்றனர். இவர்களது இந்தக் கோட்பாடுகள் ஏகாதிபத்தியத்தின் தனிச்சிறப்பான குணாம்சங்களுக்குப் பதில் பொதுவான, முந்திய சகாப்தத்திற்கான முதலாளித்துவ குணாம்சங்களை முன்னிறுத்துகின்றன. அதாவது ஏகாதிபத்திய உலகக் கட்டமைவின் பொருளாதாரத்தில் ஒரு தீர்மானகரமான பாத்திரமாற்றும் ஏகபோகத் தன்மையின் இடத்தில் போட்டி முதலாளித்துவத்தையும், ஒரு நிதிக் கொடுங்கோன்மையாகிய—ஆலை மூலதனமும் வங்கி மூலதனமும் இணைந்து உருவாகிய—நிதி மூலதனத்தின் இடத்தில் வெறுமனே ஆலை மூலதனத்தையும், மிகச் சிறப்பான அதி முக்கியத்துவமுடைய வகையில் உள்ள நிதி மூலதன ஏற்றுமதியின் இடத்தில் பரிவர்த்தனைப் பண்ட ஏற்றுமதியையும், ஏகாதிபத்தியம் ஒட்டுண்ணித்தனமும் அழிவும் மிக்கது என்ற வரையறையின் இடத்தில் ஏகாதிபத்தியம் முடிவின்றி தொடர்ச்சியாக வளரும், வாழும் என்ற வரையறையையும், ஏகாதிபத்தியம் நாடுகளைக் கூறுபோடுவதும், மறு கூறுபோடுவதுமான யுத்தமேற்றுப், ஆக்கிரமிப்பு ஆதிக்க வெறியும் கொண்டது என்கிற தன்மையின் இடத்தில் ஏகாதிபத்திய சமாதானமான பொருளாதாரப் போட்டியும் ஆதிக்கமுமே கொண்டது என்ற தன்மையையும் முன்வைக்கின்றனர். இவை பாரதூரமான தவறுகளாகும். நிதி மூலதனம், நிதிக் கொடுங்கோன்மை, ஏகபோகம், நிதி மூலதன ஏற்றுமதி, நாடுகளைக் கைப்பற்றுவது, அதற்கான ஏகாதிபத்தியப்போர் அழிவும் ஒட்டுண்ணித் தன்மை ஆகிய ஏகாதிபத்திய குணாம்சங்களை மூடி மறைப்பதன் மூலம் ஏகாதிபத்தியங்களை சைவப் புலியாக அவர்கள் சித்தரிக்கின்றனர். ஏகாதிபத்தியத்தின் ஆழமான முரண்பாடுகளையும் அவற்றின் விளைவாக எழும் கூர்மையான அரசியல், பொருளாதார மற்றும் இராணுவ நெருக்கடிகளை மூடி மறைக்கின்றனர்.

உலகு தழுவிய அளவில் நடைபெறும் ஏகாதிபத்திய சுரண்டலைப் புரிந்து கொள்வதற்கான மிக முக்கியப் பங்களிப்

பாக முதலாளித்துவ சமூகவியலாளர்கள் பீற்றிக் கொள்ளும் 'பின் தங்கிய வளர்ச்சிமுறை'பற்றிய கோட்பாடுகளுக்கான கருதுகோள்கள் பின் வருவன: உலக முதலாளித்துவச் சந்தையை ஆய்வுக்கான அடிப்படையாக அவர்கள் கருதுகிறார்கள். இந்த உலக முதலாளித்துவச் சந்தை இரு உலகங்களை உள்ளடக்கியிருப்பதாக வரையறுக்கின்றனர். அதாவது ஒன்று அமெரிக்கா, ஜப்பான் மேற்கு ஐரோப்பா, ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து, தென் ஆபிரிக்காவும், ருஷ்யா மற்றும் கிழக்கு ஐரோப்பா ஆகியனவும் அடங்கிய மையநாடுகள்; இரண்டு, ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகிய மூன்று கண்டங்களிலுள்ள விளிம்பு நாடுகள்; முன்னேறிய நாடுகளான மையத்திற்கும் பின் தங்கிய நாடுகளான விளிம்பிற்கும் இடையில் உலக முதலாளித்துவச் சந்தையில் நடக்கும் சமனற்ற பரிமாற்றமே மூன்றாம் உலகநாடுகளின் பின்தங்கிய வளர்ச்சி முறைக்கு அடிப்படை; மைய முதலாளித்துவம், விளிம்பு முதலாளித்துவம் ஆகியன அடங்கிய முதலாளித்துவ உலகச் சந்தை பின்வரும் மூன்று கட்டங்களைக் கொண்டிருக்கின்றன; (1) முதலாளித்துவம் உருவாகும் போதிருந்த காலகட்டம், 18—19ஆம் நூற்றாண்டுகளின் தொழிற் புரட்சிக்கு முந்திய வரலாறு, முதலாளித்துவத்தின் வணிக வர்த்தகத் தன்மைகள் மேலோங்கியிருந்த காலகட்டம் (2) தொழிற்புரட்சியால் குறிக்கப்படும் மையநாடுகளில் முதலாளித்துவ உற்பத்திமுறையின் மலர்ச்சி, புதிய ஆலை மூலதனம். போட்டி முதலாளித்துவச் சந்தை (3) 19-ம் நூற்றாண்டின் இறுதியில் தொடங்கிய ஏகாதிபத்திய ஏகபோகம். இரண்டாவது உலகப் போருக்குப் பின் ஏகாதிபத்திய ஏகபோகம் அதன் இரண்டாவது இடைக் கட்டத்தில், நவீன காலனிய கட்டத்தில் நுழைந்துள்ளது என்று உலக முலாளித்துவச் சந்தைபற்றி முற்றிலும் மார்க்சிய — லெனினிய விரோதமான கருதுகோள்களுடன் அவர்கள் தொடங்குகிறார்கள். அதாவது முதலாளித்துவ உற்பத்திமுறையின் தோற்றத்திற்கு முன்பே உலக முதலாளித்துவச் சந்தையின் முதற்கட்டம் தோன்றி முடிந்துவிட்டதாகக் கருதுகின்றனர். ஏன்? முதலாளித்துவத்துக்கு முந்திய, முதலாளித்துவ உற்பத்தி முறையின் தோற்றத்திற்கே முன் நிபந்தனையாகிய புராதனத் திரட்சி பற்றிய மார்க்சின் கோட்பாடுகளைத் திரித்துப் புரட்டுவதற்குத்தான்.

முதலாளித்துவ சமூகவியலாளர்களின் பிரதான ஆய்வுரைகளின் கரு என்னவென்றால் "பின்தங்கிய வளர்ச்சிமுறை என்ற விஷயம் மையநாடுகளின் நலன்களுக்காக புராதனத் திரட்சி என்ற ஒழுங்கு முறை தொடர்ந்து நிலவிவருவதன் சாதாரண விஷயம்தான்", "புராதனத் திரட்சி என்பது மூலதனத்திற்கு முந்திய ஒரு விஷயம் மட்டுமல்ல; இது நிரந்தரமானது, நிகழ்காலத்தினது" (சமீர் அமீன்; உலகு தழுவிய திரட்சி; பின் தங்கிய வளர்ச்சிமுறை பற்றிய கோட்பாட்டின் ஒரு திறனாய்வு; பக். 22). புராதனத் திரட்சி என்பதற்கு இவர்கள் தரும் விளக்கம் என்ன? மைய நாடுகளிலும், விளிம்பு நாடுகளிலும்

உள்ள சமுகாய, பொருளாதாரப் படிவங்களுக்கிடையே உறவுகள் மதிப்புகளின் பறிமாற்றத்தால் பாதிக்கப்படுகின்றன; இவை உலகு தழுவிய திரட்சியின் சாராம்சமாக அமைகின்றன. முதலாளித்துவ உற்பத்திமுறை எப்பொழுதெல்லாம் முதலாளித்துவத்திற்கு முந்திய உற்பத்திமுறைகளுடன் புகுத்தப்படுகிறதோ, அதன் பாதிப்புக்குள்ளாகிறதோ அப்பொழுதெல்லாம் முதலாளித்துவத்துக்கு முந்திய படிவங்களிலிருந்து முதலாளித்துவப் படிவங்களுக்கு மதிப்புகளின் பறிமாற்றம் நடைபெறுகிறது; இதன் விளைவாக புராதனத் திரட்சி என்ற இயங்குமுறை உருவாகிறது; இந்த இயங்குமுறை முதலாளித்துவத்திற்கு முந்தியது மட்டுமல்ல, நிகழ்காலத்தியதும் கூடவாகும் (மேற்படி நூல், பக் 3) என்கின்றனர். புராதனத்திரட்சி பற்றிய இந்தப் புதிய வரைவிலக்கணத்தின் அடிப்படையில் இன்று ஏகாதிபத்தியத்தின் அனைத்துக் குணாம்சங்களையும் மூடி மறைக்கின்றனர். புராதனத்திரட்சி என்ற இயங்குமுறை சமனற்ற தொழில் நுட்ப வளர்ச்சியின் காரணமாக சமனற்ற உற்பத்தி விலையின் காரணமாக மைய நாடுகளுக்கும் விளிம்பு நாடுகளுக்கும் இடையில் நடக்கும் சமனற்ற பரிமாற்றத்தின் மூலம் நடப்பதாகக் கூறுகின்றனர். 'இயல்பான விரிவாக்கப்பட்ட மறுஉற்பத்திக்கு மாறாக புராதனத் திரட்சியின் பிரதான இயங்குமுறை சமனற்ற பரிமாற்றம், அதாவது சமனற்ற மதிப்புகளுடைய பொருட்களின் பரிமாற்றம், இன்னும் சொன்னால் சமனற்ற உற்பத்தி விலைகள் காரணமாக நடக்கிறது (மேற்படி நூல், பக் 88). "விளிம்பு முதலாளித்துவத்திற்குள் மூழ்கிப்போயுள்ள மூன்று கண்டங்களின் பின்தங்கிய வளர்ச்சி முறையில் தோற்றமும் முன்னேற்றமும் சமனற்ற சிறப்பு தன்மை என்ற விதியில் தேடி அறிய வேண்டும்; சமனற்ற பரிமாற்றம் என்னும் நிகழ்ச்சிப் போக்கின் உள் ஆழமான சித்தரிப்பு இது' (மேற்படி நூல், பக். 34).

புராதனத் திரட்சி பற்றிய மார்க்சியக் கண்ணோட்டம் இதற்கு நேர்மாறானது. அவை: மூலதனம் உருவானது நிலச்சொத்துடமையிலிருந்தோ, அதன் மூலமோ, பட்டறையிலிருந்தோ அல்ல. அதிகபட்சமாகப் போனால் விவசாய உற்பத்திப் பொருட்களின் வணிகனாகவும் இருக்கும் குத்தகை விவசாயிடமிருந்தும் பட்டறையிலிருந்தும் ஓரளவு உருவாவதற்கும் வாய்ப்பிருக்கிறது. மாறாக வியாபாரம் மற்றும் வட்டிச் செல்வத்திலிருந்துதான் மூலதனம் உருவாக முடியும். அதாவது கடும்வட்டி—லேவாதேவி, குறிப்பாக நிலச் சொத்துடமையின் மீதான கடும்வட்டி — லேவாதேவியிலிருந்தும், வியாபாரமாக லாபத்திலிருந்தும் திரட்சியடைந்த பணமாகிய அசையும் செல்வம். அதுதான் மூலதனம் என்று மிகச் சரியான பொருளில் சொல்வதானால், ஆலை மூலதனமாகியது. எனவே மூலதனத்தின் தோற்றமும், அதுபற்றிய கருத்தோட்டமும் பணத்தை தொடக்கப் புள்ளியாகக் கொண்டது. பணத்தின் வடிவிலான செல்வமாக நிலவுவது சுழற்சியின் மூலம் திரட்டப்பட்டதாகும் மூலதனம் சுழற்சியின் விளைபொருளாகத் தோன்றுவது என்று

பொருளாகிறது. "ஆனால் நிதிச் (பணச்) செல்வம் வெறுமனே நிலவுவதானது, அது ஒருவகை மேலாண்மை பெற்றிருந்தாலும் கூட அது லதனமாக மாற்றமடைவதற்கு எந்த வகையிலும் போதுமானதாகாது" (மார்க்ஸ்—எங்கெல்ஸ், முதலாளித்துவத்திற்கு முந்திய சமூதாயப் பொருளாதாரப் படிவங்கள், மாஸ்கோ வெளியீடு 1979). பணமும் பண்டங்களும் அவைகளாகவே உற்பத்திக்கான மற்றும் வாழ்விற்கான சாதனங்கள் என்பதைவிட அதற்கு மேல் மூலதனமாக இல்லை. அவை மூலதனமாக மாற்றப்பட வேண்டும். இந்த மாறுதல் கூட அதன் மையமாக குறிப்பிட்ட சூழ்நிலைகளில் மட்டுமே நடைபெற முடியும். நிதிச் (பணச்) செல்வத்தின் வடிவத்திலுள்ள மதிப்பைக் கொண்டு ஒரு புறம் உழைப்புக்கான புறச் சூழ்நிலைகளை வாங்கவும் மற்றொருபுறம் சுதந்திரமான தொழிலாளர்களின் ஜீவனுள்ள உழைப்புக்குப் பணத்தை பரிமாற்றிக் கொள்ளவும் வாய்ப்புடையதாக பழைய உற்பத்தி முறை சிதைவடையும் வரலாற்றுப் போக்கின் காரணமாகத் தான் மூலதனத்தின் ஆதிமுதல் உருவாக்கம் நடைபெறுகிறது. உற்பத்திச் சாதனங்களின் ஒரு அங்கமாக இருப்பதிலிருந்தும், உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளராக இருப்பதிலிருந்தும் தனியே பிரிக்கப்பட்டு தமது உழைப்பு சக்தியை விற்பதற்கு தயாராக உள்ள சுதந்திரமான உழைப்பாளர்களும், உற்பத்திச் சாதனங்கள், வாழ்விற்கான சாதனங்கள், நிதிச்செல்வம் ஆகியவற்றை சொந்தமாகக் கொண்டு மற்றவர்களது உழைப்புச் சக்தியை வாங்குவதன் மூலம் தம்மிடமுள்ள மொத்தப் பொருளாதார மதிப்புகளை அதிகரிக்க விரும்பும் உடைமையாளர்களும் நேருக்கு நேர் சந்தித்து தொடர்பு கொள்ளும் பொழுது மட்டுமே நிதிச் செல்வம் மூலதனமாக மாறுதலடைகிறது. மூலதனம் எழுப்பப்படுவதற்கு ஒரு முன் தேவையாகிய நிதிச்செல்வம் மட்டுமே திரட்சியாகும். ஆனால் அதுவே தனியாக பிரிந்து இருக்கும் போது முற்றும் முழுதாக உற்பத்தித் திறனற்றது. அது சுழற்சியின் மூலம் மட்டுமே தோன்றுகிறது. சுழற்சியில் மட்டுமே அடங்குகிறது. ஆனால் "முதலாளித்துவக் கட்டமைவு எல்லா சொத்துடமையிலிருந்தும் உழைப்பாளர்களைத் தனியே முற்றும் முழுதாகப் பிரிப்பதை முன்னிபந்தனையாகக் கொண்டது. அதன் மூலந்தான் அவர்களுடைய உழைப்புச்சக்தியை அடைய முடியும். முதலாளித்துவ உற்பத்தி அதன் சொந்தக் காலில் ஒருமுறை எழுந்து நின்றவுடன் இந்தப் பிரிதலை நிலவச் செய்ததோடு மட்டுமின்றி தொடர்ச்சியாக விரிவாக்கப்பட்ட அளவில் மறுஉற்பத்தியும் செய்கிறது எனவே முதலாளித்துவக் கட்டமைவிற்கு வழியை சுத்தம் செய்யும் போக்கு உழைப்பாளர்களிடமிருந்து உற்பத்திச் சாதனங்களின் உடமையைப் பிரித்துக் கொள்ளும் போக்கைத் தவிர வேறெதுவுமில்லை. இந்தப் போக்குதான் ஒரு புறம் வாழ்வுக்கான மற்றும் உற்பத்திக்கான சமுதாயச் சாதனங்களை மூலதனமாகவும் மற்றொருபுறம் நேரடி உற்பத்தியாளர்களை கூலி உழைப்பாளர்களாகவும் மாற்றுகிறது. எனவே சொல்லிக் கொள்ளப்படும் புராதனத் திரட்சி என்பது உற்பத்திச் சாதனங்

களிலிருந்து உற்பத்தியாளர்களைப் பிரிக்கும் வரலாற்றுப் போக்கினைத் தவிர வேறெதுவும் இல்லை. இது புராதன மாகத் தெரிகிறது. ஏனெனில் இது மூலதனத்தின் மற்றும் அதற்குப் பொருத்தமான உற்பத்திமுறையின் வரலாற்றுக் கட்டத்துக்கு முந்தியது'' (மார்க்ஸ். மேற்படி நூல், பக் 144-145). நிதிச் செல்வமாகிவிடுதல் மூலதன உருவாக்கத்துக்கான புறச் சூழ்நிலைகளைத் தோற்றுவிக்கவில்லை. மாறாக புறச்சூழ்நிலை காரணமாக, உழைக்கத் தகுதியான தனிநபர்களின் உழைப்புச் சக்தியை அபகரித்துக் கொண்டது. அதன் மூலம் உற்பத்திச் சாதனங்களிலிருந்து உற்பத்தியாளர்களைப் பிரிக்கும் போக்கை ஒரு பகுதி துரிதப்படுத்திச்செல்மற்றொரு பகுதியான இந்தப் பிரிக்கும் போக்கு நிதிதுவாரத்தின். தலையீடின்றியே முன் கூட்டியே நடந்தேறியது. எனவே, ''மூலதனத்தின் தனிச் சிறப்பானகுணாம்சமான நடவடிக்கை ஏற்கனவே இருந்த பந்துபட்ட உழைக்கும் மக்களையும் கருவிகளையும் குவித்ததைத்தவிர வேறொன்றுமில்லை. அவற்றை அதன் ஆளுகைக்குக் கீழ் கொண்டு வருகிறது. இதுதான் அதன் உண்மையான திரட்சி. தொழிலாளர்களையும் அவர்களது கருவிகளையும் குறிப்பிட்ட இடங்களில் கொண்டுவந்து திரட்சி செய்வது'' (மார்க்ஸ்—எங்கெல்ஸ். முதலாளித்துவத்துக்கு முந்திய சமுதாய பொருளாதார படிவங்கள், பக் 126)

பணம் மூலதனமாக மாறுகிறது மூலதனத்தின்மூலம் உபரி மதிப்பு சேருகிறது. உபரி மதிப்பு மேலும் கூடுதலான மூலதனமாகிறது. எனவே மூலதனத்தின் திரட்சிக்கு முன்னிபந்தனை உபரி மதிப்பு. உபரி மதிப்புக்கு முன்னிபந்தனை முதலாளித்துவ முறையிலான உற்பத்தி. முதலாளித்துவ முறையிலான உற்பத்திக்கு முன்னிபந்தனையாக கணிசமான அளவு மூலதனம் மற்றும் பரிவர்த்தனைப் பண்டங்களை உற்பத்தி செய்பவர்களின் கைகளில் உழைப்புச் சக்தி ஆகியவை திரளாக இருக்க வேண்டும். இந்த மொத்த இயக்கத்தின் அடியும் முடியும் தெரியாத ஒரு வட்டமாகத் தோன்றும், இதிலிருந்து விடுபட முதலாளித்துவ முறையிலான திரட்சிக்கு முந்திய ஒரு புராதனத் திரட்சி என்னும் கருத்தோட்டத்தை வைத்துக் கொள்ள வேண்டும். முதலாளித்துவ உற்பத்திமுறையின் விளைவானதல்ல இந்த புராதனத்திரட்சி. மாறாக அதன் துவக்கப்புள்ளி. ஆனால் இவ்வாறு வைத்துக் கொள்ளப்படும் புராதனத் திரட்சி மூலதனத்தினுடையது அல்ல. மூலதனத்தின் புராதனத்திரட்சி என்னும் முதலாளித்துவப் பொருளாதார வாதிகளின் கோட்பாடு முற்றிலும் பிழையானது ஏற்கனவே உற்பத்திச் சாதனங்களிலிருந்து இரு பொருளில் பிரித்தெடுக்கப்பட்ட உழைப்பாளர்களையும் உற்பத்தி கருவிகளையும் ஓரிடத்தில் குவிப்பது மட்டுமே மூலதனத்தின் உண்மையான திரட்சிப் பணியாகும். அதன் விளைவாக பின்னர் நடப்பதெல்லாம் மூலதனத்தின் திரட்சி மட்டுமே. மூலதனத்தின் புராதனத் திரட்சி அல்ல. அதற்கு முன்பு நடப்பதெல்லாம் கடும் வட்டி, லேவாதேவி மற்றும் வியாபாரம் ஆகியவை மூலம் நிதிச்

செல்வம் குவிவது மட்டுமே; நிதிச் செல்வம் குவிவது மூல தனத்தின் புராதனத் திரட்சி அல்ல. புராதனத் திரட்சி என்று சொல்லப்படுவதெல்லாம் நிலத்திலிருந்து விவசாய மக்களையும் பட்டறை உற்பத்தி சாதனங்களிலிருந்து பட்டறை உற்பத்தியாளர்களையும் பறிமுதல் செய்வதும் பிரித்தெடுப்பதும் மட்டுமே ஆகும்.

இத்துடன் இந்தியா போன்ற காலனிய நாடுகளிலிருந்து காலனியவாதிகள் பெருமளவில் கொள்ளையடித்ததன் மூலம் நிதிச் செல்வத்தைக் குவித்தனர். இதுவும் புராதனத் திரட்சி என்று கருதப்படுகிறது. ஆனால் இது மூலதனத்தின் புராதனத் திரட்சி அல்ல. இந்தக் கட்டத்தில் நிதிச் செல்வமே திரட்டப்படுகிறது. இன்னமும் அது மூலதனமாவதில்லை ஐரோப்பிய நாடுகளில் தொழிற்புரட்சியும், அதன்பிறகு முதலாளித்துவ உற்பத்தி முறையும் தோன்றுவதற்கான காரணிகளில் ஒன்றாக இந்த நிதிச் செல்வம் இருந்தது எனவே புராதனத்திரட்சி என்பது முதலாளித்துவ முறையிலான உற்பத்தி முறைக்கும் முதலாளித்துவப் பொருளாதாரத்துக்கும் முந்தியதாகும். நிதிச் செல்வம் ஆலை மூலதனமாக மாற்றப்பட்டு முதலாளித்துவம் உலகு தழுவியதாக வளர்ந்து, உலக முதலாளித்துவச் சந்தையில், சுதந்திரமான போட்டியின் மூலம் மூலதனத் திரட்சி நடப்பதுவும், அதன்பின் ஆலை மூலதனம் வங்கி மூலதனத்துடன் இணைந்து நிதி மூலதனமாகத் தோன்றியபின் ஏகாதிபத்திய உலக கட்டமைவில் நிதி மூலதனத்தின் கொள்ளையும், நிதி மூலதனத்தின் கொடுங்கோன்மையும், சுதந்திரமான போட்டி மாறி ஏகபோகத்தின் மூலம் மூலதனத் திரட்சி அதன் உயர்ந்த கட்டத்தின் நிதி மூலதனத் திரட்சியாக நடப்பதுவும் ஆகிய வளர்ச்சிப் போக்கு மறுதலித்தலின் மறுதலிப்பு என்ற இயங்கியல் முறையில் அதி உயர்ந்த கட்டத்துக்கு மாறிச் சென்றுவிட்டது. அசையும் செல்வமாக 'நிதிச் செல்வம்' சுழல்வதன் மூலம் மீண்டும் திரட்சி நடக்கிறது. ஆனால் பழைய நிதிச்செல்வம் என்கிற முறையில் அல்ல. நிதி மூலதனத்தின் சுழற்சியாக முதலாளித்துவ உற்பத்தி முறையின் விரிவாக்கப்பட்ட மறு உற்பத்தியோடு இணைந்து உயர்ந்த கட்டத்தில், ஏகாதிபத்தியக் கட்டத்தில் நடக்கிறது.

வரலாற்றுப் பூர்வமாக நடந்த இவ்வளவையும் புறக்கணித்து பழைய கட்டத்துக்கே சென்று முதலாளித்துவ அரசியல் மற்றும் சமூகவியலாளர்கள் வெறுக்கத்தக்க கோமாளித்தனமான மூலதனத்தின் புராதனத்திரட்சி என்னும் வெகு காலத்துக்கு முன் காலாவதியாகிப் போன கோட்பாடுகளை முன் வைக்கின்றனர். மூலதனத்தின் புராதனத் திரட்சி தற்போது உலக அளவில் நடைபெறுகிறது. மார்க்ஸ், லெனின் கோட்பாடுகள் குறுகிய கால,கள எல்லைக்கு உட்பட்டவை என்கின்றனர். ஆனால் மூலதனத்தின் புராதனத் திரட்சி என்னும் கோட்பாட்டையே மார்க்சியம்—லெனினியம் ஏற்றுக் கொள்ளவில்லை. சொல்லிக்கொள்ளப்படும் புராதனத் திரட்சி என்பதெல்லாம் உழைப்புச் சாதனங்களிலிருந்து உழைப்பாளர்களைப் பிரித்தெடுப்பது, சுதந்திரத்

தொழிலாளர்களாகவும் ஏதுமற்றோர்களாகவும் ஆக்குவதுதான். ஏற்றத் தாழ்வான வளர்ச்சியின் காரணமாக உலகு தழுவிய அளவில் இது ஒரே மாதிரியாக இருக்க முடியாது. எனவே வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு முறைகளில் இருக்கும் என்றார் மார்க்ஸ். "புராதனத் திரட்சியின் வரலாற்றில் உருவாகுதலின் போக்கில் முதலாளித்துவ வர்க்கத்துக்கு உந்துகோல்களாக செயல்படும் அனைத்துப் புரட்சிகளும் சகாப்தத்தைப் படைப்பவையாகும். ஆனால் மாபெரும் பரந்துபட்ட மக்கள் திரள்களின் திரள் திடீரென்றும் பலாத்காரமாகவும் அவர்களது வாழ்வுக்கான சாதனங்களிலிருந்து பிய்த்து, சுதந்திரமான, உற்பத்திச் சாதனங்களோடு 'தொடர்பற்ற' பாட்டாளிகளாக உழைப்புச் சந்தையில் விசிறியடிக்கப்படும் தருணங்கள் எல்லாவற்றுக்கும் மேலானவையாகும். விவசாய உற்பத்தியாளர்களை, உழவர்களை மண்ணிலிருந்து பறிமுதல் செய்வதுதான் மொத்த போக்கிற்கும் அடிப்படையாகும்; இந்தப் பறிமுதலின் வரலாறு வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு அம்சங்களை எடுக்கிறது; வெவ்வேறு காலகட்டங்களின் மற்றும் அடுத்தடுத்து கிரமமான வெவ்வேறு முறைகளின் பல்வேறு இடைக்கட்டங்களின் ஊடாக அது ஓடிச் செல்கிறது. நாம் நமது சான்றாக எடுத்துச் சொல்லும் இங்கிலாந்தில் மட்டுமே இது இலக்கண வடிவமாக இருக்கிறது" (முதலாளித்துவத்திற்கு முந்திய சமூகப் பொருளாதாரப் படிவங்கள், பக். 146-147). உலகம் முழுவதும் எவ்வாறு புராதனத் திரட்சி நடக்கும் என்றும், இலக்கண வடிவமாக இங்கிலாந்து அமைவதால் அதை ஆய்வு செய்வதாகவும் கூறுகிறார். உழைப்பாளர்களின் புராதனத் திரட்சி பற்றி ஏதும் கூறாமல் அமெரிக்காவை ஏழாவது முறையாகக் கண்டுபிடித்தது போல் உலக அளவிலான புராதனத் திரட்சியை ஆய்வு செய்வதாகக் கூறும் முதலாளித்துவ அரசியல் மற்றும் சமூகவியலாளர்கள் மார்க்சியம்—லெனினியம் நிராகரிக்கும் எதிர்க்கும் மூலதனத்தின் புராதனத் திரட்சி என்னும் கோட்பாட்டை எடுத்துக்கொண்டு அதுபற்றி காலம், களத்தின் அளவில் குறுகியதாக மார்க்சியம்—லெனினியம் ஆய்வு செய்திருக்கிறது என்று விமர்சிக்கின்றனர்.

புராதனத் திரட்சி பற்றி முதலாளித்துவ சமூகவியலாளர்கள் புதிய வியாக்கியானம் தருவது மட்டுமல்ல, மார்க்சின் வரையறுப்புப்படி புராதனத் திரட்சி முதலாளித்துவ உற்பத்தி முறைக்கு முந்தியது என்பதையும் மறுக்கின்றனர். 'முதலாளித்துவ உற்பத்தி முறைக்கு முந்திய வரலாறு முடிந்துவிடவுமில்லை, முடிக்கப்படவுமில்லை; முதலாளித்துவம் உலகு தழுவிய அளவில் விரிவடைவதால் அது தொடர்கிறது. முதலாளித்துவ உற்பத்தி முறையின் அதாவது விரிவாக்கப்பட்ட உற்பத்தி முறையின் குணாம்சமாகிய மூலதனத்திரட்சி என்ற இயங்கு முறைக்கு இணையாக உலக முதலாளித்துவக் கட்டமைவின் மையத்திற்கும் விளிம்பிற்கும் இடையிலான உறவினுடைய குணாம்சமாகிய புராதனத் திரட்சி என்ற இயங்கு முறையும் தொடர்கிறது; முதலாளித்துவ உற்பத்திமுறை முன்னேறுவதாலும் முதலாளித்துவத்துக்கு முந்திய உற்பத்தி

முறைகளுடன் தொடர்பு கொள்வதாலும் புராதனத்திரட்சி என்ற நிகழ்ச்சி போக்கு முடிவின்றித் தொடர்கிறது; மேலும் சமனற்ற பரிமாற்றம்தான் விளிம்பு நாடுகளிலிருந்து மையத்திற்கு மதிப்பின் பரிமாற்றத்திற்குக் காரணமாக இருக்கிறது' (சமீர் அமீன், உலகு தழுவிய திரட்சி: பின் தங்கிய வளர்ச்சி முறை பற்றிய கோட்பாட்டின் ஒரு திறனாய்வு) என்கின்றனர்.

முதலாளித்துவ அரசியல் மற்றும் சமூகவியலாளர்களின் இக்கோட்பாடுகள் ஒரு புறம், சொல்லிக்கொள்ளப்படும் புராதனத் திரட்சி என்பது உழைப்பாளர்களின் புராதனத்திரட்சி தவிர வேறெதுவுமில்லை என்ற மார்க்சிய—லெனினியக் கோட்பாட்டை மறுக்கின்றன; மற்றொருபுறம், ஏகாதிபத்தியத்தின் ஒரு பகுதி மற்றும் ஒரு முறையான கொள்கையை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்கின்றன. மூலதனத்தின் புராதனத் திரட்சி என்னும் முதலாளித்துவப் பொருளாதாரக் கோட்பாட்டை முன் தள்ளுவதோடு—அதுவும் உலக அளவினதாகச் சித்தரித்து—ஏகாதிபத்தியத்தின் தனிச் சிறப்பான சுரண்டல் மற்றும் ஒடுக்கு முறைகளை மூடிமறைக்க ஏகாதிபத்திய கட்டத்துக்கு முந்திய முறை மட்டுமே நீடிப்பதாகவும், ஒடுக்கு முறைகளைக் கைவிட்டு விட்டதாகவும், ஏகாதிபத்தியத்தின் தனிச்சிறப்பான குணாம்சங்களையும் அதன் அடிப்படை முரண்பாடுகளின் முக்கியமான அம்சங்களையும் நிராகரிப்பதன் மூலம் பரப்புகின்றனர்.

ஏகாதிபத்திய நாடுகளுக்கும் மூன்றாம் உலக நாடுகளுக்கும் இடையேயான சமனற்ற உற்பத்திமுறைகள் நிலவுவது மற்றும் சமனற்ற தொழில் நுட்ப சிறப்புத்தன்மையின் வளர்ச்சி ஆகிய இரு அடிப்படைகள் காரணமாக சமனற்ற மதிப்புடைய பொருட்களின் பரிமாற்றம் மூலமாக ஏகாதிபத்திய மையங்களில் புராதன மூலதனத்திரட்சி அல்லது குவிதல் நடப்பதாகக் கூறுவதெல்லாம் மார்க்சிய—லெனினிய நிலைபாட்டின்படி புராதனத் திரட்சியின் பாற்பட்டதுமல்ல; ஏகாதிபத்தியக் கட்டத்தின் எந்த இடைக்கட்டங்களினதும் தனிச்சிறப்பான குணாம்சமும் அல்ல ஏகாதிபத்தியத்துக்கு முந்தியதும் முதலாளித்துவத்தின் முதற்கட்டமும் கொண்டிருக்கும் தனிச் சிறப்பான குணாம்சமாகிய சுதந்திரமான போட்டியும், ஆலை மூலதனமும் ஆட்சி செலுத்தும்போது நடந்த பொருட்களின் ஏற்றுமதிமூலம் முதலாளித்துவ நாடுகளின் மூலதனக் குவியலைக் குறிக்கிறது. மாறாக ஏகாதிபத்தியக் கட்டத்தின் ஏகபோகமும் நிதிமூலதனமும் ஆட்சி செலுத்தும்போது மூலதனத்தின் ஏற்றுமதியினுடைய விளைவாக ஏகாதிபத்திய நாடுகளில் மூலதனக் குவியல் ஏற்படுவதைக் குறிக்கவில்லை. ஏகாதிபத்தியத்தின் தனிச்சிறப்பான குணாம்சங்களை லெனின் கற்பித்தவாறு பின் வருமாறு தொகுக்கலாம். அவை:

'பொதுவில் முதலாளித்துவத்தின் அடிப்படை குணாம்சங்களின் வளர்ச்சி மற்றும் நேரடித் தொடர்ச்சியாக எழுந்ததே

ஏகாதிபத்தியம். ஆனால் முதலாளித்துவத்தின் மற்றும் பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியின் அடிப்படை குணாம்சமாகிய சுதந்திரமான போட்டி அதன் நேரெதிரான அடிப்படைக் குணாம்சமாகிய ஏகபோகம் என்னும் ஒரு குறிப்பிட்ட உயர்ந்த கட்டத்தை முதலாளித்துவம் அடைந்தபோது மட்டுமே புதிய அடிப்படைக் குணாம்சங்களைக் கொண்ட முதலாளித்துவ ஏகாதிபத்தியமாகியது. எனவேதான் ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் ஏகபோகக் கட்டம்; ஒரு தனிச்சிறப்பான கட்டம்; அதி உயர்ந்த கட்டம். ஏகாதிபத்தியம் பற்றிய இந்த சுருக்கமான வரையறுப்புடன் மிக முக்கியமானவையும் சேர்க்கப்பட வேண்டும். எனவே, பொதுவாக எல்லா வரையறுப்புகளும் நிபந்தனைக்குட்பட்ட சார்பு நிலையிலான மதிப்பே கொண்டவை; ஒரு நிகழ்ச்சிப் போக்கினது முழு வளர்ச்சியிலும் அதனுடைய தொடர்புடையவைகள் யாவும் அடங்கியனாய் ஒரு போதும் இருக்கமுடியாது என்பதை நினைவில் கொண்டு ஏகாதிபத்தியத்தின் பின்வரும் ஐந்து அடிப்படை அம்சங்களும் உள்ளடங்குமாறு அதை வரையறுத்தாக வேண்டும். 1. உற்பத்தியின் மூலதனத்தின் ஒன்று குவிப்பானது, பொருளாதார வாழ்வில் தீர்மானகரமான பங்காற்றும் ஏகபோகங்களைத் தோற்றுவிக்கும்படியான உயர்ந்த கட்டத்துக்கு வளர்ந்து விடுதல் 2. வங்கி மூலதனம் ஆலை மூல தனத்துடன் ஒன்று கலந்து, இந்த நிதி மூலதனத்தின் அடிப்படையில் நிதியாட்சிக் கும்பல் உருவாதல் 3. பண்ட ஏற்றுமதியிலிருந்து வேறானதான மூலதன ஏற்றுமதி தனிச்சிறப்பான முக்கியத்துவம் பெறுதல் 4. சர்வதேச ஏகபோக முதலாளித்துவக் கூட்டுக்கள் உருவாகி, உலகையே இவை தமக்குள் பங்கிட்டுக் கொள்ளுதல் 5. மிகப் பெரிய முதலாளித்துவ அரசுகளிடையே உலகின் அனைத்துப் பிரதேசங்களும் பங்கிடப்படுவது முற்றும் முழுதாகிவிடுதல். முதலாளித்துவத்தினுடைய வளர்ச்சியில் எந்தக் கட்டத்தில் ஏகபோகங்கள், நிதி மூலதனம் ஆகியவற்றின் ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டுவிட்டதோ மூலதன ஏற்றுமதி அளவுகடந்த முக்கியத்துவம் பெற்றுவிட்டதோ, சர்வதேச டிரஸ்டுகளுக்கிடையில் உலகம் பங்கிடப்படுவது தொடங்கியுள்ளதோ, உலகின் அனைத்துப் பிரதேசங்களும் மிகப் பெரிய முதலாளித்துவ அரசுகளுக்கிடையே பங்கிடப்படுவது முற்றும் முழுதாகிவிட்டதோ அந்தக் கட்டத்தின் முதலாளித்துவமே ஏகாதிபத்தியமாகும்' (ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சகட்டம்; ஆங்கிலம், பீகிங் வெளியீடு 1969 பக். 105-106)

மேற்கண்ட வரையறுப்புகள் அனைத்தும் அடிப்படை பொருளாதார வகைப்பட்டவை மட்டுமே ஆகும். ஆனால் பொருளாதார அடிப்படைக் கருத்தோட்டங்களை மட்டுமின்றி இந்த முதலாளித்துவக் கட்டத்துக்கும் பொதுவாக முதலாளித்துவத்துக்கும் உள்ள உறவில் அல்லது ஏகாதிபத்தியத்துக்கும் தொழிலாளர் இயக்கத்தின் இருபோக்குகளுக்கும் இடையிலான உறவில் முதலாளித்துவத்தின் இந்தக் கட்டத்தின் வரலாற்றுபூர்வமான இடத்தையும் மனதிற் கொள்ளவேண்டும்.

உற்பத்தியின் ஒன்று திரட்டுதலினுடைய வளர்ச்சியின் ஒரு அதி உயர்ந்த கட்டத்தில் அதிலிருந்து தோன்றிய ஏகபோகம் என்பது ஏகபோக முதலாளித்துவ இணைப்புகள், கார்ட்டல்கள், சிண்டிகேட்டுகள், டிரஸ்டுகள் ஆகியவற்றினைக் குறிக்கிறது; போட்டி முதலாளித்துவத்தை ஏகபோகமாக மாற்றும் இவை, நவீன முதலாளித்துவத்தின் பொருளாதார வாழ்வில் மிக முக்கிய மான பாத்திரமாற்றுபவைகளில் ஒன்றாகும் ஏகபோகம் ஒரு முறை உருவாக்கப்பட்டபின், அது கோடிக்கணக்கான மக்களை யும் மூலதனத்தையும் கட்டுபடுத்துகின்றது. அரசாங்கத்தின் வடிவமுறை மற்றும் அனைத்து விஷயங்களையும் பற்றி பொருட் டாகக் கருதாது துச்சமாகக் கொண்டு பொதுவாழ்வின் ஒவ் வொரு துறையையும் ஊடுருவிப் பாய்கிறது. அதன் அரசியல் லஞ்ச ஊழல், பொருளாதார மோசடி மற்றும் சமுதாயப் பிற் போக்குத்தனத்திற்கு வரலாற்றில் ஈடு இணை இல்லாமல் செய்து விடுகிறது. உற்பத்தியை பெருமளவு சமுதாயமயமாக்குகிறது. குறிப்பாக தொழில் நுட்பக் கண்டுபிடிப்புகளும் செழுமைப்படுத் தலும் என்ற போக்கு சமுதாயப்படுத்துவதாகிறது. ஒரு நாட்டில் மட்டுமின்றி பலநாடுகளிலும், ஏன் உலகம் முழுவதிலுமுள்ள மூலப்பொருட்களின் மூலாதாரங்களையும் சந்தையின் அளவை யும் கிட்டதட்ட மதிப்பீடு செய்யப்பட்டு அவையும், சிறப்புத் தன்மை வாய்ந்த உழைப்பாளர்களும், தொழில்நுட்ப விஞ்ஞானி களும் ஏகபோகத்தால் கைப்பற்றப்படுவதால் உற்பத்தி மேலும் மேலும் சமுதாயமயமாகிறது. சுதந்திரமான போட்டி பெயரளவில் அங்கீகரிக்கப்பட்டதாக நீடிக்கும் அதே சமயம் ஒரு சில ஏகபோகவாதிகள் பிற பகுதி மக்களுக்கு பன்மடங்கு சுமையாகவும், துன்ப துயர மிக்கதாகவும் தாங்க முடியாததாகவும் மாறுகின்றனர். முத லாளிகளே அவர்களது சித்தத்துக்கும் விருப்பத்துக்கும் எதி ராக ஒருவகையான புதிய சமுதாய, அதாவது முற்றும் முழு தான சமுதாயமயமான ஒழுங்குமுறையில் இழுத்துவிடப்படு கின்றனர். ஏகபோகங்கள் பிற நிறுவனங்களை அடிபணிய வைக்க பின்வரும் பலவந்த முறைகளை கடைபிடிக்கின்றன.'' "1. மூலப் பொருட்களின் சப்ளையை நிறுத்திவிடுவது (கார்ட் டல்களில் பலவந்தமாக சேர்ப்பதற்கான பல முக்கியமான முறைகளில் ஒன்று) 2. 'கூட்டுக்கள்' மூலம் (அதாவது கார்ட்டல் களில் உள்ள நிறுவனங்களில் மட்டுமே வேலை செய்ய அனு மதிக்கும்படி தொழிற்சங்கங்களும், முதலாளிகளும் ஒப்பந்தம் செய்து கொள்வதன் மூலம்) உழைப்பாளர்களை சப்ளை செய் வதை நிறுத்திவிடுவது. 3. தரவேண்டிய 'டெலிவரிகளை' நிறுத்திவிடுவடுவது. 4. வணிகப் போக்குவழிகளை அடைத்து விடுவது. 5. கார்ட்டல்களிடம் மட்டுமே வணிகம் நடத்தும் படி வாங்குவோரிடம் ஒப்பந்தங்களிடுவது. 6. திட்டமிட்டு விலைகளை வெட்டிவிடுவது (வெளி நிறுவனங்களை அதாவது ஏகபோகங்களுக்கு அடிபணிய மறுக்கும் நிறுவனங்களை அழிப் பதற்காக ஒரு குறிப்பிட்ட காலம்வரை பொருட்களை அதன் அடக்க விலைக்கு கீழே விற்பதற்கு பல லட்சங்களை செல வழிப்பது) 7. கடன்களை நிறுத்திவிடுவது. 8. புறக்கணிப்பு

"இங்கே சிறியவை—பெரியவை மற்றும் தொழில் நுட்ப ரீதியில் முன்னேறியவை, பின் தங்கியவை என்று நிறுவனங்களுக்கிடையே இனியும் போட்டியில்லை. ஏகபோகங்களுக்கு அவற்றின் நுகத்தடிக்கு, அவற்றின் ஆணைக்கு அடிபணிந்தவைகளின் குரல்வளையை ஏகபோகங்கள் நெறுக்குவதைப் பார்க்கிறோம்'' (மேற்படி நூல், பக் 25-26). ஏகபோகங்கள் பொருளாதார ரீதியில் இவ்வளவு கொடூரமாக இருக்கின்றன. ஆனால் இத்துடன் வங்கிகளின், நிதி மூலதனத்தின் பாத்திரத்தை கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லையானால் ஏக போகங்களின் மிக மிக விசேடமான மற்றும் உண்மையான சக்திபற்றிய மிகவும் பற்றாகுறையான முழுமையற்ற, அற்பமான, சித்திரத்தையே பெறுவோம். பிரதான மற்றும் ஆதிமுதல் செயல்பாடான பற்றுவரவில் இடைத்தரகனாக இருந்து, எல்லா வகையான நிதி வரவுகளையும் திரட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் ஆணையில் வைப்பதன் மூலம் முடங்கி கிடக்கும் மூலதனத்துக்கு செயலூக்கமளித்து லாபமளிப்பதாக மாற்றும் இடைத்தரகனாக இருந்த வங்கிகள் அவற்றின் வளர்ச்சியில் மிகச் சிலவான நிறுவனங்களில் ஒன்றுதிரட்டலின் மூலம் எல்லா முதலாளிகளின் மற்றும் சிறுவியாபாரிகளின் மூலதனம் முழுவதையும், உற்பத்திச் சாதனங்கள் மற்றும் குறிப்பிட்ட நாட்டின், பின்னர் பல நாடுகளின் மூலப் பொருட்களின் மூலாதாரங்களையும் பெரும்பாலும் தம் ஆணையின் கீழ் வைக்கும் பலம்வாய்ந்த ஏகபோகங்களாக மாறின. இம்மாற்றமும் முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாக வளர்வதற்கான அடிப்படைப் போக்குகளில் ஒன்றாகும். அதாவது மொத்த நாட்டின் எல்லா மூலதனத்தையும் எல்லா வருவாய்களையும் மத்தியப்படுத்தி பல பத்தாயிரக்கணக்கான பொருளாதார நிறுவனங்களை ஒரே தேசிய மூலதனமாகவும் அதன் பின்னர் ஒரு உலக முதலாளித்துவப் பொருளாதாரமாகவும் மாற்றியதானது ஏகபோக பூதங்களின் முக்கியத்துவத்தையும் பாத்திரத்தையும் அதிகரித்தது. வெறும் நுட்ப அடிப்படையிலான முற்றிலும் இரண்டாம் பட்சமான அன்றாட பற்று—வரவு கணக்குகள் பார்ப்பது பெரும் அளவினதாக வளர்ந்தபோது, மொத்த முதலாளித்துவ சமுதாயத்தின் வியாபாரம் மற்றும் ஆலை ஆகிய இரு தொழில் இயக்கங்கள் அனைத்தையும் ஏகபோகங்கள் மிகச் சிலவான வங்கிகளின் சித்தத்துக்குக் கீழ்படியும்படி மாற்றப்பட்டன. ஏனெனில் வங்கித் தொடர்புகள், அன்றாட பற்று—வரவு கணக்குகள், மற்றும் நிதிச் செயல்பாடுகள் மூலம் முதலில் பல்வேறு முதலாளிகளின் நிதி நிலையை மிகத் துல்லியமாகத் தெரிந்து கொண்டு பின்னர் வரம்பிடுவது அல்லது விரிவாக்குவது, கடன்கள் அளிப்பது அல்லது தடுப்பது என்கிற வகையில் செல்வாக்குச் செலுத்தி அவர்களை கட்டுப்படுத்துகின்றன. இறுதியாக அவர்களது வருமானத்தை தீர்மானிப்பது மூலதனத்தை இழக்க வைப்பது அல்லது எக்கச்சக்கமாக பெரும் அளவில் கூடுதலாக்குவது என்று அவர்களது தலைவிதியையே தீர்மானிக்கிறது. இவ்வாறு வங்கி மூலதனம் உருவாகி, வங்கிகள் ஆலைகளுடன் ஐக்கியமாவது அல்லது ஒன்று கலப்பதன் மூலம்

ஆலை மூலதனத்துடன் வங்கி மூலதனம் இணைந்து நிதி மூலதனமாக வளர்கிறது. பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தி மற்றும் தனிச் சொத்துடமையின் பொது நிலைமைகளின் கீழ் முதலாளித்துவ ஏகபோகங்களின் வியாபார மற்றும் தொழில் நடவடிக்கை தவிர்க்க முடியாமல் ஒரு நிதிக் கொடுங்கோன்மையின் ஆதிக்கமாக மாறுகிறது. நிதிக் கொடுங்கோன்மையின் வளர்ச்சிக்கும், உறுதிப்படுத்தலுக்கும் நிதி மூலதனம் முக்கிய பாத்திரமாற்றுகிறது. ஒரு சில கைகளில் குவிக்கப்பட்ட, அப்பட்டமான ஒரு ஏகபோகம் செலுத்தும் நிதி மூலதனம் கம்பெனிகளை துவங்குவதன் மூலமும், இருப்புகள், அரசுக் கடன்கள் இன்னும் பிறவற்றை புழங்க விடுவதன் மூலமும் எப்பொழுதும் அதிகரிக்கும் அளவற்ற லாபத்தைக் கறக்கின்றது. நிதிக் கொடுங்கோன்மையின் ஆதிக்கத்தைப் பலப்படுத்துகிறது. ஏகபோகங்களின் நலன்களுக்கு மொத்த சமுதாயத்தின் மீது கப்பம் விதிக்கிறது. இன்றைய முதலாளித்துவ சமுதாயத்தின் எல்லாப் பொருளாதார அரசியல் நிறுவனங்கள் மீதும் சார்பு நிலை உறவுகள் என்னும் வலைப்பின்னலை நிதிக் கொடுங்கோன்மை வீசுகிறது.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஒரு புதுவகையான ஏகபோகம் உருவாகியது. முதலில் எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் ஏகபோக முதலாளித்துவக் கூட்டுப் பிணைப்புகளாகவும், இரண்டாவதாக, ஒரு சில மிகவும் பணக்கார நாடுகளில் ஏகபோக நிலைமை பூதாகரமான அளவுகளில் மூலதனக் குவியலாகி, மூலதனத்தின் மிதமிஞ்சியதாக ஏராளமாக வளர்ந்தது. முதலாளித்துவத் தன்மைகளின் காரணமாக மிதமிஞ்சிய மூலதனம் அந்நாடுகளின் பரந்துபட்ட மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காகப் பயன்படுத்தப்படவில்லை. மாறாக, மூலதனப் பற்றாக்குறை, ஒப்பீட்டு வகையில் மிகக் குறைவான நிலவிலை. மலிவான உழைப்புச் சக்தி மற்றும் மூலப்பொருட்கள் ஆகியன கிடைப்பதால் கொள்ளை லாபமடிக்க பின் தங்கிய நாடுகளுக்கு மூலதன ஏற்றுமதி செய்தனர். அதுமட்டுமன்றி பின் தங்கிய நாடுகளில் ஆலை உற்பத்திக்கான சூழ்நிலைகள் வளர்ந்திருந்தும் மூலதன ஏற்றுமதிக்கு கூடுதலான வாய்ப்பளித்தன. பின் தங்கிய நாடுகளின் முதலாளித்துவ வளர்ச்சியை மூலதன ஏற்றுமதி பாதித்து பெரும் அளவில் துரிதப்படுத்திய அதேசமயம், மூலதன ஏற்றுமதி நாடுகளின் தொழிலுற்பத்தி வளர்ச்சியை தற்காலிகமாக ஓரளவு தடுத்தாலும் உலகம் முழுவதும் முதலாளித்துவ வளர்ச்சியை விரிவாக்கி மேலும் ஆழப்படுத்தியது. இதன் மூலம் மூலதன ஏற்றுமதி நாடுகள் எப்போதும் சாதகமானவைகளையே அடைவது என்பதுதான் நிதி மூலதனம் மற்றும் ஏகாதிபத்திய சகாப்தத்தின் தனிச்சிறப்பான அம்சமாகும். நிதி மூலதனம் ஏகபோக சகாப்தத்தைத் தோற்றுவித்தது. போட்டி சந்தையினிடத்தில் எப்போதும் கொள்ளை அடிக்கும் பரிமாற்றம் எனும் ஏகபோகக் கொள்கையை எங்கெங்கும் ஏகபோகம திணிக்கிறது. நிதி மூலதனத்துக்கும் ஏகபோகத்திற்கும் இடையிலான தொடர்பு இதற்குப் பயன்படுகிறது. பின் தங்கிய நாடுகளில் ஆலைகளில் மூலதனமிடுவது; கடன், உதவி, மானியம் ஆகியவை

வழக்கமாக மூலதன ஏற்றுமதி நாடுகளின் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான சாதனமாகப் பயன்படுகின்றன. இத் தொடர்புகள் பரிமாற்றங்கள் குறிப்பாக பலம்வாய்ந்த வங்கிகள் அரசுகளுடன் நெருக்கமான பெரும் நிலையங்களுக்கிடையில் நடப்பவை புறக்கணிக்க முடியாதவாறு சமனற்ற பல ஒப்பந்தங்களை உள்ளடக்கி இருக்கின்றன. உலகின் எல்லா நாடுகள் மீதும் நிதி மூலதனம் உண்மையில் ஆதிக்கவலை வீசுகிறது. இதில் காலனிய, அரைக்காலனிய, சார்பு நாடுகளில் நிறுவப்பட்ட அந்நிய வங்கிகளும் அவற்றின் கிளைகளும் மிக முக்கியமான பாத்திரமாற்றுகின்றன. ''பொதுவாக முதலாளித்துவத்தின் தனிச் சிறப்பான குணாம்சம் என்னவென்றால் மூலதனத்தின் உடைமை, மூலதனத்தை உற்பத்திக்குப் பயன்படுத்துவதிலிருந்து பிரிக்கப்பட்டிருக்கிறது. பண மூலதனம் ஆலை அல்லது உற்பத்தி மூலதனத்திலிருந்து பிரிக்கப்பட்டிருக்கிறது; பண மூலதனத்திலிருந்து மட்டுமே வருமானம் பெற்று வாழும் வட்டிக்கு விடுபவர், ஆலை அதிபர் மற்றும் மூலதனத்தை நேரடியாக நிர்வகிக்கும் அனைவரிடமிருந்தும் பிரிக்கப்பட்டிருக்கிறார். ஏகாதிபத்தியம் அல்லது நிதி மூலதனத்தின் ஆதிக்கம், இப் பிரிதல் பூதாகரமான விகிதத்தை அடைந்த முதலாளித்துவத்தின் அதிஉயர்ந்த கட்டமாகும். மூலதனத்தின் மற்றெல்லா வடிவங்கள் மீதும் நிதி மூலதனம் உச்சமட்ட மேலாதிக்கம் பெற்றிருப்பதன் பொருள் வட்டிக்கு விடுபவர் மற்றும் நிதிக் கொடுங்கோன்மையின் மிகு நிலை ஆதிக்கத்தைக் குறிக்கிறது. இதன் பொருள், மிகச் சிலவான நிதி மூலதன ரீதியில் சக்தி வாய்ந்த அரசுகள் மற்றெல்லா நாடுகளிலும் பார்க்க தனியே பிரிவதாகும்'' (மேற்படி நூல் பக். 69). சிறு வட்டி லேவாதேவி மூலதனத்தின் வளர்ச்சியுடன் துவங்கிய முதலாளித்துவம், பூதாகரமான வட்டி லேவாதேவி மூலதனத்துடன் முடிவடைகிறது.

பல கோடானுகோடி நிதியை ஒருசில நாடுகளில் நிதி மூலதனமாக மிதமிஞ்சிய அளவில் ஏகாதிபத்தியம் குவிக்கிறது, எனவே சோமபி இருப்பதையே தொழிலாகக் கொண்ட, எந்தத் தொழிலிலும் பங்கேற்காத, பங்கு விடைத்தாள்களை மட்டுமே கிழித்துக் கொண்டிருக்கும் ஒரு வர்க்கம் அல்லது வட்டிக்கு விடும் ஒரு சமுதாய பிரிவு அசாதாரண வேகத்தில் இநநாடுகளில் வளர்கிறது. ஏகாதிபத்தியத்தின் சாராம்சமான பொருளாதார அடிப்படைகளில் ஒன்றான மூலதன ஏற்றுமதி, முன்னெப்போதும் இல்லாத அளவு இந்த வர்க்கத்தை வளர்ப்பதால், ஏகாதிபத்தியத்தின் மிக முக்கியமான போக்குகளில் ஒன்றான 'வட்டிக்கு விடும் அரசுகள்' அல்லது வட்டி லேவாதேவி அரசுகளாக சில ஏகாதிபத்திய நாடுகள் தோன்றி மேலும் மேலும் வளர்கின்றன; உலகம் விரல் விட்டு எண்ணக்கூடிய வட்டி லேவாதேவி அரசுகளாகவும் மிகப்பெரும்பான்மையான கடனாளி அரசுகளாகவும் பிரிந்திருக்கின்றன. இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே இங்கிலாந்து மட்டும் மூலதன ஏற்றுமதியை இருபது ஆண்டுகளுக்கு முன்பிருந்ததை விட இரண்டரை மடங்கு அதிகரித்ததன் மூலம் உலகின் மிகப் பெரும் வாணிக நாடான இங்கி

லாந்தில் அந்நிய வணிகத்தின் மூலம் பெற்ற வருமானத்தை விட 'வட்டிக்கு விடுபவர்கள்' ஐந்து மடங்கு கூடுதலான வருமானம் பெற்றனர். பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, பெல்ஜியம், சுவிஸ் மற்றும் அமெரிக்காவின் மூலதன ஏற்றுமதி மூலம் 'வட்டிக்கு விடும்' அரசுகளாக அப்பொழுதே மாறி விட்டன. ஏகாதிபத்திய நாடுகளில் ஆலைப் பொருட்களின் உற்பத்தியும், உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதியும் நிச்சயமாக உயர்ந்திருப்பினும் கூட, வட்டி, லாப பங்கீடு, உத்திரவாதப் பத்திரங்கள், கமிஷன் கழிவுகள், வர்த்தக சூதாட்டங்கள் மூலமான வருமானம் ஏகாதிபத்திய நாடுகளின் மொத்த தேசியப் பொருளாதாரத்தில் ஒப்பீட்டு வகையில் கூடுதலான முக்கியத்துவம் பெற்றுவருகிறது. இதுதான் ஏகாதிபத்தியத்தின் ஏற்றத்துக்கான பொருளாதார அடிப்படையாக அமைகிறது. பொருட்களை விற்பவர் வாங்குபவரோடு பிணைக்கப்பட்டிருப்பதைவிட மூலதனக் கடனளிப்பவர் கடன் வாங்குபவரோடு இறுக்கமாகப் பிணைக்கப்பட்டிருக்கிறார். அரசியல் சார்பு அல்லது கூட்டு நாடுகளுக்கே கடனளிப்பதும் முக்கியமாக இருக்கிறது—ஆகிய கருத்துக்களை லெனில் வலியுறுத்துகிறார் (மேற்படி நூல், பக் 111—122). இவை ஒருபுறம் ஏகாதிபத்திய நாடுகளில் வட்டிக்கு விடுபவர்கள் உற்பத்தியிலிருந்து மேலும் மேலும் முற்றிலும் பிரிவது மற்றொரு புறம் மொத்தமாக ஏகாதிபத்திய நாடுகள் அனைத்தும் பல அந்நிய மற்றும் காலனி நாடுகளின் உழைப்பாளர்களைச் சுரண்டியே வாழ வேண்டியிருக்கின்றன என்ற ஏகாதிபத்தியம் மற்றும் ஏகாதிபத்திய ஒட்டுண்ணித்தனம் ஆகிய சாராம்சத்தையே நிரூபிக்கின்றன.

ஏகாதிபத்தியத்தின் ஒட்டுண்ணித்தனம் ஏகாதிபத்திய நாடுகளின் மேட்டுக்குடி தொழிலாளர் வர்க்கம் உட்பட பெரும்பாலான நிதியாளர்கள், முதலீட்டாளர்கள், அரசியல் மற்றும் தொழில் அதிகாரிகள் ஆகிய மேல்தட்டுப் பிரிவினரை மேலும் மேலும் காலனிய, அரைக்காலனிய. சார்பு நிலை நாடுகளில் அடிக்கும் கொள்ளையைச் சார்ந்து நிற்கும்படி செய்கின்றன. அத்துடன் தொழில் நுட்ப ரீதியில் அதி உயர்ந்த உற்பத்தி, ராணுவம், வணிகம், போக்குவரத்து, செய்திதொடர்பு இன்னும் சில இன்றியமையாத தொழில்களில் மட்டும் ஈடுபடுவதாக மொத்த சமுதாய உற்பத்தியையே ஒருமுனைப்படுத்தி விடுகிறது. ஏகாதிபத்தியத்தின் தனிச் சிறப்பான அம்சங்களில் ஒன்றாக ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து வெளியே குடியேறுவது போய் பின்தங்கிய நாடுகளிலிருந்து மலிவான உழைப்பை விற்பவர்கள் குடியேறுவது பிரதானமாகியுள்ளது. விவசாயம், சுரங்கத் தொழில் ஆலைகளில் கரடு முரடான வேலைகள் என்று கூடுதலான உடலுழைப்பின் சுமையும் ஏகாதிபத்திய நாடுகள் மற்ற நாடுகள் மக்களின் மீது சுமத்துகின்றன. எனவேதான் முதலாளித்துவத்தின் முதற் கட்டத்தில் காலனியாதிக்க நாடுகளின் பரிவர்த்தனைப் பண்ட ஏற்றுமதியும் காலனிய, அரைக் காலனிய நாடுகளிலிருந்த தரகு முதாளிகள்

அவற்றுடன் வணிகக் கூட்டுக்களையும் பிரதானமாக கொண்டிருந்தது போய், முதலாளித்துவத்தின் இரண்டாவது கட்டமாகிய ஏகாதிபத்தியத்தின் கீழ் மூலதன ஏற்றுமதியும் தரகு முதலாளிகள் அவற்றுடன் உற்பத்திக் கூட்டுக்களையும் பிரதானமாக கொண்டிருப்பது வந்தது. போட்டி முதலாளித்துவ அடிப்படையில் முதலாளித்துவ உலகச்சந்தை என்ற உறவு முறையிலிருந்து ஏகபோகம் மற்றும் நிதி மூலதனத்தின் நிதிக் கொடுங்கோன்மை அடிப்படையில் ஏகாதிபத்திய உலக கட்டமைவாக வளர்ந்தது.

எனவே தான் சொல்லிக் கொள்ளப்படும் உலகு தழுவியதான மூலதனத் திரட்சியும், பன்னாட்டு மற்றும் நாடுகளின் பரஸ்பர பங்கு நிறுவனங்கள், அரசு ஏகபோகம், ஏகாதிபத்தியங்களின் உள்மயமாகுதல், மூன்றாம் உலக நாடுகளின் உள்நாட்டு முதலாளிகள் உற்பத்தியிலீடுபடுவது மற்றும் உற்பத்தி முறைகுலைவு ஆகியவை முதலாளித்துவ அரசியல் மற்றும் சமூகவியலாளர்கள் கதைப்பது போன்று ஏகாதிபத்தியத்தின் இரண்டாவது இடைக் கட்டத்திலதும் இரண்டாவது உலகப் போருக்குப் பிந்தியதுமான புதிய விஷயமல்ல. ஏகபோகமும் நிதிமூலதனத்தின் நிதிக் கொடுங்கோன்மையும், மூல்தன ஏற்றுமதியும் மேலாதிக்கம் பெற்ற ஏகாதிபத்திய உலகக் கட்டமைவு தோன்றியபோதே அவற்றின் விளைவாக எழுந்ததாகும்.

"ஏகபோக முதலாளித்துவ கூட்டுப் பிணைப்புகள், கார்டல்கள், சிண்டிகேட்டுகள், டிரஸ்டுகள் எல்லாவற்றுக்கும் முதலில் உள்நாட்டுச் சந்தையைத் தமக்குள் கூறுபோட்டுக் கொள்கின்றன. ஒரு நாட்டின் தொழிலையே ஏறக்குறைய முழுமையாக உடைமையாகக் கைப்பற்றுகின்றன. ஆனால் முதலாளித்துவத்தின் கீழ் உள்நாட்டுச் சந்தை அந்நியச் சந்தையுடன் பிணைக்கப்பட்டுள்ளது. வெகுகாலத்திற்கு முன்பே முதலாளித்துவம் உலகச் சந்தையை தோற்றுவித்துவிட்டது. மூலதன ஏற்றுமதி அதிகரித்ததால் எல்லா வழிகளிலும் பெரும் ஏகபோகக் கூட்டுப் பிணைப்புகளின் 'செல்வாக்கு மண்டலங்கள்' காலனிய மற்றும் அந்நிய தொடர்புகள் விரிவானதால் இந்த கூட்டு பிணைப்புகளுக்கிடையில் சர்வதேச ஒப்பந்தங்களுக்கும், சர்வதேச கார்ட்டல்களுக்கும் விசயம் 'இயற்கையாகவே' நகர்ந்து சென்றது.

"இது முந்திய கட்டங்களைவிட ஒப்பிட முடியாத அளவு உயர்ந்ததான, மூலதனம் மற்றும் உற்பத்தியின் உலகு தழுவிய ஒரு திரட்டலின் ஒரு புதிய கட்டமாகும். இந்த அதி ஏகபோகம் எவ்வாறு வளர்ந்தது என்று பார்ப்போம்' (மேற்படி நூல், பக்-79) எனக் கூறி மின்சாரம், எண்ணெய், கப்பல் போக்குவரத்து, இருப்புப்பாதை, எஃகு மற்றும் துத்தநாகம் ஆகிய தொழில்களை எடுத்துக் கொண்டு சர்வதேசக் கார்ட்டல்கள், சிண்டிகேட்டுகள், டிரஸ்டுகள் மற்றும் கூட்டுப் பிணைப்புகள் உருவானதை லெனின் ஆய்வு செய்துள்ளார். இத்துடன் [illegible]ருக்கு ஜெர்மனியை எடுத்துக் கொண்டு பூதாகரமான

அடக்க முதலீடு, லாப விகிதக் குறைவு, தொழில் வளர்ச்சிக்கான அடித்தளக் கட்டுமானங்கள், ஒட்டாண்டியாகும் தனியார் தொழிலைப் புனரமைப்பது ஆகிய காரணங்களுக்காக அரசு ஏகபோகம் உருவாகி வளர்கிறது என்றார். "நிதி மூலதன சகாப்தத்தில் எவ்வாறு தனியார் மற்றும் அரசு ஏகபோகம் பின்னிப் பிணைந்துள்ளது என்பதை தெளிவாகப் பார்த்தோம். ஆனால் அவை இரண்டுமே எவ்வாறு உலகைக் கூறு போடுவதற்கான பெரும் ஏகபோகங்களுக்கு இடையிலான ஏகாதிபத்திய போராட்டத்தில் தனித்தனிக் கண்ணிகளாகும் என்பதையும் தெளிவாகப் பார்த்தோம்" (மேற்படி நூல், பக். 85—86 என்று விளக்குகிறார்.

உலகு தழுவிய மூலதனத் திரட்சி, பன்னாட்டு மற்றும் நாடுகளுக்கு இடையில் பரஸ்பர நிறுவனங்கள், அரசு ஏகபோகம் ஆகியவற்றின் தோற்றம், ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கமும் சுரண்டலும், உள்மயமாகுதல் மற்றும் மூன்றாம் உலக நாடுகளின் உற்பத்தி முறைகுலைவு ஆகிய புதிய வடிவங்களுக்காக மாறிய சந்தையே ஏகாதிபத்தியத்தின் இரண்டாம் இடைக்கட்டத்தின் குணரீதியான மாறுதல் என்றும், இவற்றை அடிப்படையாகக் கொண்டவையே ஏகாதிபத்தியவாதிகள் புதிய நவீன காலனி ஆதிக்கக் கொள்கைகள் என்றும் முதலாளித்துவ அரசியல் மற்றும் சமூகவியலாளர்கள் கதைக்கிறார்கள். ஏகாதிபத்தியம் இரண்டாம் இடைக் கட்டத்தில் நுழைந்திருப்பதும், பெரும்பாலான மூன்றாம் உலகநாடுகள் அதிகார பூர்வமாக அரசியல் சுதந்திரம் பெற்றிருப்பதும், ஏகாதிபத்தியங்கள் புதிய நவீன காலனி ஆதிக்கக் கொள்கைகளை பின்பற்றுவதும் உண்மையே எனினும் இவர்கள் அவற்றுக்கான மூலமாகிய ஏகாதிபத்தியத்தின் தனிச்சிறப்பான குணாம்சங்களான ஏகபோகம், நிதிமூலதனம் நிதிக் கொடுங்கோன்மை, மூலதன ஏற்றுமதி, ஒட்டுண்ணித்தனமும் அழிவும் ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்யவில்லை. மாறாக இந்த இடைக் கட்டத்தின் குண ரீதியான மாறுதல்களையும் அம்சங்களையும் ஆய்ந்தறிய போட்டி முதலாளித்துவம், சமனற்ற பரிமாற்றம், சமனற்ற தொழில் நுட்ப வளர்ச்சி, உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி, உற்பத்தி முறையில் சமனற்ற வளர்ச்சி ஆகியவற்றையே அடிப்படை கருதுகோள்களாகக் கொண்டிருக்கின்றனர்.

ஏகாதிபத்தியக் கட்டமைவு பற்றி ஆய்ந்தறிவதற்கான இந்தப் பிழையான கருதுகோள்களை அடிப்படையாகக்கொண்டு ஏகாதிபத்தியத்தின் எல்லா அடிப்படை , முரண்பாடுகளையும் அவை நாளும் ஆழமாவதையும், பின் விளைவுகளையும் இருட்டடிப்பு செய்கின்றனர். ஏகாதிபத்தியத்தின் குறிப்பாக இரு மேல்நிலை வல்லரசுகளின் அரசியல், இராணுவ மேலாதிக்கப் போக்குகளை மூடி மறைத்து மூன்றாம் உலக நாடுகளுடனான அவற்றின் ஆக்கிரமிப்பு மற்றும் யுத்தவெறி முயற்சிகளையும் இருட்டடிப்பு செய்கின்றனர். அடக்கி ஒடுக்கப்பட்ட நாடுகளுக்கு

ஏகாதிபத்தியம் தாமே சுதந்திரம் வழங்கும் சைவப்புலியாகி விட்டதாக இவற்றின் மூலம் சித்தரிக்கின்றனர்.

காலனியக் கொள்கையும், ஏகாதிபத்தியமும் முதலாளித்துவத்தின் இன்றைய புதிய கட்டத்திற்கு முன்பே, ஏன் முதலாளித்துவத்திற்கு முன்பே கூட நிலவி வந்தன. அடிமை முறையோடு ரோம், காலனியக் கொள்கை மற்றும் ஏகாதிபத்தியத் தன்மை கொண்டிருந்தது. ஆனால் சமூக பொருளாதார கட்டமைவுகளுக்கு இடையில உள்ள வேற்றுமைகளை ஆய்ந்தறிவது மிக முக்கியமானது. முதலாளித்துவத்தின் முந்திய கட்டங்களது காலனியக் கொள்கையே கூட நிதி மூலதனத்தினுடையதைவிட வேறானது. சுதந்திரமான போட்டி முதலாளித்துவம் நன்கு வளர்ந்து கோலோச்சிய காலத்தில் காலனிய கொள்கையை எதிர்த்துக் கால்னிகளின் விடுதலைக்காக காலனி ஆதிக்க நாடுகளின் முதலாளித்துவ அரசியல் வாதிகள் வாதிட்டனர். ஆனால், அதன்பின், சென்ற நூற்றாண்டின் இறுதி இருபது ஆண்டுகளில் அவர்கள் நாடு பிடிக்கும் கொள்கைகளை ஆதரித்தனர் அத்துடன் காலனி நாடுகள் வென்றடக்கப்படுவதும் உலகைப் பிராந்தியங்களாகக் கூறு போடுவதும் அசாதரணமான, அசுரவேகத்தில் நடந்தேறியது. இது சந்தேகத்திற்கிடமின்றி, முதலாளித்துவம் ஏகபோகமாகவும், நிதி மூலதனமாகவும் மாறிய புதிய கட்டத்தை அடைந்தது மற்றும் உலகைக் கூறுபோடுவதற்கான போராட்டம் ஆழமாவதோடு பிணைந்தது என்பதைக் குறிக்கின்றது.

சென்ற நூற்றாண்டின் இறுதியிலேயே மிகப் பெரும் முதலாளித்துவ வல்லரசுகளுக்கு இடையே உலகைப் பிராந்திய அடிப்படையில் டங்கு போடுவது முழுமையடைந்துவிட்டது. ஏகாதிபத்தியத்தின் பிரதான குணாம்சங்களில் ஒன்றான பெரும் முதலாளிகளின் ஏகபோகங்கள் கச்சாப் பொருட்களின் மூலாதாரங்கள் அனைத்தையும் கைப்பற்றும்போது இந்த உண்மை உறுதியாக நிலை நிறுத்தப்படுகின்றது. சர்வதேச முதலாளித்துவ கூட்டுப் பிணைப்புகள் இரும்புத்தாது, எண்ணெய் போன்ற கச்சாப் பொருட்களை வாங்குவதால் பிறநிறுவனங்களை அவர்களுடன் போட்டியிட முடியாதவாறு செய்வதில் எல்லா வகையிலும் முயலுகின்றன; காலனிய ஆதிக்க உடமையானது ஏகபோகங்களுக்கு இதற்கான எல்லா உத்திரவாதங்களையும் தருகின்றது. ஏகாதிபத்தியம் எவ்வளவு வளர்கிறதோ அவ்வளவுக்கு கச்சாப்பொருட்களின் பற்றாக்குறை கடுமையாகிறது. போட்டியும் உலகம் முழுவதும் கச்சாப் பொருட்களுக்கான வேட்டையும் ஆழமாகின்றது. காலனிகளைக் கைப்பற்றுவதற்கான போராட்டம் உக்கிரமாகிறது.

நிதி மூலதனம் ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட கச்சாப் பொருட்களின் மூலாதாரங்களை மட்டுமின்றி வாய்ப்புடையவற்றையும் கைப்பற்ற வகைசெய்கிறது. ஏனெனில் புதிய தாதுப்

பொருட்கள் மற்றும் புதிய வேலை முறைகள் மூலம் கச்சாப் பொருட்களைப் பயன்படுத்துவது மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சியின் துரிதவேகம் காரணமாக இன்று பயனற்ற நிலங்கள் நாளை புதிய முறையில் பயன்படுத்தப்பட்டு பயன்படுபவையாகலாம் என்பது — ஆகியவை காரணமாக நிதி மூலதனம் பொருளாதாரப் பிராந்தியங்களை மட்டுமின்றி பொதுவில் பல பிராந்தியங்களை விரிவாக்கவும் கைப்பற்றவும் தூண்டுகிறது. எதிர்கால கொள்ளையின் வாய்ப்பைக் கருதியும், ஏகபோகங்களும் நிதி மூலதனமும் கூறு போடப்படாத பிராந்தியத்தின் கடைசித் துண்டுக்கான அல்லது ஏற்கெனவே கூறுபோடப்பட்டதினை மறுகூறு போடுவதற்கான கடும் போட்டியில் இழந்துவிடும் பயம் காரணமாகவும், எதிர்கால மூலாதாரங்களுக்கான வாய்ப்பையும் கணக்கில் கொண்டு எல்லாவிடங்களிலும் எல்லா வகையான நிலங்களையும் எல்லா வழிகளிலும் கைப்பற்ற முயன்றன. மூலதன ஏற்றுமதி காலனிய சந்தைகளில் ஏகபோக முறைகளை சுலபமாக பிரயோகிக்க முடியும் என்பதாலும், போட்டியை முறியடிக்கவும், உத்திரவாதமான, அவசியமான ஒப்பந்தங்கள் 'தொடர்புகளுக்காகவும்' காலனிகளை வெல்வது வேகமடைந்தது. நிதி மூலதனத்தின் அடிப்படையிலான பொருளாதாரம் தவிர பிற மேற்கட்டுமானங்களின் வளர்ச்சியும் அவற்றின் அரசியல் மற்றும் சித்தாந்தமும் காலனிகளை வெல்வதைத் தூண்டுகின்றன. மொத்தத்தில் காலனியக் கொள்ளையின் பழைய உள்நோக்கங்களோடு நிதி மூலதனம், கச்சாப் பொருட்களின் மூலாதாரங்கள், மூலதன ஏற்றுமதி, 'செல்வாக்கு மண்டலங்கள்' அதாவது இலாபகரமான பேரங்கள், ஒப்பந்தங்கள், சலுகைகள், ஏகபோக லாபங்கள் இன்னும் பிறவற்றிற்கான மண்டலங்கள் இறுதியாக, பொதுவாக பொருளாதாரப் பிராந்தியத்துக்கான போட்டியை கூடுதலாக்கியிருக்கிறது.

எனவேதான் "முதலாளித்துவத்தின் இன்றைய கட்டத்தின் (ஏகாதிபத்தியத்தின்) சகாப்தம் உலகைப் பொருளாதார ரீதியில் கூறுபோடும் **அடிப்படையிலான** குறிப்பிட்ட உறவுகள் முதலாளித்துவ கூட்டுப் பிணைப்புகளிடையே வளர்வதைக் காட்டுகிறது. அதே சமயம் அதற்கு இணையாக அத்துடன் தொடர்பானதாக, உலகைப் பிராந்திய அடிப்படையிலான கூறிடுவது, காலனிகளுக்கான போராட்டம், 'பொருளாதாரப் பிராந்தியங்களுக்கான போராட்டம்' ஆகியவற்றின் அடிப்படையில் அரசுகளுக்கிடையில் அரசியல் கூட்டுப் பிணைப்புகளுக்கிடையில் குறிப்பிட்ட உறவுகள் வளர்கின்றன" (லெனின், ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சகட்டம், பீகிங்வெளியீடு 1969, பக். 89) என்றார்.

காலனிய அரசு அதிகாரத்தை ஏந்திச் சுழற்றுவதன் மூலம் காலனிய சட்டதிட்டங்கள் மூலம், நேரடி காலனிய ஆட்சி என்னும் அரசியல் மேலாதிக்கம், பொருளாதாரக் கொள்ளை ஆகிய மிகச்சாதகமான பழைய வடிவங்களைக் கைவிட்டு புதிய வடிவங்களை மேற்கொள்ளும்படி பல்வேறு காலனிய நாடுகளின்

தேசிய விடுதலை இயக்கங்கள், பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வெற்றிகள், இருஉலகப் போர்களில் ஏகாதிபத்தியங்கள் அடைந்த பலவீனம் போன்ற வரலாற்றுச் சூழ்நிலைகள் நிர்பந்தித்த போதிலும்கூட ஏகாதிபத்தியங்கள் உலகம்முழுவதும் பல்வேறு வகையில் நேரடிக் காலனி ஆதிக்கம்மூலம் அரசியல், சித்தாந்த, ராணுவ, பொருளாதார மேலாதிக்கத்தை நீட்டிக்க முயன்றன பெயரளவிலான சுதந்திரம் வழங்குவதன் மூலம் தமது செல்வாக்கை நீட்டிக்கும் வடிவத்தை இரண்டாம் உலகப் போருக்கு முன்பிருந்தே கையாண்டு வந்திருக்கின்றன. ஆங்கிலேய ஏகாதிபத்தியம் நேரடிக் காலனி ஆட்சியின்றியே மத்திய கிழக்கின் தீர்மானகரமான பகுதிகளில் ஆதிக்கம் செலுத்தி வந்திருக்கிறது. 1922 லும் 1927 லும், 1946 லும் முறையே எகிப்திலும் ஈராக்கிலும், ஜோர்டானிலும் சுதந்திரம் பிரகடனம் செய்யப்பட்டது. ஈரான் நேரடிக் காலனியாக இருந்ததில்லை. ஆனால் இந்நாடுகளும் வேறு சில பகுதிகளும் அரசியல் சட்டபூர்வமாக சுதந்திரநாடுகள் என்ற அந்தஸ்தைப் பெற்றிருப்பினும், ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் பொருளாதார ஆதிக்கம் மட்டுமல்ல, இராணுவ, அரசியல் ஆதிக்கத்தின் கீழும் இருந்தன. சீனமும் துருக்கியும் பல்வேறு ஏகாதிபத்தியங்களின் மறைமுக காலனிகளாக இருந்திருக்கின்றன. அமெரிக்க ஏகாதிபத்தியம் சைபீரியா, மெக்சிகோ, வெனிசூலியா, பொலிவியா, கியூபா போன்றவைகளை மறைமுக காலனிகளாக ஆண்டு வந்திருக்கிறது. இவ்வாறு ஏகாதிபத்தியவாதிகள் மறைமுக காலனியாதிக்கக் கொள்கையை வெகு காலத்திற்கு முன்பிருந்தே பின்பற்றி வந்திருப்பினும், இரண்டாம் உலகப் போருக்குப்பின் புதிய காலனி வாதத்தைப் பிரதான வடிவமாக ஏகாதிபத்தியக் கட்டத்திலேயே புதிய இடைக் கட்டத்தின் யுத்த தந்திரமாக பின்பற்றும்படி நிர்பந்திக்கப்பட்டனர்.

ஏகாதிபத்தியவாதிகள் தமது அரசியல், சித்தாந்த, ராணுவ, பொருளாதார ஆதிக்கத்தை பழைய காலனி நாடுகளில் நீடிக்கும் பொருட்டு இரண்டாம் உலகப் போருக்குப் பின் புதிய காலனியக் கொள்கையைப் பிரயோகித்து பல்வேறு வகைகளில் அரசியல் மோசடிகளைச் செய்தனர். தென்கிழக்காசியாவில் மீண்டும் காலனிய ஆதிக்கத்தை நிறுவும் நடவடிக்கைகளில் இறங்கினர். இரண்டாம் உலகப்போரில் ஜப்பான் சரணடைந்ததும் தென் கிழக்கு ஆசியநாடுகளின் பொறுப்பேற்று இருந்த ஆங்கிலேய ஏகாதிபத்தியப்படையும் பிரதிநிதிகளும் வந்து சேருவதற்குள் வியட்நாமிய மக்கள் புதிய சுதந்திர அரசையும் படையையும் நிறுவி அதிகாரத்தைக் கைப்பற்றினர். ஆனால் வியட்நாமின் தென்பகுதியில் இறங்கிய ஆங்கிலேயப் படையும் பிரதிநிதிகளும் சரணடைந்த ஜப்பானியப் படையை ஆயுதபாணியாக்கி, தோல்வியுற்ற பிரெஞ்சுப் படையைப் பலப்படுத்தி, ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தி காலனிய ஆதிக்கத்தை நிலைநாட்டியது. அங்கிருந்து வியட்நாம் முழுவதும் காலனி ஆதிக்கம் பெறப் போரிட்ட பிரான்ஸ் 1954-ல் தியன் பியான் பூ-வில் தீர்மானகரமாக தோற்கடிக்கப்பட்ட பின் அமெரிக்க ஏகாதிபத்தியம் தலையிட்டு தொடர்ந்து வியட்நாமை

அடிமை கொள்ள போரில் இறங்கியது; புதிய காலனியாக்கியது. வியத்நாமைப் போன்றே இந்தோனேசியாவில் டச்சு காலனியாதிக்க வாதிகள் ஜப்பானிய மற்றும் ஆங்கிலேய ஏகாதிபத்திய ஆதரவுடன் திரும்பவும் தமது ஆட்சியை நிலைநாட்ட நாடு பிடிக்கும் போரில் இறங்கினர். ஆனால் மூன்றரை ஆண்டுகள் தேசிய விடுதலைப் போரை வீரத்துடன் நடத்தி சுகர்ணோ தலைமையில் இந்தோனேசிய மக்கள் விடுதலை அடைந்தனர்.

இந்தோனேசியாவில் டச்சும், இந்தோ சீனத்தில் பிரான்சும், ஆங்கிலேய ஏகாதிபத்திய உதவியுடன் காலனி ஆதிக்கத்தை திரும்ப நிலைநாட்ட முயன்றதை, மலேசியாவில் ஆங்கிலேய ஏகாதிபத்தியம் வெற்றிகரமாக சாதித்தது. மலேசிய மக்களின் ஜப்பானிய எதிர்ப்புப் படை, ஆங்கிலேயர்கள் சிங்கப்பூரில் தோற்றோடியபின், ஜப்பானுக்கு எதிராக தீரமிக்க போர்நடத்தி முக்கிய மையங்களில் அதிகாரத்தைக் கைப்பற்றியிருந்தது. ஜப்பான் சரணடைவுக்குப்பின் வந்த ஆங்கிலேய ஏகாதிபத்தியவாதிகள் மலேயமக்கள் படையை நிராயுதபாணியாக்க முயன்றபோது தொழிற்சங்க மற்றும் தேசபக்த ஜனநாயக அமைப்புகளின் தலைவர்களைப் படுகொலை செய்தபோது கொரில்லாப் போர் மூண்டது. பல தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டு மக்கள் படை பின்னடைவுக்குள்ளானபோது தமது அடிவருடிகளான நிலப்பிரபுக்கள், தரகு முதலாளிகளிடம் அரசியல் அதிகாரத்தை ஒப்படைத்தனர்.

கொரியாவின் வடபகுதியை சோவியத் படையும், பொதுவுடமைக் கட்சியின் தலைமையிலான தேசிய விடுதலைப் படையும் ஜப்பானிய ஏகாதிபத்தியத்தை முறியடித்து விடுதலை செய்திருந்தன. தென்பகுதியில் அமெரிக்கப்படையும் பிரதிநிதிகளும் வந்து சேருமுன் கொரியாவின் அனைத்துப் பகுதி பிரதிநிதிகளும் கூடி ஏகாதிபத்திய எதிர்ப்புத் தலைவர் லியூ ஆன் கியூங் (LYUH-WOON HYANG) தலைமையிலான கொரிய மக்கள் குடியரசைப் பிரகடனம் செய்தனர். ஆனால் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தென் கொரிய தேசிய ஜனநாயக இயக்கத்தை ஒடுக்கி, லியூ ஆன் கியூங்கைப் படுகொலை செய்து, அதுவரை அமெரிக்காவில் 'இடைக்கால அரசாங்கம்' என்னும் பிற்போக்கு அமைப்பை நடத்தி வந்த சைங்மான் ரீ (SYNGMAN RHEE) என்ற சர்வாதிகாரி தலைமையில் அமெரிக்க ஏகாதிபத்திய ஆதரவு பொம்மை அரசை நிறுவினர். பிலிப்பைன்சிலும் பலம் வாய்ந்த ஜப்பானிய எதிர்ப்பு ஹுக் பாலா ஹாப் (HUK BALA HAB) என்னும் தேசிய விடுதலைப் படை பல பகுதிகளை விடுதலை செய்திருந்ததோடு மக்கள் செல்வாக்கையும் பெற்றிருந்தது. ஆனால் பின்னர் வந்திறங்கிய அமெரிக்கப் படையும் பிரதிநிதியும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் 1934 இல் நிறைவேற்றியிருந்த பிலிப்பைன்ஸ் சுதந்திரச் சட்டத்தை 1946 இல் தான் அமுலபடுத்தினர். ஆனால் அதற்கு முன்பே ஏகாதிபத்தியக் கொள்ளையையும் ஒடுக்குமுறையையும் நீடிப்பதற்காக

பல்வேறு வகைகளில், அரசியல், இராணுவ, பொருளாதார ரீதியாக சமனற்ற ஒப்பந்தங்களைத் திணித்தனர். இராணுவம் மற்றும் நிதி ஆதிக்கத்தைக் கொண்டு அமெரிக்காவின் யுத்த கால பொம்மையான மானுவல் ரோக்காஸ் (Manuel Rokas) என்பவனை ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறச் செய்தனர். இராணுவத்தளங்களை இலவசமாக நிறுவினர். அதன்பின் தேசிய விவசாயிகள் யூனியன் மற்றும் பொதுவுடமை கட்சியை தடை செய்தனர். அவற்றின் தலைவர்களைப் படுகொலை செய்ததுடன் மக்கள் மீதும், மக்கள் விடுதலைப் படைமீதும் தாக்குதல் தொடுத்தனர். ஆயிரக்கணக்கான அமெரிக்கப் படையினர் விவசாய சீர்திருத்தத்தில் இறங்கியிருந்த மக்களைப் படு கொலை செய்தபின் புதிய காலனியாதிக்கத்தை நிறுவினர்.

கிழக்காசிய, தென்கிழக்காசிய நாடுகளின் அனுபவம் ஏகாதிபத்திய காலனியாதிக்கவாதிகள் இழந்த காலனியப் பகுதிகளை மீட்கத் தீர்மானகரமாக முயன்றதையும், தோல்வியுற்றபோது காலனிய நாடுகளின் அரசியல் அதிகாரம் பொதுவுடமையாளர்கள் மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசபக்த சக்திகள் கைப் பற்றாதவாறு தடுத்து புதிய, மறைமுக காலனியாதிக்கத்தை நிறுவ அரசியல் மோசடி, இராணுவ பலாத்காரம் ஆகிய தன்னால் இயன்றதனைத்தையும் செய்தனர் என்பதையே காட்டுகின்றன. இந்த ஏகாதிபத்திய எதிர்ப்புரட்சி யுத்ததந்திரக் கொள்கைகளையே இந்தியா மற்றும் பிற நாடுகளிலும் அவர்கள் பிரயோகித்தனர். இரண்டாம் உலகப் போர் முடிவதற்கு முன்னும் பின்னும் ஆப்பிரிக்காவில் தேசிய விடுதலை இயக்கங்களை ஈவிரக்கமின்றி ஒடுக்கினர். 1947ல் மடகாஸ்கரிலும், 1948ல் கானாவிலும், 1949ல் எனுகு(Enugu), நைஜீரியாவிலும் ஏகாதிபத்தியவாதிகள் காட்டுமிராண்டித்தனத்தைக் கட்டவிழ்த்து விட்டனர். காலனியாதிக்கவாதிகள் தாமே வெளியேறுவதாக என்றுமில்லை. மக்கள் ஆயுதமேந்திப் போராடவே வேண்டியிருந்தது. காமெருனிலும் (Cameroons) கென்யாவிலும், அல்ஜீரியாவிலும், துனிசியாவிலும், மொராக்கோவிலும், எகிப்திலும் ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆயுதப் போராட்டங்களே விடுதலையைத் தேடித் தந்தன.

ஏகாதிபத்தியவாதிகள் இரண்டாம் உலகப்போருக்கு முந்திய வடிவமைப்பிலேயே காலனிய ஆட்சியை சாராம்சத்தில் நிலை நாட்ட ஆசிய, ஆப்பிரிக்காவில் எல்லா வகைகளிலும் முயன்றனா எங்கெல்லாம் அவசியமாக அல்லது சாத்தியமாக இருக்கிறதோ அங்கெல்லாம் பலாத்காரமாகவோ (அங்கோலா, மொசாம்பிர். கினியா-பிசாவ்) வெள்ளைச் சிறுபான்மையைப் பயன்படுத்தி, யோ (ரொடீசியா, தெற்கு, தென்மேற்கு ஆப்பிரிக்கா) காலனி ஆதிக்கத்தை நீடித்தனர். ஆனால் இரண்டாம் உலகப் போருக்குப் பின் முதல் பத்தாண்டிலேயே அவர்கள் முயற்சி தோல்வியுற்று பின்வாங்கும் படி மேற்கண்ட நாடுகள் தவிர பிற காலனி நாடுகளில் தேசிய விடுதலை இயக்கங்கள் வலுத்து நிலமைகள் நிர்பந்தித்தன. தமது விருப்பத்திற்கு மாறாக பின்வாங்க வேண்டி

யிருப்பினும், பெயரளவிலான சுதந்திரமளிப்பது, ஏகாதிபத்தியவாதிகளுக்குப் பெரும் பிரச்சினையாக இருக்கவேயில்லை. என்ன விலை கொடுத்தாகிலும். உறுதியான ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளின் குறிப்பாக பொதுவுடமைக் கட்சிகளின் தலைமையிலான சுதந்திரமான அரசாங்கங்கள் தோன்றுவதை, அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதைத் தடுப்பதற்காக உக்கிரமான எதிர்ப்புரட்சி போராட்டங்கள் நடத்தின.

இதற்காக தேசிய விடுதலை இயக்கங்கள் உச்சகட்டத்தை அடைந்த நாடுகளில் ஏகாதிபத்தியவாதிகள் எடுத்த முதல் நடவடிக்கை மூர்க்கத்தனமான பலாத்காரத்தால் இராணுவ நடவடிக்கையால் மக்கள் ஆதரவு பெற்ற தேசபக்த ஜனநாயகத் தலைவர்களைப் படுகொலை செய்வது, மக்கள் திரள் அமைப்புகளைத் தடைசெய்வது; இடது சாரி தேசிய இயக்கத்தையும், தலைவர்களையும் அதேமாதிரி செய்வது; இவ்வாறு ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளை அடக்கி ஒடுக்கியபின் தமது அரசியல், ராணுவ, பொருளாதார நலன்களை உத்திரவாதம் செய்யும் தரகு முதலாளிகள், நிலப்பிரபுக்களிடம் அரசியல் அதிகாரத்தை மாற்றி பெயரளவிற்கான சுதந்திரம் வழங்குவது —இதுவே ஏகாதிபத்தியவாதிகள் பின்பற்றிய புதிய காலனிய யுத்த தந்திரக் கொள்கை ஆகும். இன்றுவரை பல ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் பின்பற்றும் கொள்கையும் ஆகும். இதற்கு கயானா, பாஸ்டோலாந்து, சுவாசிலாந்து, மால்டா, பிரேசில், சிலி, வெனிசிலியா என்று பல சான்றுகள் கூற முடியும். இம்மாதிரி பெயரளவிலான சுதந்திரம் அளிப்பதன் மூலம், தமது அரைக்காலனிய, நவீன காலனிய சார்பு நாடுகளாக பழைய காலனி நாடுகளைத் தக்கவைத்துக் கொள்வதில் ஏகாதிபத்தியங்கள் ஓரளவு வெற்றி பெற்றன. ஆனால் ஆயுதந்தாங்கிய போராட்டத்தின் மூலமும் சர்வதேசிய சூழ்நிலைகள் காரணமாகவும் காலனிய அரசு எந்திரத்தை தூக்கி எறிந்து தேசிய விடுதலைப் போரில் வெற்றி பெற்ற நாடுகள் அரசியல் ரீதியில் சுதந்திரமடைந்தன.

முதலாளிய ஏகாதிபத்திய சகாப்தத்தில் பல்வேறு மாறுபட்ட வடிவங்களை, நாடுகள் அவற்றின் வளர்ச்சிப் போக்கிலடைகின்றன என்பதை லெனின் முன்கூட்டியே சுட்டிக் காட்டியிருக்கிறார். "முதலாளித்துவ ஏகாதிபத்திய சகாப்தத்தின் காலனியக் கொள்கைபற்றி நாம் பேசுவதால், நிதி மூலதனம் மற்றும் அதற்கு பொருத்தமாக உலகை அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் கூறு போடுவதற்கான பெரிய வல்லரசுகளின் போராட்டமாக சுருங்கிவிடும் நிதி மூலதனத்தின் அந்நியக் கொள்கை ஆகியவை பலவாறான அரசு சார்பு நிலையின் மாறுதல் வடிவங்களை எடுக்கச் செய்கின்றன என்பதை நாம் கவனிக்க வேண்டும் இந்த சகாப்தத்தின் மாதிரிகள் காலனிகள், காலனியாதிக்க நாடுகள் என்று பிரதானமாக இரண்டு வகையான நாடுகள் மட்டுமல்ல, மாறாக அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்ட அரசியல் ரீதியில் சுதந்திரமடைந்தவை,

ஆனால் உண்மையில் நிதி மற்றும் இராஜாங்க தூதரக முறை ஆகியவற்றால் சார்பு நிலை என்ற வலையால் கட்டப்பட்டவை என்கிற வகையில் வடிவங்களிலான சார்பு நிலைநாடுகளும் கூட இருக்கின்றன. அரைக்காலனி—என்ற ஒரு சார்புநிலை வடிவத்தை ஏற்கனவே சுட்டிக்காட்டியிருக்கிறோம். மற்றொரு வடிவத்திற்கான சான்று அர்ஜெண்டினா தருகிறது'' (மேற்படி நூல், பக்கம் **101**);

ஏகாதிபத்தியங்கள் தமது காலனி ஆதிக்கக் கொள்கைகளை மாற்றிக் கொள்ளும்படியும் பெயரளவிலான சுதந்திரம் பெற்ற அரைக்காலனி, நவீனகாலனி மற்றும் அரசியல் சுதந்திரம் பெற்ற நாடுகள் என்று பல்வேறு மாறுதலையும் சார்புநிலை அரசு வடிவங்களை மேற்கொள்ளும்படியும் நிர்பந்திக்கப்பட்டதானது, ஏகாதிபத்தியத்தின் இரண்டாவது இடைக் கட்டத்தை தோற்றுவித்திருப்பதும் பாட்டாளிவர்க்கமும் அடக்கி ஒடுக்கப்பட்ட நாடுகளும் மக்களும் புதிய யுத்த தந்திரத்தை மேற்கொள்ளும்படியானதும் உண்மையே. எனினும் ஏகாதிபத்தியத்தின் அடிப்படை முரண்பாடுகள் தீர்ந்துவிடவோ, அதன் சாராம்சம் மாறிவிடவோ இல்லை. ஏகபோகம், நிதிமூலதனத்தின் நிதிக்கொடுங்கோன்மை, மூலதன ஏற்றுமதி, சர்வதேசிய ஏகபோக முதலாளித்துவ கூட்டுப் பிணைப்புகள். அவை உலகை பிராந்திய அடிப்படையில் பங்கீடும் மறு பங்கீடும் செய்வது ஆகிய ஏகாதிபத்தியத்தின் தனிச்சிறப்பான குணாம்சங்களை அடிப்படையாகக் கொண்டு ஏகாதிபத்தியங்களுக்கு உள்ளும், அவற்றுக்கும் பிற நாடுகளுக்கும் உள்ள உறவில் ஏற்படும் மாறுதல்களை ஆய்ந்தறியும் போதுதான் ஏகாதிபத்தியத்தின் அனைத்து அடிப்படை முரண்பாடுகளும், அதன் விளைவாக பாட்டாளி வர்க்க இயக்கத்தின் அனைத்து அடிப்படை முரண்பாடுகளும் எவ்வாறு கூர்மை அடைந்துள்ளன மற்றும் அவற்றின் விளைவுகள் என்னவென்பதை அறியமுடியும். இன்றைய இடைக் கட்டத்தின் குணரீதியான மாறுதல்களாக மூன்றுலகக் கோட்பாட்டின் முடிவுகளின் சாராம்சத்தைப் புரிந்து கொள்ளமுடியும். மாறாக முதலாளித்துவ அரசியல் மற்றும் சமூகவியலாளர்கள் மைய நாடுகள், விளிம்பு நாடுகள் என்று உலகை இரண்டாகப் பிரித்து, முதலாளித்துவ முதற்கட்டத்தின் தனிச்சிறப்பான குணாம்சங்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்ந்தறிகின்றனர். ஒருபுறம் ஏகாதிபத்தியங்களிடையே சமாதானம் என்றும் மற்றொருபுறம் அவற்றுக்கும் அரசியல் சுதந்திரம் பெற்றுள்ள பிற நாடுகளுக்கும் இடையே பொருளாதார ரீதியிலான சார்பு நிலை மட்டுமே நிலவுகிறது என்றும் கூறுகின்றனர். கோட்பாடு ரீதியில் இக்கருத்து முற்றிலும் முட்டாள்தனமானது; நடைமுறை ரீதியில் ஏமாற்றக் கூடிய பொய்வாதம்; மிக மோசமான சந்தர்ப்பவாதத்தை நேர்மையற்ற முறையில் நியாயப்படுத்துவதாகும்.

மைய நாடுகளுக்கிடையில் போட்டி முதலாளித்துவம், மூலதனத்தின் உலகு தழுவிய புராதனத் திரட்சி மற்றும் மைய நாடு

களுக்கும் விளிம்பு நாடுகளுக்கும் இடையில் சமனற்ற உற்பத்தி முறை வளர்ச்சி, சமனற்ற தொழில் நுட்பவளர்ச்சி, பிரதானமாக பொருட்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி, சமனற்ற பரிமாற்றம், உள்மயமாவதும் உற்பத்திமுறை குலைவும் ஆகியவை அடிப்படையிலான கோட்பாடுகள் கேடுகெட்ட காவுத்ஸ்கியின் முறியடிக்கப்பட்ட ஏகாதிபத்தியம் பற்றிய நிலைப்பாடுகளையே புதுப்பிக்கின்றன. காவுத்ஸ்கி தேசிய இனப்பிரச்சினைகளை மட்டுமே (இது மிக மிக முக்கியமானது என்றாலும்) முன் தள்ளியதும், அத்துடன் ஆலை மூலதனத்தை மட்டுமே இணைத்ததும், ஏகாதிபத்தியங்களின் விவசாயப் பிராந்தியங்களை மட்டுமே பறிப்பதற்கு முயல்வதாக சித்தரித்ததும் மற்றும் 'அதீத ஏகாதிபத்தியமும்' மேற்கண்ட முதலாளித்துவ அரசியல் மற்றும் சமூகவியலாளர்களது கோட்பாடுகளும் சாராம்சத்தில் ஒன்றேயாகும்.

போட்டி முதலாளித்துவமல்ல, ஏகபோகம்; ஆலை மூலதனமல்ல, நிதி மூலதனம்; பொருட்களின் ஏற்றுமதியல்ல, மூலதன ஏற்றுமதி; தேசிய [இனப்] பிரச்சினை மட்டுமல்ல, பாட்டாளி வர்க்கப் புரட்சியும் ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான முரண்பாடும் என்ற அடிப்படையிலிருந்தும், அம் முரண்பாடுகளுக்கு அடிப்படையான முதலாளித்துவத்தின் ஏற்றத்தாழ்வான வளர்ச்சி என்னும் முற்றும் முழுவதுமான விதி என்ற அடிப்படையிலிருந்தும், ஆய்வு செய்யும் பொழுது மட்டுமே ஏகாதிபத்திய நாடுகளுக்கு இடையே நிதி மூலதனத்தின் நிதிக் கொடுங்கோன்மையின் விளைவையும், மூலதன ஏற்றுமதியையும், ஏகபோகக் கூட்டுப் பிணைப்புகள் உருவாவதையும், சர்வதேசிய முதலாளித்துவக் கூட்டுப் பிணைப்புகள் முரண்பாடுகளை நிரந்தரமாகத் தீர்த்துவிடுவதில்லை என்பதையும் ஆய்ந்தறிய முடியும். இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் பூதாகரமாக வளரத் தொடங்கிய ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான மேற்கண்ட உறவு இன்றைய இடைக்கட்டத்தில் ஏகாதிபத்திய நாடுகள், அமெரிக்கா, ரசியா ஆகிய இரு மேல்நிலை வல்லரசுகள் அடங்கிய முதல் உலகம் மற்றும் பிற ஏகாதிபத்தியங்கள் மற்றும் முதலாளித்துவ நாடுகள் அடங்கிய இரண்டாம் உலகம் என்று பிரிந்தன.

ஏகாதிபத்தியத்தின் தனிச் சிறப்பான குணாம்சங்களின் அடிப்படையில்தான் லெனின் பின்வருமாறு கூறினார் "ஏகாதிபத்தியத்தின் தனிச்சிறப்பான குணாம்சம் விவசாய பிராந்தியங்களை மட்டுமின்றி மிக உச்சமட்ட அளவு தொழில் வளர்ச்சியடைந்த பிராந்தியங்களையும் கைப்பற்றுவதற்கும் முயலுவதாகும். [பெல்ஜியத்தை விழுங்க ஜெர்மனியும் லொரைனை விழுங்க பிரான்சும்]. ஏனெனில் 1. உலகம் ஏற்கனவே கூறுபோடப்பட்டுவிட்டது என்ற உண்மை எந்த வகையான பிராந்தியத்தையும் அடைவதற்காக மறுபங்கீடு செய்யத் துடிப்பவர்களுக்கு ஆதாரமாகும். 2. நேரடியாக தமக்காக அதிகம் இல்லாவிட்டாலும் எதிரியை பலவீனப்படுத்தவும் அவனது மேலாதிக்கத்தை உடைக்கவும், மேலாதிக்கத்திற்காக அதாவது பிராந்தியங்களை வெல்வதற்காகவும் பெரும் வல்லரசுகளுக்கு

இடையிலான போட்டி ஏகாதிபத்தியத்தின் இயல்பான ஒரு சாராம்சமாகும்'' (மேற்படி நூல், பக். 109).

மிகச் சிலவாக இருந்த ஏகாதிபத்திய வல்லரசுகளில் உலக மேலாதிக்கத்திற்காக போட்டியிடும் தகுதி பலம் வாய்ந்தவையாக அமெரிக்கா, ரசியா இரண்டு மட்டும் மேல்நிலை வல்லரசுகளாக உயர்ந்து அவை மற்ற ஏகாதிபத்திய வல்லரசுகளை இரண்டாவது அல்லது மூன்றாவது அந்தஸ்திற்குத் தள்ளியதோடு, தொழில் ரீதியில் மிக உயர்ந்த அளவு வளர்ந்த அவற்றின் பிராந்தியங்களையும் கைப்பற்ற போட்டியிடுகின்றன. இவை இந்த இடைக்கட்டத்தின் குணரீதியிலான மாறுதல்களாகும். மிக அதிக அளவு ஒன்று திரட்டப்பட்ட ஏகபோக மூலதனக் குவியலால் கட்டுப்படுத்தப்படும் அரசு எந்திரம், மற்றெல்லா நாடுகளை விட பெரியதாய் இருக்கும் பொருளாதார ஏகபோகம், இராணுவ சக்தி ஆகியவற்றைக் கொண்டு இன்றைய உலகில் மிகப் பெரும் சுரண்டல் மற்றும் ஒடுக்குமுறையாளர்களாக இருக்கும் இரு மேல்நிலை வல்லரசுகள், உலகம் முழுவதும் தமது தனிப்பட்ட மேலாதிக்கத்தை நிறுவ வெறித்தனமான யுத்தத் தயாரிப்பிலும் போட்டியிலும் இறங்கியிருக்கின்றன. இந்த அடிப்படையிலேயே பிற ஏகாதிபத்திய நாடுகளுடனும் மூன்றாம் உலக நாடுகளுடனும் உறவு கொண்டுள்ளன. ஆனால் முதலாளித்துவ அரசியல் மற்றும் சமூகவியலாளர்களும் எல்லா வண்ணத்திரிபுவாதிகளும் இ...றை மறைப்பதன் மூலம் ஏகபோகமும் நிதி மூலதனமும், ஏகபோகமற்ற, வன்மையற்ற, ஆக்கிரமிப்...ற்ற முறைகளுடன் இருப்பதாகவும், நிதி மூலதன சகாப்தத்தில் முற்றும் முழுமையாகியதும் மிகப் பெரும் முதலாளித்துவ அரசுகளுக்கிடையிலான போட்டியின் தனிச்சிறப்பான அடிப்படையாக அமைவதுமான உலகைப் பிராந்திய அடிப்படையில் கூறு போடுவது என்ற ஏகாதிபத்தியக் கொள்கை பொருளாதார ரீதியில் மட்டும் இருப்பதாகவும் பசப்புகின்றனர். இதன் விளைவு ஏகாதிபத்தியத்தின் அனைத்து அடிப்படையான முரண்பாடுகளையும் அம்பலப்படுத்துவதற்குப் பதில் குழப்புவதாகும்; திசை திருப்புவதாகும்.

முதலாளித்துவ அரசியல் மற்றும் சமூகவியலாளர்களைப் போல் பொதுவாக முதலாளித்துவத்தின் தனிச்சிறப்பான் குணாம்சங்களையன்றி, குறிப்பாக ஏகாதிபத்தியத்தின் தனிச்சிறப்பான குணாம்சங்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்யும் போதுதான் ஏகாதிபத்தியங்களுக்கும் மூன்றாம் உலகநாடுகளுக்குமான உறவில் அரைக்காலனிய, நவீன காலனிய நாடுகளின் பெயரளவிலான சுதந்திரமும், மற்ற நாடுகளின் அரசியல் ரீதியான சுதந்திரமும் எந்த அளவு உண்மையான சுதந்திரம் என்று அறிய முடியும். உள்மயமானது என்ற முறையில் உள்நாட்டு முதலாளிகள் உற்பத்தியில் ஈடுபடுவதில் ஏற்றுமதி அடிப்படையிலான உற்பத்தி மற்றும் சமனற்ற பரிமாற்றம் என்பவைகளை

விட மூலதன ஏற்றுமதி, நிதி மூலதனம் மற்றும் ஏகபோக ஆதிக்கமே பிரதான சுரண்டல் முறை என்ற அடிப்படையில் அணுக வேண்டும். ஏகாதிபத்தியத்தின் இயல்பான, குறிப்பான அரசியல் அம்சம் நிதிக்கொடுங்கோன்மையின் ஒடுக்குமுறை மற்றும் சுதந்திரமான போட்டியை ஒழிப்பது ஆகியவற்றின் விளைவாக எப்பொழுதுமே பிற்போக்கும் கூடுதலாகி வரும் தேசிய ஒடுக்குமுறையும் ஆகும். 'ஏற்றுமதி இன்னும் பிறவற்றைப் பொருத்தவரை நிதிமூலதனத்தின் சிறப்புத்தன்மைகளை விவாதிக்கும்போது ஒருவர் ஏற்றுமதியினுடைய தொடர்புகளை குறிப்பாகவும் தனித்தன்மையுடனும் நிதி மூலதனக்காரர்களின் தந்திரங்களோடும், கார்ட்டல்கள் இன்னும் பிறவற்றின் குறிப்பாகவும் தனித்தன்மையுடன் பொருட்களை விற்பதோடும் தனியே பகுத்தறியும் திறமை கொண்டிருக்க வேண்டும். வெறுமனே காலனிகளை காலனி அல்லாத நாடுகளோடும் ஒரு ஏகாதிபத்தியத்தை மற்றொரு ஏகாதிபத்தியத்தோடும் காலனி அல்லது அரைக்காலனிகளை மற்ற நாடுகளோடு ஒப்பிடுவதும், நழுவுவதும் பிரச்சனையின் சாராம்சத்தை இருட்டடிப்பு செய்வதுமாகும்'' (மேற்படி நூல் பக் 141) என்றார் லெனின்.

நிதி மூலதனத்தின் கொடுங்கோன்மை, மூலதன ஏற்றுமதியும், ஏகாதிபத்திய நாடுகளின் ஏகபோகமும், பொருட்களின் ஏற்றுமதியும் இணையும்போது எருதை இரண்டுமுறை தோலுரிப்பது போல் மூலதனத்திற்கான வட்டியும் பொருட்களின் விற்பனையும் ஆகிய இரண்டு வழிகளில் ஏகாதிபத்தியங்கள் கொள்ளையடிக்கின்றன. எனவேதான் ஏகபோகமும் நிதிக் கொடுங்கோன்மையும் விடுதலை, சுதந்திரத்திற்குப் பதில் மேலாதிக்கம் செலுத்துவதும் ஒரு சில பணக்கார அல்லது பலம்மிக்க வல்லரசுகள் நாளும் கூடுதலாகக் கொள்ளையிடுவதும் ஏகாதிபத்தியத்தின் தனிச்சிறப்பான குணாம்சங்களாகும். ஆகவே நாடுகளின் சுதந்திரத்தை அவை எந்த அளவு ஏகாதிபத்தியத்தின் ஏகபோகம் மற்றும் நிதி மூலதனக் கட்டுப்பாட்டில் உள்ளன என்பவையே தீர்மானிக்கின்றன. எனவேதான் இந்தியா போன்ற அரைக்காலனிய, நவீன காலனிய நாடுகளில் ஏகாதிபத்தியங்களின் நிதி மூலதனக் கட்டுப்பாட்டின் புள்ளிவிவரங்களை இரகசியமாகவே வைத்திருக்கின்றனர். ''சுதந்திரத்திலிருந்து அதிகார பூர்வ புள்ளி விவரங்களைக குவிப்பது படுவேகமாக வளர்ந்தது. இருப்பினும் அந்நிய முதலீடுகளின் மட்டத்தை குறிப்பது கடினமாக இருக்கிறது......அதிகார பூர்வ புள்ளிவிவரங்கள் ஒன்றோடொன்று முரண்படுகிறது. பெரும்பாலும், எவ்வாறாயினும் புள்ளி விவரங்களைப் போன்றே சட்டத்திலும் அந்நிய முதலீடுகளுக்கு 'தேசிய உருவபளிப்பதற்கு' சாதாரணமாக அனுமதிக்கும் அரசாங்கத்தின் கொள்கையிலிருந்து தொல்லை எழுகிறது. சில விதிவிலக்கு தவிர, அவை சுத்தமான இந்திய முதலீடுகளிலிருந்து வேறுபடுத்த முடியாமல் இருக்கின்றன......தனிப்பட்ட முதலீட்டாளர்கள் மற்றும் நிறுவனங்களின் அடையாளம் திறமையாக மறைக்கப்படுகிறது'' (இத்ரேன், ஆர். பி. தத், 'இந்தியாவில் அன்னியக் கூட்டுக்கான அகராதி'—

யிலிருந்து கையாளப்பட்டுள்ள மேற்கோள்கள், டி. நாகிரெட்டியின் 'அடகு வைக்கப்பட்ட இந்தியா' என்ற புத்தகத்தில் மேற்கோளிடப்பட்டவை, பக்.148) என்றும், "அமெரிக்க மூலதன முதலீடு அதிகார பூர்வ லாபத்தை உண்மை நிலைமையை விடக் குறைவாகக் காட்டும் வகையில் அடிக்கடி பெயரளவிலான பிரெஞ்சு, பெல்ஜியன் அல்லது இந்திய உடமை என்று மறைக்கப்படுகிறது" என்றும், "அந்நிய தனியார் முதலீடு, தொழில்நுட்பம் கூட்டுக்களைச் சார்ந்து நிற்பது இந்தியாவை தொழில் மயமாக்குவதில் முக்கிய பாத்திரமாற்றுகிறது என்பது மிதமிஞ்சி அறிந்ததே என்கிற அதே சமயம் இந்த வடிவத்தில் கிடைக்கும் நிதி அளவை மதிப்பீடு செய்ய முழுமையான செய்தி கிடையாது" (மேற்படி நூல்) என்றும், "துரதிருஷ்டவசமாக அந்நிய நிறுவனங்களுடன் முடிக்கப்பட்ட ஒப்பந்தங்கள் பற்றிய பிரசுரிக்கப்பட்ட செய்திகள்மிகமிக சொற்பமே.ஒப்பந்தங்களின் விவரங்களை பங்குதாரர்கள்மற்றும் ஆய்வு செய்யும் வல்லுனர்களிடமிருந்து மறைப்பது அநீதியானதாகத் தெரிகிறது" (மேற்படி நூல்) என்றும் முதலாளித்துவ, திரிபுவாத ஆசிரியர்களே கூறுகின்றனர். அதாவது தனியார் மூதலீடு மற்றும் வங்கி மூலதனக் கட்டுப்பாடு முற்றிலும் மறைக்கப்பட்டிருக்கிறது. அரசுத்துறை முதலீட்டில் அந்நிய முதவீடு, குறிப்பாக ருசிய முதலீடு, ஏழுமலை தாண்டி, ஏழு கடல் தாண்டித் தேடினாலும் அறிய முடியாதது என்பது யாவருக்கும் தெரிந்ததே ஆகும். ஏகாதிபத்தியங்களின் சுரண்டல், ஒடுக்குமுறையை, சார்புநிலையை அறிய மிக முக்கியமான அம்சம் இதுவே ஆகும். எனவேதான்; "நிதி மூலதனம் அரசியல் ரீதியான முழுச் சுதந்திரம் பெற்ற அரசுகளையும் கூட தனக்கும் கீழ்ப்படியச் செய்யும் திறமை மிக்கது. உண்மையில் கீழ்படிய வைக்கிறது என்ற முறையில் அது எல்லா பொருளாதார மற்றும் சர்தேசிய உறவுகளின் தீர்மானகரமான சக்தியாகும் என்று கூறுமளவிற்கு ஒரு பெரிய சக்தியமாகும்" என்றார் லெனின்.

முதலாளித்துவ அரசியல் மற்றும் சமூகவியலாளர்களும் எல்லா வண்ணத் திரிபுவாதிகளும் ஏகாதிபத்தியவாதிகள் மூன்றாம் உலக நாடுகளில் வெறுமனே விவசாய நிலைமைகளை பொதுவாக அபிவிருத்தி செய்து அதாவது முதலாளித்துவ விவசாயதனைப் புகுத்தி எக்கச்சக்கமாக கச்சாப பொருட்களை உற்பத்தி செய்தும், வெளிச்சந்தையில் வாங்கவும் முடிகிறது என்கின்றனர். இதுவும கூட ஏகாதிபத்தியங்களுக்கு வக்காலத்து வாங்குவதாகும். ஏனெனில் ஏகாதிபத்தியத்தின் பிரதான அம்சம் ஏகபோகமாகும். போட்டிச் சந்தை கடந்த காலத்தின் விசயமாகும். ஏகபோக சிண்டிகேட்டுகளும் டிரஸ்டுகளும் ஒவ்வொரு நாளும் அதைக் குறுக்கிச்சுருக்கி வருகிறது. மேலும் விவசாயத்தைச் சீர்திருத்துவது என்பது ஏகாதிபத்தியங்களின் சமூக அடிப்படைகளை இழப்பதும் பரந்துபட்ட மக்களின் நிலைமைகளை அபிவிருத்தி செய்வதும் கூலியை உயர்த்துவதும் மற்றும் இலாபத்தைக குறைப்பதுமாகும். தவிர்க்க முடியாமல் செய்யப்படும் சில உற்பத்தி முன்னேற்

றங்கள் கூட ஏகாதிபத்தியங்களின் ஏகபோகம், நிதி மூலதனம் மற்றும் மூலதன ஏற்றுமதி ஆகியவற்றினால் கொள்ளையடிப் பதையே பிரதானமாகக் கொண்டவையாகும்.

இவையனைத்தும் லெனின் வலியுறுத்திய ஏகாதிபத்தி யத்தின் தனிச்சிறப்பான குணாம்சங்கள் எவையும் காலாவதி யாகி விடவில்லை என்பதோடு மேலும் ஒரு உயர்ந்த மட்டத்தில் மேலும் உறுதிப்படுத்தப்படுகின்றன என்பதையேகாட்டுகின்றன. வேறெந்த வகையிலும் மார்க்சிய-லெனினியவாதிகள் இன்றைய தேசிய, சர்வதேசிய யதார்த்த நிலமைகளைத் தொகுத்தறிய முடியாது. இந்தக் கோணத்திலிருந்தே, இந்த அடிப்படைகளி லிருந்து ஒவ்வொரு மூன்றாம் உலக நாடுகளின் சமுதாய, பொரு ளாதார அரசியல் புறநிலைக் கூறுகளை ஆய்ந்தறிய வேண்டும். மூன்றாம் உலக நாடுகள் அரசியல் சுதந்திரம் பெற்றவையிலி ருந்து, காலனி நாடுகள் வரை பல்வேறு அளவுகளில் சார்புநிலை களில் அரசுகளைப் பெற்றுள்ளன. அவற்றைப் பரந்து விரிந்த முறையில் 1. அரசியல் சுதந்திரம் பெற்ற முதலாளித்துவ முறையி லான அரசு 2. ஒரு குறிப்பிட்ட ஏகாதிபத்தியத்தின் மறைமுக ஆதிக்கத்தின் கீழுள்ள முதலாளித்துவ முறையிலான நவீன காலனிய அரை நிலப்பிரபுத்துவ அரசு. 3. பல்வேறு ஏகாதி பத்தியங்களின் மறைமுக ஆதிக்கத்தின் கீழுள்ள முதலாளித்துவ முறையிலான அரைக் காலனிய அரை நிலப்பிர புத்துவ அரசு என்று மூன்று வகையினதாகப் பார்க்கலாம்ள பின்னவை இரண்டும் பெயரளவிலான சுதந்திரம் பெற்றவை. 4. இத்துடன் சில காலனிய அரசுகளும் இருக்கின்றன.

ஏகாதிபத்தியத்தின் புதிய கட்டத்தினுடைய தனிச் சிறப்பான குணாம்சங்கள் என்ற தமது சரக்குகளை கடை விரிக்கும் முதலாளிய அரசியல் மற்றும் சமூகவியலாளர்களும் எல்லா வண்ணத் திரிபுவாதிகளும் காலனிய, அரைக்காலனிய மற்றும் சார்புநிலை நாடுகள் பற்றிய மார்க்சிய-லெனினியக் கோட்பாடுகளுக்கெதிராக அவற்றையே நிறுத்த முயலுகி றார்கள். அவர்களது மூதாதையர்களான காவுத்ஸ்கி, டிராட்ஸ்கி புகாரினது 'அதீத ஏகாதிபத்தியம் மற்றும் 'ஏகாதிபத்தியப் பொருளாதார வாதத்தைப் புதுப்பிக்க முயலும் அதே வேளை யில் இவற்றுக்கெதிராக லெனினிசம் தொடுத்த சித்தாந்தப் போர்க்கணைகளேயே முன்னுக்குப் பின் முரணாக நிறுத்துவதன் மூலம் இதைச் சாதிக்க எத்தணிக்கின்றனர்.

இரண்டாம் அகிலத்தின் தலைவரான ஒடுகாலி காவுத்ஸ்கி ஏகாதிபத்தியம் பற்றி மேலும் பின் வருமாறு கூறுகின்றார். "தூய பொருளாதாரக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில் முதலாளித்துவமானது கார்ட்டல் கொள்கையை அயல் நாட்டுக் கொள்கைக்கும் விஸ்தரிக்கச் செய்வதென்னும் மேலும் ஒரு புதிய கட்டத்துக்குள், அதீத ஏகாதி பத்தியத்துக்கான கட்டத்துக்குள் (Ultra Imperia-

lism) அதாவது அதி உயர் ஏகாதிபத்தியத்துக்கான (Super Imperialism) அனைத்து உலகின் ஏகாதிபத்தியங்களுக்கிடையே போராட்டத்துக்கு அல்ல, அவற்றின் ஒன்றியத்துக்கான கட்டத்துக்கு முதலாளித்துவ யுத்தங்கள் இல்லாதொழியும் கட்டத்துக்கு சர்வதேச அளவில் ஒன்றுபட்ட நிதி மூலதனக் கூட்டாக உலகைச் சுரண்டும் ஒரு கட்டத்துக்கு செல்வது முடியாததல்ல.'' (காவுத்ஸ்கியை மேற்கோள் காட்டியுள்ளது லெனின், ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சகட்டம், பக். 151).

ஏகாதிபத்தியம் பற்றி காவுத்ஸ்கி இவ்வாறெல்லாம் சுருதி சேர்ப்பது எதற்காகவென்றால் மார்க்சிய-லெனினியத்துக்கு எதிராக ஏகாதிபத்தியங்களின் ஊதுகுழல்களுக்கு பக்கவாத்தியம். வாசிப்பதற்கேயன்றி வேறெதற்கும் அல்ல. ஆனால்காவுத்ஸ்கியின் இந்த கபட வேடத்தைக் குறித்து அம்பலப்படுத்தினார் லெனின். "அதீத- ஏகாதிபத்தியமென்று கிஞ்சித்தும் அர்த்தமில்லாமல் காவுத்ஸ்கி பேசும் பேச்சு ஏனைய பலவற்றுடன் கூட, அறவே தவறான ஒரு கருத்துக்கே ஊக்கமளிக்கிறது. ஏகாதிபத்தியத்துக்காக பரிந்து பேசுவோருக்குச் சாதகமான கருத்துக்கே, அதாவது உலகப் பொருளாதாரத்தின் உள்ளார்ந்த ஏற்றத் தாழ்வையும் முரண்பாடுகளையும் நிதிமூலதனத்தின் ஆட்சி குறையச் செய்கிறது என்ற கருத்துக்கே ஊக்கமளிக்கிறது. உண்மையில் இவ்வாட்சி இந்த ஏற்றத் தாழ்வையும் முரண்பாடுகளையும் அதிகரிக்கவே செய்கிறது.'' "அதீத ஏகாதிபத்தியம்' என்ற காவுத்ஸ்கியின் வரையறுப்புகள் தவறானது மார்க்சியத்துக்கு முரணானது என்பது பட்டுமல்ல, மார்க்சிய தத்துவத்திடமிருந்தும், மார்க்சிய நடைமுறையிலிருந்தும் நெடுகிலும் முறித்துக் கொண்டு சென்றுவிடும் ஒரு முழுத் தொகுதியாக அமையும். கருத்துக்களுக்கு அவரது இந்த இலக்கணம் அடிப்படையாகி விடுகிறது. இதைப்பற்றி பிற்பாடு நான் குறிப்பிடுவேன். முதலாளித்துவத்தின் மிக அண்மையதான இந்தக் கட்டத்தை ஏகாதிபத்தியமென அழைப்பதா அல்லது நிதிமூலதனக் கட்டமென அழைப்பதா என்று சொற்கள் குறித்து காவுத்ஸ்கி எழுப்பும் வாக்குவாதம் மிக முக்கிய கவனத்துக்குரியது அல்ல எப்படி வேண்டுமானாலும் அழையுங்கள், இரண்டும் ஒன்றுதான். விவகாரத்தின் சாரப் பொருள் என்னவென்றால் ஏகாதிபத்தியத்தின் அரசியலை காவுத்ஸ்கி அதன் பொருளாதாரத்திலிருந்து பிரித்துவிடுகிறார். பிரதேசக் கைப்பற்றலானது நிதி மூலதனத்தினால் 'உகந்ததென விரும்பி ஏற்கப்படும்' ஒரு கொள்கை என்பதாகப் பேசுகிறார். இதே நிதிமூலதன அடிப்படையில் மற்றொரு முதலாளித்துவக் கொள்கையும் சாத்தியமே என்று சொல்லி இதனை அதற்கு எதிராக வைக்கிறார். அப்படியானால், பொருளாதாரத்தில் ஏகபோகங்களும், அரசியலில் ஏகபோகமல்லாத, வன்முறையல்லாத, பிரதேசக் கைப்பற்றல்லாத முறைகளும் இணைக்கமாகச் சேர்ந்திருக்க முடியும் என்றாகிறது. அப்படியானால், நிதிமூலதனத்துக்குரிய இந்தசகாப்தத்தில்நிறைவு பெற்று, மிகப்பெரிய முதலாளித்துவ அரசுகளுக்கிடையிலான போட்டிப் போராட்டத்தின் இன்றைய விசேச வடிவங்

களின் அடிப்படையாக இருப்பதாகிய உலகப் பரப்பின் பங்கீடானது ஏகாதிபத்தியமல்லாத ஒரு கொள்கையுடன் இணக்கமாகச் சேர்ந்திருக்க முடியும் என்றாகிறது. இதன் விளைவு என்னவெனில், முதலாளித்துவத்தின் மிக அண்மையதான இந்தக் கட்டத்தின் மிக ஆழமான முரண்பாடுகளை அடியோடு அம்பலமாக்கிக் காட்டுவதற்கு பதில் இவை பூசி மெழுகப்பட்டு மூடிமறைக்கப்படுவதுதான். மார்க்சியத்துக்கு பதில் முதலாளித்துவ சீர்திருத்தவாதம் தான்''. (லெனின், ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சகட்டம் பக். 110-11).

உண்மையில் ஏகாதிபத்தியத்தினுடைய அனைத்து முரண்பாடுகளின் முழு ஆழத்தையும் முன்வைப்பதற்குப் பதில், அவற்றை மூடி மறைத்து அல்லது தட்டிக் கழித்து விலகி ஓடுவது தான் காவுத்ஸ்கியின் 'அதீத ஏகாதிபத்தியம்' என்ற தத்துவமாகும். எனவேதான் 'ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் தற்போதைய வடிவத்துடன் நீக்கமறப் பிணைந்திருக்கிறது; ஆகவே ஏகாதிபத்தியத்துக்கு எதிரான, பகிரங்கப் போராட்டத்தால் பயன் ஏதுமில்லை; குறிப்பிடத்தக்க அக்கிரமமான அதன் அடாத செயல்களாய் இருக்கும் சிலவற்றைக் கண்டுபிடிக்கலாமே தவிர அதற்கு மேல் ஒன்றும் செய்வதற்கில்லை' என்ற—ஏகாதிபத்தியத்தை ஏற்றுக் கொண்டு அதன் அடிப்படையில் சில சீர்திருத்தங்கள் செய்வதற்கு மட்டுமே முயற்சிக்கலாம் என்ற—குட்டி முதலாளித்துவ சீர்திருத்தவாத எதிர் தரப்பினை எதிர்ப்பதற்கு காவுத்ஸ்கி முனையவும் இல்லை. மாறாக, அதற்கான திராணியுமின்றி, நடைமுறையில் அதனுடன் ஒன்று சேர்ந்தார். இதன் மூலம்தான் மார்க்சியத்தைத் துறந்தோடும் ஓடுகாலித்தனம் அம்பலப்பட்டுப் போனது. இறுதியில் ஏகாதிபத்தியத்துக்கு வக்காலத்து வாங்குபவராகவும், அதனிடம் அமைதிக்காக, ஜனநாயகத்துக்காக இறைஞ்சுபவராகவும் அதன் உபதேசியராகவும் சீரழிந்தார்.

கோடி கோடியாக ஏகாதிபத்தியங்கள் அந்நிய நாடுகளில் முதலீடு செய்துள்ளதால் அவை யுத்தத்தை துணிந்து துவக்கமாட்டாவென ஏகாதிபத்தியத்தின் கீழ் சமாதானம் குறித்து கருத்தார்ந்த முறையில் பேசி அவர்களது நலன்களுக்கு ஏற்றவாறு சமாதானம் குறித்து ஏகாதிபத்தியவாதிகளும் போலி சோசலிச வாதிகளும் சமூக அமைதிவாதிகளும் ஓர் உடன்பாட்டிற்கு வந்தனர். இதை நியாயப்படுத்தும் வகையில் காவுத்ஸ்கி தமது 'அதீத ஏகாதிபத்தியம்' பற்றிய பொருளாதார விமர்சனங்களை முன்வைத்தார். "...... தேசிய நிதி மூலதனங்களுக்கிடையிலான பரஸ்பரப் போட்டிகளுக்குப் பதிலாக, சர்வதேச அளவில் ஐக்கியப்பட்ட நிதிமூலதனம் கூட்டுமுறையில் உலகைச் சுரண்டுவதற்குரிய ஏற்பாட்டைப் புகுத்தும் புதிய, அதீத ஏகாதிபத்தியக் கொள்கையால் இன்றைய ஏகாதிபத்தியக் கொள்கை அகற்றப்பட முடியாதா? முதலாளித்துவத்தின் இம்மாதிரியான ஒருபுதிய கட்டம் எப்படியும் கருதத்தக்கதே ஆகும். இதைச் சாதிக்க முடியுமா? இக்கேள்விக்கு பதில் சொல்வதற்குப் போதுமான முதற்

கோள் இன்னும் பெற்றாக வில்லை'' என்றார் காவுத்ஸ்கி. 1872 க்கும் 1912 க்கும் இடையில் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் ஒட்டு மொத்த வெளிநாட்டு வாணிபத்துடன் ஒப்பிட்டு எகிப்துடனான ஏற்றுமதி இறக்குமதி வணிகம் குறைந்ததை சான்றாக எடுத்துக் கொண்டு ''ராணுவத்தைக் கொண்டு பிடிக்கப்படாமல் இருந்திருந்தால் வெறும் பொருளாதாரக் காரணக் கூறுகளது செயல்பாட்டினாலேயே எகிப்துடன் பிரிட்டனது வர்த்தகத்தின் வளர்ச்சி குறைவாக இருந்திருக்கும் என்று கொள்வதற்கு காரணம் ஏதுமில்லை.''' ''விரிந்து பெருக மூலத்தனத்துக்குள்ள துடிப்பு...... திருப்தி செய்யப்படுவதற்கு சிறந்தவழி அமைதியான ஜனநாயகமே அன்றி ஏகாதிபத்தியத்தின் வன்முறை அல்ல'' என்ற காவுத்ஸ்கி ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு மற்றும் பிற்போக்குத் தன்மையை மூடிமறைத்தார். (லெனின், ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம் மேற்கோள் காட்டியுள்ளது. பக் 135-36], காவுத்ஸ்கியின் இந்த திரிபுவாத மாய்மாலங்களை பின்வருமாறு லெனின் அம்பலப்படுத்தினார்; 'நிதி மூலதனச் சகாப்தத்தில் ஒரு பிற்போக்கான குறிக்கோளை அமைதியான ஜனநாயகத்தை' வெறும் பொருளாதாரக் காரணக்கூறுகளது செயற்பாட்டை ஆதரிப்பதன் மூலம் காவுத்ஸ்கி மார்க்சியத்திலிருந்து முறித்துக் கொண்டு விட்டார். ஏனெனில், இக்குறிக்கோள் புறநிலை நோக்கில் நம்மை ஏகபோக முதலாளித்துவத்திலிருந்து ஏகபோகமில்லாத முதலாளித்துவத்துக்கு பின்னோக்கி இழுத்துச் செல்கிறது. இது சீர்திருந்தவாத மோசடியே ஆகும்.

''எகிப்துடன் (அல்லது எந்த ஒரு காலனி அல்லது அரைக் காலனியுடன்) வாணிபம் ராணுவத்தைக் கொண்டு பிடிக்காமலே ஏகாதிபத்தியம் இல்லாமலே, நிதிமூலதனம் இல்லாமலே மேலும் அதிகமாக 'வளர்ந்திருக்கமுடியும்'. இதற்கு என்ன பொருள்? பொதுவாக ஏகபோகங்களாலோ, நிதிமூலதனத்தின் தொடர்புகளாலோ நுகத்தடியாலோ (அதாவது ஏகபோகத்தாலோ) அல்லது சில நாடுகள் காலனிகளின் ஏகபோக உடமையாளனாய் இருப்பதாலோ தடையில்லாப் போட்டி குறுக்கப்படாமலிருந்தால் முதலாளித்துவம் இன்னும் துரிதமாக வளர்ச்சியடைந்திருக்கும் என்பதுதானே இதன் பொருள்? காவுத்ஸ்கியின் வாதத்துக்கு வேறுஎந்த அர்த்தமும் இருக்கமுடியாது. இதன் 'அர்த்தம்' அர்த்தமற்றதாகும்'' என்று லெனின் சாடுகிறார். தடையில்லாப் போட்டியிலிருந்துதான் ஏகபோகங்கள் எழுந்தன. அதாவது வாணிபமும், முதலாளித்துவமும், உற்பத்தி மற்றும் மூலதன ஒன்றுகுவிப்பால் எழுந்தன. ஏகபோகங்கள் முன்னேற்றத்துக்கு தடையாக இருப்பினும் மீண்டும் பழைய நிலைக்கே அவை திருப்பிப் போகப் போவதில்லை என்பதையும் வலியுறுத்தினார்.

காவுத்ஸ்கியின் 'அதீத-ஏகாதிபத்தியம்' அல்லது 'அதிஉயர் ஏகாதிபத்தியம்' என்பதாகப் பிதற்றும் கருத்துக்களெல்லாம் அதற்கும் பதின்மூன்றாண்டுகளுக்கு முன்பே ஆங்கிலேய பாதிரி

மார்களுக்கு பகட்டுரையாக ஹாப்சன் எடுத்துரைத்த 'அகில ஏகாதிபத்தியம்' அல்லது 'பரஸ்பர ஏகாதிபத்தியம்'(Inter Imperialism) என்ற கோட்பாட்டின் சாராம்சம்தான். லத்தீன் அடைமொழியைத்தான் வெறுமனே மாற்றினார். ''ஆகவே முதலாளித்துவ அமைப்பின் எதார்த்த நிலவரங்களில்—ஆங்கிலேய பாதிரிமார்கள் அல்லது ஜெர்மன் 'மார்ச்சியவாதி'' காவுத்ஸ்கியின் சாரமற்ற அற்பவாத கற்பனைகளில் அல்ல-''அகில-ஏகாதிபத்திய' அல்லது 'அதீத-ஏகாதிபத்தியக்'' கூட்டணிகள், அவை எந்த வடிவத்தில் அமைந்தவையாயினும், ஒரு ஏகாதிபத்தியக் கூட்டணிக்கு எதிரான இன்னொரு ஏகாதிபத்தியக் கூட்டணியாக இருந்தாலும் சரி, அல்லது எல்லா ஏகாதிபத்திய அரசுகளையும் கொண்ட பொதுவான கூட்டணியாக இருந்தாலும் சரி, யுத்தங்களுக்கு இடையிலான காலங்களுக்குரிய 'போர் நிறுத்த உடன்பாடுகளாகவே'' தவிர்க்கமுடியாதபடி இருக்குமே அன்றி வேறல்ல. சமாதானக் கூட்டணிகள் யுத்தங்களுக்கு அடிகோலுகின்றன. அவையும் இந்த யுத்தங்களிலிருந்தே எழுகின்றன. ஒன்று மற்றொன்றை நெறிப்படுத்துகின்றது. உலக பொருளாதாரத்திலும் உலக அரசியலிலும் நிலவும் ஏகாதிபத்திய தொடர்புகள், உறவுகள் என்ற ஒரே அடிப்படையிலிருந்து சமாதான வழியிலும் சமாதானமில்லா வழியிலுமான போராட்ட வடிவங்களை மாறிமாறித்தோற்றுவிக்கின்றது. ஆனால் தொழிலாளர்களை சாத்வீசப்படுத்துவதற்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கு துறந்தோடிவிட்ட சமூக—தேசிய வெறியர்களுடன் அவர்களை இணக்கங்கொள்ள செய்வதற்காகவும் மெத்தப் பெரிய மேதாவியாகிய காவுத்ஸ்கி ஒரே சங்கிலித் தொடரிலிருந்து ஒரு கரணையை மற்றொன்றிலிருந்து தனியே பிரித்தெடுக்கிறார். சீனாவை 'அமைதிப்படுத்துவதற்காக' (பாக்சர் எழுச்சி ஒடுக்கப் பட்டதை நினைவு கூறுங்கள்) எல்லா வல்லரசுகளும் சேர்ந்து இன்று ஏற்படுத்தியிருக்கின்ற சமாதான (மற்றும் அதீத—ஏகாதிபத்திய, இல்லை, அதீத—அதீத—ஏகாதிபத்தியக்) கூட்டணியை நாளைக்கு நடக்கப் போகும் சமாதானமில்லாத மோதலிலிருந்து பிரித்திடுகிறார். இந்த மோதலானது நாளைக்கு மறுநாள் வேறொரு நாட்டை—உதாரணமாக துருக்கியை—பங்கிடுவதற்கான மற்றொரு சமாதானப் பொதுக் கூட்டணியைத் தோற்றுவிக்கும். இப்படியே தொடர்ந்து நடைபெறும். ஏகாதிபத்திய சமாதான காலங்களுக்கும் ஏகாதிபத்தியப் போர்காலங்களுக்கும் இடையிலான உயிர்த் தொடர்பைக் காட்டுவதற்குப் பதிலாக, தொழிலாளர்களை அவர்களது உயிரற்ற தலைவர்களுடன் இணக்கம் கொள்ள செய்வதற்காக காவுத்ஸ்கி இத்தொழிலாளர்களுக்கு உயிரற்ற ஒரு கற்பனையை அளிக்கிறார்''. லெனின், மேற்படி நூல் பக். 144-45)

( ''ஏகாதிபத்தியத்தின் மிகவும் ஆழமான முரண்பாடுகளைக் காவுத்ஸ்கி மூடிமறைப்பதானது, தவிர்க்க முடியாதபடி ஏகாதிபத்தியத்தை பளிச்சிடும் வண்ணங்களில் தீட்டுவதால் முடிவுறும் இது, ஏகாதிபத்தியத்தின் அரசியல் இயல்புகளைப்பற்றிய இந்த எழுத்தாளரின் விமர்சனத்திலும் தனது சுவடுகளைப் பதித்துச் செல்

கிறது. ஏகாதிபத்தியமானது சுதந்திரத்திற்கான முயற்சியை அல்ல, ஆதிக்கத்துக்கான முயற்சியையே எங்கும் புகுத்திடும் நிதிமூலதனத்துக்கும் ஏகபோகங்களுக்கும் உரித்தான சகாப்த மாகும். அரசியல் அமைப்பு எதுவாய் இருப்பினும் இந்தப் போக்குகளால் ஏற்படும் விளைவு எங்கும் பிற்போக்கும், இத் துறையில் பகைமைகள் மிதமிஞ்சிக கடுமையாவதும்தான். தேசிய ஒடுக்குமுறையும் பிரதேச கைப்பற்றல்களுக்கான முயற் சியும், அதாவது தேசச் சுதந்திரத்தை மிதிப்பதும் (ஏனெனில் பிரதேசக் கைப்பற்றுதலானது தேசங்களின் சுய நிர்ணய உரிமையை நசுக்குவதே ஆகும்.) குறிப்பிடத்தக்கவாறு தீவிரம டைகின்றன''. (லெனின் மேற்படி நூல், பக். 146).

'அதீத ஏகாதிபத்தியம்' அல்லது அதி உயர்ந்த ஏகாதிபத் தியம்' என்ற பெயரால் ஏகாதிபத்தியத்தினுடைய அனைத்து முரண்பாடுகளின் ஆழத்தையும் மூடி மறைத்து, அதன் பிற்போக குத்தனம், தேசிய ஒடுக்குமுறை, ஆக்கிரமிப்பு போர்கள் ஆகிய வற்றை மூடிமறைத்து சமாதான ஜனநாயகம், தடையில்லாப் போட்டி, முதலாளித்துவம் மற்றும் அந்நிய கொள்கை கட் டமைவு என்பதாக ஏகாதிபத்தியத்தைச சித்தரிப்பதன் மூலம் ஏகாதிபத்தியத்துக்கு ஜெர்மன் ஓடுகாலி காவுத்ஸ்கி சேவை செய் ததைப்போலவே ருசியாவின் ஏகாதிபத்தியப் பொருளாதார வாதிகள் இன்னொரு கோணத்திலிருந்து ஏகாதிபத்தியத்துக்கு சேவை செய்தனர். காவுத்ஸ்கியைப் போலவே இவர்களும் ஏகாதிபத்தியமென்பது, 'அந்நியக் கொள்கை கட்டமைவு' என்ற முதற் கோள்களிலிருந்தே தொடங்கினர். 'ஏகாதிபத்தி யப் பொருளாதாரவாதம்' என்ற சந்தர்ப்பவாதம் சர்வதேச பாட்டாளிவர்க்க இயக்கத்தின் புரட்சிகர அணிவரிசையில் 1915ல் வேகமாகப் பரவியது. புகாரின், கீவ்ஸ்கி போன்ற அதன் கர்த் தாக்கள் ஏகாதிபத்திய சகாப்தத்தில் தேசிய விடுதலை இயக் கங்களும் தேசிய யுத்தங்களும் இருக்கமுடியாது என்று சாதித்த அவர்கள் தேசங்களின் சுய நிர்ணய உரிமைகளுக்கெதிராக நின்றார்கள். ஏகாதிபத்திய சகாப்தத்தில் சோசலிசப் புரட்சி நிறைவேற்றும் பணியை தொழிலாளர் வர்க்கம் எதிர்கொண்டு உள்ளதால் ஒடுக்கப்பட்ட தேசங்கள் ஜனநாயகம், அரசியல் சுதந் திரம், விடுதலை மற்றும் தேசிய சுதந்திரத்திற்கான போராட் டத்தைக் கைவிட வேண்டுமென்று மார்க்சியத்தை ஏகாதிபத் தியப் பொருளாதார வாதிகள் கொச்சைப்படுத்தினர். சென்ற நூற்றாண்டின் இறுதியில் ருஷ்யாவில் பரவியிருந்த பொருளா தாரவாதத்தை உபமானமாகக்கொண்டு இந்தப்போக்கை ஏகா திபத்திய பொருளாதாரவாதமென்றார் லெனின். ''முதலாளித்து வம் வெற்றி பெற்றுவிட்டது—எனவே அரசியல் பிரச்சினைகள் பற்றி அக்கறைகொள்ளத்தேவையில்லை என்று 1894—1901 ல் பழைய பொருளாதாரவாதிகள் காரணம்காட்டிருஷியாவில் அரசி யல் போராட்டங்களை ஒதுக்கித் தள்ளுவதில் வீழ்ந்தார்கள். ஏகாதிபத்தியம் வென்றிருக்கிறது—எனவே அரசியல் ஜனநாய கத்தின் பிரச்சினைகளைப் பற்றி அக்கறை கொள்ளத் தேவை

யில்லை என்று இன்றைய ஏகாதிபத்திய பொருளாதாரவாதிகள் காரணங்காட்டுகின்றனர்". (லெனின் மொத்தத் தொகுதிகள் எண். 23, பக். 29).

ஏகாதிபத்திய நாடுகள் மற்றும் சுயநிர்ணய உரிமை பெறுவது ஆகிய இரு சமூக வகையறாக்களினிடையே தர்க்க ரீதியிலான முரண்பாடு இருப்பதாலும் அரசியல் ரீதியில் மட்டு மல்லாது பொருளாதார ரீதியில் கூட சுய நிர்ணய உரிமையை பெற முடியாது என ஏகாதிபத்திய பொருளாதாரவாதிகள் வாதிட்டனர். ஆனால் பொருளாதார ரீதியாக, ஏகாதிபத்தி யமானது முதலாளித்துவத்தின் வளர்ச்சிக் கட்டத்தில் மிக உயர்ந்த கட்டமாகும். அதாவது, உற்பத்தியானது பெரிய பிர மாண்டமான அளவுக்கு வளர்ந்தது. சுதந்திரமான போட்டியை ஏகபோகத்துக்கு இட்டுச்சென்றது. இதுதான் ஏகாதிபத் தியத்தின் சாராம்சமாகும். டிரஸ்டுகள் சிண்டிகேட்டுகள் முதலியன மூலமும், பூதாகரமான வங்கிகள் எங்கும் எதிலும் ஆதிக்கம் செலுத்துவதிலும், கச்சாப் பொருள்கள் மூலாதாரம் வாங்கப்படுவதிலும், வங்கி மூலதனம் குவிக்கப் படுவதிலும் ஏகபோகம் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. எல்லாவற்றுக்கும் பொருளாதார ஏகபோகமே சுழல் அச்சாக இருக்கிறது. இப்புதிய பொருளாதாரத்தின் ஏகபோக முதலாளித் துவமான ஏகாதிபதித்யத்தின் அரசியல் மேற்கட்டுமானம் ஜன நாயகத்திலிருந்து அரசியல் பிற்போக்கிற்கு மாறிக் கொள்கிறது. சுதந்திரமான போட்டி காலத்திற்கு பொருத்தமாக ஜனநாயகம் இருந்தது. ஆனால் ஏகபோகத்திற்கு ஏதுவான அரசியல் பிற் போக்கு, அதாவது நிதி மூலதனம் சுதந்திரத்திற்காக அல்லாது ஆதிக்கத்துக்காக முயலுகிறது. எனவேதான் ஏகாதிபத்திய பொருளாதாரவாதிகளை மறுத்துரைத்து பின்வருமாறு லெனின் கூறுகிறார். "பொதுவான 'அந்நியக்கொள்கை'யைப் பிரிப்பதோ, ஏன் உள்நாட்டுக் கொள்கைக்கு எதிராக அன்னிய கொள்கையை நிறுத்துவதோ அடிப்படையிலேயே தவறானது. மார்க்சிய பூர்வ மற்றது, விஞ்ஞான பூர்வமற்றது. உள்நாட்டுக் கொள்கை, அந் நியக் கொள்கை இரண்டிலுமே ஏகாதிபத்தியம் ஜனநாயகத்தை மீறவும் பிற்போக்கை நோக்கிச் செல்லவும் முயற்சிக்கிறது. இந்த அர்த்தத்தில் ஏகாதிபத்தியம் விவாதத்திற்கிடமின்றி பொதுவாக ஜனநாயகத்தை தேசிய சுயநிர்ணய உரிமை என்ற ஒரு கோரிக் கையை மட்டுமின்றி பொதுவில் எல்லா ஜனநாயகத்தையும் மறுக்கிறது".

"பொதுவாகவே ஜனநாயகத்தை மறுப்பதால் ஏகாதிபத்தி யம், தேசியப் பிரச்சினையிலும் ஜனநாயகத்தை (தேசிய சுயநிர் ணய உரிமையை) மறுக்கிறது ஜனநாயகத்தை மீறவே அது முயற்சிக்கிறது. இதே அர்த்தத்தில், இதே அளவில் ஏகாதிபத்தி யத்தின் கீழ் (ஏகபோக முதலாளித்துவத்திற்கு முந்திய நிலை யுடன் ஒப்பிடுகையில்) ஜனநாயகத்தை வென்றெடுப்பது-குடியரசு மக்கள் குடிபடை, அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்படுவது இன்னும் பிறவற்றை வென்றெடுப்பது-மிகவும் கடினமாகும். 'பொருளா தார ரீதியில்' ஜனநாயகம் வென்றெடுக்கப்படுவது முடியாது

என்று பேசுவதே தேவையற்றது'' (ஏகாதிபத்தியம், ஏகாதிபத்திய வாதிகள் பற்றி லெனின் என்ற தொகுப்பு, பக்கம் 89-90)

ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதிகளது கோட்பாட்டு அடிப்படைகளை பின்வருமாறு தகர்த்தெறிந்தார் லெனின்: ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதிகள் உண்மையான பொருளாதார அடிப்படைகளை ஆய்ந்தறியத் தவறும் அதே வேளையில் அந்நியப் பிராந்தியங்களை அம்மக்களது சித்தத்துக்கு எதிராக ஆக்கிரமிப்பது, தட்டிப் பறிப்பது அதாவது சுயநிர்ணய உரிமையை மீறுவதையும் ஒரு பரந்துவிரிந்த பொருளாதார பிராந்தியத்துக்கு நிதி மூலதன விரிவாக்கம்—பரப்புவதையும் ஒக்கிரத்தனமாக சமமாக கருதுகின்றனர். ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு மற்றும் விரிவாக்கம் என்ற இவ்விரு போக்குகளையும் லெனின் விளக்கினார். பொருளாதார ரீதியில் ஏகபோக முதலாளித்துவமாகிய ஏகாதிபத்தியம் குறிப்பிட்ட அரசின் உள்நாட்டுச் சந்தையில் மட்டுமல்ல உலகம் முழுவதும் வெளிநாட்டுச் சந்தைகளிலும் முழுமையாக ஏகபோகத்தை அடைய எல்லாப் போட்டிகளையும் ஒழித்துக் கட்ட வேண்டியிருக்கிறது. பொருளாதார ரீதியில் நிதி மூலதனத்தின் சகாப்தத்தில் அந்நிய அரசுகளின் கீழ் கூட இது சாத்தியமே. எதிரிகளை ஒழித்துக் கட்டுவதற்குப் பொருளாதார சாதனங்களை பயன்படுத்துவதோடு மட்டும் அவை நிறுத்திக்கொள்வதில்லை. மாறாக, அரசியல்,ஏன் கிரிமினல் குற்ற முறைகளில்கூட தொடர்ந்து இறங்குகிறார்கள்.

இருப்பினும் வெறுமனே பொருளாதார முறைகளில் மட்டும் டிரஸ்டுகள் தமது ஏகபோகத்தை நிறுவ முடியாது என்று நினைப்பது பெருந்தவறாகும். எதிரியின் நிகச் சார்புநிலை இம்மாதிரியான சுதந்திரத்தை மீறுவதற்கே ஏகாதிபத்தியம் முயலுகிறது. ஏனெனில் அரசியல் ஆக்கிரமிப்பு—கைப்பற்றுதல் எப்பொழுதும் பொருளாதாரக் கைப்பற்றுதல் - ஆக்கிரமிப்பை எளிதானதாகவும் மலிவானதாகவும் (அதிகாரிகளுக்கு லஞ்சமளிப்பது, சலுகைகளை அடைவது சாதகமான சட்டங்களை இயற்றுவது இன்னும் பிற சுலபம்) மிகவும் வசதியானதும் சொற்ப சிரமமுடையதும் ஆகும். —அதாவது பொதுவாக ஏகாதிபத்தியம் ஜனநாயகத்தினிடத்தில் கொடுங்கோன்மையை நிறுவ முயல்வதே போன்றதாகும்.

ஏகாதிபத்தியத்தின் கீழ் சர்வஜனவாக்கெடுப்பும்,எட்டுமணிநேர வேலையும், ஒரு குடியரசும் கூட தர்க்க ரீதியில் தகவானது எனினும், ஏகாதிபத்தியத்துக்கும் ஜனநாயகத்துக்கும் இடையிலான முரண்பாடு இருப்பது போலவும். அதனால் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் சுதந்திரம் சாத்தியமே இல்லை எனவும் ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதிகள் வாதிட்டனர் ஆனால் அவர்கள் ஏகாதிபத்தியத்துக்கும் குடியரசு அமைப்பு முறைக்கும் இடையிலான முரண்பாடு இன்றையகால ஏகபோக முதலாளித்துவத்திற்கும் அரசியல் ஜனநாயகத்துக்கும் இடையில் உள்ள பொதுவான ஒரு முரண்பாடு என்பதை உணரவில்லை. அதாவது

ஏகாதிபத்தியம் பொதுவாக எல்லா அரசியல் ஜனநாயகத்துக்கும் முரணானதாகும் பொருளாதாரத்துக்கும்அரசியலுக்கும் இடையிலான முரண்பாடு ஏன் எழுகிறதென்றும் அவர்கள் உணரவில்லை. ஒருபுறம் அதிகாரிகளுக்கு நேரடியாக லஞ்ச ஊழல் அளிப்பது என்ற வடிவம். மறுபுறம் அரசாங்கத்துக்கும் பங்கு மார்கெட்டுக்கும் இடையிலான ஒரு கூட்டு என்ற வடிவம் ஆகியவற்றின் மூலம் மறைமுகமாக நிச்சயமாக மூலதனம் முதலாளித்துவ அமைப்பில் அதிகாரம் செலுத்துகிறது. இந்த வகையிலே முதலாளித்துவ ஜனநாயகக் குடியரசு தர்க்க ரீதியாக முதலாளித்துவத்துக்கு முரணாக இருக்கிறது. ஏனெனில் 'அதிகாரபூர்வமாக' ஏழையையும் பணக்காரனையும் சமமாக வைக்கிறது.இவ்வாறு முதலாளித்துவப் பொருளாதாரக் கட்டமைவிற்கும் அரசியல் மேற்கட்டுமானத்திற்கும் இடையில் முரண்பாடு இருப்பதைப் போன்றே அதுவே ஏகாதிபத்தியத்துக்கும் குடியரசுக்கும் இடையிலான முரண்பாடாகிறது. ஆனால் சுதந்திரமான போட்டி ஏகபோகமாவதால் இம் முரண்பாடு ஆழமாகி, கூர்மையாகி அரசியல் சுதந்திரமடைவது மேலும் கடினமானதாகிறது. இருப்பினும் நேரடி லஞ்ச ஊழல் மற்றும் அரசாங்கத்துக்கும் பங்கு மாக்கெட்டுக்கும் இடைலான கூட்டு என்ற பொருளாதார சாதனங்களால் மூலதனம் சர்வ வல்லமையுடன் மறைமுகமாக ஜனநாயக நாட்டில் ஆதிக்கம் செலுத்துவது போன்றே நிதி மூலதனத்தின் சுதந்திரமான லஞ்சஊழல எந்த அரசாங்கங்களையும் அதிகாரிகளையும் வாங்கிவிட முடியும். ஏகாதிபத்தியத்தின் டிரஸ்டுகள் மற்றும் வங்கிகளது எக்கச்சக்கமான செல்வமும் கோடான கோடி நிதி மூலதனமும் அந்நிய நாடுகள் அதாவது அரசியல் ரீதியில் சுதந்திரமான குடியரசுகளிலும் இதே முறைகளில் ஊடுருவி விரிவாக்கமடைய முடியும். டிரஸ்டுகளுக்கெதிராக அவை சட்டமியற்றினாலும், தடை செய்தாலும்—அவை அரசியல் நடவடிக்கைகளே—போலந்து, நார்வே போன்ற நாடுகள் அரசியல் சுதந்திரமடைந்திருந்தாலும் எந்த வடிவத்திலான அரசியல் முறை இருந்தாலும் ஏகாதிபத்திய வல்லரசுகளின் நிதி மூலதனத்தைச் சார்ந்து நிற்க வேண்டியிருக்கின்றன. அல்லது ஆலைகளில் பங்குகள் வாங்குவதைத் தடுத்துவிட முடியாது.

எனவே, '...பேரரசுகளை நிறுவுவதை நோக்கிய ஏகாதிபத்தியப் போக்கு முற்றிலும் சாதிக்கப்படக் கூடியதே. நடைமுறையில் இவ்வாறு அடிக்கடி நிகழவும் செய்கிறது. சுயாதிபத்தியமுடைய மற்றும் சுதந்திரமான-அரசியல் ரீதியில் சுதந்திரமான—அரசுகளுக்கிடையிலான ஏகாதிபத்தியக் கூட்டு என்ற வடிவில் இது நடக்கிறது. இத்தகைய கூட்டுகள் சாத்தியமே. இரு நாடுகளின் நிதி மூலதனத்தைப் பொருளாதார ரீதியில் இணைப்பது என்ற வடிவில் மட்டுமின்றி ஒரு ஏகாதிபத்திய யுத்தத்தில் இராணுவ "ஒத்துழைப்பு" என்ற வடிவிலும் இவை ஏற்படுகின்றன. தேசியப் போராட்டம், தேசிய ஆயுதமேந்திய எழுச்சி, தேசம் பிரிந்து போவது ஆகியவை முழுமையாக நடந்தேறுகின்றன. ஏகாதிபத்தியத்தின் கீழ் அவை நடைமுறையில் இருக்கவே செய்கின்றன. ஜனநாயக உணர்வுகள் பட்டவர்த்தனமாக வெளிப்

படவே செய்கின்றன. ஏனெனில் ஏகாதிபத்திமானது முதலாளித்துதின் வளர்ச்சியையோ பரந்துபட்ட திரளான மக்களிடையே ஜனநாயகப் போக்குகள் வளர்வதையோ தடுத்துவிடுவதில்லை. மாறாக, ஏகாதிபத்தியமானது பரந்துபட்ட மக்களின் ஜனநாயக அவாக்களுக்கும் டிரஸ்டுகளின் ஜனநாயக எதிர்ப்பு போக்குக்கும் இடையிலான பகைமையை தீவிரப்படுத்துகிறது.

ஏகாதிபத்தியப் பொருளாதார வாதத்தின். அதாவது, கொச்சைப்படுத்தப்பட்ட மார்ச்சியத்தின் கண்ணோட்டத்திலிருந்து மட்டுமே ஒருவர் உதாசீனம் செய்வது — உதாரணமாக, ஏகாதிபத்தியப் பொருளாதாரக் கொள்கையின் பின்வரும் பிரத்யேக அம்சத்தை உதாசீனம் செய்வது— என்பது முடியும். ஒருபுறம், நிதித் தொடர்புகள் மற்றும் பொருளாதார நலன்களின் பலமானது ஒரு சிறிய, அரசியல்ரீதியில் சுதந்திரமான அரசை பெருவல்லரசுகளின் போராட்டத்தில்(பிரிட்டன் மற்றும் போர்த்துக்கல்) எவ்வாறு இழுத்து விடுகிறது என்பதற்கான உதாரணங்களை இப்போதைய ஏகாதிபத்திய யுத்தமானது தருகிறது. மறுபுறம், சிறு தேசங்களின் ஜனநாயகம் மீறப்படுவதானது—தமது ஏகாதிபத்தியப் ''புரவலர்களைக்'' காட்டிலும் மிகவும் பலவீனமான (பொருளாதார ரீதியிலும், அரசியல் ரீதியிலும்)— புரட்சிகளுக்கோ (அயர்லாந்து) அல்லது முழுதான ரெஜிமெண்டுகள் எதிரியின் பக்கம் சேர்ந்து விடுவதற்கோ (செக்கஸ்லோவாகியா) இட்டுச் செல்கிறது. நிதி மூலதனக் கண்ணோட்டத்திலிருந்து மட்டுமல்லாது அவற்றின் ஏகாதிபத்தியக் கொள்கை, அவற்றின் ஏகாதிபத்திய யுத்தம் ஆகிய கண்ணோட்டத்திலும் டிரஸ்டுகளுக்கு சில வேளைகளில் லாபகரமானதாக—சில தனிப்பட்ட சிறு தேசங்களை எவ்வளவு தூரத்துக்கு முடியுமோ அந்த அளவுக்கு, அரசியல் சுதந்திரம் என்கிற அளவுக்கு—அனுமதிப்பது என்பது உள்ளது. தமது ''சொந்த'' இராணுவ நடவடிக்கைகளால் பாதிப்பு ஏற்படும் அபாயத்திலிருந்து காப்பதாகவும்இது உள்ளது. இந்த நிலமைகளில் இது (அரசியல் சுதந்திரம்—மா.அ.க.) ''சாதிக்கப்படக் கூடியதாகவே'' உள்ளது. இந்த அரசியல் மற்றும் யுத்த முக்கியத்துவ சிறப்பியல்பை கவனியாது ''ஏகாதிபத்தியம்'' என்ற வார்த்தையை தராதரமின்றி ஜபிப்பது. வேறு எதுவாக இருந்தபோதிலும் மார்க்சியமாக இராது'' (ஏகாதிபத்தியம் மற்றும் ஏகாதிபத்தியவாதிகள் பற்றி லெனின் என்ற தொகுப்பு, பக், 97-98) எனவே ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதம் கூறுவது போல் அன்றி நிதி மூலதனம் 'எந்த' நாட்டிலும், சுதந்திரமான நாட்டிலும் கூட, ஆதிக்கம் செலுத்தம் முடியும் என்றும் நிதி மூலதனக் கண்ணோட்டத்திலிருந்து சுயநிர்ணய உரிமை அடைய முடியாது என்ற வாதம் வெறும் பேதமையானதுதான் என்றும் லெனின் நிரூபித்தார்.

ஆக சாராம்சமாக ஏகாதிபத்தியத்தின் ஏவலர்களான ஓடுகாலி காவுத்ஸ்கியும், ஏகாதிபத்தியப் பொருளாதார வாதிகளும் முன்வைத்த திரிபுவாதக் குப்பைகள் இவைதான்: 'ஏகபோகமும் நிதிமூலதனமும் ஏகபோகத்தன்மையற்ற, நிதிக் கொடுங்கோன்

மையற்ற, வன்முறையற்ற, ஆக்கிரமிப்பற்ற முறைகளோடு பொருளாதார ரீதியில் இசைந்து போகமுடியும். ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கிடையிலான கடும் போட்டிக்கான தனிக் குறிப்பான வடிவங்களின் அடிப்படையாகிய, நிதி மூலதனத்தின் சகாப்தத்தில் முழுமையற்ற உலகைப் பிராந்திய அடிப்படையில் கூறு போடுவதுடன் ஏகாதிபத்தியமற்ற ஒரு கொள்கை இசைந்து போக முடியும். ஏகாதிபத்தியத்தின் எல்லா முரண்பாடுகளும் கூர்மையடைந்து ஆழமாகிவரும் கடும் மோதல்களை மூடி மறைத்து சமாதானமுறையில் சர்வதேசிய ரீதியில் ஐக்கியப்பட்ட நிதிமூலதனமாக வளரும். ஏகாதிபத்தியம் வெறுமனே நிதி மூலதனத்தின் ஓர் அந்நியக் கொள்கை கட்டமைவுதான். ஏகாதிபத்தியப் பொருளாதார வாதிகளின் நிலைப்பாட்டின் படி ஏகாதிபத்தியத்தின்கீழ் தேசிய சுயநிர்ணய உரிமை சாத்தியமே இல்லை. எனவே தேசிய விடுதலை இயக்கங்களும், தேசிய போர்களும் இராது.'

இன்றைய முதலாளித்துவ அரசியல், சமூக வியலாளர்களும் மற்றும் எல்லா வண்ணத்திரிபுவாதிகளும் ஏகாதிபத்தியத்தின் புதிய இடைக்கட்டத்தின் தனிச்சிறப்பான குணாம்சங்கள் என்ற பெயரில் அதீத ஏகாதிபத்தியம் அல்லது அதி உயர் ஏகாதிபத்தியம் என்ற ஓடுகாலி காவுத்ஸ்கியின் அதே கோட்பாடுகளைப்புதுப்பிக்கும் அதே சமயம் இந்தியாபோன்ற பெயரளவிலான சுதந்திர மடைந்த நாடுகளையும் அரசியல் சுதந்திர மடைந்தவையாக சித்தரிப்பதற்காக கபடத்தனமான இந்த தந்திரத்தைக் கையாளுகின்றனர். ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதிகளது சந்தர்ப்ப வாதத்தை முறியடிக்க லெனின் முன்வைத்தகோட்பாடுகளையே ஏகாதிபத்தியத்தின் உண்மைச் சொரூபத்தை மூடிமறைக்க கேடாகப் பயன்படுத்துகின்றனர். நிதிமூலதனம், எந்த நாட்டிலும்—அரசியல் சுதந்திரமுடைய நாட்டிலும்-ஆதிக்கம் செலுத்த முடியும், ஏகாதிபத்தியத்தின் கட்டமைவிலேயே கூட தேசிய சுய நிர்ணய உரிமையை அடைய முடியும் என்ற லெனினிச முடிவுகளைக் கேடான முறையில் பிரயோகித்து இந்தியா போன்ற பெயரளவிலான சுதந்திரம் பிரகடனப்படுத்தப்பட்ட அரைக் காலனிய, நவீன காலனிய நாடுகளையும் அரசியல் சுதந்திர மடைந்த நாடுகளாக மதிப்பிட வேண்டுமென்கின்றனர். நிதி மூலதனம் எந்த நாட்டிலும் அரசியல் சுதந்திரமுடைய நாட்டிலும் ஆதிக்கம் செலுத்த முடியும் என்பதற்காக ஏகாதிபத்தியம் தேசிய சுய நிர்ணய உரிமையை வழங்கி விடுவதில்லை. ஏகாதிபத்தியம் பிற்போக்குத்தனம், வன்முறை, ஆக்கிரமிப்பு, நாடு பிடிப்பு, உலகைக் கூறுபோடுவது, அரசியல் சுதந்திரத்தைப் பறிப்பது ஆகியவற்றை நிறுத்தி விடுவதில்லை ஓடுகாலி காவுத்ஸ்கி அவ்வாறு தான். ஜனநாயக முறையிலேதான் நிதி மூலதனம் நன்கு வளருமாதலால் சமாதான 'அதீத – ஏகாதிபத்தியம்' பற்றி பேசினார் அவ்வாறிருப்பின் ஏகாதிபத்தியம் ஏகாதிபத்தியமாக இருக்க மாட்டாது.

கட்டபொம்மனுக்கு வல்லிய மீசை உண்டு என்றால் வல்லிய

மீசை உள்ளவர்கள் எல்லாம் கட்டபொம்மனாகிவிட மாட்டார்கள். அதே போன்று எந்த நாட்டிலும் – அரசியல் சுதந்திர முடைய நாட்டிலும் - நிதி மூலதனம் ஆதிக்கம் செலுத்த முடியும் என்றால் நிதி மூலதனம் நாடுகளது அரசியல் சுதந்திரத்தையோ அந்த மாதிரியான அரசியல் அமைப்பு இருப்பதையோ ஏற்கிறது என்று பொருளல்ல. மாறாக நிதிமூலதனம் மற்றும் ஏகபோகம் ஜனநாயகத்தினிடத்தில் அரசியல் பிற்போக்குத்தனத்தையே விரும்புகிறது. லெனின் ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதிகளை மறுத்துரைத்து இரு வழிகளிலும் ஏகாதிபத்தியம் விரிவடைவதை விளக்கினார். ஒன்று: மேலும் மேலும் விரிந்த பிராந்தியங்களில் நிதி மூலதனத்தின் விரிவாக்கம் – பரப்புதல். மற்றொன்று: கச்சாப் பொருட்களின் மூலாதாரங்களைக் கைப்பற்றுவது. இறுதியாக எதிராளியின் எல்லா தொழில் நிறுவனங்களையும் கைப்பற்றுவதன் மூலம் இது நடக்கிறது. அதாவது வங்கிகள் மூலம் (டிரஸ்டின் உடமையாளர்கள் பங்குகளை வாங்குவதன் மூலம் வங்கியின் உடமையாளர்களாகிறார்கள்) எதிராளியின் கடன் வாய்ப்புகளை டிரஸ்டுகள் வேரறுக்கின்றன. பொருட்களை சப்ளை செய்வது (டிரஸ்டுகளின் உடமையாளர்கள் போக்குவரத்து சாதனங்களின் உடமையாளர்களாக பங்குகளை வாங்குவதன் மூலம் மாறுகிறார்கள்) ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு கோடிக்கணக்கில் செலவிட்டு டிரஸ்டுகள் அடக்க விலைக்கும் கீழே பொருட்களை விற்பதன் மூலம் ஒரு போட்டியாளனை அழித்து அவனது தொழில் நிறுவனங்கள், கச்சாப் பொருட்கள் (சுரங்கங்கள், நிலம் பிற பிற) ஆகியவற்றை விலைக்கு வாங்கி விடுகிறது இவை ஒரு நாட்டின் நிதிமூலதனம் அரசியல் ரீதியில் சுதந்திரமான மற்றொரு நாட்டின் போட்டியாளனை எப்பொழுதும் வாங்கிவிட முடியும்; தொடர்ந்து இதைச் செய்கின்றது. அரசியல் ஆக்கிரமிப்பின்றி, கைப்பற்றுதலின்றி பொருளாதார ரீதியில் கைப்பற்றுவது முழுக்கவும் சாத்தியமே. இது பரவலாக கையாளப்பட்டும் வருகிறது சான்றாக அர்ஜெண்டினா யதார்த்தத்தில் பிரிட்டனது 'வாணிபக் காலனி'யாகவும் போர்த்துக்கல் யதார்த்தத்தில் பிரிட்டனது ஒரு காப்பு நாடாகவும் இருந்தன. உண்மையில் இவை ஆங்கிலேய வங்கிகள் மீது பொருளாதார சார்பு நிலையிலும் கடனாளியாகவும் இருந்தன பிரிட்டன் அவற்றின் போக்குவரத்து, சுரங்கங்கள், நிலங்கள் இன்னும் பிற வற்றைக் கைப்பற்றி அரசியல் சுதந்திரத்தை மீறாமலே பொருளாதார ரீதியில் அந்நாடுகளைக் கைப்பற்றியது. சுத்தமான பொருளாதாரப் பாதையில் ஆலைகளையும், தொழில்களையும், கச்சாப் பொருள் மூலங்களையும் வாங்கிவிடும் டிரஸ்டுகளின் சக்தியையும் அவற்றின் விரிவாக்கத்தையும் இவை குறிக்கின்றன.

ஏகாதிபத்திய நிதி மூலதனம் அரசியல் ரீதியிலும், கிரிமினல் குற்ற முறையிலும் அந்நியப் பிராந்தியங்களை அவற்றின் மக்களது சித்தத்துக்கு எதிராக சுயநிர்ணய உரிமையை மீறிக் கைப்பற்றுவதன் மூலம் விரிவடைவதும் உண்டு. உலகைப் பங்கீடு செய்வதும், மறுபங்கீடு செய்வதும் ஏகாதிபத்தியங்களின் தனிச்

சிறப்பான குணாம்சங்களில் ஒன்று. தேசிய சுயநிர்ணய உரிமை என்பதன் பொருள் அரசியல் சுதந்திரமாகும். அந்நிய நாடுகளில், பிராந்தியங்களில் அவற்றின் மக்களது சித்தத்துக்கு எதிராக சுய நிர்ணய உரிமையை மீறி ஆக்கிரமிப்பது - நாடு பிடிப்பது. முதலாவது. ஒன்று திரட்டுதல் மற்றும் மையப்படுத்துதல் மூலம் ஏகபோகமும் நிதி மூலதனமும் குவிவதும் வளர்வதும் என்ற போக்கு. இது குறிப்பாக முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் நடக்கும் போக்கு. இன்று மேற்கு ஏகாதிபத்திய வட்டத்திற்கும் மேற்கு ஜெர்மனிக்கும். ஜப்பானுக்கும்தான் யாவற்றிலும் கூடுதலாக நிதி மூலதன ஏற்றுமதி நடக்கிறது என்ற உண்மை இந்தப் போக்கையே குறிக்கிறது இரண்டாவது, காலனிய, அரைக் காலனிய, நவீனகாலனிய மற்றும் அரசியல் சுதந்திரமடைந்த பின் தங்கிய நாடுகள் அடங்கிய மூன்றாம் உலகநாடுகளுக்கு மூலதன ஏற்றுமதி இது முதல் வகைப்போக்கைக் காட்டிலும் பல மடங்கு கூடுதலான லாப விகிதமளிக்கக்கூடிய மலிவான கச்சாப் பொருள், மலிவான உழைப்புச் சக்தி மற்றும் சந்தைக்கான நிதி மூலதன ஏற்றுமதி; இது அடக்கி ஒடுக்கப்படும் நாடுகளை நோக்கி நடக்கும் போக்கு. இவ்விரு போக்குகளில் இரண்டாவது போக்குதான் ஏகாதிபத்தியங்களுக்கு கூடுதலான கொள்ளைக்கு வழிவகை செய்கிறது. எனவேதான். "தேசிய சுய நிர்ணய உரிமை என்றால் அரசியல் சுதந்திரம் என்று பொருள். இம்மாதிரியான சுதந்திரத்தை மீறுவதற்கே ஏகாதிபத்தியம் முயலுகிறது. ஏனெனில் அரசியல் ஆக்கிரமிப்பு—கைப்பற்றுதல் அடிக்கடி பொருளாதார ஆக்கிரமிப்பு — கைப்பற்றுதலை எளிதானதாகவும், மலிவானதாகவும் (அதிகாரிகளுக்கு லஞ்சம் அளிப்பது, சலுகைகளைப் பெறுவது. சாதகமான சட்டங்களை இயற்றுவது இன்னும் பிற சுலபம்) மிகவும் வசதியானதாகவும், சொற்ப சிரமமுடையதாகவும் இருக்கிறது அதாவது பொதுவாக ஏகாதிபத்தியம் ஜனநாயகத்தினிடத்தில் கொடுங்கோன்மையை நிறுவ முயலுவதே போன்றதாகும்." (ஏகாதிபத்தியம் மற்றும் ஏகாதிபத்தியவாதிகள் பற்றி லெனின், தொகுப்பு பக். 91)

இக்காரணத்தினால்தான் அரசியல் சுதந்திரம் என்ற பெயரில் ஏகாதிபத்தியம் திட்டமிட்டு ஒடுக்கப்பட்ட நாடுகள் மீது செய்யும் மோசடியை அம்பலப்படுத்த வேண்டுமென்றார் லெனின். "அனைத்து நாடுகளின் பரந்துபட்ட திரளான உழைக்கும் மக்களிடையே, குறிப்பாக பின்தங்கிய நாடுகளின் மக்களிடையே, அரசியல் ரீதியில் சுதந்திரமடைந்த நாடுகள் என்ற மூடுதிரையின் பின்னே, ஆனால் பொருளாதார ரீதியிலும், நிதி விவகாரங்களிலும் ராணுவ ரீதியிலும் முழுக்க முழுக்க ஏகாதிபத்தியங்களைச் சார்ந்துள்ள நாடுகளை உருவாக்க ஏகாதிபத்திய வல்லரசுகள் திட்டமிட்டுச் செய்யும் மோசடியை இடையறாது விளக்கவும் அம்பலப்படுத்தவும், நவீன சர்வதேச சூழ்நிலைகளின் கீழ் பலவீனமான மற்றும் சார்புநிலை நாடுகள் சோவியத் குடியரசுகளின் ஒன்றியமாக அமைந்தாலொழிய அவற்றின் விமோசனத்துக்கு வேறு வழியில்லை என்பதையும் அவர்களிடம் பிரச்சாரம் செய்ய வேண்டும்". (லெனின், தேசிய மற்றும் காலனியப் பிரச்சனைகள், மூன்று கட்டுரைகள், பக். 27—28).

ஆனால் லெனின் எச்சரித்து, நமக்கு ஆணையிட்டதற்கு நேர் எதிராக எல்லா நாடுகளிலும் அரசியல் சுதந்திரம் பிரகடனம் செய்யும் கபடத்தனமான ஏகாதிபத்திய மோசடியை நம்பும்படியும், இல்லையானால் நம்பாதவர்களைப் பார்த்து ஏகாதிபத்தியப் பொருளாதார வாதிகள் என இழித்துரைப்பதும் இன்றைய முதலாளிய அரசியல், சமூகவியலாளர்கள் மற்றும் எல்லா வண்ணத் திரிபுவாதிகளது வாடிக்கையாகிவிட்டது. இரண்டாம் உலகப் போரைத் தொடர்ந்து ஏகாதிபத்தியங்களது காலனியாதிக்க நெருக்கடிகளையும், அரசியல் சுதந்திரம் என்ற பெயரில் தனது அடிவருடிகளிடம் அதிகார மாற்றம் செய்து ஏகாதிபத்தியங்கள் ஆடிய தில்லுமுல்லுகளையும், பித்தலாட்டங்களையும், ஆயுதப் போராட்ட தேசிய விடுதலைப் போர்களில் ஊன்றி நின்ற நாடுகள் மட்டுமே எவ்வாறு அரசியல் சுதந்திரம் அடைந்தன என்பதையும் ஏற்கனவே விரிவாகப் பார்த்தோம். ஆனால் ஏகாதிபத்தியங்களின் தில்லு முல்லுகளையும், பித்தலாட்டங்களையும் அப்படியே நம்ப வேண்டுமென்றும் ஏகாதிபத்தியங்கள் தமது அடிவருடிகளிடம் வெறுமனே அதிகார மாற்றம் செய்த நாடுகளையும் சேர்த்து தராதரமின்றி அரசியல் சுதந்திரமடைந்தவைகளாக ஏற்க வேண்டும் என்றும் சொல்கின்றனர். ஏகாதிபத்தியத்தின் கீழ் அரசியல் சுதந்திரமே அடையமுடியாது, தேசிய சுயநிர்ணய உரிமை பெறவே முடியாது என்பதுதான் ஏகாதிபத்தியப் பொருளாதார வாதமாகும். மாறாக, இவற்றை அடையமுடியும், ஆனால் சீர்திருத்த வழிகளினால் அல்ல. புரட்சிகரமான முறையில் அடையும்பொழுது மட்டுமே உண்மையானவை. மற்றபடி அரசியல் சுதந்திரம், தேசிய சுயநிர்ணய உரிமை என்ற பெயரில் ஏகாதிபத்தியங்களின் மோசடி, தில்லுமுல்லு, பித்தலாட்டங்களை ஏற்கமுடியாது "ஒரு வரிசையான அடுத்தடுத்தபுரட்சிகளின்றி அரசியல் ரீதியில் அவைகளை அடைவது கடினம் அல்லது முற்றிலும் அடையவே முடியாது என்ற அர்த்தத்தில் ஏகாதிபத்தியத்தின்கீழ் எல்லா ஜனநாயகக் கோரிக்கைகளையும்அடைய முடியாது" (ஏகாதிபத்தியம் மற்றும் ஏகாதிபத்தியவாதிகள்பற்றி லெனின், பக். 87) என்ற லெனினது வரையறுப்பின்படிதான் வரிசையான புரட்சிகளின்றி அரசியல் சுதந்திரத்தை அடைய முடியாது என்று கூறுகிறோம். ஏகாதிபத்தியத்தை எதிர்த்து தேசிய விடுதலைப் புரட்சி இயக்கம் மற்றும் தேசிய விடுதலைப் போரின்றி, காலனிய அரசு இயந்திரம் அடித்து நொறுக்கித் தூக்கியெறியப்படாமல் அரசியல் சுதந்திரத்தை அடையமுடியும் என்பது—ஏகாதிபத்தியங்கள் தாங்களே அரசியல் சுதந்திரத்தைக் கொடுத்துவிட்டு போகும் என்பது—ஏகாதிபத்தியம்தனது காலனியாதிக்கத்தை தானே முடிக்கும் (DECOLONISATION) என்ற பாட்டாளி வர்க்கத் துரோகிகளான ரஜனி பாமிதத் மற்றும் எம். என். ராயின் கேடுகெட்ட பழைய கோட்பாடுகளை முன்னிறுத்துவதேயன்றி வேறொன்றுமில்லை.

காலனியாதிக்கத்துக்கு எதிரான தேசிய விடுதலைப் புரட்சி

களிலே தேசிய முதலாளிகள் ஊசலாடுவதும், எதிரிகளுடன் சமரசம் செய்துகொண்டு சரணடைவதும் பல நாடுகளில்அடிக்கடி நடப்பதும், ஒரு விதியும் கூட ஆகும். அவர்கள் முரணின்றி விடுதலைப் போரை இறுதி வரை வழிநடத்திச் செல்வதில்லை. ஆனால் ஏகாதிபத்தியத்தின் பக்கம் உறுதியாக நிற்கும் தரகு முதலாளிகள் கூட ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போராடுவதாகக் கூறி மக்களின் போராட்டங்களை திசை திருப்புவதும், தங்களது நலன்களை ஏகாதிபத்தியங்களின் நலன்களோடு பிணைத்துப் பாதுகாப்பதும். ஏகாதிபத்தியங்களே கூட தேச விடுதலை இயக்கங்கள் என்ற பெயரில் நிறுவனங்களைத் தோற்றுவித்து அதன் மூலம் ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளை தங்களது ஆளுகைக் குட்பட்ட நிறுவனங்களின் கீழ் கொண்டு வருவதும் ஒரு பொது விதியாக மாறி விட்டிருக்கிறது. இந்தப் போக்கை லெனின் பல்லாண்டுகளுக்கு முன்பே சுட்டிக் காட்டி எச்சரித்திருக்கிறார்: "ஒடுக்கப்பட்ட நாடுகளிலும் கூட சீர்திருத்த இயக்கங்களை தோற்றுவிக்க ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கம் தன்னால் இயன்றதனைத்தையும் செய்கிறது. சுரண்டுகின்ற நாடுகளின் முதலாளித்துவ வர்க்கத்துக்கும், காலனிய நாடுகளைச் சேர்ந்த முதலாளித்துவ வர்க்கத்துக்கும் இடையில் ஒரு குறிப்பிட்ட அளவு இணக்கம் காணப்படுகிறது. இதனால் அடிக்கடி—ஒரு வேளை பல சந்தர்ப்பங்களில்— ஒடுக்கப்படும் நாடுகளை சேர்ந்த முதலாளிகள் தேசிய இயக்கத்தை ஆதரிக்கும் அதே வேளையில் ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்துடன் கூட்டு வைத்துள்ளனர். அதாவது இவர்கள் ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்துடன் சேர்ந்து எல்லா புரட்சிகர இயக்கங்களையும், எல்லா புரட்சிகரவர்க்கங்களையும்எதிர்த்துப்போராடுகின்றனர். இது கமிஷனில் (மூன்றாவது அகிலத்தின் கீழ் அமைக்கப்பட்டது—த.மா.அ.க.) மறுக்க முடியாதபடி நிரூபிக்கப்பட்டு உள்ளது. இந்த வேறுபாட்டைக் கணக்கில் கொள்வதே சரியாகும் என்று நாம் முடிவெடுத்தோம். கிட்டதட்ட எல்லா சந்தர்ப்பங்களிலும் "முதலாளித்துவ-ஜனநாயக" என்ற சொற்றொடருக்குப் பதில் "தேசிய—புரட்சிகர" என்ற சொற்றொடரைப்பயன்படுத்த வேண்டும் என்று முடிவெடுத்தோம். இந்த மாற்றத்தின் பொருள் என்னவென்றால், பொதுவுடமையாளர்களாகிய நாம் எப்போது முதலாளித்துவ விடுதலை இயக்கங்களை ஆதரிக்க முடியுமென்றால், அவை உண்மையில் புரட்சிகரமானவையாக இருக்கும் போது மட்டுமே, விவசாயிகளையும் சுரண்டப்படும் பரந்துபட்ட திரளான மக்களையும் புரட்சிகர உணர்வில் போதபளித்து அமைப்பாக்கும் நமது பணிகளுக்கு இந்த இயக்கங்களின் தலைவர்கள் ஊறுவிக்காமல் இருக்கும்போது மட்டுமே ஆதரிக்க முடியும். இந்தச் சூழ்நிலைகள் நிலவாதிருக்குமானால், இந்த நாடுகளில் உள்ள பொதுவுடமையாளர்கள் சீர்திருத்தவாத முதலாளித்துவ வர்க்கத்தை—இரண்டாம் அகிலத்தின் வீராதி வீரர்களும இந்த ரகத்னதச் சேர்ந்தவர்களே—எதிர்த்துப் போராட வேண்டும். காலனி நாடுகளில் ஏற்கனவே சீர்திருத்தவாதக் கட்சிகள் இருக்கின்றன. சில சந்தர்ப்பங்களில் அவற்றின் தலைவர்கள் தம்மை சமூக—ஜனநாயகவாதிகள் என்றும் சோசலிஸ்டுகள்

என்றும் கூறிக்கொள்கின்றனர்,'' (லெனின்; மூன்று கட்டுரைகள், தேசிய மற்றும் காலனியப் பிரச்னைகள் பற்றி, பீகிங் வெளியீடு, ஆங். பக். 32—33)

மக்களுடைய போராட்டங்கள் மேலும் மேலும் புரட்சிகரமானதாக வளரும்பொழுது, அவற்றை திசை திருப்ப ஏகாதிபத்தியவாதிகள் தமது அடிவருடி நிறுவனங்கள் மூலம் (தரகு முதலாளிகள், நிலப்பிரபுக்களது அமைப்புகள்) முயலுகின்றனர் தேசியமுதலாளிகள் கீழுள்ள இயக்கங்கள் கூட மக்களுடைய போராட்டங்கள் வளர்வதைக் கண்டு ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்து கொள்கின்றனர். ஏகாதிபத்தியத்தையும், முதலாளித்துவத்துக்கு முந்திய உற்பத்தி முறைகளையும் தூக்கியெறிவதன் மூலம் மட்டுமே உண்மையான அரசியல் பொருளாதார விடுதலையைக் காலனிகள் பெற முடியும். சீர்திருத்தங்கள் மூலம் இதைக் சாதிப்பதென்ற பேச்சுக்கே இடமில்லை. மாறாக ஏகாதிபத்திய ஆதரவு அல்லது ஏகாதிபத்திய முதலாளிகளாலேயே துவக்கப்பட்ட போலி விடுதலை இயக்கங்கள் மூலம் விடுதலை பெற்றுவிட முடியும், பெறப்பட்டிருக்கிறது என்று சொல்வது ஏகாதிபத்தியம் தனது பிரதான குணாம்சங்களில் ஒன்றான ஆதிக்கத்தைத்தான்—அரசியல் உரிமையை அல்ல—நடைமுறைப்படுத்துகிறது என்பதை மறுப்பதாகும்

ஆனால் ஏகாதிபத்தியங்களின் கபடத்தனம், மோசடி, பித்தலாட்டங்கள், தரகு முதலாளிகளின் துரோகத்தனம், தேசிய முதலாளிகளின் சமரச சரணடைவு மற்றும் ஊசலாட்டம், தேசிய விடுதலை இயக்கத்தின் இடர்பாடுகள், துன்ப துயரங்கள் இவையனைத்தும் அரசியல் ஜனநாயம், அரசியல் சுதந்திரம் மற்றும் தேசிய சுயநிர்ணய உரிமை ஆகியவற்றை ஏகாதிபத்தியம் இருக்கும் வரை அடைய முடியாது, அவற்றுக்காகப் போராடக் கூடாது எனக் காட்டுவதாக சொல்வது முட்டாள்தனமான ஏகாதிபத்திய அடிவருடி வேலையாகும். ''பொதுவாக மூலதனத்தின் ஆதிக்கம் என்கிற முறையில் நிதி மூலதனத்தின் ஆதிக்கத்தை அரசியல்துறையில் மேற்கொள்ளப்படும் எத்தகைய சீர்திருத்தத்தாலும ஒழித்துவிட முடியாது. சுயநிர்ணய உரிமை என்பது முற்றும் முழுதாக இந்த வகைப்பட்டதேயாகும்''. ''தன்னை விரிவுபடுத்திக் கொள்ள முயற்சிக்கும் நிதி மூலதனமானது—மிக மிக சுதந்திரமான, மிகமிக ஜனநாயகமான மற்றும் குடியரசான அரசாங்கத்தையும். எந்த ஒரு நாட்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளையும் அந்த நாடு எவ்வளவுதான் 'சுதந்திரமானதாக' இருந்தாலும்—சர்வ சுதந்திரமாக லஞ்சத்தின் மூலம் விலைக்கு வாங்கிவிடும்'', ''எவ்வாறாயினும் மிகவும் சுதந்திரமான, மிகவும் விரிவான, மிகவும் கூறிப்பான வர்க்க ஒடுக்குமுறை மற்றும் வர்க்கப் போராட்டத்தின் வடிவம் என்கிற ரீதியில் அரசியல் ஜனநாயகத்தின் முக்கியத்துவத்தை நிதிமூலதனத்தின் ஆதிக்கம் ஒழித்துவிடுவது இல்லை. எனவே முதலாளித்துவத்தின் கீழ் அரசியல் ஜனநாயகத்தின் கோரிக்கைகளில் ஒன்றை பொருளாதார ரீதியில் ''சாதிப்பது சாததியமற்றது''

என்ற வாதங்கள் அனைத்தும் முதலாளித்துவத்தின் பொதுவான மற்றும் அடிப்படையான உறவுகள் மற்றும் பொதுவில் அரசியல் ஜனநாயகம் பற்றிய தத்துவார்த்த ரீதியில பிழையான வரையறுப்புகளுக்காகவே தரங்குறைந்து விடுகின்றன''. (லெனின், மேற்படி நூல், பக். 3-4).

இங்கே இரண்டு உண்மைகளை வலியுறுத்தியாக வேண்டும். முதலாவதாக, லெனினது வரையறுப்புப்படி அரசியல் ரீதியில் சுதந்திரம் பெற்ற நாடுகளைக் கூட ஏகாதிபத்தியங்கள் தங்களது நிதி மூலதனத்தைக் கொண்டு முழுக்கவும் ஆதிக்கம் செலுத்த முடியும் அரசியல் ஜனநாயகம் என்ற அரங்கில் எந்தவகையான சீர்திருத்தங்கள் செய்தாலும் அது ஏகாதிபத்தியத்தியங்களின் நிதி மூலதன ஆதிக்கத்திற்கு எள்ளளவும் தடையாக இருப்பதில்லை. அரசியல் சுதந்திரத்தை வென்றெடுத்த நாடுகளைக்கூட ஏகாதிபத்தியங்கள் இந்த வகையிலேயே நவீன காலனி அல்லது அரைக்காலனி நாடுகளாக மாற்றிவிட முடியும். எனவே, ஏகாதிபத்தியத்தின் பிரதான சமூக அடித்தளமாக உள்ள முதலாளித்துவத்துக்கு முந்திய உற்பத்தி முறைகளை முற்றாக தூக்கியெறியும் போதுதான் இதைத் தடுப்பது சாத்தியமாகும். அவ்வாறில்லாமல் அதை ஒருபுறம் தக்க வைத்துக்கொண்டே முழுமையான, நிரந்தரமான அரசியல் சுதந்திரம் பெற்றதாக சொல்லிக்கொண்டு சுயதிருப்தி அடைவது தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்வதாகும். அத்துடன் ஏகாதிபத்திய நிதி மூலதன நிதிக் கொடுங்கோன்மையையும் ஏகாதிபத்தியத்தின் இயல்பான, உலகைப் பிரதேச ரீதியாக மறு பங்கீடு செய்வது என்ற தன்மையையும் மூடிமறைப்பதுமாகும். இரண்டாவதாக, வர்க்கப் போராட்டம், வர்க்க ஒடுக்குமுறையின் மிகவும் சுதந்திரமான, மிகவும் விரிவான, மிகவும் தனித்தன்மை வாய்ந்ததான வடிவமாக அரசியல் ஜனநாயகத்துக்கான போராட்டத்தை நிதி மூலதன ஆதிக்கம் அழித்துவிடுவதில்லை என்ற லெனினது முக்கியத்துவம் வாய்ந்த போதனை. ''தேசங்களின் சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கை மட்டுமின்றி அரசியல்ஜனநாயகத்தின் அனைத்துக் கோரிக்கைகளும் ஏகாதிபத்தியத்தின் கீழ்''அடையப் பெறுவது சாத்தியமே'' முழுமையற்றதாக, வெட்டிக் குறுக்கப்பட்டதாக, மிகவும் விதிவிலக்காகவே (உதாரணமாக 1905-இல் நார்வே ஸ்வீடனிலிருந்து பிரிந்தது) இவை இருந்தாலும் கூட புரட்சிகர சமூக—ஜனநாயகவாதிகள் அனைவராலும் முன்வைக்கப்படுகின்ற காலனிகள் உடனடியாக விடுதலை பெறவேண்டும் என்ற கோரிக்கையும்கூட ஏகாதிபத்தியத்தின் கீழ் தொடர்ச்சியான, அடுத்தடுத்த புரட்சிகளின்றி அடையப் பெறுவது சாத்தியமில்லை. ஆனால் இந்தக் கோரிக்கைகள் அனைத்துக்காகவும் உடனடியாக மற்றும் தீர்மானகரமான போராட்டத்தை நடத்துவதிலிருந்து சமூக- ஜனநாயகம் விலகியிருக்க வேண்டும் என்பதை இது குறிக்காது. ஏனெனில் அவ்வாறு விலகியிருப்பது என்பது முதலாளித்துவ வர்க்கத்துக்கும் பிற்போக்குக்குமே சாதமாக அமையும். மாறாக, இக் கோரிக்கைகள் அனைத்தையும் உருவாக்கி முன்வைக்க வேண்டுவது அவசியம் என்பதையே இது குறிக்கிறது. இவற்றை சீர்த்திருத்த வழி

யில் அல்லாது புரட்சி வழியில் முன்வைக்க வேண்டும். முதலாளித்துவ சட்டவாதக் கட்டுக் கோப்புக்குள் அடங்குவதாக இராமல் அதை உடைத்தெறியும் படியாக முன்வைக்க வேண்டும். நாடாளுமன்ற சொற்பொழிவுகள், சொல்லளவிலான ஆட்சேபங்களுடன் வேலியிட்டுக் கொள்ளாமல் உண்மையான நடவடிக்கைகளில் பரந்துபட்ட மக்களை ஈர்ப்பதாக அமைய வேண்டும். ஒவ்வொரு வகையான அடிப்படையான, ஜனநாயக கோரிக்கைகளுக்கான போராட்டத்தை விரிவுபடுத்தவும் தீவிரப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும். முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராக பாட்டாளி வர்க்கம் நேரடி தாக்குதல் தொடுப்பதை—முதலாளித்துவ வர்க்கத்தைப் பறிமுதல் செய்யும் சோசலிப் புரட்சியை உள்ளடக்கியதாக—இந்த கோரிக்கைகளும் போராட்டங்களும் இருக்க வேண்டும்'' (லெனின், மேற்படி நூல், பக். 4.)

எனவே, புரட்சிகரமான முறைகளில் அல்லாது சீர்த்திருத்தத்தின் மூலமோ ஒரு தேசிய விடுதலை புரட்சியின் மூலம் அல்லாமலோ காலனி ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறுவது முயற்கொம்பே. ஏகாதிபத்தியத்தை எதிர்த்து தேசிய விடுதலை போர் மூலம், பரந்துபட்ட விவசாயிகளைத் தட்டியெழுப்பி, காலனிய அரசு எந்திரத்தை அடித்து நொறுக்கித் தூக்கியெறிந்துவிட்டு புதிய தேசிய விடுதலைக்கான அரசுஎந்திரத்தை நிறுவும்போதும், ஏகாதிபத்தியத்தின் எல்லா நிறுவனங்களையும் பறிமுதல்செய்யும் போதும், தேசிய விடுதலையைப் பாதுகாப்பதற்கான பாதையில் வழி நடக்கும் போதும் மட்டுமே அரசியல் ரீதியிலான சுதந்திரம் பெற்றதாக முன்னாள் காலனி நாடுகளை அங்கிகரிக்க முடியும்.

எனவே, 1 ஆயுதப் போராட்டத்தின் மூலம் கலானி ஆதிக்கத்தை எதிர்த்துத் தேசிய விடுதலைப் போர்களில் வென்று, காலனிய அரசைத் துாக்கி யெறிந்து புதிய சுதந்திரமான அரசு எந்திரத்தை நிறுவுவது.

2. தேசிய விடுதலைப் போரை தேசிய முதலாளிகள் அல்லாது பாட்டாளி வர்க்கத் தலைமையில்—காலனி ஆதிக்க எதிர்ப்புடன் அவர்களது சமூக அடிப்படைகளை தரகு முதலாளிகள் மற்றும் நிலப்பிரபுக்களுக்கெதிராகவும் நடத்தி பரந்துபட்ட விவசாயிகளையும் தட்டியெழுப்பி—முரணின்றி தேசிய விடுதலை இயக்கத்தை இறுதிவரை வழிநடத்திச் சென்று அரசியலதிகாரத்தைக் கைப்பறுவது.

3. காலனி ஆதிக்கவாதிகள் மற்றும் அவர்களது அடிவருடிகளது மூலதனத்தையும் தொழில் மற்றும் பிற நிறுவனங்களையும் பறிமுதல் செய்வதோடு விவசாயச் சீர்த்திருத்தத்தையும் தொடங்கி அந்நிய நிதி மூலதனம், மூலதன ஏற்றுமதி ஏகபோகங்களுக்கெதிராக போராடி தேசிய பொருளாதாரத்தைக் கட்டி வளர்ப்பது அதாவது விவசாய உற்பத்திக்குப் பிரதான முக்கியத்துமும், விவசாய உற்பத்திக்குத் தேவையான இடைத்தட்டு இலகு உற்பத்திக்கு அடுத்த முக்கியத்துவமும், கனரகத் தொழில்

க்ளுக்கு மூன்றாவது முக்கியத்துவமும் என்றா ; யில் திட்டமிட்டு தேசியப் பொருளாதாரத்தை வளர்ப்பது.

4. தமது தேசியப் பொருளாதாரத்தை வளர்க்க பிற மூன்றாம் உலக நாடுகளையும் சோசலிச நாடுகளையும் சார்ந்து நிற்பதோடு கச்சாப்பொருட்களை ஏகாதிபத்தியங்கள் கொள்ளை யிடாதவாறு பிற மூன்றாம் உலகநாடுகளுடன் சேர்ந்து கார்ட் டெல்கள், சிண்டிகேட்டுகள் அமைப்பது.

இவை நான்குமே பழைய காலனி அரசுகள் அரசியல் ரீதியான சுதந்திரத்தை பெற்றதற்கும் அதைக் காத்து உறுதிப்படுத்து வதற்கும் அடிப்படைகளாகும். இவையனைத்தும் இருப்பினும் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலான புரட்சியின்றி அரசியல் சுதந்திரம் பெற்ற நாடுகள் இன்னமும் ஏகாதிபத்திய உலகக் கட்டமைவிற்குள்ளேயே நீடிக்கின்றன. நிலப்பிரபுத்துவத்திற்கு எதிரான விவசாய சீர்திருத்தத்தை முன் தள்ளும்போதும், தொழில்வளர்ச்சி பெருகும்போதும் சமூதாய நெருக்கடிகள் முற் றும்போதும் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியை வெற்றிகர மாக முடிக்கத் தகுதி இழந்த முதலாளித்துவ வர்க்கத்தின் மேல் தட்டுப் பிரிவு நிலப்பிரபுத்துவத்துடனும் ஏகாதிபத்தியத்துடனும் சமரசம் செய்து கொள்வது தவிர்க்க முடியாததாகிறது. ஏகாதி பத்திய சங்கிலியிலிருந்து பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலான புரட்சியின் மூலம் அறுத்துக்கொண்டு வெளியேறாத வரை இந்த வாய்ப்பு நீடிக்கிறது. உள் நாட்டில் நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையும் உலக அளவில் ஏகபோகம் மற்றும் நிதி மூலதனத்தின் மேலாதிக்கமுமே இவற்றுக்கு அடிப்படைகளாகும்,

அரசியல் சுதந்திரம் பெற்று இருப்பதானது அரைக்காலனிய, நவீன காலனிய நாடுகளில் பெயரளவிலானதும், பிற நாடுகளில் அதிகாரபூர்வ வெளிப்பாடும் தானேயொழிய உண்மையானதும் முழுமையானதும் அல்ல. ஒருவகையில் காலனி நாடுகள் அரசியல் சுதந்திரம் பெற்றதை நிலப்பிரபுத்துவ அரசிலிருந்து முதலா ளித்துவ அரசாக மாறுவதுடன் ஒப்பிடலாம். ஒரு வேற்றுமை என்னவென்றால் மீண்டும் ஒரு புதிய சார்பு நிலை அரசாக நிலை நாட்டப்படுவதற்கான வாய்ப்புகாலனி நாடுகளில் நிலப்பிரபுத்துவ உற்பத்திமுறை இருக்கும்வரை நீடிகிறது. முதலாளித்துவ அரசு பிற்பட்ட மக்களுககு குறிப்பாக தொழிலாளர்களுக்கு ஒருவகையில் எவ்வாறு முன்னேற்றகரமானதோ அதே போன்று அரசியல் சுதந்திரமும் பழைய காலனி நாடுகளுக்கு முன்னேற்றகரமானது தான். ஆனால் முதலாளித்துவ அரசின் கீழ் உண்மையான சுதந்திரம் முதலாளிகளுக்குத்தான் என்பதும் மூலதனம் ஆதிக்கம் செலுத்துவதும் யாவரும் அறிந்ததே. அதே போன்று ஏகாதி பத்திய உலகக் கட்டமைவில் நீடிக்கும்வரை உண்மையான, முழு மையான சுதந்திரம் ஏகாதிபத்தியங்களுக்குத்தான். மேலும், நிதி மூலதனத்தின் நிதிக்கொடுகோன்மையும் ஏகபோகங்களும், சர்வதேசிய முதலாளித்துவ கூட்டுப் பிணைப்புகளும், கார்ட் டல்கள், சிண்டிக்கேட்டுகள், டிரஸ்டுகளும் ஆதிக்கம் செலுத்து

கின்றன. ஆனால் முதலாளித்துவ அரசு எவ்வளவுக்கெவ்வளவு முதலாளித்துவ ஜனநாயக ஆட்சிமுறையை நீட்டிக் கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு கொடியதும் வலியதும் முதலாளித்துவத்திற்கு சாதகமானதும் ஆகும். ஆனால் ஏகாதிபத்தியத்தின் நிதி மூலதனம் ஏக போகங்கள் அதனினும் கொடியதும் வலியதும் ஆகும். எனவே, தான் இனவெறி, நிறவெறி, பாசிசம் மற்றும் மேலாதிக்கம் ஆகிய படுபிற்போக்குத்தனமான கொள்கைகளைப் பின்பற்றுவதோடு, நாடுகளின் அரசியல் ரீதியான சுதந்திரத்தையும்கூட வென்றடக் கவே அவை விரும்புகின்றன. எனவேதான் பொதுவாகஏகாதிபத்தி யங்கள், குறிப்பாக இன்றைய இடைக்கட்டத்தில் அமெரிக்கா, ருசியா ஆகிய இரு மேல்நிலை வல்லரசுகள் சர்வநாசம் விளை விக்கும் உலக போருக்கான ஆயுதக் குவிப்பிலும் மேலாதிக்கப் போட்டியிலும் முன்னெப்போதும் கண்டிராதவாறு மூர்க்கத்தன மாக இறங்கியுள்ளன. மூலதனத்தின் அளவுக்கேற்ப பராக்கிரமத் தின் சக்திக்கேற்ப ஏகாதிபத்தியங்கள் உலகை கூறுபோடுவதும் மறுகூறு போடுவதும் என்ற ஏகாதிபத்திய அரசியலின் உள் ளடக்கம் உலக மேலாதிக்கமாகும். அந்த அரசியலின் நீடிப்பு ஏகாதிபத்திய யுத்தமாகும். ஏகாதிபத்தியத்தின் எல்லா அடிப் படை முரண்பாடுகளும் மேலும் ஆழமாகியும் கூர்மையாகியும் இருப்பதை மூடிமறைப்பது; ஏகாதிபத்தியத்தின் தனிச்சிறப்பான குணாம்சங்களிடத்தில் பொதுவாக முதலாளித்துவத்தின் குணாம்சங்களை முன்னிறுத்துவது ஆகியவை மூலம் நரவேட்டை யாடும் யுத்தவெறி பிடித்த இருமேல்நிலை வல்லரசுகளை சைவப் புலியாகிவிட்டதாக முதலாளித்துவ அரசியல்வாதிகளும், எல்லா வண்ணத்திரிபுவாதிகளும் சித்தரிக்கின்றனர். தேசியப் பொருளா தாரத்தைக் கட்டி வளர்ப்பது, காலனி ஆதிக்கம், ஏகாதிபத்தியம் மற்றும் மேலாதிக்கத்திற்கு எதிரான போராட்டம் ஆகியவற்றில் அரசியல் சுதந்திரம் சக்திமிக்க ஆயுதமாகப் பயன்பட முடியும். எனினும் நிலப்பிரபுத்துவ முறையோடும், ஏகாதிபத்திய உலகக் கட்டமைவிலும் நீடிக்கும் வரை யுத்தகாலத்தில் மட்டுமல்ல எப் பொழுதுமே அரசியல் சுதந்திரம் கூட பறிபோவதற்கான அபாயம் நீடிக்கிறது.

[illegible] போன்ற அரைக் காலனி, மற்றும் நவீன காலனி [illegible] அரசியல் சுதந்திரம் பெறுவதற்கான அடிப்படைகளை [illegible] விடுதலை இயக்கங்கள் பெறத் தவறிய [illegible] இயக்கங்களை ஒருபுறம் நிறுவைப [illegible] திருப்பி [illegible] சப்படுத்துவதிலும் மறுபுறம் கொடிய [illegible] அடக்கு ஒடுக்குவதிலும் வெற்றி பெற்றதாலும் ஏகாதி பத்தியங்கள் பெயரளவிலான சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்தி [illegible] அடிப்படைகளான தரகு முதலாளிகள் மற்றும் நிலப் பிரபுக்களிடம் அரசியல் அதிகாரத்தை மாற்றி காலனி அரசு [illegible] கட்டுக்குலையாமல் தக்கவைத்துக்கொண்டு தமது சுரண்டலையும் ஒடுக்கு முறையையும் நீடிக்க முடிகிறது. இந் நாடுகளின் தொழில் வளர்ச்சியும் தரகு முதலாளிகள் ஏகாதிபத் தியங்களுடனான பேரங்களில் சலுகை பெறுவதும், சில நாடு

களில் நாடாளுமன்ற ஆட்சிமுறை நிலவுவதும் தேசிய சுதந்திரத்தைக் குறிக்காது. மாறாக ஏகாதிபத்தியத்தின் ஏகபோகம் மற்றும் நிதி மூலதனத்தின் நிதிக் கொடுங்கோன்மை, மூலதன ஏற்றுமதி, உலகைக் கூறுபோடுவதற்கான போட்டி ஆகியவற்றையே குறிக்கும்.

உண்மையில் மூன்றாம் உலக நாடுகளுடனான ஏகாதிபத்தியத்தின் உறவை பின்வரும் நவீன காலனிய கொள்கைகளே விளக்குகின்றன. "பொருளாதார ரீதியில் ஏகாதிபத்திய நாடுகளும், விசேசமாக மேலாதிக்க வல்லரசுகளும், மூன்றாவது உலகத்தில் பரந்த அளவில் ஊடுருவல் மட்டுமல்ல, ஒற்றைப் பயிர் செய்கைப் பொருளாதாரத்தையுடைய வளர்முக நாடுகளின் உற்பத்திகளைக் கட்டுப்படுத்தவும், அடிப்படை உற்பத்திகளின் விலைவாசிகளைக் குறைக்கவும், தொழில்துறை உற்பத்திப் பண்டங்களின் விலைவாசிகளைக் கூட்டவும் உலகச் சந்தையிலுள்ள தமது ஏகபோக நிலைமையைப் பயன்படுத்தி, அவற்றை ஈவிரக்கமின்றிச் சுரண்டுகின்றன. அரசியல் ரீதியில் புதியதாக சுதந்திரமடைந்த நாடுகளைக் கட்டுப்படுத்தவும், கவிழ்க்கவும் அவற்றில் தலையிடவும் அவர்கள் பல்வேறு உத்திகளைக் கையாண்டு, அவற்றின் சுதந்திரத்தைவும் சுயாதிபத்தியத்தையும் ஊறுபடுத்துகின்றனர். அங்கெல்லாம் தமக்கு கீழ்படிவுள்ள ஆமாம் சாமிகளை ஊட்டி வளர்க்கவும் இயன்றதெல்லாம் செய்கின்றனர். இராணுவ ரீதியில், மூன்றாவது உலக நாடுகளை அடிமைப்படுத்தி யுத்த தந்திர மூலவளங்கள், யுத்த தந்திரப் பிரதேசங்கள், யுத்த தந்திர மார்க்கங்கள் ஆகியவறறைக் கவரும் நோக்கத்துடன், இந்த நாடுகளுக்கான ஆயுத வினியோகத்தைக் கட்டுப்படுத்தவும், அவற்றின் ஆயுதப்படைகளைப் பயிற்றுவிக்கவும், ஆணை வழங்கவும் சாத்தியமான எல்லா வழிகளிலும் முயலுகின்றனர். இன்னும் பலாத்காரத்தைப் பிரயோகிப்பதாக அப்பட்டமாய் அச்சுறுத்துகின்றனர். ஆக்கிரமிப்பு யுத்தங்களைக் கூட கட்டவிழ்த்து விடுகின்றனர்".

[மக்கள் தினசரி ஆசிரியர் குழு, மூன்றுலகங்களை வகைப்படுத்தும் தலைவர் மாவோவின் தத்துவம் மார்க்சியம் — லெனினியத்திற்கு ஒரு மகத்தான பங்களிப்பு, தமிழ், போராளி வெளியீடு, யாழ்ப்பாணம், இலங்கை, பக். 46—47.]

எனவே இன்றைய மூன்றாம் உலக நாடுகளில் கிட்டத்தட்ட அனைத்து நாடுகளிலுமே அரசியல் சுதந்திரம் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பினும் அந்நாடுகளின் உண்மையான அரசியல் அந்தஸ்த்தையும், ஆளும் வர்க்கங்களின் தன்மைகளையும், ஏகாதிபத்தியங்களுடனான உறவுகளையும் அந்நாடுகளும் ஏகாதிபத்தியங்களும் எவ்வாறு சித்தரிக்கின்றன என்ற கோணத்திலிருந்தோ அதிகாரபூர்வமான மற்றும் சட்டபூர்வமான கோணத்திலிருந்தோ இல்லாது, ஒவ்வொரு நாட்டின் பருண்மையான நிலைமைகளை ஆய்வு செய்வதன் மூலம் மட்டுமே அறிய

முடியும். இன்றைய மூன்றாம் உலக நாடுகள் காலனிய நிலையி லிருந்து அரசியல் சுதந்திரமடைந்த நிலைவரை பல்வேறு சார்பு நிலைகளில் இருக்கின்றன. தராதரமின்றி அனைத்தையும் அரசியல் சுதந்திரம் பெற்ற நாடுகளாக மதிப்பீடு செய்யக் கூடாது.

தராதரமின்றி எல்லா மூன்றாம் உலக நாடுகளும் அரசியல் சுதந்திரம் பெற்றுவிட்டதாகவும், ஏகாதிபத்திய உலகக் கட்டமை வில் அந்நாடுகளின் முதலாளிகள் உள்பயயாகி இருப்பதாகவும், சொந்த நலன்கள், சொந்த அரசு பெற்றிருப்பதால் ஏகாதிபத்தி யத்துடன் பேரம் பேசுவதாகவும், தேசிய முதலாளிகள், தரகு முதலாளிகள் எனப் பிரிக்க முடியாது, பெரிய முதலாளிகள் சிறிய முதலாளிகள் என்றே பிரிக்க முடியும் என்பதெல்லாம் 'ஏகாதி பத்திய உலகக் கட்டமைவை ஒரேயடியாகத் தூக்கி எறிந்து நேரடியாக உலகு தழுவிய சோசலிசப் புரட்சி' என்ற டிராட்ஸ்கிய வாதத்தை முன்னிறுத்துவதற்கு முதலாளிய அரசியல் மற்றும் சமூகவியலாளர்கள் செய்யும் வேலையாகும். இதே கோட்பாடுகளை எல்லா வண்ணத் திரிபுவாதிகளும் தமது வண் ணத்திற்கேற்ப மாற்றியமைத்துக் கொண்டு முன் வைக்கின்றனர். இவை அனைத்திற்கும்எதிராக ஏகாதிபத்தியம்,காலனி ஆதிக்கம், உலக மேலாதிக்கம் ஆகியவை பற்றிய மார்க்சிய-லெனினிய- மாவோ சிந்தனையைப் பிரயோகித்து உண்மையான நிலைமை களை எல்லா நாட்டுப் புரட்சியாளர்களும் பருண்மையாக ஆய்ந்தறிய வேண்டும்.

—×—

# 8. இந்தியா பெயரளவிலான சுதந்திரம் பெற்ற ஓர் அரைக்காலனி - அரை நிலப்பிரபுத்துவ நாடு; இந்திய அரசு தரகு-அதிகார வர்க்க முதலாளிகள், நிலப்பிரபுக்களின் அரசு.

இரண்டாவது உலக யுத்தத்திற்கு முந்திய உலகு தழுவிய பொருளாதார நெருக்கடியையும், உலக யுத்தத்தின் காரணமாக ஏகாதிபத்தியங்கள் பலவீனமடைந்ததையும் தொடர்ந்து பல காலனிகளிலும் சார்பு நாடுகளிலும் உள்ள மக்கள் தேச விடுதலைக்காகவும், பரிபூரண அரசுரிமைக்காகவும் ஆயுதந் தாங்கிய போராட்டத்தை நடத்தி வந்தது தேச விடுதலைப் போராட்டத்தின் பரிமாணத்தை அதிகரித்ததோடு மாத்திரமல்ல, அத்துடன் தன்மையில் அது புதிய தரத்திற்கும் உயர்த்தியது. குறிப்பாக, சுதந்திரக் குடியரசை வெல்வதற்காக இந்தோனேசியாவிலும், இந்தோ — சீனாவிலும் நடந்த ஆயுதந் தாங்கிய போராட்டமும், மலேசியாவிலும் பர்மாவிலும் நடந்த ஆயுதந் தாங்கிய போராட்டமும், இந்தியாவில் விவசாயிகளின் பேரெழுச்சிகளும், கடைசியாக சீன மக்களின் வெற்றிகரமான விடுதலை யுத்தமும் இரண்டாவது உலக யுத்தத்திற்குபிறகு தேச விடுதலை இயக்கமானது அதன் வளர்ச்சியில் ஒரு புதிய, உயர்ந்த கட்டத்தில் நுழைந்ததைக் குறித்தன. காலனிகளிலும், அரைக் காலனிகளிலும் நடக்கும் தேச விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சி, தன்மை, திசைவழி மற்றும் போக்கு ஆகியவற்றை பொதுவான சர்வதேச நிலைமையிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின்பு ஏகாதிபத்திய அரசுகளின் ஏற்றத் தாழ்வான வளர்ச்சி மேலும் அதிகரித்து தீவிர

படைகள் பர்மா வரை முன்னேறிவிட்டன; பாசிச முசோலினியின் படைகள் மத்திய ஆசியாவையும் வட ஆஃபிரிக்காவையும் விழுங்கிவிட்டன;நாஜி இட்லரின் படைகள் ஐரோப்பா கண்டம் முழுவதையும் ஆக்கிரமித்துவிட்டு கிழக்கில் சோவியத் யூனியனை யும், மேற்கில் இங்கிலாந்தையும் தாக்கத் துவங்கியது. ஏறக் குறைய உலகம் முழுவதும் விழுங்கிவிட பாசிச அச்சு நாடுகளின் படைகள் இறுதித் தாக்குதலைத் தொடுத்து அச்சுறுத்திய இச் சமயத்தில் ஸ்டாலினது தலைமையில் சோவியத் யூனியனும், அமெரிக்காவும் உலக யுத்தத்தில் குதித்தன. இதில் சோவியத் யூனியனின்உண்மை நோக்கம் பாசிசத்தை முறியடித்து உலக மக்களையும், சமாதானத்தையும், ஜனநாயகத்தையும் சோசலிசத்தையும் காப்பதே ஆகும். ஆனால் அமெரிக்காவின் நோக்கமோ பாசிச எதிர்ப்பு மட்டுமல்ல, தமது ஏகாதிபத்திய நலன்களுக்காக உலகை மறுபங்கீடு செய்வதுமாகும்.

"அட்லாண்டிக் சாசனத்தின்" வாசகங்களை அதன் தோற் றத்தைக் கொண்டு முடிவு செய்யக் கூடாது; அவை உண்மையில் ஏகாதிபத்தியவாதிகள் நவீன காலனித்துவ வடிவங்களை எடுப் பதையே காட்டுகின்றன. அதுமட்டுமல்ல பிரிட்டிஷ், பிரெஞ்சு முதலிய ஏகாதிபத்திய நாடுகளையும்அவற்றின் காலனிய மற்றும் சார்பு நாடுகளையும் பாசிச அச்சு நாடுகளிடமிருந்து காப் பதற்கு ஈடாக அமெரிக்காவின் புதிய வலிமையை அங்கீகரிக்கும் படியும், அதன் பராக்கிரமத்திற்கேற்ப உலகை மறுபங்கீடு செய் யும்படியும் அந்நாடுகளை நிர்ப்பந்திப்பதும்தான் "அட்லாண்டிக் சாசனத்தின்" உண்மையான பொருள்.

எனவேதான் "அட்லாண்டிக் சாசனத்தில்" கையொப்ப மிட்டதற்கு அடுத்த மாதத்திலேயே இங்கிலாந்து பிரதமர் அச்சாசனம் குறித்து தமது நாட்டின் ஏகாதிபத்திய நலன்களை முன்னிருத்தி பின்வருமாறு வியாக்கியானம் செய்தார்: இந்தியா, பர்மா, இலங்கை முதலிய ஆசிய நாடுகளுக்கு அட்லாண்டிக் சாசனம் பொருந்தாது என்று திட்டவட்டமாக இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் அறிவித்தார். அட்லாண்டிக் மகாசமுத்தி ரத்தை இழந்துவிட்ட நாடுகளையே அச்சாசனம் குறிக்கும் என்றார். இங்கிலாத்து பிரதமர் சர்ச்சிலின் நாடாளுமன்ற அறிக் கையை பகிரங்கமாக மறுத்து பின்வருமாறு அமெரிக்க குடியரசுத் தலைவர் ரேடியோ உரையாற்றினார்: 'அட்லாண்டிக் சாசன மானது, அட்லாண்டிக் மகா சமுத்திரத்தின் ஓரத்திலுள்ள நாடு களுக்கு மட்டுமல்ல, உலகம் பூராவுக்கும் பொருந்தும்'. அத்துடன் நிற்காது, இந்திய காங்கிரசு—முஸ்லீம் லீக் தலைவர்களிடம் அரசி யல் அதிகாரத்தை மாற்றும்படி இங்கிலாந்து பிரதமர் சர்ச்சிலுக்கு கடிதமும் எழுதினார். அப்போது அமெரிக்க அரசியல் வெளிவிவகார செயலராயிருந்த சம்மர் வெல்ஸ் எழுதிய நூலில் இவை அனைத்திற்குமான ஆதாரங்களிருக்கின்றன.

அதேசமயம் அமெரிக்க ஆதரவு நாடாகவிருந்த ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர், 'இந்தியா சுயாதிபத்தியமும் பொறுப

பும் கொண்ட நாடாக இந்த யுத்தத்தில் நேச நாடுகளின் பக்கத்தில் பங்கு கொள்வதை ஆஸ்திரேலிய அரசு விரும்புகிறது'' என்று அறிவித்தார். அதே சமயம் அமெரிக்க ஏகாதிபத்திய அடிவருடி சியாங்—கே—ஷேக் இந்தியா வந்து காங்கிரசு-முஸ்லீம் லீக் தலைவர்களையும், வைஸ்ராயையும் சந்தித்து இந்தியர்களுக்கு அரசியல் அதிகாரத்தை மாற்றுவதை ஆதரிப்பதாக அறிவித்தார். (ஒடுகாலிகள் உட்பட எல்லா வண்ணத் திரிபுவாதிகளும் தரகுஅதிகார வர்க்க முதலாளிகள் இன்னொரு நாட்டின் சுதந்திரத்தை ஆதரிப்பதாகக்கூட பகிரங்கமாக அறிவிப்பதைபற்றி என்ன கூறமுடியும்?

இரண்டாம் உலக யுத்தத்தில் குதிக்கும் போதே தனது பாராக்கிரமத்திற்கேற்ப புதிய செல்வாக்கு மண்டலங்களைக் கைப்பற்றும் நோக்கத்திலும் முயற்சியிலும் இறங்கி பிரிட்டிஷ் பிரெஞ்சு முதலிய ஏகாதிபத்தியங்களை அமெரிக்கா நிர்பந்திக்கத் துவங்கிவிட்டது என்பதையே மேற்கண்டவை காட்டுகின்றன. குறிப்பாக இந்தியாவின் மீதான ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் ஏகபோக காலனி ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டுவரவும், அரசியல் அதிகார மாற்றத்தின் மூலம் அரைக்காலனியாக்கி தானும் மேலாதிக்கம் செலுத்த அனுமதிக்கும்படி ஆங்கிலேய ஏகாதிபத்தியவாதிகளை அமெரிக்க ஏகாதிபத்தியம் நிர்ப்பந்தித்ததையும் இவை காட்டுகின்றன.

தேச விடுதலை இயக்கங்கள் இதுவரை கண்டும் கேட்டுமிராத முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் அடைந்ததும் அவற்றின் தரம்உயர்ந்து பிரதானமாக ஜனநாயக—ஏகாதிபத்திய எதிர்ப்பு முகாம் தங்கு தடையின்றி உரம் பெற்று காலனிகளில் புரட்சிகரமாகவெற்றிஈட்டியதும்காரணமாக முன்புபோல்பகிரங்கமாக ஆயுதத் தலையீடு முறைகளில் ஏகாதிபத்தியங்கள் ஈடுபடும் பொழுது மென்மேலும் அடிக்கடி தோல்வியுற்றனர். குறிப்பாக சீனாவிலும்; இந்தோ-சீனாவிலும் ஏகாதிபத்தியவாதிகள் துக்ககரமாக அனுபவத்தை சந்தித்தனர். ஆகவே, காலனி எஜமானர்கள் யுத்தக்கொள்கையையும் தலையீடு கொள்கையையும் ஒருபுறம் விடாமலிருக்கும்பொழுதே அவர்கள் இந்தக் கொள்கையை மூடி மறைக்க ஒவ்வொரு வழியிலும் முயன்றார்கள். 'உதவி', 'ஆதரவு'. தற்காப்பு' ஆகிய சாக்குப்போக்குகளின் மூலமாகவும், ஐக்கியநாடுகளின் அமைப்பை நயவஞ்சகமாக ஈடுபடுத்தியும் அடிக்கடி ஏகாதிபத்திய தலையீட்டை நடைமுறையில் கடைப்பிடித்தனர் அதேசமயம் வேறு பல சூழ்ச்சிகள் செய்யும்படியும் காலனிகளில் அவர்களுடைய ஆதிக்கத்தின் வடிவத்தை மாற்றும்படியும் விடுதலை போர்களின் வீச்சும் ஏகாதிபத்திய உள் முரண்பாடுகளும் அவர்களை நிர்ப்பந்தித்தன. அடிமைப்படுத்தப்பட்ட மக்களை ஏமாற்றும் பொருட்டும், அவர்களது ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய முன்னணியைப் பிளவுபடுத்தும் பொருட்டும் நயவஞ்சகமான முறைகளைக் கையாண்டனர் காலனிகளிலும் அரைக் காலனிகளிலும் ஏகாதிபத்தியவாதிகள், தரகு முதலாளிகள் நிலப்பிரபுத்துவ சக்திகளது ஆதரவை மாத்திரமல்ல தேசிய பெரும் முதலாளிகளது

ஆதரவையும் கூட மேன்மேலும் பெரிய அளவுக்கு சார்ந்து நின்று தமது அடிவருடிகளாக்கிக் கொண்டனர். தொழிலாளர் வர்க்கத் தலைமையின்கீழ் பரந்துபட்ட மக்கள் எழுச்சியுறுவது காரணமாக தேசிய முதலாளிகளிலும் பெரும் பிரிவினர் ஏகாதிபத்தியப் பிற்போக்கின் முகாமில் சேர்ந்தனர்; தங்கள் தேசத்தின் நல உரிமைக்கும், மக்களின் நல உரிமைக்கும் துரோகஞ் செய்தனர். ஏகாதிபத்திய காலனி எஜமானர்கள் இவர்களின் உதவியுடன் மதக்குரோதம், நிற, இனவெறி போன்றவற்றைத் தூண்டி விடுதலை இயக்கங்களையும், ஜனநாயகத்துக்கான போராட்டங்களையும் திசை திருப்ப முயன்றனர்.

கெமாலிசம், காந்தீயம், ஜியோனிசம் அல்லது அகண்ட இஸ்லாம் போன்ற பல்வேறு விதமான வடிவங்களிலான பிற்போக்கு முதலாளித்துவ தேசியவாத சித்தாந்தங்களை ஆயுதமாகக் கொண்டு ஏகாதிபத்தியவாதிகளின் நல உரிமைகளுக்கு உகந்த முறையில் மக்களைச் சீர்குலைத்து பிளவுபடுத்தினர்; அதோடு கூடவே புரட்சிகரமான லட்சியங்களிலிருந்தும் புரட்சிகரமான போராட்டங்களிலிருந்தும் மக்களைத் திசை திருப்பி தேசிய சீர்திருத்தவாதிகள், பிற்போக்கு பெரு முதலாளிகள் ஆகியோரின் தலைமையின்கீழ் போலித்தனமான தேசியவாதப் பாதையில் திருப்பி அவர்களின் சித்தாந்த, அரசியல்தலைமையின் கீழ் வைத்தனர். கடைந்தெடுத்த பிற்போக்குவாதியும், ஆங்கிலேய—அமெரிக்க ஏகாதிபத்திய அடிவருடியும் சீனத் தரகு அதிகார வர்க்க பாசிச இராணுவ சர்வாதிகாரியுமான சியாங் கே ஷேக் கும்பல் கூட தன்னைத் தேசியவாதி[illegible] என்று கூறிக்கொண்டது குறிப்பிடத்தக்கது ஏகாதிபத்தியத்தின் நிலையற்ற காலனி அமைப்பைப் பலப்படுத்தும் நோக்கத்திற்காக ஆங்கிலோ அமெரிக்க ஆக்கிரமிப்பு முகாம் இவற்றைப் பயன்படுத்திக் கொண்டது.

இந்தோனேசியாவில், அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்குத் தன்னைத்தானே விற்றுக்கொண்ட சுல்தான் ஷாரீயர், இந்தியாவில், ஆங்கிலோ-அமெரிக்க முகாமின் சேவகர்களான நேரு-காந்தி, பர்மாவில், இங்கிலாந்தின் பொம்மையான தாக்கின் நூ போன்ற தரகு-பெரு முதலாளித்துவ பிரதிநிதிகள் மற்றும் அவர்களது தாசானுதாசர்களான தேசிய சீர்திருத்தவாதிகளோடு சேர்ந்து கொண்டு ஆங்கிலோ-அமெரிக்க ஏகாதிபத்திய காலனி எஜமானர்கள் பெரும்பாலான பெரிதும் முக்கியமான காலனிகளில் காலனி மக்கள்மீது மோசடிகள் பலவற்றை மேற்கொண்டனர் ஏகாதிபத்தியவாதிகள் காலனி ஆதிக்கத்தின் பண்பாடாத, பகிரங்கமான வடிவங்களுக்கும் முறைகளுக்கும் பதிலாக அவைகளை விட சூழ்ச்சிகரமான, மறைமுகமான வடிவங்களைக் கையாண்டனர். உதாரணமாக டொமினியன் அந்தஸ்து கொடுப்பது, 'சுதந்திரம்' கொடுப்பது, சம்பிரதாய முறையில் இரு கட்சிகளதும் சரி சமத்துவத்தை அடித்தளமாகக் கொண்ட நேச உடன்படிக்கை உறவுகளை ஏற்படுத்துவது முதலியன. உண்மையான நடைமுறையில் பிலிப்பைனுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில்,

அல்லது ஈராக்கிற்கும் இங்கிலாந்திற்கும் இடையில் 'சரி சமத்துவம்' என்று கூறுவது பெரிய கபட நாடகமாகும்.

ஏகாதிபத்தியவாதிகளுக்கெதிரான ஜனநாயக—தேசவிடுதலை இயக்கங்களை ஆயுதந் தாங்கிய போராட்டத்தின் மூலம் இறுதி வரை சமரசமின்றி முன்னெடுத்துச் சென்று காலனிய, அரைக் காலனிய அரசுகளைத் தூக்கியெறிந்த நாடுகளைத் தவிர இதர நாடுகளில் எல்லாம் இத்தகைய மோசடிகளையே ஏகாதிபத்திய வாதிகளும் அவர்களது அடிவருடிகளும் அரங்கேற்றினர். அதாவது காலனிகளிலும், அரைக் காலனிகளிலும் ஏகாதிபத்தியவாதிகள் கடைபிடித்த 'புதிய கொள்கையின்' விளைவாக, தரகு முதலாளிகளை நிலப்பிரபுக்கள் மற்றும் பிரபுத்துவ சக்திகளோடு சேர்ந்து அதிகாரத்தில் அமர்த்த ஏற்பாடுகள் செய்தனர்; தொழிலாளர்கள், விவசாயிகள், முற்போக்கு அறிவாளிகள் ஆகியவர்களின் மக்கள் திரள் விடுதலை இயக்கத்தைப் பலாத்காரமாகவும் ஈவிரக்கமின்றியும் நசுக்குவதற்கு இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தினர். தரகு முதலாளிகளின் அரசு மிருகத்தனமான, பிற்போக்குத்தன்மையில் நிலப்பிரபுக்களுக்கோ அல்லது ஏகாதிபத்திய காலனி எஜமானர்களுக்கோ கொஞ்சம் கூட சளைத்தது அல்ல; இதை இந்தியாவின் நிலைமை எடுத்துக் காட்டுகிறது. காலனிகளில் ஏகாதிபத்திய ஆதிக்கம் நீடிப்பதை மூடி மறைப்பதையே குறிக்கோளாகக் கொண்ட புதிய முதலாளித்துவ ஜனநாயக சீர்திருத்தவாத ஆட்சி வடிவங்களும் முறைகளுமே இவை.

காலனி, அரைக்காலனி நாடுகளின் மீது தமது ஆதிக்கத்தை நீடிப்பதற்காக ஏகாதிபத்தியங்கள் மேற்கொண்டுள்ள நயவஞ்சகத்தனமான முறைகளையும் வடிவங்களையும் உண்மையென நம்பச் சொல்கிறார்கள் முதலாளித்துவ அரசியல் சமூகவியலாளர்களும் எல்லா வண்ணத் திரிபுவாதிகளும். யுத்தத்தினால் பலவீனப்பட்டு சாகுந்தறுவாயில் இருப்பதாலும், காலனிய மக்களின் விடுதலைப் போராட்டத்தைக் கண்டஞ்சியும் அரசியல் சுதந்திரமளித்துவிட்டு ஏகாதிபத்தியவாதிகள் வெளியேறும்படி ஆனதாக சித்தரிக்கின்றனர். ''உண்மைதான், இறந்துபடும் ஏகாதிபத்தியத்தின் இறுதிப் போராட்டக் கால கட்டம்தான் இது —ஏகாதிபத்தியம் 'சாகும் தறுவாயிலுள்ள முதலாளித்துவம்' ஆனால் அது சாகும் தறுவாயில் இருக்கிறது என்பதன் காரணமாகத்தான் அதன் வாழ்விற்காக எல்லாவற்றுக்கும் மேலாக மேலும் கூடுதலாக காலனி, அரைக் காலனிகளைச் சார்ந்திருக்கிறது; எந்தவொரு காலனி அல்லது அரைக்காலனி நாட்டில் அதன் சொந்த முதலாளிவர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் ஒரு முதலாளித்துவ சமுதாயம் போன்றது எதையும் நிறுவ அது நிச்சயம் அனுமதிக்காது'' என்று ஆணித்தரமாகக் கூறினர். [மாவோ, தெரிந்தெடுக்கப்பட்ட தொகுதி 4, பக். 344-355]. காலனி, அரைக்காலனி நாடுகளின் விடுதலை இயக்கங்கள் குறித்து இரண்டாம் உலகப் போரை அடுத்த கால கட்டங்களில் ஸ்டாலினது மேற்பார்வையில் ஆய்வு செய்த வி. எம். மஸ்லேனிகாவ், ஈ எம்

ஜுகாவ்; ஜுதானாவ் மற்றும் தயாக்கோவ் போன்ற சோவியத் அறிஞர்களும் இதையே வலியுறுத்தியுள்ளனர்.

"யுத்தகாலத்தில் ஏகாதிபத்தியவாதிகள் காலனிகளிலிருந்தும் அரைக் காலனிகளிலிருந்தும் அதிக செல்வத்தைக் கொள்ளை யடித்துச் சென்றனர். காலனி மக்கள் பட்டினிக்கும், கொடுஞ் சாவிற்கும் பலியிடப்பட்டனர்.

"ஏகாதிபத்தியத் தலைமை அரசுகள் காலனிகளைத் தீவிர மாக கொள்ளையடித்துச் சுரண்டியதன் விளைவாக காலனிகளி லும் அரைக்காலனிகளிலும் முரண்பாடு மிகுதியான அளவிற்கு அதிகரித்தது. காலனிய நாடுகளில் தங்களுடைய சமூக அடித் தளத்தை ஏகாதிபத்தியவாதிகள் விரிவுபடுத்திக் கொள்ள முயன் றனர். காலனிய நாடுகளின் செல்வத்தை உறிஞ்சி காலனிய மக்களை இன்னும் அதிகமாக அடிமைப்படுத்துவதற்கு தங்களுக் கோர் ஆயுதமாக உதவிய தேசியப் பெரும் முதலாளி வர்க்கத்தை ஏகாதிபத்தியவாதிகள் மேலும் மேலும் தங்களுடைய பக்கத்தில் சேர்ந்துவிடும்படி இழுத்துக்கொண்டனர். ஆட்சி புரிந்து வந்த முதலாளித்துவ வர்க்கப் பகுதிகள் ஏகாதிபத்தியவாதிகளின் உதவியுடன் காலனிகளிலும் அரைக் காலனிகளிலும் ஜனநாயக எதிர்ப்புப் போராட்டத்தின் மையங்களாக மாறின. இந்தியா சீனம் போன்ற சில நாடுகளில் தேசிய முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்த இப்பகுதிகள் ஏகாதிபத்திய ஆதரவின் மூலம் பெரிய ஏகபோக தரகு கூட்டமைப்புகளாக மாறியுள்ளன.

"இத்தகைய ஏகபோக கூட்டு ஸ்தாபனங்களுக்கு சீனத்தில் சியாங்-கே-ஷேக், சென்-லி-பூ, சூங், குன்-சியான்-சி என்னும் 'நான்கு குடும்பங்கள்' தெளிவான உதாரணங்களாகத் திகழ்ந் தன. கோமிண்டாங் சீனத்தின் அரசியல் பொருளாதார அதிகார மனைத்தும் இவர்களுக்குச் சொந்தமாயிருந்தது. அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் உதவியினால் இவர்கள் ஏராளமான மூலதனத்தையும், நாட்டின் இயற்கை வளங்களையும் தங்கள் கைகளில் திரட்டி வைத்திருந்தனர்.

"இவர்கள் முதலாளித்துவ சுரண்டல்முறைகளை மட்டுமின்றி முதலாளித்துவத்திற்கு முற்பட்ட காலத்திலியங்கிய முறைகளை யும்கையாண்டனர். அரசாங்க இயந்திரத்துடனும் அந்நிய மூல தனத்துடனும் ஒன்று கலந்த பெரும் ரொக்க மூலதனத்தின் தலை சிறந்த பிரதிநிதிகளாக இவர்கள் காட்சியளித்தனர்.

"சீன ஏகபோக கூட்டமைப்புக்கள் எப்படி கொள்ளை லாப மடித்தனவோ அதே முறையில் இந்த ஏகபோக கூட்டமைப்பு களும் யுத்த கால கட்டத்தில் ஏராளமான லாபங்களை அபகரித் துக் கொண்டு தங்களுடைய பொருளாதார பலத்தை மிகுந்த அளவிற்கு பெருக்கிக் கொண்டன. பிர்லா, டாட்டா, டால்மியா மற்றுமுள்ள கம்பெனிகளின் டைரக்டர்கள் பல ஆங்கிலேய

எதிர்ப்பு தீர்மானங்களை காங்கிரஸ் நிறைவேற்றியது பற்றி
ஆட்சேபனம் செய்யவில்லை என்பது உண்மைதான். ஆனால்
இவர்கள் சாராம்சத்தில் இந்தியாவில் ஆங்கிலேய மூலதனத்தின்
கையாட்களாகவும் கூட்டாளிகளாகவும் இருந்துவந்தனர்;
இன்றும் இருந்து வருகின்றனர். இந்தியாவில் அந்நிய ஏகாதி
பத்தியவாதிகளின் ஆட்சி இயங்கி வருவதானது இந்திய பெரும்
முதலாளிகளுக்கு சௌகரியமாக இருக்கிறது. இவ்வர்க்கம் மக்கள்
இயக்கத்தை எதிர்த்துப்போராடுவதற்கு இங்கிலாந்து ஏகாதி
பத்தியத்தின் ஆதரவை வேண்டுகிறது. தனது வர்க்க நலன்க
ளுக்காக தேச விடுதலை இயக்கத்திற்கு துரோகம் செய்தது.
யுத்தத்திற்குப்பின் 'சுயேச்சை' என்னும் வெளிவேஷம் தரித்துக்
கொண்டு ஆங்கிலேய ஏகபோகமுதலாளித்துவம்பொதுமக்களைக்
காலனிய முறையில் சுரண்டுவதை அப்படியே பத்திரபடுத்திவைத்
திருக்கும் ஓர் ஆட்சியை உருவாக்குவதற்கு இந்திய பெரும் முத
லாளிகள் ஆங்கிலேயே ஏகாதிபத்திய வாதிகளுக்கு உதவி புரிந்
துள்ளனர்''. ['காலனி மக்களின் விடுதலைப் போராட்டம்' வி.எம்
மஸ்லேனிகாவ்; ஈ.எம். ஜுகாவ், பக் 36-38]. ருசியப் பேரறிஞ
ரது ஆய்வுகளிலிருந்து பின்வரும் முடிவுகளுக்கு வருகிறோம்.
'ஆங்கிலேய, அமெரிக்க, பிரெஞ்சு, ஜப்பானிய ஏகாதிபத்தியவா
திகள் இந்நாட்டை அடிமை கொள்ள இதன் பகுதிகளை ஆக்கிர
மித்துக் கொண்டு போரிடுவது போன்ற நிலைமைதான் அரைக்
காலனி; அந்நியக் கம்பெனிகளுக்கு கமிஷன் ஏஜண்டுகளாகவும்
மோலாளர்களாகவும் அதிகாரிகளாகவும் இருந்தவர்கள், குறிப்
பாக வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள் மட்டுமே தரகுமுதலாளிகள்;
தொழிற்துறை முதலாளிகளைத் தேசிய மூதலாளியாகத்தான்
கருதவேண்டும். அந்நியக் கொள்கைகளையும் அந்நிய தொழிற்
கூட்டுக்களையும் இந்தியா 'சுயேச்சையாக' தீர்மானிக்கும்
உரிமை பெற்றுள்ளது. எனவே அரசியல் சுதந்திரம் உள்ளது'
என்பன போன்ற பல்வகை திரிபுகளும் தவறானவை
**என்றறிகிறோம்.**

இரண்டாம் உலகப் போரைத் தொடர்ந்து அமெரிக்கமற்றும்
ஆங்கிலேய ஏகாதிபத்தியங்களின் பலாபலத்திற்கேற்ப செய்யப்
பட்ட மறுபங்கீடும் தொடர்ந்து பல்வேறு ஏகாதிபத்தியங்களின்
வேட்டைக்கான போட்டிமையமாக மாறி இருப்பதும் இந்தி
யாவை அரைக்காலனியத் தன்மையுடையதாக்கியது. ஏகாதிபத்
தியங்களின் ஏகபோக,நிதிநிலைகொடுங்கோன்மை, நாடுபிடித்தல்
கொள்கை, அதற்கான போர், ஏகாதிபத்தியத்தின் ஒட்டுண்ணி
தன்மை மற்றும் முதலாளித்துவத்தின் இறுதிக் கட்டம் ஆகிய
சிறப்பான அம்சங்கள் யாருக்குஅடிமையாய் இருப்பதுஎன்பதைத்
தேர்ந்தெடுக்கும் உரிமையை மட்டுமே வழங்கியுள்ளது ஏகபோக
மும் நிதிக்கொடுங்கோன்மையும், மேலாதிக்கமும் சுயேச்சையை
வழங்குவதற்கு எதிரானது. அந்நிய கம்பெனிகளுக்கு கமிசன்
ஏஜண்டுகளாகவும் மேலாளர்களாகவும், வணிக வர்த்தகத்
துறையில் ஈடுபட்டிருந்தவர்கள் தொழிற்துறை முதலாளிகளாக
மாறியபோதும் தரகு முதலாளிகளாக இருந்தனர். தொழிற்
துறை முதலாளிகளாக இருந்த தேசிய முதலாளிகளிலும் பலர்

தரகு முதலாளிகளாக மாறினர்; டாட்டா, பிர்லா, டால்மியா போன்ற பெரு முதலாளிகளும் உண்மையில் தரகு முதலாளிகள் தான். சுருங்க கூறின், தொழிற்துறையிலிருந்தாலும் ஏகாதிபத்தியங்களுக்குச் சேவை செய்யும் அவர்களின் முதலாளித்துவ உற்பத்தி முறையின் விரிவாக்கப்பட்ட மறு உற்பத்திக்கு ஊழியஞ் செய்யும் பெரும் முதலாளிகள அனைவரும் தரகு முதலாளிகளாவர்.

முதல் மற்றும் இரண்டாம் உலகப் போரைப் பயன்படுத்திக் கொண்டு காலனி, அரைக்காலனிநாடுகளில் குறிப்பாக இந்தியாவில் தேசிய முதலாளித்துவம் வளர்ந்ததாகவும், அவர்கள் தலைமையிலான விடுதலை இயக்கம் வெற்றி பெற்று அரசியல் சுதந்திரம் அடைந்ததாகவும் எல்லா வண்ண திரிபுவாதிகளும் வழமையாக கதைக்கின்றனர். இப்போர்களினால் முதலாளித்துவத் தொழில்கள் வளர்ந்தன என்பது உண்மையே. ஆனால் அவை தரகுமுதலாளித்துவத் தொழில்கள்—ஏகாதிபத்தியத்துக்கு கட்டுப்பட்ட தொழில்கள்—தாம் என்று ஸ்டாலினும் பிற ருஷிய அறிஞர்களும் தெளிவு படுத்தியுள்ளனர்.

“காலனிகளிலும் அரைக் காலனிகளிலும் சார்பு நாடுகளிலும் தேசத் தொழில் இரண்டாவது உலக யுத்தத்தின்மூலம் ஓரளவிற்கு வளர்ச்சி பெற்றது. யுத்த காலத்தில் காலனிய உலகில் தொழில் உற்பத்தியின் பெருக்கம் ஒரு பக்கத்தில் அவசியமான உணவுப் பொருட்களும் தேவைப் பண்டங்களும் ஏகாதிபத்தியத் தலைமை நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவது நின்றதாலும், மறு பக்கத்தில் ஏகாதிபத்தியத் தலைமை நாடுகளுக்கு இராணுவகேந்திரமூலப் பொருள்களின் தேவையும் மற்றும் யுத்த நடவடிக்கைகளுக்கு வேண்டிய வேறு பல பொருள்களின் தேவையும் அதிகரித்து விட்டதாலும்தான் சாத்தியமாயிது. இதன் விளைவாக காலனிகளில் சுரங்கத் தொழிலும் மூலப் பொருள் தொழிலும் வளர்வதற்கு சாதகமாயிருந்தன; ஏகாதிபத்தியவாதிகளுக்குச் சொந்தமான உள்நாட்டு மூலப்பொருள்களைக் கொண்டியங்கும் யுத்த தொழிற்சாலைகள் கட்டப்படுவதற்கும், இயந்திர உற்பத்திரகத்தை சேர்ந்த சிறியதொழில் நிலையங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கும் உள் நாட்டு தொழிலும் வியாபாரமும் வளர்வதற்கும் உதவியாக இருந்தன. ஆனால், காலனிகள், சார்பு நாடுகள் பலவற்றிலும் ஓரளவிற்கு தொழில் வளர்ச்சி ஏற்பட்டதென்றபோதிலும் இந்த நாடுகள் தங்களது காலனிய அந்தஸ்தை விட்டு வெளிவந்து விடவில்லை.

“காலனிகள் ஏகாதிபத்தியத் தலைமை நாடுகளுக்குக் கட்டுப் பட்டிருக்கும் முறையில் அவற்றில் தொழிலை வளர்ப்பதென்பது ஏகாதிபத்தியத்தின் பிரத்யேக வழியாகும்’ [ஜே. வி. ஸ்டாலின், தொகுப்பு நூல்கள், 8-வது பாகம், பக். 128]

“காலனிகளிலும் அரைக்காலனிகளிலும் ஏற்பட்ட தொழில வளர்ச்சி திரிந்து மாறுபடுத்தப்பட்ட உருவங்களையும், ஒருதறை

பட்ட தன்மையையும் பெற்றிருந்தது'' (காலனி மக்களின் விடுதலைப் போராட்டம், பக். 35-36).

இந்தியப் பெரும் முதலாளிகள் தரகு அதிகார வர்க்கப் பெரு முதலாளிகள் அல்ல என்பதை நிரூபிப்பதற்கு முதலாளியஅரசியல், சமூக வியலாளர்களும், எல்லா வண்ண திரிபுவாதிகளும் பல்வேறு வாதங்களை முன்வைக்கின்றனர். ஆனால் அனைவரின் வாதங் களின் சாராம்சம் இதுதான்: ஏகாதிபத்தியங்களுடன் வணிக வர்த்தக கூட்டுகளில் ஈடுபட்டிருந்த 'முதலாளிகளையே தரகு முதலாளிகளாகக் கருத வேண்டும்; தொழித்துறை முதலாளி களை தேசிய முதலாளிகளாகத்தான் வரையறுக்க முடியும்'. இதற்கு ஆதாரமாக சீனத்தில் உற்பத்தியில்ஈடுபட டிருந்த முதலா ளிய வர்க்கத்தை தேசிய முதலாளிய வர்க்கம் எனவும் ஏகாதிபத் தியங்களுடன் கூட்டுச் சேர்ந்து வாணிகம் செய்தவர்களையே தரகு முதலாளிகள் என்றும் சீனக் கம்யூனிஸ்டு கட்சி வரையறுத் திருந்ததாக வாதிடுகின்றனர். அற்காக மாவோ, ஸ்டாலின் ஆகியோரது கீழ்கண்ட மேற்கோள்ககளைத் தவறாகப் பயன் படுத்திதமது கருத்துக்களுக்கு வலுவூட்ட முயற்சிக்கிறார்கள்.

''தரகர் என்ற வார்த்தையின் உண்மையான பொருளில் அது அந்நிய வியாபார நிறுவனத்தின் உயர்தர சீன அதிகாரி அல்லது சீன நிர்வாகியையே குறிப்பிடுகிறது. அந்நிய பொருளாதார நலன்களுக்கு தரகன் சேவை செய்கிறான். ஏகாதிபத்தியம் மற் றும் அந்நிய மூலதனத்துடன் நெருங்கிய தொடர்புகள் வைத்துள் ளான்'' (மாவோ, தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புக்கள். தொகுதி 1, பக். 19).

''தரகர்கள் என்பவர்கள் காலனி நாடுகளிலும் சார்பு நாடுக ளிலும் இருக்கும் உள்நாட்டு பெரு வணிக முதலாளிகளின் ஒரு பகுதியினர் ஆவார். அவர்கள் அந்நிய மூலதனத்திற்கும் உள்ளூர் மார்க்கெட்டுக்கும் இடையில் இடைநிலையாளர்களாகசெயல்படு கிறார்கள். சீனத்தில் தரகு முதலாளிகள் ஏகாதிபத்தியத்தின் ஏஜண்டுகளாக இருக்கின்றனர். அதனால் 1925—27 சீனப்புரட் சியில் கடும் எதிரிகளாக இருந்தார்கள்'' (ஸ்டாலின், தேர்ந் தெடுக்கப்பட்ட தொகுதி 9 பக்கம்-381).

சினப் புரட்சியின் துவக்க காலங்களில் இருந்த தரகு முதலா ளிகளின் தன்மைகள், செயல் பாடுகளை மட்டுமே இங்கு மாவோ வும், ஸ்டாலினும் வரையறுத்திருந்தார்கள். அதன் பின் சினத் தரகு அதிகார வர்க்கம் தன்மையில் பெரிதும் பரிணாமமாற்ற மடைந்தது. ஏகாதிபத்திய நிதி மூலதன இறக்குமதியின் காரண மாக தரகு முதலாளிகள் தொழிற் துறையிலும் இறங்கினர்; நாட் டின்உற்பத்தியைக்கட்டுப்படுத்தும் அளவு ஏகபோகமாக வளர்ந் தனர். அத்துடன் ஏற்கனவே உற்பத்தியில் ஈடுபட்டிருந்த தேசிய முதலாளிகளிலேயும் கூட அதன் மேல்தட்டுப் பிரிவினர் சீனத்தின் முதல் மாபெரும் புரட்சிக்குப் பின் 1927க்குப் பின் புரட்சிக்குத் துரோக மிழைத்து ஏகாதிபத்தியத் தரகர்களாகச்

சீரழிந்து போனார்கள். தரகு முதலாளித்துவ வர்க்கத்தினர் தன்மையிலும், செயல்பாடுகளிலும் தொடர்ந்து அடைந்து வந்த பரிணாம வளர்ச்சிக்கேற்ப மாவோவும், ஸ்டாலினும், அவர்களைப் பற்றிய வரையறுப்புக்களை மாற்றிக் கொண்டு வந்துள்ளனர். சீனப் பெரும் முதலாளிகளை தரகு அதிகாரவர்க்க முதலாளிகள் அல்லது அதிகார வர்க்க முதலாளிகள் என்றே அழைத்தனர். சீனப்புரட்சியின் ஆரம்பத்தில் தரகு முதலாளிகளாக இருந்தவர்கள் ஏகாதிபத்தியத்துடன் எந்த மாதிரி வடிவங்களில் உறவு கொண்டிருந்தார்கள் என்பதை எடுத்துக் கொண்டு அவைகளையே தரகு முதலாளிகளுக்கான குணாம்சமாகப் பொதுமைப் படுத்திக் கொண்டு அப்படிப்பட்ட வடிவங்கள் இந்தியாவில் இருக்கிறதா எனத்தேடுவதும் அப்படி இல்லாத பட்சத்தில் இந்திய முதலாளிகள் தரகுமுதலாளிகள் அல்ல என முடிவுக்கு வருவதும் தவறாகும். சீனத்தின் தரகு முதலாளிகளும் கூட தொடர்ந்து தன்மையிலும் செயல்பாடுகளிலும் பரிணாம வளர்ச்சியுற்று வந்தனர்.

1949க்கு முந்திய அரைக்காலனிய — அரைநிலப்பிரபுத்துவ பழைய சீனத்தில் முதலாளித்துவ வர்க்கம் அதிகார வர்க்க முதலாளிகள், தேசிய முதலாளிகள் என்று இருந்தது. அரசியலதிகாரத்தைச் செலுத்திக் கொண்டிருந்த பெரு முதலாளிகளே அதிகார வர்க்க முதலாளிகளாவர். 'அரசு நிறுவனங்கள்' மூலமாக அவர்கள் நாட்டின் பொருளாதார ஜீவநாடியை தங்களுக்கு ஏகபோகமாக்கி பெரும் அளவிலான ஆதாயங்களைத் திரட்டிக் கொண்டனர். ஏகாதிபத்தியவாதிகளுடன் கூடிக் குலாவிக் கொண்டு அவர்கள் சுய ஆதிபத்திய உரிமையை விற்றார்கள். எனவே. அவர்கள் தரகு முதல்ாளிகள் என்றும் அழைக்கப் பட்டனர்.

இவ்வாறு 'அரசு நிறுவனங்கள்' மூலம் பொருளாதார ஜீவநாடியை ஏகபோகமாக வைத்துக் கொள்ளையடித்த பெரு முதலாளி வர்க்கத்தைத்தரகு முதலாளிகள்என்றுதெளிவாகசீனக் கம்யூனிஸ்டு கட்சி கூறியுள்ளது. பீகிங் அந்நிய மொழிப்பதிப்பகத்தாரால் 1959 ல் வெளியிடப்பட்ட ஹோ-கான்-சி என்பவரால் எழுதப்பட்ட 'நவ சீனப் புரட்சியின் வரலாறு' என்ற புத்தகத்தில் உள்ள பின்வரும் ஓர் அடிக்குறிப்பு வணிகத்தில் ஈடுபட்டிருந்த தரகு முதலாளிகள் தொழிற் துறையிலும் ஆதிக்கம் பெற்றதைக் குறிப்பிடுகிறது. 'அந்நிய வணிக நிறுவனங்களில் இருந்த சீன மேலாளர்கள் அல்லது முதிய அலுவலர்கள் ஏகாதிபத்தியத்துடனும் அந்நிய மூலதனத்துடனும் தங்களுக்கிருந்த நெருக்கமான தொடர்புகளைப் பயன் படுத்திக் கொண்டு சீனத் தொழிற் துறையிலும் வணிகத்திலும் பெரும் புள்ளிகளாக ஆனவர்கள் தரகர்கள்'' (நவசீனப் புரட்சியின் வரலாறு; ஹோ-கான் சி-, பக். 18).

சீனத்தின் பெருமுதலாளிகள் பற்றிய புதிய வரையறுப்புகளைத் தாம் கொண்டிருப்பதாகப் பல சந்தர்ப்பங்களிலும்

மாவோ குறிப்பிட்டு வந்திருக்கிறார். சான்றுகளாகப் பின்வருவன அமைகின்றன. "சீனத்தின் நவீன ஆலைத் தொழில், தேசியப் பொருளாதாரத்தின் படைப்பின் மொத்த மதிப்பீட்டில் 10 சதவீதமே அதன் படைப்பின் மதிப்பு ஆயினும் அது மிக மிக ஒன்று குவிக்கப்பட்டுள்ளது; மூலதனத்தின் மிக முக்கியமான பெருமளவு பகுதி ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் அவர்களது அடிவருடிகளான சீன அதிகாரவர்க்க முதலாளிகளின் கரங்களில் குவிந்துள்ளது'' (மாவோ, தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள் 4; பக். 367).

சீனத்தின் நவீன ஆலைத் தொழில் மூலதனத்தை அதிகார வர்க்க முதலாளித்துவமாக வரையறுக்கும் மாவோ அதன் தோற்றம், வளர்ச்சி, தன்மைகளைப் பின்வருமாறு தருகிறார்: "அவர்களது 20 ஆண்டு ஆட்சியில் சியாங், சூங், குங் மற்றும் சென் ஆகிய நான்கு பெரும் குடும்பத்தினர் 10 லிருந்து 20 ஆயிரம் மில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்புடைய அளவற்ற செல்வத்தை அவர்கள் குவித்துக் கொண்டுள்ளனர்; மொத்த நாட்டின் பொருளாதார ஜீவநாடியையும் ஏகபோகமாக்கியுள்ளனர். இந்த ஏகபோக மூலதனம் அரசு அதிகாரத்துடன் இணைந்து அரசு ஏகபோக மூலதனமாகியுள்ளது. அந்நிய ஏகாதிபத்தியம், உள்நாட்டு நிலப்பிரபு வர்க்கம் மற்றும் பழைய பாணி பணக்கார விவசாயிகளுடன் நெருக்கமாக பிணைக்கப்பட்டுள்ள இந்த ஏகபோக முதலாளித்துவம் தரகு, பிரபுத்துவ, அரசு ஏகபோக மூலதனமாக மாறியுள்ளது. இதுதான் சியாங்—கே—ஷேக் பிற்போக்கு ஆட்சியின் பொருளாதார அடித்தளம். இந்த அரசு ஏகபோக மூலதனம் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளை மட்டுமல்ல நகர்ப்புற குட்டி முதலாளிகளையும் கூட ஒடுக்குகிறது; அது நடுத்தர முதலாளிகளையும் பாதிக்கிறது. இந்த அரசு—ஏகபோக முதலாளித்துவம் எதிர்ப்பு யுத்தத்தின் போதும், ஜப்பானிய சரணடைவுக்கு பிறகும் அதன் வளர்ச்சியில் உச்சியை எட்டியது; அது, புதிய ஜனநாயகப் புரட்சிக்குத் தேவையான அளவு பொருளாயத நிலைமைகளைத் தயாரித்துள்ளது. இந்த மூலதனம் சீனத்தில் பிரபலமாக அதிகாரவர்க்க மூலதனம் எனப்படுகிறது. அதிகார முதலாளித்துவ வர்க்கம் எனப்படும் இந்த முதலாளித்துவ வர்க்கம் சீனத்தின் பெரு முதலாளித்துவ வர்க்கமாகும். சீனத்தில் ஏகாதிபத்தியத்துக்கான தனிச்சிறப்பான சலுகைகளை ஒழிப்பதோடு மாத்திரமின்றி உள்நாட்டில் புதிய ஜனநாயகப் புரட்சியின் பணி நிலப்பிரபுத்துவ வர்க்கம் மற்றும் அதிகார முதலாளித்துவ வர்க்கச் (பெருமுதலாளித்துவ வர்க்கச்) சுரண்டலையும் ஒடுக்குமுறையையும் ஒழித்துக்கட்டி தரகு, நிலப்பிரத்துவ உறபத்தி உறவுகளை மாற்றி உற்பத்தி சக்திகளை விடுவிப்பதும் ஆகும். நிலப்பிரபுக்கள், பெருமுதலாளிகள் மற்றும் அவர்களது அரசு அதிகராத்தால் ஒடுக்கப்பட்டு பாதிப்புக்குள்ளான மேல்தட்டு குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினர்தான எனினும் புதிய ஜனநாயகப் புரட்சியில் பங்கேறகலாம் அல்லது நடுநிலை வகிக்கலாம். அவர்கள் ஏகாதிபததியத்துடன் பிணைப்பில்லாத

வர்கள் அல்லது ஒப்பீட்டு ரீதியில் குறைவான பிணைப்புடைய வர்கள்; அவர்களே உண்மையான தேசிய முதலாளிகள்'' (மேற்படி நூல்; பக்: 167)

மாவோ இங்கு வரையறுக்கும் இருபது ஆண்டு பரிணாம வளர்ச்சியை வசதியாக மூடிமறைத்துவிட்டு 1924—27க்கு முந்திய சீனத்தின் நிலைமைகளைத் தொகுத்தளிப்பதன் மூலம் சீன சமுதாய, பொருளாதார, அரசியல் வரலாற்றை முழுமையாக அறியாத அணிகளை அங்கொன்றும் இங்கொன்றுமாக மேற்கோள்களைக் காட்டி ஓடுகாலிகள் உட்பட எல்லா வண்ணத் திரிபுவாதிகளும் ஏய்த்துத் திரிகின்றனர். சீனத்தில் புரட்சியின் துவக்க காலத்தில் தரகு முதலாளிகள் அன்னிய கம்பெனிகளின் ஏஜண்டுகளாகவும், நிர்வாகிகளாகவும் இருந்த பெரும் வணிக வர்த்தகர்களாகத்தான் இருந்தனர். இவர்களைப் பகை அம்சமாகக் கொண்டு 1911 மற்றும் 1924—27 புரட்சிகள் நடந்தன. இப்புரட்சிகளில் பங்கு பற்றிய தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் மேல்தட்டுப் பிரிவினரான பெருமுதலாளிகள் சியாங்-கே-ஷேக் தலைமையில் புரட்சிக்குத் துரோகமிழைத்து நிலப்பிரபுக்கள் மற்றும் ஏகாதிபத்தியத்துடன் சேர்ந்து கொண்டு இவர்களும் தரகு முதலாளிகளாகினர். எஞ்சிய தேசிய முதலாளியவர்க்கமும் புரட்சியின் சுவாலையைக் கண்டஞ்சி பக்களின் எதிரியான தரகு பெருமுதலாளிகளின் பிரதிநிதியாகிய சியாங்-கே-ஷேக் கும்பலின் வாலைப் பிடித்துக் கொண்டு சென்றது. 1924—27 புரட்சிக்குப் பிறகு நான்கிங்கில் ஒரு பாசிச இராணுவ சர்வாதிகாரத்தை நிலப்பிரபுக்களோடு சேர்ந்து நிறுவிய பிறகு, இந்த தரகு பெருமுதலாளிகள் மொத்த நாட்டின் பொருளாதாரத்தை தமது ஏகபோகமாக்கினர். இந்த ஏகபோக மூலதனம் அரசு அதிகாரத்துடன் இணைந்து அரசு ஏகபோக மூலதனமாகியது. இதை கட்டுப்படுத்திய தரகு பெருமுதலாளிகளே தரகு-அதிகார வர்க்க முதலாளிகளாகினர்.

1. ''அந்நிய ஏகாதிபத்தியம், உள்நாட்டு நிலப்பிரபுவர்க்கம் மற்றும் பழையபாணி பணக்கார விவசாயிகளுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ள இந்த ஏகபோக முதலாளித்துவம் தரகு, நிலப்பிரபுத்துவ, அரசு ஏகபோக மூலதனமாக மாறியுள்ளது. இதுதான் சியாங்-கே-ஷேக் பிற்போக்கு ஆட்சியின் பொருளாதார அடித்தளம்.''

2. ''இந்த மூலதனம் சீனத்தில் பிரபலமாக அதிகார வர்க்க மூலதனம் எனப்படுகிறது. அதிகார முதலாளித்துவ வர்க்கம் எனப்படும் இந்த முதலாளித்துவ வர்க்கம் சீனத்தின் பெரு முதலாளித்துவ வர்க்கமாகும்.''

3. ''சீனத்தில் ஏகாதிபத்தியத்துக்கான தனிச்சிறப்பான சலுகைகளை ஒழிப்பதோடு மாத்திரமின்றி உள்நாட்டில் புதிய ஜனநாயகப் புரட்சியின் பணி நிலப் பிரபுத்துவ வர்க்கம் மற்றும் அதிகார முதலாளித்துவ வர்க்க (பெருமுதலாளித்துவ வர்க்க)

ஒடுக்கு முறையையும் சுரண்டலையும் ஒழித்துக்கட்டி தரகு, நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவுகளை மாற்றி உற்பத்தி சக்திகளை விடுவிப்பதும் ஆகும்.''

—என்கிற வரையறைகளை வைக்கிறார் மாவோ. இதன் பொருள் என்ன? அந்நிய ஏகாதிபத்தியம், உள்நாட்டு நிலப்பிரபு வர்க்கம் மற்றும் பழையபாணி பணக்கார விவசாயிகளுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ள ஏகபோக முதலாளித்துவம் தரகு, நிலப்பிரபுத்துவ, அரசு ஏகபோக மூலதனமாகியுள்ளது. அதாவது இந்த வகை ஏகபோக முதலாளித்துவம் தரகு வகைப்பட்டது. நிலப்பிரபுத்துவ வர்க்கம் மற்றும் அதிகார முதலாளித்துவ (பெருமுதலாளித்துவ வர்க்க) ஒடுக்கு முறையையும் சுரண்டலையும் ஒழித்துக் கட்டுவது தரகு, நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவுகளை மாற்றி உற்பத்தி சக்திகளை விடுவிப்பதாகும். அதாவது, அதிகார முதலாளித்துவ வர்க்க (பெரு முதலாளித்துவ வர்க்க) ஒடுக்கு முறையும் சுரண்டலும் தரகு வகைப்பட்ட உற்பத்தி உறவுகளாகும். இறுதியாக அதிகார முதலாளித்துவ வர்க்கம் எனப்படும் இந்த முதலாளித்துவ வர்க்கமே பெரு முதலாளித்துவ வர்க்கமாகும். அரசு ஏகபோக மூலதனத்தை, அதிகார வர்க்க மூலதனத்தை தரகு வகைப்பட்டது அல்லவென்று வாதிடுவதற்குங்கூட இடமில்லாதவாறு தரகு, நிலப்பிரபுத்துவ அரசு ஏகபோக மூலதனத்தைக் கொண்டு நிலப்பிரபுத்துவ வர்க்கம் மற்றும் அதிகார முதலாளித்துவ வர்க்க ஒடுக்கு முறையையும் சுரண்டலையும் நடத்தும் தரகு நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவுகள் அடங்கிய ஒரு தரகுக் கட்டமைவே சீனத்தில் ஏகாதிபத்தியத்தால் உருவாக்கப்பட்டுள்ளது என்கிறார் மாவோ. மேலும் அதிகார முதலாளித்துவ வர்க்கமென்பது தேசிய முதலாளித்துவ வர்க்கத்தில் ஒரு பெரும் பிரிவு தான் என்றோ, அதிகார முதலாளித்துவ வர்க்கமுங்கூட தொழிற்சாலை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள ஒரு வர்க்கமல்ல என்று வாதிடவும் இடமில்லாதவாறு மிகத் தெளிவான எல்லைக் கோடுகளை வரைந்துள்ளார்.

"ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புத் தேவைகளுக்கு சேவை செய்யும்படி சீனத்தில் தரகுக் கட்டமைவையும் அதிகார முதலாளித்துவ வர்க்க மூலதனத்தையும் ஏகாதிபத்தியம் உருவாக்கியுள்ளது. ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு சீனாவின் சமூகப் பொருளாதாரத்தை தூண்டி உந்தித் தள்ளியது; அதில் மாற்றங்களைக் கொண்டு வந்தது; ஏகாதிபத்தியத்திற்கு எதிர்த்துருவமான தேசியத் தொழிலையும் தேசிய முதலாளிகளையும் உருவாக்கியது; மேலும் குறிப்பாக ஏகாதிபத்தியவாதிகளால் நேரடியாக நடத்தும் நிறுவனங்கள், அதிகார முதலாளித்துவ வர்க்க மூலதனம் நடத்தும் நிறுவனங்கள், தேசிய முதலாளிகள் நடத்தும் நிறுவனங்கள் ஆகியவற்றில் பணி புரியும் சீனப்பாட்டாளி வர்க்கத்தையும் உருவாக்கியது'' (மாவோ, மேற்படி நூல் பக். 425—26).

தேசிய முதலாளிகள் நடத்தும் நிறுவனங்களிலிருந்து முற்றிலும் வேறு ஒன்றாக அதிகார முதலாளித்துவ வர்க்க மூலதனம் நடத்தும் நிறுவனங்கள் என்றிருந்ததாக தெளிவாக இங்கே மாவோ குறிப்பிடுகிறார்; தரகு உற்பத்தி உறவுகளாலான தரகுக் கட்டமைவாக அமைந்த இந்த அதிகார முதலாளித்துவ வர்க்க மூலதனத்தையே சீனப் பெருமுதலாளிகள் பிரதிநிதித்துவப் படுத்தினார்கள். அதாவது, சியாங்-கே-ஷேக் ஒரு கட்சி பாசிச சர்வாதிகாரப் பிற்போக்குக் கும்பல் 1924-27க்குப் பிறகு அரசியல் ரீதியில் பிரதிநிதித்துவப் படுத்திய சீனாவின் பொருளாதார ஜீவநாடியையே ஏகபோகமாக்கியிருந்த 'நான்கு பெரு குடும்பங்கள் மையமாகக் கொண்ட அதிகார முதலாளித்துவ வர்க்கமே பெரு முதலாளித்தவ வர்க்கம் எனப்பட்டது. இவ்வர்க்கம் சீனத்தின் வணிக வர்த்தகத்தை மட்டுமல்ல தொழிலையும் (ஆலை உற்பத்தியையும்) ஏகபோகமாக்கிக் கொண்டிருந்தது.

"1935-36 ஆகிய ஆண்டுகள் தேசியத் தொழிலும் வர்த்தகத்திலும் நெருக்கடியானதொரு காலகட்டம். 'நான்கு பெரும் குடும்பங்கள்' நிதிக் கட்டுப்பாட்டைப் பெற்ற பிறகு ஆலைத்தொழிலில் ஆதிக்கம் செலுத்தவும் ஏகபோகமாக்கவும் முனைந்தனர். அரசு நிர்வாகம் என்ற மூடுதிரையின் பின்னே 'நான்கு பெரும் குடும்பங்கள் நிலவும் அதிகார வர்க்க தொழிற்சாலைகளைக் கையகப்படுத்திக் கொண்டதுடன் கூடவே தேசத்தின் தொழிற்சாலைகளை ஏகபோகப்படுத்துவதற்கான அவர்களது பிரதான நிறுவனமாக தேசிய மூலாதாரங்கள் கமிஷனை நிறுவினர். அவர்களுடைய டங்ஸ்டன் உலோகத்தாதுச் சுரங்கங்கள், எஃகு மற்றும் பொறியியல் ஆலைகள் ஏகாதிபத்தியவாதிகளுடன் இணைந்து நடத்தப்பட்டன. தனியார் முதலாளிகள் என்ற மூடுதிரை போட்டு கூடுதலான மூலதனம் முதலீடு செய்வது, மறு ஒழுங்கமைப்பது, கடும்வட்டி கடன்கள் வழங்குவது போன்றவைகள் மூலம் தனியாருக்குச் சொந்தமான தொழிற்சாலைகள் பண்டப் பற்றாக்குறையால் அவதியுறும்போது அவற்றின் கட்டுப்பாட்டையும் உடமையையும் கைப்பற்றிக் கொண்டார்கள். குறிப்பாக இது நெசவாலைத் தொழிலில் தெரிந்தது. 1937ன் முதற்பாதியில் 'நான்கு பெரும் குடும்பங்கள்' கையகப்படுத்திக் கொண்ட அல்லது நிர்வகித்த நெசவாலைகளின் கெண்டைகள் சீனாவின் மொத்த கெண்டைகளின் 13 சதவிகிதமாக அமைந்தது. (ஹோ-கான்-சி, நவசீனப்புரட்சியின் வரலாறு பக்-140)

ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தின் துவக்கத்திலேயே இந்த அளவு ஆலைத் தொழிலில் ஆதிக்கம் வகித்த 'நான்கு பெரும் குடும்பங்க'ளடங்கிய அதிகார வர்க்க முதலாளித்துவம் யுத்த நெருக்கடிகளைப் பயன்படுத்திக் கொண்டு மேலும் ஏகபோகமாகியது என்பதை அதே நூல் பின்வருமாறு நிரூபிக்கிறது.

"தொழில் மற்றும் சுரங்கங்களின் நெறியாண்மைக் கமிஷன் என்பது 'நான்கு பெரும் குடும்பங்களால்' நடத்தப்பட்ட ஒரு தொழில் ஏகபோக நிறுவனம். அதிகாரிகளால் இயக்கப்பட்ட

ஆலைகளுக்கு மானியமளிப்பதும், சாதாரண குடிகளுக்குச் சொந்தமானவற்றைக் கையகப்படுத்திக் கொள்வதும் அதன் முறைபாடாக இருந்தது. தேசிய மூலாதாரங்களின் கமிஷன் மற்றும் வெடிப்பொருட்களின் நிர்வாக அலுவலகம் ஆகியவற்றின் நிர்வாகத்தின் கீழ் பெயரளவிலிருந்த தொழிற்சாலைகள் உண்மையில் 'நான்கு பெரும் குடும்பங்களின்' சொத்துடமையாக மாறிவிட்டிருந்தன. அதுமட்டுமின்றி 'நான்கு பெரும் குடும்பங்கள்' தனியாக நடத்திய தொழிற்சாலைகளும் இருந்தன. 1945-ல், கோமிண்டாங் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளின் மொத்த எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் தேசிய மூலாதாரங்கள் கமிஷனின் கீழிருந்த கனரக ஆலை நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்களினுடைய விகிதங்கள் பின்வருமாறு இருந்தன: நிலக்கரி, 11. 9 சதவீதம்: மின்விசை, 35. 9 சதவீதம்; உருட்டு இரும்பு. 46. 5 சதவீதம்; எஃகு, 56 சதவீதம்; மேலும் பெட்ரோல், மண்ணெண்ணெய், இரும்புத்தாது, ஆண்டிமோனி மற்றும் டின் ஆகியவை அனைத்திலும் நூறுசதவீதம். விசை ஆலைத் திட்டங்களிலும் உற்பத்தியிலும் முதலீட்டில் அதிகார வர்க்க தொழிற்சாலைகள் அதிமிகு ஆதிக்கம் செலுத்தின. மொத்த மூலதனத்தில் ஏறக்குறைய 70 சதவீதம் அதிகாரவர்க்க மூலதனம் அடங்கியிருந்ததாக கணக்கிடப்பட்டது. 'நான்கு பெரும் குடும்பங்களின்' தொழில் ஏகபோகமானது தேசியத் தொழில் மற்றும் வர்த்தகத்தின் குரல்வளையை நெறித்தது.'' (மேற்படி நூல் பக்: 208)

ஆக 1927ல் நான்கிங்கில் ஒரு பாசிச இராணுவ சர்வாதிகாரம் நிறுவப்பட்ட பிறகு தரகு மற்றும் பிரபுத்துவ உற்பத்தி உறவுகளைக் கொண்ட தரகு, பிரபுத்துவ மற்றும் அரசு ஏகபோக மூலதனமாக வளர்ந்த அதிகார வர்க்க முதலாளித்துவமே சீனத்தின் பெருமுதலாளித்துவமாக குறிக்கப்பட்டது. 'நான்கு பெரும் குடும்பங்களும்' அடங்கிய இந்த பெரு முதலாளிகள் சீனாவின் விவசாயம் மற்றும் வர்த்தகம் மட்டுமின்றி நிதி மற்றும் தொழிற்துறையிலும் ஏகபோகமாகினர். 1927க்குப் பிறகு அந்நிய ஏகாதிபத்திய முதலாளிகளுக்கும் சீனப் பெருமுதலாளிகளுக்கும் இடையில் வர்த்தகக்கூட்டு மட்டுமின்றி நிதி மற்றும் தொழிற்துறைக் கூட்டுக்களும் ஏற்பட்டன. இத்தகைய நிதி மற்றும் தொழிற்துறைக் கூட்டுக்களின் விளைவாகத்தான், இதை மேலும் விரிவு படுத்திக்கொள்ளும் ஏகாதிபத்திய எத்தனிப்புகளின் விளைவாகத்தான் சீனாவில் பல்வேறு ஏகாதிபத்தியங்களுக்கிடையிலான போட்டியும் மோதலும் அதிகரித்தன. ஜப்பானிய ஆக்கிரமிப்பிலும், கோமிண்டாங் கட்சி மற்றும் அரசுக்குள் மோதலை உருவாக்கியது. இராணுவ ரீதியாக மட்டுமின்றி, பின்வரும் அரசியல் மற்றும் பொருளாதாரத் தந்திரங்களையும் பயன்படுத்தி சீனாவின் மீது ஆதிக்கம் வகிக்க (ஏகபோக) ஜப்பானிய ஏகாதிபத்தியம் முயல்வதாக மாவோ கூறினார்.

''ஹூனானைக் கைப்பற்றிய பிறகு சீனாவை இராணுவ

பலத்தால் மட்டும் அடிபணியச் செய்ய முடியாது என்பதை உணர்ந்து ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகள் அரசியல் ரீதியிலான எதிர்த்தாக்குதல்களையும், பொருளாதார ரீதியிலான ஏமாற்றுதல்களையும் கையாளுகின்றனர். ஜப்பானிய எதிர்ப்பு முகாமில் உள்ள ஊசலாட்டப் பேர்வழிகளுக்கு ஆசைகாட்டி ஐக்கிய முன்னணியை உடைத்து கோமின்டாங்—கம்யூனிஸ்டு கூட்டுறவை சீர்குலைப்பதே அரசியல் ரீதியில் அவர்கள் நடத்தும் எதிர்த்தாக்குதலாகும். பொருளாதார ரீதியில், கூட்டுத் தொழிற்சாலை முதலீடுகள் என்று சொல்லி ஏமாற்றுகின்றனர். மத்திய சீனாவிலும், தென் சீனாவிலும் இத்தகைய தொழிற்சாலை முதலீட்டு நிறுவனங்களிலே சீன முதலாளிகள் 51 சதவிகிதம் முதலீடு செய்வதை ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்கள் அனுமதித்து தங்கள் பங்காக 49 சதவிகிதம் முதலீடு செய்கின்றனர். வடசீனப் பகுதிகளில் சீன முதலாளிகள் 49 சதவிகிதம் முதலீடு செய்வதை அனுமதித்து தங்கள் பங்காக ஜப்பானிய முதலாளிகள் 51 சதவிகிதம் முதலீடு போடுகிறார்கள். சீன முதலாளிகளிடமிருந்து பறிக்கப்பட்ட மூலதனத்தைத் திருப்பிக் கொடுத்து, அதை மூலதனத்தின் பங்காக அவர்களே வைத்துக் கொள்வதற்கு ஜப்பானிய படை எடுப்பாளர்கள் அனுமதிக்கிறார்கள். மனச்சாட்சியை அடகு வைத்த சில முதலாளிகள் இத்தகைய தந்திரத்தால் நப்பாசை கொண்டு தனிப்பட்ட இலாபத்திற்கு முன் நியாயத்தை மறந்து எதிரியிடம் சரணடைந்து விடுகிறார்கள். வாங்-சிங்-வீ யினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் ஒரு பிரிவினர் ஏற்கனவே சரணடைந்து விட்டனர். ஜப்பானிய எதிர்ப்பு முகாமில் ஒளிந்து கொண்டிருக்கும் வேறொரு பிரிவினர் சரணடைய விருப்போடு உள்ளனர்'' (மாவோ தெரிந்தெடுத்த படைப்புகள், பக்; 75).

ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகளின் இத்தகைய பல்வகைத் தந்திரங்களின் விளைவாக சீனப் பெருமுதலாளி வர்க்கத்தில் ஏற்பட்ட மாற்றம் பற்றிப் பின்வருமாறு மாவோ கூறுகிறார். ''ஜப்பானிய ஏகாதிபத்திய எதிர்ப்பு யுத்தத்தில் ஜப்பானிய ஆதரவு பெரும் முதலாளிகள் வர்க்கம் (சரணாகதி வாதிகள்) ஒன்று சரணடைந்தவராய் உள்ளனர் அல்லது சரணடைய தயார் செய்து கொண்டிருப்பவராய் உள்ளனர். ஐரோப்பிய ஆதரவு பெரும் முதலாளி வர்க்கமும் அமெரிக்க ஆதரவு பெரும் முதலாளி வர்க்கமும் (பிடிவாதவாதிகள்) இப்போதும் ஜப்பானிய எதிர்ப்பு முகாமில் இருக்கின்றபோதிலும் மென்மேலும் தடுமாற்றமுடையவராய் இருக்கின்றனர்.'' (மேற்படி நூல் மாவோ, பக் 39)

இவற்றிலிருந்து நாம் அறிவது பெரு முதலாளிகள் வர்க்கம் பல்வேறு ஏகாதிபத்தியங்களின் ஆதரவுப் பிரிவுகளாக உள்ளது; பொருளாதார ரீதியில் கூட்டுத் தொழிற்சாலை முதலீடுகளை நிறுவுவது என்ற ஜப்பானிய தந்திரங்களால் சீன பெரு முதலாளிகளில் ஒரு பிரிவினர் ஜப்பானிடம் சரணடைந்து விட்டனர். வேறொரு பிரிவினர் சரணடைய விருப்போடு உள்ளனர் என்ப

தாகும். இங்கே மாவோ குறிப்பிடுவது தரகு முதலாளிகள்
அல்லாத பெருமுதலாளிகளைத்தான் என்று நிரூபிப்பதற்காக
ஓடுகாலிகள் உட்பட எல்லா வண்ணத் திரிபுவாதிகளும் மயிர்
பிளக்கும் வாதமொன்று தொடுக்கின்றனர்; அதாவது பெரு
முதலாளிகள் வர்க்கம் பல்வேறு ஏகாதிபத்தியவாதிகளை
ஆதரிக்கும் பிரிவுகளாக உள்ளது என்பதை மறுத்து தரகு
முதலாளிகள் மற்றும் தரகு முதலாளிகள் அல்லாத பெரு
முதலாளிகள் என்று இருவகைப் படுத்துகிறார்கள். ஏனெனில்
தரகு முதலாளிகளைப் பொறுத்தவரை ஏகாதிபத்தியத்திடம்
சரணடைவது அல்லது சரணடைய விருப்போடு இருப்பது
அல்லது அவர்களைச் சரணடையச் செய்வதற்கு, ஏகாதிபத்தி
யங்கள் பல்வேறு தந்திரங்களைக் கையாள்வது என்ற பிரச்
சினைக்கே இடமில்லை; அவர்கள் ஓர் அந்நிய நாட்டிற்கு
அடிமைகளாவதா இல்லையா என்ற கேள்விக்கே இடமில்லை
என்கின்றனர். இந்த மயிர்பிளக்கும் வாதத்திற்கு முட்டுக்
கொடுக்க பின்வரும் மாவோவின் மேற்கோளைக் கேடாகப்
பயன்படுத்துகிறார்கள்.

"பெரும் உள்ளூர் கொடுங்கோலர்களும், தீய பிரபுக்களும்
பெரும் யுத்தபிரபுகளும், அதிகாரவர்க்கத்தினரும், தரகுமுதலாளி
களும் நீண்ட காலத்துக்கு முன்பே முடிவு செய்து விட்டனர்
புரட்சி(எந்த வகைப்புரட்சி என்றாலும்)ஏகாதிபத்தியத்தைவிடக்
கேடானது என்பதையே அவர்கள் நீண்ட காலமாகக் கூறி
வந்தது போல் தொடர்ந்து கூறுகின்றனர். அவர்கள் நாட்டைக்
காட்டிக் கொடுப்பவர்களின் முகாம் ஒன்றை உருவாக்கியுள்ளனர்.
அவர்களைப் பொறுத்தவரை ஒரு அன்னிய நாட்டிற்கு அடிமை
களாவதா இல்லையா என்ற கேள்விக்கே இடமில்லை. ஏனென்
றால், அவர்கள் ஏற்கனவே தேசியஉணர்வு முழுவதையும் இழந்து
விட்டனர். அவர்களது நலன்கள் ஏகாதிபத்தியத்துடன் பிரிக்க
முடியாதபடி இணைந்திருக்கின்றன. அவர்களது தலைவன் சியாங்
-கே-ஷேக், இவர்கள் நாட்டைக் காட்டிக் கொடுப்பவர்களின்
கூட்டம் ; இந்நாட்டின் ஜென்ம விரோதி. நாட்டைக் காட்டிக்
கொடுக்கும் இந்தக் கும்பல் இருந்திராவிடில் ஜப்பானிய ஏகாதி
பத்தியம் தன் ஆக்கிரமிப்பில் இவ்வளவு மூர்க்கத்தனமாய் இருக்க
முடியாது; இவர்கள் ஏகாதிபத்தியத்தின் ஏவல் நாய்கள்."
(மாவோ, மேற்படி நூல், பக். 152)

'நீண்ட காலத்துக்கு முன்பே' 'ஒரு அன்னிய நாட்டிற்கு
அடிமைகளாவதா இல்லையா என்ற கேள்விக்கு இடமில்லாது'
'தேசிய உணர்வு முழுவதையும் இழந்து விட்ட' ஏகாதிபத்தியத்
துடன் பிரிக்க முடியாதபடி இணைந்துள்ள சியாங்-கே-ஷேக்கை
தலைவனாகக்கொண்டுள்ள பெருமுதலாளித்துவ பிரிவு மட்டுமே
தரகு முதலாளிகள்; ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகள் பல்வேறு
தந்திரங்களை மேற்கொள்வதால் சரணடைந்து விட்ட அல்லது
சரணடைய விருப்போடு தயார் செய்து கொண்டிருக்கும் இன்
னொரு பிரிவும் அடங்கிய வாங்-சிங்-வீ யினால் பிரதிநிதித்துவப்
படுத்தும், ஜப்பானிய எதிர்ப்பு முகாமில் ஒளிந்துள்ள ஜப்பானிய

ஆதரவு பெருமுதலாளி வர்க்கம் (சரணாகதிவாதிகள்) மென் மேலும் தடுமாற்றமுடையவராய் ஜப்பானிய எதிர்ப்பு முகாமி லுள்ள ஜரோப்பிய ஆதரவு பெரும் முதலாளி வர்க்கமும் மற்றும் அமெரிக்க ஆதரவு பெரும் முதலாளி வர்க்கமும் (பிடிவாதவாதிகள்) அடங்கிய பெருமுதலாளி வர்க்கம்; மாவோ குறிப்பிடும் இந்த இரு முகாமிலுள்ள பெரு முதலாளிகள் தரகு முதலாளிகள் அல்லாதவர்கள் ; இவ்வாறு சியாங்-கே-ஷேக் தலைமையிலுள்ள பிரிவை மட்டும் தரகு முதலாளிகள் என்றும் வாங்-சிங்-வீ யினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் ஒரு பிரிவின ரும் பிற ஏகாதிபத்தியங்களின் ஆதரவு (தொழிற்துறை) பிரிவின ரும் அடங்கிய தரகு முதலாளிகள் அல்லாத பெரு முதலாளிகள் என்றும் இரு வர்க்கப் பிரிவுகளை பெரு முதலாளி வர்க்கத்தின ரிடையே கண்டுபிடிக்க முதலாளித்துவ சமூகவியலாளர்களிடம் மூளையை அடகு வைத்துவிட்டு மண்டையைக் களிமண்ணால் நிரப்பிக் கொண்டுள்ள ஓடுகாலிகள் உட்பட எல்லாவண்ணத்திரிபு வாதிகளும் எத்தணிக்கின்றனர். ஒன்று அவர்கள் நயவஞ்சகவேட தாரிகள் அல்லது சர்வ முட்டாள்களாக இருக்கவேண்டும். இந்தக் கோட்பாட்டை வைப்பவர்கள் முன்னவர்கள் ; அதை நம்பிப் பரப்புபவர்கள் பின்னவர்கள் ;

மேற்கண்ட மேற்கோள்களில் மாவோ குறிப்பிடுவது எல்லாம் தரகு பெரு முதலாளி வர்க்கத்தைத்தான்; மற்றபடி அவர் வேறு படுத்திக் காட்டுவது இவ்வர்க்கத்தினுள்ளே உள்ள பல்வேறு ஏகாதிபத்திய ஆதரவுப்பிரிவுகள் மற்றும் அவற்றின் போக்கு களைப்பற்றித்தான். 'நான்கு பெரும் குடும்பங்கள்' டங்கிய ஆங்கி லேய ஏகாதிபத்திய ஆதரவு மறறும் அமெரிக்க ஏகாதிபத்திய ஆதரவு கும்பலைப் பிரதிநிதித்துவப் படுத்திய சியாங்-கே-ஷேக் தலைமையிலான ஒரு பிரிவு மற்றும் ஜப்பானிய ஏகாதிபத்திய ஆதரவு கும்பலைப் பிரதிநிதித்துவப்படுத்திய வாங்-சிங்-வி தலைமையிலான மற்றொரு பிரிவு ஆகிய இரண்டையுமே 1935 வரை கொமிண்டாங் கட்சி மற்றும் நான்கிங் பாசிச இராணுவ சர்வதிகார அரசு அரசியல் ரீதியில் உள்ளடக்கியிருந்தது. 1935ல் ஏகாதிபத்தியங்களுக்கிடையிலான முரண்பாடு கூர்மையானதால் வாங்-சிங்-வி யினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட பிரிவு வெளிப்படையாகவே ஜப்பானிய ஏகாதிபத்தியத்திடம் சரண டைந்தது ; மற்றொரு பிரிவு இன்னும் கம்யூனிச எதிர்ப்பில் அழுந்தி நின்றதால் தடுமாற்றமுடையதாக இருந்தது என்றார் மாவோ. எனவே தான் இவ்விரு பிரிவினரையும் முறையே சரணா கதிவாதிகள் என்றும் பிடிவாதவாதிகள் என்றும் கூறுகிறார்.

*"சீனத்தில் ஏகாதிபத்திய ஏகபோக மூலதனத்தினுடைய வளர்ச்சி ஏற்றத்தாழ்வானது.*

*"இந்த காலகட்டத்தில் பெருஞ்சுவருக்கும் தெற்கே தனது ஆக்கிரமிப்பை ஜப்பானிய ஏகாதிபத்தியம் தொடர்ந்தது; பருத்தித் தொழில், மின்விசை, வங்கித் தொழில், சுரங்கங்கள்*

வடசீனாவின் இரயில்வேக்கள் மற்றும் துறைமுகங்கள் ஆகிா வற்றை ஏகபோகமாக்குவது, மற்றும் சீனாவிற்குள் தனது பண்டப் பொருட்களைக் கடத்துவதும் உள்ளிட்டு குவிப்பது ஆகியவற்றால் இதைச் செய்தது. சீன ஆலைகளை எண்ணிக் கையி மொய்த்துக்கொண்டு அவற்றின் லாபத்தைக் கொள்ளை யீடும் வகையில் ஷங்காயில் ஜப்பானிய பஞ்சாலைகள் மேலும் விஸ்தரிக்கப்பட்டன.

''சீனத்தை வென்று கைக்கொள்ளும் ஜப்பானிய ஏகாதி பத்திய வாதிகளின் கொள்கை வடக்கு மற்றும் மத்திய சீனத்தின் பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் நலன்களை பாரதூரமாக குலையச் செய்துவிட்டது; நான்கு பெரும் குடும்பங்களின் பொருளாதார அடித்தளத்தை தாக்கித் தகர்த்தது.

''இவ்வாறு ஒருபுறம் ஆங்கிலேயே மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் அவர்களது அடிவருடிகள் (Lackeys) நான்கு பெரும் குடும்பங்கள் ஆகியவற்றுக்கும் மற்றொரு புறம், ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகளுக்கும் இடை யிலான முரண்பாடும் பிளவும் ஒவ்வொரு நாளும் அகலமானது; ஆழப்பட்டது.''

''ஏகாதிபத்தியவாதிகளுக்கிடையிலான போராட்டம் கோமிண்டாங் கட்சிக்குள் பிளவுகளைத் தோற்றுவித்தது ஜப் பானிய ஏகாதிபத்தியம் பற்றிய அதன் கொள்கையில் நான்கிங் அரசாங்கம் ஊசலாடச் செய்தது. கோமிண்டாங் தலைவர்கள் மத்தியிலியிலிருந்த ஆங்கிலேயே ஆதரவு மற்றும் அமெரிக்க ஆதரவு கும்பலுக்கும் ஜப்பானிய ஆதரவு கும்பலுக்கும் இடையே பிளவு இடையறாது வளர்ந்தது. மக்கள் மத்தியில் பொங்கியெழுந்த ஜப்பானிய எதிர்ப்பு உணர்வு மற்றும் அமெரிக்க ஆங்கிலேய அரசாங்கங்களின் செல்வாக்கு ஆகிய வற்றின் தாக்குதலின் கீழ் நான்கிங் அரசாங்கத்திலிருந்த முதலில் சொன்ன கும்பல்களின் ஜப்பானைப்பற்றிய கொள்கை யில் மாறுதல் ஏற்படத் துவங்கியது.

''1935 இறுதியில், ஜப்பானிய ஆதரவு கும்பலின் தலைவ னாகிய வாங்-சிங்-வி மற்றும் அக்கும்பலில் ஒரு உறுப்பின ரான டாங்-யூ-ஜென் ஆகியோரைக் கொலை செய்ய முயற்சிக் கப்பட்டது. பிறகு கோமிண்டாங் அரசாங்கம் மறு ஒழுங் கமைக்கப்பட்டது; அதன் விளைவாக ஜப்பானிய ஆதரவு கும்ப லினிடத்தில் சியாங்கின் ஆங்கிலேய அமெரிக்க ஆதரவுக் கும்பல் வைக்கப்பட்டது; வாங்-குக்கும் சியாங்-குக்கும் இடை யில் பிளவு ஏற்பட்டது, 1936 செப்டம்பரிலிருந்து டிசம்பர்வரை சீனாவிற்கான ஜப்பானிய தூதர் காவாகோயிக்கும் சியாங் அரசாங்க வெளிவிவகார அமைச்சரான காங் சுங்-க்கும் இடையில் பல்முறை பேச்சு வார்த்தைகள் நடந்தன. ஆனால்

சியாங் வேண்டுமென்றே பேச்சு வார்த்தைகளை இழுத்தடித்து அவற்றை பயனற்றுப் போகும்படி செய்தார்'' (ஹோ-கான்-சி, நவசீனப் புரட்சியின் வரலாறு. பக். 142-143)

வாங்-சிங்-வி யினால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்ட பெருமுதலாளி வர்க்கப் பிரிவாகிய ஜப்பானிய ஆதரவுக் கும்பலும் சியாங் கே-ஷேக் பிரதிநிதித்துவப் படுத்திய நான்கு பெரும் குடும்பங்களடங்கிய பெருமுதலாளித்துவ பிரிவு வர்க்கமாகிய ஆங்கிலேய அமெரிக்க ஆதரவு கும்பலும் தரகு அதிகார வர்க்க முதலாளிகள் அல்லாத பெருமுதலாளிகள் என்று ஓடுகாலிகள் உட்பட எல்லா வண்ணத் திரிபுவாதிகளும் நன் மதிப்புச் சான்றிதழ் வழங்குகின்றனர். கையூட்டுப் பெற்றவர்கள் கண்ணை மூடிக்கொண்டு பொய்ச் சான்றிதழ்களில் கையொப்பமிடுவதுபோல் இவர்கள் மேலும்எழுதுகிறார்கள் பாருங்கள்: சீனத்தில்தரகு முதலாளிகள் அல்லாத பெரு முதலாளிகள் ஏகாதிபத்திய முகாமில் சேர்ந்துவிட்ட, சரணாகதி அடைந்துவிட்ட அல்லது சரணடையத்தயார் செய்து கொண்டிருந்த பிற்போக்கு கும்பல்களாக, சரணாகதி வாதிகளாக, பிடிவாதவாதிகளாக, எதிர்ப்புரட்சி துரோகக் கும்பலாக, தேசிய முதலாளிகளின் வலது பிரிவாக இருந்துள்ளனராம்; இருப்பினும் இவர்கள் ஏகாதிபத்தியத்தின் ஏவல் நாயாகவோ, தொங்குசதையாகவோ அமைவதில்லை என்பதால் தரகு முதலாளிகள் அல்லாத பெருமுதலாளிகளாம்; இவர்கள் ஏகாதிபத்தியத்துடன் கூட்டுச் சேர்ந்து தொழில் நடத்தினும், தொழில் நுட்பம், மூலதனம் ஆகியவற்றுக்கு ஏகாதிபத்தியத்தை சார்ந்திருப்பினும் தொழிலுற்பத்தியில் ஈடுபட்டுள்ளதால் இவ்வர்க்கம் பிரதிநிதித்துவப்படுத்துவது முதலாளித்துவ உற்பத்தி உறவுகளே அன்றி மிகப் பின் தங்கிய, மிகப் பிற்போக்கான உற்பத்தி உறவுகளை அல்லவாம். தரகு முதலாளி மற்றும் தேசிய முதலாளிகளைப் பிரித்தறிவதற்கான அடிப்படை அவ்வர்க்கம் ஏகாதிபத்திய மையங்களுடன் வாணிபத்தில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு வணிக வர்க்கமா அல்லது நவீனத் தொழில் துறையில் ஈடுபட்டுள்ள உள்நாட்டுத் தொழில் முதலாளி வர்க்கமா? அதாவது அவ்வர்க்கம் மிகப் பின் தங்கிய மிகப் பிற்போக்கான உற்பத்தி உறவுகளைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறதா அல்லது முதலாளித்துவ உற்பத்தி உறவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறதா என்பதேயாகும் என்று இந்த பிரதிநிதிகள் வாதிடுகிறார்கள். இந்த முடிவுகளுக்கு இவர்கள் தரும் ஆதாரங்களைப் பரிசீலிப்போம்.

1. 'சீனத்தின் நிலப்பிரபுவர்க்கமும் தரகு வர்க்கமும் ஏகாதிபத்தியத்தின் முழுமையான தொங்கு சதை; சீனாவின் மிகப் பின் தங்கிய மிகப் பிற்போக்கான உற்பத்தி உறவுகளை இவ்வர்க்கங்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. அதன் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியைத் தடை செய்கின்றன' என்று மாவோ குறிப்பிடுகிறார்.

2. சீன தேசிய முதலாளிகளில் பிரதான பகுதியாய் அமைந்திருந்த நடுத்தர முதலாளிகளைப்பற்றி "இவ்வர்க்கம் நாட்டுப் புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் முதலாளித்துவ . ற்பத்தி உறவுகளை பிரதிநித்துவப்படுத்துகிறது' என்றும் மாவோ குறிப்பிடுகிறார்.

3. "தரகு முதலாளிகளாய் இருந்து வந்தவர்கள் தமது சொந்த ஆலைகளை ஏற்படுத்திக் கொண்டவுடன் ஏகாதிபத்தியத்துடன் முரண்பாடு கொண்டவர்களாகவும் தேசப்பற்று மிக்க சிந்தனை உள்ளவர்களாக ஆகிறார்கள். எனவே அவர்கள் தேசிய முதலாளிகள் என்றும் தேசியப்பற்று உள்ளவர்களென்றும் நாம் கூறுகிறோம்'' என்று சூயென்லாய் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மூன்று மேற்கோள்களையும் மாலைக் கண் நோயாளிகளாக இருந்து ஓடுகாலிகள் உட்பட எல்லா வண்ணத் திரிபுவாதிகளும் பார்க்கின்றனர். கூடவே தெரிந்தே மோசடியும் செய்கின்றனர். சூயென்லாய் கூறியதாக இவர்கள் காட்டும் மேற்கோளின் முழுமை என்ன? வர்த்தக வணிகத் தரகு முதலாளிகளாய் இருந்து தமது சொந்த ஆலைகளை ஏற்படுத்திக் கொண்டவர்களில் இரு பிரிவு ஏற்பட்டதாகவும், அதில் ஒரு பிரிவு மட்டுமே ஏகாதிபத்தியத்துடன் முரண்பாடு கொண்டவர்களாகவும், தேசப்பற்று மிக்க சிந்தனை உள்ளவர்களாகவும் அதனால் தேசிய முதலாளிகள் தேசப்பற்றுள்ளவர்கள் என்றும் கருதப்பட்டதாக சூயென்லாய் குறிப்பிடுகிறார். ஆனால் தமது சொந்த ஆலைகளை நிறுவிக் கொண்ட தேசப்பற்று இல்லாத இன்னொரு பிரிவு இருந்ததாக இந்த மேற்கோளில் குறிப்பிடும் பகுதியை ஓடுகாலிகள் கபடத்தனமாக மூடி மறைக்கின்றனர். சியாங் தலைமையிலான நான்கு பெரும் குடும்பங்களடங்கிய ஆங்கிலேய அமெரிக்க ஆதரவு கும்பலும் வ ங்க் தலைமையிலான ஜப்பானிய ஏகாதிபத்திய ஆதரவு கும்பலும் சேர்ந்து உருவாகியிருந்த தரகு—அதிகாரவர்க்க பெரு முதலாளித்து வர்க்கத்தையே சூயென்லாய் தொழிற்சாலை உற்பத்தியில் இறங்கிய தரகு முதலாளிகளாய் குறிப்பிடுகிறார். மேலும் ஓடுகாலிகளின் மேற்கோளில் கூட தமது சொந்த ஆலைகளை ஏற்படுத்திக் கொண்டு ஏகாதிபத்தியத்துடன் முரண்பாடு கொண்ட தேசப்பற்று மிக்க சிந்தனை உடையவர்களையே தேசிய முதலாளிகள் என்று குறிப்பிடுகிறார். மாறாக கூட்டு ஆலைகளை ஏற்படுத்திக் கொண்டு ஏகாதிபத்தியத்துடனி அடிப்படையில் முரண்படாத தேசப்பற்று இல்லாத முதலாளிகளை தேசிய முதலாளிகளாகக் குறிப்பிடவில்லை. இந்தப் பண்புகளை உடைய தரகு முதலாளிகள் அல்லாத பெரு முதலாளிகள் இருந்ததாகவும் அவர்கள் தேசிய முதலாளிகளின் வலது சாரிப் பிரிவு என்றும் ஓடுகாலிகள் கட்டுக்கதை விடுகிறார்கள். மாறாக சூயென்லாய் இந்திய மார்க்சிய—லெனினிய இயக்கத்தைப்பற்றிக் கூறும்போது அரைக்காலனிய, தரகு அதிகார முதலாளித்துவ தன்மைகளை சரியாகக் கணித்துள்ள தமது இயக்கத்தின் அடிப்படையும், பொதுத்திசையும் மிகச

சரியேயென்று கூறியுள்ளார். இவர்கள் குறிப்பிடும் அந்தக் கால கட்டத்தில் புரட்சிகரத்தலைமையைக் கொண்டிருந்தபோது சீனப் பொதுவுடமைக் கட்சியும் இதைப் பல இடங்களில் பல நேரங்களில் உறுதிப்படுத்தி வந்துள்ளது.

மேலே சூயென்லாயினுடைய மேற்கோள் பெரு முதலாளி களில் ஒரு பிரிவைத்தான் குறிக்கிறது. (மேற்கோளில் மூடிமறைக் கபட்ட எஞ்சிய பகுதி இதை உறுதிப்படுத்துகிறது.) அதே போன்று சீன தேசிய முதலாளிகளில் நடுத்தர முதலாளிகளைப் பற்றி 'இவ்வர்க்கம் நாட்டுபுறங்களிலும் நகர் புறங்களிலும் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்து கிறது' என்று மாவோவின் மேற்கோள்களைக் கையாளும் ஒடுகாலிகள் சீன தேசிய முதலாளிகளில் இன்னொரு பிரிவு பெரு முதலாளித்துவ பிரிவு - நாட்டுபுறங்களிலும் நகர்ப்புறங்களிலும் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்த வில்லை என்பது பற்றி கண்டு கொள்ளாமல் நழுவுகின்றனர். இவர்களது தர்க்கப்படி நவீனத் தொழிலில் ஈடுபட்டு முதலாளித் துவ உற்பத்தி உறவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறதா, வணிக வர்த்தகத்தில் ஈடுபட்டு மிகவும் பின்தங்கிய மிகவும் பிற் போக்கான உற்பத்தி உறவுகளைப் பிரதநிதித்துவப்படுத்துகிறதா என்பதே தேசிய முதலாளிகளையும் தரகு முதலாளிகளையும் பிரித்தரியும் அடிப்படை. இந்த தர்க்க அடிப்படையை தேசிய முதலாளிகளின் நடுத்தர பிரிவுக்கு மட்டுமே பிரயோகிக்கும் ஒடு காலிகள் அதன் பெரு முதலாளித்துவப் பிரிவுக்குப் பிரயோகித் தால் அவர்கள் தரகு முதலாளிகளா வேண்டும். இங்கே ஓடுகாலி களது தர்க்கம் தகர்ந்து போகிறது.

தரகு முதலாளிகளையும் தேசிய முதலாளிகளையும் பிரித்தறி வதற்கு ஒடுகாலிகள் உட்பட எல்லா வண்ணத்திரிபுவாதிகளும் குத் துள்ள தர்க்க அடிப்படையே எல்லாவற்றுக்கும் மேலாக பிழை யானது; முட்டாள்தனமானது. தர்க்கத்துக்குத் தர்க்கம் என்கிற முறையில் தொடங்கி குதர்க்கமாக முடிகிறது. நிலப்பிரபுக்கள் மற்றும் தரகு முதலாளிகள் மிகப்பின் தங்கிய, மிகப்பிற்போக்கான உற்பத்தி உறவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக மாவோ குறிப்பிட்டார் மிப்பின் தங்கிய மிகப் பிற்போக்கான உற்பத்தி உறவுகள் என்கிற போது அது வணிகவர்த்தக அடிப்படையிலான உறவுகளைத்தான் குறிக்கும் என்கிற முடிவுக்கு ஓடுகாலிகள் வருகிறார்கள். தேசிய முதலாளிகளில் நடுத்தரப் பிரிவினர் முத லாளித்துவ உற்பத்தி உறவுகளைப் பிரதிநிதித்துவப் படுத்து கிறார்கள் என்று மாவோ குறிப்பிடுகிறா ; முதலாளித்துவ உற் பத்தி உறவுகள் என்கிறபோது தொழிலுற்பத்தி அடிப்படையி லான உறவுகளைத்தான் குறிக்கும் என்கிற முடிவுக்கு ஓடுகாலி கள் வருகிறார்கள்; இத்தர்க்க முடிவுகளிலிருந்து அவர்கள் இன் னும் ஒரு படி முன்சென்று ஏகாதிபத்திய மையங்களுடன் வாணி பத்தில் ஈடுபட்டுள்ளது உள்நாட்டு வணிகவர்க்கமானால் அது மிகப் பின்தங்கிய மிக பிற்போக்கான உற்பத்தி உறவுகளைப்

பிரதிநிதித்துவப்படுத்தும் தரகு முதலாளித்துவவர்க்கம்; ஏகாதிபத்தியத்தை மூலதனம், தொழில் நுட்பத்திற்காகச் சார்ந்து அன்று ஏகாதிபத்தியத்துடன் கூட்டுச் சேர்ந்து தொழில் நடத்தினும்: நவீனத் தொழில்துறையில் ஈடுபட்டுள்ள உள்நாட்டுத் தொழில் முதலாளிவர்க்கமானால் அது முதலாளித்துவ உற்பத்தி உறவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய முதலாளிவர்க்கம் என்கிற முடிவுக்கு ஓடுகாலிகள் வருகிறார்கள். அதாவது பின்னது ஒப்பீட்டு ரீதியிலாவது முன்னேறிய, முறபோக்கான உற்பத்தி உறவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக மறைமுகமாக கூறுகிறார்கள்; நேரடியாகக் கூறத் துணிவில்லாத கோழைகள்!

முதலாளித்துவ நாடுகளைப் பொருத்தவரை வணிகவர்த்தகத்தில் ஈடுபடுவது நவீனத் தொழிற்துறையில் ஈடுபடுவதைவிட மிகப் பின்தங்கியது, மிகப் பிற்போக்கானது என்கிற வரையறுப்பு முதலாளித்துவ உற்பத்தி முறையின் தோற்ற காலத்திற்கு மட்டுமே பொருந்தும்; முதலாளித்துவ உற்பத்திமுறை நிலை நாட்டப்பட்டபின் நவீனத்தொழில்துறை உற்பத்தி சரக்குகளை விநியோகிப்பதற்காக வணிக,வர்த்தக,வியாபாரத்தில்ஈடுபடுவதுமாறி விடுவதால் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளில் ஒரு பிரிக்க முடியாத அங்கமாகி விடுகிறது. இந்நாடுகளில் சில ஏகாதிபத்தியமாக வளர்ந்து விட்டபிறகு, உற்பத்தி சரக்குகளில் உள்நாட்டில் வணிக, வர்த்தக, வியாபாரத்தில் ஈடுபடுவது ஏகபோகத்தின் பிரிக்க முடியாத அங்கமாகிறது; காலனி, அரைக்காலனி மற்றும் பிற சார்பு நாடுகளுடன் வணிக, வர்த்தக, மற்றும் வியாபாரத்தில் ஈடுபடுவதும்கூட ஏகாதிபத்திய முதலாளிவர்க்கத்தின் பிரிக்க முடியாத ஒரு அங்கமாகி விடுகிறது. ஆனால் ஏகாதிபத்தியமாக வளர்ந்து விட்டபிறகு, காலனி, அரைக்காலனி மற்றும் பிற சார்பு நாடுகளுடன் வணிக, வர்த்தக வியாபாரத்தில் ஈடுபடுவது இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டு நிதிமூலதன ஏற்றுமதி பிரதானமாகியது; இதன் விளைவாக இந்நாடுகளின் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்து மிகப்பின்தங்கிய மிகப் பிற்போக்கான உற்பத்தி உறவுகளை ஏற்படுத்துவது ஏகாதிபத்தியத்தின் ஏகபோகம், நிதிமூலதன நிதிக் கொடுங்கோன்மை, நிதிமூலதன ஏற்றுமதி, நாடுகளைக் கைப்பற்றுவது, அதற்காக யுத்தத்தில் ஈடுபடுவது ஆகியவையே. காலனி அரைக்காலனி மற்றும் பிற சார்பு நாடுகளில் நவீன தொழிற்துறையில் ஈடுபடும் உள்நாட்டு முதலாளிகளே ஏகாதிபத்தியத்தின் இத்தகு மிகப்பின்தங்கிய மிகப்பிற்போக்கான உற்பத்தி உறவுகளை ஏற்படுத்தும் விளைவுகளுக்கு ஊழியஞ் செய்கிறார்கள்.

காலனி, அரைக்காலனி மற்றும் பிற சார்பு நாடுகளைப் பொருத்தவரை, ஏகாதிபத்திய மையங்களுடன் வாணிப, வர்த்தக வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு வணிக வர்க்க, மாகட்டும், ஏகாதிபத்தியக் கம்பெனிகளுக்கு ஏஜெண்டுகள் மற்றும் நிர்வாகிகளாக பணிபுரியும் அதிகார வர்க்கத்தினராகட்டும் நவீனத் தொழிற்துறையில் ஈடுபட்டுள்ள ஏகாதிபத்திய முத

லாளித்துவ உற்பத்தி உறவுகளின் பிரிக்க முடியாத அங்கமாகவே இருக்கின்றனர். நவீனத் தொழில்துறையில் ஈடுபட்டுள்ள உள் நாட்டுத் தொழில் முதலாளி வர்க்கமானாலும் ஏகாதிபத்திய நிதி மூலதனத்துடன் கூட்டுச் சேர்ந்து ஏகாதிபத்திய முதலாளித்துவத்தின் மறு உற்பத்தி முறையின் விரிவாக்கத்திற்கு ஊழியஞ் செய்வதால், தமது சொந்த நாட்டின் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்து மிகப்பின் தங்கிய, மிகப் பிற்போக்கான உற்பத்தி உறவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. எனவேதான் இந்த உற்பத்தி உறவுகளைத் தரகுத் தன்மை உடையது என்றும் இது ஏற்படுத்தும் கட்டமைவு தரகு கட்டமைவு என்றும் இந்த மூலதனத்தை தரகு மூலதனம் என்றும் மா வோ குறிப்பிட்டார். ஆகவே ஏகாதிபத்திய பையங்களுடன் வாணிபத்தில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு வணிக வர்க்கமாகட்டும், ஏகாதிபத்திய நிதி மூலதனத்துடன் கூட்டுச் சேர்ந்துள்ள நவீனத் தொழில் துறையில் ஈடுபட்டுள்ள உள் நாட்டுத் தொழில் முதலாளி வர்க்கமாகட்டும் இரு பிரிவுமே ஏகாதிபத்தியத்தின் விரிவாக்கப்பட்ட மறு உற்பத்திக்கான உறவுகளையே மிகப் பின் தங்கிய பிற்போக்கான உற்பத்தி உறவுகளையே பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இன்னும் சொன்னால் ஏகாதிபத்தியத்தின் ஏகபோகம், நிதி மூலதனம், நிதிக் கொடுங்கோண்மை, நாடு பிடித்தல், யுத்தம் ஆகியவற்றுக்கு ஊழியஞ் செய்வதால் பின்னதுதான் காலனி, அரைக்காலனி மற்றும் பிற சார்பு நாடுகளில் மிகமிகப் பிற்போக்கானது; மிக மிகப் பின் தங்கியது.

ஏகாதிபத்தியங்களுக்குச் சிந்தாந்த ரீதியில் ஊழியஞ் செய்யும் முதலாளித்துவ சமூகவியலாளர்களின் குரலாக ஒலிக்கும் ஓடுகாலிகளின் வாதங்கள் ஏகாதிபத்திய நிதி மூலதனக் கொள்ளை ஏகாதிபத்திய வாணிபக் கொள்ளையைப் போன்று மிகப் பின் தங்கியதோ, மிகப் பிற்போக்கானதோ அல்லவென்று நியாய வாதங் கற்பிக்கிறது, பின் தங்கிய நாடுகளின் தொழில்துறை வளர்ச்சிக்கு உதவுவது என்கிற இதே முகாந்திரத்தைக் கொண்டே ஏகாதிபத்தியப் பொருளாதார ஆக்கிரமிப்பை அது நியாயப் படுத்துகிறது.

நவீன திரிபுவாதிகளாகிய 'மார்க்சிய கம்யூனிஸ்ட்' கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் பி. ராமமூர்த்தி விடு தலைப் போரும் திராவிட இயக்கமும் என்ற நூலை எழுதி வெளியிட்டுள்ளார்; அதில் பின்வருமாறு எழுதியுள்ளார்: "சீனப் புரட்சிக்கு முன்பு, சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஏகாதிபத்திய மூலதன ஆதிக்கத்தினால் அவதிப்பட்ட உள்நாட்டு தேசிய முதலாளிகளுக்கும் ஏகாதிபத்தியங்களுக்குமிடையேயான முரண் பாடுகளை, ஏகாதிபத்தியங்களின் தரகர்களாக இருந்த— சீனாவின் மீது ஆட்சி நடத்தி வந்த சியாங்-கே-ஷேக்கின் நான்கு தரகு முதலாளிக குடும்பங்களுக்கும் எதிராகப் பயன்படுத்தியது. சீனப் புரட்சிக்கு எவ்வளவு உதவியளித்தது" [பக். 375] வெளி நாட்டுக் கம்பெனிகளுடன் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள உள் நாட்டு வணிக வர்த்தக முதலாளிகளையும் அந்நிய கம்பெனி

களின் நிர்வாகிகளையும் மட்டுமே தரகு முதலாளிகள் எனலாம் நவீன தொழில் துறையில் ஈடுபட்டுள்ள. தொழிலில் மூலதன மிட்டுள்ள முதலாளிகளை தரகு முதலாளிகள் எனக்கூறக்கூடாது என்று நவீன திரிபுவாதிகள் வாதிட்டு வருகின்றனர். ஆனால் இங்கே பி. ராமமூர்த்தி குறிப்பிடும் 'சியாங்கே ஷேக்கின் 'நான்கு தரகு முதலாளிக் குடும்பங்கள்' தொழிலில் மூலதனமிட்டு நவீன தொழில் துறையில் ஈடுபட்டவர்களா? சீனத்தின் 'நான்கு பெரும் குடும்பங்கள்' வியாபாரம் மற்றும் விவசாயத்தைக் கட்டுப்படுத்தியதோடு நவீன தொழில் துறையில் மூலதனமிட்டு ஏகபோக நிலையிலிருந்தவர்கள்தாம் என்பதை ஏற்கனவே ஆதாரபூர்வமாக நிரூபித்தோம். எனவே தரகு முதலாளிகள் என வரையறுப்பதற்கு நவீன திரிபுவாதிகள் முன்வைக்கும் அடிப்படை தவறு, சந்தர்ப்பவாதமானது, கொச்சையானது, பாமரத்தனமானது, நிராகரிக்கப்பட வேண்டியது.

இறுதியாக, ஏகாதிபத்தியங்களுடன் வாணிபத்தில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு வணிக வர்க்கமா அல்லது நவீனத் தொழில் முதலாளி வர்க்கமா என்பதுதான் தரகு முதலாளிகளையும் தேசிய முதலாளிகளையும் பிரித்தறிவதற்கான அடிப்படை என்று வாதிடுவது, ஏகாதிபத்தியத்திற்கெதிரான தேசியம் என்கிற வரையறையைக் கூடுமான அளவு கொச்சைப் படுத்துவதாகும்; அதுமட்டுமல்ல, தேசியம் பற்றிய மார்க்சிய-லெனினியக் கண்ணோட்டத்துக்குக் குழிபறிக்கும் டிராட்ஸ்கியவாதமாகும்.

ஏகாதிபத்திய சகாப்தத்தில். ஏகாதிபத்திய ஏகபோகம் நிதிமூலதன ஏற்றுமதி, நிதிக்கொடுங்கோன்மை, நாடு பிடித்தல் மற்றும் ஏகாதிபத்திய யுத்தம் ஆகியவற்றுக்கு எதிராக தேசிய மொழி, கலாச்சாரம், பொருளாதார மற்றும் பிரதேச சுயாதிபத்தியத்தைக் காத்துக் கொள்வதற்காக எழுச்சி யுறுவது தேசியமாகும். இந்நான்கையும் அடைவதற்குத் தடையாக உள்ள நிலப்புத்துவத்தை வீழ்த்துவதும் தேசியத்தின் மற்றொரு பணி. ஆனால் நிலப்பிரபுத்துவத்தை வீழ்த்தி ஜனநாயகத்தை நிறுவுவதன் மூலம் பின்னது அடையப் படும். இவ்வாறு ஏகாதிபத்தியத்துக்கும் நிலப்பிரபுத்துவத்துக்கும் எதிரானதுதான் தேசியம்; இத்தகைய தேசியத்தன்மைகள் எது வுமே இல்லாத, அந்நிய மூலதனத்துடனும் உள்நாட்டு நிலப் பிரபுத்துவத்துடனும் மிக அதிகமான பிணைப்புகளைக் கொண் டுள்ள, ஏகாதிபத்திய முகாமில் சேர்ந்துவிட்ட. சரணாகதி அடைந்துவிட்ட அல்லது அதற்கு விருப்போடு உள்ள பிற்போக் குக் கும்பல்களாக சரணாகதிவாதிகளாக, பிழைப்புவாதிகளாக எதிர்ப்புரட்சி துரோகக் கும்பலாக இருப்பினும் கூட தொழிற் துறையில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு தொழில் முதலாளி வர்க்க மாக இருந்தால் அது தேசிய முதலாளி வர்க்கம்தான் என்கின்ற னர் ஓடுகாலிகள் உட்பட எல்லாவண்ணத் திரிபுவாதிகளும். தேசிய விடுதலைக்கான மக்களின் புரட்சிப் போராட்டங்களுக்கு முடிந்த போதெல்லாம் துரோகமிழைத்தது, எதிராக இருந்தது. மக்க ளின் எழுச்சி ஏகாதிபத்தியத்தை வெளியேற்றும் புரட்சியாக

அதன் தலைமையை மீறிப்போன போதெல்லாம் போராட்டத்தை பின்வாங்கி அகிம்சை பற்றியும், சாத்வீகம் பற்றியும் போதித்து வந்திருப்பினும் தமது வர்க்க நலனுக்காக சொந்த ஆட்சி அதிகாரத்திற்காக மக்களைத் திரட்டி ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடுவது; ஒரு ஏகாதிபத்தியத்தின் நேரடி ஆதிக்கம் தனது வளர்ச்சிக்குத் தடையாக இருப்பின் மற்றொரு ஏகாதிபத்தியத்தின் கூட்டையும் நட்பையும் நாடுவது—ஆகிய தன்மையுடையதை தேசிய முதலாளி வர்க்கமென்று ஒடுகாலிகள் கூறுகின்றனர்.

தேசியத் தன்மைகள் எதுவுமேயின்றி தமது வர்க்க நலனுக்காக, தமது சொந்த ஆட்சி அதிகாரத்துக்காக மக்களைத்திரட்டி போராடுவதாக கூறுவது என்பது தேசியம், தேசியப் பற்று, தேசிய உணர்வு என்பதெல்லாம் காலவதியாகிவிட்டது. உலக கும் தேசியத்தன்மைகளை இழந்துவிட்ட தமது வர்க்க நலன்களை மட்டுமே கொண்டுள்ள சுரண்டும் வர்க்கங்களுக்கெதிரான போராட்டம் மட்டுமே பாட்டாளி வர்க்கத்தின்கடமையாகிவிட்டது. என்ற டிராஸ்ட்கிய வாதத்தைத் தவிர வேறென்ன? நாடுகள் சுதந்திரத்தை விரும்புகின்றன. தேசங்கள் விடுதலையை விருபுகின்றன. மக்கள் புரட்சியை விரும்புகின்றனர் என்கிற இன்றைய உலகின் பிரதானப் போக்கை மறுப்பதைத் தவிர வேறென்ன? எல்லாவர்க்கங்களுமே தமது வர்க்க நலனுக்காக தமது சொந்த ஆட்சி அதிகாரத்திற்காகவே போராடுகின்றன: எனினும் அதை ஏகாதிபத்தியம் மற்றும் நிலப்பிரபுத்துவத்தைப் பொருத்தவரை அவற்றுடனான உறவில் எவ்வாறு அமைத்துக் கொள்கிறது என்பதே தேசிய முதலாளித்துவத்தையும் தரகு முதலாளித்துவத்தையும் பிரித்தறியும் அடிப்படை ஆகும்; தேசியநலன்கள் அனைத்துக்கும் துரோகமிழைத்து சரணடைந்து விடும்போது அந்த முதலாளிகள் நவீனத் தொழில் துறையில் ஈடுபட்டு முதலாளித்துவ உற்பத்தி உறவு கொண்டிருந்தாலும் அவர்கள் ஏகாதிபத்திய முதலாளித்துவ மறுஉற்பத்திக்கான உறவுகளையேபிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள்; அவர்களது வர்க்க நலனும், ஆட்சி அதிகாரமும் தேசியத்துக்கு எதிரானவையே.

எனினும் 'ஏகாதிபத்திய முதலாளி வர்க்கத்துடன் சேர்ந்துவிட்ட சீர்திருத்தவாத முதலாளிகள்' என்று லெனினும் 'முதலாளிகளின் சமரசப்பிரிவு' என்று ஸ்டாலினும் 'சீன முதலாளிய வர்க்கத்தின் மேற்தட்டு பிற்போக்குக் கும்பல்' என்று மாவோவும் குறிப்பிடுவது தேசிய முதலாளிகளில் ஒரு பிரிவாகிய வலதுசாரி பெரு முதலாளிகள் அல்லது தரகு முதலாளிகள் அல்லாத பெரு முதலாளிகளைத்தான் என்று ஒடுகாலிகள் வாதிடுகின்றனர். தரகு முதலாளிகளிடமிருந்து இவர்களைப் பிரித்தறிவதற்கான அடிப்படை நவீனத் தொழில் துறையில் ஈடுபட்டுள்ள உள்நாட்டுத் தொழில் முதலாளி வர்க்கம்; முதலாளித்துவ உற்பத்தி உறவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்கின்றனர். ஆனால் 1. சீன தேசிய முதலாளிகளில் நடுத்தர முதலாளிகளைப்

பற்றி "இவ்வர்க்கம் நாட்டுப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும்மூதலாளித்துவ உற்பத்தி உறவுகளைப் பிரதிநித்துவப் படுத்துகிறது" என்றுமாவோ கூறுவதிலிருந்து சீனதேசிய முதலாளிகளில் பெரும் முதலாளித்துவப் பிரிவு முதலாளித்துவ உற்பத்தி உறவைப் பிரதிநிதித்துவப் படுத்துவதில்லை என்று பொருளாகிறது.

2. "தேசிய முதலாளி வர்க்கம் நிலப்பிரபுவர்க்கத்தைவிட நிலப்பிரபுத்தன்மை குறைந்தது; தரகு முதலாளி வர்க்கமளவுக்கு தரகுத்தன்மையுடையது அல்ல. இதில் அந்நியமூலதனத்துடனும் சீன நில உடமையுடனும் மிக அதிகமாக பிணைப்புகளைக் கொண்டுள்ள பகுதி தேசிய முதலாளி வர்க்கத்தின் வலதுசாரி அணியாகும்." என்று மாவோ கூறுவதிலிருந்து தேசிய முதலாளி வர்க்கம் நிலப்பிரபுத்துவ இயல்பும் தரகுத்தன்மையும் இல்லாத ஒன்றல்ல; அதுவும் இவ்வர்க்கத்தின் வலது சாரியாகிய பெரு முதலாளித்துவ வர்க்கம் அந்நிய மூலதனத்துடனும் நிலவுடமையுடனும் மிக அதிகமாகப் பிணைப்புகளைக் கொண்டுள்ளதால் இன்னும் கூடுதலான நிலப்பிரபுத்துவ இயல்பும் தரகுத்தன்மையும் உடையது என்று பொருளாகிறது.

இவ்விரண்டும் குறிப்பது எதை? முதலாளித்துவ உற்பத்தி உறவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தாத, நிலப்பிரபுத்துவ இயல்பும் தரகுத் தன்மையையும் கொண்ட தேசிய முதலாளி வர்க்கப் பிரிவும் ஒன்றுள்ளது; இவைதான் வலதுசாரி பெரு முதலாளி வர்க்கத்தின் தன்மைகள் என்று மாவோ குறிப்பிடுகிறார். எனவே ஓடுகாலிகள் உட்பட எல்லா வண்ணத் திரிபுவாதிகளும் ஒரு முடிவுக்கு வரவேண்டும். இந்தியாவில் சொந்த ஆட்சி அதிகாரத்தைப் பெற்றதாக அவர்கள் கூறும் பெரு முதலாளிவர்க்கத்தின் வலதுசாரிப்பிரிவு முதலாளித்துவஉற்பத்தி உறவுகளைப் பிரதிநிதித்துவப் படுத்துவதில்லை. நிலப் பிரபுத்துவ இயல்பும் தரகுத்தன்மையும் கொண்டது என்பதை ஒப்புக் கொள்ளவேண்டும் அவர்களின் வரையறுப்பின்படி இத்தன்மைகள் தான் மிகப் பின் தங்கிய மிகப் பிற்போக்கான உற்பத்தி உறவுகளைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது என்கிற முறையில் இது தரகு முதலாளி வர்க்கமாகிறது என்பதையும் ஒப்புக் கொள்ள வேண்டும்; அல்லது தரகு முதலாளிகள் மற்றும் தேசிய முதலாளிகளைப் பிரித்தறியும் அடிப்படையாக ஏகாதிபத்திய மையங்களுடன் வாணிபத்தில் ஈடுபட்டுள்ள அதாவது மிகப் பின் தங்கிய, மிகப்பிற்போக்கான உற்பத்தி உறவுகளைப் பிரதிநிதித்துவப் படுத்தும் உள்நாட்டு வணிக வர்க்கமா, நவீனத் தொழில் துறையில் ஈடுபட்டுள்ள அதாவது முதலாளித்துவ உற்பத்தி உறவுகளை பிரதிநிதித்துவப் படுத்தும் உள்நாட்டு தொழில் முதலாளி வர்க்கமா என்கிற வரையறுப்பு தவறு என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். ஆனால் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்; அவர்களது தர்க்கம் குதர்க்கமாகத்தான் உள்ளது என்கிற உண்மையை ஒப்புக் கொள்ளும் நேர்மையும் ஆண்மையும் அவர்களுக்கு இல்லை; எனவே அவர்கள் மேலும் குதர்க்கத்தை வளர்ப்பவர்கள் தான்.

ஆகவே காலனி, அரைக்காலனி மற்றும் பிற சார்பு நாடுகளில் உள்ள தரகு அதிகார வர்க்கம் மற்றும் தேசிய முதலாளி வர்க்கம் இரண்டுக்குமே நிலப்பிரபுத்துவ இயல்பும் தரகுத்தன்மையும் உண்டு ஏகாதிபத்திய உலகக் கட்டமைவில் இருக்கும் வரை இந்நாடுகளின் கட்டமைவும் தரகுத் தன்மையுடையதாக, தரகு நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவுகளைக் கொண்டிருக்கிறவரை இது தவிர்க்க முடியாது; ஏனெனில் இவ்விரண்டு வர்க்கங்களுமே பொருளாதார ரீதியில் ஏகாதிபத்தியத்துடனும், நிலப் பிரபுத்துவத்துடனும் பிணைப்புகள் கொண்டதாய் உள்ளன; இவ்விரு வர்க்கங்களிலுமே வாணிபத்தில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு வணிக முதலாளிகளும், நவீனத் தொழில துறையில் ஈடுபட்டுள்ள தொழில் முதலாளிகளும் உள்ளனர். எனவே தரகு அதிகார முதலாளித்துவவர்க்கத்தையும் தேசியமுதலாளிவர்க்கத்தையும் பிரித்தறியும் அடிப்படை ஏகாதிபத்தியத்தின் ஏகபோகம், நிதி மூலதனம், நிதிக் கொடுங்கோண்மை, நாடு பிடித்தல் மற்றும்யுத்தம் ஆகியவற்றின் தாக்குதலுக்கு எதிராக தேசிய மொழி, கலாச்சாரம், பொருளாதாரம் மற்றும் சுயாதிபத்தியத்தைக் காப்பது என்கிற தேசிய நலன்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகிற உள்நாட்டு முதலாளிவர்க்கமா அல்லது தமது சொந்த நலன்களுக்காக இவற்றை அடகு வைக்கிற, துரோகமிழைக்கிற உள்நாட்டு முதலாளி வர்க்கமா என்பதுதான். அதாவது தரகு அதிகார முதலாளித்துவ வர்க்கம் என்பது இந்த அல்லது அந்த ஏகாதிபத்தியத்துடன் அல்லது மொத்தத்தில் ஏகாதிபத்திய முகாமின் விரிவாக்கப்பட்ட மறு உற்பத்தி உறவுகளை இந்நாடுகளில் எப்போதும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. மாறாக தேசிய முதலாளித்துவ வர்க்கம் என்பது ஏகாதிபத்தியத்துடன் ஒப்பிட்டு ரீதியில் குறைவானபிணைப்புள்ளவர்கள் மற்றும்பிணைபற்றவர்களைக் கொண்டது. தேசிய முதலாளித்துவ உற்பத்தியின் விரிவாக்கப்பட்ட மறுஉற்பத்தி உறவுகளை பிரதிநிதித்துவப் படுத்துகிறது. இந்திய தேசிய நலன்களோடு தமது சொந்த நலன்களை இணைத்துக் கொண்டுள்ளதால், இந்தியா ஏகாதிபத்தியங்களின் சுரண்டல் ஒடுக்குமுறையால் நலிவுறுவதால் குறிப்பிட்ட சில சமயங்களில குறிப்பிட்ட அளவு தேசிய முதலாளிகள் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலப் பிரபுத்துவ எதிர்ப்பு போராட்டத்தில் பங்கேற்பர். ஆனால் தேசிய முதலாளிகள் தங்களது உற்பத்திச் சந்தைக்காகவும், கச்சாப் பொருள் பிறவற்றுக்காகவும் தரகு அதிகாரவர்க்க முதலாளிகளையும் ஏகாதிபத்தியவாதிகளையும் இன்னும் சார்ந்திருப்பதாலும், பாட்டாளிவர்க்கத் தலைமையிலான பரந்துபட்ட மக்களின் எழுச்சியைக் கண்டு அஞ்சுவதாலும் ஊசலாட்டத்தன்மை கொண்டவர்களாக இருக்கின்றனர். எனவே தான் மாவோ சொன்னார், "தேசிய முதலாளி வர்க்கம் நிலப்பிரபு வர்க்கத்தை போன்றதோ, தரகு வர்க்கத்தைப்போன்றதோ அல்ல தேசியமுதலாளி வர்க்கத்தைவிட குறைவானஅளவு பிரபுத்துவத் தன்மையுடையது; தரகு வர்க்கத்தினது அளவு தரகுத்தன்மையுடையது அல்ல". (மாவோ தேர்ந்தெடுத்த படைப்புகள் I பக் 155) ஏகாதிபத்தியத்துடனும் நிலப்பிரபுத்துவத்துடனும் நெருங்கிய தொடர்புடைய தேசிய முதலாளித்துவ வர்க்கப்பிரிவு

வலது சாரியாகவும், அவ்வாறு இல்லாத பிரிவு இடது சாரியாக வும் அமைகின்றன என்றார்.

தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் இந்த இரட்டை அரசியல் பொருளாதார தன்மைகளுக்கு மாறாக தரகு அதிகாரவர்க்க முதலாளித்துவம் எப்பொழுதும் ஏகாதிபத்திய ஆதரவிலே நிற்குமாறு அதன் பிறப்பும் வாழ்வும் வளர்ச்சியும் அமைந்துள்ளன. அது ஏகாதிபத்தியங்களுக்கிடையிலான போட்டி முரண்பாடுகளைப் பயன்படுத்திக் கொண்டு தனது வர்க்க நலனுக்காக சலுகைக்காக பேரம் பேசினாலும்கூட ஏகாதிபத்தியசேவையிலும் நிலப்பிரபுத்துவ கூட டிலும் ஊசலாடுவதே கிடையாது. அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் அது ஏகாதிபத்தியத்தையே எப்பொழுதும் ஆதரித்துநிற்கிறது.உண்மையில் தரகு அதிகார முதலாளித்துவ வர்க்கம்குறிப்பாக தொழிற்துறையிலீடு டிருப்பதுதான் தொழில்நுட்பம்மூலதனம்,சந்தைஇவைகளுக்கா ஏகாதிபத்தியத்தைமிக அதிகமாகவும் நீண்ட காலத்திற்கும் சாதிருக்க வேண்டியஅடிப்படையைத்தருகிறது.வேகமாகஅபிவிருத்ய் அடைந்துகொண்டிருக்கிற தொழில்நுடபங்களைப்புதுப்புது சொ முறைகளைத்தானே உருவாக்கிக் கொள்ள இயலாததாகவும் உள்நாட்டில் மூலதனத்தைப் பெருக்கிக் கொள்ள முடியாததாகவும் உள்ள, உற்பத்தியில் ஈடுப்பட்டிருக்கிற தொழிற்துறை தரகு அதிகார முதலாளித்துவ வர்க்கமே மீண்டும் மீண்டும் தொடர்ந்து ஏகாதிபத்தியங்களைச் சார்ந்து நிற்க வேண்டியுள்ளது.

தேசிய முதலாளித்துவ வர்க்கத்திலுங்கூட அதன் பெரும் பிரிவு ஏகாதிபத்திய மூலதனத்துடன் கூட்டுச் சேர்ந்து தொழில் நடத்தும் ஆசையால் உந்தப்பட்டு எதிர்ப்புரட்சிகர, பிற்போக்கு, துரோக கும்பலாக, சரணாகதிவாதிகளாகின்றனர். எனவே தான் காலனி, அரைக்காலனி நாடுகளின் முதலாளித்துவ வர்க்கத்தின் பரிணாம வளர்ச்சி, மாற்றம் பற்றிய தமது கருத்துக்களையும் ஸ்டாலின் மாற்றிக் கொண்டு வந்திருக்கிறார். 1925இல் 'காலனிய மற்றும் சார்பு நாடுகளில் பொதுவுடமைவாதிகளின் உடனடிப்பணிகள்' என்ற கட்டுரையில் ஸ்டாலின் பின்வருமாறு எழுதினார்: "இது தொடர்ச்சியான ஒரு வளர்ச்சியாக- இது இனியும் தொடரும்-- காணப்படுகிறது.தேசியமுதலாளிகளின் ஒரு குறிப்பிட்ட பிரிவு - அதிமிக பணக்கார மற்றும் அதிமிக சக்தியுடைய பிரிவு-ஏகாதிபத்தியத்தைக் கண்டு அஞ்சுவதைக் காட்டிலும் தமது நாட்டில் புரட்சியைக் கண்டஞ்சுகிறது. இது தமதுநாடு ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை அடைவதைக் காட்டிலும் ஏகாதிபத்தியத்துடன் பேரம் செய்து கொள்வதையே தெரிந்தெடுக்கும். இதன்மூலம் தமது சொந்த நாடுகளில் (இந்தியா, எகிப்து, பிறபிற) விடுதலையையே காட்டிக்கொடுக்கும்" (ஸ்டாலின்: எதிர்த்தரப்பு பற்றி; பக் 204)

மேலும் அவர் சொன்னார், "இதுவரை இருந்து வந்துள்ள நிலைமை என்னவென்றால் கிழக்கிததியநாடுகள் பற்றி பேசுகை

யில் அவைகள் ஒரே சங்கமான முழுமை (Homogeneous) என்று குறிப்பிடுவதே ஆகும். ஆனால் இப்போது ஒரே சங்கமமான முழுமை என்று கிழக்கித்திய நாடுகள் எதுவுமில்லை. முதலாளித்துவத் தன்மையைக் கொண்ட வளர்ச்சி ஏற்பட்ட காலனிகளும் அத்தகைய வளர்ச்சி நடந்து கொண்டிருக்கிற காலனிகளும், பின் தங்கிய மற்றும் பின் நிலையிலுள்ள காலனிகளும் உள்ளன. இவையனைத்தையும் ஒரே அளவுகோளைக் கொண்டு அளக்கக்கூடாது —ஆகியவை இப்போது ஒவ்வொருவருக்கும் தெரிந்துள்ளது.

"காலனி மற்றும் சார்பு நாடுகளில் தேச விடுதலை இயக்கமானது நாட்டிலுள்ள அனைத்து சக்திகளையும் - அதிமிக பிற்போக்கான முதலாளிகளிலிருந்து அதிமிக புரட்சிகரமான பாட்டாளி வர்க்கம்வரை— கொண்ட பிளவு படாத முன்னணியாக இருக்கும் என்று இதுவரை கருதப்பட்டது. தேசிய முதலாளிவர்க்கம் புரட்சிகரமான மற்றும் புரட்சிக்கு எதிரான என்று இரு சாரிகளாகப் பிரிந்துவிட்டுள்ள நிலையில், இப்போது தேசிய இயக்கத்தின் சித்திரம் (புதிய) வேறுபட்ட அம்சங்களைக் கொண்டதாக உள்ளது. தேசிய இயக்கத்தில் புரட்சி சக்திகள் முதலாளி வர்க்கத்திலிருந்து உருவாவது போல, அதற்கு இணையாகவே சமரசம் செய்து கொள்ளக்கூடிய பிற்போக்கு சக்திகளும் - இவை தமது நாடு விடுதலை அடைவதைக் காட்டிலும் ஏகாதிபத்தியத்துடன் ஒரு சமரசத்திற்கு வருவதையே தெரிந்தெடுப்பவையாக உருவாகின்றன" (மேற்படி நூல்: பக் - 205) எனவே 1926 லேயே காலனி நாடுகளிலுள்ள தேசிய முதலாளி வர்க்கத்திலிருந்தே ஒரு பிரிவு தமது சொந்த நாட்டுக்கு துரோகம் செய்து விட்டு ஏகாதிபத்தியத்துடன் கூட்டுச்சேர்ந்து அடிவருடியாக மாறியிருக்கிறது

192` இல் கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் தேசிய, இன, காலனிய பிரச்சினை பற்றி உரையாற்றிய போதே லெனின் இதைக் குறிப்பிட்டுள்ளார்: "ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கம் ஒடுக்கப்பட்ட தேசங்களில் கூட சீர்திருத்தத்தவாத இயக்கத்தைத் தோற்றுவிப்பதற்காக தன் சக்திகள் இயன்றதனைத்தையும் செய்து வருகிறது. சுரண்டும் நாடுகளுடைய முதலாளித்துவ வர்க்கத்துக்கும், காலனிகளிலுள்ள முதலாளித்துவ வர்க்கத்திற் ம் இடையே ஒருவித இணக்கம் ஏற்பட்டுள்ளதன் பயனாய், ஒடுக்கப்பட்ட நாடுகளுடைய முதலாளித்துவ வர்க்கம் தேசிய இயக்கத்துக்கு நிச்சயமாய் ஆதரவாகஇருக்கும் அதேநேரத்தில் அடிக்கடி,—மிகப் பல சந்தர்ப்பங்களிலும் என்று கூடசொல்லலாம்— புரட சிகரமான எல்லாஇயக்கங்களுக்கும், புரட்சிகர வர்க்கங்களுக்கும் எதிரான போராட்டத்தில் ஏகாதிபத்தின் முதலாளித்துவ வர்க்கத்துடன் முழு இசைவுடையதாகிறது அதாவது அதனுடன் சேர்ந்து கொண்டுவிடுகிறது". (லெனின் தொகுதி நூல்: 41; பக் 244).

லெனினது இந்த வரையறுப்பை மீண்டும் உறுதிப்படுத்தும் ஸ்டாலின் குறிப்பாக இந்திய தேசிய முதலாளிகளையே சான்றாகக் கூறுகிறார்: "இந்தியா போன்ற காலனி நாடுகளில் தேசிய

முதலாளிகள் புரட்சிகரப் பிரிவு, சமரசப் பிரிவு எனப் பிரிந்திருப்பது மட்டுமல்ல அதில் சமரசப் பிரிவு ஏற்கனவே ஏகாதிபத்திய முகாமுடன் இணைந்து விட்டது. அது ஏகாதிபத்தியத்தைக் கண்டஞ்சுவதைவிட புரட்சியைக் கண்டஞ்சுகிறது. தனது சொந்த நாட்டின் நலனைவிட தனது பணப்பையையே முக்கியமானதாகக் கருதுகிறது. புரட்சியின் சமரசப்படுத்த முடியாத எதிரியுடன் அதன் செல்வாக்குள்ள பெரும்பகுதிப் பிரிவு ஏற்கனவே இணைந்துவிட்டது. தனது சொந்த நாட்டின் விவசாயிகள் தொழிலாளிகளுக்கு எதிராக ஏகாதிபத்தியத்துடன் இணைந்து ஓர் அணியை உருவாக்கிக் கொள்கிறது.'' (ஸ்டாலின் தொகுப்பு நூல் 7; பக்: 156)

இந்திய தேசிய முதலாளித்துவ வர்க்கம் ஒரு புரட்சிகரப் பிரிவாகவும், ஒரு சமரசப் பிரிவாகவும் பிளவுபட்டு விட்டதென்றும், அதன் பிந்திய பகுதி ஏற்கனவே ஏகாதிபத்தியத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டு விட்டதென்று 1920 களின் முதற்பகுதியிலேயே லெனினும் ஸ்டாலினும் மதிப்பிட்டுள்ளனர். ஏகாதிபத்தியத்துடன் உள்நாட்டு முதலாளித்துவ பிரிவு ஒன்று ஏற்படுத்திக் கொண்டுள்ள இக்கூட்டணியை தொறுக்கினாலன்றி புரட்சி வெற்றி பெற முடியாது; இக் கூட்டணியை உடைக்கும் பொருட்டு எதிர்ப்புத் தீ முழுவதையும் ஒன்று திரட்டிப் பிரயோகித்தாக வேண்டும்—இவ்வாறு மார்க்சியமும் தேசிய இன, காலனிய பிரச்சினையும் என்ற கட்டுரையில் (பக்-217) ஸ்டாலின் பணித்தார்.

தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் புரட்சிக்குத் துரோகமிழைக்கும் இப்பிரிவு பற்றி மாவோ பின்வருமாறு 1939 டிசம்பரில எழுதினார்: ''சீன முதலாளி வர்க்கமும் ஏகாதிபத்திய அடக்கு முறைக்கு ஆளானது. அது ஒருபோது 1911 புரட்சி போன்ற புரட்சிப் போராட்டங்களுக்குத் தலைமை தாங்கி, ஒரு பிரதான தலைமைப் பாத்திரத்தை வகித்ததோடு வடக்குப் படை எடுப்பு போன்ற புரட்சிப் போராட்டங்களிலும் இப்போதுள்ள ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்திலும் பங்கேற்றுள்ளது. இருப்பினும் 1927 முதல் 1937 வரையிலான காலகட்டத்தில் அதன் மேல்தட்டு அதாவது கோமிண்டாங்கின் பிற்போக்குக் கும்பல் பிரதிநிதித்துவப்படுத்தும் பகுதி ஏகாதிபத்தியத்துடன் கள்ளக்கூட்டு சேர்ந்தும், நிலப்பிரபு வர்க்கத்துடன் ஒரு பிற்போக்கு நேச அணியை உருவாக்கியும் தனக்கு உதவிசெய்த நண்பர்களுக்கும்-கம்யூனிஸ்டுகட்சிக்கும் பாட்டாளிவர்க்க பகுதிக்கும்-துரோகம் செய்துவிட்டு தோல்வியுற செய்தது. ஆகவே அந்த நேரத்தில் புரட்சிகரமக்களாலும் புரட்சிகர அரசியல் கட்சியாலும் முதலாளி வர்க்கப் பிரதிநிதிகளைப் புரட்சியின் இலக்குகளில் ஒன்றாகக் கருதாமல் இருக்க முடியவில்லை'' ( மாவோ தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள்: பக் - 35

தேசிய நலன்களுக்குத் துரோகமிழைத்து ஏகாதிபத்தியத்திடம் சரணடைந்து எதிர்ப்புரட்சி பிற்போக்கு அணி அமைத்துக்

கொண்டதும், அதை புரட்சியின் இலக்காக, எதிரியாகக் கருதித் தூக்கி எறியவேண்டுமென்று லெனின், ஸ்டாலின் மற்றும் மாவோ ஆகியோர் வலியுறுத்தினர். இருப்பினும் சீனாவில்கோமிண்டாங் பிற்போக்கு கும்பலும் இந்தியாவில் காந்தியின் தலைமையிலான காங்கிரஸ் பிற்போக்குக் கும்பலும்கூட உண்மையில் சுதந்திரத்திற்கான முழக்கத்தை முன்வைத்து ஏகாதிபத்தியத்திற்கெதிராக மக்களைத் திரட்டி போராடி அரசியல் சுதந்திரம் அடைந்ததாக நம்பச் சொல்கிறார்கள் ஒடுகாலிகள் உட்பட எல்லா வண்ணத்திரிபுவாதிகளும்; இப்பிற்போக்குக்கும்பல்கள் அந்தந்த நாடுகளின் முதலாளி வர்க்கத்தின் மேற்தட்டுப் பிரிவே எனினும் தேசிய முதலாளிகள்தாம் என்று கூறுகின்றனர். இந்த பித்தலாட்டத்தை நிலைநாட்டுவதற்காக 'தேசிய சுதந்திரம்' 'அரசியல் சுதந்திரம்' என்பதற்கே புதிய வியாக்கியானம் ஒன்றை வகுத்துள்ளனர்.

ஏகாதிபத்தியத்திடமிருந்து காலனி நாடும், காலனி மக்களும் விடுதலை அடைவது, சுதந்திரம் அடைவது என்கிறபோது ஒரே மார்க்சிய லெனினியப் பொருள்தான்உண்டு. அதாவது தேசிய சுதந்திரம்அல்லது பல தேசங்கள் அடங்கிய நாட்டுச் சுதந்திரம் அதாவது இவற்றில் எதுவானாலும் அதன் மொழி, கலாச்சாரம், பொருளாதாரம் மற்றும் சுயாதிபத்தியத்தை ஏகாதிபத்திய ஆதிக்கப்பிடியிலிருந்துவிடுவிப்பது; வேறெந்த பொருளும் கிடையாது. ஆனால் இவற்றில் எதையும் பாதுகாப்பதிற்குப்பதில் இவற்றுக்கு துரோகமிழைத்தஇந்தியப் பெருமுதலாளிகள் தமது சொந்த நலன்களுக்கான சுதந்திரத்தை பெற்றனராம்: ஆளும் வர்க்கங்களின் சொந்த அரசையும் ஆட்சி அதிகாரத்தையும் பெற்றனராம். இக்கண்டுபிடிப்பு மார்க்சிய - லெனினியத்திற்கு அல்ல. திரிபுவாதத்திற்கு ஒரு அரிய பெரியபங்களிப்புதான்.

ஏகாதிபத்தியத்தின் அரசியல், பொருளாதார நலன்களுக்கு உட்பட்டுதான் அவைகளை மீறாமல்தான் தரகு அதிகார முதலாளித்துவ வர்க்கத்தினர் கூட தங்களுடைய சொந்த நலன்களைச் சாதித்துக் கொள்கின்றனர் என்பதை ஒடுகாலிகள் உட்படஎல்லா வண்ணத்திரிபுவாதிகளும் ஒப்புக்கொள்கின்றனர். இதன் பொருள் அடிமை சங்கிலியின் நீளத்திற்குள் சுற்றித்திரியும்போது சுதந்திரமாயிருப்பதாகத் தோன்றுகிறது. அதன் அந்தத்தை மீறும்போது மட்டுமே பெற்ற சுதந்திரம் பெயரளவிலானது என்பதைக்காட்டுகிறது. நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் நிலப்பிரபுவுடனும் நிலத்துடனும் பண்ணை அடிமை பிணைக்கப்பட்டிருப்பது போன்றதுதான் காலனிய ஆதிக்கத்தின் கீழ் ஒரு தேசம் இருப்பதுவும். முதலாளித்துவ சமுதாயத்தில் தொழிலாளி சுதந்திரமானவராகத் தோன்றினாலும் யாருக்குத் தனது உழைப்பை விற்பது என்பதை தெரிந்தெடுக்கும் சுதந்திரம் அல்லது உரிமை இருப்பினும் அவன் கூலி அடிமையாகவே நீடிக்கிறான்: இந்த சுதந்திரம் அல்லது உரிமை ஏகபோக முதலாளித்துவத்தின் கீழ் பெயரளவினதாகிறது. அது போன்றதுதான் அரைக் காலனிய ஆதிக்கத்தின் கீழ் ஒரு தேசம் அடிமைப்பட்டிருப்பதுவும்; இதைச் சுதந்திரம்

எனச் சொல்வது பிதற்றலே. ஏனென்றால் தேசத்தின் நலனை வேறாகவும் தன்னுடைய நலன் வேறாகவும் பிரித்து தேசத்தின் நலனை ஏகாதிபத்திய நலன்களுக்கு அடகு வைப்பதன் மூலமாக தனது சொந்த நலனை அடைய முயற்சிக்கும் வர்க்கம் அதன் மூலம் தேசத்தின் அரசியல் பொருளாதாரத்தைத் தீர்மானிக்கும் உரிமையையும் இழப்பதால் அது தன்னுடைய சுதந்திரத்தையும் அடகு வைப்பதாகிறது. இத்தகு வர்க்கமே தரகு அதிகார முதலாளித்துவ வர்க்கமாகும்.

ஆளும் வர்க்கங்கள் தமது 'சொந்த அரசை' வைத்திருப்பதையே அரசியல் சுதந்திரம் என்றும் எனவே இந்தியா அரைக்காலனி அல்ல என்றும் கூறுவதும் ஒரு நல்ல வேடிக்கைதான். 'சொந்த அரசைப்' பெற்றிருக்கும் வர்க்கத்தைத்தான் ஆளும் வர்க்கம் என்கிறோம். வேறொரு வர்க்க அரசைப் பெற்றிருப்பதை அல்ல. இங்கே விஷயம் என்னவென்றால் 'சொந்த அரசை' அந்த வர்க்கம் தனது தேசிய சுயாதிபத்தியத்தை பிரயோகிக்க பயன்படுத்திக் கொள்கிறதா என்பதே கேள்வி. தேசிய அரசியல், சமூகப் பொருளாதார இராணுவ மற்றும் கல்வி—கலாச்சார சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்கிறதா என்பதே கேள்வி-இவ்வாறெல்லாம் செய்வதில்லை என்பதை ஒப்புக் கொள்ளும் முதலாளித்துவ அரசியல், சமூகவியலாளர்களும், ஓடுகாலிகளும் வேறொரு விசித்திரமான முறையில் வாதிடுகின்றனர். அதாவது மக்களுக்குச் சுதந்திரம் கிடைக்கவில்லையாம்; ஆளும் வர்க்கங்களுக்கு, அவர்களுடைய சொந்த நலன்களுக்கு ஏகாதிபத்தியங்களுடன் பேரம் பேசுவதற்கும் சலுகைகளைப் பெறுவதற்கும் சுதந்திரம் கிடைத்ததாம்; மக்களுடைய சுதந்திரத்தைப் பற்றியாரும் பிரஸ்தாபிக்கவில்லை. கொஞ்ச நஞ்சம் அது இருப்பதாகக் கருதினாலும் அது சுதந்திரம் என்கிற வகையிலானது அல்ல; உள்நாட்டில் குடியுரிமை ஜனநாயக உரிமை வகைப்பட்டது. இங்கே நாம் விவாதிப்பது தேசிய சுதந்திரம்; தேசத்தின் அரசியல், பொருளாதார, சமூக, கலாச்சார மற்றும் இராணுவத் துறைகளில் சுயாதிபத்தியம் இருக்கிறதா இல்லையா என்பதுதான் கேள்வி.

பல்வேறு ஏகாதிபத்தியங்களின் தேச விரோத, கல்வி கலாச்சார அரசியல் நடவடிக்கைகளை ஆளும் வர்க்கங்கள் அனுமதிக்கின்றன; அண்டை நாடுகளை ஒற்றறிய ஏகாதிபத்தியங்களுக்கு உதவுகின்றன. ஏகாதிபத்திய உலக ஆக்கிரமிப்புக்களை எதிர்க்காதது மட்டுமல்ல, ஆதரிக்கவும் செய்கின்றன; ஏகாதிபத்தியங்களின் நிதி மூலதன ஆதிக்கம் இந்திய அரசை ஏகாதிபத்தியங்களுக்குக் கீழ்ப்படிய செய்ய வல்லதேயாகும்; பல சமயங்களில் கீழ்ப்படியச் செய்துள்ளன; இந்தியாவில் பரந்துபட்ட மக்களைக் கொண்ட புரட்சிகர தேசிய விடுதலை முன்னணி மட்டும் இருந்திருக்குமானால் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் ஆட்சியை முழுமுற்றாகத் தூக்கியெறிந்திருக்க முடியும் என்றெல்லாம் ஓடுகாலிகள் உட்பட எல்லா திரிபுவாதிகளும் வாக்குமூலமளிக்கின்றனர். அப்புறம் அரசியல்

சுதந்திரம் என்று எதைத்தான் கூறுகின்றனர்? அரைக் காலனி தவிர பிறசார்பு நிலை நாடுகளைப் பற்றி ஓடுகாலிகள் கூறும்போது (அர்ஜெண்டைனா போர்ச்சுக்கல், இந்தியா போன்றவை) - இவை ஏகாதிபத்தியங்களின் நிதி மூதலன ஆதிக்கத்தால் அவற்றின் கீழ்படிந்த நிலைக்கு உள்ளாகி தமது அரசியல் பொருளாதார வாழ்வு அனைத்தையும் ஏகாதிபத்தியங்களின் பிடிக்குள்ளாக்கி இருப்பினும் அரசியல் சுதந்திரத்தை இழக்காதவை என்கின்றனர். உலக வங்கி, ஐ. எம். எஃப் நிதிக்கடன் வாங்கும்போதும், இராணுவத் தளவாடங்கள் வாங்கும்போதும் இன்னும் பல சமயங்களிலும் ஒவ்வொரு முறையும் இந்தியா அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்கு அடகு வைக்கப்படுவதாக திரிபுவாதிகள் கூச்சல் போடுகின்றனர். ஒரு நாடு பல தடவை அடகு வைக்கப்பட்ட பின்னும் அந் நாட்டின் அரசியல், பொருளாதார வாழ்வனைத்தையும் ஏகாதிபத்தியங்களின் பிடிக்குள்ளாக்கி விட்ட பின்னும் அரசியல் சுதந்திரம் பெற்றிருப்பதாகக் கூறினால் இதன் பொருள் என்ன? அது எந்த வகை சுதந்திரம்? ஓடுகாலிகள் உட்பட திரிபுவாதிகளுக்குத்தான் வெளிச்சம்!

ஏகாதிபத்தியங்களுக்கிடையிலான முரண்பாடுகளையும், தமது சொந்த அரசையும் பயன்படுத்திக் கொண்டு எந்த ஏகாதிபத்தியத்திடம் தொழில் கூட்டு வைத்துக் கொள்வது, இராணுவ மற்றும் கடன் உதவி பெறுவது என்பதைத் தெரிந்தெடுத்துக் கொள்ளும் உரிமை; ஏகாதிபத்தியங்களிடம் பேரம் பேசி சலுகைகள் பெறும் உரிமை—இவற்றையே அரசியல் சுதந்திரம் என்கின்றனர்! இவை அனைத்தும் பொருளாதார மற்றும் நிதி வகைப்பட்ட சுதந்திரமே தவிர அரசியல் வகைப்பட்டதல்ல. இந்தக் கணவான்களது விளக்கங்கள்படி இந்திய ஆளும் வர்க்கங்கள் பொருளாதாரச் சுதந்திரம் பெற்றிருப்பதாகத்தான் கூறவேண்டும். ஆனால் தமது சொந்த விளக்கங்களுக்கு எதிராக ஏகாதிபத்தியங்களைப் பொருளாதார ரீதியில் சார்ந்துள்ளது என்று வியாக்கியானம் செய்து சார்புநிலை முதலாளிகள் என்று நாமகாரணம் சூட்டுகிறார்கள்.

கடந்த 35 ஆண்டுகால இந்தியப் பொருளாதார அரசியல் வரலாறு காட்டுவது இதைத்தான். ஏகாதிபத்திய முரண்பாடுகளையும், தமது 'சொந்த அரசையும்' தேசிய கல்வி—கலாச்சாரம், பொருளாதாரம், இராணுவ மற்றும் அரசியல் சுதந்திரத்தைப் பாதுகாப்பதன்றி தமது தரகு பேரங்களுக்கும் சலுகைகளுக்குமே இந்திய ஆளும் வர்க்கங்கள் பயன்படுத்தினர் இவ்வாறு செய்வதுஇந்நாட்டின் அரைக் காலனிய மற்றும் இந்திய பெருமுதலாளிகளின் தரகுத் தன்மையை மறுக்கிறதா

முதலாளித்துவ அரசியல் சமூகவியலாளர்களோடு சேர்ந்து கொண்டு ஓடுகாலிகள் தமது முறிந்துபோன நிலைப்பாடுகளுக்கு

மூட்டுக் கொடுக்க முயற்சிக்கின்றனர்; அதற்காக சீனத்தின் வரலாற்றை ஆழமாகவும், சரியாகவும் முழுமையாகவும் தொகுத்தறியாது சில முடிவுகளுக்கு வருகின்றனர்; தரகு அதிகார வர்க்க முதலாளிகளின் தன்மைகளாக இருக்க வேண்டுமென்றும், அவற்றிலிருந்து இந்திய பெருமுதலாளிகள் மாறுபட்டிருப்பதாகவும் சில குணாம்சங்களைத் தொகுத்துள்ளனர். அதாவது 1. எப்போதும் ஏகாதிபத்தியத்தின் பக்கம் நிற்கும்; அதனுடன் பேரம் பேசி சலுகைகளைக் கோருவதோ, முரண்படுவதோ, மோதுவதோ இருக்காது. இத்தகைய தன்மை உடையதே தரகு முதலாளி வர்க்கம் 2. ஏதேனும் ஒரு குறிப்பிட்ட ஏகாதிபத்தியத்தோடு தரகு முதலாளித்துவம் தன்னை இணைத்துக் கொண்டிருக்கும். 3. பிரதானமாக வணிகப் பெரு முதலாளி வர்க்கமாக இருக்கும்; தொழிற்துறை பெருமுதலாளி வர்க்கமாக இருக்காது. 4. தனியாக அரசுரிமையைப் பெற்றிருக்க மாட்டார்கள். 5. தமது நலன்களுக்காக மக்களைத் திரட்டிப் போராட மாட்டார்கள்.

தரகு அதிகார முதலாளித்துவ வர்க்கமென்பது தொழிற்துறை பெருமுதலாளி வர்க்கத்தைத்தான் குறிக்கிறது என்பதை ஏற்கனவே விரிவாகப் பார்த்தோம். தரகு முதலாளிகளுக்கான பொதுக் குணாம்சமாக இவர்கள் கூறும் பிற வரையறுப்புகள் அனைத்தையும் சீனத்து தரகு முதலாளிகளும் ஏகாதிபத்திய வாதிகளும் நடந்து கொண்ட முறைகள் தூள் தூளாக்கிவிடுகின்றன. உதாரணமாக முதல் ஏகாதிபத்திய யுத்தத்திற்கு முன்னும் பின்னும் நடந்தவற்றைப் பார்ப்போம்:

"1911 ம் ஆண்டு முதலாளித்துவப் புரட்சி பலமான தலைமை இல்லாதது மற்றும் வேறு பல பலவீனங்களாலும் அந்நிய ஆக்ரமிப்பாளர்களுக்கும் சீன நிலப்பிரபுத்துவ சக்திகளுக்கும் வழியைத் திறந்துவிட்டது. ஏகாதிபத்தியவாதிகள் யுவான்-ஷி-காய் என்ற யுத்த பிரபுவை சீனத்தின் புதிய ஆட்சியாளனாக அமர்த்தப் பாடுபட்டனர். ஜப்பானிய ஏகாதிபத்தியம் வடபுலத்து யுத்தப் பிரபுவான டுவான்-சி-ஜூய் என்பவனை ஆட்சியாளனாக அமர்த்தப் பாடுபட்டது. 1919-ல் யுவான்-ஷி-காய் சீனத்தின் ஏதேச்சதிகார அரசுரிமையை அடையச் செய்த சதி தோல்வியுற்றதால் அவன் வீழ்த்தப்பட்டான். ஐரோப்பாவில் இருந்த ஏகாதிபத்திய சக்திகள் தங்களுக்குள் சண்டையில் மூழ்கி கிடந்ததால் அவர்களால் சீனத்தில் குறுக்கிட முடியவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஜப்பானிய ஏகாதிபத்தியம் தனது அடிவருடியான டுவான்-சி-ஜூய்யை ஆட்சியில் அமர்த்த முயற்சித்தது. எனவே, யுவான் ஷி காயின் வீழ்ச்சிக்குப் பின் உடனடியாகவே டுவான்-சி-ஜூய் பீகிங் அரசாங்கத்தில் அதிகாரத்திற்கு வந்தான்.

"ஏகாதிபத்திய சக்திகளால் தங்களது பொது ஏஜண்ட் என யுவான்-ஷி-காய் அங்கீகரிக்கப்பட்டிருந்தான். எனவே அவன் பதவிக்கு வந்தவுடனேயே அவனுக்கு முன்பிருந்த சிங் அரசாங்

கத்தால் செய்யப்பட்ட அனைத்து துரோக உடன்படிக்கைகளையும் ஏற்றுக் காண்டான். 1913-ல் அமெரிக்காவில் லைமை தாங்கப்பட்ட ஆறு வல்லரசுகளின் கூட்டமைப்பு சீனாவில் உள்ள புரட்சிகரஇயக்கத்தை நசுக்குவதற்காக யுவான்-ஷி-காயுக்கு 2.5 கோடி பவுண்டுகள் கொடுத்தது. சீனத்தின் நிதி விவகாரங்களை நேரடியாக கண்காணிக்கும் அதிகாரத்தை கட்டமைப்பு மேற்கொள்ளும் நிபந்தனையின் பேரிலேயே இந்தக் கடனைக் கொடுத்தது. 1915ல் ஜப்பான் 21 கோரிக்கைகள் கொண்ட ஒரு உடன்படிக்கையை ஏற்குமாறு யுவான்-ஷி-காயை நிர்பந்தப்படுத்தியது அவன் பெரும்பாலான கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டான். சீன அரசாங்கம், போலீஸ், நிதி. தேசிய பாதுகாப்பு ஆகியவைகளைக் கட்டுப்படுத்த ஜப்பானுக்கு அதிகாரம் வேண்டும் என்ற கோரிக்கையை மட்டும ஏற்றுக் கொள்ளவில்லை. இது சம்பந்தமாக மேற்கொண்டு பேச்சு வார்த்தை வேண்டும் என்று வேண்டிக் கொண்டான். '21 கோரிக்கைகள்' மூலம் ஜப்பான் சீனத்தில் ஏகபோக நிலையைப் பெற்றது. யுவான்-ஷி-காயின் மரணத்திற்குப்பின் ஜப்பான் டுவான்- -ஜுய்யின் அரசாங்கத்தை ஆதரித்தது. அதற்கு 50 கோடி யென்களைக் கடனாகக் கொடுத்தது. அதற்கு பிரதி பலனாக சீனத்தின் இராணுவம், போலீஸ் இவைகளைக் கட்டுப் படுத்தவும் அதனுடைய உள்நாட்டு நிர்வாகத்தில் தலையிடவும் மங்கோலியா, மஞ்சூரியா, ஷாண்டங் ஆகிய பகுதிகளைச் சுரண்டவுமான அதிகாரத்தைப் பெற்றது.

"டுவான்-சி-ஜுய் அரசாங்கம் ஜப்பானின் அடிவருடியாக செயல்பட்டது. ரஷியாவிற்கு எதிரான யுத்தத்தின் விளைவாக, ஜப்பான் தனது படைகளை சீனத்தில் கொண்டு வந்து வடகிழக்குப் பிராந்தியங்களில் தனது கட்டுப்பாட்டை நிறுவியது சீன இராணுவ அமைப்பிலும் ஆதிக்கம் செலுத்தியது.

"முதல் ஏகாதிபத்திய யுத்தத்திற்குப் பின் ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்குமான மோதல் மிகவும் உக்கிரமடைந்தது. சீன யுத்த பிரபுக்கள், அதிகார வர்க்கத்தினர் மற்றும் தரகர்கள் மத்தியிலிருந்து தமது புதிய ஏஜண்டுகளைக் கண்டு பிடிக்க அவர்கள் ஒருவரோடு ஒருவர் போட்டியிட்டனர். ஏகாதிபத்திய வாதிகள் இந்த சீன ஏஜண்டுகளைப் பயன்படுத்தி ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டனர் சர்வதேச அரங்கில பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ், ஜப்பான் ஆகியவற்றைக் கொண்ட சர்வதேச கூட்டமவை ஏற்படுத்த அமெரிக்கா முன் மொழிந்தது. சீனாவில் ஜப்பானது ஏகபோகத்தை மட்டுப் படுத்துவது மற்றும் தனது பொருளாதார பலத்திற்கேற்ப கூட்டமைவில் தலைமை இடத்தை உறுதிப் படுத்திக் கொள்வது என்ற நோக்குடன் அமெரிக்கா இதைச் செய்தது. 1920ல் இந்த கூட்டமைவு ஏற்படுத்தப்பட்டது ஆனால் நான்கு நாடுகளுக்கு இடையிலான முரண்பாடுகளின் காரணத்தால் குறிப்பாக ஜப்பானுக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான முரண்பாடு

களின் காரணத்தால் எந்த ஒப்பந்தமும் ஏற்படாமலேயே போயிற்று.

"ஜெர்மனி மற்றும் ஆஸ்திரியாவின் தோல்வியால் முதல் ஏகாதிபத்திய யுத்தம் முடிந்தது. 1919, ஜனவரி 18 ல் வெர் செய்ல்ஸ் சமாதான மாநாடு பாரிசில் நடைபெற்றது. யுத்தத்தில் கிடைத்த ஆதாயங்களை பகிர்ந்து கொள்வதற்கான மாநாடே இது. காலனிகளை மறுபங்கீடு செய்யவும் தோற்ற நாடுகளிடமிருந்து ஆதாயங்களைப் பெற்று அந்நாடுகளை வெட்டிச் சுருக்கவும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் இந்த மாநாடு கூட்டப்பட்டது.

"பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகியவைகளின் பக்கம் சேர்ந்து சீனா சண்டையிட்டதால் மாநாட்டில் அதற்கும் பிரதிநிதித்துவம் தரப்பட்டது. பொதுமக்களுடைய அபிப்பிராயத்தின் நிர்பந்தத்தால் அம்மாநாட்டில் கலந்து கொண்ட சீன தூதுக்குழு பின்வரும் வேண்டுகோளை விடுத்தது. 'சீனத்தில் ஏகாதிபத்தியங்களுக்கு உள்ள அந்தஸ்துகள் ஒழிக்கப்படவேண்டும். ஜப்பானிய ஏகாதிபத்தியத்திற்கும் யுவான் ஷி-காய் -க்கும் இடையில் ஏற்பட்ட 21 கோரிக்கைகள் ரத்து செய்யப்படவேண்டும். யுத்தத்தின்போது ஜப்பான் கைப்பற்றிய ஷாண்டங்கில் ஜெர்மனிக்கு இருந்த அந்தஸ்துகள் திருப்பித்தரவேண்டும்' ஜப்பானிய தூதுக்குழு ஜெர்மன் அந்தஸ்தை தனக்கேதரவேண்டுமென்றுகோரியது. பிரிட்டனும் பிரான்சும் ஜப்பானது கோரிக்கையைஆதரித்ததால்எதிர்ப்புரட்சிகர ஏககதிபத்திய முன்னணியை நிலைநாட்ட அமெரிக்காவும் இதற்கு உடன்பட்டது. அதன்மூலம் சீன மக்களின் நியாயமான உரிமை பறிக்கப்பட்டு ஜப்பானின் அநீதியான கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. சீன மக்களின் மற்ற இரண்டு கோரிக்கைகள் பற்றி விவாதிக்கிற தொந்தரவை மாநாடு எடுத்துக் கொள்ளவில்லை. சமாதானத்தின் பெயரால் நடந்த பாரிஸ் மாநாடு ஏகாதிபத்தியங்களின் மூர்க்கத்தனமான குணாம்சங்களை வெளிக் கொணர்ந்தது. அதாவது, சீனத்தை சூறையாடுவதில் அவர்களுக்கிடையே ஒருவருக்கொருவர் இருந்த சண்டையையும் சீனத்தின் நலன்களை கபலீகரம் செய்வதில் அவர்களுக்குள் இருந்த பொது முன்னணியையும் மிகத்தெளிவாக எடுத்துக் காட்டியது" (நவ சீனப் புரட்சியின் வரலாறு, ஹோ-கான்-ஷி; பக் 11-12)

சீன வரலாற்றின் இந்த சிறு பகுதி காட்டுவதென்ன?

1. ஏகாதிபத்தியங்களின் தரகர்களாக, அடிவருடிகளாக இருந்த யுவான் - ஷி - காய் ஆகட்டும் அல்லது டுவான்- சி-ஜூய் ஆகட்டும் இருவரிடமும் 'சொந்த அரசு' இருந்தது: தனியாகவே அரசுரிமையைப் பெற்றிருந்தனர்.

2. யுவான்-ஷி-காய் ஏதேனும் ஒருஏகாதிபத்தியத்திடம் மட்டும் தன்னை இணைத்துக் கொள்ளவில்லை. ஆறு வல்லரசுக்

கூட்டமைப்பில் இருந்த ஆறு ஏகாதிபத்தியங்களுக்கும் தரகனாக இருந்திருக்கின்றான். அது மட்டுமல்ல யுத்தத்தில் எதிரெதிராக ஈடுபட்டுக் கொண்டிருந்த இரண்டு ஏகாதிபத்தியங்களான அமெரிக்கா, ஜப்பான் இரண்டுக்கும் ஒரே சமயத்தில் தரகனாக இருந்திருக்கிறான். அதாவது எந்த ஏகாபத்தியத்துடனும் அவன் தன்னை நிரந்தரமாக இணைத்துக் கொள்ளவில்லை.

3. இரு தரகர்களான யுவான் - ஷிகாயும் டுவான்-சி-ஜூயும் ஒருவருக்கொருவர் எதிராக சண்டையிட்டுக் கொண்டது. சொந்த நலன்களுக்குப் போல மேலோட்டமாக தெரிந்த போதிலும் உண்மையில் ஏகாதிபத்திய நலன்களுக்காகவே தங்களுக்குள் போரிட்டுக் கொண்டனர்.

4. ஏகாதிபத்தியங்களிடமிருந்து தரகர்கள்எவ்வளவு சலுகைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை அதாவது அடிமைச் சங்கிலியை கழுத்தில் மாட்டிக் கொள்வதா, அல்லது கரங்களில் மாட்டிக் கொள்வதா சங்கிலியின் நீளம் எவ்வளவு, ஆகியவைகளைத் தீர்மானிப்பது ஏகாதிபத்தியங்களே.ஏகாதிபத்தியங்களுக்குள் இருக்கும் சக்திகளின் பலாபலன்களைப் பொருந்தே இது தீர்மானிக்கப்படுகிறது.

5. பரந்துபட்ட மக்களின அபிப்பிராயம் பலமாக இருக்கும் பொழுது நிர்பந்தம் காரணமாக தரகர்கள் ஏகாதிபத்தியங்களுக்கு எதிரான கோரிக்கைகளைக்கூட வெளிப்படையாக வைப்பர் (பாரிஸ் சமாதான மாநாட்டில் சீன தூதுக்குழு இதையே செய்தது) — அதாவது, தரகு முதலாளிகளின் பொது குணாம்சங்கள் என்று எவைகள் எல்லாம் முதலாளித்துவ சமூகவியலாளர்கள், ஒடுகாலிகள் உட்பட எல்லா வண்ணத் திரிபுவாதிகளும் சொல்லுகின்றனரோ அவைகள் அனைத்தும் சீனத் தரகு முதலாளிகளுக்கு பொருந்தவில்லை. எனவே இவர்கள் முன்வைக்கும் பொதுவரையறுப்புகள் தவறானவை என்பது உறுதி.

சமூக ஏகாதிபத்தியம் மற்றும் ஏகாதிபத்தியத்தின் பாலும். நிலப்பிரபுத்துவத்தின் பாலும் இந்திய தரகு - அதிகார வர்க்க முதலாளிகள் கொண்டிருக்கும் சமூக, பொருளாதார, அரசியல் நிலைப்பாடுகளைக் கொணடே அவர்களது வர்க்கத்தன்மை தீர்மானிக்கப்பட வேண்டும். இவற்றுக்கு அப்பாற்பட்டு வேறுபட்ட சொந்த நலன் என்றொன்று இருக்க முடியாது. தேசியப் பொருளாதாரத்தையும் தேசிய சுயாதிபத்தியத்தையும் நிலைநாட்டிக் கட்டி வளர்ப்பது ஏகாதிபத்தியம், காலனி ஆதிக்கம் மேலாதிக்கத்தை எதிர்ப்பது, நிலப்புரபுத்துவத்தை ஒழித்துக்கட்டி ஏகாதிபத்தியத்தின் பிரதான சமூக அடிப்படையைத் துடைத்தெறிவது என்ற தேசிய சமூக, பொருளாதார. அரசியல் நலன்களில்தான் — ஊசலாட்டம், பலவீனம்,முரண்பாடுகளிருப்பினும்- தமது சொந்த நலன்களை இனங்கண்டு ஐக்கியப்படுவது தேசிய முதலாளித்துவத்தின் தனிச்சிறப்பான தன்மை. அவ்வாறின்றி தரகு - அதிகார வர்க்க முதலாளித்துவ பொருளாதாரத்தையும்

ஏகாதிபத்தியத்தியத்திற்குக் காட்டிக் கொடுப்பது, தேசிய சுயாதிபத்தியத்தை அடகு வைப்பது, மற்றும் தேசியதுரோகதனத்திலும் பிற்போக்கு நிலப்பிரபுத்துவத்துடன் அரசியல் கூட்டையும் ஜங்கர் முறையிலான நிலப்பிரபுத்துவ முதலாளிகளை உருவாக்கிப் பொருளாதார கூட்டையும் வைத்துக் கொண்டு ஏகாதிபத்தியத்தின் பிரதான சமூக அடிப்படையை பாதுகாப்பது என்ற ஏகாதிபத்திய நிலப்பிரபுத்துவ சமூகப்பொருளாதார, அரசியல் நலன்களில்தான் — ஊசலாட்டமின்றி, நிரந்தரமாக உறுதியாக — தமது சொந்த நலன்களை இனங்கண்டு ஐக்கியப்படுவது தரகு — அதிகார வர்க்க முதலாளித்துவத்தின் தனிச்சிறப்பான தன்மை. தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் ஒரு பிரிவு அல்லது மொத்த வர்க்கமுமே, ஒரு சமயம் அல்லது மற்றொரு சமயம் ஏகாதிபத்தியம் மற்றும் நிலபிரபுத்துவத்துடன் சமரசம் செய்து கொள்ளலாம் அல்லது ஊசலாடலாம். ஆனால் அடிப்படையில் சாரம்சத்தில் அதன் வர்க்கத்தன்மையை இழப்பதில்லை. மாறாக தரகு அதிகார வர்க்க முதலாளித்துவம் நிரந்தரமாகவே, உறுதியாக, ஊசலாட்டமின்றி ஏகாதிபத்தியம் மற்றும் நிலப்பிரபுத்துவத்துடன் பிணைந்துள்ளது. ஆனால் வெவ்வேறு ஏகாதிபத்தியங்களுடன் தரகு — அதிகார முதலாளித்துவ வர்க்கம் தமது நலன்களை பிணைத்துககொண்டு பிளவுபட்டிருப்பதோ தமது விசுவாசங்களை மாற்றிக்கொள்வதோ, தமது எஜமானர்களுடன் பேரம் பேசி சலுகைகளை பெறுவதோ, அதற்காக அவர்களுடன் முரண்படுவதோ மேற்கண்ட அடிப்படைகளைப்பொய்பித்துவிட வில்லை

தரகு முதலாளிகள் பற்றிய வரையறுப்புக்கு இவர்கள் யாந்திரீக முறையில் சான்றாக எடுத்துக்கொள்ளும் சீனத் தரகு முதலாளிகள் கூட சலுகைகளுக்காக ஏகாதிபத்தியங்களுடன் பேரம் பேசியிருக்கிறார்கள். "சியாங்கே ஷேக், சாங் சோலின் போன்ற கட்டித்தட்டிப் போன பிற்போக்குவாதிகள் கூட இப்பொழுது சமனற்ற ஒப்பந்தங்களை ஒழிப்பது, சீனாவில் சுங்கவரி சுயாட்சியை நிறுவுவது ஆசியவற்றை ஆதரிப்பதாகப் பிரகடனம் செய்கிறார்கள்" (ஸ்டாலின், எதிர்த்தரப்பு பற்றி, பக். 738) இதே போன்று நவீன காலனி மற்றும் அரைக்காலனி நாடுகளில் மக்கள் நம்பிக்கை யிழந்த அல்லது தனது நலன்களுக்கு போதிய அளவு சேவை செய்யாத தனது அடிவருடிகளை ஏகாதிபத்தியம் தூக்கியெறியத் தயங்குவதில்லை. தெற்கு வியட்நாமின் தியமை அமெரிக்க ஏகாதிபத்தியமும், ஆப்கானின் அமீனை சமூக ஏகாதிபத்தியமும் தூக்கியெறிந்தவைஇலக்கணச் சான்றுகளாகும். எனவே ஏகாதிபத்தியங்களுடன் பேரம் பேசுவதோ, முரண்படுவதோ தரகு முதலாளிகள் மற்றும் தேசிய முதலாளிகள் பற்றிய மேற்கண்ட மார்ச்சிய-லெனினிய வரையறுப்பை மறுப்பதில்லை.

மேற்கண்ட மார்க்சிய-லெனினிய அளவுகோலைப் பிரயோகிக்கும் போது தவிர்க்க முடியாமல் முதலாளிய அரசியல் மற்றும் சமூகவியலாளர்கள் மற்றும் பல திரிபுவாதிகளும் அவர்களது சொந்த வார்த்தைகளாலேயே இந்திய ஆளும் முதலாளிகள் பற்றி முன்வைக்கும் புறவயமான. நிதர்சனமான உண்மைகள்—

ஏகாதிபத்திய உலகக் கட்டமைவில் ஐக்கியமாகியிருப்பதும், நிலப்பிரபுத்துவத்தைத் தூக்கியெறியாமல் ஆனால் தமது தேவைக்கு வேண்டி உற்பத்தி முறைகுலைவை ஏற்படுத்தியிருப்பதும் இன்னும் பிற தரகு-அதிகார வர்க்க முதலாளித்துவ தன்மையையே காட்டுகின்றன. இருப்பினும் கழுதையை கழுதையென்று ஏன் அவர்கள் அழைப்பதில்லை? திரிபுவாதிகள் மற்றும் நவீன திரிபுவாதிகள் சமூக ஏகாதிபத்தியத்திற்குசேவைசெய்வதிலிருந்து திரிபுவாத நாடாளுமன்ற சமரச சரணடைவுத் துரோகத் தனத்திற்கு நியாயம் கற்பிப்பது வரை பல நோக்கங்களை உள்ளடக்கியிருக்கின்றனர். முதலாளிய அரசியல் மற்றும் சமூகவியலாளர்கள் தரகு முதலாளிகளும் அல்ல, தேசிய முதலாளிகளும் அல்ல என சித்தரிப்பதின் மூலம் உலகம் முழுவதும் ஒரே தன்மையுடைய சொந்த நலன்களை மட்டுமே கருதும் ஒரே முதலாளித்துவ வர்க்கம் மட்டுமே இருக்கிறது. தேசிய தன்மைகள் எதுவுமில்லை, ஏகாதிபத்திய உலகக் கட்டமைவில் ஐக்கியம் தேசியத் தன்மைகளை ஒழித்துவிட்டன; இவையாவும் இன்ன பிறவும் ஒரே சமயத்தில் உலகு தழுவிய சோசலிசப் புரட்சி என்ற டிராட்ஸ்கிய வாதத்தை முன்வைப்பதற்கான கோட்பாட்டு அடிப்படையைத் தான் கொண்டிருக்கின்றனர்.

இதற்காக முதலாளித்துவ சமூகவியலாளர்களின் அடியொற்றி ஓடுகாலிகளால் புதுமையான கருத்து ஒன்று முன்வைக்கப்படுகிறது. அதாவது மூன்றாம் உலகநாடுகளிலுள்ள முதலாளிகளை தேசிய முதலாளிகள் என்றோ, தரகு முதலாளிகள் என்றோ வரையறுக்க முடியாது என்பதுதான் அந்தப் புதுமையான கருத்தாகும். "காலனிய ஆட்சிச் காலத்தின்போது 'தேசிய' என்றும் தரகர்' என்றும் வகைப்படுத்தியது பொருத்தமாய் இருந்தது. இனியும் பொருந்தாது என்று நாம் கூறுகிறோம், மூன்றாம் உலக முதலாளிகள் 'உள்நாட்டு' முதலாளிகளாவார், காலனிய முதலாளித்துவ அரசின் கீழ் இருந்த தேசிய முதலாளிகளைப் போல் அரசியல் ரீதியில் அடக்கப்படுவதோ, பின்னிலையில் இருத்தி வைக்கப்படுவதோ இல்லை. இவர்கள் அரசியல் ரீதியில் சுதந்திரமானவர்கள். சமூகப் படிவத்தில் உள்ள முறைகுலைவினால் இருத்தப்பட்ட முரண்பாடுகளுடைய வரம்புகளுக்குள் இவர்கள் தம்மை வளர்த்துக் கொள்ள முடியும். ஆனால் எது எப்படி இருப்பினும் ஏகபோகக் கட்டுமானத்துக்குள் இருப்பதால் பொருளாதார ரீதியில் அதைச் சார்ந்துள்ளது" (கெய்ல் ஓம்வெட், பாரத் படங்கர் என்ற முதலாளித்துவ கருத்துரையாளர்கள், எகனாமிக் அண்ட் பொலிடிக்கல் வீக்லி, டிசம்பர் 31, 1977) மொத்த உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கும் ஏகாதிபத்தியத்தின் தேவைகளுக்காக ஏற்றுமதிக்காக அந்நிய சந்தைகளுக்காக உள்நாட்டுச் சந்தையின் வளர்ச்சிக்கு மாறாக இருக்கிறது என்றும் இந்த கட்டமைவில் தனக்கென ஒரு பங்கை இந்திய முதலாளிகள் பெற்றுக்கொள்ள முடிகிறது என்றும் அவர்கள் கூறுகிறார்கள். தற்போது தேசிய முதலாளியாகவும் தரகு முதலாளிகளாகவும் இல்லாத இந்த முதலாளிகள் நேரடி காலனி காலத்தில் தேசிய முதலாளிகளாக இருந்தார்கள் என்றும் கூறுகிறார்

கள்- இவர்களே இன்றே இந்தியாவில் ஆளும் வர்க்கமாக இருக்கின்றனர் எனவும் நிலப்பிரபுத்துவத்தை ஒழித்து ஜனநாயகப் புரட்சியை இவர்கள் நடத்தமாட்டார்கள் என்றும் ஏகாதிபத்தியத்தைச் சார்ந்திருப்பதிலிருந்து தப்ப முடியாது எனவும் இவர்கள் கூறுகிறார்கள். முதலாளித்துவ உற்பத்தி முறையே மேல் நிலை பெற்றுள்ளது எனவும் கூறுகிறார்கள். நிலப்பிரபுத்துவத்தையும் ஒழிக்காமல் ஏகாதிபத்தியத்தையும் சார்ந்து இருப்பதால்—முன்பு தேசிய முதலாளிகளாக இருந்த இவர்கள்—தற்போது தேசிய முதலாளிகளாகவும் இல்லை, தரகு முதலாளிகளாகவும் இல்லையெனவும் தங்களது சொந்த அரசை பயன்படுத்தி தங்களுக்கான பங்கை மட்டும் பெற்றுக்கொண்டு ஏகாதிபத்திய கட்டமைவுக்குள் இருந்து கொண்டிருக்கிறார்கள் எனவும் சொல்கிறார்கள். ஏகாதிபத்திய கட்டமைவுக்குள் சந்தை உறவுகளில் மட்டுமல்ல, உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கின் உறவுகளிலேயே இந்திய முதலாளிகள் ஐக்கியமாகி இருக்கிறார்கள் எனச் சொல்கிறார்கள்.

இவர்களுடைய கோட்பாட்டின் சாரம் இதுதான்: உலகம் முழுவதும் ஏகாதிபத்தியக் கட்டமைவின் கீழ் உள்ளது; உலகம் முழுவதிலும் ஒரே வகை முதலாளிகள் இருக்கிறார்கள், ஏகாதிபத்திய நாடுகளிலுள்ள முதலாளிகளை மூன்றாம் உலக நாடுகளிலுள்ள முதலாளிகள் பொருளாதார ரீதியில் சார்ந்து இருக்கின்றனர். அரசியல் ரீதியில் சுதந்திரமாக, சுயேச்சையாக இருக்கின்றனர் என்பதே அது. ஏகாதிபத்தியம்பற்றி லெனின் சொன்ன குணாம்சங்களுக்கு,குறிப்பாக சர்வதேச ஏகபோக முதலாளித்துவ கூட்டுகள் உருவாகி, உலகையே இவை தமக்கிடையே பங்கிட்டுக் கொள்ளல்' மற்றும் ' மிகப் பெரிய முதலாளித்துவ அரசுகளிடையே அனைத்து உலகப் பரப்பும் பங்கிடப்பட்டுக் கொள்ளுதல் நிறைவுபெறுகிறது' என்பவைகளுக்கு நேர் எதிர்மாறான கருத்துக்களே இவை. 'உலகின் நிலப்பரப்பு அனைத்தும் மிகப் பெரிய முதலாளித்துவ அரசுகளுக்கு இடையே பங்கிடப்படுவது எப்பொழுது நிறைவு பெற்று விட்டதோ, அக்கட்டத்திலான முதலாளித்துவமே ஏகாதிபத்தியம்' என்று லெனின் சொன்னது இவர்களின் கோட்பாட்டின்படி தவறானதாகும். "ஏகாதிபத்தியம் என்பது உலக தேசங்களுக்கு மேல் ஒரு சில ஏகாதிபத்தியங்களின் மென்மேலும் அதிகரித்து வரும் ஒடுக்கு முறை என்று அர்த்தமுடையது. தேசங்களின் ஒடுக்குமுறையை விஸ்தரிக்கவும் பலப்படுத்தவும் அந்த ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான ஒரு யுத்தங்களின் கால கட்டம் என்று அர்த்தமுடையது" [லெனின். புரட்சிகர பட்டாளி வர்க்கமும் சுயநிர்ணயத்துக்கான தேசங்களின் உரிமையும், தொகுப்பு நூல்கள், தொகுதி: 21] என்று லெனின் சொன்னதை இவர்கள் மறுக்கிறார்கள். 'மூலதனத்தின் அளவுக்கு ஏற்ப" பராக்கிரமத்தின் அளவுக்கு ஏற்ப ஏகாதிபத்தியவாதிகள் உலகைப் பங்கு போடுகின்றன என்று லெனின் வகுத்த கோட்பாட்டை இவர்கள் மறுத்து ஏகாதிபத்தியம் சைவப் புலியாகி விட்டதாகக் கூறுகிறார்கள்.

முதலாளித்துவ அரசியல் மற்றும் சமூகவியலாளர்களுடைய மேற்கண்ட வாதங்களைவிழுங்கிவாந்தியெடுக்கும்அசிம் சட்டர்ஜி டி. வி, ராவ் போன்ற ஒடுகாலிகள் இந்தியா அரைக்காலனி அல்ல என்றும் இந்தியப் பெருமுலாளிகள் தரகு அதிகார முதலாளித்துவ வர்க்கம் அல்ல என்றும் நிலைநாட்டுவதற்காக இன்னும் சில வாதங்களை முன்வைக்கின்றனர். இவர்கள், 'தரகு முதலாளித்துவமும் அரைக் காலனியமும் இரண்டாவது உலக யுத்தத்திற்கு முந்திய காலக்கட்டத்தினுடைய தன்மையாகும்;நவீன காலனிய முறைகளின் கீழ் அவை சாத்தியமில்லை; ஒரு நாட்டை காலனியாக்குவதற்கு முன்பு அதன் பல்வேறு பகுதிகளை இராணுவ ரீதியில் ஆக்கிரமித்துக் கொண்டு பல ஏகாதிபத்தியங்கள் மோதிக் கொள்ளும் நிலையிலேயே அது சாத்தியம். பல்வேறு யுத்த பிரபுக்களின் ஆதிக்கத்தின்கீழ் அவர்கள் தமதுசொந்த இராணுவத்தை கொண்டு போரிட்டுக் கொண்டுள்ள நிலைமையில் நாடு முழுவதும் மையப் டுத்தப்பட்ட ஒரே அரசியல் அதிகாரத்தின் கீழ் இல்லாதபோதும்தான் சாத்தியம்' என்று வாதிடுகிறார்கள்.

முதலாவதாக, சீனப் புரட்சியின் ஆரம்பக்கால கட்டத்தில் நாடுதழுவியமையஅரசியல்அதிகாரத்தின் கட்டுமானத்தைநிறுவும் வளர்ச்சிப்போக்கு இருந்திருக்கிறது. யுத்தப் பிரபுகளிடையே பிளவு மோதல்கள் ஏற்படுத்திய நெருக்கடிகளின் விளைவாக யுத்தப் பிரபுக்களின் ஆதிக்கம் வீழ்ச்சியுற்று வந்திருக்கிறது இந்த பரிணமா வளர்ச்சி நான்கிங்கில் ஒரு கட்சி பாசிச இராணுவ சர்வாதிகாரம் நிறுவப்பட்டுவதாக முடிந்தது. சீன அரசியலில் ஏற்பட்டு வந்த இந்த மாற்றங்களை ஒடுகால்கள் உட்பட புரட்டலாளர்கள் அனைவரும் மூடி மறைக்கின்றனர். 1892 சீர் திருத்தம், 1911 முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி, 1924-27 முதல் மாபெரும் ஜனநாயகப் புரட்சி ஆகியவற்றின் விளைவுகளை இவர்கள் வசதியாக ஒதுக்கித்தள்ளி விடுகின்றனர். இதற்கு வசதியாக மாவோவின் ஆரம்பகால மேற்கோள்களைக் கேடாகப் பயன்படுத்துகின்றனர்.

1924 இல் குவாங்துங்கில் துவங்கிய முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி முதலில் மத்திய சீன யுத்தப் பிரபுக்களையும்; பின்னர் கீழ்த்திசை யுத்தப் பிரபுக்களையும் வீழ்த்தியது. அதன் பிறகு வடதிசைப் படையெடுப்பு பல வெற்றிகளை குவித்து வடக்கிலிருந்த யுத்த பிரபுத்துவ கும்பல்களை வீழ்த்தியது. ஆனால் புரட்சியின் தலைமையை தரகு வர்க்கமும் நிலப்பிரபுத்துவ வர்க்கமும் கைப்பற்றிக் கொண்டு அதற்குத்துரோகமிழைத்து எதிர்ப்புரட்சி பாதையில்திருப்பிவிட்டனர். 1927 எதிர்ப்புரட்சிக் குடைக்கவிழ்ப்பிற்குப்பிறகுசீனத்தைக்கட்டுப்படுத்துவதற்கானஏகாதிபத்தியங்களுக்கிடையிலான மோதல் 1927–30 ஆகிய மூன்று ஆண்டுகளில்ஆறு பெரும் உள்நாட்டுப் போர்களைக் கட்டவிழ்த்து விட்டதுஒருபுறம சியாங்கே ஷேக் தலைமையிலான பிற்போக்குக்கும்பலுக்கும் பிற யுத்தப் பிரபுக்களுக்கும் இடையிலான இந்த நாடு முழுவதும் நடந்த போர்களைப் பற்றியும் அவற்றின் விளைவு

களைப் பற்றியும் பின்வருமாறு சீன வரலாற்று ஆசிரியர் ஹோ-கான்-சி சித்தரிக்கிறார்.

''புதிய கோமிண்டாங் யுத்தப் பிரபுக்களின் முதல் மூன்றாண்டுகளில் நவ சீன வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாதவாறு நாட்டின் மிகப் பெரும் பகுதிகளில்யுத்தங்கள்மூண்டெழுந்தன. இந்த யுத்தங்கள் ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையிலான முரண்பாடுகளில் பிரபலித்தன. சியாங் கே ஷேக் அவனுக்கிருந்த இராணுவ வலிமை மற்றும் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளின் ஆதரவு காரணமாக இந்த யுத்தங்களில் இறுதியில் வெற்றி பெற்றான்'' (ஹோ-கான்-சி, நவசீனப்புரட்சி வரலாறு, பக்,89) அதன் பிறகு ஏகாதியபத்திவாதிகள், தரகு முதலாளிகள் மற்றுப் பிரபுக்களின் பொது ஏஜெண்டாக விளங்கிய சியாங் கே ஷேக் கும்பலின் நாடு தழுவிய ஆட்சி பற்றி பின்வருமாறு எழுதுகிறார்.

''அது (புதிய கோமிண்டாங் யுத்தப் பிரபுக்களின் ஆட்சி) சியாங்சு மற்றும் செக்கியாங்கிலுள்ள வங்கித் தொழில் தரகர்களைக் கருவாகக் கொண்ட தரகர்கள், அடாவடிக் கும்பல்கள் யுத்தப் பிரபுகள் மற்றும் கட்சிப் பிரமுகர்கள் அடங்கிய ஒரு அரசியல் அமைப்பு; அது இராணுவப் பட்டாளம் மற்றும் ரகசிய போலீசின் ஒரு பயங்கர வாத ஆட்சியை நாடு முழுவதும் மக்கள் மீது திணித்தது. புதிய யுத்தப் பிரபுக்களின் ஆட்சி ஒரு ஐக்கிய முன்னணி அமைப்பாக இருந்த கோமிண்டாங்கை பெரு முதலாளிகளின் ஒரு பாசிச அமைப்பாக மாற்றியது. அவர்கள் தமது எதிர்ப் புரட்சி நடவடிக்கைகளை மூடி மறைக்க புரட்சிகரப்பதாகையைப் பயன்படுத்தினர். மக்கள் மீது மோசடி செய்தனர். எனவே அரசியல் பித்தலாட்டத்துடன் கூடிய பயங்கர வாதமே சியாங் கே ஷேக் ஆட்சியின் குணாம்சம்......ஏகாதிபத்திய வாதிகள், நிலப்பிரபுக்கள், அதிகார வர்க்க தரகர்கள் மற்றும் கோமிண்டாங்கின் மைதசாரி பிரிவு ஆகியோர் ஒரு எதிர்ப்புரட்சி அணியாக அமைந்தனர். இவர்களது பலம் புரட்சியினுடையதை விட மேலாங்கியது. எனவே புரட்சி அலை ஓய்ந்தது'' (மேற்படி நூல், பக். 89) நாடு தழுவிய ஆட்சியதிகாரத்தை சியாங் கே ஷேக் கும்பல் பெற்றிருந்தது என்ற இந்த உண்மை அரைக்காலனி பற்றிய திரிபுவாதிகள் அனைவரின் வரையறுப்புகளை பொய்ப்பிக்கிறது. இத்துடன் வணிகத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மட்டுமல்ல வங்கித தொழில் தரகர்கள், அதிகார வர்க்க தரகர்கள் என்றும் கூட சீனப் பெருமுதலாளிகள் தரகுத் தன்மைகளைப் பெற்றிருந்தனர்.

1940இல் மாவோ எழுதினார்: ''சக்கர வர்த்திகளினதும் அரச உயர் குடியினதும் எதேச்சதிகார ஆட்சி தூக்கியெறியப்பட்டது; அதனிடத்தில் முதலில் நிலப்பிரபுத்துவ வர்க்கத்தின் யுத்த பிரபு அதிகார வர்க்க ஆட்சி எழுந்தது: பிறகு நிலப்பிரபு மற்றும் பெருமுதலாளி வர்க்க கூட்டு சர்வாதிகாரம் எழுந்தது. ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் ஜப்பானிய ஏகாதிபத்தியம் மற்

தும் அதன் பொம்மைகளின் ஆட்சி நடக்கிறது. [மாவோ தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள், தொகுதி II பக்கம் — 313)

இதன் பொருள் என்ன? ஜப்பானிய ஏகாதிபத்தியம் ஆக்கிரமித்திருந்த பகுதிகள் மற்றும் விடுதலைப் பிரதேசங்கள் தவிர இதர பகுதிகள் பெரு முதலாளி வர்க்கத்தின் பிற்போக்கு அரசியல் பிரதிநிதியாகிய கோமிண்டாங் ஒரு கட்சி இராணுவ பாசிச சர்வாதிகாரத்தின்கீழ் இருந்தன. எனவேதான் இந்தக் காலகட்டத்தின (1931-1945) சீனத்தைமட்டும் காலனிய,அரைக்காலனிய மற்றும் அரை நிலப்பிரபுத்துவ நாடு என்றார் மாவோ. கோமிண்டாங் ஒரு கட்சி பாசிசராணுவ சர்வாதிகாரம் நாடு தழுவியஆட்சி நிறுவிய பின் யுத்த பிரபுக்கள் மாநிலங்களின் கவர்னர்களாகவும் ஏகாதிபத்தியங்கள் அதற்கு முன்பு ஆக்கிரமித்திருந்த பகுதிகள் வாடகை பிரதேசங்களாகவும் மாற்றம் ஏற்பட்டது.பிரதேசஆக்கிரமிப்பு மற்றும் உள்ளூர்யுத்தப்பிரபுக்களின்ஆட்சிஇவ்வாறுமாற்றப்பட்டபிறகும் சீனம் அரைக்காலனியாகவே கணிக்கப்பட்டது. பிரதேச ஆக்கிரமிப்பும் இராணுவத் தலையீடும்ஏற்பட்டபோது சீனம்காலனிய. அரைக்காலனிய, அரைநிலப்பிரபுத்துவநாடாகக் கணிக்கப்பட்டது.சீனம் பற்றிய இந்தக் கணிப்பிலான மாறுதலே கூறுகிறது அரைக்காலனியத்தன்மையைத் தீர்மானிப்பது பிரதேச ஆக்கிரமிப்பும் இராணுவத்தலையீடும்அல்ல. அதுமட்டுமல்ல எப்போதும் ஏகாதிபத்தியங்கள் இம்முறைகளுக்கு மாறாக மறைமுக தலையீடுகளையும் நடத்தி வந்துள்ளன.

''முதலாளித்துவ நாடுகளில் புரட்சிகர இயக்கங்கள் பலமாக உள்ள இப்போதைய சூழ்நிலைகளில் அந்நியப் படைகள் நேரடியாக ஆக்கிரமிப்பில் இறங்குவது கடும்எதிர்ப்புகளையும் மோதல்களையும் தோற்றுவிக்கக் கூடும் என்பதால், தலையீடானது மிகவும் நெளிவான மிக கபடமான வடிவமுறைகளை எடுக்கிறது. உள்நாட்டு யுத்தத்தை தோற்றுவிப்பது, புரட்சிக்கு எதிராக எதிர்புரட்சி சக்திகளுக்கு நிதி உதவி அளிப்பது, சீனப் புரட்சிக்கு எதிராக தமது சீன ஏஜெண்டுகளுக்கு தார்மீக மற்றும் நிதிஉதவி அளிப்பது ஆகியவற்றின் மூலம் ஒரு சார்பு நாட்டில் தலையிடுவதையே இப்போது நிலவுகின்ற சூழ்நிலைகளில் ஏகாதிபத்தியம் தெரிவு செய்கிறது''(ஸ்டாலின், எதிர் தரப்பு பற்றி, பக். 502)

எனவே அரைக் காலனி என்றாலே நேரடி ராணுவ தலையீடும் பிரதேச ஆக்கிரமிப்பும் எப்போதும் இருக்கும் என்கிற ஓடுகாலிகள் உட்பட எல்லா திரிபுவாதிகளின் வரையறுப்புகள் தவறானவை.

இரண்டாவதாக, உலக யுத்தத்திற்குப் பிந்திய கால கட்டத்தில் அதுவும் நவீன காலனிய கால கட்டத்தில் அரைக்காலனி மற்றும் தரகு முதலாளித்துவம் சாத்தியமில்லை என்கின்றனர். இதுவும் தவறான முடிவேயாகும். 1976 ல் டெங் ஷியோ - பிங் இன் தரகு முதலாளித்துவப் பொருளாதார கருத்துக்களை விமர்சித்த ஒரு பீகிங் ரிவ்யூ கட்டுரை, இந்தக் கால கட்டத்திலும்

கூட — புதிய ஜனநாயப் புரட்சியைத் தொடர்ந்து சோசலிசப் புரட்சியை வெற்றிகரமாக நடத்தி முடித்த பிறகும்கூட — சீனத்தில் அரைக்காலனி மற்றும் தரகு முதலாளித்துவத்தைத் திரும்பவும் நிலை நாட்ட முடியும் என்று கூறுகிறது. "கட்சியிலுள்ள திருந்தவே திருந்தாத முதலாளித்துவ பாதையாளரான டெங் ஷியோ - பிங் பொருளாதார கட்டுமானங் குறித்து பலமுட்டாள் தனமான அறிக்கைகள் விடுத்தார். சுருங்கக் கூறின், அவரது பொருளாதாரக் கருத்துக்கள் சாராம்சத்தில் தரகு முதலாளிகளினுடையவை. சொல்வதானால் உள்நாட்டில், அவர் முதலாளித்துவத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பாட்டாளி வர்க்கத்திடமிருந்து தேசம் முழுவதுமான பொருளாதாரதலைமையைக்கைப் பற்றி சீனத்தின் சோசலிசப் பொருளாதாரத்தை ஓர் அதிகார வர்க்க ஏகபோக முதலாளித்துவப் பொருளாதாரமாக மாற்ற விரும்பினார். வெளி விவகாரங்களில் டெங் - ஷியோ பிங் அடிமைப்பாட்டுத்தத்துவம் மற்றும் தேசிய துரோகம்ஆகியவைகளை கடைபிடித்தார். ஏகாதிபத்தியம் மற்றும் சமூக ஏகாபதித்தியம் ஆகியவைகளின் காலனி அல்லது அரைக் காலனி நாடாக சீனாவை மாற்றுவதற்கு அவர் வீணாக முயற்சித்தார்"...... {பக்6} ......"அவைகள் (டெங்கொள்கைகளின் சாதக அம்சங்கள்) இதைத் தவிர வேறொன்றையும் சொல்லவில்லை! அந்நிய ஏகபோக முதலாளிகள் பணம் மற்றும் எந்திரங்களை 'சப்ளை' செய்வார்கள். தேவையான உழைப்புச் சக்தியை சீனா கொடுக்கும். இதன் மூலம் இவ்வாறு சீன நாட்டின் இயற்கைவளங்களை சூறையாடவும் சீன மக்களின் இரத்தத்தை உறிஞ்சவும் ஏகாதிபத்தியவாதிகளுக்குக் கதவுகள் திறந்துவிடப்படும்,விடுதலைக்கு முன்பு சீன மக்கள் இப்படிப்பட்ட 'சாதகங்களை' வேண்டுமளவு பெற்றிருக்கின்றார்கள், டெங்-ஷியோ பிங்கின் இந்த அடிமையான 'பிரதான கொள்கை' (Major Policy) பின்பற்றப்படுமானால் சீனா சிறுகச் சிறுக ஏகாதிபத்தியத்திற்கும் சமூக ஏகாதிபத்தியத்திற்கும் கச்சாப் பொருட்களை சப்ளை செய்யும் நாடாக சீரழியும்; அவர்களுடைய சரக்குக்கான ஒரு சந்தையாக, அவர்களுடைய மூலதனத்திற்கான ஒரு வடிகாலாக சீனா சீரழியும். அதாவது சோசலிசப் புரட்சியின் பலன்கள் பறிக்கப்படுவதோடு கூட ஜனநாயகப் புரட்சியின் பலன்களும் கூட சூன்யமாக்கப்பட்டு விடும். ஏகாதிபத்தியவாதிகளுக்கு ஒரு தரகனாகவும், பெரும் அந்நிய முதலாளிகளின் நலன்களைப்பிரதிநிதித்துவப்படுத்துபவனாகவும் செயல்பட்ட டெங்-ஷியோ – பிங்கின் மோசமான அம்சங்களை இது முற்றாக வெளிப்படுத்துகிறது" (பக, 9 பீகிங் ரிவ்யூ, ஆகஸ்ட், 27, 1976).இங்கு விவரிக்கப் பட்டிருக்கும்நிலையிலுள்ள இந்தியாவை அரைக்காலனி என்றும் இத்தகைய பொருளாதார உறவுகளை பிரதிநிதித்துவப் படுத்தும் பெரு முதலாளிகளைத் தரகு அதிகார வர்க்க முதலாளிகள் என்பதும் தவறா? இல்லை.

ஆனால் இவை அனைத்தும் இந்தியப் பெரு முதலாளிகளின் பொருளாதார சார்பு நிலையை மட்டுமே குறிக்கின்றன. எனவே அரசியல் ரீதியில் இவர்கள் சுதந்திரமானவர்களேயென்று முதலாளித்துவ அரசியல் சமூகவியலாளர்களின் நிலைப்பாடுகளை

ஒடுகாலிகள் வாந்தியெடுக்கின்றனர். சுதந்திரம் மற்றும் சுய சார்பு என்ற கொள்கையைக் கடைப்பிடிப்பதா இல்லையா என்பது ஒரு பொருளாதாரப் பிரச்சினை மட்டுமல்ல; மாறாக முதலாவதாகவும் முதன்மையானதாகவும் அது ஓர் அரசியல் பிரச்சினையாகும், மற்ற நாடுகளைக் கட்டுப்படுத்தவும் சூறையாடவும் ஏகாதிபத்தியமும் சமூக ஏகாதிபத்தியமும் பயன்படுத்தும் ஒரு முக்கியமான வழிமுறை என்னவென்றால் முன்னேறிய தொழில் நுட்பம், கருவிகள் ஆகியவைகளை ஏகபோகமாக்கிக் கொண்டு, தங்களது பொருளாதார வலிமையைப் பயன்படுத்தி மற்ற நாடுகளின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தி சுரண்டல், ஊடுருவல், விரிவாக்கம் ஆகியவைகளைச் செய்வதாகும், இன்றைய உலகில் ஒரு நாடு பொருளாதார ரீதியில் சுதந்திரமானதாகவும் சுயசார்பாகவும் இல்லையென்றால் அது அரசியல் ரீதியிலும் சுதந்திரமாக இருக்க முடியாது. அல்லது தனது சுதந்திரத்தைஉறுதிப்படுத்த முடியாது;ஒன்று அல்லது மற்றொரு பேச் நிலை வல்லரசின் கட்டுப்பாட்டில் வீழ்ந்துவிடும்'' (மேற்படி பச், 6),

சீனத்தின் பிரதிநிதிகளாக ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றியபோது லி சியாங்கும், டெங்-ஷியோ பிங்கும் இதே கருத்தை வலியுறுத்தியுள்ளனர். ''அரசியல் சுதந்திரமும் பொருளாதாரச் சுதந்திரமும் ஒன்றோடொன்று இணைந்ததும் ஒன்றிலிருந்து மற்றொன்று பிரிக்க முடியாததும் ஆகும்'' (பீகிங் ரிவ்யூ, ஆக. 29 1975).

''இறுதி ஆய்வில் அரசியல் சுதந்திரமும் பொருளாதார சுதந்திரமும் பிரிக்க முடியாதவையாகும். அரசியல் சுதந்திரமின்றி பொருளாதார சுதந்திரத்தை அடையவே முடியாது பொருளாதார சுதந்திரமின்றி ஒரு நாட்டின் சுதந்திரம் என்பது முழுமையற்றது, பாதுகாப்பற்றது'' [பீகிங் ரிவ்யூ, ஏப்ரல் 12, 1974].

இந்த ஆய்வுரைகளுக்கு மிகச் சிறந்ததொரு சான்று மூன்றாம் உலக நாடுகளின் மீது சர்வதேச செலாவணி நிதி நிறுவனமும் உலக வங்கியும் செலுத்தும் ஆதிக்கமாகும், சமீபத்தில் பெருந் தொகையைக் கடனாக இந்தியா பெற்றபொழுது சர்வதேச செலாவணி நிதி நிறுவனம் அதன் மீது விதித்த நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் சொல்லிக் கொள்ளப்படும் சுதந்திரத்தை கேலிக் கூத்தாக்கியது. ஆனால் தேச துரோக முதலாளித்துவ அரசியல் சமூகவியலாளர்களும் ஒடுகாலிகளும் 'கடன் கொடுத்தவன் நிபந்தனைகள் போடுவது சகஜம்தானே' என்று கூறி ஏகாதிபத்தியங்களுக்கு வக்காலத்து வாங்கினர். ஆனால் சர்வதேச செலாவணி நிதி நிறுவனமும் உலக வங்கியும் கடன்கொடுக்கல் வாங்கலில் நிபந்தனைகள் விதிப்பதோடு நிற்கவில்லை. அவை இந்தியாவின் உள்நாட்டு வெளிநாட்டு நிதி மற்றுப் பொருளாதாரக் கொள்கைகளைத் தீர்மானிப்பதோடு மேற்பார்வையிடவும் உரிமை பெற்றுள்ளன, இது மட்டுமின்றி அத்தியாவசியப் பணித்

துறைச்சட்டம், வேலைநிறுத்தத் தடைச் சட்டங்கள், தேசியப் பாதுகாப்புச் சட்டம் போன்ற இந்தியமக்களின் அரசியல் உரிமைகளை ஒடுக்குவதற்கான நிர்ப்பந்தங்களையும் ஏற்படுத்தியுள்ளனர்.

முதலாளித்துவ அரசியல்சமூகவியலாளர்களது வாலைப் பிடித்துக்கொண்டு இந்த ஓடுகலிகள் இன்னும் சில விநோதமான வாதங்களை முன் வைக்கின்றனர். அதாவது வடிவங்களில் சீனத்தின் புரட்சிக்கு முந்தியவற்றை தேடுவது; காண்டன், ஷங்காய், ஹாங்காங், மஞ்சூரியா போன்ற பிராந்தியங்களை பிடித்துக்கொண்டும், யுத்தப் பிரபுக்களின் மூலம் மறைமுகப் போர்களைநடத்தி கொண்டுமிருக்க வேண்டும்; நேரடியாக இராணுவ ரீதியான தலையீடு இருக்க வேண்டும்: இல்லையானால் அரைக் காலனி அல்லவென்கின்றனர். அரைக் காலனி நாடுகளில் நிலவும் அரசியல் மேல் கட்டுமானத்தின் வடிவம்,தன்மையை பொறுத்தே ஏகாதிபத்தியங்கள் தமது தலையீடும் வடிவங்களை மேற்கொள்கின்றன; அவசியமானால் நேரடி இராணுவத் தலையீடும் செய்கின்றன என்பதை இவர்கள் பார்க்க மறுக்கின்றனர்.

மூன்றாம் உலக நாடுகளில் உள்ள நான்கு வகை அரசியல் சார்பு நிலை அரசுகளில் இந்தியா பல்வேறு ஏகாதிபத்தியங்களின் மறைமுக ஆதிக்கத்தின் கீழ் பெயரளவிலான சுதந்திரம் பெற்ற முதலாளித்துவ முறையிலான அரைக்காலனிய அரைநிலப் பிரபுத்துவ அரசமைப்பை பெற்றுள்ளது. இதன் பொருள்,

1. அரைக்காலனிய அரைநிலப்பிரபுத்துவ நாட்டின் சிறப்புத் தன்மைக்கு ஏற்றவகையில் முதலாளித்துவ அரசு எந்திரத்தின் வடிவ முறையைப் பெற்றிருக்கிறது,

2 அரசு அதிகாரம் ஏகாதிபத்தியத்தின் சமூக அடிப்படையான தரகு அதிகார வர்க்க முதலாளிகள் மற்றும் நிலப்பிரபுக்களிடம் இருக்கிறது,

3. அரைக்காலனிய-அரை நிலப்பிரபுத்துவ அரசு நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சி முறையைக் கொண்டுள்ளது.

4, அரைக்காலனிய-அரை நிலப்பிரபுத்துவ பொருளாதார படிவத்தின் மீது தரகு அதிகார வர்க்க முதலாளித்துவ தன்மையுடைய முதலாளித்துவ உற்பத்தி முறை மேலாதிக்கம் பெற்றுள்ளது.

அரசு அதிகாரம் தரகு- அதிகார வர்க்க முதலாளிகள் மற்றும் நிலப்பிரபுக்களின் கைகளில் அதிகார மாற்றம் செய்யப்பட்டதை முதலாளிய அரசியல் மற்றும் சமூக வியாலாளர்களும் எல்லா வண்ணத் திரிபுவாதிகளும் இந்தியா அரசியல் சுதந்திரம் பெற்றுவிட்டதென்று சொல்கின்றனர். ஆனால் ஏகாதிபத்திய

தரகுமுதலாளிகளிடமும் நிலப்பிரபுக்களிடமும் அரசியல் அதிகாரம் வந்தது எவ்வாறு? ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடத்திய தேச விடுதலைப் புரட்சியின் மூலம் அரசியல் அதிகார மாற்றம் நடைபெறவில்லை. மாறாக இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஏகாதிபத்தியங்கள் பலவீனம் அடைந்ததும் இந்தியாவில் மக்களது ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்கள் மேலும் மேலும் வளர்ந்ததும் நடந்தது இந் நிலமைகளைக் கண்டஞ்சிய ஏகாதிபத்தியமும் அதன் அடிவருடிகளும் தங்களது நலன்களைக் காத்து கொள்ள செய்து கொண்ட சதியே 1947 ஆகஸ்ட் 15 மாற்றம். ஒரு ஆயுதம் தாங்கிய போராட்டத்தின் மூலம் காலனியாதிக்கம் எதிர்க்கப்பட்டு தேசிய விடுதலைப் போர் வெல்லப்பட்டு காலனிய அரசு தூக்கி யெறியப்பட்டு அந்த இடத்தில் புதிய சுதந்திரமான அரசு எந்திரம் நிறுவப்படவில்லை. காலனியாதிக்க எதிர்ப்புடன் கூடவே காலனியாதிக்கத்தின் சமூக அடைப்படைகளான தரகு முதலாளிகள் மற்றும் நிலப்பிரபுக்களுக் கெதிராகவும் தேசிய விடுதலை போரானது, பாட்டாளி வர்க்கம் அல்லது தேசிய முதலாளிகள் தலைமையில் பாந்துபட்ட விவசாயிகள் தட்டி யெழுப்பப்பட்டு அரசியல் அதிகாரம் கைப்பற்றப்படவில்லை. காலனி ஆதிக்கவாதிகளது மூலதனம் பறிமுதல் செய்யப்படவில்லை. விவசாய சீர்திருத்தம் செய்யப்படவில்லை. அன்னிய நிதி மூலதனம், மூலதன ஏற்றுமதி, ஏகபோகங்களுக்கு எதிராக போராடி தேசியப் பொருளாதாரம் கட்டியமையக்கப்படவில்லை. அதாவது விவசாய உற்பத்தி பிரதான முக்கியத்துவமும் விவசாய உற்பத்திக்கு தேவையான இடைத்தட்டு ரக உற்பத்திக்கு அடுத்த முக்கியத்துவமும் கனரகத் தொழில்களுக்கு மூன்றாவது முக்கியத்துவமும் என்ற ரீதியில் திட்டமிட்டு பொருளாதாரம் வளர்க்கப்படவில்லை. இந்திய தேசிய பொருளாதாரத்தை வளர்க்க பிற உலக நாடுகளையும் சோசலிச நாடுகளையும் சார்ந்து நிற்பதோடு கச்சாப் பொருட்களை ஏகாதிபத்தியங்கள் கொள்ளையிடாதவாறு பிற மூன்றாம் உலக நாடுகளுடன் சேர்ந்து கார்ட்டல்கள் சிண்டிகேட்டுகள் அமைப்பது நடக்கவில்லை. அதிகார மாற்றத்திற்குப் பின் அமைக்கப்பட்ட இந்திய அரசாங்கம் காமன்வெல்த்திலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள வில்லை. 'இந்தியக் குடியரசின்' அரசியல் சட்டம் ஆங்கிலயே காலனிய ஆதிக்கச் சட்டத்தின் மறு அச்சாக உள்ளது.

ஏகாதிபத்தியத்தின் அரசியல் கட்டுப்பாடுகள் அரசியல் ஆதிக்கம் ஆகியவை இன்றைய உலக நிலைமைகளையும் இந்தியாவில் உள்ள நிலைமைகளையும் பொறுத்து மாறுபட்ட வடிவங்களில் உள்ளன. ஐரோப்பாவில் தொழில் வளர்ச்சியில் முன்னேறிய முதலாளித்துவ நாடுகள் உலகம் முழுவதும் காலனியாதிக்கத்தை நிறுவ முற்பட்ட காலங்களில் நேரடி பாலாத்கார இராணுவ ஆக்கிரமிப்பு, 'பீரங்கிப் படகு தூது' (GUN BOAT-DIPLOMACY), சூழ்ச்சி, ஒரு நாட்டிலுள்ளவர்களையே ஒருவருக்கொருவரை மோதவிடுதல் போன்றவைகள் மூலம் தங்களது அரசியல் ஆதிக்கத்தை நிலைநாட்டின. ஏகாதிபத்திய காலகட்டத்திலும் இந்த மாதிரியான முறைகள் தொடர்ந்தன.

அக்டோபர் புரட்சி அதைத்தொடர்ந்து காலனிகளில்எழுந்த தேச விடுதலை இயக்கங்களின் உத்வேகம், கம்யூனிஸ்டு கட்சிகள் தோன்றுதல், புதிய புதிய அரசியல் சக்திகள் உதயமாதல் ஆகியவை நடந்தன. பின்னர் ஏகாதிபத்தியங்கள் இவ்வாறு தோன்றிய அரசியல் சக்திகளை தங்களுக்கு சேவை செய்யும் நிறுவனங்களாக்க முயன்றன. தாங்களாகவே தங்களது அடிவருடி அரசியல் நிறுவனங்களை உருவாக்கியும் மக்கள் மத்தியில் தங்களது அரசியல் செல்வாக்கை ஏற்படுத்த முயன்றன. குறிப்பிட்ட நாடுகளின் பிரத்யேக நிலைமைகளைப் பொருத்து நாடாளுமன்ற ஜனநாயக அமைப்புகளின் சில வடிவங்களைத் தோற்றுவித்தனர். அவைகளில் ஈடுபட வைப்பதன் மூலம் அரசியல் சக்திகளை ஏகாதிபத்திய ஆதிக்க நிறுவனங்களுள் உள்மயமாக்கவும் அவைகளின் மூலம் தங்களது ஆதிக்கத்தை அரசியல் ரீதியாக நிலைநாட்டவும் முயன்றன. அரசியல் கட்சிகளின் தலைவர்களை விலைக்கு வாங்கி கைப்பாவையாக ஆக்கிக் கொண்டன. இரண்டாம் உலகப்போர் அதைத் தொடர்ந்து உலகம் முழுவதும் ஏற்பட்ட விடுதலைப் போராட்டங்களின் புதிய எழுச்சி ஆகியவைகளின் காரணமாக பல்வேறு வழிகளில் தங்களது ஆதிக்கத்தைக் காப்பாற்றிக் கொள்ள ஏகாதிபத்தியங்கள் முயன்றன. தாங்கள் நேரடியாக இருந்து ஆட்சி நடத்துவது இயலாது என்ற கட்டத்தில் தங்களது அடிவருடிகளிடம் ஆட்சியை ஒப்படைத்துச் சென்றதுதான் இந்தியாவில் நடந்தது.

---

தற்போது இந்தியாவில் நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பு உள்ளது. பல்வேறு ஆளும் வர்க்க, சீர்திருத்தவாத, திரிபுவாதக் கட்சிகளும் அரசியல் அரங்கில் நின்று கொண்டிருக்கின்றன. இந்த மாதிரியான நிலைமைகளில் ஏகாதிபத்தியங்கள் தங்களது அரசியல் ஆதிக்கத்தை பழைய வடிவங்களைக் கொண்டே நிலைநாட்ட வேண்டியதில்லை. குறிப்பாக நமது நாட்டில் சுதந்திரம் என்ற பெயரில் ஏகாதிபத்தியத்தின் கருவியான தரகு – அதிகார வர்க்க முதலாளிகள், நிலப்பிரபுக்களிடம் ஆட்சியை விட்டுச் சென்றது இவ்வாறு செய்வதற்கு மிகவும் ஏதுவாக இருக்கின்றது. அரசியல் கட்சிகளின் தலைவர்களை விலைக்கு வாங்கி அதன் மூலம் அந்தக் கட்சிகளின் சித்தாந்தம், நடைமுறை ஆகியவைகளை தங்களது சுரண்டலையும் ஒடுக்குமுறையையும் நியாயப்படுத்த கையாளுகின்றன. அந்தக் கட்சிகளுக்கு ஏராளமாக லஞ்சங்களையும் தேர்தல் காலங்களில் நிதி உதவிகளையும் கொடுக்கின்றன. அந்தக் கட்சிகளும் ஒரு பக்கம் ஏகாதிபத்தியத்தை எதிர்க்க வேண்டும் என சிற்சில சமயங்களில் வார்த்தையளவில் —அதுவும் ஜனரஞ்சகமான கோஷங்களாக வாக்காளர்களைக் கவருவதற்காக— ஏகாதிபத்திய எதிர்ப்புப்பேசுகின்றன. மறுபுறம் ஏகாதிபத்தியங்களின் பொருளாதாரச் சுரண்டல், அரசியல் ஒடுக்குமுறை ஆகியவைகளை எதிர்த்து இதுவரை எந்த அரசியல் கட்சியும் நாடு தழுவிய இயக்கங்களை எடுத்து நடத்தவேயில்லை. நந்ததேவியில் அமெரிக்கா உளவுகருவி வைத்தது, இந்தோ- சோவியத் இராணுவ ஒப்பந்தம் போன்று வெளிப்

படையாகத் தெரிந்த நடவடிக்கைகளை எதிர்த்துக்கூட இயக்கங்கள் நடத்தப்படவில்லை. இவ்வாறு மக்களை ஆளுவது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்தான் என்று நம்பச் செய்யும் நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பு நிலவும் நமது நாட்டில் ஏகாதிபத்தியங்கள் பழைய 'பீரங்கிப் படகுத் தூது' போன்ற முறைகளைக் கையாளாமல் அரசியல் கட்சிகள் மூலம் தங்களது அரசியல் ஆதிக்கத்தை நிறுவிக் கொள்கின்றன' நேரடியாக ஏகாதிபத்தியமோ அல்லது அவர்களுடைய இராணுவ துருப்புகள் மூலமோ ஆண்டால்தான் அரசியல ஆதிக்கம் இருக்கிறது என்று பார்ப்பது இன்று உலக நிலமைகளில் ஏகாதிபத்தியத்தின் ஒடுக்குமுறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பார்க்கத் தவறுவதாகும்.

1926லேயே ஏகாதிபத்தியங்கள் படைகளை கொண்டு தலையிடுவது மோதல்களையும் எதிர்ப்புகளையும் கொண்டுவரும் என்பதால் ஏகாதிபத்தியங்கள் தலையிடுவது என்பது மறைமுகமான வேறு வழிகளில் இருந்தது. குறிப்பாக தனது சார்பு நாட்டில் ஒரு உள்நாட்டு யுத்தத்தை ஏற்படுத்துவதன் மூலம் புரட்சிக்கு எதிராக எதிர்புரட்சிக்கு தார்மீக நிதிஉதவிகளை தனது அடிவருடிகள் மூலம் கொடுப்பது என்ற முறையில் இருந்தது என ஸ்டாலின் சொல்கிறார். மேலும் அன்றைய சீனத்தில் இராணுவ பலத்தின் மூலம் தங்களது மோதல்களை ஆளும் வர்க்கப் பிரிவுகள் தீர்த்துக் கொள்வது நடைமுறையில் இருந்தது. புரட்சியானது எதிர்ப்புரட்சியை ஆயுதந்தாங்கிப் போராடிக் கொண்டிருந்தது. அப்படிப்பட்ட நிலைமைகளிலேயே அதாவது யுத்தமே பிரதான வடிவமாக இருந்த நிலைமைகளிலேயே கூட ஏகாதிபத்தியங்கள் நேரடியாகத் தலையிடாமல் மறைமுகமாக தங்களது அடிவருடிகள் மூலம் மோதிக் கொண்டன.

ஆனால் இன்றுள்ள உலக, இந்திய நிலைமைகள் முற்றிலும் வேறுபட்டதாகும். ஏகாதிபத்தியங்கள் இராணுவத்தைக் கொண்டு நேரடியாக தலையிடுவது குறிப்பிட்ட நாட்டில் இருந்து மட்டுமல்ல, உலகம் முழுவதிலிருந்தும் எதிர்ப்புகளையும் ஆர்ப்பாட்டங்களையும் சந்திக்க வேண்டியுள்ளது. இந்தியாவில் ஆளும் வர்க்கப் பிரிவுகள் தங்களுக்குள் இராணுவ மோதல்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கவில்லை. அரசியல் ரீதியில் மோதிக் கொள்வதுதான் இருக்கிறது. எதிர்ப்புரட்சியை புரட்சியானது ஆயுதந்தாங்கிப் போராடிக் கொண்டிருக்கவில்லை. இந்த மாதிரியான நிலைமைகள் ஏகாதிபத்தியங்களைநேரடியாக தலையிட வேண்டிய அவசியமில்லாமல் செய்து விடுகின்றன. அல்லது நேரடியாகத் தலையிட அஞ்சுகின்றன. ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கு இடையிலான முரண்பாடு, ஆளும் வர்க்கங்களுக்கு இடையிலான முரண்பாடு கூர்மையடைவதைப் பொருத்து—இதுவும் மக்கள் போராட்ட அலை ஓங்கி வீசுவதைப் பொருத்திருக்கிறது — நேரடியான போட்டியும் தலையீடும் தவிர்க்க முடியாததாகும். மேலும் அன்றைய சீனத்தில் ஒரு

யுத்தப் பிரிவு எவ்வளவு படை வலிமை வைத்திருந்தானோ அவ்வளவுக்கு அவனது அரசியல் ஆதிக்கத்தின் வலிமையும் பரப்பளவும் இருந்தது. எனவே ஏகாதிபத்தியங்கள் தங்களது அரசியல் ஆதிக்கத்தை தாங்களே நேரடியாக நிர்வாக, நீதி ஆட்சி முறைகளில் பங்கேற்பதின் மூலம் அடைய முயன்றன.

ஆனால் இந்தியாவில் ஆளும்வர்க்கங்கள் இன்றைய நிலையில் தங்களது மோதல்கள் நாடாளுமன்றத்தில் சீட்டுக்களைப் பிடிப்பதன் மூலமும், அதிகார வர்க்கம், இராணுவம் இவைகளில் லஞ்சம். ஊழல் மூலம் தங்களது கையாட்களை அமர்த்திக் கொள்வதின் மூலமும் தீர்த்துக் கொள்ள முயற்சிக்கின்றன. அதன் மூலம் அரசியலதிகாரத்தை கட்டுப்படுத்த முயலுகின்றன. இந்த நிலைமைகளில் ஏகாதிபத்தியங்கள் அரசியல் கட்சிகளிலும், அதிகார வர்க்க இராணுவத்திலும் தங்களது ஆட்களை அமர்த்திக் கொள்வதன் மூலம் அரசியலதிகாரத்தை அரசு எந்திரத்தைக் கட்டுப்படுத்துகின்றன. தங்களுக்கு சாதகமான அரசியல் பொருளாதார முடிவுகளை எடுக்கும்படி அவைகளை ஆணையிட முடிகின்றது.

இந்தியப் பெரு முதலாளி வர்க்கம் தரகு அதிகாரமுதலாளித்துவ வர்க்கமே என்று நிருபிக்கும் நமது ஆதாரங்களை மறுப்பதற்காக வேண்டி தாங்களே அறிந்த சில நொண்டிச் சாக்குகளை ஓடுகாலிகள் உட்பட எல்லா திரிபுவாதிகளும் முன்வைக்கின்றனர். இந்திய அரசாங்கம் கொண்டுவந்த அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டம், ஏகபோகத் தடுப்புச் சட்டம் போன்றவற்றைக் காட்டி ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கவும் கூட துணிவுள்ளதாக தரகு அதிகார முதலாளித்துவ வர்க்கத்தைப் புகழ்கின்றனர். ஏற்கனவே நாம் கூறியவாறு சுங்க வரிச் சலுகைகள், சமனற்ற ஒப்பந்தங்களை ரத்து செய்யக் கோருவது உட்பட ஏகாதிபத்தியங்களுடன் முரண்படுவதும், பேரம் பேசுவதும், சலுகைகள் பெறுவதும் தரகு அதிகார முதலாளி வர்க்கத் தன்மையை மறுப்பதில்லை. இந்திய தரகு முதலாளி வர்க்கம் நிலப்பிரபுத்துவ வர்க்க நலன்களுடன் முரண்பட்டு சில நடவடிக்கைகள் எடுப்பதும்கூட இத்தன்மையை மறுப்பதில்லை. நில உச்சவரம்பு, ஜமீன்இனாம் ஒழிப்பு, மொத்த தானிய வியாபாரத்தை அரசு ஏற்பது போன்ற கடந்த கால செயல்களே இதற்குச் சான்று. இருப்பினும் இந்த நடவடிக்கை அனைத்தும் எந்த அளவுக்கு அமுல் நடத்தப்பட்டு நீடிக்கிறது, அல்லது பின்வாங்கப்படுகிறது என்பதுவே மிக முக்கியமானது.

அந்நியச் செலாவணிக் கட்டுபாட்டுச் சட்டமும், ஏகபோகத் தடுப்புச் சட்டமும் கொண்டு வரப்பட்ட சில காலங்களிலேயே அந்நிய நிதி மூலதனத்தின் நிர்ப்பந்தத்தால் படிப்படியாகத் தளர்த்தப்பட்டு இன்று பெயரளவினதாகி விட்டது என்பது ஊரறிந்த உண்மை. இச்சட்டங்கள் விலக்கப்படாவிட்டாலும் இந்திய அரசின் ஏற்றுமதி அடிப்படையிலான உற்பத்திக் கொள்கை இவற்றைச் செல்லாக் காசுகளாக்கி விட்டன. இதை முதலாளித்துவ அரசியல் பொருளாதாரவாதிகளே ஒப்புக் கொள்கின்றனர். அதேபோன்றுதான் 51 : 49என்கிற விகிதத்

தில் இந்திய மற்றும் அந்நிய கம்பெனிகளின் முதலீட்டுப் பங்குகள் இந்திய மயமாக வேண்டும், அந்நியகம்பெனிகளுக்கு இந்தியப் பெயரிட வேண்டும் என்பன போன்ற நடவடிக்கைகள் ஒன்று கைவிடப்பட்டன அல்லது வெறும் மோசடிகளாகிவிட்டன. இந்தியாவில் குடியில்லாத இந்தியர்கள் முதலீடு செய்வது. அவர்களுக்கான குடியிருப்பு மற்றும் தொழிற்பேட்டைகள் நிறுவுவது ஆகிய இந்திய தரகு அதிகார முதலாளித்துவ வர்க்கத்தின் புதிய கொள்கைகள் ஏகாதிபத்தியவாதிகளின் நிதிமூலதன ஆக்கிரமிப்புக்கு இந்தியாவை அகலத்திறந்து விடும் கொல்லைப்புற வழிதான்.

தென் கிழக்காசிய நாடுகளிலும், ஆப்பிரிக்காவிலும், சில மேற்கத்திய நாடுகளிலும் கூட ஏறக்குறைய நூறு கோடி ரூபாய் மூலதன ஏற்றுமதி செய்து இந்தியத் தரகு அதிகார வர்க்க முதலாளிகள் தொழில் தொடங்கியதைச் சுட்டிக்காட்டி முதலாளிய அரசியல் சமூகவியலாளர்களும் ஓடுகாலிகள் உட்பட எல்லா வண்ணத் திரிபுவாதிகளும் இந்தியப் பெரு முதலாளிகளை (தேசிய) ஏகபோக முதலாளிகள்தாம் என்கின்றனர். அவை ஏகாதிபத்தியத் தொழில் கூட்டுடையவை என்கிறபோது குதர்க்கமாகக் கேட்கின்றனர். அமெரிக்க, இங்கிலாந்து மூலதனம் இந்தியாவிற்கு வந்து மீண்டும் அந்நாடுகளுக்கே மூலதனமாகச் செல்கிறதா? இந்தக் குதர்க்கங்கள் மற்றும் நிலைப்பாடுகளின் மூலம் அவர்கள் அனைவரும் ஏகாதிபத்தியம் பற்றிய தமது ஓட்டாண்டித் தனத்தையே வெளிப்படுத்துகின்றனர். முதலாவதாக, தரகு அதிகார வர்க்க முதலாளித்து ·த்துடனான ஏகாதிபத்தியப் பொருளாதார உறவு நிலப்பிரபுததுவ வர்க்கத்துடனானதைப் போன்றதன்று; அது அந்நிய நாடுகளுக்கும் விஸ்தரிக்கும் தன்மையுடையது; குறிப்பாக ஏகாதிபத்தியவாதிகள் பன்னாட்டு பகாசுரக் கம்பெனிகளை நிறுவும் போது இது இயல் பானதே.

இரண்டாவதாக, போட்டி முதலாளித்துவம், சுதந்திரமான சந்தை என்கிற கோட்பாடுகளின் மீதான முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாக வளர்ந்தபோது ஏகபோகம், நிதிமூலதன நிதிக் கொடுங்கோன்மை. நாடுபிடித்தல், போர் ஆகிய தன்மைகளை அடைந்தது. இருப்பினும் ஏகாதிபத்திய வாதிகள் காலனி அரைக் காலனி நாடுகளில் மூலதனமிடவும், கொள்ளையிடவும் முதலாளித்துவ கட்டத்திலான கோட்பாடுகளையே போட்டிக்கும், சுதந்திரத்திற்கும் — நாடுகளின் காப்பீடு கொள்கைகளுக்கு எதிராக முன் வைக்கின்றன. எனினும் ஏகபோகம், நிதிக்கொடுங்கோன்மை, மேலாதிக்கத்தின் கீழ் உண்மையில் போட்டிக்கும் சுதந்திரத்திற்கும் இடமில்லை. ஏகாதிபத்திய வாதிகள் வாதிடுவது ஒன்றாகவும், நடைமுறையில் வேறொன்றாகவும் உள்ளனர் எனவே காலனி, அரைக்காலனி உட்பட பிறநாடுகளின் பெரு முதலாளிகள் தங்கள் தேச எல்லைக்கு வெளியே மூலதனமிடுவதை நேரடியாகத் தடுப்பதில்லை; மூலதன ஏற்றுமதிக்கான சுதந்திரத்தை வழங்குகின்றனர். ஆனால் ஏகபோக, நிதிக் கொடுங்கோன்மை மற்றும் மேலாதிக்கத்தால் முறியடிக்கின்றனர். நடைமுறையில்

இந்தியப் பெருமுதலாளிகள் இதையே சந்தித்து வருகின்றனர். ஆனால் இதை அனுமதிப்பதே 'சுதந்திரம்' என்று வாதிடுவது யாந்திரீக முறையில் அணுகுவதாகும்.

மூன்றாவதாக, காலனி அரைக்காலனி நாடுகளது பெருமுதலாளிகளை மூலதன ஏற்றுமதிக்கு அனுமதிப்பதே சுதந்திரமெனின் அவ்வாறு செய்யும் முதலாளிகளை (தேசிய) ஏகபோக முதலாளிகள் எனின் அரைக்காலனிய சீனப் பெருமுதலாளிகள் தென்கிழக்காசிய நாடுகளுக்கும், காலனிய இந்தியப் பெருமுதலாளிகள் ஆஃபிரிக்காவிற்கும் வெகு காலத்திற்கு முன்பே மூலதன ஏற்றுமதி செய்துள்ளதை எவ்வாறு ஏகாதிபத்திய வாதிகள் அனுமதித்தனர்?

நான்காவதாக, ஏகாதிபத்திய உலகக் கட்டமைவின் கீழ் ஏகாதிபத்திய நாடுகளுக்குள்ளும், அவற்றிற்கும் காலனி, அரைக்காலனி நாடுகளுக்கும் நிதிமூலதன பரியாற்றங்கள் சுழற்சி வடிவிலானதாகவே இருக்கும்; ஒரு வழிப்பாதையானது அல்ல என்பதை லெனின் நிரூபித்து நிலைநாட்டியுள்ளார்.

சாராம்சமாகவும், பிரதானமாகவும் கூறுவதானால் ஏகாதிபத்திய வாதிகள் தமது சொந்த நிதி மூலதன ஏற்றுமதிக்காகவும் சுதந்திரமான சந்தைக்காகவும் காப்பீடு கொள்கைகளை எதிர்க்கையில் பிறநாடுகளின் பெருமுதலாளிகளது நிதிமூலதன ஊடுருவலை ஏகபோகம், நிதிக் கொடுங்கோண்மை, மேலாதிக்கம் இவற்றாலேயே தடுக்க முடியும்: வெறுமனே தடைசெய்வதன் மூலம் அல்ல. இது இந்நாடுகளின் பெருமுதலாளிகளின் சுதந்திரத்தைக் குறிப்பதில்லை. ஏனெனில் ஏகபோகம், நிதிக் கொடுங்கோண்மை, மேலாதிக்கத்தின் கீழுள்ள சுதந்திரம் உண்மையானதல்ல.

இந்தியா தனது வெளிநாட்டுக் கொள்கையில் எந்தவொரு ஏகாதிபத்தியத்துடனும் தன்னை இணைத்துக் கொள்ளவில்லை என்றும் மூன்றாம் உலக நாடுகளோடு சேர்ந்து ஏகாதிபத்திய எதிர்ப்புக்காக கோஷ்டி சேரா நாடுகளில் தீவிர உறுப்பினராக இருப்பதாகவும் அதனால் இந்தியா சுதந்திரம் பெற்றிருக்கவில்லை என்பதை இது பொய்யாக்குகிறது எனவும் சிலர் கூறுகின்றனர். ஆனால் இந்திய ஆளும் வர்க்கங்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கை ஒன்றைக்கூட உள்நாட்டில் மக்களைத் திரட்டி நடத்தியதில்லை என்பதை நாம் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையைத் தீர்மானிக்கின்ற ஆளும் வர்க்கங்கள் உண்மையிலேயே ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொண்டவர்களாக இருப்பார்களேயானால், உள்நாட்டில் ஏகாதிபத்தியங்கள் நடத்திய இந்தியாவின் ஆதிபத்திய உரிமையைப் பாதிக்கின்ற அப்பட்டமான நடவடிக்கைகளை எதிர்த்து சிறுதுரும்பைக்கூட எடுத்துப்போடவில்லை என்பதைப் பல உதாரணங்கள் மூலம் நிரூபிக்கமுடியும். நந்ததேவியில் சீனத்தை உளவு பார்க்க ஒரு கருவி நேரு காலத்தி

லேயே வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அது மிக உயர்ந்த மட்டத்தில் மிக இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. பின்னர் ஜனதா ஆட்சிக் காலத்தில் அது வெளிப்பட்டபோதுகூட, எவ்வித வெகுஜன அமெரிக்க எதிர்ப்பு நடவடிக்கைகூட நடத்தப்பட வில்லை. சி.ஐ.ஏ. (அமெரிக்க உளவு நிறுவனம்) கே. ஜி. பி. (ருசிய உளவு நிறுவனம்)களின் உளவு வேலைகள், இந்தோ-சோவியத் இராணுவ ஒப்பந்தம், தற்போது வடகிழக்கிந்தியாவில் நடக்கும் போராட்டங்களில் வெளிநாட்டவர் தூண்டுதல் இருக்கிறதுஎன்று சொல்லும்போதேஅது எந்த நாடுஎன்றுசொல்லி அம்பலப்படுத்திஇயக்கம்நடத்தாமல் இருப்பது,அமைச்சரவையில்சில சி.ஐ.ஏ உளவாளிகள் இருந்தனர் என்பனபோன்றஉதாரணங்கள் இதையே காட்டுகின்றன. மேலும் தரகு — அதிகாரவர்க்க முதலாளிகள் நிலப்பிரபுக்களின் அரசு, ஏகாதிபத்தியத்துக்கு அடிப்படையில் சேவை செய்கின்றபோதே அது மொத்த உலக நிலைமைகளில் நில நிகழ்ச்சிகளில் பொது ஏகாதிபத்தியஎதிர்ப்பு என்பதில் கலந்துகொள்ள வேண்டிய அவசியம் இருக்கின்றது. இரண்டாம் உலகப் போருக்குப்பின்பு அமெரிக்க ஏகாதிபத்திய தூண்டுதலினாலேயே கோஷ்டி சேரா நாடுகளின் இயக்கம் தோன்றியது. இதில் பலவேறு வகை நாடுகளும்பங்கேற்கின்றன. இந்தியா பரப்பளவிலும் மக்கள் தொகையிலும் பெரிய நாடாக இருப்பதும் தொழிற்துறையில் வளர்ந்து வளம்கொண்ட நாடாக இருப்பதும் மற்ற மூன்றாம் உலக நாடுகளிலேயே இதற்கு தனியொரு இடத்தை அளிக்கிறது. எனவே இந்தமாதிரியான நிலைமைகளில் மற்ற மூன்றாம் உலக நாடுகளிலிருந்து தனிமைப் படாமலிருக்க பொதுவான அபிப்பிராயத்துக்கு இந்திய அரசும் ஒத்துப் போகிறது. இரண்டாவதாக, தரகு—அதிகாரவர்க்க முதலாளிகள் அடிப்படையில் ஏகாதிபத்தியத்தைச் சார்ந்திருக்கும் போதே பல்வேறு ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலுள்ள போட்டியைப் பயன்படுத்திக் கொண்டு சில சலுகைகளைப் பெற எப்பொழுதும் முயற்சிக்கின்றனர்.அதற்காக சில சமயங்களில்ஒரு குறிப்பிட்ட ஏகாதிபத்தியத்தோடு சேர்ந்து கொண்டு மற்றொரு ஏகாதிபத்திய எதிர்ப்பில் ஈடுபடலாம். மூன்றாவதாக, காஷ்மீர், கோவா போன்ற பிரச்சினைகளில் அமெரிக்க, ஆங்கிலேய ஏகாதி பத்தியங்களை எதிர்த்து நின்றது இந்தியாவில் பரந்துபட்ட மக்கள் காட்டுகின்ற உணர்வைப் பிரதிபலிக்கவும், தமது நலனுக்காக இப்பகுதிகளைப் பெறுவதும் சாதகமாக இருப்பதினாலும் தான் ஆளும் வர்க்கங்கள் இவ்வாறு செய்தன.

அடுத்து சமூக ஏகாதிபத்தியத்தின் தோற்றம்; அது பின்னர் மூன்றாம் உலக நாடுகளை அடக்கவும் சுரண்டவும் வந்தபொழுது தனக்குச் சாதகமான ஆளும் வர்க்கப் பிரிவை அது ஏற்படுத்திக் கொண்டது அதைத் தொடர்ந்து இந்திய அரசு எடுக்கும் கொள்கைகளும் அதற்கேற்ப — எந்த ஆளும் வர்க்கப் பிரிவு ஆட்சிக்கு வருகிறதோ அதற்கேற்ப — மாறலாயிற்று. பாசிச இந்திரா கும்பல் அறுபதாம் ஆண்டுகளின் பிற்பகுதியிலிருந்தே தொடர்ந்து சமூக ஏகாதிபத்திய ஆதரவு நிலைப்பாடுகளை எடுத்து வந்துள்ளது. (வங்கதேசப் போர், 1971 இந்தோ —

சோவியத் ஒப்பந்தம், ஆப்கான், கம்பூச்சியா விவகாரங்களில் சோவியத் ஆதரவு இன்னும் பிற) அதேபோன்று ஜனதா ஆட்சிக் காலத்தில் (அணுசக்திக் கொள்கையில் அமெரிக்க ஆதரவு, இஸ்ரேலுடன் இரகசிய உறவு, சீமென் கம்பெனியுடன் ஒப்பந்தம் இன்னும் பிற) அமெரிக்க ஆதரவு நிலைப்பாடுகளை தொடர்ந்து எடுத்துவந்துள்ளது. இராணுவத் தளவாடங்களை வாங்குவதில் கூட ஜனதா ஆட்சி இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்சுடன் ஒப்பந்தம் செய்து கொண்டது. ஆனால் இந்திரா கும்பல் திரும்ப ஆட்சிக்கு வந்ததும் பல ஆயிரம் கோடிக்கு ருசிய சமூக ஏகாதிபத்தியத்துடன் ஒப்பந்தம் செய்துகொண்டது. அமெரிக்க ஆதரவு ஜனதா ஆட்சியில் இருக்கும் வரை கம்பூச்சிய ஹெங்சாமரின் ஆட்சியை அங்கீகரிக்காதது, அதையடுத்து, ரசிய ஆதரவு இந்திரா கும்பல் வந்தவுடன் அங்கீகரித்தது போன்ற நடவடிக்கைகள் ஆளும் வர்க்கம் பிளவுபட்டதை பிரதிபலித்தன. எனினும் ஒரு விஷயத்தை இங்கு நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஆளும் வர்க்கத்தின் இருபிரிவுகளுமே சீன எதிர்ப்பில் ஒன்றுக்கொன்று விட்டுக் கொடுக்காமல் நிற்கின்றன. சீனத்துடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வது ஆளும் வர்க்கங்களுக்கு மிகப் பெரிய சாதகமாக (வியாபாரம் முதலியன) இருப்பினும் தங்களது எஜமானர்களின் விருப்பங்களுக்கு மாறாக அவர்கள் செயல்பட விரும்பவில்லை. அதனால் ஒரு பக்கம் நல்லுறவை விரும்புகிறோம் என வாய்கிழியப் பேசிக்கொண்டே இன்னொருபக்கம் வறட்டுத்தனமாக கட்டளையிடும் தோரணையில் நடந்துகொள்வதும் இந்திய அரசின் வாடிக்கையாக இருக்கிறது. சர்வதேசிய ரீதியில் இன்று அமெரிக்காவானது, ரசிய எதிர்ப்புப் பின்னணியில் சீனத்தோடு ஒன்றுசேர முயன்றாலும், இங்கேயுள்ள அதன் அடிவருடிப் பிரிவுகள் நீண்டகாலம் சீன எதிர்ப்புப் பிரச்சாரம் செய்துவந்ததால் இக்கட்டான நிலையில் இருக்கின்றன. அடுத்து, இரண்டு மேல்நிலை வல்லரசுகளுக்கு இடையிலான போட்டி இந்தியாவில் இன்னும் கூர்மையான வடிவத்தை எட்டவில்லை. இதனால் இந்திய ஆளும் வர்க்கத்தில் உள்ள இரண்டு பிரிவுகளும் தெள்ளத் தெளிவாக, திட்டவட்டமாக எல்லை வகுத்துக் கொண்டு பிரியவுமில்லை; ஆயுத மோதலளவு போராட்டமும் உக்கிரமடையவில்லை. மேலும் இரண்டு மேல்நிலை வல்லரசுகளுமே அடுத்த ஒன்றின் ஆதிக்கத்தை இந்தியாவிலிருந்து உடனடியாக விலக்குமளவுக்கு பலமும் ஆதிக்கமும் பெற்றிருக்கவில்லை. எனவே இரண்டினது பொருளாதார சுரண்டலும் அரசியல் ஆதிக்கமும் ஏறத்தாழ — சமூக ஏகாதிபத்தியத்தின் கைமேலோங்கியிருக்கிறது — சமமாக இருக்கின்றது. இந்த மாதிரியான நிலைமைகளில் ஆளும் வர்க்கத்தின் எந்தப் பிரிவு ஆட்சிக்கு வந்தாலும், அது தனது எஜமானனுக்கு விசுவாசமாக இருக்கும் போதே அடுத்த வல்லரசை தீர்மானகரமாக எதிர்ப்பதுமில்லை. மேலும் அமெரிக்க வல்லரசு உலகம் முழுவதிலும் அம்பலப்பட்டுப் போயிருப்பதைப் போலவே இந்தியாவிலும் அம்பலப்பட்டு நிற்கிறது. அமெரிக்க ஆதரவு ஆளும் வர்க்கப் பிரிவு நீண்டகாலம் சீன எதிர்ப்பு, பாகிஸ்தான் எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தி வந்திருக்கின்றது. இது இன்று சோவியத் எதிர்ப்பில் உறுதியாக

நிற்க அமெரிக்க ஆதரவு சக்திகளுக்கு இக்கட்டான நிலையை ஏற்படுத்தியுள்ளது. எனவே அவர்கள் தீர்மானகரமான சோவியத் எதிர்ப்பில் (ஆப்கான், கம்பூச்சிய பிரச்சினைகளில்) நிற்காமல் இருக்கின்றனர். இது ஒரு தோற்றத்தில் ஆளும் வர்க்கம் பிளவே இல்லாமல் ஒரு நிலைப்பாடு எடுப்பதாகத் தோன்றலாம். அமெரிக்க ஆதரவு, ரசிய ஆதரவு என்று பார்ப்பது தவறு என்று தோன்றலாம். ஆனால் வரலாற்றுப் பின்னணியோடு இதைப் பார்த்தால் உண்மை புரியும்.

இவையனைத்தும் பின்வரும் உண்மைகளையேதெளிவாக்குகின்றன. அவை:

— இந்தியா பல்வேறு ஏகாதிபத்தியங்களின் பொருளாதார ரீதியான வேட்டைக் காடாக மட்டுமின்றி, அரசியல் ஆதிக்கத்துக்கும் உள்ளான பெயரளவிலான சுதந்திரம் பெற்ற ஓர் அரைக்காலனிய அரைநிலப்பிரபுத்துவ நாடு.

— இந்திய ஆளும் வர்க்க பெரு முதலாளிகள் தரகு— அதிகார வர்க்க முதலாளிகளாவர்.

— இந்தியா தரகு — அதிகார வர்க்கத்தன்மையுடைய முதலாளித்துவ உற்பத்தி முறையை மேலாதிக்கத்திலும் நிலப் பிரபுத்துவ உற்பத்தி முறையை மிகுநிலையிலும் கொண்டுள்ள நாடு.

இரண்டு வகையில் தரகு — அதிகார வர்க்கத்தன்மையுடைய முதலாளித்துவ உற்பத்திமுறை இந்தியாவின் அரைக்காலனிய அரை நிலப்பிரபுத்துவப் படிவத்தின் மீது மேலாதிக்கம் பெற்றுள்ளது. ஒன்று, தரகு அதிகார வர்க்கத்தன்மையுடைய முதலாளித்துவ உற்பத்திமுறையின் மறுஉற்பத்திக்கு அரைக்காலனிய அரைநிலப்பிரபுத்துவ அரசு உதவுகிறது. இரண்டு. இந்திய சமுதாயப் படிவத்தில் மிகு நிலையாக உள்ள நிலப்பிரபுத்துவஉற்பத்தி முறையை தரகு — அதிகாரவர்க்க முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்காக ஒரு முனைப்படுத்தப்பட்டிருக்கிறது. அதாவது நிலப் பிரபுத்துவ உற்பத்தி முறையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தேவையான பரிணாம வளர்ச்சி அடிப்படையிலான சீர்திருத்தங்களேகூட இதற்காகவே திசை திருப்பப்பட்டுள்ளது.

இவைஇரண்டுமேஅந்நியஏகாதிபத்தியத்தின்,முதலாளித்துவ உற்பத்தி முறையின் விரிவாக்கப்பட்ட மறுஉற்பத்திக்காக வழி நடத்தப்படுகின்றன. ஏகாதிபத்தியங்களின் பொருளாதாரத்தோடு பிணைக்கப்பட்டிருக்கின்றன. தரகு — அதிகார வர்க்கத்தன்மையுடைய முதலாளித்துவ உற்பத்தி முறை மேலாதிக்கம் பெற்றிருக்கிறது என்பதின் பொருள் தேசிய வருமானத்திலோ இந்திய மக்களின் உழைப்புத்துறைக் கட்டு மானத்திலோ, முதலாளித்துவ உற்பத்தி முறை பிரதானமான, அதிகமான, மிகுநிலை

பெற்றிருக்கிறது என்பதல்ல. அதே போல் தரகு — அதிகார வர்க் கத்தன்மையுடைய முதலாளித்துவ உற்பத்தி முறையின் கீழ் இந்திய சமுதாயப் படிவம் மிக வேகமாக தொழில்மயமாகி வரு கிறது என்பதுமல்ல. நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையே தேசிய வருமானத்திலும் (40 சதவிகிதத்துக்கும் மேல்), உழைப்புத்துறை கட்டுமானங்களிலும் (70 சதவிகிதத்துக்கும்மேல்) அதிகமானதாக பிரதானமானமாக, மிகுநிலை பெற்றிருக்கிறது. இருப்பினும் மொத்தத்தில், தரகு — அதிகாரவர்க்க முதலாளித்துவத்தின் வளர்ச்சியை நோக்கி மொத்தப் பொருளாதாரத் திட்டமிடுத லும் ஒரு முனைப்படுத்தப்பட்டிருக்கிறது. அதாவது இந்திய பொருளாதாரத்தில் விவசாயமும் ஸ்தாபனப்படுத்தப்படாத நிறு வனங்களுமே தேசிய வருமானத்திலும், உழைப்புத்துறை கட்டு மானங்களிலும் (கூடுதலான மக்கள் வேலை செய்யும் துறை) பொருளாதார ரீதியில் மிகுநிலைபெற்றிருப்பினும் மேலும்மேலும் கூடுதலான முதலீடு தரகு அதிகார வர்க்கத் தன்மையுடைய முத லாளித்துவ உற்பத்தி முறையின் மறுஉற்பத்திக்கே பறித்துக் கொள்ளப்படுகிறது என்ற வகையில்இதுமேலாதிக்கம் பெற்றிருக் கிறது. ஏகாதிபத்திய உலக கட்டமைவில் ஐக்கியமாகி இருப்ப தும், 'உள்மயமாகியிருப்பதும்' அரசியல் அதிகாரத்தில் மேலாண்மை பெற்றிருப்பதும் தரகு அதிகாரவர்க்க முதலாளித் துவத்துக்கு இந்த மேலாதிக்க நிலையைத் தருகின்றன.

ஏகாதிபத்திய உலகப் பொருளாதாரத்தில் ஏற்படும் சிறுமாறு தலும் நெருக்கடியும்கூட உடனடியாகவும் நேரடியாகவும் இந்தி யப்பொருளாதாரத்தைப் பாதிக்குமளவு தரகு — அதிகாரவர்க்க முதலாளித்துவம் ஏகாதிபத்தியத்துடன் பின்னிப் பிணைந்துள் ளது. இவை இரண்டும் எந்த அளவு இந்திய சமுதாய படிவத்தில் வேரூன்றியிருக்கின்றன; அதன் சமுதாயவாழ்வின்மீதுசெல்வாக்கு செலுத்துகின்றன என்பதை அறிய முதலில் இந்திய பொருளா ரத்தில், எந்த வடிவத்தில், எந்த அளவு அந்நிய மூலதனம் பாய் கிறது, ஏகாதிபத்திய ஏகபோகமும், நிதிமூலதனமும் ஆதிக்கம் பெற்றுள்ளது என்பதை ஆய்ந்தறிய வேண்டும்.

1. அந்நிய மூலதன 'உதவி'
2. அந்நியக் கடன்கள், அரசுக்கு
3. அந்நியக் கடன்கள், தனி நபர்களுக்கு
4. அந்நிய மூலதனம், கூட்டு மற்றும் தரகு நிறுவனங்களுக்கு
5. அந்நிய மூலதனம், அந்நிய வங்கிகளில்
6. அந்நியக் கடன்கள், இராணுவத்திற்கு

இவையும் இன்னும் சிலவடிவங்களிலும் இந்தியப்பொருளா தாரத்தில் அந்நிய மூலதனம்பாய்கிறது. நிதிமூலதனம்மட்டுமின்றி தொழில்நுட்பம்உற்பத்திச் சாதன மூல பொருட்கள், இராணுவ தளவாடங்கள் உயர்ரக அரிதான கச்சாப்பொருட்கள், அந்நியச்

சந்தை மற்றும் இன்னும் பிறவற்றிக்காக மேலும் மேலும் ஏகாதிபத்தியத்தை சார்ந்து நிற்கும் நிலையில் தரகு அதிகார வர்க்க முதலாளித்துளம் உள்ளது. இதன் விளைவாக நமது நாட்டின் சமுதாயம் பொருளாதாரம், இராணுவம் மற்றும்எல்லாத்துறைகளிலும் ஏகாதிபத்தியவாதிகள் ஆதிக்கம் செலுத்துகின்றனர்.

ஏகாதிபத்தியத்தின் தனிச்சிறப்பான குணாம்சம் பரிவர்த்தனைப் பண்ட ஏற்றுமதியிலிருந்து அதிமுக்கியத்துவம் வாய்ந்த முறையில் மூலதன ஏற்றும்தியாக மாறியதாகும். அரசுக்கும் தனியாருக்கும் மூலதன 'உதவி' என்கிற பெயரில் கடனாகவும் மானியமாகவும் மூலதன ஏற்றுமதியைப் பல்வேறு வடிவங்களில் சாதித்துக் கொள்வது ஏகாதிபத்தியங்களின் மிக முககியமான முறைகளில் ஒன்றாகும். ஏகாதிபத்தியவாதிகளின் வார்த்தைகளிலேயே அவர்களது 'உதவி'யின் நோக்கம் பற்றி பின்வருமாறு கூறுகின்றனர். "அமெரிக்கா செல்வாக்குள்ள அந்தஸ்தை நிலை நாட்டிக் காப்பதற்கும், உலகைச் சுற்றிலும் கட்டுப்படுத்தவும் கம்யூனிச முகாமில் வீழ்ந்து விடாமல் அல்லது மாறிச்செல்லாமல் கணிசமான அளவு நாடுகளைக் காக்கவுமான ஒரு முறையாக அந்நிய 'உதவி' இருக்கிறது" (கென்னடி) "பொருளாதார உதவியின் அதிமுக்கியமான காரணங்கள் என்னவென்றால் தேசங்கள் வளர்ந்து முன்னேறத் தீர்மானித்து விட்டன. அதன் தன் வளர்ச்சிப் போக்கில் பங்கேற்பதன்மூலம் மட்டுமேஅவற்றின் வளர்ச்சியை நமது நலன்களுக்கு நன்கு சேவை செய்யும் வழியில் செலுத்துவதற்கான ஒரு வாய்ப்பை நாம் பெற முடியும்" (அந்நிய உதவிக்கான அமெரிக்க உயர் அதிகாரி பிட் ஜெரால்டு) "நமது அந்நிய உதவித் திட்டங்கள் அமெரிக்கதொழிலுக்கு ஒரு விசேஷமான நன்மையைத் தருகிறது, மூன்று முக்கிய பெரும் பலன்கள்: 1 அமெரிக்க பொருட்களுக்குப், சர்வீஸ்களுக்கும் கணிசமான அளவும் உடனடியாகவும் சந்தையை அந்நிய உதவி பெற்றுத்தருகிறது. 2. அமெரிக்க கம்பெனிகளுக்கு புதிய வெளிநாட்டுச் சந்தைகள் வளர்ச்சிக்கு அந்நிய உதவி தூண்டுகிறது 3. அமெரிக்க நிறுவனங்கள் செழித்து வளருவதற்கான ஒரு அமைப்பை நோக்கி தேசியப் பொருளாதாரங்களை அந்நிய உதவி ஒரு முனைப்படுத்துகிறது" (பிளாக் என்ற அமெரிக்க அதிகாரி).இவ்வாறு ஏகாதிபத்திவாதிகள் ஏகபோகங்களைமூலதன ஏற்றுமதிக்குஊக்குவித்து முதலிட்டிற்குப்கொள்ளை லாபத்திற்கும்உத்திரவாதமளிப்பதானது எதிர்காலத்தில்நேரடி அரசியல்இராணுவத் தலையீடுகளையும்உள்ளடக்கியிருக்கின்றன என்பதைமறுக்கமுடியாது. அந்நிய 'உதவிகள்', கடன்கள், மானியங்கள் 1. குறிப்பிட்ட திட்டங்கள் 2. திட்டங்கள் அல்லாத காரணங்களுக்காக 3 கடன்களை திருப்பி அடைப்பதற்காக என்று பிரிக்கப்படுவதன் மூலம் பொருளாதாரத்தையே ஏகாதிபத்தியம் தன் தேவைக்காக ஒரு முனைப்படுத்த முடிகிறது. எந்தத் துறையில் எந்த அளவு முதலீடு செய்து வளர்ப்பது என்பதையும் அந்நிய உதவியாளர்களே தீர்மானிக்கின்றனர். தனியார் துறைகளுக்கான கடன்களைத் தவிர பெரும்பாலும் அரசுத்துறைக்கடன்கள், மானியங்கள் பெரும்பாலும் போக்குவரத்து மின்சாரம், செய்தித்

தொடர்பு போன்ற அடித்தள கட்டுமானங்களின் வளர்ச்சிக்கு எதிர்கால அந்நிய மூலதன முதலீட்டிற்கு வசதியான சூழ்நிலைகளை ஏற்படுத்தவே பயன்படுத்தப்படுகின்றன அந்நிய 'உதவி' பொதுத்துறை மற்றும் அரசாங்கத்தின் வளர்ச்சித்திட்டங்களில் மட்டுமல்லாது தனியார் துறைகளிலும் நேரடியாகவும், நிதிநிறுவனங்கள் மூலமாகவும் முதலீடு செய்யப்பட்டுள்ளன இவை அனைத்தும் இந்திய அரசு திருப்பி செலுத்தும் உத்திரவாதமளிக்கும் வேறு வகையிலான அந்நிய முதலீடுகளேயாகும். கடன்கள் மானியங்கள் வடிவிலான, 'உதவி, என்னும் நிதிமூலதன ஏற்றுமதி அதிகபட்ச கொள்ளைக்கான ஒரு முக்கியமான இயங்கு முறையாகும் சர்வதேசக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதில் சிரமங்களை ஆழமாக்குகிறது. அந்நிய பொருட்களுக்கான, குறிப்பாக மூலதனப் பொருட்களுக்கான சந்தையை உருவாக்குவதுடன்இந்திய உற்பத்தியின்மீது மேலாதிக்கம் செலுத்தவும், கட்டுப்படுத்தவும், அதன் மூலம் இந்திய பொருளாதாரத்தைக் கட்டுப்படுந்தவும் மூலதன ஏற்றுமதிக்கு வழி வகுக்கிறது.அரசியல் பொருளாதாரத் தீர்மானங்கள் எடுப்பதில் ஏகாதிபத்தியங்களுக்கு மேலாதிக்கம் மற்றும் செல்வாக்கைத் தருகின்கிறது. ஏனெனில் இந்திய ஆளும் வர்க்கங்கள் மேலும் மேலும் அந்நய மூலதனத்தைச் சார்ந்து நிற்கின்றன. ஏகாதிபத்திய வல்லரசுகளின் 'உதவி'யின் அளவு பூதாகரமாகவே வளர்ந்திருக்கின்றது. 1950—51 ல் ரு 40-54 கோடியாக இருந்த அந்நியக் கடன்கள், மானியங்கள் போன்றவை 1977-78 ல் ரு 17 964 கோடியாக உயர்ந்தது. ஏற்கனவே நிறுவப்பட்ட தொழிற்சாலைகளை நடத்தவும்,அரசு வரவு செலவு திட்டத்தின் பற்றாக்குறையை ஈடுகட்டவும் அந்நிய உதவியைச் சார்ந்து நிற்க வேண்டியுள்ளது.

ஏகாதிபத்தியங்கள் மூலதன ஏற்றுமதியை உதவியின் வடிவத்தில் செய்யும் பொழுது சந்தைக்கான நிரந்தரமான உத்திரவாதமும் தமது பொருளாதார நலன்களையுமே முன்நிறுத்துகின்றன. தொடர்ந்து சார்ந்து நிற்கும் நாடுகளுக்கு உதவுகின்றன. பெரும்பாலும் சமூக ஏகாதிபத்தியமும் அதன் தொங்குசதை நாடுகளும் பொதுத்துறைத் தொழில்களுக்கான முதலீட் டிற்கு முன்னுரிமை தரும் அதே வேளையில் தனியார் துறையை ஊக்குவிப்பதாகவே உள்ளன. மேற்கத்திய ஏகாதிபத்தியங்களின் உதவி தனியார் துறையில் தொழில்களுக்கு எந்தெந்த வகைகளில் எந்த அளவிற்கு என்று அறிய முடியாத வகையில் திட்டங்களற்ற வகை, பொதுக் காரணங்களுக்கு, ஆலைப் பண்ட கடன்கள் என்று முதலீடு செய்யப்படுகின்றன.அவை தனியார் மற்றும் அரசு ஏகபோகங்களை வளர்க்கின்றன. தனியார் கூட்டுப்பங்கு கம்பெனிகளில் பகாசுரக்கம்பெனிகள் மட்டுமே அந்நியக்கடன்களில் ஆலை மூலதனம் வீட்டுக்கானதில் 85% க் மேல் விழுங்கிவிடுகின்றன என்பதுஅரசும் தரகு முதலாளிகளும் அந்நிய நிதிமூலத்தனத்தின் கைக்கூலியாக இருப்பதையும் அவற்றில்டாடா(34-3%)பிர்லா(19.5%)ஆகிய இருவரும் கப்பாக தரகு முதலாளிகள் இஅந்நிய மூலதனத்தைச் சார்ந்து நிற்பதையும் காட்டுகின்றன. இதுமட்டுமன்றி இக்கம்பெனிகளின் அந்நிய நேரடி முதலீடு, பங்கு கடன்

கள், டெபாசிட்டுகள், பத்திரங்கள்மூலம் நிதிமூலதனத்தைச்சார்ந்துள்ளனர். அந்நிய மூலதனம் இந்தியத் தொழிலின் வளர்ச்சியை பல்வேறு வடிவங்களில் கட்டுப்படுத்துகின்றது. நேரடியாகத் தனியார் துறைக்கு கடனளிப்பதோடு இந்தியாவின் நிதி நிறுவனங்களுக்கு 'உதவியாக' கடன்கள்வழங்கும் கொள்கையையும் ஏகாதிபத்தியங்கள் பின்பற்றுகின்றன. ஆலைகளின் நிதிநிறுவனங்களின் மீது இந்த வகையில் ஆதிக்கம் செலுத்தவும் இந்தியத் தொழில்களில் எளிதில் வேகமாக ஊடுருவவும் செய்கின்றனர். முதலாளித்துவக் கூட்டுப் பிணைப்புகளும் நிதிநிறுவனங்களும் எக்கச்சக்கமான மூலதனத்தைக் குவிப்பதின் மூலம் உற்பத்தியைக் கட்டுப்படுத்துவது, சந்தை மோசடி, வர்த்தக சூதாட்டங்கள் போன்றவை மூலம் கொள்ளை லாபமடிக்கின்றன. முதலாளித்துவத்தின் பூதாகரமான சக்திகளும், அரசின் பூதாகரமான சக்திகளும் ஒரே இயங்குமுறை வடிவபெடுத்து மிகவும் வெற்றிகரமாகவும் அந்நிய ஏகபோகங்கள் கொள்ளையிடுகின்றன. அதாவது பூதாகரமான சக்திகளாகிய அந்நிய ஏகாபதித்திய நிதி மூலதனங்கள் மூலம் ஒரே இயங்குமுறையாக இணைந்து அந்நிய ஏகபோகக் கம்பெனிகளின் அடிப்படையாக இருந்துஇந்தியத் தரகு முதலாளிகளுடன் கூட்டுச் சேர்ந்து இந்திய தொழில் அரங்கத்தில் ஊடுருவி மேலாதிக்கம் செலுத்த முடிகிறது.,சுருங்கக் கூறின், ஐ சி எப் ஐ (I C F I) ஐ சி ஐ சி ஐ (I C I C I) ஐ டி பி ஐ (I D B I) எல்ஐ சி (L I C) மற்றும் பிற மாநில அளவிலான நிதி நிறுவனங்கள் இந்தியாவிலுள்ள சொற்ப மூலதனத்தையும் திரட்டி கூட்டுப்பங்கு துறைகளின் மீது அந்நிய மூலதனம் ஆதிக்கம் செலுத்த உதவுகின்றன. நிதிநிறுவனங்களின் வட்டிக்கு விடும் செயல்களுக்கு நிதியளிப்பதன் மூலம் அந்நிய நிதிமூலதனம் இந்நிறுவனங்களின் மீது சவாரி செய்கின்றது. இவ்வாறு தனியார் துறைக்கு நேரடியாக கடன் அளிப்பது, இந்திய நிதி நிறுவனங்கள் மூலம் அல்லது நிதி மூலதனமிட்ட தனியார் துறைக்கும் கடன் அளிப்பது என இருவகையிலும் ஏகாதிபத்தியங்கள் இந்தியத் தொழில் வளர்ச்சியின் மீது உடும்பு பிடி போட்டு உறுதிப்படுத்துகிறது.

இதுமட்டுமின்றி மேற்கண்ட இரு வழிகளான மேலாண்மை காரணமாக ஏற்கனவே நிறுவப்பட்ட ஆலைகள் செயல்படவும் கூட ஆண்டுக்கு ஆண்டு பெலும் கூடுதலாக பொதுத்தேவைகள் மற்றும் திட்டங்கள் அற்ற கடன்கள் என்ற வகையில் புதிதாக அந்நிய மூலதனத்தைப் பெறவும் நிர்ப்பந்திக்கப்படுகின்றன. அதாவது தொழிற்சாலைகளை நிறுவுவதற்கான அந்நிய கூட்டுகளின் அதிகரிப்பு காரணமாகவே தொழில் நுட்ப சேவைகள், மற்றும் கூட்டுமான மூலதனத்திற்கான இறக்குமதிகளுக்கு மட்டுமின்றி உயர்ரகக் கச்சாப் பொருட்களுக்கும், ஆலைகளுக்குத் தேவையான உடனடிப் பொருட்களுக்கும் அந்நியக் கடன்கள் தேவையாக இருக்கின்றன. பொதுவாக இந்தியாவின் அந்நிய செலாவணி நெருக்கடி காரணமாகவும், குறிப்பாக ஏகபோகம் மற்றும் அந்நியக் கூட்டுக் கம்பெனிகள், கிளைகள், துணைக்கம்பெனிகள் என்பதாலும் மிகையான விலைகளுக்குத் தேவையான பொருட்களை ஏகாதிபத்தியங்கள் ஏற்றுமதி செய்வதன் மூலமும்

கொள்ளையிடுகின்றன. பெரும் அந்நியக் கூட்டுத் தொழில் நிறுவனங்கள் எந்த மூலாதாரங்களிலிருந்து இயந்திரப் பாகங்களையும் கச்சாப்பொருட்களையும் இறக்குமதி செய்து கொள்ள வேண்டும். எந்த சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும் என்பவை அந்நியக் கம்பெனிகளால் ஒப்பந்தங்கள் மூலம் கட்டுப்படுத்தப்படுகின்றன. மேலும் அந்நிய நிறுவனங்கள் சர்வதேச அளவும் தன்மையும் உடையவனாக இருப்பதால் இந்திய ஆலைகள் தேவைகளுக்கு வேறானதாக இருப்பதோடு உலக முழுவதும் உள்ள நிறுவனங்களோடு அதன் இந்தியக்கூட்டு நிறுவனங்களை இணைத்தே திட்டமிடுகின்றன, எனவே அந்நிய தொழிலில் ஊடுருவுவது ஒரு தனிப்பட்ட சுயேச்சையான நிறுவனத்தை நிறுவ உதவுவதில்லை. எனவே பெரும்பாலும் இந்திய நிறுவனங்கள் உற்பத்திக்கானவைகளாக மட்டுமின்றி, கச்சாப் பொருட்கள், அரைகுறையாக உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள், சுத்திகரிப்புக்கான பாகங்கள் இப்படி முழுக்க முழுக்க அந்நிய இறக்குமதிகளைச் சார்ந்த தன்மையுடையதாகவும்இருக்கின்றன.எனவேமேலும்மேலும்அதிகமாகஇறக்குமதிகளைசார்ந்து ஏற்பதால் கூடுதலான அந்நிய செலவாணிக்குப் புதிய அந்நிய உதவிகளைச் சார்ந்து நிற்க வேண்டியிருக்கிறது. அந்நியக்கூட்டுக்களும் உற்பத்தித்திறனும் அதிகமாக அதிகமாக இதன் தேவையும் கூடுகிறது. ஒரு முறை கூட்டுகம்பெனிகள் நிறுவப்பட்டால்இறக்குமதிகளைத் தொடர்ந்து நீடிக்கும்படி அந்நிய ஏகபோகங்களும் தரகு முதலாளிகளும் அரசை நிர்ப்பந்திக்கின்றனர்.அந்தக்கூட்டுக் கம்பெனிகள் ஏற்றுமதி மூலம் சம்பாதித்து தேவையான பொருட்களையும், கச்சாப் பொருட்களையும் இறக்குமதி செய்துகொள்ள இயலாதவாறு ஏற்கனவே ஒப்பந்தங்கள்மூலம்முடக்கப்பட்டிருக்கின்றன. அந்நிய ஏகாதிபத்தியங்களின் ஏகபோகங்கள்வேறுதடையாக இருக்கின்றன. "குறைவான ஏற்றுமதி மற்றும் கூடுதலான இறக்குமதி காரணமாக வர்த்தக பலாபல நிலை உச்சபட்சமாக சீர்குலைக்கப்படுகிறது. கூடுதலாகி வரும் வெளிநாடுகளுக்கு செலுத்தும் ராயல்டிகள், தொழில் நுட்பக் கட்டணங்கள் மற்றும் வல்லுனர்களின் சேவை சம்பளம் ஆகியவற்றோடு கடன்களும் வட்டிகளுமாக திருப்பிச் செலுத்த வேண்டிய பெருமளவு தொகையில், செலுத்த வேண்டிய நிலுவை மேலும் மேலும். பயங்கரமாகக் கட்டுப்பாடின்றிச் செல்கிறது. சென்று வருகிறது இயற்கையாகவே இறக்குமதியைத் தொடர்வதற்கு இயல்பான வழிகளில் செலுத்த முடியாத அளவு நமது சர்வதேசிய நிதி நிலை மாறி விட்டதால் ஒரே வழி மேலும் மேலும் பொதுத் தேவைக்கான கடன்களைவாங்குவதுதான்,, டி,அடைப்பு நாகி ரெட்டி. அடகுவைக்கப்பட்டஇந்தியா' பக்கம் 132). எனவே நிரந்தரமாகவே

அந்நிய மூலதனத்தைச் சார்ந்து இருக்கும்படி ஆகிவிட்டது. இந்தியாவின் தொழில், அந்நியத் தொழில் நுட்பம், அந்நிய நிர்வாகத்துடன் மட்டுமின்றி உற்பத்திக்கேகூட அந்நிய இறக்கு மதி மதிகளையும் சார்ந்து நிற்கும்படி பிணைக்கப்பட்டுவிட்டது. ஒப்பந்த முறைகளும் ஏகபோகங்களும் இறக்குமதிகளுக்குக்கூடுதலான விலை பெறுவதோடு, அந்நியச்செலாவணிப்பற்றாக்குறை காலத்தில், அதன் பெரும்பகுதியை அந்நியக் கூட்டுக் கம்பெனி

களே விழுங்குகின்றன. அத்துடன் உற்பத்தித் திறனைப் பரவலாக்குவதும் பல்வேறு வகைகளாக்குவதும் நிலைமையை மேலும் மோசமாக்குகின்றன.

"அந்நியக் கடன்களின் அதிகரிப்பு, இந்தியப் பொருளாதார நெருக்கடி வளர்வதைக் காட்டும் தெட்டத் தெளிவான அறிகுறியாகும். அந்நிய மூலதனம் கடன் மூலதனமாகவோ அல்லது முதலீட்டு மூலதனமாகவோஎவ்வாறுஇருப்பினும், விலை உண்டு. அந்நிய பணத்தாலேயே திருப்பிச்செலுத்த முடியும். அதைக் கூடுதலான ஏற்றுமதி, குறைவானஇறக்குமதி மூலமே செய்ய முடியும். அந்நியக் கடனைத்திருப்பிச் செலுத்த அந்நிய வர்த்தகத்தில் உபரி தேவை.

தேசிய வருமானத்தின் வளர்ச்சி விகிதத்தை விட அந்நியக் கடனின் வளர்ச்சி விகிதம் வேகமானதாக ஒப்பீட்டு வகையில் இருப்பதால், இந்தியப் பொருளாதாரம், இதுவரை பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்த முடியாது என்ற கட்டத்தை வேகமாக அடைந்து கொண்டிருக்கிறது." (டி. நாகிரெட்டி 'அடகு வைக்கப்பட்ட இந்தியா', பக்கம்—140)

தனியார் அந்நிய ஏகபோகத்தின் நேரடி முதலீடு ஏகாதிபத்தியத்தின் ஊடுருவலுக்கான முக்கியமான வழிகளில் ஒன்றாகும். ஏகாதிபத்தியங்களின் நேரடி முதலீடு மற்றும் புள்ளி விவரங்களை வேண்டுமென்றே ஆளும் வர்க்கங்களும் அவற்றின் அரசும் மூடி மறைக்கின்றன; குழப்புகின்றன என்று முதலாளித்துவ பொருளாதாரவாதிகளே முறையிடுகின்றனர். நேரடியாகவும் நிதி நிறுவனங்கள் மூலமும் அந்நிய முதலீட்டிற்கு ஒரு சில துறைகள் தவிர பெரும்பாலானவற்றில். தனியார் துறை பொதுத்துறை இரண்டுமே திறந்து விடப்பட்டுள்ளன.

அந்நிய ஏகபோகங்கள் மற்றும் அவற்றுடன் கூட்டுச் சேர்ந்துள்ள தரகு முதலாளிகளின் எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்து அந்நிய தனியார் நிதி மூலதன ஊடுருவலுக்கான சாதகமான சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொடுத்ததோடு தேசியமயமாக்காமலிருக்கவும் லாபம்எடுத்துச் செல்லவும் உத்தரவாதமளிக்கப்பட்டிருக்கிறது. ஆரம்ப காலத்தில் வரிவிலக்கு, வளர்ச்சிக்கான தள்ளுபடி, வரியற்ற கடன்கள், செலவு செய்யப்படாத திட்டமதிப்பீட்டுத் தொகைகளுக்கும், அலவன்சுக்கும் வரியின்றி நீடிக்க அனுமதி, ராயல்டிகளுக்கு வருமான வரிவிலக்கு மற்றும் அந்நியக் கூட்டுக் கம்பெனிகளுக்கு மின்சாரம், போக்குவரத்து போன்ற அடிப்படைத் தேவைகளுக்கு முன்னுரிமை, மானியங்கள், இவையும் இன்னும் பிறவழிகளிலும் சலுகைகள் பல அளிக்கப்படுகின்றன. முதலீடுகளுக்கு உதவும் ஆலோசனை நிறுவனங்களும் அமைக்கப்பட்டுள்ளன. ஏகாதிபத்திய நாடுகளில் மலிவான வட்டியில் நிதியளிப்பதற்கென பல நிறுவனங்கள் உள்ளன. அந்நாடுகளின் ஏற்றுமதிக்கானவைகளாக இருப்பினும் அவை ஏகபோகங்களுக்கு வெளிநாடுகளில் முதலீடு செய்ய எல்லா உதவிகளும் செய்கின்றன.

இந்தியாவில் தனிப்பட்ட அந்நியக் கம்பெனிகளாகவும் துணைக் கம்பெனிகளாகவும் மூலதனமிடுவதைவிட கூட்டுப்பங்கு நிறுவனங்கள், தனியார் கூட்டுக் கம்பெனிகள் மற்றும் அரசுத் துறைகளில் மூலதனமிடுவதையே பல்வேறு காரணங்களுக்காக ஏகாதிபத்தியங்கள் விரும்புகின்றன. சிறு, சாதாரணப் பொருட் களிலிருந்து விமானங்கள் வரை, பல்வேறு துறைகளிலும் அந்நியக் கூட்டு நிறுவனங்கள் உள்ளன. போதிய அளவு புள்ளி விவரங்கள் இல்லாததால் அந்நியக் கூட்டுப்பங்கு நிறுவனங்கள் மீது அந்நிய மூலதனத்தின் ஆதிக்கத்தை முற்றாக அறிய இயல வில்லை. அந்நியக் கம்பெனிகள் இந்திய உற்பத்தியைக் கட்டுப் படுத்தப் பல்வேறு முறைகளில் பல்வேறு ஒப்பந்தங்கள் மூலம் கையாளுகின்றனர். இந்தியத் தரகு முதலாளிகள் உற்பத்தி, கச்சாப் பொருட்களின் சப்ளை, மூலாதாரங்கள், நிதி மூலாதாரங் கள், பெயர், மாடல் வடிவமைப்பு, ஏற்றுமதி, வரம்புக்கு மேற் பட்ட தொழில் நுட்பம் ஆகியவற்றில் எந்த நடவடிக்கையும் சுய மாக எடுக்க முடியாத அளவும், நிரந்தரமாக அந்நியக் கம்பெனி களைச் சார்ந்து நிற்கும்படியும் இருக்கின்றனர். இவ்வாறு மூலதனமிட்டுள்ள பங்கைவிட கூடுதலான விகிதத்தில் உற்பத்தி யைக் கட்டுப்படுத்துகின்றனர். மூலதனத்தில் இந்தியப் பங்கை விட குறைவாக இருப்பினும், நிர்வாகிகளுக்கான அதிகாரம் கம்பெனித் தீர்மானங்களை இரத்து செய்யும் உரிமை என்ற ஏதாவது ஒரு வகையில் சமனற்ற ஒரு தலைப்பட்ச ஒப்பந்தங்கள் மூலம் கட்டுப்பாடும் ஆதிக்கமும் பெற்றுள்ளனர்.

1955 இல் மொத்தம் நேரடி மறைமுக அந்நிய மூதலீடு ரூ 456 கோடியாக இருந்தது. ஆனால் 1974-இல் அது ரூ. 1943 கோடி யாக உயர்ந்திருக்கிறது. நாட்டின் ஸ்தாபனப்படுத்தப்பட்ட தனியார் துறை முதலீட்டில் நான்கில் ஒரு பங்கே எனினும், இந்தியக் கூட்டுப் பங்குத் துறையின் மீதான அந்நிய நிதி மூல தனத்தின் உடும்புப் பிடியை இது முற்றிலும் குறிப்பதாகாது. ஏனெனில், சுத்தமான இந்திய முதலீடே கூட அந்நிய நிறுவனங் களுடன் தொழில் நுட்பக் கூட்டு சேர்ந்துள்ளன. இக்கூட்டுகள், தேவையான இறக்குமதி மூலதனப் பொருட்கள், கச்சாப் பொருட்கள் மீது வரம்பும் கட்டுப்பாடும் விதிக்கின்றன. அந்நிய நிறுவனங்களின் ஒப்புதலின்றி ஏற்றுமதி விரிவாக்குதல் ஆகியன செய்ய விடாமல் வரம்பிடுகின்றன. தனியார் துறையில் எழுப்பப் படும் மொத்த மூலதனத்தின் பெரும்பகுதியை அந்நியக் கூட்டுக் கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களே விழுங்குகின்றன. மேலும் பல்வேறு வகைகளிலும் நிதி உதவிக்கு ஏற்பாடு செய்து தருவதா லும் நிதி உதவிக்கு ஏற்பாடு செய்து தருவதாலும் கட்டுப்படுத்தப் படுகின்றன. சர்வதேசிய ரீதியில் பெரும் பகாசுரக் கம்பெனிகளில் பாதிக்கு மேல் இந்தியாவில் கூட்டுக் கம்பெனிகளை நடத்துவ தால், அவற்றின் அளவு, தன்மை காரணமாகவே, மிகப்பெரும் அளவு இந்தியத்தொழிலைக் கட்டுப்படுத்த முடிகின்றன. இந்திய மூலதனத்தின் வளர்ச்சி விகிதம் அந்நிய மூலதனத்தின் வளர்ச்சி விகிதத்தை விடக் கூடுதலாக இருப்பதாகத் தவறாக மதிப்பீட்டு இந்தியப் பொருளாதாரத்தின் மீது பின்னதின் ஆதிக்கத்தை

அங்கீகரிக்க சிலர் மறுக்கின்றனர். உண்மையில், இந்திய மூல தனத்தின் வளர்ச்சியை விட அந்நிய மூலதனத்தின் வளர்ச்சியே அதிகமாகும். மிகப் பெரும் சொத்துடைய, வரவு, செலவு இலாப மூடைய நூறு கம்பெனிகளில் அந்நிய மூலதனம் மற்றும் கூட்டுக் கம்பெனிகளின் எண்ணிக்கையும் கூடுதலாகி வருகிறது. இவை தவிர இந்த நூறு கம்பெனிகளிலேயே மற்றவையும் தொழில் நுட்பம், அந்நியக் கடன், வடிவமைப்பு மற்றும் பிற வழிகளிலும் அந்நியக் கட்டுப்பாட்டில் உள்ளன. புதிய திட்டங்களிலும் ஆலைகளிலும் கூட அந்நியக் கடன்களும் கொடுபடாத பாக்கி களும் அதிகரித்து மேலாண்மை பெற்று வருகின்றன. அந்நிய மூலதனப் பங்கு விகிதக் கட்டுப்பாடு விதித்த பின்னும் கூட பெரும் பான்மையான நிறுவனங்களில் கூடுதலான பங்கு விகிதம் நீடிக்க அந்நிய நிறுவனங்கள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன என்பதோடு, 51 - 49 பங்கு விகித அடிப்படையிலான அந்நியக் கம்பெனிகளின் கட்டுபாடு தளர்வு என்பதே தவறான கோட்பாடாகும் முக்கிய மான பல துறைகளில் பெரிய கம்பெனிகளில் ஆதிக்கம் செலுத் துவதன் மூலம் அந்தத் துறைகளின் மீதும் அந்நிய நிறுவனங்கள் ஆதிக்கம் பெறுகின்றன. பத்து கோடிக்கும் மேல் சொத்துள்ள 48 கம்பெனிகளில் 57 சதவீதம் அன்னியக் கம்பெனிகள், அவற்றின் துணைக் கம்பெனிகள் அல்லது அன்னியக் கட்டுப் பாட்டுள்ள கம்பெனிகளாகும். இவைகள் மொத்த சொத்தில் 53 . 7 சதவிகிதம் (1966) கட்டுப்படுத்தில. கட்டுப்படுத்தும் சொத்து உருவாகும் விகிதமும் அந்நியக் கட்டுப்பாட்டிலுள்ள கம்பெனிகளுக்கே அதிகமாகும். இப்படி எந்த மூலாதாரம் மற்றும் எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் அந்நிய தனியார் மூலதனமே பகற்கொள்ளையடிப்பதுடன், தங்கு தடையற்ற வேட்டையாடி, இந்தியத்தரகு முதலாளிகளிலும் பார்க்க மேல் நிலையிலும் இந்தியத் பொருளாரதாரத்தின் மீது மேலாதிக்கமும் பெற்றிருக்கிறது. ஏகாதிபத்தியத்தின் மானியங்கள், கடன்கள் போன்ற நிதி 'உதவி'யும் இந்தியாவில் அந்நிய தனியர் மூல தன முதலீட்டிற்கும், நாட்டின் மீது உச்சபட்சமாக மேலாதிக்கம் பெறவும் தேவையான புறச்சூழ்நிலைகளை ஏற்படுத்தவே நோக்க மூடையவையாகும்.

பெருவீத உற்பத்திக்கான பெருமளவு மூலதனத்தை அரசுத் துறையால் மட்டுமே திரட்ட முடியும். ஆளும் வர்க்கங்களின் நெருக்கடிகளிலிருந்து மீட்கவும், காக்கவும், அதிக வல்லமை மிக்க அதிகார வர்க்கத்திடம் பொருளாதார ஆதிக்சத்தைக் குவிப்பது, தொழிலுற்பத்திக்கான அடித்தள கட்டுமானங்களான இரயில்வே, போக்கு வரத்து, செய்தித் தொடர்பு, இரும்பு எ்.கு மின்சாரம் போன்றவை கூடுதலான இலாபமற்றதும், பெருவீத அளவிலானதும், ஆளும் வர்க்கங்களின் பொதுவான இன்றியமை யாதவை என்பதாலும், பொதுத்துறை நிதிநிறுவனங்களின்மூலம் எல்லாவகையில்பரந்துபட்டமககளின்சேமிப்பைத்திரட்டி தனியார் உலையில்கொட்டவும், தனியாருடன் இணைவான கூட்டுத்துறை யின் மூலம் கொள்ளையிடவும் இரும்பு, நிலக்கரி, மின்சாரம், மருந்து, இரயில்வே போன்றவைகள் மூலம் குறைந்த செலவில்

கொள்ள லாபமடிக்க தனியாருக்கு உதவும். ஆனால் தேசிய மய மாக்குதல் மூலம் தேச உணர்வு மூலம் மக்களின் கோபாவேசத் திலிருந்து காப்பது, ஆகிய பல்வேறு காரணங்களால் கட்டி வளர்க்கப்படும் அரசுத் துறையும் இந்திய ஆளும் வர்க்கங்களுக் கும் அந்நிய ஏகாதிபத்தியங்களுக்கும் சேவை செய்யும் துறையே ஆகும்.

தனியார் மூலதனத்துக்கு, குறிப்பாக அந்நிய மூலதனத்திற்கு சேவகம் புரியும் ஓர் அடித்தளமாகவே பொதுத்துறை நடத்தப் படுகிறது அந்நியக் கூட்டும், மூலதனமும், தொழில் நுட்ப உதவியும் இல்லாத அரசுத் துறை நிறுவனமே இல்லை என்றே கூறலாம். பெரும்பாலானவை பல ஏகாதிபத்தியங்களுடன் பிணைக்கப்பட்டிருப்பதுடன் மட்டுமின்றி ஒவ்வொரு ஏகாதி பத்தியவாதியுடனும் பல்வேறு பிணைப்புகளைக் கொண்டிருக் கின்றன. கூட்டு மூலதனம், கடன் மூலதனம், நிர்வாகத்தில் பங்கு, தொழில் நுட்பம், வல்லுனர்கள் இப்படி பல்வேறு முறை களிலும் அரசுத்துறையில் அந்நியக் கட்டுப்பாடும் மேலாதிக்கமும் நிலை நாட்டப் பட்டிருக்கின்றன. இத்துடன் தனியார் துறையில் இருப்பதிலும் கடுமையாக இறக்குமதி மற்றும் கச்சாப் பொருட் கள் ஏற்றுமதி, மற்றும் விரிவாக்குதல் வரம்பிட்டும் கட்டுப் படுத்தியும் ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. சமூக ஏகாதி பத்தியம் தனது அரசு ஏகபோகத் தன்மை காரணமாக இந்தியா வில் அரசுத்துறைத் தொழில்களில் கூட்டும் மேலாதிக்கமும் பெற்றிருப்பதோடு தனியார் துறையிலும் மூலதனமும் கூட்டும் கொண்டுள்ளது. அரசுத் துறை சுதந்திரமான தேசிய பொரு ளாதாரத்தைக் கட்டி வளர்த்துத் தரகு முதலாளிகளையும், அன்னிய ஏகபோகங்களின் பிடிப்பையும் பலவீனப்படுத்தவில்லை. மாறாக பலப்படுத்தியுள்ளது. அரசுத் துறையிலுள்ள இரும்பு எஃகு ஆலைகள் அனைத்துமே அன்னிய மூலதனம், தொழில் நுட்பம் மற்றும் நிர்வாகத்தின் கீழ் இருப்பதோடு தொடர்ந்து இறக்குமதிப் பொருட்கள், வளரும் தொழில் நுட்பம் மற்றும் மற்றும் சந்தைக்காகவும் அவற்றைச் சார்ந்து நிற்க வேண்டி யுள்ளது. எண்ணெய் சுத்திகரிப்பு, கண்டுபிடிப்பு ஆகியவற்றிலும் கூட்டுப் பங்கிலும், அன்னியக் கட்டுப்பாடு குறிப்பாக சோவியத் கட்டுப்பாடும், தொழில் வளர்ச்சிக்கான போக்குவரத்து. மின் சாரம், செய்தித் தொடர்பு போன்ற அடித்தளக் கட்டுமானங் களின் வளர்ச்சிக்கு அன்னிய மூலதனம் குறிப்பாக உலக வங்கி, சர்வதேச நிதி நிறுவனத்தையும் சார்ந்து நிற்க வேண்டியுள்ளது. மருந்து, அறுவை சிகிச்சைக் கருவி, மற்றும் கனரக ஆலைகள், உற்பத்தி சாதனங்களின் உற்பத்தி ஆகியவற்றிற்கும் அன்னிய மூலதனத்திற்கும் உரத் தொழிலுக்கு நிர்வாகம், கச்சாப் பொருள், மூலதனத்திற்கும் எல்லாவற்றுக்கும் மேலாக இராணு வத்தளவாடங்களுக்கும் அன்னிய நிறுவனங்களைச்சார்ந்து நிற்க வேண்டியுள்ளது. இவையனைத்தும் அன்னிய ஏகாதிபத்தியக் கட்டுப்பாட்டையே காட்டுகின்றன.

சமூக ஏகாதிபத்தியத்தின், 'உதவி, மேற்கத்திய நிதி மூலதனம் மேலும் கூடுதலாக் ஊடுருவவும், கூட்டுச் சேரவுமே வழி செய்தது. இந்தியத் தரகு முதலாளிகள் மேற்கத்திய ஏகாதிபத்தியங்களுடன் நல்ல சலுகைக்குப் பேரம் பேச உதவியதே தவிர தேசிய பொருளாதாரத்தைக் கட்டிவளர்க்க வழி செய்யவில்லை. சமூக ஏகாதிபத்தியத்தின் மிகுநிலை ஆதரவு பெற்ற பொதுத் துறை தனியார் துறையின், குறிப்பாக அன்னிய, தனியார் மூலதனத்தின் கொள்ளைக்கே உதவியது. சமூக ஏகாதிபத்தியமும், அமெரிக்க ஏகாதிபத்தியமும் இந்தியாவை தமது நவீன காலனியாகக் போட்டியிட்டாலும், சமூக ஏகாதிபத்தியத்தின் பாத்திரம் இந்தியாவில், சமுதாய, பொருளாதார, அரசியல் அந்தஸ்தை இன்றைய நிலையில் பேணிப் பாதுகாப்பதுதான்.

இந்தியத் தரகு அதிகார வர்க்க முதலாளிகள் சமீப காலமாக ஏற்றுமதி அடிப்படையிலான உற்பத்தி மற்றும் மூன்றாம் உலக நாடுகளில் குறிப்பாக ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் கூட்டுத் துறை ஆலைகளைத் தொடங்குவது ஆகிய இருநடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இவை தொல்லைகளுக்கும் சிரமங்களுக்கும் உள்ளானாலும், இந்திய தரகு அதிகார வர்க்க முதலாளிகள் அந்நிய தனியார் மூலதனத்தைப் போலவே இவற்றின் மூலமும், சந்தை மூலமும், லாபப் பங்கு, ராயல்டி மற்றும் பிற வழிகளில் சுரண்ட முயலுகின்றனர். உண்மையில் இந்த மாதிரியான கொள்ளையும், அந்நிய மூலதனம் தொழில் நுட்பம் மற்றும் பிற கூட்டுக்களின் விரிவாக்கமே ஆகும். "சாத்தியப்பாட்டிற்கான ஆய்வு, திட்ட அறிக்கைகள், மற்றும் ஆலை நிர்மான மேற்பார்வை ஆகியவற்றை வெற்றிகரமாக இந்தியத் தொழில் ஆலோசனைக் குழுக்கள் மேற்கொண்டாலும் அதே சமயம்,புதிய வகை ஆலைக்கான செயல்முறை நுட்பம், திட்ட வரைபடங்கள் தீட்டுதல் போன்றவற்றில் தொடர்ந்து பலவீனங்கள் வெளிப்படுகின்றன. சமீபமாக இந்தியர்களின் ஏதோ ஒரு வகையிலான பினாமி உடமையின் கீழுள்ள இந்தியத் துணை நிறுவனங்களை அன்னிய ஆலோசனைக் குழுக்களுக்காகத் திறக்கும் போக்குள்ளது. உண்மையில் இம்மாதிரிநிறுவனங்கள் அன்னியநிறுவனங்களாகவே நடத்தப்படவேண்டும்.''(எகனாமிக் டைம்ஸ், செப்டம்பர் 26, 1962). இவ்வாறு இந்தியத் தரகு முதலாளிகளின் பினாமி பங்கினால் ஆன இந்தியத் துணை நிறுவனங்களின் பெயரில் அன்னிய ஆலோசனைக் குழுக்கள் இயங்குவதையே இந்தியாவில் விரிவாக்கம் அடிப்படையாகக் கொண்டுள்ளது. உண்மையில் அன்னிய மூலதனம், சர்வதேச 'உதவி' என்ற பெயரில் நிதி மூலதனமிட்டு, அன்னிய ஆலோசனைக் குழுக்களின் செயல்முறை நுட்பம், திட்ட வரைபடங்கள், அன்னிய ஆதிக்கத்திலுள்ள இந்திய கூட்டுத் தொழிற்சாலைகளின் சாதனங்களைக் கொண்டே—அவற்றுக்கும் கச்சாப் பொருட்கள், மூலதனப் பொருட்கள், உறுப்புக்களை அன்னிய நிறுவனங்களே சப்ளை செய்கின்றன—மூன்றாம் உலக நாடுகளில் விரிவாக்கம் செய்யப்படுகின்றன. அன்னிய நிதி மூலதனத்திற்கும்,ஏகபோகத்திற்கும் தரகு முதலாளிகள் தமது தகுதியான பாத்திரமாற்றுவதையே இது காட்டுகிறது.

இந்தியாவின் தஸ்தூர் ஆலோசனைக்குழு டல அன்னிய நிறுவனங்களுடன் கூட்டுச் சேர்ந்துதால், சிரியா, ஈரான், தாய்லாந்து, கிரேக்கம், பர்மா, அர்ஜெண்டினா, இலங்கை ஆகிய நாடுகளுக்கு தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்கியது. ஜெர்மனியின் கெய்சருடன் சேர்ந்து பிர்லா யுகோஸ்லேவியாவில் அலுமினிய ஆலை, அமெரிக்காவின் ஷேராடானுடன் சேர்ந்து இந்திய ஒபராய் நிறுவனம் நேபாளத்தில் ஓட்டல் நிறுவியிருப்பது, மற்றும் இங்கையில் அசோக் லேலண்டு என்னும் இந்திய-இங்கிலாந்து கூட்டு நிறுவனம், அன்னிய மூலதன மற்றும் பிற கூட்டுடைய அரசுத்துறையிலான உர நிறுவனம், அரசு வர்த்தக நிறுவனம், இந்துஸ்தான் மெசின் டூல்ஸ் மற்றும் இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ், முறையே ஈரான், பர்மா, பிலிப்பைன்ஸ் மலேசியாவில் கூட்டு நிறுவனங்களை அமைக்கவிருப்பது ஆகியவைகள் ஏகாதிபத்தியத்தின் கூட்டாளிகளாக தரகு அதிகார வர்க்க முதலாளிகள் மூன்றாம் உலகநாடுகளில் பாத்திர மாற்றப் போவதையே காட்டுகின்றன.

பல்வேறு முறைகளில் மூலதன ஏற்றுமதி கூட்டு, நேரடி மறைமுக ஆலைகள், துணைக் கம்பெனிகள், தொழில் நுட்பம், வல்லுனர்கள், நிர்வாகம், சமனற்ற பரிமாற்றம், மொத்தத்தில் ஏகபோகம், நிதிமூலதனம், மூலதன ஏற்றுமதி, பன்னாட்டு முதலாளித்துவ கூட்டுப் பிணைப்புகள் ஆகியவைகள் மூலம் காலனிய காலக் கட்டத்தைவிட ஈவிரக்கமற்ற முறையில் ஏகாதிபத்தியங்கள் கொள்ளையிடுகின்றன. ஆனால் கொள்ளையிடும் முறைதான் வேறாக உள்ளது. அன்னிய வாங்கிகள் — அதிகாரிகள், அரை அதிகாரிகள் (Semi Officials) மற்றும் தனியார் சம்பளம், சன்மானங்கள், கௌரவ நிதி, மின்சாரம், போக்குவரத்து, செய்தித் தொடர்பு இன்னும் பிற வருமானமற்ற தொழில் உற்பத்திக்கான அடித்தளக் கட்டுமானங்களில் பிரதானமாக முதலீடு செய்யப்பட்டுள்ள கடன்களுக்கு அசலையும், வட்டியையும் திருப்பிச் செலுத்துவது திட்டமிட்ட இணைப்பற்ற கடன்கள், கூட்டுக்களுடன் பிணைக்கப்பட்ட இறக்குமதிகள் ஆகியவை கணக்குகளின் வாங்கப்படும் பொருட்களுக்கு எக்கச்சக்கமாக செலுத்துவது, பின் தங்கியநாடுகளின் மீது வர்க்கத்தில், தொழில் கூட்டில் சாதகமற்ற ஒப்பந்தங்களைத்திணிப்பது, உண்மைவிலைக்குகுறைத்துவிலைக்குறியிட்டு ஏற்றுமதி, கூடுதல் விலைக் குறியிட்டு இறக்குமதி, காலாவதியான தொழில் நுட்பம், மாதிரி வடிவமைப்புகளையும், தேவையற்ற உற்பத்திக் கருவிகள், மூலதனப் பொருட்கள், கச்சாப் பொருட்களை தள்ளி விடுவது என்ற முறைகேடான மோசடிகள், சரக்கு போக்குவரத்து, கப்பல் கட்டணம் ஆகிய வழிகளில் எக்கச்சக்கமாக வசூலிப்பது இறுதியாக மூலதனத்துக்கு லாபம், பங்கு லாபம், ராயல்டிகள், தொழில் நுட்ப விலை, தாய்க் கம்பெனி செலுத்த வேண்டியவை என்கிற பெயரில் அனுப்புவது இப்படி ஆயிரத் தெட்டு வழிகளில் ஆண்டொன்றுக்கு ஆயிரம் கோடிக்கும் குறையாமல் அந்நிய ஏகாதிபத்தியங்கள் அள்ளிச் செல்கின்றன. இவை தவிர ஈட்டுப் பங்கு, கடன் பங்கு, நிதி ஏற்பாடு

இப்படி மூலதனக் கட்டுப்பாடு. ஆலைகளைத் திட்டமிடுவது, நிர்வகிப்பது, கொள்கை முடிவுகள் எடுப்பது, நிரந்தர சார்பு நிலை, சமனற்ற ஒரு தலைப்பட்சமான மேலாதிக்க ஒப்பந்தங்கள், தொழில் நுட்பம் என்று தொழில் துறையில் தனித் தனியேயும், அரசுடனான பேரங்கள் நிதி மூலதனக்கட்டுப்பாடு,ஏகபோகநிதி நிலை காரணமாக ஒட்டு மொத்த பொருளாதாரத்தினையும் அதன் மூலம் நேரடியாகவும், அரசியலையும் கட்டுப்படுத்தி அந்நிய ஏகாதிபத்தியங்கள், தமது மேலாதிக்கத்தை நிறுவியிருக்கின்றன. உலகப் பொருளாதாரக் கட்டமைவில் முற்றிலும், தமக்குச் சாதகமான முறையில் இந்தியத் தொழில்களை வழி நடத்திச் செல்லவும், தமது முதலாளித்துவ உற்பத்தி முறையின் மறு உற்பத்திக்கே ஊழியம் செய்யும் வகையில் இந்தியப் பொருளாதாரத்தை ஒருமுறை படுத்தவும், அவற்றின்மீது உடும்புப் பிடி கொண்டுள்ளன. எனவேதான் இந்திய முதலாளித்துவ உற்பத்தி முறை தரகு அதிகார வர்க்க முதலாளித்துவத் தன்மையுடையது என்கிறோம்.

தரகு – அதிகார முதலாளித்துவம், இந்திய சமுதாயப் படிவத்தில் மிகுநிலை பெற்றிருக்கும் நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையைப் பேணிப் பாதுகாக்கவும் தவிர்க்க முடியாத தேவைகள், நிர்பந்தங்கள் நிமித்தமாக, தரகு — அதிகார வர்க்கத் தன்மையுடைய முதலாளித்துவ உற்பத்தி முறையின் மறு உற்பத்திக்கு ஏற்ற முறையில் உதவும் சில சீர்திருத்தங்கள் செய்து, அரை நிலப்பிரபுத்துவ உறவுகளை மேலும் உறுதிப்படுத்தவும் நிலப்பிரபுத்துவ வர்க்கத்துடன் பொருளாதார, சமுதாய, அரசியல் கூட்டை ஏற்படுத்தியுள்ளது. தரகு – அதிகார வர்க்க முதலாளிகள் மற்றும் நிலப்பிரபுக்களின் இக்கூட்டு மொத்தத்தில் ஏகாதிபத்தியம் மற்றும் நிலப்பிரபுத்துவத்தின் நலன்களுக்கு சேவை செய்வதேயாகும். மாறாக ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு. தேசியப் பொருளாதாரத்தைக் கட்டு வளர்ப்பது அல்ல. ஒரு பிரிவு முதலாளித்துவ அரசியல் மற்றும் சமூகவியலாளர்களும் திரிபுவாதிகளும் விவசாயத்தில் நிலப்பிரபுத்துவம், அரை நிலப்பிரபுத்துவம் இந்திய முதலாளிகளாலேயே துடைத்தெறியப்பட்டு முதலாளித்துவ உற்பத்தி முறை நிலை நாட்டப்பட்டு விட்டதாகவும், முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி நடந்து முடிந்து விட்டதாகவும், மற்றொரு பிரிவு இம் மாறுதல் தொடர்ந்து நடந்துவருவதாகவும் ஆனால் இந்திய முதலாளிகள் பலவீனம் காரணமாக சாதிக்க இயலவில்லை அல்லது தீவிரமானதாக இல்லை என்பதுதான் பிரச்சனை என்றும் வாதிடுகின்றனர். ஆனால் இந்திய சமுதாயத்தின் புறவயமான யதார்த்த நிலை இவர்களதுகோட்பாட்டை மறுக்கவே செய்கிறது. முற்றிலும் ஏற்றத் தாழ்வான இந்திய சமுதாயத்தின் ஏதாவது ஒரு பகுதியில் மார்க்சீய — லெனினிய அடிப்படைகளை உதறி எறிந்து விட்டு ஓரிரு ஆய்வுகள் செய்து, தாறுமாறான தொகுப்புகள் அடிப்படையில் இம்முடிவுகளை முன்னிறுத்துகின்றனர்

## பிற் சேர்க்கை

**சீனய ஆலை முதலாளித்துவத்தின் தோற்றமும் முதல் உலகப் போரின்போது மேலும் அதன் வளர்ச்சியும்.**

**சீனாவின் ஆலயத்தொழிலாளர்களின் வளர்ச்சி; சீனய-தொழிலாளி வர்க்கத்தின் குணாம்சங்கள்; ஆரம்பகால தொழிலாளி வர்க்க இயக்கம்.**

சீனாவினுடைய நவீன ஆலைத் தொழிலின் தோற்றம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆரம்பித்தது. முதலாளித்துவத்தின் ஊடுருவலுக்குச் சற்றுப் பிறகு சீனாவில் சில நவீன ஆலை நிறுவனங்கள் கட்டப்பட்டன. நாற்பதுகளிலிருந்து ஹாங்காங்கில் நவீன ஆலைத் தொழிற்சாலைகளை பிரிட்டன் நிறுவத் தொடங்கியது. ஷங்காய், காண்டன் மற்றும் அமோய் ஆகிய நகரங்களில் ஆங்கிலேய, அமெரிக்க, ஃபிரஞ்சு மற்றும் ஜெர்மானிய வியாபாரிகள் கப்பற்தளங்கள், நீராவிக் கப்பற் கம்பெனிகள், பட்டு நூல், தேனீர்வில்லை (BRICK-TEA) ஆலைகள் மற்றும் அச்சகங்களை நிறுவினர். இந்தத் தொழிற் சாலைகள் முதலாளித்துவ நாடுகளின் பங்குக்கு பரிவர்த்தனைப் பண்டங்களை ஏற்றுமதி செய்வது. கச்சாப் பொருட்களை கொள்ளையிடுவது மற்றும் கலாச்சாரம் ஆக்கிரமிப்போடு இனைந்திருந்தன இந்த அந்நிய ஆலை நிறுவனங்களில்தான் முதற் தொகுதி ஆலைத் தொழிலாளர்கள், முக்கியமாக மாலுமிகள் மற்றும்கப்பற்பணித் தொழிலாளர்கள் பிறந்தார்கள்.

அறுபதுகளில் ட்சென் - குவே—பென் மற்றும் லி - ஹாங் காங் ஆகியோரை தங்களின் பிரநிதிகளாகக் கொண்டு சீன பிரபுத்துவ ஆட்சியாளர்கள் இராணுவ தொழிற்சாலைகளை நடத்தத் தொடங்கினர்; அவற்றின்மூலம் நிலக்கரி மற்றும் இரும்புத் தொழிற்சாலைகளின் வளர்ச்சியைத் தூண்டினர். இவை எண்பதுகளில் லாபகரமான சிவில் தொழிற்சாலைகளுக்கு விரிந்தன. அதே சமயம் சீனவியாபாரிகள், நிலப்பிரபுகள் மற்றும் அதிகாரிகளில் ஒரு பகுதியினர் நவீன ஆலைத் தொழிற்சாலை களில் முதலீடு செய்யத் தொடங்கினர், இது இன்னுமொரு தொகுதி ஆலைத் தொழிலாளர்களைப் பிறப்பித்தது.

1894 சீன ஜப்பானியப் போருக்குப் பிறகு ஏகாதிபத்திய வாதிகள் பரிமானத்திலும், அளவிலும் வேகத்திலும் சீனத்துக்கு எதிரான தமது பொருளாதார ஆக்கிர[illegible] தீவிரப்படுத்தினர். ரயில்வேக்கள், சுரங்கங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் அந்நிய முதலீடுகள் கணிசமான அளவு அதிகரித்தது. இத்தக் கால கட்டத்தில் ரயில்வேத்துறையில் யுனான் - வியட்நாம், கிழக்குச் சீனம், சிங்தாவோ - சினான், பீகிங் - ஹான்கவ், பியூங் - பெங் தியன், தியன்சின் - புகாவ், ஷங்காய் - நாங்கிங் மற்றும் யகிங். குயுவான் ஆகியபாதைகள் அனைத்தும் நிர்மாணிக்கப்பட்டன. அவை ஏகாதிபத்தியவாதிகளால் நிதியளிக்கப்பட்டு நேரடியாக நடத்தப்பட்டன; அல்லது அவர்களது கட்டுப்பாட்டில் வைக்கப் பட்டிருந்தன. சுரங்கத் தொழிலில் அந்நிய மூலதனம் ஏக

போகத்தைப் பெற்றிருந்தது. 1913 இல் நாட்டின் மொத்த நிலக்கரி உற்பத்தி 12,879, 770 டன்கள்; இதில் 7, 135,545 டன்கள் அல்லது 55.4% ஏகாதிபத்தியவாதிகளின் ஏகபோக மூலதனத்தால் கட்டுப்படுத்தப்பட்டது. இரும்பு உற்பத்தியில் ஏகாதிபத்தியவாதிகளின் ஏகபோகம் இன்னும் கூட சக்திவாய்ந்த தாக இருந்தது. 1913 இல் மொத்த தேசிய உற்பத்தியான 459,711 டன்கள் அனைத்தும் ஜப்பானிய மூலத்தனக் கட்டுப் பாட்டின் கீழ் இருந்தது.

தனியாருக்குச் சொந்தமான தொழிற்சாலைகளின் படிப் படியான வளர்ச்சியுடன் சீனத்தின் தேசிய ஆலைத் தொழில் கூட கொஞ்சம் ஆரம்பகால வளர்ச்சியடைந்திருந்தது. 1911 இல் சீனத்தின் தொழிற்சாலைகள் மற்றும் சுரங்கங்களின் மொத்த மூலதனம் 159,654,812 வெள்ளி டாலர்கள்; இதில் தனி யாருக்குச் சொந்தமான தொழிற்சாலைகள் மற்றும் சுரங்கங் களின் மூலதனம் மொத்தத்தில் பாதியளவான 88,552,367 டாலர்கள்.சீனத்தின் தேசிய ஆலைத் தொழிலில் நிலக்கரி, இரும்பு, சுரங்கம் மற்றும் நெசவாலைத் தொழில் மேலோங்கியிருந்தது. இவ்விரு தொழிற்சாலைகளில் சீனத்தின் மூலதனம் பின்வரு மாறு பங்கிடப்பட்டிருந்தன.; சுரங்கம் மற்றும் உலோகத் தொழிலில் 41,315,992 டாலர்கள்; நெசவாலைகளில் 40,788,689 டாலர்கள்.

சீனர் மற்றும் அந்நியருக்குச் சொந்தமான இந்த ஆலை நிறுவனங்களிலிருந்து இன்னுமொரு தொகுதி ஆலைத் தொழி லாளர்கள் தோன்றினர்.

முதல் உலகயுத்தம் வந்ததால், தமது இராணுவ நடவடிக்கை களில் மிகவும் அழுந்திப் போயிருந்த ஐரோப்பிய ஏகாதிபத்திய வல்லரசுகள் சீனத்திற்கெதிரான தமது ஆக்கிரமிப்பைத்தற்காலி கமாகத்தளர்த்தின. இதன்மூலம் சீனத்தின் தேசிய தொழிலும் வர்த்தகமும் வளர ஒரு வாய்ப்பளித்தன. பஞ்சாலைகளில் 1914 இல் 544,780 நூற்புக் கதிர்களாகவிருந்தது (SPINDLES) 1919 இல்658,748 நூற்புக் கதிர்களாக உயர்ந்தன. 1913 இல் 7,212டன்களாக இருந்த கச்சா சில்க் பட்டுநூல் ஏற்றுமதி 1919இல் 59,014 டன்களாக அதிகரித்தது. இந்த காலகட்டத்தில் 1914இல் பஞ்சாலைகளில் ஒருபேல் நூலுக்கு 19.58 வெள்ளி டாலர்களாக இருந்த லாபம் 1919இல்70.56 ஆக அதிகரித்தது. அந்நிய வர்த்தகத்தில் 1913இல் 100 புள்ளியாக இருந்த ஏற்றுமதி இறக்குமதி 1919இல் இறக்குமதியில் 156 4 புள்ளியாகவும் ஏற்று மதியில் 113. 5 புள்ளியாகவும் அதிகரித்தது.

ஏகாதிபத்தியவாதிகள் தற்காலிகமாக தமது ஆக்கிரமிப் பைத் தளர்த்தியபொழுது மட்டுமே சீனத் தேசிய முதலாளித் துவம் வளர்வதற்கானதொரு வாய்ப்பிருந்தது. எனவே இயற் கையிலேயே சீனத்தின் தேசியத் தொழிற்சாலைகள் வளர்ச்சியில் பின் தங்கியிருந்தன. 1920 இல் சீனத்திலிருந்த பஞ்சாலைகளில்

மொத்தமிருந்த 1,550,840 நூற்புக் கதிர்களில் (Spindles) 41.9% ஏகாதிபத்தியவாதிகளுக்குச் சொந்தம்; உற்பத்தியாகியமொத்த நிலக்கரி 21,318,825 டன்களில் 50.9% ஏகாதிபத்தியவாதிகளுக்குச் சொந்தம். மொத்தம் 258,868 டன்கள் உற்பத்தியான இரும்பு முழுவதும் ஜப்பானிய மூலதனத்தால் கட்டுப்படுத்தப் பட்டது.

1951-ம் ஆண்டு புள்ளிவிவரங்களின்படி கைவினைஞர்கள் உட்பட ஒரு கோடி தொழிலாளர்களைச் சீனம் பெற்றிருந்தது; இவர்களில் 6% அல்லது 600,000 பேருக்குமேல் தொழிற்சாலைகளில் பணியாற்றினார்கள். பெரும்பாலான நவீன தொழிற்சாலைகள் சிறியன. 1913இல், பதிவு செய்யப்பட்ட 565 தொழிற்சாலைகளின் மொத்த மூலதனம் 50 கோடி வெள்ளி டாலர்கள். இவ்வாலைகளில் 479களில் ஒவ்வொன்றின் மூலதனமும் 100,000 டாலர்களுக்கும் குறைவு; 66 தொழிற்சாலைகளில் ஒவ்வொன்றிலும் 100,000லிருந்து 500,000 டாலர்கள்; 20 தொழிற்சாலைகளில் மட்டுமே (4%க்கும் குறைவானவை) ஒவ்வொன்றிலும் 500,000 டாலர்களுக்கும் மேலான மூலதனம் இருந்தது.

ஆங்கிலேய, ஃபிரெஞ்சு மற்றும் ஜெர்மானிய ஏகாதிபத்தியவாதிகள் யுத்தத்தில் மூழ்கிப் போயிருந்த வேளையில் ஜப்பானிய, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் சீனத்தில் தமது ஆக்கிரமிப்பை ஆழமாக முடுக்கிவிட்டனர். பிரிட்டனும் பிரான்சும் யுத்தத்தின்போது தமது பிடிப்பைத் தற்காலிகமாகத் தளர்த்தியிருந்த போதிலும், சீனத்தில் இன்னும் அவர்களது ஆதிக்கம் கட்டுக் குலையாதிருந்தது; யுத்தம் முடிந்தவுடனே தமது ஆக்கிரமிப்பை மீண்டும் துவங்கவும் ஆழப்படுத்தவும் கொஞ்சமும் தயங்கவில்லை.

சீனத்திற்கெதிரான ஏகாதிபத்தியப் பொருளாதார ஆக்கிரமிப்பின் குணாம்சங்கள் பின்வருமாறு:

முதலாவதாக, அந்நிய முதலீடுகள் பெரும்பாலும் நேரடி முதலீட்டு வடிவமாக இருந்தது. ஏகாதிபத்தியவாதிகள் சீனத்தில் தாங்கள் துவங்கிய நிறுவனங்கள் மூலமாக சீனாவின் ஆலைத்தொழில் முழுவதையும் கட்டுப்படுத்தினர். ஏகாதிபத்தியவாதிகளது தொழிற்சாலைகள் சீனமுதலாளிகளுடையதைவிட மிகுநிலை பெற்றிருந்தன. சீனத்தின ஆலைத் தொழில் கச்சாப் பொருட்களை ஏகாதிபத்தியவாதிகள் சூறையாடியதால் சீனாவின் மூலாதாரங்கள் பெருமளவில் ஏற்றுமதி செய்யப்பட்டன; அதன் கனரக தொழில் மிகமிகப் பின்தங்கிய நிலையிலிருந்தது. 1919இல் நாட்டில் உற்பத்தியான 1,009,542 டன்கள் இரும்புத் தாதுவில் 662,632 டன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டது. மொத்த இரும்பு உற்பத்தி 442,594 டன்கள்; ஆனால் இறக்குமதி செய்யப்பட்ட இரும்பு 325,158 டன்கள், அதாவது, உள்நாட்டு உற்பத்தியில் 70%.

இரண்டாவதாக, அந்நிய மூதலீடுகள் பிரதானமாக வர்த்த கத் தன்மையுடையன. 1914இல் அந்நிய தொழில் நிறுவனங் களில் மொத்த மூலதனம் 1000 அமெரிக்க டாலர்கள். இந்தத் தொகையில் 83.1% வர்த்தகத்தில் முதலீடு செய்யப்பட்டிருந்தது; தொழிற்சாலை முதலீடுகள், அதாவது உற்பத்தி மற்றும் சுரங்கத் தொழிலில் செய்யப்பட்ட முதலீடு 16.9% மட்டுமே ஆகும். இந்தத் தொழிற்சாலைகளில் பலவும் பதப்படுத்தும் தொழிற் சாலைகள் மற்றும் இறக்குமதிப் பாகங்களை சீர்படுத்தும் இணைத்துப் பூட்டும் ஆலைகளாகும். பெருமளவு வர்த்தக மூல தனமாக உள்ள அந்நிய முதலீடுகளின் ஊடுருவல் சீனாவின் இயற்கைப் பொருளாதாரத்தின் அடித்தளத்தை பலவீனப் படுத்தி முதலாளித்துவ வளர்ச்சியை முன்னேற்றியது; ஆனால் உண்மையில் சீனாவின் நவீன ஆலைத் தொழில்களிடையே நெச வாலைத் தொழில் மட்டுமே கணிசமான அளவு வளர்ந்தது.

மூன்றாவதாக. அந்த சமயத்தில் சீனா பல்வேறு ஏகாதி பத்திய நாடுகளின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது; ஆனால் சீனா வில் அவர்களது பொருளாதார ஆக்கிரமிப்பின் வளர்ச்சி ஏற்றத் தாழ்வாக இருந்தது. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் சீனா வைக் கட்டுப்படுத்திய தலையாய ஏகாதிபத்திய நாடுகள் பிரிட் டன், ஜெர்மனி, ஜாரிச ருஷியா, மற்றும் ஃபிரான்சு ஆகியவை. 20ஆம் நூற்றுண்டின் துவக்கத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகள் சீனாவில் தமது ஆக்கிரமிப்பை ஆழப்படுத்தினர்; அதன் விளைவாக சீனா பின் வரும் ஆறு வல்லரசுகளின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது: பிரிட்டன், ஜெர்மனி, ருஷியா, ஃபிரான்சு, அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் ஜப்பான். அக்டோபர் புரட்சிக்குப் பின், சீனாவிலுள்ள எல்லா ஜாரிச சலுகைகளையும் சோவியத் யூனியன் ஒழித்தது; இரு தேசங்களுக்கு இடையிலான எல்லா சமனற்ற ஒப்பந்தங் களையும் ரத்து செய்தது. யுத்தத்தில் தோல்வியின் காரணமாக ஜெர்மனியும் கூட சீனாவை ஆதிக்கம் செய்வதிலிருந்து விலகி யது. இவ்வாறு முதல் உலகப் போருக்குப் பிறகு பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஜப்பான் மற்றும் ஃபிரான்சு ஆகிய வைகளின் வேட்டைக்காடாக சீனா மாறியது.

[ஹோ-கான்-சி, நவசீனப் புரட்சி வரலாறு, பக். 5-7]

★ ★ ★

**சீன அதிகார வர்க்க-முதலாளித்துவம் உருவாகுதல் கோமிங்டாண் கட்டுப்பாடிருந்த பகுதிகள் காலனியமய மாகுதல், சீனத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட் டன் மற்றும் ஜப்பானுக்கிடையிலான போராட்டம்.**

நான்கிங்கில் ஒரு பாசிச இராணுவ சர்வாதிகாரத்தை நிறு விய பிறகு. சியாங்-கே-ஷேக் டி.வி சூங் ஹெச் ஹெச் குங் மற்றும் சென் சகோதரர்கள் (சென்-குவோ-ஃபூவும், சென்-லி-

..பூவும்) அடங்கிய 'நான்கு பெரும் குடும்பங்களால்' பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட அதிகார வர்க்க முதலாளிகளினுடைய ஒரு பொருளாதார ஏகபோகத்தை கட்டியமைக்கத் தொடங்கினார்கள் கோமிங்டான் பிற்போக்குவாதிகள்.

'நான்கு பெரும் குடும்பங்களின்' ஏகபோக நடவடிக்கைகள் நான்கு வங்கிகளைச் சுற்றி மையங்கொண்டிருந்தன: சீன மத்திய வங்கி, சீன வங்கி, தகவல்களின் வங்கி, சீன உழவர்களின் வங்கி, சீன மத்திய வங்கி 1928 நவம்பரில் நிறுவப்பட்டது. 'அரசு வங்கி' என்று சொல்லிக் கொண்டதால் அது வங்கி நோட்டுகளை புழக்கத்தில் விடுவது, தேசிய செலாவணியான நாணயங்களை வார்த்து சுற்றுக்கு விடுவது, அரசுப் பத்திரங்களை வழங்குவது முதலான உரிமைகளை அனுபவித்தது. அரசு கருவூலத்திற்கும் கூட அது பொறுப்பேற்றிருந்தது. 1928லிருந்து 1935 வரை அரசாங்க மூலத்தனத்தை அதிகரித்ததன் மூலம் வடதிசை யுத்தப் பிரபுக்களின் அரசாங்கத்தினுடைய நிதித்தூண்களான முன்பு இருந்த சீனவங்கி மற்றும் தகவல்களின் வங்கி ஆகியவற்றின் கட்டுப்பாட்டை சியாங் அரசாங்கம் பெற்றது. சீன உழவர்களின் வங்கி 1935இல் நிறுவப்பட்டது.

அனைத்துச் சீன வங்கிகளின் மத்தியில் நான்கு பெரும் வங்கிகள் ஒரு ஏகபோக அந்தஸ்தைப் பெற்றிருந்தது. 1936க்குள் சீனத்திலுள்ள மொத்த வங்கிச் சொத்துகளில் 59 சதவீதமும் வைப்புத் தொகைகளில் 59 சதவீதமும் அவைகையகப்படுத்தியிருந்தன; நாடு முழுவதிலுமிருந்த வங்கி நோட்டுகளில் 78 சதவிகிதத்தை புழங்கவிட்டனர். உண்மையில், மற்றெல்லா வங்கிகளுக்கும் அவை வங்கிகளாக இயங்கின; சீனத்தின் வர்த்தகம், தொழில் மற்றும் விவசாயத்தின் மீது ஒரு ஏகபோக ஆதிக்கம் வகித்தது,

1935 நவம்பரில், 'சட்ட ஏற்பு செலாவணி' கொள்கை என்று அது சொல்லிக் கொண்டதைப் பின்பற்றி சியாங் அரசாங்கம் மக்களது செல்வத்தை பிடுங்கிக் கொள்ளவும், அதை 'நான்கு பெரும் குடும்பங்களின்' தனிச் சொத்துடைமையாக மாற்றுவதன் பொருட்டும் மாற்றமுடியாத செலாவணியைப் புழங்கவிட்டது. இது மிகமிக ஈவிரக்கமற்ற சொல்லளவுடிவம். 1937 ஜூலையில் ஜப்பானிய எதிர்ப்பு யுத்தப் வெடிக்கும் வரை மொத்தம் புழங்கவிட்ட 'சட்டஏற்பு செலாவணி' 1400 மில்லியன் சீன டாலர்கள்.

1935, 1936 ஆகிய ஆண்டுகள் தேசியத் தொழிலிலும் வர்த்தகத்திலும் நெருக்கடியானதொரு காலகட்டம். 'நான்கு பெரும் குடும்பங்கள்' நிதிக் கட்டுப்பாட்டைப் பெற்றபிறகு அவைத் தொழிலில் ஆதிக்கம் செலுத்தவும் ஏகபோகம் வகிக்கவும் முனைந்தனர். அரசு நிர்வாகம் என்ற மூடுதிரையின் பின்னே 'நான்குபெரும் குடும்பங்கள்' நிலவுகின்ற அதிகாரவர்க்க தொழிற்

சாலைகளை கையகப்படுத்திக் கொண்டனர்; கூடவே தேசத்தின் தொழிற்சாலைகளை ஏகபோகப்படுத்துவதற்காக அவர்களது பிரதான நிறுவனமான தேசிய மூலாதாரங்கள் கமிஷனை நிறுவினர். அவர்களுடைய டங்ஸ்டன் உலோகத்தாதுச் சுரங்கங்கள் எஃகு மற்றும் பொறியியல் ஆலைகள் ஏகாதிபத்தியவாதிகளுடன் இணைந்து நடத்தப்பட்டன. தனியார் முதலாளிகள் என்ற முகத்திரை போட்டு கூடுதலான மூலதனம் முதலீடு செய்வது, மறு ஒழுங்கமைப்பது, கடும் வட்டிகடன்கள் வழங்குவது போன்றவைகள்மூலம் தனியாருக்குச் சொந்தமான தொழிற்சாலைகள் பணப்பற்றுக்குறையால் அவதியுறும்போது அவற்றின் கட்டுப்பாட்டையும் உடமையையும் கைப்பற்றிக் கொண்டார்கள். குறிப்பாக இது நெசவாலைத் தொழிலில் தெரிந்தது. 1937 இன் முதற் பாதியில் 'நான்கு பெரும் குடும்பங்கள்' கையகப்படுத்திக் கொண்ட அல்லது நிர்வகித்த நெசவாலைகளின் கெண்டைகள் சீனத்தின் மொத்த எண்ணிக்கையில் 13— ஆக அமைந்தது.

விவசாயத்தைப் பொருத்தவரை, 'நான்கு பெரும் குடும்பங்கள்' தான் நாட்டிலேயே மிகப்பெரும் நிலப்பிரப்புக்கள்; விவசாயிகளை ஈவிரக்கமற்ற முறையில் சுரண்டுபவர்கள். பிற்போக்கு ஆட்சியின் ஆதரவு பெற்ற அவர்கள் நாடுமுழுவதுமான விவசாயிகள் மீது கடும் வரிகூட விதித்தார்கள்; விவசாயிகளை ஆடு மாடுகள் போல் கும்பலாக கட்டாய உழைப்பில் கசக்கிப் பிழிந்தனர்; கட்டாய இராணுவ சேவைக்கு நிர்பந்தித்தார்கள்; நட்ட ஈடுஇன்றி அவர்களது நிலத்தைப் பறிமுதல் செய்து கொண்டார்கள்.

நிதி, வர்த்தகம், தொழிற்சாலை மற்றும் விவசாயத்தின் மீதான அவர்களுடைய ஏகபோகக் கட்டுப்பாட்டினால் 'நான்கு பெரும் குடும்பங்கள். மக்களைக் கொள்ளையடித்தார்கள்; நாட்டுமக்களைக் கசக்கிப் பிழியும் கொடிய சுரண்டலார்களாக நான்கு குடும்பங்களைப் பற்றி நன்கறிந்திருந்தனர் மக்கள னைவரும்.

அன்னிய உதவிக்கு பரிமாற்றமாக சீனாவின் சுயாதிபத்தியத்தை விற்பதன் மூலம் சியாங் - கே - ஷேக்கும்பல் தனது பிற்போக்கு ஆதிக்கத்தை காத்து நிலவச் செய்தது. அந்தக் கும்லின் பிற்போக்கு ஆட்சியின் கீழ்தான் ஏகாதிபத்தியவாதிகள். சீனாவை ஒரு காலனிச் சந்தையாக முற்றிலும் மாற்றினார்கள். ஏகாதிபத்திய ஏகபோக மூலதனம் சீனாவின் தேசியப் பொருள தாரத்தின் எல்லாக் கிளைகளிலும் ஊருருவி அவற்றின் மீது ஆதிக்கம் வகித்தது. 1956இல் சீனாவின் நிலக்கரி உற்பத்தியில் 55. 7% அந்நிய மூலத்தனத்தினதாக கணக்கிடப்பட்டது; அதே சமயம் சீனாவின் இரும்புச் சுரங்கங்கள் கிட்டத்தட்ட முழுமையாக ஜப்பானிய மூலத்தனத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. 1931இல் சீனாவின் இரயில்வே மூதலீட்டில் 96. 7%

ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து வந்தது. 1936 இல் யாங்ட்சி ஆற்றில் ஓடிய கப்பற் படகுகளின் டன்கணக்கான சுமையில் 81-9% அந்நியகப்பற் படகுகளில் அடங்கின; நாடு முழுவதுமான மின் விசைஉற்பத்தியில் 55% (கிலோவாட் - மணி அளவில்) அந்நிய ஆலைகளில் உற்பத்தி செய்யப்பட்டது. எல்லா வங்கிகளிலுள்ள மொத்தச் சொத்து மதிப்பில், அன்னிய மூலதனத்தின் பங்கு 20. 9 சதவீதமாகும். எனினும் சீனத்திலுள்ள அன்னிய வங்கிகளின் பொருளாதார சக்தியை அவர்களது வங்கி மூலதனத்தை மட்டும் வைத்து சரியாக மதிப்பிட முடியாது; ஏனெனில், வங்கி நோட்டுக்களைப் புழக்கத்தில் விடுவது, சுங்கத் தீர்வையையும் உப்பு வரியையும் கட்டுப் படுத்துவது ஆகிய சலுகைகளை அவர்கள் அனுபவித்தார்கள்; செலாவணிவிகிதமும் கூட அவர்களுடைய கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. 1936இல் சீனாவில் நூற்புக் கெண்டைகளில் 67. 4%மும், அதன் தறிகளில் 56. 4%மும், அந்நிய மூலதனத்திற்குச் சொந்தம். 1935 இல் மொத்த சிகரெட் உற்பத்தியில் 58% அன்னிய நிறுவனங்களினால் உற்பத்தி செய்யப்பட்டன.

சுருங்கக் கூறின், ஜப்பானிய எதிர்ப்புப் போருக்கு முன்பு கோமிண்டாங் கட்டுப்பாட்டுப் பகுதிகளில், நிலக்கரி மற்றும் இரும்பு ஆலைகள், இரயில்வே மற்றும் நீர்வழிப் போக்குவரத்து மற்றும் பிற நிறுவனங்களை ஏகாபதிபத்தியவாதிகள் ஏகபோகமாக ஆக்கிக் கொண்டார்கள். அவர்கள் சீனாவின் நிதியையும் கூட கட்டுப்படுத்தினார்கள். சில தொழிற்சாலைத் துறைகளில், குறிப்பாக துணிகள் மற்றும் சிகெரெட்டு உற்பத்தி ஆலைகளில் அன்னிய மூலதனம் அதிமிகு ஆட்சி செலுத்தியது.

ஏகாதிபத்திய முதலீடுகள் அந்நிய நாடுகளிலிருந்து இறக்குமதி ஆவதைவிட பெரும்பாலும் சீனாவிலிருந்தே கசக்கிப் பிழியப் பட்டது. யுத்த ஈட்டுத் தொகைகளைப் பறித்துக் கொள்வது, நிலத்தை பலாத்காரமாக ஆக்கிரமித்துக் கொள்வது, தந்திரத்தினாலும் சீதனத்தை இணைத்துக் கொள்வதாலும் நிறுவனங்களின் உடமையைக் கைப்பற்றிக் கொள்வது ஆகியவற்றினாலும் சீனத்தை ஏகாதிபத்தியவாதிகள் கொள்ளையிட்டனர். மிக அற்பமான, சிறுஅளவிலான மூலதனத் தொகையை சீனாவிற்குள் இறக்குமதி செய்து அதற்கு பதிலாக பூதாகரமான லாபத்தை ஏகாதிபத்திய நாடுகள் சுரண்டிச் சென்றன. இந்த ஏகாதிபத்திய பொருளாதார ஆக்கிரமிப்பின் விளைவாக சீனா அதன் சர்வதேசப் பற்றுக் கணக்கில் சாதகமற்ற பலாபல நிதி நிலையால் அவதியுற்றது. 1894லிலிருந்து 1937 வரை 43 ஆண்டுகளில் சீனாவின் உள்ளும் வெளியும் பாய்ந்த மூலதன வரவு செலவுக் கணக்குகள் பின்வருமாறு: வரவு வந்த தொகை அமெரிக்க டாலர்களில் 1736 மில்லியன்; ஆனால் வெளிச்சென்ற பணத்தின் மதிப்பு 3437 மில்லியன் டாலர்கள். இந்த வித்தியாசம் ஒருபக்கம் சர்வதேச வாணிபத்தில் சீனாவுக்குச் சாதகமற்ற பலாபல நிலைமையின் விளைவாகவும், மறுபுறம், ஏகாதிபத்திய மூலதனக் கொள்ளையினாலும் ஏற்பட்டது.

சீனாவில் ஏகாதிபத்திய ஏகபோகமூலதனத்தின் விரிவாக்கம் ஒரு கடுமையான போராட்டத்தினூடாக நிறைவேற்றப் பட்டது.

முதலாவதாக, சீனாவில் 1936 இல் ஏகாதிபத்தியவாதிகளின் மொத்த முதலீட்டுத் தொகையான 4285 மில்லியன் அமெரிக்க டாலர்களில், பிரிட்டன் கையகப்படுத்தியிருந்தது 1045 மில்லியன் டாலர்கள். 1930லிருந்த பிரிட்டன் மூலதனமான 1047 டாலர்களோடு ஒப்பிடும்போது ஆங்கிலேய முதலீடு நடைமுறையில் மாற்றமின்றி அப்படியே இருந்தது. 1930 களில் அமெரிக்க முதலீடு 285 மில்லியன் டாலராயிருந்தது; இத்துடன் ஒப்பிடுகையில் அமெரிக்க முதலீடு 20 சதவீதம் வளர்ச்சியடைந்து ஏறக்குறைய 340 மில்லியன் டாலருக்கும் அதிகமாக வளர்ச்சியடைந்து இருந்தது. எனினும், அமெரிக்காவின் மொத்த முதலீடுகள் இன்னும்கூட சொற்பமானதே. ஜப்பானிய முதலீடுகள் மொத்தம் 2096 மில்லியன் டாலர்களுக்கு மேலிருந்தது; அது 1930லிருந்த 1411 மில்லியன் டாலர்களோடு ஒப்பிடும்போது 48% அபிவிருத்தியைக் காட்டியது. எனவே இந்த காலகட்டத்தில், ஜப்பானிய முதலீடுகள் அதிவேகமான அளவில் அதிகரித்திருந்தன; அது சீனாவிலிருந்த அந்நிய முதலீடுகளில் முதன்மையான இடத்தைப் பெற்று, நிகர முதலீட்டுத் தொகையில் பாதியளவு இருந்தது.

இரண்டாவதாக, 1936 இல் வடகிழக்குச் சீனாவிலிருந்த ஜப்பானிய முதலீட்டுத் தொகையின் மதிப்பு 1455 மில்லியன் டாலர்கள்; இது சீனாவிலிருந்த மொத்த ஜப்பானிய முதலீடுகளில் மூன்றில் இரண்டு பங்குக்கு மேல். ஆனால் இந்த காலகட்டத்தில், சீனாவின் பிறபகுதிகளிலிருந்த ஜப்பானிய முதலீடுகள் மிக சொற்பமானதே; குறிப்பிடத்தக்க அபிவிருத்தி எதையும் அவை காட்டவில்லை. சீனாவின் பிற பகுதிகளில் அந்நிய முதலீடுகளில் அபிவிருத்தியடைந்தவை அமெரிக்க மூலதனம் மட்டுமே; அதனுடைய வளர்ச்சி வேகம் 40 சதவீதமாகும். கோமிண்டாங் அரசாங்கத்தின் நிதிக்கடன்களில் மூன்றில் இரண்டு பங்கு அமெரிக்க ஐக்கிய நாடுகளிடமிருந்து பெறப்பட்டது.

மூன்றாவதாக, 1936 இல் வடகிழக்கு தவிர சீனாவிலிருந்த நிறுவனங்களில் ஏகாதிபத்திய முதலீடுகள் 1369 மில்லியன் டாலர்களுக்கு மேலென்று கணக்கிடப்பட்டது. இதில் பிரிட்டனின் பங்கு மிகப்பெரியது — அதாவது 651 மில்லியன் டாலர்களுக்கு மேல். 305 மில்லியன் டாலர்கள் முதலீடு செய்த ஜப்பான் இரண்டாவது இடத்தைப் பெற்றது; 210 மில்லியன் டாலர்களுக்கு மேலிருந்த அமெரிக்க ஐக்கிய நாடுகளுடைய பங்கு மிகச் சிறியது. வடகிழக்கு தவிர சீனாவிலிருந்த உற்பத்தித் தொழிற்சாலைகளில் மொத்த ஏகாதிபத்திய மூலதன முதலீடுகள் 281 மில்லியன் டாலர்களில் ஜப்பானின் பங்கு மிகப் பெரியது — அதாவது 140 மில்லியன் டாலர்களுக்கு மேல்; இரண்டாவது மிகப் பெரியது பிரிட்டன் —107 மில்லியன் டாலர்களுக்கு மேல்; 20 மில்லியன் டாலர்களுக்கு மேலிருந்த அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பங்கு மிகச்சிறியது.

[மேற்படி நூல் பக். 140—142].

சீன அதிகார முதலாளித்துவ வர்க்கத்தின் ஊழல் மிகு ஆட்சி; மூன்றாவது கம்யூனிச எதிர்ப்பு நடவடிக்கை தடுக்கப்படுதல்; நாடு முழுவதும் ஜனநாயக இயக்கம் வளர்ச்சியுறுதல்; சீனாவின் உள்நாட்டு விவகாரத்தில் அமெரிக்காவின் தலையீடு.

''நான்கு பெரும் குடும்பங்களால்'' பிரதிநிதித்துவப் படுத்தப்பட்ட சீன அதிகார வர்க்க முதலாளித்துவம், எதிர்ப்பு யுத்தத்தின் போது மிகமிகத் துரிதமாக விரிவடைந்தது. ஜப்பானை எதிர்த்துத் தடுப்பது என்ற முகாந்தரத்தின் கீழ் அதிகார வர்க்க முதலாளிகள் பொருளாதார ரீதியற்ற பிற நிர்ப்பந்தங்களின் மூலம் மிகவும் மிருகத்தனமான கொடிய சுரண்டல் முறைகளில் ஈடுபட்டனர்; இவைகளினால் தங்களுக்குப் பெருஞ் செல்வத்தைச் சேர்த்துக் கொண்டதோடு நாட்டின் பொருளாதார நடவடிக்கைகள் அனைத்தையும் ஏகபோகமாக்கிக் கொண்டனர்.

நான்கு அரசாங்க வங்கிகளின் கூட்டு வாரியம் கோமிண்டாங் அரசாங்கத்தின் ஏகபோக நிதி நிறுவனமாகியது. அது 'தேசிய பணநோட்டு' என்று சொல்லிக் கொண்டதை ஏகபோகமாவதற்கும் கசக்கிப் பிழிந்து பணம் சேர்ப்பதற்குமானதாகப் பயன்படுத்தியது; எதிர்ப்பு யுத்தத்தின் போது கோமிண்டாங் அரசாங்கம் புழங்கவிட்ட ''தேசிய பணநோட்டின்'' தொகை 10, 3180, 00 மில்லியன் சீன நாணயம் டாலர்களை எட்டியது. மக்கள் அவர்களது சொத்துக்கும் பொருட்களுக்கும் பதிலியாக மதிப்பற்ற காகிதத்தை ஏற்றுக் கொள்ளும்படி நிர்பந்திக்கப்பட்டார்கள். ''தேசிய நிர்ணய போர்டு'' இதன் மூலமாகத்தான் பிரதானமாக ''நான்கு பெரும் குடும்பங்கள்'' சீன மக்களை கொள்ளையிட்டு, சீன நிதித்துறையை ஏகபோகமாக்கினர்.

யுத்தத்தின் போது, நிதி ஏகபோகத்திலிருந்து ஒரு வர்த்தக ஏகபோகமாக ''நான்கு பெரும் குடும்பங்கள்'' மாறின. யுத்த காலத்தில் நான்கு பெரும் வங்கிகளின் பிரதான தொழில் ஊக வர்த்தக சூதாட்டமாக இருந்தது. வழங்கப்பட்ட கடன்களின் மொத்த தொகையில் மிகப்பெரும் பங்கு வர்த்தகக் கடன்களாக இருந்த அதே சமயம் தொழிற்சாலை மற்றும் சுரங்கத்திற்கான கடன்கள் சொற்பமே. 1937 லிருந்து 1942 வரை தொழிற்சாலைகள் மற்றும் சுரங்கங்களுக்குத் தரப்பட்ட கடன்களின் மொத்தத்தொகை 19.7% மட்டுமே; எஞ்சிய 80.3% இல் முழுவதும் வர்த்தக நிறுவனங்களுக்கே தரப்பட்டன. வாணிகக் கமிட்டி எனப்படும் அதிகாரபூர்வமான வர்த்தக 'ஏகபோக நிறுவன அமைப்பை ''நான்கு பெரும் குடும்பங்கள்'' கட்டியமைத்தது. இதுமட்டுமல்லாமல், பெரும் எண்ணிக்கையிலான தனியார் வர்த்தக நிறுவனங்களையும் அவர்கள் பெற்றிருந்தார்கள்.

கச்சா சில்க், டீ, மரப்பூச்சு எண்ணெய் வகை, மிருக ரோமங்கள், டங்ஸ்டன் தாது, மற்றும் ஆண்டிமோனி போன்ற

ஏற்றுமதி வகைகளின் கொள்முதல் மற்றும் விற்பனை மட்டு மின்றி பருத்தி, பருத்தி நூல், துணி, சாப்பாட்டு உப்பு, சீனி, சிகரட்டுகள் மற்றும் தீப்பெட்டிகள் போன்ற அன்றாடத் தேவை களின் விற்பனையையும் அவர்கள் ஏகபோகமாக்கிக் கொண்ட னர். குறைந்த விலைக்கு வாங்கி உயர்ந்த விலைக்கு விற்பது என்ற யோக்கியமற்ற அவர்களது நடைமுறையின் மூலம் விவசாயிகள், கைவினைஞர்கள், மற்றும் தொழிற்சாலைக்காரர் களின் கொஞ்சநஞ்ச லாபத்தையும் கொள்ளையிட்டனர். நாடு முழுவதிலிமிருந்த நுகர்வோரை கசக்கிப் பிழிந்தனர்.

விவசாயத்தில், "நான்கு பெரும் குடும்பங்கள்,, மிகப்பெரும் பிரபுத்துவ நிலப்பிரபுக்களாகவும் லேவாதேவிக் காரர்களாகவும் விளங்கினர். நிலவரியைத் தானியமாக வசூலிப்பது என்ற மிக மிருகத்தனமான சுரண்டல் வடிவம் பயன் படுத்தப்பட்டது எடுத்துக்காட்டாக செசுவானில் மொத்த விவசாய உற்பத்தியின் பாதிக்கு மேல் நிலவரியாக செலுத்தப்பட்டது. இந்தப் பெரும் சுமை முழுவதும் விவசாயிகளின் தோள்கள் மீதே விழுந்தது' ''நான்கு பெரும் குடும்பங்களால்'' கட்டுப்படுத்தப்பட்ட சீன உழவர்களின் வங்கி பழங்கால லேவா தேவிக்காரர்களின் இடத்தைப் பிடித்துக் கொண்டது. விவசாயக் கடன்கள் கந்து வட்டி லேவாதேவித் தன்மையுடையன. ஏனெனில். கட தவணை ஓராண்டாகக் குறிக்கப்பட்டது; தானிய விலைகள் மிக அதிகமாக இருக்கின்றதும் விவசாய வேலைகள் குறைந்து இருக்கின்றதுமான பருவத்தில் கடன் வாங்கும்படி நிப்பந்திக்கப் படும் விவசாயிகள், விவசாயப் பொருட்களின் விலைகள் எக்கச் சக்கமாக வீழ்ச்சியடைந்துள்ள அறுவடைப் பருவத்தில் கடனைத் திருப்பிச் செலுத்தவேண்டும். இவ்வாறு இரண்டு சமயங்களிலும் அவர்கள் ஈவிரக்கமின்றி சுரண்டப்பட்டார்கள். இதுமட்டு மின்றி, விவசாயிகளைச் சுரண்டுவது மேலும் ஆழமாகும் வகையில் கிராமப்புறங்களிலுள்ள லேவாதேவிக்காரர்கள் மூல மாகக் கடன்கள் தரப்பட்டன. பிரபுத்துவ சக்திகளை ஊட்டி வளர்ப்பது மற்றும் விவசாயிகளின் ரத்தத்தை உறிஞ்சுவது ஆகிய இரண்டு குற்றங்களை உழவர்களின் வங்கி ஒரே சமயத்தில் செய்தது.

தேசியப் பொருளாதாரத்தை ஏகபோகமாக்குவதற்கும் தங்களது கரங்களில் பூதாகரமான செல்வத்தைக் குவிப்பதற்கும் யுத்தத்தின்போது அதிகாரவர்க்க முதலாளிகள் செய்த கடுமை யான முயற்சி சீனாவின் உற்பத்தி நிறுவனங்களை முற்றாக அழித்தது. கோமிண்டாங் பிற்போக்கு ஆட்சியின் பொருளாதார அடிப்படை அதன் அடிவரை மிக அழுகியதாக மாறிவிட்டது. கோமிண்டாங் கொடிய ஆட்சியாளர்கள் அவர்களது சர்வாதி கார ஆட்சியை நீடிக்கச் செய்வதற்கும் ஜப்பானிய ஆக்கிர மிப்பை மந்தகதியில் எதிர்ப்பதற்கும் என்ற இரு பிரதான காரணங்களுக்கே ஜனநாயகத்தின் கழுத்தை நெறிப்பது என்ற கொள்கையைக் கடைப்பிடித்தனர்.

[மேற்படி நூல், பக்: 208 - 209]

—✕—

இந்தியப் புரட்சியின் தற்காலிகத் தோல்வி, பின்னடைவு, பிளவுக்கான காரணங்களை யதார்த்த பூர்வமாக பரிசீலிப்பது என்ற முகாந்திரத்தில் ஏற்கனவே நிருபிக்கப்பட்ட, நிலைநாட்டப்பட்ட, மார்க்சிய-லெனினியக் கட்சியின் பொதுவான, சரியான கோட்பாடுகளை நிராகரித்து புரட்சகரமான பாட்டாளி வர்க்க இயக்கத்தைத் திசைதிருப்ப எல்லாவண்ணத் திரிபுவாதிகளும், நவீன திரிபுவாதிகளும், கட்சிக்குள் ஒளிந்து கொண்டிருந்த துரோகிகளும், ஓடுகாலிகளும் பல்வேறு வழிகளில் முயலுகிறார்கள். இந்தியப் புரட்சியின் மார்க்சிய-லெனினியக் கட்சியின் அரசியல், அமைப்பு நிலைப்பாடுகளைச் செழுமைப்படுத்துவதாகக் கூறிக்கொண்டு அதன் அடித்தளத்தையே வீழ்த்தக் குழிபறிக்கிறார்கள். அவர்கள் தமது சொந்த கால்களில் நின்று, தமது சொந்த மூளையை இதற்குப் பிரயோகிக்கும் திராணியற்றுப் போயுள்ளார்கள். முதலாளித்துவ அரசியல் மற்றும் சமூகவியலார்களையே முற்றாகச் சார்ந்து நிற்கும் இழிநிலைக்கு அவர்கள் வீழ்ந்து போயுள்ளார்கள்.

ஏகாதிபத்திய நலன்களுடன் உள்மயமாகிவிட்டதன் விளைவாக சிந்தனையில் முறைகுலைவு அடைந்துள்ள முதலாளித்துவ அரசியல் மற்றும் சமூகவியலாளர்களின் ஆய்வுரைகளையும், ஆய்வு முறைகளையும் நோக்கமற்ற கோட்பாட்டு மயமாக்குவதில் மோகம் கொண்ட அவர்கள் மார்க்சியம்-லெனினியம் மற்றும் நடைமுறை என்னும் உரைகல்லில் உரைத்துப் பார்ப்பதற்குப் பதில் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் நடைமுறையையும், மார்க்சிய-லெனினியத்தையும் சோதித்தறியும் உரைகல்லாக இவற்றைப் பயன்படுத்துகிறார்கள். புரட்சிகர இயக்கத்தின் மீதும் மார்க்சிய-லெனினியத்தின் மீதும் அவநம்பிக்கை கொள்கிறார்கள். மார்க்சிய-லெனினியத்தை உயிரற்ற வரட்டுக் கோட்பாடாக கற்றறிவது அல்லது அதன் அடிப்படையையும், சாராம்சத்தையும் கிரகிக்கத் தவறுவதன் விளைவாக, அதைப் பகுதியாகவோ முழுமையாகவோ தவறு அல்லது காலாவதியாகிவிட்டதாக நிலைநாட்ட விரும்பும் முதலாளித்துவ அரசியல் மற்றும் சமூகவியலாளர்களின் நோக்கத்திற்குப் பலியாகிறார்கள் மேலெழுந்தவாரியாகவும், தர்க்கரீதியாகவும் பார்க்கும்போது அவர்களின் ஆய்வுரைகளும், ஆய்வு முறைகளும் சரியானவைகளாகத் தோன்றலாம். ஆனால் உண்மையில் அவை பயனற்றவை; பொய்யானவை; நிராகரிக்கப்படவேண்டியவை.

மார்க்சிய-லெனினிய-மாசேதுங் சிந்தனையின் சர்வவியாபகமான பொதுவிதிகளைத் தொகுத்து பருண்மையான நிலைமைகளைப்பற்றி பருண்மையாக, ஆக்கபூர்வமாக ஆய்வுசெய்வதன் மூலமே எல்லா வண்ணத் திரிபுவாத மற்றும் முதலாளித்துவப் பொருளாதார, அரசியல் மற்றும் சமூகவியல் போக்குகளையும் முறியடிக்க முடியும்.